755/2
408

ஸ்ரீ

கவிச்சக்கரவர்த்தி

கம்பநாட்டாழ்வார்

அருளிச்செய்த

ஸ்ரீமத்கம்பராமாயணம்

ஆரண்ய

உயுத்தகாண்டம்

இது

காரப்பாக்கம்

வித்வான் - கோபாலாசாரியர் மாணாக்கராகிய

கும்பகோணம்

T. C. பார்த்தசாரதி அய்யங்கார்

பரிசோதித்தது

அ. இரங்கசாமி முதலியார் & சன்ஸ்

சென்னை :

பூபகன் விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1928

Printed at the Newman Press, Broadway, Madras

உ யு த் த கா ண் ட ம்.

படலங்களின் அட்டவணை.

க - வது		கடல்காண்படலம்	பக்கம்	ரு
உ	,,	மந்திரப்படலம்	,,	ரி
ரு	,,	இராணியன்வதைப்படலம்	,,	உ0
சு	,,	விபீடணனணைக்கலப்படலம்	,,	சுஉ
ரி	,,	இலங்கைகேள்விப்படலம்	,,	சூஉ
சூ	,,	வருணனைவழிவேண்டுபடலம்	,,	எக
எ	,,	சேதுபந்தனப்படலம்	,,	அஉ
அ	,,	ஒற்றுக்கேள்விப்படலம்	,,	கக
க	,,	இலங்கைகாண்படலம்	,,	கக
க0	,,	இராவணன்மூனைகாண்படலம்	,,	க0ரி
கக	,,	மகுடபங்கப்படலம்	,,	கக0
கஉ	,,	அணிவகுப்புப்படலம்	,,	ககசூ
கரு	,,	அங்கதன்றூதுப்படலம்	,,	கஉ0
கச	,,	மூதற்போர்ப்படலம்	,,	கஉசூ
கரி	,,	கும்பகருணன்வதைப்படலம்	,,	கரிஎ
5சூ	,,	மாயாசனகப்படலம்	,,	உ0உ
5எ	,,	அதிகாயன்வதைப்படலம்	,,	உகரி
5அ	,,	நாகபாசப்படலம்	,,	உசஅ
5க	,,	படைத்தலைவர்வதைப்படலம்	,,	உகஅ
ட0	,,	மகரக்கண்ணன்வதைப்படலம்	,,	ருகக
டக	,,	பிரமாத்திரப்படலம்	,,	ருகசூ
டஉ	,,	பிராட்டிகளங்காண்படலம்	,,	ருசரி
டரு	,,	மருத்துமலைப்படலம்	,,	ருசக
டச	,,	களியாட்டுப்படலம்	,,	ருசச
டரி	,,	மாயாசீதைப்படலம்	,,	ருசஎ
டசூ	,,	நிகும்பலைப்படலம்	,,	ருஅ0
டஎ	,,	இந்திரசித்துவதைப்படலம்	,,	சு0ச
டஅ	,,	இராவணன்சோகப்படலம்	,,	சகரு
டக	,,	படைக்காட்சிப்படலம்	,,	சஉஉ
உ0	,,	மூலபலவதைப்படலம்	,,	சஉஅ
உக	,,	வேல்வேற்றப்படலம்	,,	சரிஅ

நஉ - வது	வானரர்களங்காண்படலம்	பக்கம்	சசுசு
நஙநி	இராவணன்களங்காண்படலம்	,,	சஎ0
நஙசி	தேரேறுபடலம்	,,	சஎச
நஙஞி	இராவணன்வதைப்படலம்	,,	சஅஉ
நஙடி	மீட்சிப்படலம்	,,	ருகள
நஙணி	திருமுடிசூட்டுப்படலம்	,,	ருசுரு
நஙதி	விடைகொடுத்தபடலம்	,,	சு00

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ ம த் க ம் ப ரா ம ா ய ண ம்.

755/2

ஆ ரூ வ து,

உ ய ர்த்த காண்டம்.

மூதலாவது கடல்காண்படலம்.

தனியன்கள்.

மகிழ்மாறனைவழுத்துவாயென்றனக்கு
நெகிழ்மாறனைநினைக்குநேயம்—முகிழ்மா
முலைக்கமலையேற்றமொழிகாவியத்தால்
நிலைக்கமலைவகவருணீ.

கம்பன் கவித்திரங் கழறல்.

கம்பர்வீட்டிலொருசிறுபுன்கட்டுத்தறியுங்கவிசெயுமென்
றிம்பர்நாட்டுமென்பதைகூறிருஞ்சொல்புலவீர்கேட்டுவந்தாம்
சம்புநீட்டுசடைத்தலைக்குத்தகுவர்தலைக்குத்திருப்பாத
தம்புநாட்டுமால்சரிதமன்றேரிற்பாடலதுவியப்பே.

க ா ப ு.

ஒன்றேறியென்னிலெனன்றேறியாம்பலவென்றுரைக்கிற்பலவேயாம்
அன்றேறியென்னினன்றேறியாமாமேயென்னிலுமேயாம்
இன்றேறியென்னினின்றேறியாமிலதென்றுரைக்கினிலதேயாம்
நன்றேறநம்பிகுடிவாழ்க்கைநமக்கிங்கென்றேபிழைப்பம்மா. (க)

நூ ல்.

* ஊழிதிரியுங்காலத்துமுலையாகிலையவுயர்கிரியும்
வாழிவற்றுமறிகடலுமண்ணும்வடபால்வான்றேயப்
பாழித்தெற்குள்ளனகிரியுநிலனுந்தாழப்பரந்தெழுந்த
எழுபத்தின்பெருவெள்ளமகாவெள்ளத்திறுத்ததால். (உ)

பொங்கிப்பரந்தபெருந்தேனைபுறத்துமகத்தும்புடைசுற்றச்
சங்கிற்பொலிந்ததகையாளைப்பிரிந்தபின்புதமக்கினமாம்

---

* ஊழிதிரியுங்காலத்தும் — உலகமாறுபடுஞ்சமயத்தும்.

கொங்கிற்பொலிந்ததாமரையின்குழுவுந்துயில்வுற்றிதழ்குவிக்கும்
கங்குற்பொழுதுந்துயிலாதகண்ணன்கடலைக்கண்ணுற்றான். (சுட)

* சேயகாலம்பிரிந்தகலத்திரிந்தான்மீண்டுஞ்சேக்கையின்பால்
மாயன்வந்தானினிவளர்வானென்றுகருதிவருந்தென்றல்
தூயமலர்போனுரைத்தொகையுமுத்துஞ்சிந்திப்புடைசூழ்ட்டிப்
பாயலுதறிப்பதிப்பதேயொத்ததிரையின்பரப்பம்மா. (சு)

வழிக்குங்கண்ணீரழுவத்துவஞ்சியழுங்கவந்தடித்த
பழிக்குங்காமன்பூங்கணைக்கும்பற்றாநின்றான்பொற்றாளைச்
சுழிக்குங்கொல்லனெல்லுலையிற்றுள்ளும்பொறியிற்சுடுமென்றே
கொழிக்குங்கடலினெடுந்திரைவாய்த்தென்றறூற்றுங்குறுந்திவலை. (சூ)

நென்னற்கண்டதிருமேனியின்றுபிறிதாய்நிலைதளர்வான்
தன்னைக்கண்டுமிரங்காதுதனியேகதறுந்தடங்கடல்வாய்ப்
பின்னற்றிரைமேற்றவழ்கின்றபிள்ளைத்தென்றல்கள்ளுயிர்க்கும்
புன்னைக்குறும்பூநறுஞ்சுண்ணம்பூசாதாருகாற்போகாதே. (சூ)

சிலைமேற்கொண்டதிருநெடுந்தோட்குவமைமலையுஞ்சிறிதேய்ப்ப
நிலைமேற்கொண்டுமெலிகின்றநெடியோன்றன்மூன்படியேழும்
தலைமேற்கொண்டகற்பிணைமணிவாயென்னத்தனித்தோன்றிக் [ம்,
கொலைமேற்கொண்டாருயிர்குடிக்குங் கூற்றங்கொல்லோகொடிப்பவளை

தூரமில்லைமயிலிருந்த † சூழலென்றுமனஞ்செல்ல
வீரவில்லிநெடுமானம்வெல்லநாளுமெலிவானுக்
கோரமில்லாநிருதரோடென்னவுறவுண்டெனக்கேழை
மூரன்முறுவற்குறிகாட்டிமுத்தேதியுலைகமுடிப்பாயோ. (அ)

இந்துவன்னநுதற்பேதையிருந்தாணீங்காவிடர்கொடியேன்
தந்தபாவைதவப்பாவைதனிமைதகவோவெனத்தளர்ந்து
சிந்துகின்றநறுந்தரளக்கண்ணீர்ததும்பித்திரைத்தெழுந்து
வந்துவள்ளன்மலர்த்தாளின்வீழ்வதேய்க்குமறிகடலே. (கூ)

பள்ளியரவிற்பேருலகம்பசுங்கல்லாகப்பனிக்கற்றை
துள்ளுநறுமென்புனறெளிப்பத்தூநீர்க்குழவிமுறைசுற்றி
வெள்ளிவண்ணநுரைக்கலைவெதும்புமண்ணறிருமேனிக்
கள்ளியப்பத்திரைக்கரத்தாலரைப்பதேய்க்குமணியாழி. (கூ)

கொங்கைக்குயிலத்துயர்நீக்கியிமையோர்க்குற்றகுறைமுற்ற
வெங்கைச்சிலையன்றாணியினன்விடாதுமுனிவின்மேற்செல்லும்
கங்கைத்திருநாடுடையானைக்கண்டுநெஞ்சங்களிகூர
அங்கைத்தாள்களெடுத்தோடியார்த்ததொத்ததணியாழி. (கக)

---

* சேயகாலம் – வெகுகாலம்.

† சூழலென்று – இடமென.

இன்னதாயகருங்கடலையெய்தியிதனுக்கெழுமடங்கு
தன்னதாயநெடுமானந்துயரங்காதலிவைதழைப்ப
என்னதாகுமேல்வினைவென்றிருந்தானிராமனிகலிலங்கைப்
பின்னதாயகாரியமுங்கிழ்ந்தபொருளும்பேசுவாம். (கஉ)

க-வது, கடல்காண்படலம் – முற்றிற்று.

ஆஉ திருவிருத்தம் – கசு.

உ-வது, மந்திரப்படலம்.

பூவருமயனெனும்புகுந்தபொன்னகர்
மூவகையுலகினுமுழுமுற்றுற
ஏவினவியற்றினன்கணத்தினென்பரால்
தேவருமருள்கொளத்தெய்வத்தச்சனே. (க)

பொன்னினுமணியினுமமைந்தபொற்புடை
நன்னகர்நோக்கினைகநோக்கினன்
முன்னையினழகுடைத்தென்றுமொய்கழல்
மன்னனுமுவந்துதன்முனிவுமாறினன். (உ)

மூழுப்பெருந்தனிமுதலுலகின்முற்றதையோன்
எழிற்குறிகாட்டினின்றியற்றினன்
பழிப்பருமுலகங்களெவையும்பன்முறை
அழித்தழித்தியற்றுவாற்கரிதுண்டாகுமோ. (ங)

திருநகர்முழுவதுந்திருந்தநோக்கிய
பொருகழலிராவணனையற்குப்பூசனை
வரன்முறையியற்றிநீவழிக்கொள்வாயென்றனன்
அரியனதச்சற்குமுதலியாணையான். (ச)

அவ்வழியாயிரமாயிரம்மலிர்
செவ்வழிச்செம்மணித்தூணஞ்சேர்த்திய
இவ்வழிமண்டபத்தரிகளேந்திய
வெவ்வழியாசனத்தினிதுமேவினன். (ஙி)

வரம்பறுசுற்றுமுமந்திரத்தெழில்
நிரம்பியமுதிருருஞ்சேணிகள்கடற்
றரம்பெறுதலைவருந்தழுவத்தோன்றினன்
அரம்பையர்க்கவரியோடாடுந்தானினன். (சு)

மூதன்மந்திரியான மகோதரன் தன்மனநிலை உரைத்தல்.

மற்றவன்பின்னுறமகோதரப்பெயர்க்
கற்றடந்தோளினெரியுங்கண்ணினன்
முற்றுறநோக்கினன்முடிவுமன்னதால்
கொற்றவகேளெனவினயகூறினன். (உக)

ஏற்றமென்பிறிதினியெவர்க்குமின்னுயிர்
மாற்றருமுறைமைசால்வலியின்மாண்பமை
கூற்றுவன்றன்னுயிர்கொள்ளுங்கூற்றெனத்
தோற்றுநின்னேவறன்றலையிற்சூடுமால். (உச)

வெள்ளியங்கிரியினவிடையின்பாகனே
டுள்ளிவிண்டொடவெடுத்தார்த்தவாற்றலாய்
*சுள்ளியினிருந்துறைதருங்கின்மேலுள்வலிக்
கெள்ளுதிபோலுநின்புயத்தையெம்மொடும். (உஙி)

மண்ணினும்வானினுமற்றுமுற்றுநின்
கண்ணினுநீங்கினர்யாவர்கண்டவர்
நண்ணரும்வலத்தினர்யாவர்நாயக
எண்ணினிலறிந்தவரெண்ணிலாவரோ. (உசு)

†இடுக்கிவணியம்புவதில்லயீண்டெனை
விடுக்குவையாமெனிற்குரங்கைவேரறுத்
தொடுக்கருமனிசரையுயிருண்டின்பகை
முடிக்குவென்யானெனமுடியக்கூறினன். (உஎ)

வச்சிரதந்தன் தன்மனநிலைகூறுதல்.

இச்சிரத்தவனுரைத்திறுக்குமெல்லையின்
வச்சிரத்தெயிற்றவன்வல்லைகூறினன்
‡அச்சிரத்தைக்கொருபொருளின்றுயினும்
பச்சிரத்தம்பொழிடாரிதிக்கண்ணினன். (உஅ)

போயினிமனிசரைக்குரங்கைப்பூமியில்
தேயுமின்கைகளாற்றின்மினென்றமை
ஏயினையிருக்குவதன்றியென்னினி
ஆயுமதெம்வயினயிர்ப்புண்டாங்கொலோ. (உக)

எவ்வுலகத்துநின்னேவல்கேட்கிலாத்
தெவ்வினையறுத்துனக்கடிமைசெய்தயான்

---

* சுள்ளி – உலர்ந்தசிறுவிறகு. † இடுக்கு – உத்தரவளிப்பாயாக.
‡ அச்சிரத்தைக்கு – அம்மந்திராலோசனையின் தன்மைக்கேற்ற.

தவ்வினபணியுள தாகத்தான்கொலோ
இவ்வினையென்வயினீகலாதென்றான். (நூ0)

துன்முகன் தன் மனநிலைகூறல்.

நின்பினென்றவன் றனைவிலக்கிநீயிவை
என்முனுமெளியர்போலிறுத்தியோவெனை
மன்முகநோக்கினன்வணங்கிவன்மையால்
துன்முகனென்பவனினையசொல்லினான். (நூக)

திக்கயம்வலியிலதேவர்மெல்லியர்
மூக்கணைன்கயிலையுமூரணின்றுயது
மக்களுங்குரங்குமேவவியவாமெனின்
அக்கடவிராவ்ணற்கமைந்தவாற்றலே. (நூஉ)

பொலிவதுபொதுவுறவெண்ணும்புன்றொழில்
மெலியவர்கடனமக்கிறுதிவேண்டுவார்
வலியினரெனினவர்க்கொதுங்கிவாழ்துமோ
ஒலிகழலொருவரம்முயிருக்கன்பிலால். (நூங)

கண்ணியமந்திரக்கருமங்காவல
மண்ணியன்மனிசருங்குரங்குமற்றவும்
உண்ணியவணமந்தனவுணவுக்குட்குமேல்
திண்ணியவரக்கரிற்றீரர்யாவரே. (நூச)

எனியுறமடுப்பதுமெதிர்ந்துளோர்படப்
பொருதொழில்யாவையும்புரிந்துபோவதும்
வருவதுங்குரங்குநம்வாழ்க்கையூர்கடந்
தரிதுகொலிராக்கதர்க்காழிநீந்துதல். (நூஞ)

வந்தனதிருக்கையுமரணம்வன்மையும்
வெந்தொழிற்றூனையின்விரிவும்வீரமும்
சிந்தையினுணர்பவர்யாவரேசிலர்
உய்ந்ததம்முயிர்கொடிவ்வுலகத்துள்ளுளார். (நூசு)

ஒல்வதுநினையினுமுறுதியோரினும்
வெல்வதுவிரும்பினும்வினையம்வேண்டினும்
செல்வதங்கவருணழச்சென்றுதீர்ந்தறக்
கொல்வதுகருமமென்றுணராக்கூறினான். (நூஎ)

பெரும்பக்கன் தன்மனநிலை கூறுதல்.

காவலன்கண்ணெதிரவனைக்கைகவித்
தியாவதுண்டினிநமக்கென்னச்சொல்லினான்

கோவமும்வன்மையுங்குரங்குக்கேயெல
மாபெரும்பக்கனென்றொருவன்வன்மையான். (கூஅ)

மூந்தினர்முரணிலர்சிலவர்மொய்யமர்
நந்தினர்தமரொடுநனிநயந்தனேதா
வந்தொருகுரங்கிடுதியின்வன்மையால்
வெந்தனேதாவிலங்கையோடரக்கர்வெம்மையும். (கூகூ)

மானுடரேவுவார்குரங்குவந்திவ்வூர்
தானெரிமடுப்பதுநிருதர்தானையே
ஆனவாதுகுறித்தழுங்குவாரெனின்
மேனிகழ்வதற்கினிவிளம்பல்வேண்டுமோ. (கo)

நின்றுநின்றிவைசிலவிளம்பநேர்கிலன்
நன்றெனினரொடுகுரங்கை * நாமறக்
கொன்றுதின்றல்லதோரெண்ணுங்கூடுமோ
என்றனனிகல்குறித்தெதிரியுங்கண்ணினான். (கக)

பிசாசன் தன்மனநிலை கூறுதல்.

திசாதிசைபோதுநாமரசன்செய்வினை
உசாவினனுட்கினனெழிதும்வாழ்வென்றான்
பிசாசனென்றொருபெயர்பெற்றபெய்கழல்
† நிசாசரனுருப்புணர்நெருப்புநீர்மையான். (கஉ)

பானுகோபன் தன் மனநிலைமை கூறுதல்.

ஆரியன்றன்மையீதாயிணையுறு
காரியமீதெனிற்கண்டவாற்றிலை
சீரியர்மனித்தரேசிறியம்யாமெனச்
சூரியன்பகைஞனென்றொருவன்சொல்லினான். (கங)

வேள்விப்பகைஞனென்பவன் தன்மனநிலை கூறுதல்.

ஆள்வினைநிலைமையுமரக்காற்றலும்
தாழ்வினியிதனின்மேற்பகரத்தக்கதோ
சூழ்வினைமனிசராற்றேறன்றிற்றுமெனை
‡ வேள்வியின்பகைஞனுமுரைத்துவெள்கினான். (கச)

தூமிராட்சன் தன்மனநிலை கூறுதல்.

தொகைநிறக்குரங்குடைமனிசர்ச்சொல்வினைன்
சிகைநிறச்சூலிதன்றிறத்திற்செல்வினும்
தகைநிறத்தண்ணறன்சமைதனன்றெனைப்
புகைநிறக்கண்ணனும்புகன்றுபொங்கினான். (கஎ)

---

* நாமற – பெயரற.
† நிசாசரன் – அசுரன்.
‡ வேள்வியின்பகைஞன் – எக்ஞவிரோதன்.

மற்றவண்பின்னுறமற்றையோர்களும்
இற்றிதுவேகலமெண்ணமற்றிலென்
றுற்றனவுற்றனசொல்லியோங்கினர்
புற்றுறையரவெனப்புழுங்குநெஞ்சினர். (சசு)

வேறு.

கும்பகருணன் தன் மனநிலை கூறுதல்.

வெம்பிகலரக்கரைவிலக்கிவினைதீரா
நம்பியரிருக்கவெனநாயகனைமுன்னை
எம்பியெனகிற்கிலுரைசெய்வலிதமென்னைக்
கும்பகருணப்பெயரிளனிவைகுறித்தான். (சள)

நீயயன்முதற்குலமிதற்கொருவனின்னாய்
ஆயிரமறைப்பொருளுணர்ந்தறிவமைந்தாய்
தீவினையப்புறுதல்செய்தனைதெரிந்தால்
எயினவுறத்தகையையத்துணையவேயோ. (சஅ)

ஓவியமமைந்தகர்தியுண*வுளைந்தாய்
கோவியலழிந்தவெதனவெவரருகுலத்தான்
தேவியையயந்துசிறைவைத்தசெயனன்றே
பாவியருறும்பழியிதிற்பழியுமுண்டோ. (சக)

நன்னகரழிந்தவெதனநாணினையத்தால்
உன்னுயிரெனத்தகையதேவியர்களுன்மேல்
இன்னகைதரத்தரவொருத்தன்மனையுற்றுள்
பொன்னடிதாழுத்தொழுமறுத்தல்†புகழ்போலாம். (சஙி)

என்னெருவனில்லுறதவத்தியையிரங்காய்
வன்னெருழிலிளையமறதுறந்துசிறைவைத்தாய்
அன்னெருழிவதாயினுமரக்கர்புகழைய
புன்னெருழிலிளலிசைபொறுத்தல்புலமைத்தோ. (சஞ)

ஆசில்பரதாரமனையஞ்சிறையடைபமீபம்
மாசில்புகழ்காதலுறவேம்வளனைகூரப்
பேசுவதுமானமிடைபேணுவதுகாமம்
கூசுவதுமாணுடனைதன்றுமெகாற்றம். (சடு)

சிட்டர்செயல்செய்திலகுலச்சிறுமைசெய்தாய்
மட்டவிழ்மலர்க்குழலினாயினிமன்னை
விட்டிடுதுமேலினியமாதுமவர்வெல்லப்
பட்டிடுதுமேலதுவுகன்றுபழியன்றால். (சசு)

---

* உளைந்தாய் – வருந்தினை.

† புகழ்போலாம் – அன்றென்பது குறிப்பு.

அறந்துறந்தமரரைவென்றவாண்டொழில்
திறந்தெரிந்திடினதுதானுஞ்செய்தவம்
நிறந்திறம்பாவகையியற்றுநீர்மையால்
மறந்துறந்தவர்தரும்வரத்தின்வண்மையால். (கூக)

மூவரைவென்றுமூன்றுலகுமுற்றுறக்
காவலினின்றுதங்களிப்புக்கைம்மிக
வீவதுமுடிவெனவீந்ததல்லது
தேவரைவென்றவர்யாவர்தீமையோர். (எ0)

வினைகளைவென்றுமேல்வீடெண்டவர்
எனைவரென்றியம்புகேனெவ்வந்தீர்க்கையால்
முனைவருமமரருமுன்னும்பின்னரும்
அனையவர்திறத்துளர்யாவராற்றினர். (எக)

விபீடணன் என்னுரையை இகழாதிருத்தியே லுரைக்கின்றேனென
இராவணனை நோக்கிக் கூறுதல்.

பிள்ளைமைவிளம்பினபேதைதீயெனை
ஒள்ளியபுதல்வனையுரப்பியென்னுரை
எள்ளலையாமெனினியம்பலாற்றுவென்
தெள்ளியபொருளென * வாசற்செப்பினன். (எஉ)

எந்தைதீயாயுநீயெம்முனீதவம்
வந்தனத்தெய்வநீமற்றுமுற்றுநீ
இந்திரப்பெரும்பதமிழக்கின்றுயென
வந்தனமனைகலனுவலவதாயினேன். (எங)

கற்றுறுமாட்சியென்கண்ணின்றுயினும்
உற்றுறுபொருடெரிந்துணர்தலோயினும்
† சொற்றுறுசூழ்ச்சியின்றுணிவுசோரினும்
முற்றுறக்கேட்டபின்முனிதிமொய்ம்பினேனெய். (எச)

கோனகர்முழுவதுநினதுகொற்றமும்
சானகியெனும்பெயருலகின்றம்மன
ஆனவள்கற்பினுல்வெந்ததல்லதோர்
வானரஞ்சுட்டதென்றுணர்தன்மாட்சியோ. (எஞ)

எண்பொருட்டொன்றின்றவருமெண்ணினுல்
விண்பொருட்டொன்றியவுயர்வுமீட்சியும்

---

* அரசற்செப்பினன் – இராவணனுக்குரைத்தான்.

† சொற்றுறுசூட்சியின் றுணிவுசோரினும்-மந்திராலோசனைச்சொ
களின் தீர்மானத்துக்கு மாறுபட்டாலும்.

மய்யுரைத்துலவுகண்டீனவிபால்வாமள்ித்தவைமரூதே
மெய்யுரைத்துயிர்கொடுத்தமரரும்பெறுகிலாவீடுபெற்ரூன். (அச)

அனையவன்சிறுவரெம்பெருமவுன்பகைஞரானவரையம்மா
இனையரென்றுணர்திியேலிருவரும்மொருவரும்மெதிர்கிலாதார்
முனைவரும்மமரரும்முழுதுணர்ந்தவர்களும்முற்றுமற்றும்
நினைவருந்தகையர்நம்வினையினுண்மனிசராயெளிதினின்ரூர். (அஎ)

கோசிகப்பெயருடைக்குலமூனிதத லைவலைகுளாமலாபம்ப
ராசனத்தவனெடவ்வுலகமுந்தருவெனென்றமையலுற்ரூன்
ஈசனிற்பெறுபடைக்கலமிமைப்பளவினவ்வுலகம்யாவும்
நாசமுற்றிடநடப்பனகொடித்தவைபிடித்துடையர்நம்பா. (அசு)

எறுழ்வலிப்பொருவிரூளவுணரோடமர்பண்டிகல்செய்காலத்
துறுதிறற்கலுழன்மீதுரூவனின்றமர்செய்தானுடையவில்லும்
தெறுசினத்தவர்கண்முப்புரநெருப்புறவுருத்தெய்தவம்பும்
குறுமுனிப்பெயரினுனிறதவர்க்கிறதாக்கொண்டுநின்ரூன். (அஎ)

நாவினலுலகைநக்கிடுவதிக்களவிடற்குரியநாளும்
மேவுதீவிடமுயிர்ப்பனவெயிற்பொழியெயிற்றனையவீரர்
ஆவமாமரியபுற்றுறைறவமுற்றறிவருக்கழிவுசெய்யும்
பாவகாரியருயிர்ப்பதமலாதிரைபெரூப்பகழிநாகம். (அஅ)

பெருமோவொருவாலவர்களாலல்லதிஃபெரியவேணும்
நாருமூரியுமரூநம்முடைச்சிலைகள்போனலியலாமோ
தாருவோவேணுவோதாணுவாயுலகினைத்தழுவிநிற்கும்
மேருவோமால்வரைக்குலமதோவல்லவோவில்லுமன்னை. (அக)

உரமொருங்கியுதுர்கடையும்வாலியதுார்புலகைமூடும்
மரமொருங்கியகராதியர்விராதனதுமாவரைகண்மானும்
சிரமொருங்கினவுனிச்செருவொருங்குரதெனிற்றெவ்வரென்பார்
பரமொருங்குவதலாற்பிறிதொருங்காததோர்பகையுமுண்டோ. (கo)

சொல்வரம்பெரியமாமுனிவரென்பவர்கடந்துணையிலாதார்
ஒல்வரம்பெரியதோளிருவரும்மமரரோடுலகம்யாவும்
வெல்வரென்பதுதெரிந்தெண்ணிரூர்நிருதர்வேர்முதலும்வீயக்
கொல்வரென்றுணர்தலாலவரைவந்தமைவதோரினையுபொண்டார். ()

துஞ்சுகின்றிலர்களாலிரவுநன்பகலுநிற்சொல்லவொவ்வி
நெஞ்சுநின்றயருமிந்நிருதர்பேர்சனகியாநெடியதாய
நஞ்சுதின்றவர்களாநண்ணுவார்நரகமென்றெண்ணிநம்மை
அஞ்சுகின்றிலர்கணின்னருளலாற்சாணிலாவமரையா. (கஉ)

இச்சைநல்லனவுறுதிகளிசைக்குவெனென்றாய்
பிச்சர்சொல்லுவசொல்லினையென்பெருவிறலக்
கொச்சைமானுடர்வெல்குவரென்பதுகுறித்த
தச்சமோவவர்க்கன்பிலேயாவதாவையா. (கo5)

ஈங்குமானுடப்பசுக்களுக்கிலவரமென்றாய்
தீங்குசொல்லினை திசைகளையுலகொடுஞ்செருக்கால்
தாங்குமானையைத்தள்ளியத்தழனிறத்தவனை
ஓங்கறன்வெடுமெடுக்கவும்வரங்கொண்டதுளதோ. (கo2)

மனக்கொடன்றியும்வறியனவழங்கினைவாளேர்
சினக்கொடும்படைசெருக்களத்தென்னையென்செய்த
னைக்குநிற்கமற்றெறன்வெடிங்கொருவயிற்றுதித்த
உனக்குமானுடர்வலியராந்தகைமையுமுளதோ. (கo3)

சொல்லுமாற்றங்கடொரிந்திலபன்முறைதோற்றும்
வெல்லுமாற்றலுமொருமுறைபொறுத்தனன்விண்ணைக்
கல்லுமாற்றலென்கிளையையுமென்னையுங்களத்தில்
கொல்லுமாற்றலருளரெனக்கோடலுங்கொண்டாய். (கo4)

தேவரிற்பெற்றவரத்தினிற்பெருஞ்செருக்கென்னின்
மூவரிற்பெற்றமுடையவன்றன்வெடிமுழுதும்
காவலிற்பெற்றதிகிரியோன்றன்வெடுங்கடந்த
தேவரிற்பெற்றவரத்திறலியம்புதியிளையோய். (கo5)

நந்திசாபத்தினமையடுங்குரங்கெனினம்பால்
வந்தசாபங்களைனப்பலவனைவசெய்தவலியென்
இந்தியாதிகளவித்தவர்தேவர்நம்மிறுதி
சிந்தியாதவர்யாரனைவநம்மையென்செய்த. (கo6)

* அரங்கிலுடுவாற்கன்புபூண்டுடைவரமறியேன்
இரங்கியானிற்பவென்வலியவன்வயினெய்த
வரங்கொள்வாலிபாற்றோற்றனென்மற்றும்வேறுள்ள
குரங்கெலாமெனைவெல்லுமென்றெங்ஙனங்கோடி. (கo7)

† நேமியுநேர்ந்தின்றுநேரின்
எலுமன்னவருடைவலியவன்வயினெய்தும்
சாலுநல்வரநினைந்தவனெதிர்செலத்தவிர்ந்து
வாலிதன்னையுமனிதனுமறந்துநின்றெய்தான். (கo8)

---

* அரங்கில் – நடனசாலையில்.

ஊனவில்லிறுத்தேதாட்டைமாமரத்துளம்போட்டிக்
கூனிசூழ்ச்சியாலாசழிந்துயர்வனங்குறுகி
யானிழைத்திடவில்லிழந்தின்னுயிர்சுமக்கும்
மானுடன்வலிநீயலாதாருளர்மதிப்பார். (கoக)

பின்னும் விபீடணன் கூறுதல்.

என்றுதன்னுரையிழித்துநீயுணர்விலியென்ன
நன்றுதோதுநாமெழுகெனுமரக்கனைநணுகா
ஒன்றுகேளினமுறுதியென்றன்பினெழுயான்
துன்றுதாரவன்பின்னருமினையனசொல்வான். (கக0)

தன்னின்முன்னியபொருளிலாவொருதனிததலைவன்
அன்னமானுடனுகிவந்தவதரித்தமைந்தான்
சொன்னநம்பொருட்டும்பர்தஞ்சூழ்ச்சியின்றுணிவால்
இன்னமேகுதிபோலுமென்றடிதொழுதிரந்தான். (கக)

பின்னும்இராவணன் கூறுதல்.

அச்சொற்கேட்டவனெழியானென்றனையாயின்
கொச்சைசத் * தன்மதியெத்தனைப்போரிடைக்குறைந்தான்
இச்சைசக்கேற்றனையான்செய்தவித்தனைகாலம்
முச்சற்றூன்கொலம்முழுமுதலேலானெனமுனிந்தான். (கக௨)

இந்திரன்றனையிருஞ்சிறையிட்டநாளிமையாத்
தந்திகோடிறத்தகர்ந்தநாடன்னையான்முன்னம்
வந்தபோர்தொறுந்துரந்தநாள்வானவருலகைச்
சிந்தவென்றநாள்சிறியன்கொனீசொன்னதேதவன். (கக௩)

சிவனுநான்முகத்தெதாருவனுந்திருமெருமாலாம்
அவனுமற்றுளவமாருமுடனுனைறந்தடங்காப்
புவனமூன்றும்யாணெண்டளதாண்டவப்பொருவில்
உவனிலாமையிலேலாவலியொதுங்கியோவுரையாய். (கக௪)

ஆயிரம்பெருந்தோள்கருமத்துணைத்தலையும்
மாயிரும்புவியுள்ளடியடக்குறும்வடிவும்
தீயசாலவுஞ்சிறிதெனநினைந்தநாள்நின்னும்
ஓயுமானுடவுருவுகொண்டனன்கொலாமொருவன். (கக௫)

† பித்தனுகியவ்சனுமாலுமென்பெயர்கேட்
டெய்த்தசிந்தையரோகுழியேகுழியெல்லாம்
கைத்தவேற்றிலுங்கடாவியபுள்ளினுமுதுகில்
தைத்தவாளிகணின்றுளதுன்றின்வீழ்ந்தடித்தின். (கக௬)

* தன்மதி-தற்புத்தியையுடையாய.
† பித்தனுகிய-உன்மத்தமுடையவனுகிய.

வெஞ்சினந்தருபோரிலென்னுடனெழுவேண்டா
இஞ்சிமாநகரிடமுடைத்தீண்டினிதிருத்தி
அஞ்சலஞ்சலென்றயலிருந்தவர்முகநோக்கி
நஞ்சின்வெய்யவன்கையெறிந்துருமெனநக்கான். (கக஖)

விபீடணன் இரணியன் சரிதைதகேளென உரைத்தல்.

பின்னும்வீடணனேயநின்றரமலபெரியோர்
முன்னைநாளவன்முனிந்திடக்கிளையொடுமுடிந்தார்
இன்னமுண்டியாணியம்புவதிரணியனென்பான்
றன்னையுள்ளவாகேட்டியென்றுரைசெயச்சமைந்தான். (கக஗)

உ-வது, மந்திரப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஙஒ.

ங-வது, இரணியன் வதைப்படலம்.

வேதங்கண்ணியபொருளெலாம்விரிஞ்சனேயீந்தான்
போதங்கண்ணியவரமவன்றரக்கொண்டுபோந்தான்
காதங்கண்ணுறுதலோனயன்கடைமுறைகாணப்
பூதங்கண்ணியவலியெலாமொருதனிபொறுத்தான். (க)

எற்றைநாளினுமுளனெனுமிறைவனுமயனும்;
கற்றையஞ்சடைக்கடவுளுங்காத்தளித்தழிக்கும்
ஒற்றையண்டத்தினளவிலேவிதன்புறத்துலவா
மற்றையண்டமுந்தன்பெயரேசொலவாழ்ந்தான். (உ)

பாழிவன்றடந்திசைசுமந்தேதாங்கியபணைக்கைப்
பூழிவன்கரியிரண்டிருகைகொடுபொருத்தும்
ஆழங்காணுதற்கரியவாயகன்றவோராழி
ஏழுந்தன்னிருதாளளவெனக்கடந்தேதறும். (ங)

வண்டற்றெண்டிரையாற்றுநீர்சிலவென்றுமருவான்
கொண்டல்கொண்டநீர்குளிர்ப்பிலவென்றவைகுடையான்
பண்டைத்தெண்டிரைப்பரவைநீருவரென்றுபடியான்
அண்டத்தைப்பொதுத்தப்புறத்தப்பிலாதும்.

சார்விமானத்திற்சந்திரன்றனிப்பதஞ்சாரிக்கும்
தேரின்மேனின்றுமிரவிதன்பெரும்பதஞ்செலுத்தும்

பேர்விலெண்டிசைக்காவலர்கருமமும்பிடிக்கும்
மேருமால்வரையுச்சிமேலரசுவீற்றிருக்கும். (இ)

நிலனுநீரும்வெங்கனலொடுகாலுமாய்நிமிர்ந்த
தலனுணீடியவவற்றினத்தலைவரைமாற்றி
உலவுங்காற்றெருகடவுளர்பிறருமாயுலகின்
வலியுஞ்செய்கையும்வருணன்றன்கருமமுமாற்றும். (ஈ)

* தாமரைத்தடங்கண்ணிறைன்போவைதவிர
நாமந்தன்னதேயுலகங்கள்யாவையுநவிலத்
தூம்வெங்கனலந்தணர்முதலினர்சொரிந்த
ஓமவேள்வியினிறையவர்பேறலாமுண்ணும். (உ)

காவல்காட்டுதறுடைத்தலென்றித்தொழில்கடவ
மூவரும்மனைமுடிக்கிலர்பிடிக்கிலர்முறையின்
ஏவர்மற்றவர்யோகிகளுறுபதமிழந்தார்
தேவரும்மவன்ருளலாதருச்சனைசெய்யார். (ஊ)

மாபின்மாபெரும்புறக்கடன்மஞ்சனமருவி
அரவிரைட்டிடைமகளிரோடின்னமுதருந்திப்
பரவுமிந்திரன்பதியிடைப்பகற்பொழுதகற்றி
இரவிலேலைக்கநான்முகனுலகத்துளிருக்கும். (எ)

பண்டுவானவர்தானவர்யாவரும்பற்றித்
தெண்டிரைக்கடல்கடைதரவலியதுதேடிக்
கொண்டமத்தினைக்கொற்றத்தன்குவவுத்தோட்கமைந்த
தண்டெனக்கொளலுற்றதுநொய்தெனத்தவிர்ந்தான். (ஏ0)

மண்டலந்தருகதிரவன்வந்துபோய்மறையும்
எண்டலந்தொடற்கரியனதடவரையிரண்டும்
கண்டலம்பசும்பொன்னவன்முன்னவன்காதின்
குண்டலங்கண்மற்றெறன்னினிப்பெருவிறல்கூறின். (ஏஏ)

மருக்கொடாமரைநான்முகனம்முகன்முதலோர்
குருக்களோடுகற்றேறுதவதவன்பெருங்கொற்றம்
சுருக்கநான்மறைதான்றுதொட்டுரைதொறுந்தோன்ற
திருக்குந்தெய்வமுமிராணியனேமவென்னும். (ஏஉ)

மயருமன்னெடுஞ்சேவடிமண்ணிடைவைப்பின்
அயரும்வானெயிற்றுயிரம்பணந்தலையகந்தன்
உயருமேலண்டமுகடுதன்முடியுறவுயரும்
பெயருமேனெடும்பூதங்களைந்தொடும்பெயரும். (ஏஊ)

---

* தாமரைத்தடங்கண்ணிறைன் – புண்டரீகாட்சனை திருமாலின்.

பெண்ணிற்பேரொழிலாணினி * லலியினிற்பிறிதும்
உண்ணிற்கும்முயிருள்ளதினில்லதி † னுலவான்
கண்ணிற்காண்பனகருதுவயாவினுங்கழியான்
மண்ணிற்சாகிலன்வானினுஞ்சாகிலன்வர்த்தால். (கச)

தேவராயினரேவருந்திரிதருமியக்கர்
யாவராயினுமெண்ணவுநினைக்கவுமியன்ற
கோவைமாலயன்மானுடன்யாவருங்கொல்ல
ஆவிதீர்கிலனுற்றலுந்தீர்கிலனேனயான். (கரு)

நீரிற்சாகிலனெருப்பினுஞ்சாகிலனிமிர்ந்த
மாருதத்தினுமண்ணின்மற்றெவற்றினுமாளான்
ஓருந்தேவருமுனிவரும்பிறர்களுமுரைப்பச்
சாருஞ்சாபமுமன்னவன்றனைச்சென்றுசாரா. (கசு)

உள்ளிற்சாகிலன்புறத்தினு ‡ முலக்கிலனுலவாக்
கொள்ளத்தெய்வவான்படைக்கலம்யாவையுங்கொல்லா
$ நள்ளிற்சாகிலன்பகலிடைச்சாகிலனமரர்
கொள்ளச்சாகிலனரினியவனுயிர்கொள்வார். (கள)

பூதமைந்தொடும்பொருந்தியவுணர்வினிற்புணரும்
வேதநான்கினும்விளம்பியபொருள்களால்விளியான்
தாதைதன்னைத்தான்றனிக்கொலசூழினுஞ்சாகான்
ஈதவன்னிலையெவ்வுலகங்கட்குமிறைவன். (கஅ)

ஆயவன்றனக்கருமகன்றிருரினறிருன்
தாயரென்பவர்யாரினுமறையினுந்தாயன்
நாயகன்றனிஞானநல்லறத்துக்குநாதன்
தாயின்மன்னுயிர்க்கன்பினனுளனெருதக்கோன். (ககு)

வாழியானவன்றனைக்கண்டுமனமுவந்துருகி
ஆழியையநீயறிதியான்மறையெனவணைந்தான்
§ ஊழியுங்கடந்துயர்கின்றவாயுளானுலகம்
ஏழுமேழும்வந்தடிதொழுவரசுவீற்றிருந்தான். (உ0)

என்றொருந்தணனெல்லையிலறிருனேயெவி
நன்றுநீயிவற்குதவுதிமறையெனநவின்றான்
சென்றுமற்றவன்றன்னெடுமொருசிறைசேர்ந்தான்
அன்றுநான்மறைமுதலியவோதுவானமைந்தான். (உக)

---

* அலியினில் – பேட்டினில்; பேடுநபுஞ்சகம்-ஆண்டன்மையற்றது.
† உலவான் – நீங்காதிருப்பான். ‡ உலக்கிலன் – குறயான்.
$ நள்ளில் – உச்சிப்பொழுதில். § ஊழி – விதி.

ஓதப்புக்கவனுந்தைதேபருரையெனலோடும்
போதத்தன்செவித்தொளையிருகைகளாற்பொத்தி
மூதக்கோயிதுநற்றவமன்றெனமொழியா
*வேதத்துச்சியின்மெய்ப்பொருட்பெயரினவிரித்தான். (உஉ)

ஓநமோநாராயணையவென்றுரைத்துளமுருகித்
தானமைந்திருதடக்கையுந்தலையின்மேற்றுங்கிப்
பூநிறக்கண்கள்புனலுகமயிர்புறம்பொடிப்ப
ஞானநாயகனிருந்தனனந்தணனடுங்கி. (உங)

கெடுத்தொழிந்தனையென்னையுமுன்னையுங்கெடுவாய்
படுத்தொழிந்தனைபாவியத்தேவரும்பகர்தற்
கடுத்ததன்றியேயயலொன்றுபகரின்னறிவின்
எடுத்தெதன்னிதுவென்செய்தவண்ணமீயென்றான். (உச)

என்னையுய்வித்தேதனைந்தையையுய்வித்தேதனினைய
உன்னையுய்வித்திவ்வுலகையுமுய்விப்பானமைந்து
முன்னைவேதத்தின்முதற்பெயர்மொழிவதுமொழிந்தேன்
என்னைகுற்றநானியம்பியதியம்புதியென்றான். (உரு)

முந்தைதவானவர்யாவர்க்குமுதல்வற்குமுதலோன்
உந்தைமற்றவன்றிருப்பெயருரைசெயற்குரிய
அந்தணாளனேனென்னினுமறிதியோவையா
இந்தவிப்பெயருரைத்தெதனைக்கெடுத்திடலென்றான். (உசு)

வேதபாரகனவ்வுரைசெய்தலும்விமலன்
ஆதிநாயகன்பெயரன்றியான்பிறிதறியேன்
ஓதவேண்டுவதில்லையென்னுணர்வினுக்கொன்றும்
போதியாததுமில்லையென்றிவையிவைபுகலும். (உஎ)

தொல்லைநான்மறையாவையுந்துணிபொருட்கெல்லாம்
† எல்லைகொண்டவனகம்புகுந்திடங்கொண்டதென்னுள்
இல்லைவேறினிப்பெரும்பதம்யானறியாத
வல்லையேயினியோதுவீதியின்வழாத. (உஅ)

ஆரைச்சொல்லுவதந்தணாருமறையறிந்தோர்
ஓரச்சொல்லுவதெப்பொருளுபநிடதங்கள்
தீரச்சொல்லுவதேதவரும்முனிவருஞ்செப்பும்
பேரைச்சொல்லுவதல்லதுபிறிதுமொன்றுளதோ. (உக)

---

* வேதத்துச்சியின் மெய்ப்பொருள்பெயர் - ஹரியென்பது.

† எல்லைகொண்டவன்-முடிபொருளாகநின்றுள்ளவன்.

வேதத்தானுநல்வேள்வியினுணுமெய்யுணர்ந்த
போதத்தானுமப்புறத்துளவெப்பொருளானும்
சாதிப்பார்பெறும்பெரும்பதந்தலைக்கொண்டுசமைந்தேன்
ஓதிக்கேட்பனபரம்பொருளினினுமொன்றுளதோ. (கூ0)

காடுபெற்றியுங்கனவரைபற்றியுங்கலத்தோல்
மூடுபெற்றியுமுண்டித்துநீட்டியுமுறையால்
வீடுபெற்றவர்பெற்றதின்விழுமிதென்றுரைக்கும்
மாடுபெற்றனன்மற்றினியென்பெறவருந்தி. (கூ1)

செவிகளாற்பலகேட்கிலாயினுந்தேவர்க்
கவிகொணுன்மறையகப்பொருள்புறப்பொருளறிவார்
கவிகளாகுவார்காண்குவார்மெய்ப்பொருள்காலால்
புவிகொணையகற்கடியவர்க்கடிமையிற்புக்கார். (கூ2)

எனக்குநான்முகத்தொருவற்கும்யாரினுமுயர்ந்த
தனக்கும்வேறுளசராசரமனைத்திற்குந்தலைவன்
மனக்குவந்தனன்வந்தனயாவையுமறியோய்
உனக்கு * மின்னதினல்லதான்றில்லெனவுரைத்தான். (கூ3)

மாற்றம்யாதொன்றுமுரைத்திலன்மறையவன்மறுகி
ஏற்றமென்னெனக்கிறுதிவந்தெய்தியதென்னு
ஊற்றமில்லவமேழடினன்கனகனையுற்றான்
தோற்றவந்தமேதார்கனவுகண்டானெனச்சொன்னான். (கூ4)

எந்தைதானெனக்கிம்மைக்குமறுமைக்குமியம்பச்
சிந்தையா † லிறைநினைத்தற்குமடாதனசெப்பி
முந்தையேநினைந்தென்பொருண்முற்றுமென்றுரைத்தான்
மைந்தனேதிலன்வேதமென்றுரைத்தனன்வணங்கி. (கூ5)

அன்னகேட்டவனந்தணவந்தணர்க்கடாத
முன்னர்யாவருமொழிதருமுறைமையிற்படாத
தன்னதுள்ளுடையுணர்ச்சியாற்புதுவதுதந்த
தென்னசொல்லவனியம்பியதியம்புதியென்றான். (கூ6)

அரசனன்னையுரைசெயமறையவனஞ்சிச்
சிரதலங்கரஞ்சேர்த்திடச்செவித்தொளசோர்ந்த
உரகமன்னசொல்யானுனக்குரைசெயினுரவோய்
நரகமெய்துவெனுவும்வெந்துகுமெனநவின்றான். (கூ7)

---

* இன்னதின் – இங்ஙமோகாராயணனெவன்பதின்.

† இறை – ஒருசிறிதும்.

கொணர்கென்மைந்தனைவல்விரைந்தென்றனன்கொடியோன்
உணர்வினெஞ்சினனேவலாற்கடிதினிற்றொடிக்
கணனினெய்தினர்பணியெனத்தாதையைக்கண்டான்
* துணையிலான்றனைத்துணையெனவுடையவன்றொழுதான். (நஅ)

தொழுதமைந்தனைச்சுடர்மணிமார்பிடைச்சுண்ணம்
எழுதவன்பிழைடறுகுறத்தழுவிமாடிருத்தி
முழுதுநோக்கிநீவேதியன்கேட்கவின்முனியப்
பழுதுசொன்னசொலன்னதுபகருதியென்றான். (நக)

சுருதியாதியிற்றொடங்குறுமெல்லையிற்சொன்ன
ஒருவன்யாவர்க்குநாயகன்றிருப்பெயருணரக்
கருதக்கேட்டிடக்கட்டுரைத்திடர்க்கடல்கடக்க
உரியமற்றிதினல்லதொன்றில்லெனவரைத்தான். (சo)

தேவர்செய்கையனங்ஙன்முரைசெயத்தீயோன்
தாவில்வேதியன்றக்கதேயுரையெனத்தகுவன்
ஆவதாகுகவன்றெனினறிகுவமென்ற
ஏவதவ்வுரைவிளம்புதிவிளம்புதியென்றான். (சக)

† காமம்யாவையுந்தருவதுமப்பதங்கடந்தால்
சேமவீடுறச்செய்வதுஞ்சென்தழன்முகந்த
ஓமவேள்வியினுறுபதமுய்ப்பதுமொருவன்
நாமமன்னகணேமோகநாராயணைய. (சஉ)

மண்ணினின்றுமேன்மலரயனுலகுறவாழும்
எண்ணில்பூதங்கணிற்பனதிரிவனவிவற்றின்
உண்ணிலைறந்துறைகாணத்திணிங்குளவுணர்வின்
எண்ணுகின்றதிவ்வெட்டெழுத்தேபிறிதில்லை. (சங)

மூக்கட்டேவனுகான்முகத்தெதாருவனுமுதலா
மக்கட்காறுமிம்மந்திரமறந்தவர்மறந்தார்
புக்குக்காட்டுவதரிதிதுபொதுவுறக்காண்பார்
ஒக்கநோக்கினரல்லவரதனிலையுணரார். (சச)

தோற்றமென்னுமத்தெதால்வினைத்தெதாடுகடற்சுழிற்பின்
றேற்றுநண்கலனருங்கலன்யாவர்க்குமினிய
மாற்றமங்கலமாதவவேதத்தின்வரம்பின்
தேற்றமெய்ப்பொருடெரிந்தமற்றிதனிலுசிறந்த. (சஙி)

உன்னுயிர்க்குமென்னுயிர்க்குமிவ்வுலகத்தினுள்ள
மன்னுயிர்க்குமீதுறுதியென்றுணர்வுறமதித்துச்

---

* துணையிலான் – ஒப்பற்றஹரி.
† காமம் – சேதனநினைச்சை.

சொன்னவிப்பெயரென்றனனறிஞரிற்றாயான்
மின்னுயிர்க்கும்வேலிராணியன்றழலெழவிழித்தான். (சுசு)

அற்றைநாண்முதல்யாஞளநாள்வரையப்பேர்
சொற்றவாயையுங்கருதியமனத்தையுஞ்சுடுமென்
ஒற்றையாணைமற்றியாருனக்கிப்பெயருரைத்தார்
கற்றதாரொடுசொல்லுதிவிரைந்தெனக்கனன்றான். (சுஎ)

மூனைவர்வானவர்முதலினர்மூன்றுலகத்தும் .
இனையருள்ளவர்யாவருமென்னிருகழலே
நினைவதேத்துவதென்பெயர்நினக்கிதுநேர
அனையாஞ்சுவர்மைந்தீயாரிடையறிந்தாய். (சுஅ)

மறங்கொள்வெஞ்சொருமலகுவான்பன்முறைவந்தான்
கறங்குவெஞ்சிறைக்கலுழன்றன்கடுமையிற்கரந்தான்
பிறங்குதெண்டிரைப்பெருங்கடல்புக்கினம்பெயரா
துறங்குவான்பெயருறுதியென்றுருனக்குரைத்தார். (சுகூ)

புரைவறுண்மணிலெண்ணினுமெண்ணரும்பரப்பின்
குரவர்நங்குலத்துள்ளவரவன்கொலக்குறைந்தார்
அரவினுமத்தையெலியிருந்தோதிலுலதற்கு
விரவுநன்மையென் * றுன்மதிவிளம்பெனவெகுண்டான். (சுஙு)

வயிற்றினுள்ளுலகேழினேடையுமைவக்கும்
அயிர்ப்பிலாற்றலென்னுசுனேயெனமொன்றுகி
எயிற்றினுலெறிந்தின்னுயிருண்டவனுமம்
பயிற்றவோநினைப்பயந்ததுநானெனைப்பகர்ந்தான். (சுஙூ)

ஒருவன்யாவர்க்குமெவற்றிற்குமுலகிற்குமுதல்வன்
தருதல்காத்தலைதவிர்த்தலென்றிவைசெயத்தக்கோன்
கருமத்தாலன்றிக்காரணத்தாலுள்ளகாட்சி
திருவிலீமற்றிதெம்மறைப்பொருளெனத்தெரிந்தாய். (சுஎ)

ஆதியந்தங்களிதனின்மற்றில்லேபருணரின்
வேதமெங்ஙனமங்ஙனமவைசொன்னவிதியால்
கோதினல்வினைசெய்தவருயர்குவர்குறித்துத்
தீதுசெய்தவர்தாழ்குவரிதுமெய்ம்மைதெரியின். (சுஅ)

செய்தமாதவமுடைமையினரியயன்சிவனென்
றெய்திரைப்பதமிழந்தனர்யான்றவமியற்றிப்
பொய்யிலையகம்பூண்டவினினியிதுபுரிதல்
நொய்யதாகுமென்றுருமென்காவலினுழைவார். (சுசு)

---

* துன்மதி-துன்மதியே.

வேள்வியாகியபுண்ணியந்தவத்தெதாடும்விலக்கிக்
கேள்வியாலையுந்தவிர்த்தனெனிவைகிளர்பகையைத்
தாழ்வியாதனசெய்யுமென்றனையவர்தம்பால்
வாழ்வியாதயலெவ்வழிப்புறங்கொண்டுவாழ்வார். (நந)

பேதைப்பிள்ளைநீபிழைத்ததுபொறுத்தனென்பெயர்த்தும்
ஏதில்வார்த்தைதகளினையனவிளம்பலமுனிவன்
யாதுசொல்லினனையவையிதமெனவெண்ணி
ஓதி * போர்தியென்றுரைத்தனனுலகெலாமுயர்ந்தோன். (நசு)

வேறு.

உரையுளதுணர்த்துவதுணர்ந்துகோடியேல்
விரையுளவலங்கலாய்வேதவேள்வியின்
கரையுளதியாவருங்கற்குங்கல்வியின்
பிரையுளதென்பதுமைந்தன்பேசினன். (நஎ)

வித்தின்றிவிளைவதொன்றில்லைவேந்தனின்
பித்தின்றியுணர்தியேலளைவப்பெய்தனன்
உய்த்தொன்றுமொழிவின்றியுணர்தற்பாற்றெனைக்
† கய்த்தொன்றுநெல்லியின்கனியிற்காண்டியால். (நஅ)

தன்னுளேயுலகங்களெவையுந்தந்தவை
தன்னுளேநின்றுதானவற்றுட்டங்குவான்
பின்னிலன்முன்னிலனெருவன்பேர்கிலன்
தொன்னிலையொருவராற்றுணியற்பாலனே. (நக)

சித்தெனவருமறைச்சிரத்திற்றேறிய
தத்துவமவனதுதம்மைத்தாமுணர்
வித்தகரறிகுவர்வேறுயேறுணர்
பித்தருமுளர்சிலர்வீடுபெற்றிலர். (கூ0)

‡ அளவையானளப்பரிதறிவினப்புறத்
துளவையாயுபநிடதங்களோதுவ
களவியாற்பொருள்களாற்கிளக்குறுதவன்
களவையாரறிகுவார்மெய்ம்மைகண்டிலார். (கூக)

மூவகையுலகுமாய்க்குணங்கண்மூன்றுமாய்
யாவையுமெவையுமாயெண்ணில்வேறுபட்
டோவலிலெருநிலையொருவன்செய்வினை
தேவருமுனிவருமுணரத் ¶ தேயுமோ. (கூஉ)

---

* ஓதி-ஓதுதி. போர்தி-போவாயாக.
† கய்த்து-கையினிடத்து.
‡ அளவையான்-காண்டல்கருதலாதிய காட்சி அவைகளால்.
¶ தேயுமோ-குறைவுறுமோ.

* சாங்கியம் † யோகமென்றிரண்டுதன்மைய
வீங்கியபொருளெலாம்வேறுகாண்பன
ஆங்கவையுணர்ந்தவர்க்கன்றியன்னவன்
ஓங்கியமேனிலையுணரற்பாலதோ. (சுஉ)

கருமமுங்கருமத்தின்பயனுங்கண்ணிய
தருமுதற்றலைவனுந்தானுந்தானவன்
அருமையும்பெருமையுமறிவரேலவர்
இருமையென்றுரைசெயுங்கடனின்றேறுவார். (சுக)

மந்திரமாதவமென்னுமாலைய
தந்துறுபயனிவைமுறையிற்சாற்றிய
நந்தலிறெய்வமாய்நல்குநான்மறை
அந்தமில்வேள்விமாட்டவிசுமாமவன். (சுங)

முற்பயப்பயன்றருமுன்னினின்றவர்
பிற்பயப்பயன்றரும்பின்புபோலவன்
தற்பயன்ருன்றெரிதருமமில்லையஃ
தற்புதமாயையாலறிகிலார்பலர். (சுசு)

ஒருவினையொருபயனன்றியுய்க்குமோ
இருவினையென்பவையியற்றியிட்டவை
கருதினகருதினகாட்டுகின்றன
தருபரனருளினிற்சான்றுவேண்டுமோ. (சுஎ)

ஓராவுதிகடைமுறைவேள்வியோம்புவோர்
ஆராவணையமலனுக்களிப்பராலது
சராசரமனைத்தினுஞ்சாருமென்பது
பராவருமறைப்பொருள்பயலுமன்னதால். (சுஅ)

பகுதியினுட்பயன்பயந்ததன்னதின்
மிகுதியின்மிகுதிகளெவையுமேலவர்
வகுதியின்வசத்தனவரவுபோக்கது
புகுதியில்லாதவர்புலத்திற்ருகுமோ. (சுஆ)

எழுத்தியலளத்தினெண்ணலாவகை
முழுத்தனிநான்முகன்முதலமற்றுயிர்
வழுத்தரும்பொகுட்டதோர்புரையின்வைகுமால்
விழுத்தனிப்பல்லிதழ்விரையிலாமுகிழ். (எ0)

கண்ணினுங்கரந்துளன்கண்டுகாட்டுவான்
உண்ணிறைந்திடுமுணர்வாகியுண்மையால்

சாங்கியம்-கபிலமதம்.

† யோகம்-பதஞ்சலிமதம்.

மண்ணினும்வானினுமற்றைநலமூன்றினும்
எண்ணினுநெடியவனெருவனெண்ணினிலான். (எக
சிந்தையிற்செய்கையிற்சொல்லிற்சேர்ந்துளன்
இந்தியந்தொறுமுளனுற்றதண்ணிலல்
முந்தையோரெழுத்தினவந்துமும்முறைச்
சந்தியும்பதமுமாய்த்தழைத்ததன்மையான். (எஉ
காமமும்வெகுளியுமுதலகண்ணிய
தீமையும்வன்மையுந்தீர்க்குஞ்செய்கையால
நாமமுமவன்பிறநலிகொடாநெடுஞ்
சேமமும்பிறர்களாற்செப்பற்பாலவோ. (எங
காலமுங்கருவியுமிடனுமாய்க்கடைப்
பாலைமையனுமாயபயனறுயபபானுமாய
சீலமுமவைதருந்திருவுமாயுளன்
ஞாலமும்வித்துமொத்தடங்குமாண்மையான். (எச
உள்ளுறவுணர்வினிதுணர்ந்தவாசையோர்
தெள்விளியாழிடைத்தெரியுஞ்செய்கையான்
உள்ளுளன்புறத்துளனென்றுநண்ணலான்
தள்ளருமறைகளு * மருளுந்தன்மையான். (எஞ
ஓமெனுமோரெழுத்ததனினுள்ளுயிர்
ஆமவனறிவினுக்கறிவுமாயினான்
தாமமூவுலகமுந்தழுவிச்சார்தலால்
† தூமமுங்கனலும்போற்றொடர்ந்ததோற்றத்தான். (எசு
காலையினறுமலரொன்றக்கட்டிய
மாலையின்மலர்புரைசமயவாதியர்
சூலையின்றிருக்கலாற்சொல்லுவோர்க்கெலாம்
வேலையுந்திரையும்போல்வேறுபாடிலான். (எள
இன்னதோர்தன்மையனிகழ்வுற்றெய்திய
நன்னெடுஞ்செல்வமுநாளுநாமற
மன்னுயிரிழுத்தியென்றிறைஞ்சிவாழ்த்தினேன்
சொன்னவணமமென்றுணரச்சொல்லினான். (எஅ

வேறு.

எதிரினின்றவனிலையுரைத்திடுதலுமெவ்வுலகமுமஞ்ச
முதிருமெங்கதமொழிகொடுமூண்டதுமுதுகடற்கடிவேய்ப்பக்

---

* மருளுந்தன்மைமான் - தன்னிலபுணராது மயங்கத்தக்க தகுதி யினையுடையான்.

† தூமம் - புகை.

உயுத்தகாண்டம்

கதிரும்வானமுஞ்சுழன்றனநெடுநிலங்கம்பித்தகனகன்கண்
உதிரங்கான்றனதான்றினபுகைக்கொடியுமிழ்ந்ததுகொடுந்தியே. (எக)
வேறுமென்றெடுதரும்பகைபிறிதினிவேண்டலென்விணயத்தால்
ஊறியென்னுளேயுதித்ததுகுறிப்பினியுணர்குவதுளதன்றால்
ஈறிலென்பெரும்பகைஞனுக்கன்புசாலடியென்யானென்கின்றான்
* கோறிரென்றனனென்றலும்பற்றினர்கூற்றினுங்கொலைவல்லார். ()
குன்றுபோன்மணிவாயிலின்பெரும்புறத்துய்த்தனர்மழுக்கூர்வாள்
ஒன்றுபோல்வனவாயிரமீதொடுத்தேதாச்சினருயிரோடும்
தின்றுதீர்குதுமென்குநருருமெனத்தெழித்தனர்சினவேழக்
கன்றுபுல்லியகோளரிக்குழுவெனக்கனல்கின்றதறுகண்ணார். (அக)
தாயின்மன்னுயிர்க்கன்பினன்றன்னையத்தவமெனுந்தகவில்லோர்
ஏயெனுந்துணைமாத்திரத்தெய்தனவெறிந்தனவெறிதோறும்
தூயவன்றனைத்துணையெனவுடையவவ்வொருவனைத்துன்னுதார்
வாயின்வைதனவொத்தன † வத்துணைமழுவொடுகொலைவாளும். (அஉ)
எறிந்தவெய்தனவெற்றினகுத்தினவீர்த்தனபடையாவும்
முறிந்தநுண்பொடியாயினமுடிந்தனமுனிவிலான்முழுமேனி
சொறிந்ததன்மையுஞ்செய்திலவாயனதூயவன்றுணிவொன்று
அறிந்தநாயகன்சேவடிமறந்திலனயர்த்திலனவனுமம். (அங)
உள்ளவான்பெரும்படைக்கலம்யாவையுமுக்கனவுரவோய்நின்
பிள்ளைமேனிக்கோரானிவந்திலதினிச்செயலென்கொல்பிறிதென்னக்
கள்ளவுள்ளத்தன்கட்டினன்கருவிகள்கதுமெனக்கனல்பொத்திற்
தள்ளுபின்னெனவுரைத்தனன்வயவருமத்தெதிர்ற்றலுகின்றார். (அச)
சூழியிலிந்தனமடக்கினர்குன்றெனக்குடந்தாறுஞ்சாணென்னெய்
இழுதுநெய்சொரிந்திட்டனர்நெருப்பெழுந்திட்டதுவிசும்பெட்ட
அழுதுநின்றவரயர்வுறவ்வயனைப்பெய்தனரீஇயென்று
தொழுதுநின்றனனையகன்றூளிணைகுளிர்ந்ததுசுடுதியே. (அஎ)
காலவெங்கனல்கதுவியகாலயிற்கற்புடையவள்சாற்ற
சீலநல்லுரைசிதமிக்கடுத்தலிற்கிழியொடுநெய்தீற்றி
ஆலமன்னவர்கரங்களால்வயங்கெரிமடுத்தலிலுமன்றன்
‡ கூலமாமெனவென்புறக்குளிர்ந்ததக்குருமணித்திருமேனி. (அசு)
சுட்டதில்லைநின்றூன்றலைச்சுடர்க்கனல்சுழிபடாழுவத்துள்
இட்டபோதினுமென்னினிச்செயத்தக்கதென்றனரிகல்வெய்யோர்
கட்டித்தீயையுங்கடுஞ்சிறையிடுமினக்கள்வனைக்கவர்ந்துண்ணை
எட்டுப்பாம்பையும்விடுமின்களென்றனனெரியெழுதறுகண்ணன். (அஎ)

---

* கோறிர்-கொல்லுதிர். † அத்துணை-அவ்வளவு.

‡ கூலம்-வால்.

அநந்தனேமுதலாகியநாகங்களருளென்கொலெனவன்ஞெண்
நினைந்தமாத்திரத்தெய்தினெநொய்தினினெருப்புகுபகுவாயால்
வனைந்ததாமன்னமேனியினென்றன்மேல்வாளெயிறுறவூன்றிச்
சினந்தமீக்கொளக்கடித்தனதுடித்திலன்றிருப்பெயர்மறவாதான். (அஅ)

பக்கநின்றவைபயத்தினிற்புயற்கறைப்பசும்புனல்பகுவாயில்
கக்கவெஞ்சிறைக்கலுழனுநடுக்குறகவ்வியகாலத்துள்
செக்கர்மேகத்துச்சிறுபிழைநுழைந்தனசெய்கையவலிசிந்தி
உக்கபற்குலமொழுகினவெயிற்றிரும் * புரைதொறுமமிழ்தூறி. (அக)

வேறு.

சூழப்பற்றினசுற்றுமெயிற்றின்
போழக்கிற்றிலவென்றுபுகன்ரூர்
வாழித்திக்கின்மயக்கின்மதந்தாழ்
வேழத்துக்கிடுடின்னெனவிட்டான். (கo)

† பசையிற்றங்கலில்சிந்தையர்பல்லோர்
திசையிற்சென்றனர்செப்பினனென்னும்
இசையிற்றந்தனனிந்திரனென்பான்
விசையிற்றிண்பணைவெஞ்சினவேழம். (கக)

கய்யிற்கால்களின்மார்புகழுத்தில்
தெய்வப்பாசமுறப்பிணிசெய்தார்
மய்யற்காய்கரிமுன்னுறவைத்தார்
பொய்யற்ரூனுமிதான்றுபுகன்ரூன். (கஉ)

எந்தாய்பண்டொரிடங்கர்விழுங்க
மூந்தாய்நின்றமுதற்பொருளேயென்
றுந்தாய்தந்தையினத்தவரேதை
வந்தாவனென்றன்மனத்தினனென்ரூன். (கஙு)

என்னைமுன்னமிருங்களிறுந்தன்
பொன்னைரோடைபொருந்தநிலத்தின்
அன்னைனத்தெதாழுதஞ்சியகன்ற
தொன்னைரத்திறமெய்தியுரைத்தார். (கச)

‡ வல்வீரைத்துயில்வானமதித்தென்
நல்வீரத்தையழித்ததுநண்ணுற்
ரூல்வீரொற்றையுரக்கரிதன்னைக்
கொல்வீரென்றனனெஞ்சுகொதிப்பான். (கஙி)

---

* புரைதொறும்-துவாரந்தோறும்.
† பசையில்தங்கவில்-இரக்கமற்ற.
‡ வல்வீரை-பெரியசமுத்திரம்.

தன்னைக்கொல்லுநர்சாருதலோடும்
பொன்னைக்கொல்லுமொளிப்புகழ்பொய்யா
மன்னைக்கொல்லியவந்ததுவாரா
மின்னைக்கொல்லும்வெயிற்றினெயிற்றரல். (கஉ)

வீரத்திண்டிறன்மார்பினில்வெண்கோ
டாரக்குத்தியழுத்தியநாகம்
வாரத்தண்குலவாழைமடற்சூழ்
ஈரத்தண்டெனவிற்றனவெல்லாம். (கஎ)

வெண்கோடிற்றனமெய்யிலர்செய்யும்
கண்கோடற்பொறியிற்கடிதேதகி
எண்கோடற்கரிதென்னவெகுண்டாள
திண்கோடைக்கதிரிற்றெறுகண்ணன். (கஅ)

தள்ளத்தக்கில்பெருஞ்சயிலத்தே தா
டெள்ளக்கட்டியெடுத்துவிசித்துக்
கள்ளத்திங்கிவனைக்கரைகாணு
வெள்ளத்துய்த்திடுவீரெனவிட்டான். (கக)

ஒட்டிக்கொல்லவுணர்ந்துவெகுண்டான்
விட்டிட்டானலனென்றுவிரைந்தார்
கட்டிக்கல்லொடுகால்விசையிற்போய்
இட்டிட்டார்கடலின்னடுவெந்தாய். (க00)

நடுவொக்குந்தனிநாயகனுமம்
வீடுகிற்கின்றிலனுகலின்வேலை
மடுவொத்தங்கதின்வங்கமுமன்றுய்க்
* குடுபத்தன்மையதாயதுகுன்றம். (க0க)

மோதுற்றூர்திரைவேலையின்மூழ்கான்
மீதுற்றூர்சிலமீதுகிடந்தான்
ஆதிப்பண்ணவனுயிரநாமம்
ஓதுற்றூன்மறையொல்லையுணர்ந்தான். (க0உ)

தலையிற்கொண்டதடக்கையினென்றன்
நிலையிற்றீர்வின்மனத்தினினைந்தான்
சிலையிற்றிண்புனலிற்சினையாலின்
இலையிற்பிள்ளையெனப்பொலிகின்றூன். (க0ங)

---

* உடுபத்தன்மையதாயது-ஓடத்தின்றன்மையால் மிதந்துநின்றது.

வே று.

அடியாரடியேனெனுமார்வமலால்
ஒடியாவலியாணுடையேனுளமே
கொடியாய்குறியாய்குணமேதுமிலாய்
நெடியாயடியேனிலநோக்குதியோ. (கஅ)

கள்ளந்திரிவாரவர்கைதவநீ
உள்ளந்தெரியாதவுனக்குளவோ
துள்ளும்பொறியின்னிலசோதனைதான்
வெள்ளந்தருமின்னமுதேவிதியோ. (கஆ)

வருநான்முகனம்முகன்வானவர்கோன்
திருநான்மறையின்னெறியேதிரிவார்
பெருநாடொறிகின்றிலர்பேதைதமையேன்
ஒருநாளுனையெங்ஙனமுள்ளுவமே. (கஇ)

செய்யாதனவோவிலதீவினைதான்
பொய்யாதனவந்துபுணர்ந்திடுமால்
மெய்யேயுயிர்தீர்வதொர்மேல்வினைநீ
அய்யாவொருநாளுமயர்த்தனையோ. (கஈ)

ஆயப்பெறுநன்னெறிதம்மறிவென்
றேயப்பெறுமீசர்களெண்ணிலரால்
நீயப்புறநிற்கநினைக்கிலர்நின்
மாயப்பொறிபுக்குமயங்குவரால். (கஉ)

தாமேதனிநாயகராயெவையும்
போமேபொருளென்றபுராதனர்தாம்
யாமேபரமென்றனரென்றவர்க்
* காமேபிறர்நின்னலதாருளரே. (கஊ)

ஆதிப்பரமாமெனிலன்றெனலாம்
ஓதப்பெருநூல்களுலப்பிலவால்
பேதிப்பனநீயவைபோற்கிலையால்
வேதப்பொருளேவிளையாடுதியோ. (கஎ)

அம்போருகனாரணனாதியர்தாம்
எம்போவியரெண்ணிடினெண்பலவாக்
கொம்போடடைடபூக்கணிகாயெனினும்
வம்போமரமொன்றெனும்வாசகமே. (கஏ)

ஆகும் — ஆகுமா ஆகாது.

நின்னிற்பிறிதாய்நிலையிற்றிரியா
தன்னிற்பிறிவாயினதானறமும்
உன்னிற்பிறிதாயினவோவுலகம்
பொன்னிற்பிறி * தாகியபொற்கலனே. (ககஉ)

தாய்தந்தையெனுந்தகைவந்தனைதான்
நீய்தந்தனைநீயுறுநெஞ்சினனென்
நோய்தந்தவனேநுவறீர்வுமெனை
வாய்தந்தனசொல்லிவணங்கினனால். (ககஙு)

அத்தன்மையறிந்தவருந்திறலோன்
உய்த்துய்ம்மினென்முன்னெனவுய்த்தனரால்
பித்துண்டதுபோர்வுறுமாபெறுதும்
கைத்துங்கநெஞ்சினெனக்கனலா. (ககச)

இட்டார்கவெல்விடமெண்ணுடையான்
தொட்டானுகரத்தொதாகைவன்கசையிற்
கட்டார்கமெத்திகைகண்கொடியோன்
விட்டானவன்மேலவர்வீசினரால். (ககஞ)

வெய்யார்முடிவில்லவர்வீசியபோ
துய்யாவெனுமேவலையினுள்ளுறைவோன்
கய்யாயிரமல்லகணக்கிலவென்
றெய்யாவுலகியாவையுமெண்ணினவால். (ககசு)

ஊனேயுயிர்வேறுபடாவுபயம்
தானேயுடையன்றனிமாயையினால்
யானேயுயிருண்பவெனக்கனலா
வானேழுநடுங்கிடவந்தனனால். (ககஎ)

வந்தானைவணங்கியென்மன்னுயிர்தான்
எந்தாய்கொளவெண்ணினனேயலிதுதான்
† உந்தாரியதன்றுலகியாவுமுடன்
தந்தார்கொளநின்றதுதானெனலும். (ககஅ)

வேறு.

எவரேயுலகந்தந்தாரென்பெயரேத்திவாழும்
மூவரேயல்லராகின்முனிவரேமுழுதுந்தோற்ற
தேவரேபிறரேயாரேசெப்புதிதெரியவென்றான்
கோவமூண்டெழுந்துங்கொல்லான்காட்டுமேற்காட்சிகொள்வான். ()

---

* ஆகிய—வினை.

† உந்தாரியதன்று-நும்வழிப்பட்டதன்று.

உலகுதந்தாணும்பல்வேறுயிர்கடந்தாணுமுள்ளுற்
றுலவிலாவுயிர்கடோறுமங்கங்கேயுறைகின்றாணும்
மலரினில்வெறியுமெள்ளிலெண்ணெயுமற்றுங்கேளாய்
அலகிலொல்புகழும்பற்றிமுற்றியவரிகாணத்தா. (கஉ0)

என்கணேனைக்கிக்காண்டற்கெங்கணுமுளன் * காணெந்தை
உன்கணனென்பிற்சோறலுறுகோவென்றுணராகில்லாய்
நின்கணேனைக்கிக்காண்டற்கெளியனேனினக்குப்பின்னேன்
பொன்கணரவியுண்டபுண்டரீகக்கணம்மான். (கஉக)

மூன்றவன்குணங்கள்செய்கைமூன்றவனுருவமூன்று
மூன்றுகண்சுடர்கள்சோதிமூன்றுதன்னுலகமூன்று
தோன்றலுமிடையுமீறுந்தொடங்கியபொருள்கட்கெல்லாம்
சான்றவனிதுவேவேதமுடிவதுசரதமென்றான். (கஉஉ)

என்றலுமவுணர்வேந்தனெயிற்றரும்பிலங்கநக்கான்
ஒன்றலில்பொருள்கட்கெல்லாமொருவன்புக்குறைவனென்றாய்
நன்றதுகண்டுபின்னர்நல்லவாபுரிதுதாணில்
நின்றுளதென்னிற்கள்வனிரப்புதிநிலைமையென்றான். (கஉங)

சாணினுமுளனோர்தன்மையணுவினச்சதகூறிட்ட
கோணினுமுளன்மாமேருக்குன்றினுமுளனிந்நின்ற
தூணினுமுளன்முன்சொன்னசொல்லினுமுளனித்தன்மை
காணுதிவிரைவினென்றானன்றெனக்கனகன்சொன்னான். (கஉச)

உம்பர்க்குமுனைக்குமொத்திவ்வுலகெங்கும்பரந்துளானைக்
கம்பத்தின்வழியேகாணைக்காட்டுதிகாட்டிடாயேல்
கும்பத்தின்கரியைக் † கொண்மாக்கொன்றனனின்னைக்கொன்றுன்
செம்பொத்தகுருதிதேக்கியுடலையுந்தின்பெனென்றான். (கஉஞ)

என்னையிர்ந்நின்னற்கோறற்கெளியதான்றன்றியான்முன்
சொன்னவன்றொட்டதொட்டவிடந்தொறுந்தோன்றுமையின்
என்னையிர்யானேமாய்ப்பல்பின்னும்வாழ்வுகப்பவென்னின்
அன்னவற்கடியேனல்லேனென்றனனறிவின்மிக்கான். (கஉட)

நரசிங்காவதாரம்.

நகைதிறந்திலங்கப்பொங்கிநன்றுநன்றென்னநக்கு
விசைபிறந்துருமுவீழ்ந்ததென்னவோர்தூணின்வென்றி
இசைதிறந்தமர்ந்தகையாலெற்றினனெனற்றலோடும்
திசைதிறந்தண்டங்கீறிச்சிரித்ததுசெங்கட்சியம். (கஉண)

---

* காண் – முன்னிலையசை.

† கொன்மா – கொடிய

நாடிநான் றருவெனென்றநல்லறிவாளனுளும்
தேடிநான்முகனுங்காணச்சேயவன்சிரித்தலோடும்
ஆடினைழுதான்பாடியரற்றினன்சிரத்திற்செங்கை
சூடினன்றெழுதாடினையுலகெலாந் * துகைத்தான்றுள்ளி. (கஉஅ)

ஆரடாசிரித்தாய்சொன்னவரிகொலோவஞ்சிப்புக்க
நீரடாபோதாவதென்றுநெடுந்தறிநேடினையோ
போரடாபொருதியாயிற்புறப்படுபுறப்படென்றூன்
பேரடாநின்றதாளோடுலகெலாம்பெயரப்போவான். (கஉக)

பிளந்ததுதூணுமாங்கேபிறந்ததுசீயம்பின்னை
வளர்ந்ததுதிசைகளெட்டும்பகிரண்டமுதலமற்றும்
அளந்ததப்புறத்துச்செய்கையாரறிந்தறையகிற்பார்
கிளர்ந்தது † ககனமுட்டைகிழிந்ததுகீழுமேலும். (கஉ0)

மன்றலந்துளபமாலைமானுடமடங்கல்வானில்
சென்றதுதெரிதறற்றூஞ்சேவடிபடியிற்றீண்டி
நின்றதோர்பொழுதினண்டநெடுமுகட்டிருந்தமுன்னேனன்
றன்றவனுந்திவந்தாளெனத்தோன்றிலுலல். (கஉக)

எத்துணைபோதுங்கையென்றியம்பினலெண்ணற்கேற்ற
வித்தகருளரேயந்தத்தானவர்விரிந்தசேனை
பத்துநூறமைந்தகோடிவெள்ளத்தாற்பகுதிசெய்த
அத்தனைகடலுமாளத்தனித்தனியள்ளிக்கொண்ட. (கஉஉ)

ஆயிரங்கோடிவெள்ளத்தயிலெயிற்றவுணர்க்கங்கங்
கேயினவொருவர்க்கோரோர்திருமுகமிரட்டிப்பொற்றூள்
தீயெனக்கனலுஞ்செங்கண்சிரந்தொறுமூன்றுந்தெய்வ
வாயினிற்கடல்களேழுமலகுமற்றுமுற்றும். (கஉஙு)

முடங்குவாருளையவண்டமுழுவதுமுடிவினுண்ணும்
கடங்கொள்வெங்காலச்செந்தியதனைவந்தழிக்குங்கால
மடங்கலினுயிர்ப்புமற்றக்காற்றினைமாற்றுமாலல்
அடங்கலும்பருவாயாக்கையப்புறத்தகத்ததம்மா. (கஉச)

‡ குயிற்றியவண்டங்குஞ்சையிட்டிலாமுட்டைமுட்டப்
பயிற்றியபருவமொத்தகாலத்துளமுதுபல்கும்
எயிற்றுவன்பகுவாயுள்புக்கிருக்குநரிருக்கையெய்தி
வயிற்றின்வந்தந்நாளிந்நாள்வாழுமன்னுயிர்கண்மன்னே. (கஉஞ)

---

*1 துகைத்தான்-மிதித்தான். † ககனமுட்டை-அண்டமுகடு.

‡ குயிற்றிய - தான்செய்த. அண்டம்-அண்டமாகிய. குஞ்சையிட்டிலாமுட்டை-குஞ்சுபொரிக்காத முட்டை.

நன்மையிற்ரொடர்ந்தார்க்குண்டோகேடுநான் * முகத்தோணுதி
† தொன்மையிற்ரொடர்ந்தவாய்மையறத்தொடுத்தொடர்ந்திலோரை
அன்வயித்தோருந்தியவவுணரல்லாரையந்நாள்
தன்வயிற்றகத்துவைத்துத்தந்ததச்சியந்தாயின். (கஉசு)

பேருடையவுணர்தம்மைப்பிறையெயிற்றடக்கும்பேராப்
பாரிடைத்தேய்க்குமீளப்பகிரண்டத்தடிக்கும்பற்றி
மேருவிற்புடைக்குமாளவிரல்களிற்பிசையும்வேலை
கீரிடைக்குமிழியூட்டுதெருப்பிடைச்சுரிக்கநீட்டும். (கஉஎ)

வகிர்ப்படத்துரக்கும்பற்றிவாய்களாப்பிளக்கும்வன்ரூல்
துகிற்படத்துரிக்குஞ்செந்தீக்கண்களாச்சூலுஞ்சுற்றிப்
பகிர்ப்படக்குடரைக்கொய்யும்பசையறப்பிசையும்பல்கா
லுகிர்ப்புரைபுக்கோர்தம்மையுகிர்களாலுறக்குமூன்றி. (கஉஅ)

யானையுந்தேருமாவும்யாவையுமுயிரிராமை
ஊனெனுந்தின்னுமம்பின்னையொலிதிரைப்பரவையேழும்
மீனெனுங்குடிக்குமேகத்துருமொடும்விழுங்கும்விண்ணில்
தானெனுங்காதென்றஞ்சித்தருமமுஞ்சலித்ததம்மா. (கஉக)

ஆழிமால்வரையோடெற்றுஞ்சிலவரையண்டகோளச்
சூழிருஞ்சுவரிற்றேய்க்குஞ்சிலவரைத்தாளக்கில்குன்றம்
எழிலைடெற்றிக்கொல்லுஞ்சிலவரையெட்டுத்திக்கும்
தாழிருட்பிழம்பிற்றேய்க்குஞ்சிலவரைத்தடக்கைதாக்கி. (கசஅ)

மலகளிற்புரண்டுவீழவள்ளுகிர்ரந்தியால்வாங்கித்
தலகளைக்கிள்ளுமள்ளித்தழலெழப்பிசையுந்தக்க
கொலகளிற்றெனும் ‡ வாங்கியுயிர்களைக்குடிக்கும்வான
நிலகளிற்பரக்கதேவலீர்களைநிரம்பத்தூர்க்கும். (கசக)

மூப்புறத்துலகத்துள்ளுமொழிவறமுற்றும்பற்றித்
தப்புதலின்றிக்கொன்றுதையலார்கருவுந்தள்ளி
இப்புறத்தண்டத்தியாருமவுணரில்லாமையியற்றி
அப்புறத்தண்டந்தேறுந்தடவினசிலகையம்மா. (கசஉ)

கனகனு § மவனில்வந்தவானவர்களைகணை
அநகனுமொழியப்பல்வேறவுணரானவரையெல்லாம்
நினைவதன்முன்னங்கொன்றுநின்றதந்தெருங்கட்சீயம்
வினைகழலவனுமற்றமடங்கலின்வரவுகோக்கி. (கசங)

* நானமுகதம்தாளுதி-பிரமன்முதலாக.
† தொன்மையிற்ரொடர்ந்துவந்த-புராதனமாக ஒட்டிவந்த.
‡ வாங்கி-எடுத்து.
§ அவனில்வந்த-அவனிடத்துமகனுகவந்த.

வயிரவாளுறையின்வாங்கிவானகமறைக்கும்வட்டச்
செயிரறுகிடுகும்பற்றிவானவருள்ளந்தீய
அயிர்படர்வேலேயழுமலகளுமஞ்சவார்த்தங்
குயிருடைமேருவென்னவாய்மடித்துருத்துநின்றான். (கசச)

நின்றவன்றன்னைநோக்கிநிலையிதுகண்டுநீயும்
ஒன்றுமுன்னுள்ளத்தியாதுமுணர்ந்திலேபோலுமன்றே
வன்றிழிலாழிவேந்தைவணங்குதிவணங்கவேயுன்
புன்றிழில்பொறுக்குமென்றுனுலகெலாம் * புகழுநின்றான். (கசஞ)

கேளிதுநீயுங்காணக்கிளர்ந்தகோளரியின்கேழில்
தோளொடுதாளுநீக்கிநின்னையுந்துணித்துப்பின்னென்
வாளினைத்தொழுவதல்லால்வணங்குதன்மகளீருடல்
நாளினுமுளதோவென்றுவண்டங்கணடுங்கநக்கான். (கசசு)

நகைசெயாவாயுங்கையும்வாளொடுநடந்ததாளும்
புகைசெயாநெடுந்தீப்பொங்கவுருத்ததிர்பொருந்தப்புக்கான்
தொகைசெய்வார்க்கரியதோளாற்றுர்ள்களாற்சுற்றிச்சூழ்ந்தான்
மிகைசெய்வார்வினைகட்கெல்லாமேற்செயும்வினையம்வல்லான். (கசள)

இரணிய சிங்கப்போர்.

இருவரும்பொருந்தப்பற்றியெவ்வுலகுக்குமேலாய்
ஒருவருங்காணுவண்ணமுயர்ந்ததற்குவமைவேண்டின்
வெருவருதோற்றத்தஞ்சாவெஞ்சினவவுணன்மேரு
அருவரையொத்தானண்ணலல்லவையெல்லாமொத்தான். (கசஅ)

ஆர்ப்பொலிமுழக்கின்வெவ்வாய்வள்ளுகிர்ப்பாரமான்ற
எற்றருங்காத்திற்பல்வேறெறிதிரைப்பரப்பினுற்ற
பாற்கடல்பரந்துபொங்கிப்பங்கயத்தொருவளுட்டின்
மேற்சென்றதொத்தான்மாயன்கனகனுமேருவொத்தான். (கசக)

வாளொடுதோளுங்கையுமகுடமுமலரோன்வைத்த
நீளிருங்ககனமுட்டைநெடுஞ்சுவர்தெய்ப்ப † நேமி
கோளொடுந்திரிவதென்னக்குலமணிக்கொடும்பூண்மின்னத்
தாளிணையிரண்டும்பற்றிச்சுழற்றினன்றடக்கையொன்றால். (கஙo)

சுழற்றியகாலத்திற்றதுங்குகுண்டலங்கணீங்கிக்
கிழக்கொடுமேற்கிலேடுவிழுந்தனகிடந்தவின்றும்
அழற்றருகதிரோன்றேரன்றுழுதயத்தோடத்தமான
நிழற்றருங்காலுமாலுநெடுமணிச்சுடரினீத்தம். (கஙக)

---

* புகழுநின்றான்-பிரகலாதாழ்வான்.

† நேமி-சக்கரவாளகிரி.

போன்றனவினையதன்மைபொருவியதினையதென்று
தான்றனியொருவன்றன்னையுரைசெயுந்தரத்திலையே
வான்றருவள்ளல்வெள்ளாவள்ளநிர்வயிரமார்பின்
ஊன்றலுமுதிரவெள்ளம்பரந்துளதுலகமெங்கும். (கநிஉ)

இரணியனைக் கொல்லுதல்.

ஆயவன்றன்னைமாயனந்தியினவன்பொற்கோயில்
வாயிலின்மணிக் * கவான்மேல்வயிரவாளுகிரின்வாயில்
மீயெழுகுருதிபொங்கவெயில்விரிவயிரமார்பு
தீயெழப்பிளந்துநீக்கித்தேவர்களிடுக்கண்டீர்த்தான். (கநிஙு)

முக்கணனெண்கணனுமுளரியாயிரக்கணனும்
திக்கணந்தேவரோடுமுனிவரும்பிறருந்தேடிப்
புக்கநாடறிகுறுமற்றிரிகின்றூர்புகுந்துமொய்த்தார்
எக்கணற்காண்டுமெனத்தையுருவமென்றிரங்கிநின்றூர். (கநிசு)

நோக்கிலர்நோக்கிலர்முன்னேக்குறுமுகமுங்கையும்
ஆக்கையுந்தாளுமாகியெங்கணுந்தானேயாகி
வாக்கினன்மனத்தினன்மற்றறிவினிலளக்கவாரா
மேக்குயர்சீயந்தன்னைக்கண்டனர்வெருவுகின்றூர். (கநிஞ)

பல்லொடுபல்லுக்கெல்லையாயிரக்காதப்பத்தி
சொல்லியவதனங்கோடிகோடிமேல்விளங்கித்தோன்ற
எல்லையிலுருவிற்றூகியிருந்தனதெதிரேநோக்கி
அல்லியங்கமலத்தண்ணலவன்புகழ்விரிப்பதானன். (கநிசு)

மேலது.

பிரமதேவன் உக்கிரநரசிங்கத்தை துதித்தல்.

தன்னைப்படைத்ததுந்தானேயெனுந்தன்மை
பின்னைப்படைத்ததுவேகாட்டும்பெரும்பெருமை
உன்னைப்படைத்தாய்நீயென்றூலுயிர்படைப்பான்
என்னைப்படைத்தாய்நீயெனுமிதுவுமெற்றூமோ. (கநிஎ)

பல்லாயிரகோடியண்டம்பனிக்கடலுள்
நில்லாதமொக்குளனத்தோன்றுமானின்னுழையே
எல்லாவுருவமுமாய்நின்றக்காலிவ்வுருவம்
வல்லேபடைத்தல்வரம்பின்மைவாராதே. (கநிஅ)

பேரையொருபொருட்கேபல்வகையாற்போர்த்தெண்ணும்
தாரைநிலையைதமியைபிறரில்லை

---

* கவான்மேல் – தொடைமீது.

யாரைப்படைக்கின்றதியாரையளிக்கின்ற
தியாரைத்துடைக்கின்றதையாவறியேமால். (கஙிக)

நின்னுளேயென்னைநிருமித்தாய் * நீயல்லா
தென்னுளேயெப்பொருளும்யாவரையும்யானீன்றேன்
பின்னிலேன்முன்னிலேனைந்தைபெருமானே!
பொன்னுளேதோன்றியதோர்பொற்கலனேபோல்கின்றேன். (கசுO)

என்றுங்கியம்பியிமையாதவெண்கணனும்
வன்றுண்மழுவேவானும்யாரும்வணங்கினரால்
நின்றுநிருமருங்குநமிப்பெருமானும்
ஒன்றுதசீற்றத்தையுள்ளேயொடுக்கினன். (கசுக)

† எஞ்சுமுலகனைத்துமிப்பொழுதேயென்றென்று
நெஞ்சுநடுங்குநெடுந்தேவரைநோக்கி
அஞ்சன்மினென்னைவருள்சுரந்தநோக்கினால்
கஞ்சமலர்பழிக்குங்கையபயங்காட்டினன். (கசுஉ)

பூவிற்றிருவையழகின்புனைகலத்தை
யாவர்க்குஞ்செல்வத்தைவீடென்னுமின்பத்தை
ஆவித்துணையையமுதிற்பிறந்தாளைத்
தேவர்க்குந்தம் ‡ மோயையேவினர்பாற்செல்ல. (கசுங)

செந்தாமரைப்பொகுட்டிற்செம்மாந்துவீற்றிருக்கும்
நந்தாவிளக்கைநறுந்தாழிளங்கொழுந்தை
முந்தாவுலகுமுயிருமுறைமுறையே
தந்தானேநோக்கினன்றன்னெப்பொன்றில்லாதான். (கசுச)

தீதிலாவாகவுலகின்றதெய்வத்தைக்
காதலாளேக்கினன்கண்டமுனிக்கணங்கள்
ஓதினுர்சீர்த்தியுயர்ந்தபரஞ்சுடரும்
நோதலாங்கில்லாதவன்பனேயேநோக்கினன். (கசுஞ)

பிரகலாதாழ்வானை நரசிங்கப்பெருமாள் புகழ்தல்.

உந்தையையுன்முன்கொன்றுடலேப்பிளந்தனையச்
சிந்தைதளராதறம்பிழையாச்செய்கையாய்
அந்தமிலாவன்பென்மேல்வைத்தாயளியத்தாய்
எந்தையினியிதற்குக்கைம்மாறியாதென்றனன். (கசுசு)

¶ அயிராவிமைப்பினையோராயிரங்கூறிட்ட
செயிரிலொருபொழுதினுந்தையையாஞ்சீறி

---

* நீயல்லாது – உன்னையன்றி. † எஞ்சும் – அழியும்.
‡ மோய் – அன்னை. ¶ அயிரா – ஓய்ந்துநில்லாத.

உயிர்நேடுவேபோலுடலளையக்கண்டும்
செயிர்சோராவுள்ளத்தாய்க்கென்னினியாஞ்செய்கேம். (கசுஎ)
கொல்லேறினியுன்குலத்தோரைக்குற்றங்கள்
எல்லையிலாதனசெய்தாரேயென்றாலும்
நல்லேலுனக்கெம்மைநாணுமலன்செய்வ
தொல்லையுளதேதலியம்புதியாலென்றுரைத்தான். (கசுஅ)

முன்புபெறப்பெற்றபேறுமுடிவில்லை
பின்புபெறும்பேறுமுண்டோபெறுகுவனேல்
என்புபெருதவிழிபிறவியெய்திடினும்
அன்புபெறுகையரும்பேறெனக்கென்றான். (கசுக)

அன்றனேநோக்கியருள்சுரந்தநெஞ்சினனாய்
என்றனைவல்லேனெனமகிழ்ந்தபேரீசன்
முன்றனபூதங்கள்யாவையுமுற்றிடினும்
எந்நாளுமுலவாய்நீ * யென்போலுளையென்றான். (கஎ0)

மின்னேத்தெருழுவளைத்ததன்னமிளிரொளியாய்
முன்னேத்தெருழும்புனக்கேயாமன்றேமூவுலகும்
என்னேத்தெருழுதேத்தியெய்தும்பயனெய்தி
உன்னேத்தெருழுதேத்தியுய்கவுலகெல்லாம். (கஎக)

எனவர்க்குவேண்டினெளிதன்றேவெற்கன்பர்
ஆனவர்க்கமெல்லாநினக்கன்பராயினர்
தானவர்க்குவேந்தனீயென்னுந்தாத்தாயோ
வானவர்க்குநீயேயிறைதான்மறைவல்லோய். (கஎஉ)

நல்லறமுமெய்ம்மையுநான்மறையுநல்லருளும்
எல்லையின்ஞானமுமீறிலாவெப்பொருளும்
தொல்லைசாலெண்குணனுங்சொற்றிருழில்செய்க
வல்லவுருவொளியாய்நாணவளர்கநீ. (கஎங)

பிரகலாதாழ்வானுக்கு முடிசூட்டுதல்.

என்றுவரமருளியெவ்வுலகுங்கைகூப்ப
முன்றின்முரசமுழங்கமுடிசூட்டி
நின்றவமரரானவீருநேர்ந்திவனுக்
கொன்றுபெருமையுரிமைபுரிகென்றான். (கஎச)

† தேமனுரிமைபுரியத்திசைமுகத்தோன்
ஓமமியற்றவுடையான்முடிசூட்டக்

---

* என்போலுளை என்றது – தனது நித்தியத்துவத்தை விளக்கி நின்றது.

† தேமன் – இந்திரன்.

கோமன்னவனுகிமூவுலகுங்கைக்கொண்டான்
காமமறையோதாதோதிருனியுயர்ந்தான். (கஎடு)

ஈதாகுமுன்னிகழ்ந்ததெம்பெருமானென்மாற்றம்
யாதானுமாகனினையாதிகழ்தியேல்
தீதாய்விளதனனிதிண்ணமெனச்செப்பினன்
மேதாவிகட்கெல்லாமேலாயமேன்மையான். (கஎசு)

நூ-வது, இராணியன்வதைப்படலம் – முற்றிற்று.

ஆஉ திருவிருத்தம்-நூ.0அ.

சுஎ-வது, விபீடணனடைக்கலப்படலம்.

இராவணன் விபீடணன்மீது கோபங்கொள்ளுதல்.

கேட்டனனிருந்துமக்கேள்விதேர்கலாக்
கோட்டியசிந்தையனுறுதிகொண்டிலன்
மூட்டியதீயெனமுடுகிப்பொங்கினன்
ஊட்டாரக்கூட்டியவனியவெவான்கணன். (க)

இராணியனென்பவனெம்மேனிரும்
மூராணியனவன்றனைமுருக்கிமுற்றினன்
அராணியனென்றவற்கன்புபூண்டனை
மாணைமென்றெருபொருண்மாற்றும்வன்மையோய். (உ)

ஆயவன்வளர்த்ததன்ரூதையாகத்தை
மாயவன்கல்லியமகிழ்ந்தமைந்தனும்
ஏயுநம்பகைஞனுக்கினியநண்புசெய்
நீயுமேநிகர்பிறர்நிகர்க்கநேர்வரோ. (ஙூ)

* பாழிசாலிராணியன்புதல்வன்பண்பெனச்
சூழ்வினைமுற்றியானவர்க்குத்தோற்றபின்
எழைநீயென்பெருஞ்செல்வமெய்திப்பின்
வாழவோகருத்ததுவரவற்ரூகுமோ. (சு)

முன்புறவனையர்பானண்புமுற்றினை
† வன்பகைமனிசரின்னைவத்தவன்பினை

---

* பாழிசால் – வன்மைமிக்க.

† வன்பகை – கொடியபகையினையுடைய.

என்புறவுருகுதியழுதிடேத்துதி
உன்புகலவர்பிறிதுரைக்கவேண்டுமோ. (நி)

நண்ணினமனிசரைநண்புபூண்டனை
எண்ணினைசெய்வினையென்னைவெல்லுமா
றுன்னினையரசின்மேலாசையுன்றினை
திண்ணிதுன்செயல்பிறர்செறுநர்வேண்டுமோ. (சு)

வேறு.

அன்றுவானரம்வந்துநஞ்சோலையையழிப்பக்
கொன்றுதின்றிடுமின்னெனத்தூதனைக்கோறல்
வென்றியன்றெனவிலக்கினைமேல்விளைவெண்ணித்
துன்றுதாரவற்றுணையெனக்கோடலேதுணிந்தாய். (எ)

வேறு.

அஞ்சினையாதலினமர்க்குமாளலை
தஞ்செனமணிசர்பால்வைத்தசார்பினை
வஞ்சனைமனத்தினை * பிறப்புமாற்றினை
நஞ்சினையுடன்கொடுவாழ்தனன்றரோ. (அ)

பழியினையுணர்ந்தியான்படுக்கிலேனுனை
ஒழிசிலபுகலுதலொல்லைநீக்குநி
விழியெதிர்நிற்றியேல்வினிதியென்றனன்
அழிவினை † யெய்துவானறிவுநீங்கினான். (கூ)

என்றலுமிளவலுமெழுந்துவானிடைச்
சென்றனன்றுணைவருந்தாலுஞ்சிந்தியா
நின்றனன்பின்னருநீதிசான்றன
ஒன்றலபலபலவுறுதியோதினன். (கo)

வாழியாய்கேட்டியால்வாழ்வுகைம்மிக
ஊழிகாண்குறுனைதுயிலையோர்கிலாய்
கீழ்மையோர்சொற்கொடுகெடுதலோர்தியோ
வாழ்மைதானறம்பிழைத்தவர்க்குமாகுமோ. (கக)

புத்திரர்குருக்கணின்பொருவில்கேண்மையர்
மித்திரரடைந்துளோர்மெலியர்வன்மையோர்
இத்துணைபேரையுமிராமன்வெஞ்சரம்
சித்திரவதஞ்செயக்கண்டுதிர்தியோ. (கஉ)

---

* பிறப்புமாற்றினை-அரக்கர்குலவியற்கையையொழித்தனை.

† எய்துவான்-எய்துதற்கு.

எத்துணைவகையினுமுறுதியெய்தின
ஒத்தனவுணர்த்தினேனுணராகிற்றிலை
அத்தவென்பிழைபொறுத்தருடியாலெனை
உத்தமனங்ககொழியப்போயினன். (கஙூ)

அனலனுமனிலனுமரன்சம்பாதியும்
வினையவர்நால்வரும்விரைவின்வந்தனர்
கனைகழற்காலினர்கருமச்சூட்சியர்
இனைவரும்வீடணேனுடுமேயினர். (கச)

அரக்கனுமாங்கணேரமைச்சர்நால்வரும்
குரக்கினத்தவரொடுமனிசர்கொள்ளாநீர்க்
கரைக்கண்வந்திறுத்தனரென்றகாலையில்
பொருக்கெனவெழுதுமென்றெண்ணிப்போயினர். (கஞ)

அளக்கரைக்கடந்து * மேலறிந்தம்பியும்
விளக்கொளிபரத்தலிற்பாலின்வெண்கடல்
வளத்தடந்தாமரைமலர்ந்ததாமெனக்
களப்பெருந்தானையைக்கண்ணிணேக்கினன். (கசு)

ஊனுடையுடம்பினவுயிர்கள்யாவையும்
ஏனையவொருதலைநிறுத்தியெண்ணினல்
வானரம்பெரிதெனமறுவில்சிந்தையான்
தூநிறச்சுடுபடைத் † தூணைவர்ச்சொல்லினன். (கள)

அறந்தலைநின்றவர்க்கன்புபூண்டனேன்
மறந்தானன்புகழலால்வாழ்வுவேண்டிலேன்
பிறந்தவென்னுறுதிநீபிடிக்கலாயெனைத்
துறந்தனனினிச்செயல்சொல்லுவீரென்றான். (கஅ)

மாட்சியினமைந்ததுவேறுமற்றிலை
தாட்சியிற்பொருடருந்தருமமூர்த்தியைக்
‡ காட்சியேயினிக்கடனென்றுகல்விசால்
சூட்சியின்கிழவருந்துணிந்துசொல்லினர். (கக)

நல்லதுசொல்லினீர்நாமும்வேறினி
அல்லதுசெய்துமேலரக்கராதுமால்
எல்லையில்பெருங்குணத்திராமன்றனிணே
புல்லுதும்புல்லியிப்பிறவிபோக்குதும். (உ0)

முன்புறக்கண்டிலேன்கேள்விமுன்பிலேன்
அன்புறக்காரணமறியகிற்றிலேன்

---

* மேலறிந்தம்பியும் – வருங்காரியமுணர்ந்த விபீடணனும்.
† தூணைவர் – மந்திரியர்.
‡ காட்சியே – காணுதலே.

என்புறக்குளிருநெஞ்சுருகுமேனவன்
புன்புலப்பிறவியின்பகைஞன்போலுமால். (உக)

ஆதியம்பரமனுக்கன்புநல்லறம்
நீதியின்வழாமையுமுயிர்க்குநேயமும்
வேதியரருளுநான்விரும்பிப்பெற்றனென்
போதுறுகிழவனைத்தவமுன்பூண்டனாள். (உஉ)

ஆயதுபயப்பதோரமைதியாயது
தூயதுநினைந்ததுதொல்லையாவர்க்கும்
நாயகன்மலர்க்கழனணுகிநம்மனத்
தேயதுமுடித்துமென்றினிதுமேயினன். (உங)

இருளுறவெய்துவதியல்பன்றுமெனப்
பொருளுறவுணர்ந்தவப்புலன்கொள்புந்தியார்
மருளுறுசூழலின்மறைந்துவைகினர்
உருளுறுதேரவனுதயமெய்தினன். (உச)

அப்புறத்திராமனவ்வலங்குவேலையைக்
குப்புறக்கருதுவான்குவளைநோக்கிதன்
துப்புறச்சிவந்தவாய்நினைந்துசோர்குவான்
இப்புறத்திருங்கரைமருங்கினெய்தினன். (உஙு)

கானலுங்கழிகளுமணலுங்கண்டலும்
பானலுங்குவளைபும்பரந்தபுன்னையும்
மேனிறையன்னமும் * பெடையும்வேட்கைகூர்
பூநிறச்சோலையும்புரிந்துநோக்கினன். (உசு)

† தரளமும்பவளமுந்தரங்கமீட்டிய
திரண்மணிக்குப்பையுங்கனகதீரமும்
மருளுமென்பொதும்பருமணலின்குன்றமும்
புரளைநெந்திரைகளும்புரிந்துநோக்கினன். (உஎ)

மின்னகுமணிவிரற்றேறயவீழ்கணீர்
துன்னரும்பெருஞ்சுழியழிப்பச்சோர்வினை
டின்னகைநுளைச்சியரிழைக்குமாழிசால்
புன்னையம்பொதும்பரும்புக்குநோக்கினன். (உஅ)

கூதிர்நுண்குறும்பனித்திவலைக்கோவைகான்
மோதிவெண்டிரைவரமுடவெண்டாழைமேல்

- பெடையும் என்பது பிறவும் எனப் பாடமோதப்படுகின்றது.
† தரளம் - முத்து.

பாதியஞ்சிறையிடைப்பெடையைப்பாடணைத்
தோதிமந்துயில்வகண்டெயிர்ப்புவீங்கிணன். (உக)

அருந்துதற்கினியமீன்கொணரவன்பிணல்
பெருந்தடங்கொம்பிடைப்பிரிந்தசேவலை
வருந்திசைநோக்கியோர்மழலைவெண்குரு
கிருந்ததுகண்டுநின்றிரங்கலெய்திணன். (உ0)

ஒருதனிப்பேடைமேலுள்ளமோடலால்
பெருவலிவயக் * குருகிரண்டும்போர்கில
திருகுவெஞ்சினத்தனதருகட்டீயன
பொருவனகண்டுதன்புருவங்கோட்டிணன். (உக)

உண்ணிறையூடலிற்றோற்றவோ திமம்
கண்ணுறுகலவியால்வெல்லக்கண்டவன்
தண்ணிறப்பவளவாயிதழுத்தற்பொதி
வெண்ணிறமுத்திணலதுக்கிவிம்மிணன். (உஉ)

இத்திறமெய்தியகாலையெய்துறும்
வித்தகர்சொற்களான்மெலிவுநீங்கிணன்
ஒத்தனனிராமனுமுணர்வுதோன்றிய
பித்தரிரெருவகைபெயர்ந்துபோயிணன். (உங)

உறைவிடமெய்திணரெருங்குகேள்வியின்
துறையறிதுணவரோடிருந்தசூழலின்
முறைபதானையின்மருங்கு † முற்றிணன்
அறைகழல்வீடணனயிர்ப்பில்சிந்தையான். (உச)

விபீடணன் இராம நின்னடைக்கலமென்று கூறுதல்.

மற்றிருருபொருளுளதென்னின்மாறிலாக்
கொற்றவசரணெனக்கூயதோருரை
உற்றதுசெவித்தலத்தையணல்லென
நற்றுணவரைமுகமயந்துநோக்குரு. (உஞ)

எந்தையேயிராகவசரணமென்றசொல்
தந்தவ ‡ ரெனவரோசாற்றுமின்னென
மந்தணமுற்றுழீஇவயவெஞ்சேனயின்
முந்தினர்க்குற்றதெமொழிகுவாமரோ. (உசு)

முற்றியகுருசிலமுழங்குதானையின்
உற்றனர்நிருதர்வந்தென்னவொன்றிணர்

---

* குருகு -- ஒருசாதிப்பறவை.
† முற்றிணன் — அடைந்தான்.
‡ எனவரோ — யாவரோ.

எற்றுதிர்பற்றுதிரெறிதிரென்றிடை
சுற்றினரூருமனத்தெதழிக்குஞ்சொல்விஞர். (கூஎ)

தந்ததுதருமமேமெகாணர்ந்துதானிவன்
வெந்தொழிற்றீவினைபயந்தமன்னையான்
வந்தனனிலங்கையர்மன்னனுகுகம்
சிந்தினைமுடிந்தனவென்னுஞ்செய்கையார். (கூஅ)

இருபதுகரந்தலையீரைந்தென்னுமத்
திருவிலிக்கன்னைவசிதைத்தேவாவென்பார்
பொருதொழிலெம்மொடும்பொருதிபோவென்பார்
ஒருவரிலொருவர்சென்றுறுக்கியூன்றுவார். (கூக)

பற்றினஞ்சிறையிடைவைத்துப்பாருடைக்
கொற்றவர்க்குணர்த்துதுமென்றுகூறுவார்
எற்றுவதன்றியேயிவனைக்கண் * டிறை
நிற்றலென்பிறிதெனருக்கிநேர்குவார். (கூ0)

இமைப்பதன்முன்விசும்பெழுந்துபோயபின்
அமைப்பதன்பிறிதிவரைக்கரல்லரோ
† சமைப்பதுகொலையலாற்றக்கதியாவதோ
குமைப்பதுகலனெனமுடுக்கிக்கூறினர். (கூக)

இயைந்தனவியைந்தனவினையகூறலும்
மயிந்தனுந்துமிந்தனுமென்னுமாண்பினர்
அயிந்திரனிறைந்தவனுணியேயவலால்
நயந்தெரிகாவலரிருவர்நண்ணினர். (கூஉ)

விலக்கினர்படைநுனைவேதநீதிநூல்
இலக்கணநோக்கியவியல்பெரய்தினர்
சலக்குறியிலரெனவருகுசார்ந்தனர்
புலக்குறியறநெறிபொருந்தநோக்கினர். (கூங)

யாரிவணெய்தியகருமம்யாவது
போரதுபுரிதிரோபுறத்தெரண்ணமோ
சார்புறநின்றநீர்சமைந்தவாறலாம்
சோர்விலிர்மெய்ம்முறைசொல்லுமீரென்றனன். (கூச)

பகலவன்வழிமுதற்பாரிலையகன்
புகலவன்கழலடைந்துய்யப்போந்தனன்
தகவுறுசிந்தையன்றருமநீதியன்
மகன்மகன்மைந்தனென்முகற்குவாய்மையான். (கூஞ)

---

* இறை – சிறிது. † சமைப்பது – செய்வது.

அறநிலவுழாமையுமாதிமூர்த்திபால்
நிறைவருநேயமுநின்றவாய்மையும்
மறையவர்க்கன்புமென்றினையமாமலர்
இறையவன்றரநெடுந்தவத்தினேயினன். (சசு)

சுதியைத்துகிலிடைப்பொதிந்ததுன்மதி
இதியேசிறையிடையிறவன்றேறவியை
விதியேலுய்குதிவிடாதுவேட்டியேல்
பதியென்றுறுதிகள்பலவும்பன்னினன். (சஎ)

மறந்தருசிந்தையன்மதியினீங்கினன்
பிறந்தனேபின்பதிற்பிழைத்திபோகுதி
இறந்தனேநிற்றியேலென்னவின்னவன்
துறந்தனனெனவிரித்தனலன்சொல்லினன். (சஅ)

மயிந்தனுமவ்வுரைமனத்துவைத்துநீ
இயைந்ததுநாயகற்கியம்புவேனெனப்
பெயர்ந்தனன்றம்பியும்பெயர்வில்சேனையும்
அயர்ந்திலிர்காமினென்றமைவதாக்கியே. (சக)

தருமமுஞானமுந்தவமும்வேலியாய்
மருவரும்பெருமையும்பொறையும்வாயிலாய்க்
கருணையங்கோயிலுளிருந்தகண்ணனை
அருணெறியெய்திச்சென்றடிவணங்கினன். (சுo)

உண்டுரையுணர்த்துவதூழியாயெனப்
புண்டரீகத்தடம்புரையும் * பூட்சியான்
மண்டிலச்சடைமுடிதுளக்கிவாய்மையாய்
கண்டதுங்கேட்டதுங்கழறுவாயென்றனன். (சுக)

வினைவினையறிந்திலம்வீடணப்பெயர்
நளிர்மலர்க்கையினலுவதோடுடன்
களவியல்வஞ்சனையிலங்கைகாவலற்
கிளவனஞ்சேனையினவணைய்தினன். (சுஉ)

கொல்லுமின்பற்றுமினென்னுங்கொள்கையால்
பல்பெருந்தானைசென்றடர்க்கப்பார்த்தியாம்
நில்லுமினென்றுநீயாரைநின்னிலை
சொல்லுதியென்னவேவார்துணைவன்சொல்லினன். (சுங)

மூண்புகுதீவினைமுடித்தமுன்னவன்
† காண்புகுசூழலேசூழக்காண்பதோர்

---

* பூட்சியான் – உடலினன்.

† காண்புகுசூழலேசூழ – மனஞ்சென்றவழியிற்செல்ல.

அரண்பிறிதில்லெனவருளின்வேலையைச்
சரண்புகுந்தனனெனமுன்னஞ்சாற்றினன். (நச)

ஆயவன்றருமமுமாதிமூர்த்திபால்
மேயதோர்சிந்தையுமெய்யும் * வேதியர்
நாயகன்றாரெடுந்தவத்தூநண்ணினன்
தூயவனென்பதோர்பொருளுஞ்சொல்லினன். (நந)

கற்புடைத்தேவியைவிடாதுகாத்தியேல்
எற்புடைக்குன்றமாமிலங்கையேழினின்
பொற்புடைமுடித்தலைபுரளுமென்றிரு
நற்பொருளுணர்த்தினனென்றுநாட்டினன். (நசு)

ஏந்தெழிலிராவணனியேயசொன்னநீ
சாந்தெழிற்குரியையென்சார்புநிற்றியேல்
ஆந்தினைப்பொழுதினிலகறியாமெனப்
போந்தனனென்றனண்புகுந்ததீதென்றனன். (நள)

அப்பொழுதிராமனுமருகினண்பரை
இப்பொருள்கேட்டனீரியம்புவீரிவன்
கைப்புகற்பாலதோகழியற்பாலதோ
ஒப்புறநோக்கிநும்முணர்வினலென்றனன். (நஅ)

விபீடணனைக்குறித்துச் சுக்கிரீவன் தன் கருத்துரைத்தல்.

தடமலர்க்கண்ணனைத்தடக்கைகூப்பினின்
றிடனிதுகாலமீதென்னவெண்ணுவான்
கடனறிகாவலன்கழறினனேரா
சுடர்நெடுமணிமுடிச்சுக்கிரீவனே. (நக)

நனிமுதல்வேதநற்கணலுநாமநூல்
மனுமுதல்யாவையும்வரம்புகண்டநீ
இனையனகேட்கவோவெம்மனோர்க்கவை
வினவியகாரணம்விதிக்குமேலுளாய். (சூ0)

ஆயினும்விளம்புவெனருளினழியாய்
எயினதாகலினறிவிற்கேற்றன
தூயவென்றெண்ணினுந்துணிவன்றன்னினும்
மேயதுகேட்டியாவ்விளவுநோக்குவாய். (சூக)

வெம்முனைவிளதலினன்றுவேறொருரு
சும்மையாளுயிர்கொளத்துணிதலாலன்று

---

* வேதியர்நாயகன் — பிரமன்.

தம்முனைத்துறந்ததுதருமநீதியோ
* செம்மையிலரக்கனில்யாவர்சிரியோர். (கூஉ)
தகையுறுதம்முனைத்தாயைத்தந்தையை
மிகையுறுகுரவரையுலகின்வேந்தனைப்
பகையுறவருதலுந்துறந்தபண்பிது
நகையுறலன்றியுநயக்கற்பாலதோ. (கூஎ)
வேண்டுழியினையனவிளம்பிவெம்முனை
பூண்டுழியஞ்சிவெஞ்சுருவிற்புக்குடன்
மாண்டுழியன்றிநம்மருங்குவந்தவன்
ஆண்டொழிலுலகினுக்காணியாமன்றே. (கூசு)
மிகைப்புலந்தருமமேவேட்டபோதவர்
தகைப்புலந்துறந்துபோய்ச்சார்தலன்றியே
நகைப்புலம்பொதுவுறநடந்தநாயகன்
பகைப்புலஞ்சார்தலோபழியினீங்குமோ. (கூஏ)
வார்க்குறுவனகழற்றம்முன்வாழ்ந்தநாள்
சீர்க்குறவாயிடைச்செறுநர்சீறிய
போர்க்குறவன்றியேபுகுந்தபோதிவன்
ஆர்க்குறவாகுவனருளிழியாய். (கூசூ)
ஒட்டியகனகமானுருவமாகிய
சிட்டனன்மருமகனிழைத்ததீவினை
கிட்டியபோதினிற்றவமுங்கேள்வியும்
விட்டதுகண்டுநாம்விடாது † வேட்குமோ. (கூஎ)
கூற்றுவன்றன்னெடிவ்வுலகங்கூடிவந்
தேற்றனவென்னினும்வெல்லவேற்றுள
மாற்றவன்றம்பிநம்மருங்குவந்திவண்
தோற்றுமோவன்னவன்றுணைவருகுமோ. (கூஅ)
அரக்கரையாசறக்கொன்றுநல்லறம்
புரக்கவந்தனமெனும்பெருமைபூண்டநாம்
இரக்கமிலவரையேதுணைக்கொடேறலால்
சுருக்கமுண்டவர்வலிக்கென்றுதோன்றுமால். (கூக)
விண்டுழியொருநிலைநிற்பர்மெய்ம்முகம்
கண்டுழியொருநிலைநிற்பர்கைப்பொருள்
கொண்டுழியொருநிலைநிற்பர்கூழுடன்
உண்டுழியொருநிலைநிற்பருற்றவர். (எo)

---

* செம்மையில்-ஒழுக்கமற்ற.
† வேட்குமோ-விரும்புவமோ.

வஞ்சனையியற்றிடவந்தவாறலால்
தஞ்சனநம்வயிற்சார்ந்துளானலன்
நஞ்சனைக்கொடியனையந்துகோடியோ
அஞ்சனவண்ணவென்றறியக்கூறினன். (எக)

அன்னவன்பின்னுறவலகில்கேள்வியால்
தன்னிகர்பிறிதிலாத்தகையசாம்பனை
என்னையுன்கருத்தென * விறைவிளையினன்
சொன்முறைநெறிதெரிந்தவனுஞ்சொல்லுவான். (எஉ)

விபீடணனைக்குறித்துச் சாம்பன் தன்கருத்துணர்த்துதல்.

அறிஞரோயாயினுமரியதெவ்வரைச்
செறிஞரோயாவரேற்கெடுதறிண்ணமாம்
நெறிதனைநோக்கினுநிருதர்நிற்பதோர்
குறிநனியுளதெனவுலகங்கொள்ளுமோ. (எங)

வெற்றியுந்தருகுவர்வினையம்வேண்டுவர்
மூற்றுவருறுகுறைமுடிப்பர்முன்பினல்
உற்றுறுநெடும்பகையுடையரல்லரோவும்
சிற்றினத்தவரொடுஞ்செறிதல்சீரிதோ. (எச)

வேதமும்வேள்வியுமயக்கிவேதியர்க்
கேதமுமிமையவர்க்கிடருமீட்டிய
பாதகர்நம்வயிற்படர்வராமெனின்
நீதிலராய்நமக்கன்புசெய்வரோ. (எஙு)

கைப்புகுந்துறுசரணருளிக்காத்துமேல்
பொய்க்கொடுவஞ்சனைபுணர்த்தபோதினும்
மெய்க்கொளவினியினுமிடுதுமென்னினும்
திக்குறுநெடும்பழியறமுஞ்சிறுமால். (எசு)

மேனனிவிளவதுவிளாம்பல்வேண்டுமோ
கானகத்திறைவியோடுறையுங்காலையின்
மானனைவந்தவன்வரனை † மானுமிவ்
வேனையன்வரவுமென்றினையகூறினன். (எஎ)

பால்வருபனுவலின்றுணிவுபற்றிய
சால்பெருங்கேள்வியின்றுனைநாயகன்
நீலனைநின்கருத்தியம்புநீயென
‡ மேலவன்விளம்பலும்விளம்பன்மேயினன். (எஅ)

---

* இறை-இராமன்.

† மானும்—ஒக்கும்.

‡ மேலவன்—இராமன்.

விபீடணனைக்குறித்து நீலன் தன்கருத்துணர்த்துதல்.

பகைவரைத்துணையெனப்பற்றற்பாலவாம்
வகையுளவன்னைவைவரம்பில்கேள்வியாய்
தொகையுறக்கூறுவென்குரங்கின்சொல்லென
நகையுறத்தக்கனநயந்துகோடியால். (எக)

தங்குலக்கிளைஞரைத்தருக்கும்போரிடைப்
பொங்குநர்க்கொன்றவர்க்கெளியர்போந்தவர்
மங்கையர்திறத்தினின்வயிர்த்தசிந்தையர்
சிங்கலில்பெரும்பொருளிழந்துசீறினேர். (அ0)

போரபிமானங்களுற்றபெற்றியோர்
போரிடைப்புறங்கொடுத்தஞ்சிப்போந்தவர்
நேர்வருதாயத்து * நிரப்பினேர்பிறர்
சீரியர்கிளைஞரைமடியச்செற்றுளோர். (அக)

அடுத்தநாட்டரசியல்புடையவாணையாற்
படுத்தவர்பட்டவர்பகைஞரோடொரு
மடக்கொடிபயந்தவர்மைந்தராயினும்
உடற்கொளத்தகையர்நம்முழைவந்தான்றிலல். (அஉ)

தாமவர்க்கெளிவருந்தகைமையாரலர்
நாமுறவல்லவர்நம்மைநண்ணினர்
தோமுறநீங்குதறுணிவராதலின்
யாமிவன்வரவிவற்றென்னென்றுன்னுவாம். (அங)

காலமேநோக்கினுங்கற்றநூல்களின்
மூலமேநோக்கினுமுணிந்துபோந்தவன்
சீலமேநோக்கியாந்தெளிந்துதேறுதற்
கேலுமேயென்றெடுத்தினையகூறினன். (அசை)

மற்றுளமந்திரிக்கிழவர்வாய்மையால்
குற்றமில்கேள்வியரன்புகூர்ந்தவர்
பற்றுதல்பழுதெனப்பழுதுறுவொரு
பெற்றியினுணர்விஞர்முடியப்பேசினர். (அசு)

உறுபொருள்யாவருமொன்றக்கூறினர்
செறிபெருங்கேள்வியாய்கருத்தென்செப்பென
நெறிதருமாருதியென்னுநேரிலா
அறிவனைநோக்கினனறிவின்மேலுளான். (அசு)

---

* நிற்பினேர் என்றும் பாடம்.

* இணங்கினரறிவிலரெனினுமெண்ணுங்கால்
கணங்கொள்கையும்மேலர்க்கடன்மைகாணென
வணங்கியசென்னியன்மறைத்தவாயினன்
நுணங்கியகேள்வியானுவல்வதாயினன். (அஎ)

விபீடணனைக்குறித்து அனுமன் தன்கருத்துணர்த்துதல்.

எத்தனையுளர்தெரிந்தெண்ணமேவ்ந்தவர்
அத்தனைவருமொருபொருளாயன்றென
உத்தமரதுதெரிந்துணரமோதிரர்
வித்தகவினிச்சிலவிளம்பவேண்டுமோ. (அஅ)

தூயவர்துணிதிறனன்றுதூயதே
ஆயினுமொருபொருளுரைப்பெனழியாய்
தீயனென்றிவனையானயிர்த்தல்செய்கிலேன்
மேயினசிலபொருள்விளம்பவேண்டுமால். (அக)

வண்டுளரலங்கலாய்வஞ்சர்வாண்முகம்
கண்டதோர்பொழுதினிற்றெரியுங் † கைதவம்
உண்டெனினஃதவர்க்கொளிக்கவொண்ணுமோ
விண்டவர்பலபகன்மருவிவீழ்வரோ. (கூ0)

உள்ளத்தினுள்ளதையுரையின்முந்துற
மெள்ளத்தம்முகங்களேவிளம்புமாகலால்
கள்ளத்தின்விளவெலாங்கருத்திலாவிருட்
பள்ளத்தினன்றியேவெளியிற்பல்குமோ. (கூக)

வாலிவிண்பெறவரசிளையவன்பெறக்
கோலியவரிசிலைவலியுங்கொற்றமும்
சிலமுமுணர்ந்துநிற்சேர்ந்துதெள்ளிதின்
மேலரசெய்துவான்விரும்பிமேயினன். (கூஉ)

செறிகழலரக்கர்தமரசுசீரியோர்
நெறியலதாகவினிலெக்கலாமையும்
எறிகடலுலகெலாமினவற்கீந்துதேர்
பிறிவருங்கருணையுமெய்யும்பேணினன். (கூங)

காலமன்றிவன்வருகாலமென்பரேல்
வாலிதன்னுறுபகைவலியதேதிய
தாலினியங்கிவற்கிறுதியாவதால்
மூலமென்றுணைவரைப்பிரிவுமுற்றினன். (கூச)

---

* இணங்கினர் – சினேகித்தவர்கள்
† கைதவம் – வஞ்சனை.

தீத்தொழிலரக்கர்தமாயச்செய்வினை
வாய்த்துளரன்னவையுணருமாண்பிலை
காய்த்தவரவர்களேகையுற்றூர்நமக்
கேற்றதோருறுதியுமெளிதினெய்துமால். (கூநி)

தெளிவுறலரிதிவர்மனத்திற்றீமையாம்
விளிவதுசெய்குவரென்னவேண்டுதல்
ஒளியுறவுயர்ந்தவரொப்பவெண்ணலார்
எளியவர்திறத்திவையெண்ணலேயுமோ. (கூசு)

கொல்லுமினிவனெனென்றரக்கன்கூறிய
எல்லையிற்றாதையெறிதலென்பது
புல்லிதுபழியொடும்புணரும்போர்த்தொழில்
வெல்லலம்பின்னெனென்றிடைவிலக்கினன். (கூஎ)

மாதரைக்கோறலுமறத்துநீங்கிய
ஆதரைக்கோறலுமழிவுசெய்யினும்
தூதரைக்கோறலுந்தூய்தன்றுமெனை
ஏதுவிற்சிறந்தனவெடுத்துக்காட்டினன். (கூஅ)

எல்லியில்யானிவ * னிரணமாளிகை
செல்லியபோதினுந்திரிந்தபோதினும்
நல்லனநிமித்தங்கணனியந்துள
அல்லதுமுண்டெனானறிந்ததாழியாய். (கூக)

நிந்தனைநறவமுநெறியிலூன்களும்
தந்தனகண்டிலென்றருமதானமும்
வந்தனைநீதியும்பிறவுமாண்பமைந்
† தந்தணரில்லெனப்பொலிந்ததாமரோ. (க00)

‡ அன்னவன்றனிமகளலரின்மேலயன்
சொன்னதோர்சாபமுண்டுன்னைத்துன்மதி
நன்னுதறீண்டுமேனணுகுங்கூற்றென
என்னுடையிறைவிக்குமினிதுகூறினள். (க0க)

வேறு.

பெற்றுடையபெருவரமும் பிறந்துடையவுஞ்சனையும் பிறவுமுன்னை,
விற்றொழுடையின் விடுகணையால் வெந்தொழியு மெனக்கருதி மேற்சொல்

---

* இரணமாளிகை-மூரசொலியினையுடைய மாளிகை.

† இக்கவியாலந்தணர்கள் ஊனுங்கள்ளுமுண்ணுதாரென்பது நன்கு விளங்குதல்காண்க. ‡ அன்னவன்-அவ்விபீடணன்.

லோடும், உற்றுடையபெருவரமுமுகந்துடையதண்ணளியுமுணர்வுநோக்
கின், மற்றுடையர்தாமுளரோவானரக்கனன்றியேதவத்தின்வாய்த்தார்.

தேவர்க்குந்தானவர்க்குந்திசைமுகனேமுதலாயதேவதேவர்
மூவர்க்குமுடிப்பரியகாரியத்தைமுற்றுவிப்பான்மூண்டினின்றே
ஆவத்தின்வந்தபயமென்றுனையயிர்த்தகலவிடுதியாயின்
* கூவத்தின்சிறுபுனலுக்கடலயிர்த்துதொவ்வாதாகொற்றவேந்தே. ()

பகைப்புலத்தோர்துணையல்லரென்றிவனைப்பற்றேமலறிஞர்பார்க்கின்
நகைப்புலத்ததாமன்றேநற்றாயுமுளதாயபற்றுன்மிக்க
தகைப்புலத்தோர்தந்தையர்கடம்பியர்கடமையரிவர்தாமேயன்றே
மிகைப்புலத்துவிடுவோகின்றதொருபொருளைக்காதலிக்கின்விளிஞராவர். ()

ஆதலாலிவன்வரவுநல்வரவேயெனவுணர்ந்தேனடியனேனுன்
வேதநூலெனத்தகையதிருவுளத்தின்குறிப்பறியேனென்றுவிட்டான்
காதணன்முகனுலுங்கணிப்பரியகலையனத்துங்கதிரோன்முன்சென்
றேதிலரேதுதீர்கடந்துபகைகடிந்துலகையுய்யக்கொண்டான். (கஙஞ)

வேறு.

இராமன் விபீடணனைக்குறித்து தன்கருத்துரைத்தல்.

மாருதிவினையவார்த்தைசெவிமடுத்துமிழ்தின்மாந்திப்
போறிவாளனன்றுநன்றெனப்பிறரைநோக்கிச்
சீரிதுமேலிம்மாற்றக்கெதுளிவுறத்தேர்மினென்ன
ஆரியனுரைப்பதானனனவருமதனைக்கேட்டார். (கஙக)

கருத்துறநோக்கிப்போந்தகாலமுன்றுகாதல்
அருத்தியுமரசின்மேற்றேயறிவினுக்கவதியில்லை
பெருத்துயர்தவத்தினுலும்பிழைப்பிலனென்னுமம்பெற்றி
திருத்தியதாகுமன்றேநம்வயிற்சேர்ந்துசெய்கை. (கஙஎ)

மற்றினியுரைப்பதில்லைமாருதிவடித்துச்சொன்ன
பெற்றியேபெற்றியன்னதன்றெனிற்பிறிதான்றுளும்
வெற்றியேபெறுகதாற்கவீகவீயாதுவாழ்க
பற்றுதலன்றியுண்டோபுகலெமைப்பகர்கின்றுனை. (கஙஅ)

இன்றுவந்தானென்றுண்டோவெந்தையையாயையுமுன்னைக்
கொன்றுவந்தானென்றுண்டோபுகலதுகூறுகின்றுன்
தென்றுவந்தன்புபேணுந்துணைவனுமவனேபின்னைப்
பின்றுமென்றுலுநம்பாற்புகழன்றிப்பிறிதுண்டாமோ. (கஙக)

பிறந்தநாட்டொடாடங்கியாருந்துலபுக்கபெரியோன்பெற்றி
மறந்தநாளுண்டோயென்னைச்சாவெனன்றுவாழ்கின்றுனைத்

---

* கூவம் — கிணறு.

துறந்தநாட்கின்றுவந்துதுன்னிணன்சூட்சியாலே
இறந்தநாளன்ரோவென்றுமிருந்தாளாவதென்றான். (கக0)

இடைந்தவர்க்கபயம்யாமென்றிரந்தவர்க்கெறிநீர்வேலை
கடைந்தவர்க்காகியாலமுண்டவற்கண்டிலீரோ
உடைந்தவர்க்குதவாணையினுள்ளதான்றியாணையின்
அடைந்தவர்க்கருளாணையினறமென்னுமாண்மையென்னும். (கஙங)

பேடையைப்பிடித்துத்தன்னைப்பிடிக்கவந்தடைந்தபேதை
வேடனுக்குதவிசெய்துவிறகிடைவெந்தீமூட்டிப்
பாடுறுபசியைநோக்கித்தன்னுடல்கொடுத்த * பைம்புள்
வீடுபெற்றுயர்ந்தவார்த்தைவேதத்தின்விழுமிதன்ரோ. (கஙஉ)

† போதகமொன்றுகன்றியிடங்கர்மாப்பொருதபோரின்
ஆதியம்பரமேயாணுன்னபயமென்றழைத்தவந்நாள்
வேதமுமுடிவுகாணுமெய்ப்பொருள்வெளிவந்தெய்தி
மாதுயர்துடைத்தவார்த்தைமறப்பரோமறப்பிலாதார். (கஙஙூ)

மன்னுயிரெல்லாந்தானேவருவித்துவளர்க்குமாயன்
தன்னனவுலகமெல்லாந்தருமமுமெவையுந்தானே
என்னினுமடைந்தோர்தம்மையேமுறவினிதிணைம்பிப்
பின்னும்வீடளிக்குமென்றூற்பிறிதொருசான்றுமுண்டே. (கஙச)

நஞ்சினைமிடற்றுவைத்த ‡ நகைமழுவாளனுளும்
தஞ்சனமுன்னந்தானேதாதைபாற்கொடுத்துச்சாதல்
அஞ்சினனபயமென்றவந்தணற்காகியஞ்ஞாள்
வெஞ்சினக்கூற்றைமாற்றுமேன்மையின்மேன்மையுண்டோ. (கஙஞ)

சரணனைக்கியார்கொலென்றுசானகியழுதுசாம்ப
அரணுனைக்காவென்வஞ்சியஞ்சலென்றருளினெய்தி
முரணுடைக்கொடியோன்கொல்லமொய்யமர்முடித்துத்தெய்வ
மரணமென்றுணைதபெற்றதென்வயின்வழக்கன்றுமோ. (கஙஙூ)

உய்யநிற்கபயமென்றுணுயிரைத்தன்னுயிரி ¶ னேம்பாக்
கய்யனுமொருவன்செய்தவுதவியிற்கருத்திலோனும்
மய்யறநெறியினேக்கிமாமறநெறியினின்ற
மெய்யினைப்பொய்யென்றுணுமீள்கிலாநரகின்வீழ்வார். (கஙஎ)

சீதையைக்குறித்ததேயோதவரைத்தீமைசெய்த
பேதையைக்கொல்வெனென்றுபேணியவிரதப்பெற்றி

---

* பைம்புள்-புறு. † போதகம்-யானை.
‡ நகைமழு-ஒளிவிடுகின்றபரசு. ¶ ஓம்பா-இரக்ஷிக்காத.

வேதியரபயமென்றூர்க்கன் றுநான்விரித்துச்சொன்ன
காதையைக்குறித்துநின் றவவ்வுரைகடக்கலாமோ. (ககஅ)

காரியமாகவன்றேறயாகுக * கருணையோர்க்குச்
சீரியதன்மைநோக்கினிதனின்மேற்சிறந்ததுண்டோ
பூரியரேயுந்தம்மைப்புகல்புகுந்தோர்க்குப்பொன்றூ
ஆருயிர்கொடுத்துக்காத்தற்கெண்ணிலாவரசர்க்கென்னும். (ககக)

ஆதலானபயமென்றபொழுதத்தேயபயதானம்
ஈதலேகடப்பாடென்பதியம்பினீரென்பால்வைத்த
காதலானினிவேறெண்ணக்கடவதன்கதிரோன்மைந்த
கோதிலாதவனேநீயேயென்வயிற்கொணர்தியென்றூன். (கஉ0)

சுக்கிரீவன் விபீடணனை நாடிவருதல்.

அய்யுறவெல்லாந்தீருமளவையாயமைந்ததன்றேற
தெய்வநாயகனதுள்ளந்தேறியவடைவேதேறிக்
கய்புகற்கமைவதாரூன்கடிதினிற்கொணர்வலென்ரூ
மெய்யினுக்குறைறயுளானவொருவன்பால்விரைவிற்சென்றூன். (கஉக)

விபீடணன் சுக்கிரீவனைதிரே செல்லுதல்.

வருகின்றகவியின்வேந்தைமயிந்தனுக்கிளையவள்ளல்
தருகென்றூனண்ணனின்னையதிர்கொளற்கருக்கன்றந்த
இருகுன்றமனையதோளானெய்தினனென்னலோடும்
திரிகின்றவுள்ளத்தானுமகமலர்ந்தவன்முன்சென்றூன். (கஉஉ)

இருவரு மொருவரையொருவர் ஆலிங்கனஞ்செய்தல்.

தொல்லருங்காலமெல்லாம்பழகினுந்தூயரல்லார்
புல்லலருள்ளந்தூயார்பொருந்துவதிர்ந்தனூன்றே
ஒல்லைவந்துணர்வுமொன்றவிருவருமொருநாளுற்ற
எல்லியும்பகலும்போலத்தழுவினரழுவிற்றேரூளார். (கஉங)

சுக்கிரீவன் விபீடணனை இராமனடிபணிய வருகுதல்.

தழுவினர்நின்றகாலத்தாமரைக்கண்ணன்றங்கள்
முழுமுதற்குலத்திற்கேற்றமுறைறமையாலுவகைமூள
வழுவலிலபயமுன்பால்வழங்கினனவன்பொற்பாதம்
தொழுதியால்விரைவினென்றுக்கதிரவன்சிறுவன்சொன்றுன். (கஉச)

சிங்கவேறனையான்சொன்னவாசகஞ்செவிபுகாமுன்
கங்குலினிறத்திறுன்றன்கண்மழுத்தாரைகான்ற
அங்கமு † மனமதென்னக்குளிர்ந்ததவ்வகத்தைதமிக்குப்
பொங்கியவுவகையென்னப்பொடித்தனவுரோமப்புள்ளி. (கஉஞ)

---

* கருணையோர்க்கு – அருளுடையோர்க்கு.

† மனமதென்ன – மனதையொப்ப.

பஞ்சனைச்சிவக்குமென்காற்றேறவியைப்பிரித்தபாவி
வஞ்சனுக்கிளையவென்னைவருகவென்றருள்செய்தாலே?
தஞ்சனைக்கருதிலேதாழ்சடைக்கடவுளுண்ட
நஞ்சனைச்சிறந்தேதனன்றேநாயகனருளிலையேன். (கஉசு)

மருளுறுமனத்திலுனென்வாய்மொழிமறுத்தான்வானத்
துருளுறுதேரிலுமிலங்கைமீதாடமன்றே
தெருளுறுசிந்தைவந்ததேற்றமீதாகிற்செய்யும்
அருளிதுவாயிற்கெட்டேன்பிழைப்பரோவரக்காராயோர். (கஉஎ)

தீர்வருமன்னதீமைசெய்யினுஞ்செய்யசிந்தைப்
பேரருளாளர்தத்தஞ்செய்கையிற்பிழைப்பதுண்டோ
கார்வரைநிறுவித்தன்னைக்கனலெழுக்கலக்கக்கண்டும்
ஆர்கலியமரருய்யவமிழ்துபண்டளித்ததன்றே, (கஉஅ)

துறவியினுறவுபூண்டதூயவர்துணைவனென்னை
உறவுவந்தருளிமீளாவடைக்கலமுதவிலனே
மறவினைநீக்கலில்லாமாயமுமாயவாழ்க்கைப்
பிறவியும்பெயர்த்தேதன்பின்னுநரகினிற்பிழைப்பதானேன். (கஉகூ)

திருத்தியவுணர்வுமிக்கசெங்கதிர்ச்செல்வன்செம்மல்
ஒருத்தரைநலனுந்தீங்குந்தேரினுமுயிரிலேம்பும்
கருத்தினனன்றேதன்னைக்கழலடைந்தாரைக்காணும்
அருத்தியனமலன்றாழாதேதுதியறிஞவென்றான். (கஉ0)

* மொய்த்தவழ்கிரிகண்மற்றும்பலவுடன்முடுகிச்செல்ல
மய்த்தவழ்கிரியுமேருக்குன்றமும்வருவதென்னச்
செய்தவம்பயந்தவீரர்திரண்மரமேழுந்தீய
எய்தவனிருந்தசூழலிருவருமெய்தச்சென்றார். (கஉக)

விபீடணன் இராமனைத் தரிசித்தல்.

மார்க்கடலுஞ்சூழ்ந்தவைப்பினுங்கதன்மருங்குகாப்ப
நாற்கடலுதித்தபாரினையகன்புதல்வனுமப்
பாற்கடல்சுற்றவிற்கைவடவரைபாங்குநிற்பக்
கார்க்கடல்கமலம்பூத்ததெனப்பொலிவானைக்கண்டான். (கஉஉ)

அள்ளிமீதுலகைவீசுமரிக்குலச்சேனைநாப்பண்
தெள்ளுதண்டிரையிற்றூகிப்பிறிதொருதிறனுஞ்சாரா
வெள்ளியகடலின்மேலுள்விண்ணவர்தொழுதுவேண்டப்
பள்ளிதீர்ந்திருந்தானென்னப்பொலிதரும்பண்பினனே. (கஉஊ)

* மொய்த்தவழ் – யானைகளுலாவுகின்ற.

கோணுதற்கமைந்தகோலப்புருவம்போற்றிரையுங்கூடப்
பூணுதற்கினியமுத்தின்பொலிமணல்பரந்தவைப்பின்
காணுதற்கினியநீளவெண்மையிற்கருமைகாட்டி
வாணுதற்சீதைகண்ணின்மணியெனவயங்குவானை. (கஎச)

படர்மழுசுமந்தகாலப்பகர்வருமமரர்* மான்
அடர்சிலைதுறந்தவென்னவாரந்தீர்மார்பினைனைக்
கடர்கடைமத்திற்பாம்புகழற்றியவென்னைக்காசின்
சுடரொளிவலயந்தீர்ந்தசுந்தரத்தோளினைனை. (கஎஞ)

கற்றைவெண்ணிலவுநீக்கிக்கருணையாலமிழ்தங்காலும்
முற்றுறுகலையிற்ரூயமுழுமதிமுகத்தினைனப்
பெற்றவணளித்தமோலியினையவன்பெறத்தான்பெற்ற
சிற்றவைபணித்தமோலிபொலிகின்றவென்னியானை. (கஎசு)

வீரனைநோக்கியங்கமென்மயிர்சிலிர்ப்பக்கண்ணீர்
வாரநெஞ்சுருகிச்செங்கணஞ்சனமலையன்ரூகில்
கார்முகில்கமலம்பூத்ததன்றிவன்கண்ணன்கொல்லாம்
ஆரருள்சுரக்குநீதியறநிறங்காரிதாவென்ரூன். (கஎஎ)

மின்மினியொளியின்மாயும்பிறவியைவேரின்வாங்கச்
செம்மணிமகுடநீக்கித்திருவடிபுனைந்தசெல்வன்
தன்முனைர்கமலத்தண்ணரூதையார்சரணந்தாழ
என்முனைரனக்குச்செய்தவுதவியென்றேறம்பலுற்ரூன். (கஎஅ)

பெருந்தவமியற்றிரேனர்க்கும்பேர்வரும்பிறவிநோய்க்கு
மருந்தனநின்ரூன்ரூனைவடிக்கணைதொடுத்துக்கொல்வான்
இருந்தனனின்றதென்னுமியம்புவதில்லைதீர்ந்த
அருந்தவமுடையரம்மாவரக்கரென்றகத்துட்கொண்டான். (கஎக)

கரங்கண்மீச்சுமந்துசெல்லுங்கதிர்மணிமுடியன்கல்லும்
மரங்களுமுருகநோக்குங்காதலான்கருணைவள்ளல்
இரங்கினைனைக்குக்தோறுமிருநிலத்திறைஞ்சுகின்ரூன்
வரங்களின்வாரியன்னதாளிணைவந்துவீழ்ந்தான். (கஎ0)

அழிந்ததுபிறவியென்னு * மகத்தியன்முகத்திற்காட்ட
வழிந்தகண்ணீரின்மண்ணின்மார்புறவணைங்கினைனப்
பொழிந்ததோர்கருணைதன்னுற்புல்லினைனென்ரூதான்ற
எழுந்தினிதிருத்தியென்னுமலர்க்கையாலிருக்கையீந்தான். (கஎக)

---

* அகத்தியல் — உள்ளத்தின் தன்மை.

இராமன் விபீடணனுக்கு இலங்கையரசளித்தேதனெனல்.

ஆழியானவனேநோக்கியருள்சுரந்துவகைதூண்ட
ஏழிலேடுழாய்நின்றவுலகுமென்பெயருமெந்நாள்
வாழுநாளன்றுகாறும்வாளெயிற்றரக்கர்வைகும்
தாழ்கடலிலங்கைச்செல்வநின்னதேததந்தேதனென்றான். (கசஉ)

அனைத்துயிரும் வாழ்ந்தேதமென வார்த்தல்.

தீர்த்தனதருளைநோக்கிச்செய்ததோர்சிறப்புப்பெற்றான்
கூர்த்தநல்லறத்தைநோக்கிக்குறித்ததோயாதுகொல்லோ
வார்த்தையஃதுரைத்தலோடுந்தனித்தனிவாழ்ந்தேதமென்ன
ஆர்த்தனவுலகினுள்ளசராசரமனைத்துமம்மா. (கசஙட)

இராமன் விபீடணனுக்கு மகுடதாரணஞ்செய்யக் கட்டளையிடுதல்.

உஞ்சனைனடியனேனென்றாழ்முறைவணங்கிநின்ற
அஞ்சனமேனியானையழகனுமருளிநோக்கித்
தஞ்சமற்றுனைவலனெதவறிலாப்புகழான்றன்னைத்
துஞ்சலினையனத்தையசூட்டுதிமகுடமென்றான். (கசஞ)

விபீடணன் பாதுகைமகுடம் விரும்புதல்.

வினைவினையறியும்வென்றிவீடணனென்றும்வீயா
அளவறுபெருமைச்செல்வமளித்தனையாயினைய
களவியலரக்கன்பின்னேதான்றியகடன்மைதீர
* இளையவற்கவித்தமோலியென்னையுங்கவித்தியென்றான். (கசஎ)

குகனெனுமைவராளனேமுன்புபின் † குன்றுசூழ்வான்
மகனெனுமறுவராளனெமம்முழையன்பின்வந்த
அகனமர்காதலையனின்னெனுமெழுவராளனம்
புகலருங்கானந்தந்துபுதல்வராற்பொலிந்தானுந்தை. (கசசு)

விபீடணன் திருவடிமகுடஞ் சூடிநிற்றல்.

நடுவினிப்பகர்வதென்னேநாயகநாயினேனை
உடனுதித்தவர்களோடுமொருவனென்றுரையாநின்றாய்
அடிமையிற்சிறந்தேதனென்னைவயிர்ப்பொடுமச்சநீங்கித்
தொடுகழற்செம்பொன்மௌலிசென்னியிற்சூட்டிக்கொண்டான். (கசஎ)

திருவடிமுடியிற்சூட்டிச்செங்கதிருச்சிசேர்ந்த
அருவரையென்னநின்றவரக்கர்தம்மரசைநோக்கி
இருவருமின்பமுற்றார்யாவருமின்பமுற்றார்
பொருவருமமரர்வாழ்த்திப்பூமழைபொழிவதானார். (கசஅ)

---

* இளையவற்கவித்தமோலி - பரதனுக்களித்த பாதுகைமகுடம்.

† குன்றுசூழ்வான் மகன் - சுக்கிரீவன்.

ஆர்த்தனபரவையெழுமார்த்தனமேகமார்த்த
வார்த்தொழிற்புணருந்தெய்வமங்கலமூரசுஞ்சங்கும்
தூர்த்தனகனகமாரிசொரிந்தனநறுமென்சுண்ணம்
போர்த்ததுவானத்தன்றங்கெழுந்ததுதுழனிப்பொம்மல். (கசகூ)

மொழிந்தசொல்லமிழ்தமன்னுடிறத்தினின்மூறைறமைநீங்கி
இழிந்தவென்மரபுமின்றேறியுயர்ந்தவென்றிடரிற்றீர்ந்தான்
செழுந்தனிமலரோன்பின்னையிராவணன்றீமைச்செல்வம்
அழிந்ததென்றறனுந்தன்வா * யாவலங்கொட்டிற்றன்றே. (கஞ0)

இன்னதோர்செவ்வித்தாகவிராமனுமிலங்கைவேந்தன்
தன்னெடுஞ்செல்வந்தானேபெற்றமைபலருங்கேட்பப்
பன்னெடுந்தானைசூழப்பகலவன்சேயுநீயும்
மன்னெடுங்குமரபாடிவீட்டினைவலஞ்செய்கென்றான். (கஞக)

முடிசூடியவிபீடணனைப் பாடிவீட்டினை வலம் வருவித்தல்.

அந்தமில்குணத்திறனையடியினைமுடியினேடும்
சந்தனவிமானமேற்றிவானரத்தலைவர்தாங்க
இந்திரற்குரியசெல்வமெய்திறனிவனென்றேறத்தி
மந்தரத்தடந்தோள்வீரர்வலஞ்செய்தார்தானைவப்பை. (கஞஉ)

இராமன் திருவடியின்பெருமை சொல்லொணைதனல்.

தேடுவார்தேடநின்றசேவடிதானுந்தேடி
நாடுவானன்றுகண்டநான்முகன்கழீஇயநன்னீர்
ஆடுவார்பாவமஞ்சுநீங்கிமேலமரராவார்
சூடுவாரெய்துந்தன்மைசொல்லுவார்யாவர்சொல்லீர். (கஞங)

விபீடணன்பெற்ற பேற்றினைவியத்தல்.

இற்றைநாளளவும்யாருமிருடிகளிமையோர்ஞான
முற்றிரைன்புபூண்டார்வேள்விகண்முடித்துநின்றூர்
மற்றுமாதவருமெல்லாம்வாளெயிற்றிலங்கைவேந்தன்
பெற்றதார்பெற்றுரென்றுவியந்தனர்பெரியோரெல்லாம். (கஞச)

சு-வது, விபீடணனடைக்கலப்படலம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-சசுஉ.

---

* ஆவலங்கொட்டல்-வாயாலொலித்தல்.

வந்தடிவணங்கியநிருதர்மன்னவற்
கந்தமிலாததேதாருறையுளவ்வழித்
தந்தனன்விடுத்தபினிரவிதன்கதிர்
சிந்தினவெய்யவென்றெண்ணித்தீர்ந்தனன். (க)

அந்திமாலைப்பொழுது வருதல்.

சந்திவந்தனைத்தொழின்முடித்துத்தன்னெடும்
புந்திநொந்திராமனுமுயிர்ப்பப்பூங்கணை
சிந்திவந்திறுத்தனன்மதனன்றீநிறத்
தந்திவந்திறுத்ததுகறுத்தண்டமே. (உ)

நட்சத்திரோதயம்.

மாத்தடந்திசைதொறுமறைந்தவல்லிருள்
கோத்ததுகருங்கடல்கொள்ளைகொண்டென
நீத்தநீர்ப்பொய்கையினிறைந்தநாண்மலர்
பூத்தனமீன்குலம்பொலிந்ததண்டமே. (ங)

சில்லியல்கோதையைநினைந்துதேம்பிய
வில்லியைத்திருமனம்வெதுப்பும்வேட்கையால்
* எல்லியைக்காண்டலுமலர்ந்தவீட்டிரல்
மல்லிகைக்கானமும்வானமொத்ததே. (ச)

சந்திரோதயம்.

ஒன்றுமுட்கறுப்பிலேடொளியின்வாளரீஇத்
தன்றனிமுகத்திலெண்ணெத் † தாழ்ந்தற
வென்றவடிணைவனையின்றுவெல்குவேன்
என்றதுபோலவந்ததுழந்ததிங்களே. (ஞ)

கண்ணினையப்புறங்கரந்துபோகினும்
பெண்ணிறமுண்டெனிற்பிடிப்பலீண்டென
உண்ணிறைநெடுங்கடலுலகமெங்கணும்
வெண்ணிறநிலவெனும்வலையவீசினன். (ட)

கடலொலி.

புடைக்கைவன்றிரையெடுத்தார்க்கும்போர்க்கடல்
உடைக்கருந்தன்னிறமொளித்துக்கொண்டவன்

---

* எல்லியை-இரவை. † தாழ்ந்தற-கெடுமாறு.

அடைக்கவந்தானெனையரியின்ரூனையால்
கிடைக்கவந்தானெனக்கிளர்ந்தெதாத்ததே. (எ)

நிலாப்பரத்தல்.

மேலுகத்தொகுதியான்முதிர்ந்தமெய்யெலாம்
தோலுகுத்தாலெனவரவத்தொல்கடல்
வாலுகத்தாலிடைப்பரந்தவைப்பெலாம்
பாலுகுத்தாலெனநிலவுபாய்ந்ததால். (அ)

தென்றல் வீசுதல்.

* மன்றல்வாய்மல்லிகையெயிறுவண்டினம்
கன்றியவிடத்தது நறவின்கண்ணது
குன்றின்வாய்முழையினிற்குலாயகொட்பது
தென்றலென்றெரூருபுவியுயிர்த்துச்சென்றதால். (க)

மன்மதபாணமும் சந்திரிகையும்.

கரத்தொடும்பாழிமாக்கடல்கடைந்துளான்
உரத்தொடுங்காலெடுமுருவவேவாங்கிய
மரத்தொடுந்தொளைத்தவன்மார்பின்மன்மதன்
சரத்தொடும்பாய்ந்தனநிலவின்ரூரைவாள். (கo)

இரவில் இராமன் சீதையைநினைந்து வருந்தியதுரைத்தல்.

உடலினைநோக்குமின்னுயிரைநோக்குமால்
இடரினைநோக்குமற்றியாதுநோக்கலன்
கடலினைநோக்குமக்கள்வன்வைகுறும்
திடரினைநோக்குந்தன்சிலையைநோக்குமால். (கக)

பணிபழுத்தமைந்தபூணல்குற்பண்பிலை
பிணிபழுத்தமைந்தநேர்பித்திலுள்ளத்தான்
அணிபழுத்தமைந்தமுத்தரும்புசெம்மணி
மணிபழுத்தமைந்தவாய்மறக்கவல்லனே. (கஉ)

சுக்கிரீவன்மே லாக வேண்டுவன நினையெனல்.

ஆயதோளனையினுக்கன்மைந்தனீ
தேய்வதென்காரியநிரப்புஞ்சிந்தையை
மேயவன்றன்னெடுமெண்ணிமேவினித்
தூயதுநினைக்கிலையென்னச்சொல்லினன். (கங)

அவ்வழியுணர்வுவந்தயர்வுநீங்கினன்
செவ்வழியறிஞனைக்கொணர்திசென்றென

---

* மன்றல்வாய்மல்லிகை யெயிறுவண்டினைக், கன்றியநீர்த்தது நிலை
ன்கண்ணது என்றும் பாடம்.

இவ்வழிவருதியென்றியம்பவெய்திஞன்
வெவ்வழிவிலங்கினனென்றியைமேவிஞன். (கச)

மருக்கிளர்தாமரைவாசநாண்மலர்
நெருக்கிடுதடமெனவிருந்தநீதியான்
திருக்கிளர்தாமரைபணிந்தசெம்மலை
இருக்கவீண்டெழுந்தனவிருந்தகாலையில். (கஞ)

ராமன் விபீடணனை இலங்கையின்றிற முரைசெனல்.

ஆர்கலியிலங்கையினரணுமவ்வழி
வார்கெழுகனைகழலரக்கன்வன்மையும்
தார்கெழுதானையினளவுந்தன்மையும்
நீர்கெழுதன்மையாய்ங்கழ்த்துவாயென்றான். (கசு)

எழுதலுமிருத்தியென்றிராமனேயிஞன்
முழுதுணர்புலவனேமுளரிக்கண்ணிஞன்
பழுதறவினவியபொருளைப்பண்பிஞல்
தொழுதுயர்கையிஞன்றெரியச்சொல்வினான். (கஎ)

இலங்கையினுற்பவ முரைத்தல்.

நிலையுடைவடவரைகுலையநேர்ந்ததன்
தலையெனவிளங்கியதமனியப்பெரு
மலையினைமும்முடிவாங்கியோங்குநீர்
அலைகடலிட்டனனனுமன்றுதையே. (கஅ)

எழுநூறியோசனையகலமிட்டகீழ்
ஆழநூறியோசனையாழிமால்வரை
வாழியாயுலகினைவளைந்தவண்ணமே
சூழுமாமதிலதுசுடர்க்குமேலதால். (கக)

மருங்குடைவினையமும்பொறியின்மாட்சியும்
இருங்கடியாணமும்பிறவுமெண்ணிஞல்
சுருங்கிடுமெனைப்பலசொல்விற்சுற்றிய
கருங்கடலகழ்துநீருங்கண்டிரால். (உ0)

வடதிசைவயங்கொளிவாயில்வைகுவோர்
இடையிலரெண்ணிருகோடியென்பரால்
கடையுகமுடிவினிற்காலனென்பதென்
விடைவருபாகனைப்பொருவுமென்மையோர். (உக)

மேற்றிசைவாயிலின்வைகும்வெய்யவர்க்
கேற்றமுமுளவவர்க்கிரண்டுகோடிமேல்
கூற்றையுங்கட்பொறிகுறுகக்காண்பரேல்
ஊற்றுறுகுருதியோடியிருமுண்பரால். (உஉ)

தென்றிசைவாயிலின்வைகுந்தீயவர்
என்றவரெண்ணிருகோகாடியென்பரால்
குன்றுறழ்நெடியவர்கொடுமைகூறியென்
வன்றிறல்யமனையுமரசுமாற்றுவார். (உங)

கீட்டிசைவாயிலின்வைகுங்கீழுவர்
ஈட்டமுமெண்ணிருகோகாடியென்பரால்
கோட்டிருந்திசைநிலைக் * கும்பக்குன்றையும்
தாட்டுணைபிடித்தகன்றரையினெற்றுவார். (உச)

விண்ணிடைவிழித்தனர்நிற்கும்வெய்யவர்
எண்ணிருகோகாடியினிரட்டியென்பரால்
மண்ணிடைவானவர்வருவரென்றவர்
கண்ணிலர்கரையிலர்கரந்துபோயினர். (உஞ)

பிறங்கியநெடுமதிற்பின்னுமுன்னரும்
உறங்கல † ருண்பதமுலைவையாதலால்
கறங்கெனத்திரிபவர்கணக்குவேண்டுமேல்
அறைந்துளதையிருநூறுகோகாடியால். (உசு)

இப்படிமதிலொருமூன்றுவேறினி
ஒப்பரும்பெருமையுமுரைக்கவேண்டுமோ
மெய்ப்பெருந்திருநகர்காக்கும்வெய்யவர்
மூப்பதுகோகாடியின்மும்மைமுற்றினர். (உஎ)

சிறப்பவன்செய்திடச்செல்வமெய்தினர்
அறப்பெரும்பகைஞர்களளவிலாற்றலர்
உறப்பெரும்பகைவரினுதவுமுண்மையர்
இறப்பிலரெண்ணிருநூறுகோகாடியே. (உஅ)

விடமலவிழியெனும்வெகுளிக்கண்ணினர்
கடனலவிமைத்தலுமெண்ணுங்காவலர்
வடவரைபுரைவனகோயில்வாயிலின்
இடம்வலம்வருபவரெண்ணெண்ணெண்கோடியால். (உக)

பேயனேனென்பலபிதற்றிப்பேர்த்தவன்
மாயிருஞாலத்துவைத்தமாப்படை
தேயினுநாளெலாந்தேய்க்கவேண்டுவ
தாயிரவெள்ளமென்றறிந்ததாழியாய். (ஙo)

---

* கும்பக்குன்றையும்-மத்தகத்தினையுடைய யானையையும்.

† உண்பதுமுலைவையாயென என்றும்பாடம்.

* அன்றியுமவனகன்கோயில்வாய்மனே
முன்றிலின் † வைகுவார்முறைமைகூறிடின்
ஒன்றியவுலகையுமெடுக்குழூற்றத்தார்
குன்றினும்வலியவர்கோடிகோடியால். (சுக)

தேர்பதினாயிரம்பதுமஞ்செம்முகக்
கார்வரையவற்றினுக்கிரட்டிகால்வயத்
தூர்பரியவற்றினுக்கிரட்டியொட்டகம்
தார்வருபுரவியினிரட்டிசாலுமே. (சுஉ)

இலங்கையினாணிதுபடையினெண்ணிது
வலங்கையில்வாள்சிவன்கொடுக்கவாங்கிய
அலங்கலந்தோளவன்றுணைவராந்தமில்
வலங்களும்வரங்களுந்தவத்தின்வாய்த்தவர். (சுங)

வேறு.

தும்பியீட்டமுமிரதமும்புரவியுந்தொடர்ந்த
அம்பொன்மாப்படையையிருகோடிகொண்டமைந்தான்
செம்பொனட்டுளசித்தரைச்சிறையிடைவைத்தான்
கும்பனென்றுளனூழிவெங்கதிரினுங்கொடியான். (சுச)

உகம்பல்காலமுந்தவஞ்செய்துபெருவரமுடையான்
சுகம்பல்போரலால்வேறிலன்பொருபடைத்தாகையான்
நகம்பலென்றிவையில்லதோர்நரசிங்கமனையான்
அகம்பனென்றுளனுலகடல்பருகவுமமைவான். (சுஙி)

பொருப்பைமீதிடும்புரவியும்பூட்கையுந்தேருமும்
உருப்பவிற்படையொன்பதுகோடியுமுடையான்
செருப்பெய்வானிடைச்சினக்கடாய்கடாய்வந்துசெறுத்த
நெருப்பைவென்றவனிகும்பனென்றுளனெருநெடியோன். (சுசு)

பேயையாளியையாணையைக்கழுதையைப்பிணித்த
ஆயதேர்ப்படையையிருகோடிகொண்டமைந்தான்
தாயையாயினுஞ்சலித்திடுவஞ்சனைதவிரா
ம்மாயையானுளன்மகோதரனென்றொருமறவோன். (சுஎ)

குன்றில்வாழ்பவர்கோடிநாலந்தினுக்கிறைவன்
இன்றுளார்பின்னைநாளையிலாரெனவெயிற்றல்
தின்றுளாரெனுமம்பன்முறைறதவரைச்செருவின்
வென்றுளானுளன்வேள்வியின்பகைகடிவேரர்வெய்யோன். (சுஅ)

---

* அன்றுமவன்மகன் எனவும் பாடம் உண்டு.

† மாறினர்-முறையின்வைகுவாரும்என, பிரதியந்தரம்.

மண்ணுளாரையும்வானினுள்ளாரையும்வகுத்தால்
உண்ணுநாளொருநாளினென்றெளிர்படைத்தானை
எண்ணிலிருகோகோடியனெரியஞ்சுவிழிக்கும்
கண்ணுளானுளன்சூரியன்பகையென்றோர்கழலான். (கூக)

தேவருந்தக்கமுனிவருந்திசைமுகன்முதலா
மூவரும்பக்கநோக்கியேமொழிதரமுனிவான்
தாவரும்பக்கமெண்ணிருகோகாடியின்றலைவன்
மாவரும்பக்கனென்றுளன்குன்றினும்வலியான். (கூ0)

உச்சிரத்தெரிகதிரெனவுருத்தெரிமுகத்தன்
நச்சிரப்படைநாலிருகோகாடிக்குநாதன்
மூச்சிரத்தயிற்றலைவற்கும்விலக்கருமொய்ம்பன்
வச்சிரத்தெயிற்றவனுளன்கூற்றுவன்மாற்றான். (கூக)

அசஞ்சலப்படையையிருகோகாடியனமரின்
வசஞ்செயாதவன்றானன்றிப்பிறரிலாவலியான்
இசைந்தவெஞ்சமத்தியக்கரைவேரொடுமுன்னர்
பிசைந்துபோந்தவன்பிசாசனென்றுளனெருபித்தன். (கூஉ)

சில்லிமாப்பெருந்தேரொடுங்கரிபரிசிறந்த
வில்லின்மாப்படையேழிருகோகாடிக்குவேந்தன்
கல்லின்மாப்படிகலக்குவன்கடலெனக்காந்திச்
சொல்லுமாற்றலன்றுன்முகனென்றறந்துறந்தான். (கூங)

இலங்கைநாட்டன்னவெறிகடற்றீவிடையுறையும்
* அலங்கல்வேற்படையையிருகோகாடிக்குமரசன்
வலங்கொள்வாட்டொழில்விஞ்சையர்பெரும்புகழ்மறைத்தான்
விலங்குநாட்டவனென்றுளன்வெயிலுகவிழிப்பான். (கூச)

நாமமட்டியசுவமெனினுளென்றுமொருவர்
ஈமநாட்டிடையிடாமற்றன்னெயிற்றிடையிடுவான்
தாமநாட்டியகொடிப்படைப்பதுமத்தின்றலைவன்
தூமநாட்டவனென்றுளன்றேறவரைத்துரந்தான். (கூஙு)

போரின்மத்தனும்பொருவருமத்தனுமுலவா
நீரின்மத்தனும்பெருமையார்நெடுங்கடற்படையார்
ஆருமத்தனைவலியுடையாரிலையவராஅல்
பேருமத்தனையெத்தனையுலகமும்பொரியோய். (கூசு)

இன்னதன்மையரெத்தனையாயிரரென்கென்
அன்னவன்பெருந்துணைவராயமர்த்தெதாழிற்கமைந்தார்

---

* அலங்கல்-மாலை.

சொன்னசொன்னவாபடைத்துணையிரட்டியின்ரைகையான்
பின்னையெண்ணுவான்பிரகத்தனென்ரூருபித்தன். (சஎ)

சேனைகாவலனிந்திரன்சிந்துரச்சென்னீ
யானைகால்குலைந்தாழியோரேழும்விட்டகல
எனைவானவரிருக்கைவிட்டிரியலுற்றலையச்
சோனைமாரியிற்சுடுகணைபலமுறைதூரந்தான். (சஅ)

தம்பிமுற்பகற்சந்திரர்நால்வரிற்றயங்கும்
கும்பமாக்கரிக்கோடிருகைகளால்வாங்கிச்
செம்பொன்மால்வரைமதம்பட்டதாமெனத்திரிந்தான்
கும்பகன்னனென்றுளன்பண்டுதேவரைக்குமைத்தான். (சக)

கோளிரண்டையுங்கொடுஞ்சிறைவைத்தவக்குமரன்
மூளும்வெஞ்சினத்திந்திரசித்தெனமொழிவான்
ஆளுமிந்திரற்கன்னவன்பிணித்ததற்பின்னைத்
தாளுமார்பினுந்தோளினுமுளவினுந்தழும்பு. (நo)

தன்னையுந்தெறுந்தருமமென் * றிறைமனந்தாழான்
முன்னவன்றரப்பெற்றதோர்முழுவலிச்சிலையன்
அன்னவன்றனக்கிளையவனப்பெயரொழித்தான்
பின்னெரிந்திரனிலாமையிற்பேரதிகாயன். (நக)

தேவராந்தகனராந்தகன்றிரிசிராவென்னும்
மூவராந்தகைமுதல்வராந்தலைவருமுனையில்
போவராந்தகையழிவராமெனத்தனிப்பொருவார்
ஆவராந்தகையிராவணற்கரும்பெறற்புதல்வர். (நஉ)

விபீடணன் இராவணன் திறமுரைத்தல்.

இனையதன்மையர்வலியிஃதிராவணனென்னும்
அனையவன்றிறம்யானறியளவெலாமறைவென்
தனையனுன்முகன்றகைமகன்சிறுவற்குத்தவத்தால்
முனைவர்கோன்வரமுக்கணென்வரத்தெதிரெமுயர்ந்தான். (நங)

எள்ளீலப்பெரும்பூதமும்யாவையுஞ்சூழப்
புள்ளிமாணுரியாடையணுமையொடும்புணர்ந்த
வெள்ளியம்பெருந்தடங்கிரிவேரொடும்வாங்கி
அள்ளிவிண்டொடவெடுத்தனனுலகெலாமனுங்க. (நச)

ஆன்றவெண்டிசையுலகெலாஞ்சுமக்கின்றயானை
ஊன்றுகோடிறத்திரள்புயத்தழுத்தியவொண்மை

---

* இறை — சிறிதும்.

தோன்றுமென்னவேதுணைக்கமுற்றிரிவரத்தொகுதி
மூன்றுகோடியின்மேலொருமுப்பத்துமூவர். (நந)

குலங்களோடுந்தங்குலமணிமுடியொடுங்குறைய
அலங்கல்வாள்கொடுகாலகேயரைக்கொன்றதற்பின்
இலங்கைவேந்தனென்றுரைத்தலுமிடியுண்டவரவின்
கலங்குமாலினுந்தானவர்தேவியர்கருப்பம். (நசு)

குரண்டமாடுநீளகையிளைத்துறைகுபரன்
*திரண்டமாடுந்தன்றிருவொடுநியமுமிழந்து
புரண்டுமான்றிரள்புலிகண்டதாமெனப்போனன்
இரண்டுமானமுமிலங்கைமாநகரமுமிழந்து. (நஎ)

புண்ணுஞ்செய்ததுழுதுகெனப்புறங்கொடுத்தோடி
உண்ணுஞ்செய்கையிற்றசமுகக்கூற்றந்தன்னுயிர்மேல்
நண்ணுஞ்செய்கையதனக்கொடுநாடொறுந்தன்னுள்
எண்ணுஞ்செய்கையனந்தகன்றன்பதமிழந்தான். (நஅ)

இருணன்காசறவெழுகதிரவனிற்கவென்றும்
அருணன்கண்களுங்கண்டிலாவிலங்கைபண்டமரில்
பருணன்றன்பெரும்பாசமும்பறிப்புண்டுபயத்தால்
வருணனுய்ந்தனன்மகரநீர்வெள்ளத்துமறைந்து. (நக)

என்றுலப்புறச்சொல்லுகேனிராவணனென்னும்
குன்றுலப்பினுமுலப்பிலாத்தேளினன்கொற்றம்
இன்றுலப்பினுநாளையேயுலப்பினுஞ்சிலநாள்
சென்றுலப்பினுநினக்கன்றிப்பிறர்க்கென்றுந் †தீரான். (சுo)

விபீடணன் அனுமன்றிறமுரைத்தல்.

ஈடுபட்டவரெண்ணிலர்தோரணத்தெழுவால்
பாடுபட்டவர்படுகடன்மணலினும்பலரால்
சூடுபட்டதுகொடிநகரடுபுலிதுரந்த
ஆடுபட்டதேபட்டனரதுமலைரக்கர். (சுக)

காய்த்தவக்கணத்தரக்கர்தமுடலுகுகறைத்தோல்
நீத்தவெக்கரினிறைந்துளகருங்கடனெருப்பின்
வாய்த்தவக்கனைவரிசிலைமலையொடும்வாங்கித்
தேய்த்தவக்குழம்புலர்ந்திலவிலங்கையிற்றெருவில். (சுஉ)

சேனைக்காவலரோரைவருளர்பண்டுதேவர்
வானைக்காவலுமானமுமாற்றியமறவர்

---

* இரண்டுமாடும் என்றும் பாடம்.

† தீரான் – அழியான்.

தானைக்கார்வருங்கடலொதெந்தமரொடுந்தாமும்
யானைக்காற்பட்டசெல்லெனவொல்லையினவிந்தார். (சுஙூ)

எங்குலத்தவரொண்பதினாயிரானிறைவர்
கிங்கரப்பெயர்கியனதோற்றத்தர்கிளர்ந்தார்
வெங்கரத்தினுங்காலினும்வாலினும்வீக்கிச்
சங்கரற்கழிமுப்புரத்தவரெனச்சமைந்தார். (சுசு)

வெம்புமாகடற்சேனைகொண்டெதிர்பொரவெகுண்டான்
அம்புமாயிரத்தாயிரமிவன்புயத்தழுத்தி
உம்பர்வானகத்தொருதனிநமனைச்சென்றுற்றான்
சம்புமாலியும்வில்லிறற் * சுருக்குண்டதலைவ. (சுஙு)

சொன்னமாமதிலிலங்கையின்பரப்பிதுதுகைத்துச்
சின்னமானவர்கணக்கிலர்நீர்களேதெரிதிர்
இன்னமாருளர்வீரர்மற்றிவன்சுடவெரிந்த
வன்னமாநகரவிந்தக்குருதியாலகன்று. (சுசு)

இராவணனேழுநாள் விசும்பிடை இருந்தான்.

விலங்கல்வெந்தவாவேறினிவிளம்புவதெவனே
அலங்கன்மாலையுஞ்சாந்தமுமன்றுதானணிந்த
கலன்களோடுமெச்சாத்தியதுகிலொடுங்கதிர்வாள்
இலங்கைவேந்தனுமேழுநாள்விசும்பிடையிருந்தான். (சுஎ)

பிரமன் இலங்கையை முன்போல வியற்றினன்.

நொதுமற்றிண்டிறலரக்கனதிலங்கையையுவன்றேறன்
அதுமற்றவ்வழியரணமும்பெருமையுமறைந்தேதன்
இதுமற்றவ்வழியெய்தியதிராவணனேவப்
பதுமத்தண்ணலேபண்டுபோலந்நகர்படைத்தான். (சுஅ)

காந்துமானையிற்கரன்முதல்வீரருங்கவியின்
வேந்துமென்றிவர்விளிந்தவாகேட்டன்றுவிலங்கல்
தீந்தவாகண்டுமரக்கரைச்செருவிடைமுருக்கிப்
போந்தவாகண்டுநாணிங்குப்புகுந்ததுபுகழோய். (சுகூ)

கேள்கொண்மேலையான்கிளத்தியபொருளைலாங்கேட்டான்
வாள்கொணேணக்கியைப்பாக்கியம்பழுத்தனமயிலை
நாள்கள்சாலவுநீங்கலினலங்கெடமெலிந்த
தோள்கள்வீங்கித்தன்றூதனைப்பார்த்திவைசொன்னன். (எ0)

---

* சுருக்குண்டு - உயிர்குறைந்து.

இராமனதுமனைப் புகழ்தல்

கூட்டிரைர்படைபாகத்தின்மேற்படக்கொன்றாய்
ஊட்டிரையெரியூர்முற்றுமினியங்கொன்றுண்டோ
கேட்டவாற்றிறற்கினிமொழிச்சீதையைக்கிடைத்தும்
மீட்டிலாததென்விற்றொழில்காட்டக்கொல்வீர. (எக)

தின்செய்தோள்வலிநிரம்பியவிலங்கையைநேர்ந்தோம்
பின்செய்தாஞ்சிலவனையினிப்பீடின்றுபெறுமோ
பொன்செய்தாளிரையப்போர்ப்பெரும்படையொடும்புக்கோம்
என்செய்தாமென்றுபெரும்புகழ்துவாமிருந்தோம். (எஉ)

என்னதாக்கியவலியொடவ்விராவணன்வலியும்
உன்னதாக்கினபாக்கியமுருக்கொண்டதாப்பாய்
முன்னதாக்கியமூவுலகாக்கியமுதலோன்
பின்னதாக்கியபதினக்காக்கினென்பெற்றாய். (எங)

என்றுகூறலுமெழுந்திருநிலனுறவிறைஞ்சி
ஒன்றும்பேசலனிணின்வணங்கியவுரமோன்
நின்றவானரத்தலைவருமராசுமந் * நெடியோன்
வென்றிகேட்டலும்வீடுபெற்றுரெனவியந்தார். (எசு)

ரு-வது, இலங்கைகேள்விப்படலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-ருஎரு.

சு-வது, வருணனைவழிவேண்டுபடலம்.

தொடக்குமென்னினிவ்வுலகாருமூன்றையுந்தோளால்
அடக்கும்வண்ணமுமழித்தலுமொருபொருளன்றால்
கிடக்கும்வண்ணவெங்கடலினக்கிளர்பெருஞ்சேனை
கடக்கும்வண்ணமுமெண்ணுதியெண்ணுதல்கற்றாய். (க)

கரந்துநின்றநின்றன்மையையதுசெலக்கருதும்
பரந்ததுன்றிருக்குலமுதற்றலைவராற்பரிவாய்
வரந்தரும்மிந்தமாக்கடல்படைசெலவழிவே
றிரந்துவேண்டுதியெறிதிரைப்பரவையையென்றான். (உ)

---

* நெடியோன்என்றது ஈண்டு அணுமனை.

நன்றிலங்கையர்நாயகன்மொழியெனநயந்தான்
ஒன்றுதன்பெருந்துணைவரும்புடைசெலவுரமேவான்
சென்றுவேலையைச்சேர்தலும்விசும்பிடைச்சிவந்த
குன்றின்மேனின்றுகுதித்தனபகலவன்குதிரை. (ஈ)

கொழுங்கதிர்ப்பகைக்கோளிருணீங்கியகொள்கை
செழுஞ்சுடர்ப்பனிக்கலையெலாநிரம்பியதிங்கள்
புழுங்குவெஞ்சினத்தஞ்சனப்பொறிவரியரவம்
விழுங்கிநீங்கியதாத்ததுவேலைசூழ்ஞாலம். (உ)

இராமன் புல்லணையிற்கிடந்து வருணமந்திரஞ் செபித்தல்.

தருணமங்கையைமீட்பதோர்தெறிதருகென்னும்
பொருணயந்துநன்னூனெறியடக்கியபுல்லில்
கருணையங்கடறுயின்றனன்கருங்கடலேகி
வருணமந்திரமெண்ணினன்விதிமுறைவணங்கி. (ஊ)

பூழிசென்றுதன்றிருவுருப்பொருந்தவம்பொறைதீர்
வாழிவெங்கதிர்மணிமுகம்வருடவும்வளர்ந்தான்
ஊழிசென்றனவொப்பனவொருபகலவையோர்
எழுசென்றனவந்திலனெறிகடற்கிறைவன். (எ)

இராமன் வருணன் வராமையாற் சீற்றங்கொள்ளுதல்.

ஊற்றமீக்கொண்டமேலையாணுண்டிலையென்னும்
மாற்றமீக்கவும்பெற்றிலம்யாமெனுமனத்தால்
எற்றமீக்கொண்டபுனலிடையெரிமுளைத்தன்னச்
சீற்றமீக்கொண்டெழுந்தனதாமரைச்செங்கண். (ஏ)

மாண்டவில்லிழந்தயருநான்வழிதனைவணங்கி
வேண்டவில்லையென்றெளிந்ததாமெனமனம்வெதும்பி
நீண்டவில்லுடைநெடுங்கனலுயிர்ப்பொடுநெடுநாண்
பூண்டவில்லெனக்குனித்தனகொழுங்கடைப்புருவம். (ஐ)

ஒன்றுவேண்டலராயினுமொருவர்பாலொருவர்
சென்றுவேண்டுவரேலவர்சிறுமையிற்றீரார்
இன்றுவேண்டியதறிகடனெறிதனைமறுத்தால்
நன்றுநன்றெனநகையொடும்புகையுகநக்கான். (ஒ)

பாரநீங்கியசிலையினைராவணன்பறிப்பத்
தாரநீங்கியதன்மையனுதலிற்றகைசால்
வீரநீங்கியமனிசனென்றிகழ்ச்சிமேல்விளைய
ஈரநீங்கியதெறிகடலாமெனவிசைத்தான். (ஓ)

புரந்துகோடலும்புகழொடுகோடலும்பொருது
துரந்துகோடலுமென்றிவைதான்மையிற்றொடர்ந்த
இரந்துகோடலுளியற்கையுந்தருமமுமெஞ்சக்
கரந்துகோடலேகன்றினிற்றதன்கழறி. (கக)

கானிடைப்புகுந்திருங்கணிகாயொடுநுகர்ந்த
ஊனுடைப்பொறையுடம்பினனென்றுகொண்டுணர்ந்த
மீனுடைக் * கடற்பெருமையும்வில்லொடுநின்ற
மானுடச்சிறுதன்மையுங்காண்பரால்வாசேனர். (கஉ)

ஏதமஞ்சினானிரந்தீதெயனிதனைவிகழ்ந்த
ஓதமஞ்சிறைடரண்டம்வெங்தாருபொடியாகப்
பூதமஞ்சும்வந்தஞ்சலித்துயிர்கொண்டுபொருமப்
பாதமஞ்சலர்செஞ்செவேபடர்வரென்படைஞர். (கங)

மறுமைகண்டமெய்ஞ்ஞானியர்ஞாலத்துவரினும்
வெறுமைகண்டபின்யாவரும்யாரெனவிரும்பார்
குறுமைகண்டவர்கொழுங்கனலென்னினுங்கூசார்
சிறுமைகண்டவர்பெருமைகண்டல்லதுதேதுறார். (கச)

திருதியென்பதான்றிழிதராழுழியிற்சினவும்
பருதிமண்டிலமெனப்பொலிமுகத்தினன்பலகால்
தருதிவில்லெனுமளவையிற்றம்பியும்வெம்பிக்
குருதிவெங்கனலுமிழ்கின்றகண்ணினன்கொடுத்தான். (கஞ)

வாங்கிவெஞ்சிலவாளியின்மற்றொருவேலை
வீங்குதோள்வலம்வீக்கினன்கோதையைவிலால்
தாங்கிநாணினைத்தாக்கினன்றூக்கியதமரம்
ஓங்குமுக்கணன்றேவியைத்தீர்த்துளதூடே (கசு)

மாரியின்பெருந்துளியினும்வரம்பிலவடித்த
சீரியன்றவையெவற்றினுஞ்சீரியதெரிந்து
பாரியங்கிரும்புனலெலாமுடிவினிற்பருகும்
சூரியன்கதிரினையனசுடுசரந்துரந்தான். (கஎ)

பெரியமால்வரையேழினும்பெருவலிபெற்று
வரிகொள்வெஞ்சிலவளர்பிறையாமெனவாங்கித்
திரிவுநிற்பனயாவையுமுடிவினிற்றீக்கும்
எரியின்மும்மடிகொடியனசுடுசரமெய்தான். (கஅ)

மீனுநாகமும்விண்டொடுமேலுகளுந்விறகாய்
ஏனைநிற்பனயாவையுமேலெரியெய்தப்

---

* கடற்பெருமையும்-கடற்கரசனை வருணன் பெருமிதமும்.

பேனநீர்நெடுநெய்யெனப்பெய்கணைநெருப்பால்
கூனையங்கியின்குண்டமொத்ததுகடற்குட்டம். (கூ)

பாழிவன்னெடுங்கொடுஞ்சிலவழங்கியபகழி
எழுவேலையுமெரியொடுபுகைமடுத்தேதகி
ஊழிவெங்கனற்கொழுந்துகளுருத்தெழுந்தோடி
ஆழிமால்வரைக்கப்புறத்திருளையுமவித்த. (உ0)

மருமதாரையினெரியுண்டமகங்கண்மயங்கிச்
செருமவானிடைக்கற்பகமரங்களுந்தீய
நிருமியாவிட்டநெடுங்கணைபாய்தலினெருப்போ
டுருமுவீழ்ந்தெனச்சென்றனகடற்றுளியும்பர். (உ.க)

கூடும்வெம்பொறிக்கொடுங்கனலுருடர்ந்தனகொளுந்த
ஓடுமேகங்கள்பொரிந்திடையுதிர்ந்தனவும்பர்
ஆடுமங்கையர்கருங்குழல்விளர்த்தனவளக்கர்
கோடுதீந்தெழக்கொழும்புகைப்பிழம்புமீக்கொள்ள. (உ உ)

நிமிர்ந்தசெஞ்சரநிறந்தொறும்படுதலுநெய்த்தோர்
உமிழ்ந்துலர்ந்தனமகரங்களுலப்பிலவுருவத்
துமிந்ததுண்டமும்பலபடத்துரந்தனதொடர்ந்து
திமிங்கிலங்களுந்திமிங்கிலகிலங்களுஞ்சிதறி. (உ ங)

நீறுமீச்செலநெருப்பெழப்பொருப்பெலாமெரிய
நூறுமாயிரகோடியுங்கடுங்கணை நுழைய
ஆறுகீழ்ப்படவளறுபட்டழுந்தியவளக்கர்
சேறுதீந்தெழக்காந்தினசேடன்றன்சிரங்கள். (உ ச)

மொய்த்தமீன்குலமுதலறமுருங்கினமொழியில்
பொய்த்தசான்றவன்குலமெனப்பொருகணையெரிய
உய்த்தகூம்புடைநெடுங்கலமோடுவகடுப்பத்
தய்த்தவம்பொடுந்திரிந்தனசாலமீன்சாலம். (உ ஞ)

சிந்தியோடியகுருதிவெங்கனல்களேசெறிய
அந்திவானகங்கடித்ததவ்வளப்பருமளக்கர்
பந்திபந்திகளாய்நெடுங்கடுங்கணைபடர
வெந்துதீந்தனகரிந்தனபொரிந்தனசிலமீன். (உ சு)

வய்யநாயகன்வடிக்கணை குடித்திடவற்றி
அய்யநீருடைத்தாய்மருங்கருங்கனன்மண்டக்
கய்கலந்தெரிகருங்கடல்காரகல்கடுப்ப
வெய்யநெய்யிடைவேவனவொத்தனசிலமீன். (உ எ)

குணிப்பருங்கொடும்பகழிகள்குருதிவாய்மடுப்பக்
கணிப்பரும்புனல்கடையுறக்குடித்தலிற்காந்து
மணிப்பருந்தடங்குப்பைகண்மறிகடல்வெந்து
தணிப்பருந்தழல்சொரிந்தனபோன்றனதயங்கி. (உஅ)

எங்கும்வெள்ளிடைமடுத்தலினிழுதுடையினமீன்
சங்கமுங்கறிகிழங்கெனவிடையிடைத்தழுவி
அங்கம்வெந்துபோளற்றிடையடுக்கியகிடந்த
பொங்குநண்ணெடும்புனலறப்பொரித்தனபோன்ற. (உக)

அதிரும்வெங்கணையொன்றையொன்றடார்ந்தெரியுய்ப்ப
வெதிரின்வன்னெடுங்காவெனவெந்தனமீனம்
பொதுவின்மன்னுயிர்க்குலங்களுந்துணிந்தனபொழிந்த
உதிரமுங்கடற்றிரைகளும்பொருவனவொருபால். (உ0)

அண்ணல்வெங்கணையறுத்திடத்தெறித்ததழுந்தளக்கர்
பண்ணைவெம்புனல்படப்படநெருப்பொடும்பற்றி
மண்ணில்வேருறப்பற்றியநெடுமரமற்றும்
எண்ணெய்தோய்ந்தனவெரிந்தனகிரிக்குலமெல்லாம். (உக)

தெய்வநாயகன்றெரிகணைதிசைமுகத்தெறுவன்
வெய்விதாமெனப்பிழைப்பிலமனத்திலுங்கடுகெ
வெய்யவன்நெருப்பிடையிடைபொறிந்தெழுவெறிநீர்ப்
பொய்கைதாமரைபூத்தெனப்பொலிந்தனபுனரி. (உஉ)

செப்பின்மேலவர்சினுமதுசிறப்பாதல்
தப்புமேயதுகண்டனமுவரியிற்றணியா
உப்புவேலையென்றுலகுறுபெரும்பழிநீங்கி
* அப்புவேலையாய்நிறைந்ததுகுறைத்தேதாவளக்கர். (உக)

தாரையுண்டபோரண்டங்களடங்கலுந்தானே
வாரியுண்டருள்செய்தவற்கிதுவொருவலியோ
பாரையுண்பதுபடர்புனலப்பெரும்பரவை
நீரையுண்பதுநெருப்பெனுமப்பொருணிறுத்தான். (உச)

வேறு.

மங்கலம்பொருந்தியதவத்துமாதவர்
கங்குலும்பகலுமக்கடலுள்வைகுவார்
அங்கம்வெந்திலரவனடிகளெண்ணலால்
பொங்குவெங்கனலெனும்புனலிற்போயினர். (உஙி)

தென்றிசைகுடதிசைமுதலதிக்கெலாம்
தின்றியபெரும்பகைப்படலஞ்சுற்றலால்

---

* அப்புவேலை — வாய்க்கால்

கன்றியநிறத்தனகதிரவன்பரி
நின்றனசென்றிலநெறியினீங்கின. (நூசு)

பிறிந்தவர்க்குறுபொருளுணரும்பெற்றியோர்
அறிந்திருந்தறிந்திலரேனயராமெனச்
செறிந்ததம்பெடைகளைத்தேடித்தீக்கொள
மறிந்தனகரிந்தனவானப்புள்ளெலாம். (நூஎ)

கமையறுகருங்கடல்கனவிகைபரந்
தமைவணவொத்தபோதறையவேண்டுமோ
சுமையுறுபெரும்புகைப்படலஞ்சுற்றலால்
* இமையவரிமைத்தனர்வியர்ப்புமெய்திணர்: (நூஅ)

பூச்செலாதவணைடபோல்கிலாமையால்
ஏச்செலாமெய்தியவண்ணம்யாவையும்
தீச்செலாநெறிபிறிதின்மையாற்றிசை
மீச்செலாபுனலவன்புகழின்வீந்ததால். (நூக)

பம்புறுநெடுங்கடற்பறவையாவையும்
உம்பரிற்செல்லலுற்றுருகிவீழ்ந்தன
அம்பரமம்பரத்தேதகலாற்றல
இம்பரிலுதிர்ந்தனவெரியுமெய்யன. (சூ0)

பட்டனபடப்படப்படாதபுட்குலம்
சுட்டுவந்தெரிக்குலப்படலஞ்சுற்றலால்
இட்டுழியறிகிலவிரியல்போவன
மூட்டையென்றெடுத்தன † கடுத்தமுத்தெலாம். (சூக)

வள்ளலைப்பாவிகாண்மனிசனென்றுகொன்
டெள்ளலுற்றறைந்தனமெண்ணிலாமென
வெள்ளிவெண்பற்களைக்கிழித்துவிண்ணுறத்
துள்ளலுற்றிரிந்தனகுரங்குசூழ்ந்தில. (சூஉ)

தாநெடுந்தீமைகளுடையதன்மையார்
மாநெடுங்கடலிடைமறைந்துவைகுவார்
தூநெடுங்குருதிவேலவுணர்துஞ்சினர்
மீநெடுங்கிரியெனமிதந்துவீங்கினர். (சூங)

தசும்பிடைவிரிந்தனவென்னுந்தாரைய
பசும்பொனின்விமானங்களுருகிப்பாய்ந்தன
‡ அசும்பறவறந்தனவானவாறெலாம்
விசும்பிடைவிளங்கியமீனும்வெந்தவால். (சூச)

---

* இமையவர்-தேவர். † கடுத்த-மூட்டையையொத்த.
‡ அசும்பற-ஊற்றில்லாதாக.

செறிவுறுசெம்மையதீயையோம்புவ
நெறியுறுசெலவினதவத்தினீண்டன
உறுசினமுறப்பலவுருவுகொண்டன
குறுமுனியெனக்கடல்குடித்தகூர்ங்கணை. (சஞ)

மோதலங்கனைகடன்முழங்கத்தியினல்
பூதலங்காவொடுமெரிந்தபொன்மதில்
வேதலுமிலங்கையுமீளப்போயின
தூதன்வந்தானெனத்துணுக்கங்கொண்டதால். (சசு)

அருக்கனிலொளிவிடுமாடகக்கிரி
உருக்கெனவுருகினவுதிரந்தாய்ந்தன
முருக்கெனச்சிவந்தனமுரியவெவ்வன
கரிக்குவைநிகர்த்தனபவளக்காடெலாம். (சஎ)

பேருடைக்கிரியெனப்பெருத்தமீன்களும்
ஓரிடத்துயிர்தரித்தொதுங்கநிற்றில
நீரிடைப்புகுஞ்சிலநெருப்புநன்றெறப்
பாரிடைக்குதித்தனபதைக்குமெய்யன. (சஅ)

சுருள்கடற்றிரைக்ளாத்தொலையவுண்டனல்
பருகிடப்புனலிலபகழிபாரிடம்
மருள்கொளப்படர்வனநாகர்வைப்பையும்
இருள்கெடச்சென்றுளவிரவிபோல்வன. (சக)

கரும்புறக்கடல்களோடுலகங்காய்ச்சிய
இரும்புறச்செல்வனவிழிவெந்தீழுற
அரும்புறத்தண்டத்தையுருவியப்புறம்
பெரும்புறக்கடலையுந்தொடர்ந்துபின்செல்வ. (ஙo)

நிடறிறந்துகுமணித்திரள்கள்சேணிலம்
உடறிறந்துதிரம்வந்துகுவபோன்றன
கடறிறந்தெங்கணும்வற்றவக்கடல்
*குடறிறந்தனவெனக்கிடந்தகோளரா. (ஙக)

ஆழியிற்புனலறமணிகளட்டிய
பேழையிற்பொலிந்தனபரணவேறுறப்
பூழையிற்பொருகணையுருவப்புக்கன
மூழையிற்பொலிந்தன †மூரலும்வெள்வளோ. (ஙஉ)

கின்றுதூருயிரம்பகழிகீட்டலால்
குன்றுதூருயிரங்கோடியாயின

---

* குடறிறந்தனவென-குடல்வெளிப்பட்டாங்கு.

† மூரலும்-ஒலிக்கின்ற.

சென்றுதேய்வுறுவரோபுலவர்சீறினும்
ஒன்றுநூறாயினவுவரிழுத்தெலாம். (நிக)

சூடுபெற்றையனேதொலக்குமன்னுயிர்
வீடுபெற்றனவிடைமிடைந்தவேணுவின்
காடுபெற்றியபெருங்கனலிகைபரந்
தோடியுற்றதுநெருப்புவரிநீரெலாம். (நிச)

காலவான்கடுங்கணைசுற்றுங்கவ்வலால்
நீலவான்றுகிலினைநீக்கிப்பூநிறக்
கோலவான்களிநெடுங்கூடறைசுற்றிளள்
போலமாநிலமகள்பொலிந்துதோன்றிளள். (நிந)

கற்றவர்கற்றவருணர்வுகாண்கிலாக்
கொற்றவன்படைக்கலங்குடித்தவேலவிட்
டெற்றுயிர்படைத்தெழுந்தோடலுற்றதால்
மற்றொருருகடல்புகவடவைத்தியரோ. (நிசு)

வாழியருலகினைவளைத்துவாணுறச்
சூழிரும்பெருஞ்சுடர்ப்பிழம்புதோன்றலால்
ஊழியினுலகெலாமுண்ணவேவாங்கிய
ஆழியிற்பொலிந்ததவ்வாழியன்னநாள். (நிள)

ஏனையரொண்ணவேறுலகினீண்டினர்
ஆனவர்செய்தனவறையவேண்டுமோ
மேனிமிர்ந்தெழுகனல்வெதுப்பமீதுபோய்
வானவர்மலரயனுலகின்வைகினர். (நிஅ)

* இடுக்கினியியம்புவலென்னையிவ்வழி
முடுக்குவென்வருணனெனையென்னமூண்டெழு
தடுக்கரும்வெகுளியான்சதுமுகன்படை
தொடுத்தனனமரருந்துணுக்கமெய்திளர். (நிக)

மழைக்குலங்கதறினவருணன்வாயுலர்ந்
தழைத்தனனுலகமுமடைத்தவாறெலாம்
இழைத்தனநெடுந்திசையாதும்யாரினிப்
பிழைப்பிலரென்பதோர்பெரும்பயத்திளல். (கூ0)

வேறு.

அண்டமூலத்துக்கப்பாலாழியுங்கொதித்ததேதழு
தெண்டிரைக்கடலின்செய்கைசெப்பியென்றேறவன்சென்னி

---

* இடுக்கு - வருத்தம்.

பண்டைநாளிருந்தகங்கைகங்கையும்பதைத்தாள்பார்ப்பான்
குண்டிகையிருந்தநீருங் * குளுகுளுகொதித்ததன்றே. (சுக)
இரக்கம்வந்ததிர்ந்தகாலத்துலகெலாமீன்றுமீளக்
கரக்குநாயகனைத்தானுமுணர்ந்திலன்சிற்றங்கண்டும்
வரக்கருதாதுதாழ்த்தவருணனின்மாறுகொண்டான்
அரக்கரேயல்லரென்னைவறிஞருமலக்கணுற்றார். (சுஉ)

உற்றிருதனியேதானேதன்கணையுலகமெல்லாம்
பெற்றவன்முனியப்புக்கானவினிப்பிழைப்பதெங்ஙன்
குற்றமொன்றிலாதோர்மேலுங்கோள்வரக்குறுகுமென்னை
மற்றையபூதமெல்லாம்வருணனைவதமாதோ. (சுங)

இராமனைதேர வருணனெய்துதல்.

எழுசுடர்ப்படலையோடிரும்புகைநிரம்பியெங்கும்
வழிதெரிவறிவிலாததோக்கினன்வருணனென்பான்
அழுதழிகண்ணனென்பாலுருகியநெஞ்சனஞ்சித்
தொழுதெழுகையனெய்திற்றேரன்றினன்வழுத்துஞ்சொல்லான். (சுச)

நீயெனைநினைந்ததன்மைநெடுங்கடன்முடிவினின்றேறன்
ஆயினனறிந்திலனென்றண்ணலுக்கயிர்ப்புநீங்கக்
காயெரிப்படலைசூழ்ந்தகருங்கடற்றாங்கத்தூடே
தீயிடைநடப்பான்போலச்செறிபுனற்கிறைவன்சென்றான். (சுஙு)

வந்தனனென்பமண்ணைமறிகடற்கிறைவன்வாயில்
சிந்தியமொழியன்றீந்தசென்னியன்றிகைத்தநெஞ்சன்
வெந்தழிந்துருகுமெய்யன்விழுப்புகைப்படலம்விம்ம
அந்தரினலமந்தஞ்சித்துயருழந்தலக்கணுற்றான். (சுசு)

நவையறுமுலகிற்கெல்லாநாயகநீயேசீறின்
கவையகின்சரணமல்லாற்பிறிதான்றுகண்டதுண்டோ?
இவையுனக்கரியவோதானெனக்கெனவவிவேறுண்டோ?
அவையகின்னவயமென்னைவதித்ததித்தாற்றுகின்றான். (சுஎ)

இராமனை வருணன்துதித்தல்.

ஆழிநீயனலுநீயேயல்லைவையெல்லாநீயே
ஊழிநீயுலகுநீயேயவற்றுறைபலுயிருநீயே
வாழியாயடியேனின்னைமறப்பனேலவையங்குசெந்தீச்
சூழுறவுலந்துபோனென்காத்தருள்சுருதிமூர்த்தி. (சுஅ)

காட்டுவாயுலகங்காட்டிக்காத்தலைகடையிற்செந்தீ
ஊட்டுவாயுண்பாய்நீயேயுனக்குமொண்ணுததுண்டோ?

---

* கொளகொள என்றும் பாடம்.

தீட்டுவான்பகழியொன்றூலுலகங்களெலையுந்தீய
வீட்டுவானினையிறையேற்கித்தனேவேண்டுமோதான். (கூக)

சண்டவான்கிரணவாளாற்றயங்கிருட்காடுசாய்க்கும்
மண்டிலத்துறையுஞ்சோதிவள்ளலேமறையின்வாழ்வே?
பண்டைதான்முகனேயாதிச்சராசரத்துள்ளபள்ளப்
புண்டரீகத்துலைகும்புராதனே? போற்றிபோற்றி. (எ0)

கள்ளமாயுலகங்கொள்ளுஞ்சூணையான்மறையிற்கூறும்
எள்ளலாகாதமூலத்தியாதுக்குமுதலாயுள்ள
வள்ளலேகாத்தியென்றமாகரிவருத்தந்தீரப்
புள்ளின்மேல்வந்துதோன்றும்புராதனே? போற்றிபோற்றி. (எக)

அன்னைநீயத்தனீயையல்லவையெல்லாநீயே
பின்னுநீமுன்னுநீயேபேறுநீயிகழ்வுநீயே
என்னைநீயிகழ்ந்ததென்றதெங்ஙனேயீசனேய
உன்னைநீயுணராய்நாயெனைங்ஙனேமுணர்வேனுன்னை. (எஉ)

பாயிருள்சீக்குந்தெய்வப்பரிதியைப்பழிக்குமாலை
மாயிருங்கரத்தான்மண்மேலடியுறையாகவைத்துத்
தீயனசிறியோர்செய்தாற்பொறுப்பதுபெரியோர்மேற்றே
ஆயிரநாமத்தையாசரணமென்றடியில்வீழ்ந்தான். (எங)

இராமன் கோபமாறுதல்.

பருப்பதம்வேவதென்னப்படரொளிபடராநின்ற
உருப்பெறக்காட்டிநின்றியானுனக்கபயமென்ன
அருப்பறப்பிறந்தகோபமாறினனிருவாற்றல்
நெருப்புறப்பொங்கும் * வெம்பானீரற்றதன்னீரான். (எச)

ஆறினமஞ்சனுன்பாலளித்தனமபயமன்பால்
ஈறிலாவணக்கஞ்செய்தியாமிரந்திடவெய்தாதே
சீறுமாகண்டிவந்ததிறத்தினைத்தெரிவதாகக்
கூறுநீயறியவென்றனன்வருணனுந்தாழுதுகூறும். (எடு)

பார்த்தனிற்பொறையின்மிக்கபத்தினிக்குற்றபண்பு
வார்த்தையினறிந்ததல்லாற்றேறவர்பால்வந்திலேனால்
தீர்த்தனின்னுணேயழாஞ்செறிதிரைக்கடலின்மீனின்
போர்த்தெழில்விலக்கப்போனெனறிந்திலேன்புகுந்ததென்றும். (எசு)

என்றலுமிரங்கியையனித்திறனிற்கவிந்தப்
பொன்றலில்பகழிக்கப்பாலிலக்கமென்புகறியென்ன

---

* வெம்பால்-இனிமையானபால்.

நன்றெனவருணன்யானுமுலகமுநலிவுதீர்ந்தாம்
குன்றெனவுயர்ந்ததோளாய்கூறுவலென்றுகூறும். (எஎ)

இராமன் கணைக்குவருணன் இலக்குணைத்தல்.

மன்னவமருகாந்தாரமென்பதோர்தீவின்வாழ்வார்
அன்னவர்சதகோடிக்குமேலுளாரவுணராயோர்
தின்னவேயுலகமெல்லாந்தீந்தனவெனக்குந்தியார்
மின்னுமிழ்கணையெவெய்யோர்மேற்செலவிடுதியென்றான். (எஅ)

நேடிநூறெறிந்துளோர்க்குமுணர்விற்குநிமிரநின்றான்
கோடிநூறுயதீயவவுணரைக்குலங்களோடும்
ஓடிநூறென்றுவிட்டாரேனுரிமையொடுங்காமுன்னம்
பாடிநூறுகநூறிமீண்டதப்பகழித்தெய்வம். (எக)

ஆய்வினையுடையராகியறம்பிழையாதார்க்கெல்லாம்
ஏய்வனநலனேயன்றியிறுதிவந்தடைவதுண்டோ?
மாய்வினையியற்றிமுற்றுமவருணன்மேல்வந்தசீற்றம்
தீய்வினையுடையார்மாட்டேதிங்கினைச்செய்ததன்றே. (அ0)

பாபமேயியற்றிஞரைப்பன்னெடுங்காதமோடித்
* தாபமேபெருகும்வண்ணமெரியெழச்சுட்டதன்றே
தீபமேயனையஞானத்திருமறைமுனிவன்செப்பும்
சாபமேயொத்ததம்புதருமமேவலியதம்மா. (அக)

மொழியுனக்கபயமென்றுயாதலான்முனிவுதீர்ந்தேதன்
பழியெனக்காகுமென்றுபாதகர்பரவையென்னும்
குழியினைக்கருதிச்செய்த † குமண்டையைக்குறித்துநீங்க
வழியினைத்தருதியென்றான்வருணனைநோக்கிவள்ளல். (அஉ)

ஆழுமமகலந்தானுமளப்பரிதெனக்குமைய
எழுவையடுக்கினின்றவுலகுக்குமெல்லையில்லை
வாழியாய்வற்றிநீங்கில்வரம்பிலகாலமெல்லாம்
தாழுநின்சேனையுள்ளந்தளர்வுறுந்தவத்தின்மிக்காய். (அங)

கல்லெனவலித்துநிற்பிற்கணைக்கிலவுயிர்களெல்லாம்
ஒல்லையினுலந்துவீயுமிட்டதான்றழுகாவண்ணம்
எல்லையில்காலமெல்லாமேந்துவெனெனிதினெந்தாய்
செல்லுதிசேதுவென்றான்றியற்றியென்சிரத்தின்மேலாய். (அச)

---

* தாபம்-புகை, † குமண்டையை-குற்றத்தினை.

நன்றிதுபுரிதுமன்றேநளிகடற்பெருமைநம்பால்
இன்றிதுதீருமென்னிலெளிவரும்பூதமெல்லாம்
குன்றுகொண்டடுக்கிச்சேதுகுயிற்றுதிரென்றுகூறிச்
சென்றனனிருக்கைநோக்கிவருணனுமருளிற்சென்றான். (அநி)

சு - வது, வருணனைவழிவேண்டுபடலம் - முற்றிற்று.

ஆஉ திருவிருத்தம் - சுகசு.

எ-வது, சேதுபந்தனப்படலம்.

அளவறுமறிஞரோடரக்கர்கோமகற்
கிளவலுமினிதுடனிருக்க * வெண்ணினைன்
விளைவனசெய்வனமுடிக்கவேண்டுவான்
நளன்வருகென்றனன்கவிக்குநாயகன். (க)

வந்தனன்வானரத்தச்சன்மன்னநின்
சிந்தனையென்னனைச்செறிதிரைக்கடல்
பந்தனைசெய்குதல்பணிநமக்கென
நிந்தனையிலாதவன்செய்யநேர்ந்தனன். (உ)

காரியங்கடலினையடைத்துக்கட்டலே
சூரியன்காதலேசொல்லியென்பல
மேருவுமணுவுமோர்வேறுறுவகை
எருறவியற்றுவென்கொணர்திபென்றனன். (ங)

இளவலுமிறைவனுமிலங்கைவேந்தனும்
அளவறுகுலத்தராசுமல்லவர்
வளைதருங்கருங்கடலடைக்கவும்மனத்
† தளமலிசேனையைச்சாம்பன்சாற்றினன். (ச)

கருவரைகாதங்கள்கணக்கிலாதன
இருகையிற்றோள்களிற்சென்னியேந்தின
ஒருகடலடைக்கமற்றொழிந்தவேலைகள்
வருவனவாமெனவந்தவானரம். (ஞ)

---

* எண்ணினைன்-ஆலோசனைசெய்தான்.

† தளமலி-கூட்டத்தினமிகுந்த.

பேர்த்தனமலைசிலபேர்க்கப்பேர்க்கநின்
றீர்த்தனசிலசிலசென்னியேந்தின
தூர்த்தனசிலசிலதூர்க்கத்தூர்க்கநின்
ஞர்த்தனசிலசிலவாடிப்பாடின. (கூ)

காலிடையொருமலையுருட்டிக்கைகளின்
மேலுடைமலையினைவாங்கிவிண்டொடும்
சூலிடைமழைமுகில்சூழ்ந்துசுற்றிய
வாலிடையொருமலைபீர்த்துவந்தவால். (எ)

மூடுக்கினன்றருகெனமூன்றுகோடியர்
எடுக்கிலுமம்மலையொருகையேந்தியிட்
டடுக்கினன்றன்வலிகாட்டியாழியை
நடுக்கினனளனெனுநலையினீங்கினன். (அ)

மஞ்சினிற்றிகழ்தருமலையைமாக்குரங்
கெஞ்சுறக்கடிதெடுத்தெறியவேகளன்
* விஞ்சையிற்றுங்கினன்சடையன்வெண்ணெயில்
தஞ்சமென்றூர்களைத்தாங்குந்தன்மைபோல். (கூ)

சயக்கவிப்பெரும்படைத்தலைவர்தாள்களால்
முயற்கறைமதிதவழ்முன்றிற்குன்றுகள்
அயக்கலின்முகிற்குலமலறியோடின
இயக்கருமகளிருமிரியல்போயினர். (கூ)

வேருடைநெடுங்கிரிதலைவர்வீசின
ஓரிடத்தொன்றின்மேலொன்றுசென்றுக
நீரிடைநிமிர்பொறிபிறக்கநீண்டவி
தாருடைத்தெருப்பெனவருணனஞ்சினன். (கக)

ஆனிறக்கண்ணெனன்றுருவனங்கையால்
கானிறமலைகொணர்ந்தெறியக்கார்க்கடல்
தானிறமுத்தினந்துவலையோடும்போய்
வானிறமீளுடுமாறுகொண்டவே. (கஉ)

சிந்துரத்தடவரையெறியச்சேணிடை
முந்துறத்தெறித்தெழுமுத்தந் † தொத்தலால்
அந்தரத்தெழுமுகிலாடையாவகன்
பந்தரொத்ததுநெடும்பரிதிவானமே. (கங)

வேணுவினெடுவரைவீசமீமிசை
சேணுறுதிவலையானவந்தசந்துகில்

---

* விஞ்சை - தான்கற்றசிற்பவித்தை.

† தொற்றலால் - என்றும்பாடம்.

பூணுறுமல்குலிற்பொருந்திப்போதலால்
நாணினர்வானவர்நாட்டுநங்கைமார். (கச)

தேனிவர்தடவரைதிரைக்கருங்கடல்
தானிமிர்தரவிடைகுவியத்தள்ளுநீர்
மேனிமிர்திவலைமீச்சென்றுமீடலால்
வானவர்நாட்டினுமழைபொழிந்தவால். (கஞ)

வேறு.

மய்புறுமலைகளோடுமறிகடல்வந்துவீழ்ந்த
வெய்யவாய்மகரம்பற்றவெருவினவிளப்பமேலுள்
பொய்கையினிடங்கர்கவ்வப்புராதருபோற்றியென்று
கய்யெடுத்தழைத்தயானைபோன்றனகளிநல்யானை. (கசு)

அசும்புபாய்தேனும்பூவுமாரமுமகிலுமற்றும்
விசும்பெலாமுலவுந்தெய்வவேரியின்மிடைந்துவிம்மத்
தசும்பெலாம்வாசமூட்டிச்சார்த்தியதண்ணீரென்னப்
பசும்புலாணெறும்வேலபரிமளங்கமழ்ந்ததன்றே. (கள)

தேமுதற்கனியுங்காயுந்தேனிலூறினுந்தெய்வப்
பூமுதலாயவெல்லாமீன்கொளப்பொலிந்தவன்றே
மாமுதற்றருவேவோடொக்கும்வானுயர்மானக்குன்றம்
தாமுதலோடுங்கெட்டாலொழிவரோவண்மைதக்கோர். (கஅ)

மண்ணுறச்சேற்றுட்புக்குச்சுரிகின்றமாலக்குன்றம்
கண்ணிறைபோதுங்காயுங்கனிகளும்பிறவுங்கவ்வி
வெண்ணிறமீன்களெல்லாம்வறியவரென்னமேன்மேல்
உண்ணிறைசெல்வநல்காதொளிக்கின்றவுலோபரொத்த. (கக)

கறங்கெனத்திரியும்வேகக்கவிக்குலங்கதுவவாங்கிப்
பிறங்கிருங்கடலிற்பெய்தபோழ்தத்தும்பெரியபாந்தள்
மறங்கிளர்மானயானைவயிற்றினவாகவாய்சோர்ந்
துறங்கினகேடிற்றூலுமுணர்வரோவுணர்விலாதார். (உ0)

இழையெனத்தகையமின்னினெயிற்றினமுழக்கமெய்தப்
புழையுடைத்தடக்கையொன்றோடொன்றிடைபொருந்தச்சுற்றிக்
கழையுடைக்குன்றின்முன்றிலுருமொடுகலந்தகால
மழையெனப்பொருதவேலமகரமுமத்தமாவும். (உக)

பொன்றினசிறியவாயபுண்ணியம்புரிந்தோர்போலக்
குன்றுகள்குரக்குவீர்குவித்தனர்நெருப்புக்கோப்ப
ஒன்றின்மேலொன்றுவீழுவுகைத்தெழுந்தும்பர்நாடு
சென்றுமேலிடம்பெறாதுதிரிந்தனசிகரச்சில்லி. (உஉ)

கூருடையெயிற்றுக்கோண்மாச்சுறவினமெறிந்துகொல்லப்
போருடையரியும்வெய்யபுலிகளும்யாளிப்போத்தும்
நீரிடைத்தோற்றவண்டோறதங்கிலநீங்கிற்றென்றூல்
ஆரிடைத்தோலார்மேலோரறிவிடைநோக்கினம்மா. (உந)

ஒள்ளியவுணர்வுகூடவுதவலரெனினுமொன்றோ
வள்ளியராயோர்செல்வமன்னுயிர்க்குதவுமன்றே
துள்ளினகுதித்தமானத்தும்பர்தங்குவட்டிற்றூங்கும்
கள்ளினைநிறையமாந்திக்கவியெனக்களித்தமீன்கள். (உச)

மூசெரிபிறக்கமீக்கொண்டிறக்கியமுடிக்கந்தன்னல்
கோசொரிநறவமென்னத்தண்புனலுகுக்குங்குன்றின்
வேசொரிமுத்துக்கம்மாவிருந்துசெய்திருந்தவிண்ட
வாய்சொரியிப்பியோடும்வலம்புரியுமிழ்ந்தமுத்தம். (உசு)

வேறு.

விண்டலந்தொடுமால்வரைவேரொடும்
கொண்டலங்கொளவீர்குவித்தலால்
திண்டலங்கடலானதுநீர்செல
மண்டலங்கடலாகிமலிந்ததே. (உசு)

அய்யன்வேண்டினதுவிதுவாமன்றே
வெய்யசீயமும்யாளியும்வேங்கையும்
மொய்கொள்குன்றின்முதலினமொய்த்தலால்
நெய்தல்வேலிகுறிஞ்சிநிகர்த்ததால். (உஎ)

யானுணைதனவீங்கிவையென்னவே
தீனுணைதனவென்னிதுசெய்யுமே
மானுணைதிரைக்கடல்வாழ்தரு
மீனுணைதனவில்லெவிலங்கரோ. (உஅ)

வவ்விலங்குவளர்த்தவர்மாட்டருள்
செவ்விலங்கலில்சிந்தையர்தீர்வரோ
இவ்விலங்கல்விடமினியென்பபோல்
எவ்விலங்குமவ்வெதய்தினவேலையே. (உக)

கனிதருந்தெங்காய்தருநாடொறும்
இனிதருந்தவநொய்தினியற்றலால்
பனிதருங்கிரிதம்மனம்பற்றறு
கிளையொடும்படைஞரோடுங்கேடிலாவுயிர்கட்கெல்லாம்
களையனதம்பிமாரைவேரொடுங்களையக்கண்டும்
இளையவன்பிரியமாயபியற்றியேகொண்டுபோய
வளையெயிற்றரக்கன்வெம்போர்க்கினியிவண்வருவதுண்டோ. (நங)

எந்திழைதன்னைக்கண்ணுற்றெதிர்ந்தவர்தம்மையெற்றிச்
சாந்தனைப்புதல்வன்றன்னைத்தரையிடைத்தேய்த்துத்தன்னூர்
காந்தெரிமடுத்துத்தானுங்காணவேகடலைத்தாவிப்
போந்தபின்வந்திலாதானினிப்பொரும்போருழுண்டோ. (நச)

உடைக்குலத்தெதாற்றர்தம்பாலுயிர்கொடுத்துள்ளக்கள்ளம்
துடைத்துழிவருணன்வந்துதொழுதுழிதொழாதகொற்றக்
குடைத்தொழிலும்பிகொள்ளக்கொடுத்துழிவேலைகாலி
அடைத்துழிவந்திலாதானினிவரவையமுண்டோ. (நஞ)

மறிப்புண்டதேவர்காணமணிவரைத்தேரின்வைகும்
நெறிப்புண்டரீகமன்னமுகத்தியர்முன்னைநென்னல்
பொறிப்புண்டரீகம்போலுமொருவனற்புனைந்தமோவி
பறிப்புண்டும்வந்திலாதானினிப்பொரும்பான்மையுண்டோ. (நட)

என்றிவையியம்பிவாவென்றேறவினனென்னையெண்ணி
ஒன்றுனக்குறுவதுன்னித்துணிந்துரையுறுதிபார்க்கின்
துன்றிருங்குழலேவிட்டுத்தொழுதுவாழ்சுற்றத்தோடும்
பொன்றுதியாயினென்பின்வாயிலிற்புறப்படென்றான். (நள)

நீரிலேபட்டுச்சூழ்ந்தநெருப்பிலேபட்டுநீண்ட
பாரிலேபட்டுவானப்பரப்பிலேபட்டவெல்லாம்
போரிலேபட்டுவீழப்பொருதீயொளித்துப்புக்குண்
ஊரிலேபட்டவென்றூற்பழியெனவுளையச்சொன்னான். (நஅ)

வேறு.

சொற்றவார்த்தையைக்கேட்டலுந்தொல்லுயிர்
முற்றுமுண்பதுபோலுமுனிவிலன்
பற்றுமின்கடிதின்னெனும்பார்மிசை
எற்றுமின்னெனநால்வரையேயிலன். (நஉ)

ஏவிலன்பிடித்தாரையெடுத்தெழுந்
தாவிலனவர்தந்தலைபோயறக்
கூவிலனவன்கோபுரவாயிலில்
தூவிலன்றுகைத்தானிலைசொல்லிலன். (சக)

ஏமஞ்சாரவெளியவர்யாவிரும்
தூமங்கால்வனவீரன்சுடுசரம்
மேகமின்போல்வனவீழ்வதன்முன்னமே
போமின்போமின்புறத்தென்றுபோயிலன். (சஎ)

அங்கதன்மீண்டுராமனையடைதல்.

அந்தரத்திடையார்த்தெழுந்தானவன்
சிந்துரத்தந்துணைதந்தெழுஞ்செச்சையான்
இந்துவிண்ணின்றிழிந்துளதாமென
வந்துவீரனடியின்வணங்கிலன். (சஉ)

உற்றபோதவனுள்ளக்கருத்தெலாம்
கொற்றவீரனுணர்த்தென்றுகூறலும்
முற்றவேதியென்மூர்க்கன்முடித்தலை
அற்றபோதன்றியாசையுறுனென்றான். (சங)

கஉ – வது, அங்கதன்றூதுப்படலம் – முற்றிற்று.

ஆஉ திருவிருத்தம்-கசூஉ.

பூசலேபிறிதில்லையெனப்புறத்
தாசைதோறுமூசமறைந்தெனப்
பாசறைப்பறையின்னிடம்பற்றிய
வாசமேறுமுறைமையின்வகுத்திரால். (க)

மற்றுநின்றமலையுமரங்களும்
பற்றுவீரர்பரவையின்மும்முறை
கற்றகைகளிறுற்கடிமாநகர்
சுற்றுநின்றவகழியைத்தூர்த்திரால். (உ)

இடுமின்பன்மரமெங்குமியங்கறத்
தடுமின்போர்க்குவருகெனச்சாற்றுமின்
கடுமினிப்பொழுதேதகதிர்மீச்செலாக்
கொடுமதிற்குடுமித்தலைகொள்கென்றான். (ங)

தடங்கொள்குன்றுமரங்களுந்தாங்கிய
மடங்கலன்னவவ்வானரமாப்படை
* இடங்கர்மாவிரியப்புனலேறிடத்
தொடங்கிவேலையகழியைத்தூர்த்ததால். (ச)

ஏயவெள்ளமெழுபதுமெண்கடல்
ஆயவெள்ளத்தகழியைத்தூர்த்தலும்
தூயவெள்ளந்துணைசெய்வதாமென
வாயிலூடுபுக்கூரைவளைந்ததே. (ஞ)

வினையும்வென்றியிராவணன்மெய்ப்புகழ்
முளையிலேறுங்களைந்துமுடிப்பபோல்
தளையவிழ்ந்தகொழுந்தடந்தாமரை
வளையம்வன்கையில்வாங்கினவானரம். (ட)

† ஏளை ‡ தாரமியம்பியவண்டுகள்
பாளைதாதுகுநீர்நெடும்பண்ணைய
தாளதாமரையன்னங்கடாவிட
வாளைதாவினவானரந்தாவவே. (ண)

இகழ்ந்தன்மையலையவிராவணன்
புகழுமேன்மையும்போயினவாமென

---

* இடங்கர்மா – முதலை.

† ஏளை – எழ்ஜ. ஏழாகிய – அழகிய. ‡ தாரம் – இசை.

நிகழுங்கண்ணெணெடுநீலமுகிழ்த்தவால்
அகழிதானுமழுவனபோன்றவே. (அ)

தண்டிருந்தபைந்தாமரைதாளறப்
பண்டிரிந்தூசிதையப்படர்சிறை
வண்டிரிந்தனவாய்தொறுமுட்டையைக்
கொண்டிரிந்தனவன்னக்குழாமெலாம். (ஆ)

தூறுமாமரமும்மலையுந்தொடர்
நீறுநீர்மிசைசென்றுநெருக்கலான்
ஏறுபேரகழின்னின்றினப்பல
ஆறுசென்றனவார்கவிமேலரோ. (க0)

இழுகுமாக்கலிடுந்தொறிடுந்தொறும்
சுழிகடோன்றுஞ்சுரித்திடைதோன்றுதேன்
ஒழுகுதாமரையொத்தனவோங்குநீர்
முழுகிமீதெழுமாதர்முகத்ததே. (கக)

தன்மைக்குந்தலையாயதசமுகன்
தொன்மைப்பேரகழ்வானரந்தூர்த்தலால்
இன்மைக்கும்மொன்றுடைமைக்கும்யாவர்க்கும்
வன்மைக்கும்மொர்வரம்புமுண்டாங்கொலோ. (கஉ)

தூர்த்தவானரஞ்சுள்ளிமடுத்திடச்
சீர்த்தபேரணைதன்னையுஞ்சிந்தின
வார்த்ததன்னைமதிலின்வரம்புகொண்
டார்த்தவார்கலிகாரொடுமஞ்சவே. (கங)

வட்டமேருவிதுவெனவான்முக
டெட்டநீண்டமதிண்மிசையேறிவிண்
தொட்டவானரந்தோன்றினமீத்தொக
விட்டவெண்கொடிவீங்கினவென்னவே. (கச)

இறுக்கவேண்டுவதில்லையெண்டோண்மணி
வெறுக்கையோங்கியமேருவிழுக்கலால்
நிறுக்கநேர்வருவீரர்நெருக்கலால்
பொறுக்கலாதுமதிறரைபுக்கதால். (கஞ)

அறைந்தமாமுரசானைப்பதாகையால்
மறைந்தவானெடுவானகமாதிரம்
குறைந்ததூளிகுழுமிவிண்ணூடுபுக்
குறைந்ததாங்கவர்போர்க்கெழுமோதையே. (கசு)

கோடலம்பினகோதையலம்பின
* ஆடலம்பரித்தாருமலம்பின
மாடலம்பினமாமணித்தேர்மணி
பாடலம்பினபாய்மதயானையே. (கஎ)

அரக்கர்தொல்குலவேரறவல்லவர்
வருக்கம்யாவையும்வாழ்வுறவந்தசேதார்
கருக்கொள்காலம்விதிகொடுகாட்டிடத்
தருக்கியுற்றெதிர்தாக்கினதானையே. (கஅ)

பற்கொடுந்நெடும்பாதவம்பற்றியும்
கற்கொடுஞ்சென்றதக்கவியின்கடல்
விற்கொடுந்நெடுவேல்கொடும்வேறுள
எற்கொடும்படையுங்கொண்ட † திக்கடல். (கக)

அம்புகற்களையள்ளினவம்பெலாம்
கொம்புடைப்பனைகூறுறநூறின
வம்புடைத்தடமாமரமாண்டன
செம்புகச்சுடர்வேற்கணஞ்செல்லவே. (உ0)

மாக்கைவானரவீர்மலைந்தகல்
தாக்கிவஞ்சர்தலைகடகர்த்தலால்
நாக்கினூடுஞ்செவியினூடகம்வாழ்
மூக்கினூடுஞ்சொரிந்தனமூளையே. (உக)

‡ அற்களோடுநிகர்த்தவரக்கர்தம்
விற்களோடுஞ்சரம்படவெம்புணீர்
பற்களோடுஞ்சொரிதரப்பற்றிய
கற்களோடுமுருண்டகவிகளே. (உஉ)

நின்றுமேருநெடுமதினெற்றியின்
வென்றிவானரவீர்விசைத்தகல்
சென்றுதீயவராருயிர்சிந்தின
குன்றின்வீழுமுருமின்குழுவினே. (உங)

எதிர்த்தவானரமாக்கையொடிற்றன
மதிற்புறங்கண்டுமண்ணின்மறைந்தன
கதிர்க்கொடுங்கணைரக்கர்கரங்களால்
விதிர்த்தெறிந்தவிலங்கிலைவேலினே. (உச)

---

* ஆடலம்பரி – போருக்குரிய அழகியகுதிரை.
† இக்கடல் – இவ்வசுரே கடல்.
‡ அற்களோடும் – இருட்டுகள் பின்னிடுகின்ற.

கடித்தகுத்தினகையிற்கழுத்தறப்
பிடித்தவள்ளுகிராற்பிளவாக்கின
இடித்தவெற்றினவெண்ணிலரக்கரை
முடித்தவானரம்வெஞ்சினமுற்றின. (உந)

எறிந்துமெய்துமெழுமுளைத்தண்டுகொண்
டுறைந்தும்வெவ்வயிலாகத்தழுத்தியும்
நிறைந்தவெங்கணரக்கர்நெருக்கலால்
குறைந்தவானரவீர்குழுக்களே. (உசு)

செப்பிற்செம்புனலேய்ந்தசெம்பொன்மதில்
துப்பிற்செய்ததுபோன்றதுசூழ்வரை
குப்புற்றீர்பிணக்குன்றுசுமந்துகொண்
* டுப்பிற்சென்றவுதிரத்தொழுக்கமே. (உள)

வந்திரைத்தபறைவையங்கின
அந்தரத்தினெருங்கலினங்கொரு
பந்தர்பெற்றதுபோன்றதுபற்றுதல்
இந்திரற்குமரியவிலங்கையே. (உஅ)

தங்குவெங்கனலோடுதயங்கிய
பொங்குவெங்குருதிப்புனற்செக்கர்பூங்
கங்குலன்னகவந்தமுங்கையெடுத்
தங்குமிங்குநின்றாடியவாமரோ. (உக)

கொன்னிறக்குருதிக்குடைபுட்களின்
தொன்னிறச்சிறையிற்றுளிதூவலால்
பன்னிறத்தபதாகைப்பரப்பெலாம்
செந்நிறத்தனவாய்நிறந்தீர்ந்தவே. (கo)

பொழிந்தசோரிப்புதுப்புனல்பொங்கிமீ
வழிந்தமாமதில்கைவிட்டுவானரம்
ஒழிந்தமேருவினும்பர்விட்டிம்பரின்
இழிந்தமாகடலென்னவிழிந்ததே. (கக)

† பதனமும்மதிலும்படைநாஞ்சிலும்
கதனவாயிலுங்கட்டியட்டாலையும்
மூதலாவையும்புக்குற்றுமுற்றின
விதனவெங்கணிராக்கதர்வெள்ளமே. (கஉ)

பாய்ந்தசோரிப்பரவையிற்பற்பல
நீந்தியேகுநெருக்கிடைச்சிற்சில

---

* உப்பில்-கடலில்.

† பதனம்-பதணம் அது மதிலின்கீழ்மேடை.

சாய்ந்துசாய்ந்துசரம்படத்தள்ளலுற்
றேய்ந்துவீழ்ந்தசிலசிலவோடின. (நூங)

தழியவானரமாக்கடல்சாய்தலும்
பொழியவெம்படைப்போர்க்கடலார்த்தலால்
ஒழியுங்காலத்துலகொருமூன்றுமொத்
தழியுமாக்கடலார்ப்பெடுத்தாயரோ. (நூசு)

முரைசுமாமுருடும்முரட்சங்கமும்
உரைசெய்காளமுமாகுளியோசையும்
விரைசும்பல்லியம்வில்லரவத்தொடும்
திரைசெய்வேலைக்கொராகுலஞ்செய்ததே. (நூஙி)

ஆயகாலயினைத்துலகுந்தரும்
நாயகன்முகலலுநடந்தன
மேயசேனைவிரிகடல்விண்குலாம்
வாயிலூடும்புறப்பட்டுவந்ததே. (நூசு)

நெடியகாவதம்விட்டுநிரம்பிய
படியவாயிற்பருப்பதம்பாய்ந்தெனக்
கொடியொடுங்கொடிசுற்றத்தொடுத்ததண்
டொடியலூன்றினமும்மதவேங்கலே. (நூஎ)

* சூழியானைமதம்படுதொய்யலின்
ஊழிநாணெனுங்காலெனவோடுவ
பாழியாழ்வயிரப்படிபன்முறை
பூழியாக்கினபொன்னெனுந்தேர்களே. (நூஅ)

பிடித்தவானரம்பேரெழிற்றோள்களால்
இடித்தமாமதிலாடையிலங்கையாள்
மடித்தமாகடல்வாவுந்திரையெலாம்
குடித்துக்கால்வனபோன்றகுதிரையே. (நூக)

கேளிர்ஞாலங்கிளத்தியதான்முறை
நாளுநாளுநடந்தனநள்ளிரா
நீளமெய்தியொருசிறைறின்றன
மீளுமாலயும்போன்றனர்வீரரே. (சo)

பத்திவன்றலைப்பாம்பின்பரங்கெட
மூத்திநாட்டின்முகத்தினைமுற்றுறப்
பித்திபிற்படவன்றிசைபோர்வுறத்
தொத்திமீண்டிலவானெனுந்தூளியே. (சக)

---

* சூழியானை-முகபடாமணிந்தயானை.

நெருக்கிவந்துநிருதர்நெருங்கலால்
குரக்கினப்பெருந்தானைகுலைந்துபோய்
அருக்கன்மாமகரமராசையால்
செருக்கிநின்றவனின்றுழிச்சென்றவால். (சஉ)

சாய்ந்ததானைத்தளர்வுஞ்சலித்ததிர்
பாய்ந்ததானைப்பெருமையும்பார்த்துறக்
காய்ந்தநெஞ்சன்கனல்சாரிகண்ணினன்
ஏய்ந்ததங்கொர்மராமரமேந்தினன். (சங)

வாரணத்ததிர்வாசியினேர்வயத்
தேர்முகத்தினிற்சேவகர்மேற்செறுத்
தோரொருத்தர்க்கொருவரினுற்றுயர்
தோரணத்தொருவன்னெனத்தோன்றினன். (சச)

களிறுமாவுநிருதருங்காலற
ஒளிறுமாமணித்தேருமுருட்டிவெங்
குளிறுசோரியொழுகக்கொதித்திடை
வெளிறிலாமரமேமகொண்டுவீசினன். (சஙு)

அன்னகாலையரிகுலவீரரும்
மன்னன்முன்புகவன்கணரக்கரும்
முன்னுழந்தமுழங்குபெருஞ்செருத்
தன்னில்வந்துதலைமயக்குற்றனர். (சஙூ)

கற்றுரந்தகளம்படவஞ்சகர்
இற்றுலந்துமுடிந்தவரெண்ணிலர்
விற்றுரந்தனவெங்கணையாலுடல்
அற்றுலந்தகுரங்குமகந்தமே. (சஙெ)

கற்கடந்துநிமிர்ந்தகடுஞ்செரு
மற்கடங்கள்வலிந்துமலைந்திடத்
* தற்கடங்கியுலந்தவர்தம்முயிர்
தெற்கடங்கிநிறைந்துசெறிந்தவால். (சஅ)

பாடுகின்றனபேய்க்கணம்டல்விதத்
தாடுகின்ற † வறுகுறையாழ்கடற்
கோடுகின்றவுதிரம்புகுந்துடல்
நாடுகின்றனர்கற்புடைநங்கைமார். (சகூ)

யானைபட்டவழிபுனல்யாறெலாம்
பானல்பட்டபலகணைமாரியின்

---

* தற்கு—தருக்கு.

† அறுகுறை-கவந்தம்.

சோனைபட்டதுசொல்லரும்வானரச்
சேனைபட்டதுபட்டதுசெம்புனீர். (நம)

காய்ந்தவானரவீரர்கரத்தினல்
தேய்ந்தவாயுளரானவர்செம்புனீர்
பாய்ந்ததானைப்படுகளம்பாழ்படச்
சாய்ந்ததானிருதக்கடற்ரூனேயே. (நக)

தங்கண்மாப்படைசாய்தலுந்தியெழ
வெங்கண்வாளரக்கன்விரைதானினைக்
* கங்கசாலந்தொடரக்கடற்செலூஉம்
வங்கமாமெனவந்ததிர்தாக்கிணன். (நஉ)

வந்துதாக்கிவடிக்கணைமாமழை
சிந்திவானரச்சேனைசிதைத்தலும்
இந்திராதியருந்திகைத்தேதங்கினர்
நொந்துசூரியன்கான்முளைநோக்கிணன். (நங)

நோக்கிவஞ்ச † னெறில்வயமாப்பரி
வீக்குதேரினின்மீதெழப்பாய்ந்துதோள்
தாக்குதாணியும்வில்லுந்தொலத்தவன்
யாக்கையுஞ்சிதைத்திட்டெழுந்தேதகிணன். (நச)

மலைகுலைந்தனவச்சிரமுட்டிதன்
நிலைகுலைந்துவிழுதலினின்றுளார்
குலைகுலைந்துகொடிநகர்நோக்கினர்
அலைகிளர்ந்தெனவானரமார்த்தவே. (நஞ)

வீழிவெங்கணிராக்கதர்வெம்படை
ஊழியாழிகிளர்ந்தெனவோங்கின
கீழைவாயிலிற்கிட்டலுமுட்டினர்
சூழும்வானரவீர்துவன்றியே. (நசு)

சூலம்வாளயில்சக்கரந்தோமரம்
வாலம்வாளிமழையின்வழங்கியே
ஆலமன்னவரக்கரடர்த்தலும்
காலும்வாலுந்துமிந்தகவிக்குலம். (நஎ)

வென்றிவானரவீர்விசைத்தெறி
குன்றுமாமரமுங்கொடுங்காலனிற்

---

* கங்கசாலம்—பறவைக்கூட்டம்.

† நொறில்வயமாப்பரி-வேகத்தினையும் வெற்றியினையுமுடைய சிறந்தகுதிரை.

சென்றுவீசுநிருதர்கள்சிந்திஞர்
பொன்றிவீழ்ந்தபுரவிவெம்பூட்கைதேர். (நஅ)

தண்டுவாளயில்சக்கரஞ்சாயகம்
கொண்டுசீற்றநிருதர்கொதித்தெழப்
புண்டிறந்துகுருதிபொழிந்துக
மண்டியோடினர்வானரவீரரே. (நக)

எரியின்மைந்தனிருநிலங்கீழுற
விரியநின்றமராமரம்வேரொடும்
திரியவாங்கிநிருதர்வெஞ்சேனைபோய்
நெரியவூழிநெருப்பெனவீசினன். (சுo)

தேரும்பாகரும்வாசியுஞ்செம்முகக்
காருமியாளியுஞ்சீயமுங்காண்டகு
பாரின்வீழப்புடைப்பப்பசும்புணின்
நீரும்வாரியதனைநிறைத்ததே. (சுக)

அரக்கர்சேனையடுகளம்பாழ்பட
வெருக்கொண்டோடிடவெம்படைக்காவலன்
நெருக்கநேர்ந்துகும்பானுநெடுஞ்சரம்
துரக்கவானரச்சேனைதுணிந்ததே. (சுஉ)

கண்டுநின்றகரடியின்காவலன்
எண்டிசாமுகமெங்குமிடும்பரே
சண்டமாருதமென்னத்தடவரை
கொண்டுசீறியவனெதிர்குப்புறு. (சுஙட)

தொடுத்தவாளிகள்வீழுமுன்சூழ்ந்ததிர்
எடுத்தகுன்றையிடும்பனெறிதலும்
ஒடித்தவில்லுமிரதமுமொல்லெனப்
படுத்தவாசிபதாகையும்பாழ்பட. (சுச)

தேரழிந்துசிலையுமழிந்துகக்
காரிழிந்தவுருமெனக்காய்ந்ததிர்
பார்கிழிந்துகப்பாய்ந்தனன்வானவர்
போர்கிழித்துபுறந்தரப்போர்செய்தான். (சுஞ)

தத்திமார்பின்வயிரத்தடக்கையால்
குத்தினின்றகும்பானுவைவத்தானெதிர்
மொத்தினின்றுமுடித்தலகவ்வுறப்
பத்திவன்றடந்தோளுறப்பற்றுவான். (சுசு)

சுடித்தலத்திருகாலுறக்கைகளால்
பிடித்துத்தேராளப்பிறங்கலின்கோடுதேர்
முடித்தலத்தினைக்கவ்வுறழூளைகள்
வெடித்துவீழ்த்தரவீழ்த்தினனுமரோ. (சுஎ)

தன்படைத்தலவன்படத்தன்னெதிர்
துன்படைத்தமனத்துன்சுமாலிசெய்
முன்படைத்தமுகிலன்னகாட்சியின்
வன்படைத்தவரிசிலவாங்கினன். (சுஅ)

வாங்கிவார்சிலவானரமாப்படை
எங்கநாணைறிந்திட்டிடையீடின்றித்
தூங்குமாரியெனச்சுடர்வாளிகள்
வீங்குதோளினன்விட்டனனுமரோ. (சுக)

நூறுமாயிரமுங்கணெஞ்சினின்
வேறுவேறுபடுதலின்வெம்பியே
ஈறில்வானரமாப்படையெங்கணும்
* பாறவீரன்வெகுண்டெதிர்பார்ப்புழி. (எ0)

குன்றனின்றதெடுத்ததிர்கூற்றெனச்
சென்றெறிந்தவன்சேனைசிதைத்தலும்
வென்றிவில்லின்விடுகணைமாரியால்
ஒன்றுநூறுதிருற்றதக்குன்றமே. (எக)

மீட்டுமங்கொர்மராமரம்வேரொடும்
ஈட்டிவானத்திடியெனவேற்றலும்
கோட்டம்வில்லுங்கொடியும்வயப்பரி
பூட்டுந்தேரும்பொடித்துகளாயவே. (எஉ)

தேரிழந்துசிலையுமிழந்திடக்
காரிழந்தவுருமெனக்காந்துவான்
பாரிழிந்துபருவலித்தண்டொடும்
ஊரிழந்தகதிரெனவோடினன். (எங)

வாய்மடித்தழல்கண்டொறும்வந்துகப்
போயடித்தலுநீலன்புகைந்ததிர்
† தாயடித்தவன்றன்கையிற்றண்டொடும்
மீயெடுத்துவிசும்புறவீசினன். (எச)

அம்பரத்தெதிர்ந்தார்ப்பவரக்கனும்
இம்பருற்றெரியின்றிருமைந்தன்மேல்

---

* பாற – விலகியழிய.

† மீயெடுத்து – மேலெடுத்து.

செம்புனற்பொழியக்கணைதேர்த்திணன்
உம்பர்தத்தமதுள்ளநடுங்கவே. (எநி)

அடித்தலோடுமதற்கிளையாதவன்
எடுத்ததண்டம்பறித்தெறியாவிகல்
முடித்துமென்னுருகைகொடுமோதிணன்
குடித்துமிழ்ந்தெனக்கக்கக்குருதியே. (எசு)

குருதிவாய்நின்னுருழுகவுங்கூசலன்
நிருதனீலனெடுவரைமார்பினில்
கருதலாதமுன்குத்தலுங் * கைத்தவர்
பொருதபூசல்புகலவொண்ணுதே. (எள)

மற்றுநீலனரக்கணைமாதிறச்
சுற்றிவால்கொடுதோளினுமார்பினும்
நெற்றிமேலுநெடுங்கரநீட்டலும்
இற்றுமால்வரையென்னவிழுந்தனன். (எஅ)

இறந்துவீழ்ந்தனனேபிரகத்தனென்
றறிந்துவானவராவலங்கொட்டினர்
வெறிந்தசெம்மயிர்வெள்ளெயிற்றுடவர்
முறிந்துதத்தமுதுகரெய்தினர். (எக)

தெற்குவாயிலிற்சென்றநிசாசரர்
மற்குலாவுவயப்புயத்தங்கதன்
நிற்கவேயெதிர்நின்றிலரோடினர்
பொற்குலாவுசுபாரிசன்பொன்றினன். (அ0)

நூற்றிரண்டெனும்வெள்ளமுதோன்கழல்
ஆற்றல்சாறுன்முகனுமங்கார்த்தெழ
மேற்றிண்வாயிலின்மேவினர்வீடினர்
காற்றின்மாமகன்கையெனுங்காலனால். (அக)

அன்னகாலையயிந்திரவாய்முதல்
துன்னுபோர்கண்டதுதுவர்தோன்றினர்
மன்னகேளெனவந்துவணங்கினர்
சென்னிதாழ்க்கச்செவியிடைச்செப்பினர். (அஉ)

கீழைவாயிற்கிளர்நிருதப்படை
ஊழிநாளினுமெவற்றிகொண்டுற்றநின்
ஆழியன்னவனீகத்தலைமகன்
† பூழியானுயிர்புக்கதுவிண்ணெனன்றார். (அங)

---

* கைத்தவர் - பகைத்து அவர்கள்.

† பூழியான் - புழுதியினிடத்தான்.

வென்றிவேற்கைகநிருதர்வெகுண்டெழுத்
தென்றிசைப்பெருவாயிலிற்சேர்ந்துழிப்
பொன்றினனச்சுபாரிசன்போயினர்
இன்றுபோனவிடமறியேமென்றார். (அச)

வடக்குவாயிலின்வச்சிரத்தாடவர்
குடக்குவாயிலிற்குன்றனதேதாளினர்
அடற்கரும்வலத்தைதம்பதுவெள்ளமும்
படச்சிதைந்ததுநம்படையென்றனர். (அஙி)

என்றவார்த்தையெரிபுகுநெய்யெனச்
சென்றுசிந்தைபுகுதலுஞ்சீற்றத்தீக்
கன்றுகண்ணின்வழிச்சுடர்கான்றிட
நின்றுநின்றுநெடிதுயிர்த்தானரோ. (அசு)

மறுத்துமற்றவனுருயிர்வவ்வினன்
இறுத்துக்கூறியென்றுன்றிசையெங்கணும்
நிறுத்துநீலனெடும்பெருஞ்சேனையை
ஒறுத்துமற்றவனேடும்வந்துற்றனன். (அன)

உற்றபோதுமிருவருமொன்றல
கற்றபோர்களெலாஞ்செய்தகாலையில்
நெற்றிமேன்மற்றநீலனெடுங்கையால்
எற்றவீந்தனனென்னவியம்பினர். (அஅ)

அன்னவன்னெடும்போனவரக்கரில்
நன்னகர்க்குவந்தேதாமையநாங்களே
என்னவென்னவெயிறிகல்வாயினத்
தின்னத்தின்னவெரிந்தனதிக்கெலாம். (அக)

மாடுநின்றநிருதரைவன்கணன்
ஓடநோக்கியுயர்படையான்மற்றக்
கோடுகொண்டுபொருமக்குரங்கிலல்
வீடுனனென்றுமீட்டும்விளம்பினன். (அ0)

கட்டதிந்திரன்வாழ்வைக்கடன்முறை
பட்டதிங்கொர்குரங்குபடிக்கவென்
றிட்டவெஞ்சொலெரிபுகுநெய்யெனச்
சுட்டதென்றனிநெஞ்சினைச்சுட்டதால். (கக)

* கருப்பைப்போற்குரங்கெற்றக்கதிர்சுழல்
பொருப்பையொப்பவர்தாமின்றுபொன்றினர்

---

* கருப்பை - எலி.

* அருப்பமென்றுபகையையுமாரழல்
நெருப்பையும்மிகழ்ந்தாலதுநீதியோ. கூஉ)
நிற்கவன்னதுநீர்நிறைகண்ணினீரர்
வற்கமாயினமாப்படையோடுஞ்சென்
றெற்கம்வந்துதவாமலுறுகென
விற்கொள்வெம்படைவீரரையேயவிணன். கூஙு)
மண்டுகின்றசெருவின்வழக்கெலாம்
கண்டுநின்றுகயிலையிடந்தவன்
புண்டிறந்தனகண்ணினன்பொங்கிணன்
திண்டிறன்னெடுந்தேர்தெரிந்தேதறிணன். கூசு)
ஆயிரம்பரிபூண்டதிர்குரல்
மாயிருங்கடல்போன்றதுவானவர்
சேயமெங்குந்திரிந்ததுதிண்டிறல்
சாயவிந்திரனேபண்டுதந்தது. கூஞ)
† எற்றியெண்ணியிறைஞ்சியிடக்கையால்
ஆற்றிணன்றனதுசிலையன்னதின்
மாற்றமென்னெடுநாணெலிவைத்தலும்
கூற்றிறையுமாருயிர்கொள்வதே. கூசு)
மற்றும்வான்படைவானவர்மார்பிடை
இற்றிலாதனவெண்ணமிலாதன
பற்றிணன்கவசம்படர்மார்பிடைச்
சுற்றிணனெடுந்தும்பையுஞ்சூடிணன். கூன)
பேருங்கற்றைக்கவரிப்பெருங்கடல்
நீருநீர்நுரையும்மெனநின்றவன்
ஊருமெண்ணமையுவாமதிக்கீழுயர்
காருமொத்தனன்முத்தின்கவிகையான். கூஅ)
போர்த்தசங்கப்படகம்புடைத்திடச்
சீர்த்தசங்கக்கடலுகத்தேதவர்கள்
‡ வேர்த்தசங்கிடவண்டம்வெடிபட
ஆர்த்தசங்கமறைந்தமுராசமே. கூகூ)
தேருமாவும்படைஞருந்தெற்றிட
மூரிவன்னெடுந்தாணையின்முற்றிணன்
நீரொராழுமுடிவினெருக்குநாள்
மேருமால்வரையென்னவிளங்கிணன். ரூ00)

---

* அருப்பம் - அற்பம்.
† எற்றி - நாணேற்றி.
‡ வேர்த்தசங்கிட - வேர்த்தசைய.

வேறு.

எழிசைக்கருவிவீற்றிருந்தவென்னிலும்
சூழிருந்திசைகளாத்தொடருந்தொல்கொடி.
வாழியவுலகெலாம்வளந்துவாயிடும்
ஊழியினந்தகவிலேங்கவே. (கஅக)

* வேணுயர்நெடுவரையரக்கர்வேலக்கோர்
தோணிபெற்றனரெனக்கடக்குந்தொல்செருக்
காணியவந்தவர்கலக்கங்கைம்மிகச்
சேணுயர்விசும்பிடையமர்சிந்தவே. (கஅஉ)

கண்ணுறுகடும்பொறிகதுவக்கார்நிறத்
தண்ணல்வாளரக்கர்தமரத்தப்பங்கிகள்
ஒண்ணிறங்கோடலினுருவின்வேற்றுமை
நண்ணினர்நோக்கவுமயிர்ப்புநல்கவே. (கஅங)

காணெடுந்தேருயர் † கதலியுங்கரத்
தேனையரேந்தியபதாகையீட்டமும்
ஆனையின்கொடிகளுமளவித்தோய்தலால்
வானயாறுமழையொற்றிவற்றவே. (கஅச)

ஆயிரங்கோடிபேயங்கையாயுதம்
தூயனசுமந்துபின்றொடரச்சுற்றுளிர்
சேயிருமணிநெடுஞ்சேமத்தேர்தெரிந்
தேயினவாயிரத்திரட்டியெய்தவே. (கஅஞ)

ஊன்றியபெரும்படையுலையவுற்றுடன்
ஆன்றபோரரக்கர்களணைருங்கியார்த்தெழத்
தோன்றினனுலகெலாந்தொடர்ந்துநின்றன
மூன்றையுங்கடந்தொருவெற்றிமுற்றினன். (கஅசு)

ஓதுறுகருங்கடற்கொத்ததானையான்
தீதுறுசிறுதொழிலரக்கன்சீற்றத்தான்
போதுறுபெருங்களம்புகுந்துளானெனத்
தூதுவர்நாயகற்கறியச்சொல்லினர். (கஅள)

ஆங்கவனமர்த்தொழிற்கணுகினனெனன
வாங்கினன்சீதையையென்னுமவ்வன்மையால்
தீங்குறுபிரிவினுற்றேறய்ந்தசேதய்வற
வீங்கினவிராகவன்மீளித்தோள்களே. (கஅஅ)

---

* வேணுயர் - மூங்கில்கள்வளர்ந்த.

† கதலியும் - கொடியையும்.

தொடையுறுவற்கலையாடைசுற்றிமேல்
புடையுறுவயிரவாள்பொலியவீக்கிணன்
இடையுறுகருமத்தினல்லகண்டவர்
கடையுறுநோக்கினிற்காணுங்காட்சியான். (கஎக)

ஒத்திருசிறுகுறட்பாதழுய்த்தநாள்
வித்தகவருமறையுலகைமிக்குமேல்
பத்துளவிரல்புடைபரந்தபண்பெனச்
சித்திரசேவடிக்கழலுஞ்சேர்த்தினன். (ககஅ)

பூவுயர்மீனெலாம்பூத்தவாணிகர்
மேவிருங்கவசமிட்டிறுகவீக்கினன்
தேவியைத்திருமறுமார்பிற்றீர்ந்தனன்
நோவிலனென்பதுநோக்கிணன்கொலோ. (ககக)

நற்புறக்கோதைதன்னளினச்செங்கையில்
நிற்புறச்சுற்றியகாட்சிநேமிசால்
கற்பகக்கொம்பினைக்கரியமாசுணம்
பொற்புறத்தழுவியதன்மைபோன்றவால். (ககஉ)

புதையிருட்பொழுதினுமலரும்பொங்கொளி
சிதைவருநாள்வரச்சிவந்ததாமரை
இதழ்தொறும்வண்டுவீற்றிருந்ததாமெனத்
ததைவுறுநிறைவிரற்புட்டிரூங்கிணன். (ககஊ)

பல்லியலுலகுறுபாடைபாடமைந்
தெல்லையினூற்கடலேறநோக்கிய
நல்லியனைவையறுகவிளர்நாவரும்
சொல்லெனத்தொலைவிலாத்தூணிதூக்கிணன். (ககச)

கிளர்மணழக்குழுவிடைக்கிளர்ந்தமின்னென
வளர்பிறைநெற்றியிற்பட்டமார்த்தனன்
இளவரிக்கவட்டிலையாரொடோர்பெறத்
துளவியறும்பையுஞ்சுழியச்சூடிணன். (ககஎ)

ஓங்கியவுலகமுழுமையிருமுட்புறம்
தாங்கியபொருள்களுந்தாணுந்தானென
நீங்கியதியாவதுநினைக்கிலேமவன்
வாங்கியவரிசிலைமற்றிறன்றேறகொலாம். (ககரு)

நாற்கடலுலகமும்விசும்புநாண்மலர்
தூர்க்கவெஞ்சேனையுந்தாணுந்தோன்றிணன்
மாற்கடல்வண்ணன்றன்வளருமாவிரும்
பாற்கடலோடும்வந்ததிரும்பான்மையான். (ககள)

ஊழியினுருத்திரனுருவுகொண்டுதான்
ஏழுயருலகமும்வீக்கின்றனென
வாழியவரிசிலத்தம்பிமாப்படைக்
* கூளையினெற்றினின்றனைக்கூடினன். (கக)

என்புழிநிருதராமேழுவேலையும்
மின்பொழியெயிறுடைக்கவியின்வெள்ளமும்
தென்புலக்கிழவனுஞ்செய்கை † தீட்டிடப்
புன்புலக்களத்திடைப்பொருததேபோலுமால். (ககக)

தெற்கிவைவடக்கிவையென்னுந்திக்கெலாம்
பற்குவைபரந்தனகூரக்குப்பல்பிணம்
பொற்குவைவிகர்த்தனநிருதர்போர்ச்சவம்
கற்குவைவிகர்த்தனமழையுங்காட்டின. (கஉ)

துமிந்தனதலைகுடர்சொரிந்ததேர்க்குலம்
அவிந்தனபுரவியுமாளுமற்றன
குவிந்தனபிணக்குவைசுமந்துகோணிலம்
நிமிர்ந்ததுபரந்ததுகுருதிநீத்தமே. (கஉக)

கடுங்குரங்கிருகையாலெற்றக்கால்வயக்
கொடுங்குரந்துணிந்தனபுரவிகுத்திணல்
ஒடுங்குரந்துணிந்தனர்நிருதரோடின
நெடுங்குரம்பெனநிறைகுருதிநீத்தமே. (கஉஉ)

அவ்வழியிராவணனமராஞ்சத்தன்
வெவ்வழிநெருப்புகவில்லினணினைச்
செவ்வழிக்கோதையிற்றெறிப்பச்சிந்தின
எவ்வழிமருங்கினுமிரிந்தவானரம். (கஉங)

உருமிடித்துழியுலந்தொளிக்குநாகமொத்
திரியலுற்றனசிலவிறந்தவாற்சில
வெருவலுற்றனசிலவிம்மலுற்றன
பொருகளத்துயிரொடும்புரண்டுபோஞ்சில. (கஉச)

பொரக்கருநிறநெடுவிசும்புபுண்படச்
சிரக்கமிலிராவணனெறிந்தநாணினால்
குரக்கினமுற்றதன்கூறிற்றன்குலத்
தரக்கருமனையதோரச்சமெய்திஞர். (கஉஞ)

வீடணனெருவனுமிளையவீரனும்
கோடணைகுரங்கினுக்கரசுங்கொள்கையான்

---

* கூளையின்னெற்றி – பின்னணியின் முன்னிடம்.

† தெட்டிட என்பதும் பாடம்.

நாடினர்நின் றனர்நாலுதிக்கினும்
ஓடினரல்லவரொளித்ததும்பரே. (கஉசு)

வேறு.

எடுக்கினனிலத்தையேந்துமிராவணனென்றிந்தநாணின்
நடுக்கினனுலகையென்பார்நல்கினனென்னற்பாற்றே
மிடுக்கினன்மிக்கவாளேர்மேக்குயர்வெள்ளமேனள்
கெடுக்குநாளுருமினுர்ப்புக்கேட்டனரென்னக்கேட்டார். (கஉஎ)

இராவண சுக்கிரீவ யுத்தம்.

எந்தியசிகரமொன்றங்கிந்திரன்குலிசமென்னக்
காந்தியதுருமின்விட்டான்கவிக்குலத்தரசனக்கல்
நீந்தருநெருப்புச்சிந்திநிமிர்தலுநிருதர்க்கெல்லாம்
வேந்தனும்பகழியொன்றுல்வெண்டுகளாக்கிவீழ்த்தான். (கஉஅ)

அண்ணல்வாளரக்கன்விட்டவம்பிலைழிந்துசிந்தித்
திண்ணெடுஞ்சிகரநீறுய்த்திசைதிசைசிந்தலோடும்
கண்ணெனுங்கடுந்தீக்காலக்கவிக்குலத்தரசன்கையால்
மண்மகள்வயிறுகீறமரமொன்றுவாங்கிக்கொண்டான். (கஉ.கூ)

கொண்டமாமரத்தையம்பின்கூட்டத்தாற்காட்டத்தக்க
கண்டமாயிரத்தின்மேலுமூளவெனக்கண்டங்கண்டான்
விண்டவாளரக்கன்மீதுவிசும்பெரிபரக்கவிட்டான்
பண்டைமால்வரையின்மிக்கதொருகிரிபரிதிமைந்தன். (கஉ0)

அக்கிரியினையுமாங்கோரம்பிலைறுத்துமாற்றித்
திக்கிரிதரப்போர்வென்றசிலையினையுளையவாங்கிச்
சுக்கிரிவன்றன்மார்பிற்புங்குமுந்தோன்றுவண்ணம்
உக்கிரவயிரவாளியொன்றுபுக்கொளிக்கவெய்தான். (கஉக)

சுடுகணைபடுதலோடுந்துளங்கினன்றுளங்காமுன்னம்
குடதிசைவாயினின்றமாருதிபுகுந்தகொள்கை
உடனுணைறந்தறிந்தானென்னவோரிமையொடுங்காமுன்னர்
வடதிசைவாயில்வந்துமன்னவன்முன்னராஞன். (கஉஉ)

அனுமராவண யுத்தம்.

பரிதிசெய்தேருமுன்னம்பருவலியரக்கபல்போர்
புரிதியோவென்றேடென்றுப்புகையெழவிழித்துப்பொங்கி
வருதியோவாவென்பான்மேன்மலையொன்றுநிலையின்வாங்கிச்
சுருதியேயனையதோளால்வீசினன்காலின்றேரன்றல். (கஉங)

மீயெழுமேகமெல்லாம்வெந்துவெங்கரியிற்சிந்தித்
தீயெழவிசும்பினூடுசெல்கின்றசெயலேநோக்கிக்

காய்கணையைந்துமைந்துங்கடுப்புறத்தொடுத்துக்கண்டித்
தாயிரங்கூறுசெய்தானமரையலக்கண்செய்தான். (கஙஉ)

மீட்டொருசிகரம்வாங்கிவீங்குதோள்விசையின்வீசி
ஓட்டிமேலைட்டலானத்துருமிலுங்கடுகிவோடிக்
கோட்டுவெஞ்சிலையின்வாளிமுன்சென்றுகொற்றப்பொற்ரூள்
பூட்டியவலியத்தோடும்பூழியாய்ப்போயிற்றன்றே. (கஙஙு)

மெய்யெரியழன்றுபொங்கிவெங்கணைன்விம்மிமீட்டோர்
மய்வரைவாங்குவானைவரிசிலையுளையவாங்கிக்
கய்யிலுந்தோளின்மேலுமார்பிலுங்கரக்கவாளி
அய்யிரண்டழுந்தவெய்தானவனைவையாற்றிநின்ரூன். (கஙசு)

யாரிதுசெய்யகிற்பாரென்றுகொண்டிமையோரேத்த
மாருதிபின்லுமாங்கோர்மராமரங்கையின்வாங்கி
வேரொடுஞ்சூழற்றிவிட்டான்விடுதலுமிலங்கைவேந்தன்
சாரதிதலையைத்தள்ளிச்சென்றதுநிருதர்சாய. (கஙஎ)

மாறியோர்பாகனேறமறிதிரைப்பரவைபின்னும்
சீறியதனையனுங்கோர்செறிகழலரக்கன்றெய்வ
நூறுகோலெனுய்திவினெய்தானவையுடனுனைழுதலோடும்
ஆறுபோற்சோரிசோரவநுமனுமலக்கணுற்ரூன். (கஙஅ)

கற்கொண்டுமரங்கள்கொண்டுங்கைக்கொண்டுங்களித்துநும்வாய்ச்
சொற்கொண்டுமயிரின்புன்ரூற்ரூள்கொண்டுஞ்சுள்ளிவெள்ளிப்
பற்கொண்டுமலகின்ரூரிற்பழிகொண்டுபயந்ததியாரேனர்
விற்கொண்டுநின்றபோதுவிறல்கொண்டுமிகுதிபோலாம். (கஙக)

என்றுரைத்தெதயிற்றுப்பேழ்வாயெரியுகநகைசெய்தியான்ற
பொன்ரூடர்வடம்பின்வாளிகடையுகத்துருமுப்போல
ஒன்றிரெனென்றதிகமாகவாயிரகோடியுய்த்தான்
சென்றதுகுரங்குச்சேனகாலெறிகடலிற்சிந்தி. (கசஉ)

இலக்குமண விராவண யுத்தம்.

கலக்கியவரக்கன்வில்வின்கல்வியின்கவிகளுற்ற
அலக்கணுந்தலைவர்செய்ததன்மையுமையக்கண்டான்
இலக்குவனென்கைவாளிக்கிலக்கிவனிவனேயின்று
விலக்குவெவனென்னவந்தான்வில்லுடைமேருவென்ன. (கசக)

தேயத்தின்றலைவன்மைந்தன்சிலையைநாணைறிந்தான்றீய
மாயத்தின்வினையைவல்லார்நிலையென்னைமுடிவின்மாரி

ஆயத்தினிடியிதன்றேறயஞ்சினவுலகம்யாஜை
சீயத்தின்முழக்கங்கேட்டல்போன்றனர்செறுநரெல்லாம். (கசஉ)

ஆற்றல்சாலரக்கன்ரூனுமயனின்றவயவர்நெஞ்சம்
வீற்றுவீற்ரூகியுற்றதன்மையும்வீரன்றம்பி
கூற்றின்வெம்புருவமன்னசிலைநெடுங்குரலுங்கேளா
* ஏற்றினன்மகுடமென்னேயிவனெரூமனிசனென்ரு. (கசஙூ)

கட்டமைதேரின்மேலுங்களிநெடுங்களிற்றின்மேலும்
விட்டெழுபுரவிமேலும்வெள்ளெயிற்ரரக்கர்மேலும்
மூட்டியமழையின்ரூள்ளிமுறைமுறைமொய்க்குமாபோல்
பட்டதுபகழியெங்கும்பரந்தனகுருதிப்பௌவம். (கசச)

நகங்களிற்பெரியவேழநறைமதவருவிநாளும்
முகங்களிற்புக்கவாளியபரத்தைமுற்றிமொய்ம்பர்
அகங்களைக்கழன்ரூதேரினச்சினையுருவியப்பால்
உகங்களிற்கடைசென்ரூலுமோய்விலவாடலுற்ற. (கசஞி)

† நூக்கியகளிறுந்தேரும்புரவியு ‡ நூழில்செய்ய
ஆக்கியவரக்கர்தானையையிருகோடிகையொத்
தூக்கியபடைகள்வீசியுடற்றியதுலகஞ்செய்த
பாக்கியமனையவ்ரன்றம்பியைச்சுற்றும்பற்றி. (கசசு)

உறுபகைமனிசனின்றெம்மிறைவனையுறுகிற்பானேல்
வெறுவிதுநந்தம்வீரமென்ரூருமேன்மைதான்ற
எறிபடையரக்கரேற்ரூரேற்றகைம்மாற்ரூனென்ன
வறியவனெரூவன்வண்மைபூண்டவன்மேற்சென்றனன். (கசஎ)

அறுத்தனனரக்கரெய்தவெறிந்தனவறுத்தரூத
பொறுத்தனன்பகழிமாரிபொழிந்தனனுயிரின்போகம்
வெறுத்தனனமனும்வேலையுதிரத்தின்வெள்ளமீள
மறித்தனமறிந்தவெங்கும்பிணங்களம்மலகண்மான. (கசஅ)

தலையெலாமற்றமற்றதாளெலாமற்றதோளாம்
மலையெலாமற்றபொற்ரூர்மார்பெலாமற்றசூலத்
திலையெலாமற்றவீரரெயிறெலாமற்றகொற்றச்
சிலையெலாமற்றகற்றசெரூவெலாமற்றசிந்தி. (கசக)

தேரெலாந்துமிந்தமாவின்றிறமெலாந்துமிந்தசெங்கட்
காரெலாந்துமிந்தவீரர்கழலெலாந்துமிந்தகண்டத்

---

* ஏற்றினன் மகுடம்-மகுடத்தினையுடைய தலையை நிமிர்த்தினன்.
† நூக்கிய-முன்சென்ற.
‡ நூழில்செய்ய-அழிக்க.

தாரெலாந்துமிந்துநின்றதருவெலாந்துமிந்துதத்தம்
போரெலாந்துமிந்துகொண்டடுகழலாந்துமிந்துபோய. (கநிo)

அரவியற்றறுகண்வன்ரூளாள்விழுவாண்மேல்வீழப்
புரவிமேற்பூட்கைவீழப்பூட்கைமேற்பொலன்றேர்வீழ
நிரவியதேரின்மேன்மேனெடுந்தலைகிடந்தநெய்த்தோர்
விரவியகளத்துளைங்கும்வெள்ளிடையரிதுவீழ. (கநிக)

கடுப்பின்கணைமாரேயுங்கார்முகத்தம்புகையால்
தொடுக்கின்ரூன்றுரக்கின்ரூனென்றுணர்ந்திலர்துரந்தவாளி
இடுக்கொன்றுங்காணுர்காண்பதெய்தகோணெய்தினெய்திப்
படுக்கின்றபிணத்தின்பம்மற்குப்பையின்பரப்பேபல்கால். (கநிஉ)

கொற்றவாள்கொலேவேல்சூலங்கொடுஞ்சிலைமுதலகோலி
வெற்றிவெம்படைகள்யாவும்வெந்தொழிலரக்கர்மேற்கொண்
டிற்றனகூற்றுமஞ்சுவொளிர்வனவொன்றுநூரு
அற்றனவலதியாவுமரூதனவில்லையன்றே. (கநிங)

சுன்றனயானைமானக்குரகதக்கொடுந்தேர்கோப
வன்றிறலாளிசீயமற்றையபிறவுமூற்றும்
சென்றனவெல்லையில்லத்திரிந்தனசிறிதுபோதும்
நின்றனவில்லையெல்லாங்கிடந்தனநெளிந்தபார்மேல். (கநிச)

சாய்ந்ததுநிருதர்தானைதமர்தலையிடற்றித்தள்ளுற்
ரூய்ந்ததுவொழிந்ததேதாடியுலர்ந்ததுமாகவன்றே
வேய்ந்ததுவாகைவீரற்கினையவன்வரிவில்வெம்பிக்
காய்ந்ததவ்விலங்கைவேந்தன்மனமெனுங்காலச்செந்தீ. (கநிஞ)

இலக்குமண இராவணயுத்தம்.

காற்றுறழ்கலினமான்றேர்கடிதினிற்கடாவிக்கண்ணுற்
றேற்றனணிலங்கைவேந்தனெரிவிழித்திராமன்றம்பி
கூற்றுமால்கொண்டுதன்னைக்கொல்கின்ரூன்குறுகச்சென்ரூன்
சிற்றமுந்தானுநின்ரூன்பெயர்ந்திலன்சிறிதும்பாதம். (கநிசு)

வேறு.

காக்கின்றவென்னெடுங்காவலின்வலிநீக்கியகள்வ
போக்கின்றுனக்கரிதாலெனப்புகன்ரூன்புகையுயிர்ப்பான்
கோக்கின்றனதொடுக்கின்றனகொலையம்புகடூலேயா
ரூர்க்கின்றனகனலொப்பனவெய்தானிகல்செய்தான். (கநிஎ)

எய்தான்சரமெய்தாவகையிற்றீர்கெனவிடையே
வய்தாலெனவைதாவினவடிவாளியினறுத்தான்

அய்தாதலினறுத்தாயினியறுப்பாயெனவழிகார்
பெய்தாலெனச்சரமாரிகள்சொரிந்தான் * றுயில்பிரிந்தான். (கஅஅ)

ஆங்குஞ்சரமனையான்விடுமயில்வாளிகளைவைதாம்
வீங்குஞ்சரம்பருவத்திழிமழைபோல்வனவிலக்காத்
தூங்குஞ்சரநெடும்புட்டிலிற்சுடர்வேலவற்கிளையான்
வாங்குஞ்சரம்வாங்காவகையறுத்தானறமறுத்தான். (கஅக)

அனுமாராவண முட்டியுத்தம்.

அப்போதகனயர்வாறியவநுமானழல்விழியாப்
பொய்ப்போர்சிலபுரியேனெனவவன்றேரெதிர்புகுந்தான்
கய்ப்போதகமெனமுந்தவன்கடிந்தேதிரெதிர்நடந்தான்
இப்போரொழிபிற்போருளவவைகேளெனவிசைத்தான். (கஅ0)

வென்றுயுலகொருமூன்றையுமெலியாநெடுவலியால்
தின்றுய்செறிகழலிந்திரனிசையைத்திசைதிரிந்தாய்
என்றுணுமின்றழிவுன்வயினெய்தும்மெனவிசையா
நின்றுனவனெதிரேயுலகளந்தானெனநிமிர்ந்தான். (கஅக)

எடுத்தான்வலத்தடக்கையினையதுபோயுலகெல்லாம்
அடுத்தாங்குறவளந்தான்றிருவடியின்வரவன்றுன்
மடுத்தாங்குறவளந்தானெனவளர்கின்றவனுருவம்
கடுத்தானெனக்கடியாற்கெதிர்காண்பாயெனக்காட்டார். (கஅஉ)

வில்லாயுதமுதலாகியவயவெம்படைமிடலோ
டெல்லாமிடைபயின்றுய்புயநாலந்திரெடியைந்தாய்
வல்லாய்செருவலியாய்திறன்மறவோயிதனெதிரே
நில்லாயெனநிகழ்த்தாநெடுநெருப்பாமெனவுயிர்ப்பான். (கஅங)

நீளாண்மையினுடனேயெதிர்நின்றுயிஃதான்றே
வாளாண்மையுமுலகேழிலுடனேயுடைவலியும்
தாளாண்மையுநிகராருமிறனியாண்மையுமினிநின்
தோளாண்மையுமிசையோடுடன்றுடைப்பேரெருபுடைப்பால். (கஅச)

பாக்கப்பலவுரைத்தென்படர்கயிலப்பெருவரைக்கும்
அரக்குற்றெரிபொறிக்கட்டிசைக்கரிக்குஞ்சிறிதனுங்கா
உரக்குப்பையினுயர்தோள்பலவுடையாயுரனுடையாய்
கூரக்குத்தனிக்கரத்திற்புடைபொறையாற்றுவைகொல்லாம். (கஅஞ)

என்றேருள்வலியதனுலெடுத்தியானெற்றவுமிறவா
நின்றுயெனினீபின்னெனுநின்கைத்தலநிரையால்
குன்றேறபுரைதோளாய்மிடல்கொடுகுத்துதிகுத்தப்
பொன்றேறனெனினின்றேடெதிர்பொருகின்றிலெனென்றுன். (கஅசு)

---

* துயில்பிரிந்தான் - நித்திரைவிட்ட இலக்குமணன்.

காரிற்கரியவண்மாருதிகழறக்கடிதுகவா
வீரற்குரியதுசொற்றனைவிறலோயொருதனியேன்
சேர்நிற்பவருளரோபிறர்நீயல்லவரினிநின்
பேருக்குலகளவேயினியுளவோபிறவென்றான். (கசுஎ)

ஒன்றுயுதமுடை யாயலையொருநீயென துறவும்
கொன்றுயுயர்தேர்மேனிமிர்கொடுவெஞ்சிலைகோலி
வன்றனையினுடன்வந்தவனெதிர்வந்துனின்வலியால்
நின்றுயொடுநின்றுரினிகரோவுரைநெடியோய். (கசுஅ)

முத்தேதவர்கண்முதலாயினர்முழுமூன்றுலகிடையும்
எத்தேதவர்களெத்தானவரெவ்வீரர்களென்னேர்
பித்தேதறினரல்லாவிடைபோராதெதிர்மார்பில்
குத்தேதயெனநின்றுயிதுகூறுந்தரமன்றால். (கசுக)

பொருகைத்தலமிருபத்துளபுகழுஞ்சிறிதுளதால்
வருகைத்தலமதவெங்கரிவலிகெட்டனவருவாய்
இருகைத்தலமுடையாயெதிரிவைசொற்றனையினிமேல்
தருகைக்குரியதொர்கொற்றமெனமர்தக்கதுமன்றால். (கஎ0)

திசையத்தனையையும்வென்றதுசிதையப்புகழ்தெறுமவ்
வசைமற்றினியுளவேயெனதுயிர்போல்வருமகனை
அசையத்தரையரைவித்தனையழிசெம்புனலதுவோ
பசையற்றிலதொருநீயெனதெதிர்நின்றிவைபகர்வாய். (கஎக)

பூணித்திவையுரைசெய்தனை * யதலுலுரைபொதுவே
பாணித்ததுபிறிதென்சிலபகர்கின்றதுபழியால்
ஈணித்தலையிடுகின்றிலனெனிவந்துலகெவையும்
காணக்கடிதெதிர்குத்துதியென்றான்வினைகடியான். (கஎஉ)

வீரத்திறமிதுகன்றெனவியவாமிகவிளியாத்
தேரிற்கடிதிவராமுழுவிழியிற்பொறிசிதற
ஆரத்தொடுகவசத்துடல்பொடிபட்டுகவவன்மா
மார்பிற்கடிதெதிர்குத்தினன்வயிரக்கரமதனால். (கஎங)

† அயிருக்கனெடுமால்வரையனலுக்கன்விழிகள்
தயிருக்கனமுழுமூலாகடலையுக்கனதரியா
உயிருக்கனிருதக்குலமுயர்வானரமெவையும்
மயிருக்கனவெயிறுக்கனமழையுக்கனவானம். (கஎச)

விற்சிந்தினெடுநொணிமிர்கரைசிந்தினவிரிநீர்
கற்சிந்தினகுலமால்வரைகதிர்சிந்தினசுடரும்

---

* அதலுலுயிர் என்றும் பாடம்.

† அயிருக்கன - நுண்மணல் சிதறினாற்போல.

பற்சிந்தினமதயானைகள்படைசிந்தினரெவரும்
எற்சிந்தினவெரிசிந்தினவிகலோன்மணியகலம். (கஎந)

கைக்குத்ததுபடலுங்கழனிருதர்க்கிறைகறைநீர்
மைக்குப்பையினெழில்கொண்டொளிர்வயிரத்தடமார்பில்
திக்கிற்சின்மதயானைகள்வயவெம்பணைசெருவில்
புக்கிற்றணபோகாதனபுறமுக்கனபுகழின். (கஎசு)

அள்ளாடியகவசத்தவிர்மணியற்றனதிசைபோய்
விள்ளாநெடுமுழுமீனைனவிழிவெம்பொறியெழினின்
றுள்ளாடியநெடுங்கால்பொரவொடுங்காவுலகுலையத்
தள்ளாடியவடமேருவிற்சலித்தானறம்வலித்தான். (கஎஎ)

ஆர்த்தார்விசும்புறைவோர்நெடிதநுமான்மிசையதிகம்
தூர்த்தார்நறுமுழுமென்மலரிசையாசிகள்சொன்னர்
வேர்த்தார்நிருதர்கள்வானவர்வியந்தாரவன்விசயம்
தீர்த்தானெனவுவந்தாடினர்முழுமெய்ம்மயிர்சிலிர்த்தார். (கஎஅ)

கற்றங்கியினெடுவாயுவினிலகண்டவர்கதியால்
மற்றங்கொருவடிவுற்றதுமாருடிறுகாலப்
* பற்றங்கொருமையிலன்னதுபயில்கின்றதொர்செயலா
உற்றங்கதுபுறம்போயுடல்புகுந்தாலெனவுணர்ந்தான். (கஎக)

உணராநெடிதுயிராவுரையுதவாவெரியுமிழா
இணையாருமிலவனேர்வரவெய்தாவலிசெய்தாய்
அணையாயினியெனதூழனவடராவெளிபடராப்
பணையார்புயமுடையானிடைசிலவிம்மொழிபகர்ந்தான். (கஅ0)

வலியென்பதுமுளதேயதுநின்பாலதுமறவோய்
† அலியென்பனபுறநின்றனவுலகேழினுமடைத்தாய்
சலியென்றதிர்மலரோனுரைதந்தாவிறசலியேன்
மெலிவென்பதுமுணர்ந்தேதனெனவென்றுயினிவிறலோய். (கஅக)

ஒன்றுண்டினியுரைநேர்குவதுன்மார்பினென்னுருகைக்
குன்றின்மிசைகடைநாள்விழுமுருமேமெறனக்குளித்தால்
நின்றிங்கிலதருவாயெனினீயல்லவருளோரா
இன்றும்முளையென்றும்முளையிலையோர்பகையென்றான். (கஅஉ)

என்றுனெதிர்சென்றுனிகலடுமாருதியெனநீ
வென்றியலையோவுன்னுயிர்வீடாதுரைசெய்தாய்

---

* பற்றங்கொருமையில்-அங்குபற்றியிருந்த ஒரு பிறப்பில்.

† அலியென்பனபுறநின்றன - நின்னையன்றி வேறுகவுள்ளன அலியாயுள்ளன.

நன்றுகநின்னிலநன்றெனநல்காவெதிர்நடவாக்
குன்றுகியதிரடோளவன்கடன்கொள்கெனக்கொதித்தான். (கஅந)

உறுக்கித்தனியெதிர்நின்றவனுரத்திற்றனதொளிர்பல்
இறுக்கிப்பலநெடுவாய்மடித்தெரிகண்டொறுமிழிய
முறுக்கிப்பொறிநிமிரப்பலவிரன்மூரியதிசையக்
குறுக்கிக்கரநெடுந்தோள்புறநிமிரக்கொடுகுத்த. (சஅச)

பள்ளக்கடல்கொள்ளப்படர்படிபோனும்பதையா
வள்ளப்பெருவெள்ளத்தெறுழ்வலியாரினும்வலியான்
கள்ளக்கறையுள்ளத்ததிர்கழல்வெய்யவன்கரத்தால்
தள்ளத்தளர்வெள்ளிப்பெருங்கிரியாமெனச்சலித்தான். (கஅஞ)

வேறு.

சலித்தகாலயினிமையவருலகெலாஞ்சலித்த
சலித்ததாலறஞ்சலித்ததுமெய்ம்மொழிதகவும்
சலித்ததன்றியும்புகழொடுசுருதியுஞ்சலித்த
சலித்தநீதியுஞ்சலித்தனகருணையுந்தவமும். (கஅசு)

அனையகாலயினரிகுலத்தலவரவ்வழியோர்
எனைவரன்னவர்யாவருமோர்குவடேந்தி
நினைவின்முன்னெடுவிசும்பொருவெளியின்றிநெருங்க
வினையிதென்றறிந்திராவணன்மேற்செலவிட்டார். (கஅள)

ஒத்தகையினரூழியினிறுதியினுலகை
மெத்தமீதெழுமேகத்தின்விசும்பெலாமிடையப்
பத்துநூறுகோடிக்குமேற்பனிபடுசிகரம்
எத்தமேற்செலவெறிந்தனர்பிறிந்தனரிமையோர். (கஅஅ)

தருக்கிவீசிடவிசும்பிடமின்மையிற்றம்மின்
நெருக்குகின்றனநின்றனசென்றிலநிறைந்த
அருக்கனும்மறைந்தானிருள்விழுங்கியதண்டம்
சுருக்கமுற்றனரரக்கரென்றிமையவர்சூழ்ந்தார். (கஅக)

ஒன்றையொன்றுபட்டொடிவனவிடித்துருமதிரச்
சென்றவன்பொறிமின்பலசெறிந்திடத்தெய்வ
வென்றிவில்லெனவிருகிலம்வீழ்ந்திடமேன்மேல்
கன்றியோடிடக்கண்மழைநிகர்த்தனகற்கள். (கக0)

இரிந்துநீங்கியவிராக்கதப்பெரும்படையெங்கும்
விரிந்துசிந்தினவானத்துமீனெடுவிமானம்
சொரிந்தவெம்பொறிபடக்கடல்சுவறினதோற்றம்
கரிந்தகண்டகர்கண்மணியெனப்பலகழறி. (ககக)

இறுத்ததின் றுலகென்பதோர்திமிலம்வந்தெய்தக்
கறுத்தசிந்தையனிராவணனேயதுகண்டான்
ஒறுத்துவானவர்புகழுண்டபாரவில்லுளைய
அறுத்துநீக்கினனுயிரகோடிமேலம்பால். (ககஉ)

காம்பெலாங்கடுந்துகள்படக்களிறலாந்துணியப்
பாம்பெலாம்படவாளியுமுழுவையும்பாறக்
கூம்பர்மாமரமெரிந்துகக்குறுந்துகணெருங்கச்
சாம்பராயினதடவரைசுடுகணேதடிய. (ககங)

* உற்றவாறென்றுமொன்றுநூறுயிரமுருவா
இற்றவாறென்றுமிடிப்புண்டுபொடிப்பொடியாகி
அற்றவாறென்றுமரக்கனேயடுசிலக்கொடியோன்
கற்றவாறென்றும்வானவர்கைத்தலங்குலத்தார். (ககச)

அடறுடைத்துமென்றரிகுலவீரன்றெறிந்த
† திடறுடைத்தனதசமுகன்சிரமவைதிசைசூழ்
கடறுடைத்தனகளத்தினின்றுயர்தரும்பூழி
உடறுடைத்தனவுதிரமுந்துடைத்ததொண்புடவி. (ககஞ)

கொல்வெனிக்குறியேயமற்றிவ்வானரக்குழுவை
வெல்வென்மானுடரிருவரையெனச்சினம்வீங்கப்
பல்வன்வார்சிலபத்துடனிடக்கையின்வாங்கித்
தொல்வன்மாரியிற்றொடர்வனசுடுசரந்துரந்தான். (ககசு)

அய்யிரண்டுகார்முகத்திலுமாயிரம்பகழி
கய்களீரைந்திலுலும்வெங்கடுப்பினிற்றொடுத்துற்
றெய்யவெஞ்சினவானமுமிருநிலவரைப்பும்
மொய்கொள்வேலையுந்திசைகளுஞ்சரங்களாய்முடிந்த. (ககஎ)

அந்திவானகமொத்ததவ்வமர்க்களமுதிரம்
சிந்திவேலையுந்திசைகளுநிறைந்தனசரத்தால்
பந்திபந்தியாய்மடிந்ததுவானரப்பகுதி
வந்துமேகங்கள்படிந்தனபிணப்பெருமலைமேல். (ககஅ)

நீலனம்பொடுசென்றிலனின்றிலனிலத்தான்
காலனுர்வயத்தடைந்திலனேவுண்டகவயன்
ஆலமன்னதோர்சரத்தொடுமங்கதனயிர்த்தான்
சூலமன்னதோர்வாளியாற்சோம்பினன்சாம்பன். (ககக)

மற்றும்வீரர்தம்மருமத்தினயிலம்புமடிப்பக்
கொற்றவீரமுமாண்டொழிற்செய்கையுங்குறைந்தார்

---

* உற்றஆறுஎன்றும்-மலைகள்வந்தவிதமெனவும்.

† திடல்துடைத்தன-மலைகளாயழித்தனவாகிய.

சுற்றும்வானரப்பெருங்கடலெழுலந்ததுதாலையா
தற்றுநின்றவரோடினரிலக்குவனுருத்தான். (உ00)

நூறுகோடியநூறுநூழுயிரகோடி
வேறுவேறெய்தசரமெலாஞ்சரங்களால்விலக்கி
ஏறுசேவகன்றம்பியவ்விராவணனெடுத்த
ஆறுநாலுவெஞ்சிலையையுங்கணைகளாலறுத்தான். (உ0க)

ஆர்த்துவானவராவலங்கொட்டினரரக்கர்
வேர்த்துநெஞ்சமும்வெதும்பினர்வினயறுமுனிவர்
தூர்த்துநாண்மலர்சொரிந்தனரிராவணன்றோஷப்
பார்த்துவந்தனன்குனித்ததுநல்லறம்பாடி. (உ0உ)

நன்றுபோர்வலிநன்றுபோராள்வலிவீரம்
நன்றுநோக்கமுநன்றுகைக்கடுமையுநன்று
நன்றுகல்வியுநன்றுநின்றிண்மையுநலனும்
என்றுகைம்மறித்திராவணனெருவனீயென்றான். (உ.0ங)

கானினன்றிகற்கரன்படைபடுத்தவக்காரியோன்
தானுமிந்திரன்றன்னையோர்தனுவலந்தன்றல்
வானின்வென்றவென்மதலையும்வாரிசிலபிடித்த
யானுமல்லவர்யாருனக்கெதிரென்றுமிசைசத்தான். (உ0ச)

வில்லிலுலிவன்வெலப்படானெனச்சினம்வீங்கக்
கொல்லுநாளுமின்றிதுவெனச்சிந்தையிற்கொண்டான்
பல்லிலுலிதழுதுக்கினன்பருவலிக்கரத்தால்
எல்லிலுன்முகன்கொடுத்ததேர்வேலெடுத்தெறிந்தான். (உ0ஞ)

எறிந்தகாலவேலெய்தவம்பியாவையுமெரிந்து
பொறிந்துபோயுகத்தீயுகவிசையினிற்பொங்கிச்
செறிந்ததாரவன்மார்பிடைச்சென்றதுசிந்தை
அறிந்தமைந்தனுமமர்நெடுங்களத்திடையயர்ந்தான். (உ0ட)

இரியலுற்றதுவானரப்பெரும்படையிமையோர்
பரியலுற்றனருலைந்தனர்முனிவரும்பதைத்தார்
விரிதிரைக்கடற்கிரட்டிகொண்டார்த்தனர்விரவார்
திரிகையொத்ததுமண்டலங்கதிரொளிதிரிந்த. (உ0ள)

அஞ்சினலனயன்றந்தவேலினுமாவி
துஞ்சினலன்றுளங்கினனென்பதுதுணியா
எஞ்சில்யாக்கையையெடுத்துக்கொண்டகல்வெனென்றெண்ணி
நஞ்சுநற்செய்தமனத்தினன்பாரின்மேனடந்தான். (உ0அ)

உள்ளிவெம்பிணத்துதிரநீர்வெள்ளத்திணடி
அள்ளியங்கைகளிருபதும்பற்றிப்பண்டரன்மா
வெள்ளியங்கிரியெடுத்தனன்வெள்கிஞனென்ன
எள்ளில்பொன்மலையெடுக்கலுற்றனனெனவெடுத்தான். (உ0க)

அடுத்தநல்லுணர்வொழிந்தில * ணம்பரஞ்செம்பொன்
உடுத்தநாயகன்றனெனவுணர்தலிலுருங்கே
தொடுத்தவெண்வகைமூர்த்தியைத்துளக்கிவெண்பொருப்போ
டெடுத்ததோள்களுக்கெழுந்திலனிராமனுக்கிளையான். (உகo)

தலைகள்பத்தொடுந்தழுவியதசமுகத்தலவன்
நிலைகொண்மாகடலொத்தனன்கரம்புடைநிமிரும்
அலைகளொத்தனவதிலெழுமாமதியொத்தான்
இலைகொடண்டழாயிலங்குதோளிராமனுக்கிளையான். (உகக)

எடுக்கலுற்றவன்மேனியையேந்துதற்கேற்ற
மிடுக்கிலாமையினிராவணன்வெய்துயிர்ப்புற்றான்
இடுக்கினின்றவம்மாருதிபுகுந்தெடுத்தேந்தித்
தடுக்கலாததோர்விசையினெனெழுந்தயல்சார்ந்தான். (உகஉ)

தொகவொருங்கியவூனமென்றவரினுந்தூயான்
தகவுகொண்டதோள்பெறுந்தனித்துணையல்லால்
அகவுகாதலாலாண்டகையென்னினுமநுமன்
மகவுகொண்டுபோய்மரம்புகுமந்தியைநிகர்த்தான். (உகங)

மய்யல்கூர்மனத்திராவணன்படையினுண்மயங்கும்
செய்யவாளரியேறனுன்சிறிதினிற்றேறறிக்
கய்யுங்கால்களுநயனமுங்கமலமேயனைய
பொய்யிலாதவனின்றிடத்தநுமனும்போனான். (உகச)

போனகாலையிற்புக்கனன்புங்கவன்போர்வேட்
டியானைமேற்செலுங்கோளரியேறிவனென்ன
வானுளோர்கணமார்த்தனர்தூர்த்தனர்மலர்மேல்
தூநவின்றவேலரக்கனுந்தேரினைத்துரந்தான். (உகஞ)

தேரிற்போரரக்கன்செலச்சேவகன்செவ்வே
பாரிற்செல்கின்றவறுமையையோக்கினன்பரிந்தான்
சீரிற்செல்கின்றதில்லையிச்செருவெனுந்திறத்தால்
வாரிற்பெய்கழன்மாருதிகதுமெனவந்தான். (உகசு)

பண்டைநாடருபனித்திரைப்புனல்சடையேற்றுக்
கொண்டதூயவன்கொடுந்தொழினிருதர்கள்குழுமி

---

* அம்பரம் - ஆடை.

மண்டுவாளமர்க்களத்திலம்மலர்க்கழல்சேறல்
கண்டுகூசலனிற்குமென்றலதுகடனே. (உகஎ)

நூறுபத்துடைநொறில்பரித்தேரின்மேனுன்முன்
மாறில்போரரக்கன்பொராநிலத்துநீமலைதல்
வேறுகாட்டுமோர்வெறுமையையுமெல்லியவெனினும்
ஏறுநீயையவென்னுடைத்தோளின்மேலென்றான். (உகஅ)

அனுமன்ராளிலிராமனேறி நிற்றல்.

நன்றுநன்றெனைநாயகனேறினமைக்
குன்றின்மேலிவர்கோளரியேறெனக்கூறி
அன்றுவானவராசிகளியம்பினரீன்ற
கன்றுதாங்கியதாயெனமாருதிகளித்தான். (உகக)

மாணியாயுலகளந்தநாளவனுடைவடிவை
ஆணியாயுணர்மாருதியதிசயமுற்றான்
காணியாகப்பண்டுடையனுமொருதனிக்கழுமன்
நாணினன்மற்றையநந்தனுந்தலைநடுக்குற்றான். (உஉ0)

ஓதமொத்தனன்மாருதியதனகத்துறையும்
நாதனைத்தனனென்னிலேதுயில்கிலனம்பன்
வேதமொத்தனன்மாருதிவேதத்தின்சிரத்தின்
போதமொத்தனனிராமன்வேறிதனினில்பொருவே. (உஉக)

வேறு.

தகுதியாய்நின்றவென்றிமாருதிதனிமைசார்ந்த
மிகுதியைவேறுநோக்கினெவ்வண்ணம்விளம்புந்தன்மை
*புகுதிகூர்ந்துள்ளார்வேதம்பொதுவுறப்புலத்துநோக்கும்
பகுதியையொத்தான்வீரன்மேலுத்தன்பதமேயொத்தான். (உஉஉ)

மேருவின்சிகரம்போன்றதென்னினும்வெளிறுண்டாமால்
சூரிநீரண்டமெல்லாம்வயிற்றிடைமுன்னங்கொண்ட
ஆரியற்கனேகமார்க்கத்தாலிடம்வலமதாகச்
சாரிகைதிரியலானமாருதிதருமப்பொற்றேரான். (உஉங)

வேறு.

ஆசிசொல்வினரருந்தவரறமெனுந்தெய்வம்
காசினன்னெடுங்கரமெடுத்தாடிடக்கயிலை
ஈசனென்முகனென்றிவர்முதலியவிமையோர்
பூசல்காணியவந்தனரந்தரம்புகுந்தார். (உஉச)

---

* புகுதி-புகு-புகுந்த, தி-அறிவு.

அண்ணலஞ்சனவண்ணனுமமர்குறித்தமர்ந்தான்
எண்ணரும்பெருந்தனிவலிச்சிலையைநாணெறிந்தான்
மண்ணும்வானமுமற்றையபிறவுந்தன்வாய்ப்பெய்
துண்ணுங்காலத்தவ்வுருத்திரனர்ப்பொத்தேதாதை. (உஉந)

ஆவிசென்றிலர்நின்றிலராரக்கரோடியக்கர்
நாவுலர்ந்தனர்கலங்கினர்விலங்கினர்நடுங்கிக்
கோவைநின்றபேரண்டமுங்குலைந்தனகுலையாத்
தேவதேவனும்விரிஞ்சனுஞ்சிரதலங்குலைந்தார். (உஉசு)

இராமராவணயுத்தம்.

ஊழிவெங்கனலொப்பனதுப்பனவுருவ
ஆழிநீரையுங்குடிப்பனதிசைகளையளப்ப
வீழின்மீச்செலின்மண்ணையும்விண்ணையுந்தாளைப்ப
எழுவெஞ்சரமுடன்றொடுத்திராவணனெய்தான். (உஉஎ)

எய்தவாளியையேழினுலேழினேடழு
செய்துவெஞ்சரமைந்தொருதொடையினிற்சேர்த்தி
வெய்துகாலவெங்கனல்களும்வெள்குறப்பொறிகள்
பெய்துபோம்வகையிராகவன்சிலைநின்றுபெயர்த்தான். (உஉஅ)

வாளியைந்தையுமைந்தினுல்விசும்பிடைமாற்றி
ஆளிமொய்ம்பினவ்வரக்கனுமையிரண்டம்பு
தோளிணுணுறவாங்கினன்றுரந்தனன்சுருதி
ஆளுநாயகனவற்றையுமவற்றினுலறுத்தான். (உஉக)

அறுத்துமற்றவனையனின்றவளக்கருமளக்கர்
செறுத்துவிட்டனபடையெலாங்கணைகளாற்சிந்தி
இறுத்துவீசியகிரிகளையெரியுகநூறி
ஒறுத்துமற்றவர்தலைகளாற்சிலமலையுயர்த்தான். (உஙO)

மீனுடைக்கருங்கடல்புரையிராக்கதர்விட்ட
ஊனுடைப்படையிராவணனம்பொடுமோடி
வானரக்கடல்படாவகைவாளியான்மாற்றித்
தானுடைச்சரத்தாலவர்தலைமலைதடிந்தான். (உஙக)

இம்பராணனின்விசும்பினுகுமோரிமைப்பின்
தும்பைசூடியவிராவணன்முகந்தொறுந்தான்றும்
வெம்புவஞ்சகர்விழிதொறுந்திரியுமேனின்றுன்
அம்பின்முன்செலுமனத்திற்குமுன்செலுமநுமன். (உஙஉ)

ஆடுகின்றனகவந்தமுமவற்றொடுமோடிப்
பாடுகின்றனவலகையுநீங்கியபணைக்கைக்

கோடுதுன்றியகரிகளும்பரிகளுந்தலைக்கொண்
டோடுகின்றனவுலப்பிலவுதிரவாறுவரி. (உகஉ)

அற்றவாழியவறுப்புண்டவச்சினவம்போ
டிற்றகொய்யுளைப்புரவியதேர்க்குலமெல்லாம்
ஒற்றைவாளியோடிருண்டனகருங்களிற்றீருங்கல்
சுற்றும்வாசியுந்துமிந்தனவமர்க்களந்தொடர்ந்த. (உகஉ)

தேரிழந்துவெஞ்சிலைகளுமிழந்துசெந்தறுகட்
காரிழந்துவெங்கலினமாக்கால்களுமிழந்து
சூரிழந்துவன்கவசமுமிழந்துதுப்பிழந்து
தாரிழந்துபின்னிழந்தனர்நிருதர்தந்தலைகள். (உகஏ)

அரவினுண்ணிடையரக்கியர்கணவரன்றற்ற
சிரமுமன்னவையாதலின்வேற்றுமைதெரியாப்
புரவியின்றலைபூட்கையின்றலையினவைபொருத்திக்
கரவிலின்னுயிர்துறந்தனர்கவ்வுறத்தழுவி. (உகஐ)

ஆர்ப்படங்கினவாயெலாமழற்கொழுந்தொழுகப்
பார்ப்படங்கினகண்ணெலாம்பலவகைப்படைகள்
தூர்ப்படங்கினகையெலாந்தூளியின்படலைப்
போர்ப்படங்கினவுலகெலாமுரசெலாம்போன. (உகஒ)

ஒன்றுநூற்றிரேடாயிரங்கொடித்தலையுருட்டிச்
சென்றுதீர்வனவெனைப்பலகோடியுஞ்சிந்தி
நின்றதேதொடுமிராவணனெருவனுநிற்பக்
கொன்றுவீழ்த்தினதிராகவன்சரமெனுங்கூற்றம். (உகக)

தேருமியானையும்புரவியுமரக்கருந்தெற்றிப்
பேருமோரிடமின்றெனத்திசைதொறும்பிறங்கிக்
காரும்வானமுந்தொடுவனபிணக்குவைகண்டான்
மூரிவெஞ்சிலையிராவணனராவெனமுனிந்தான். (உகஓ)

மூரண்டொகுஞ்சிலையிமைப்பினின்முறையுறவாங்கிப்
பூரண்டுதோளுறப்பொலன்கொணண்வலம்படப்போக்கித்
திரண்டவாளிகள்சேவகன்மரகதசிகரத்
திரண்டுதோளினுமிரண்டுபுக்கழுந்திடவெய்தான். (உஙஐ)

முறுவலெய்தியமுகத்தினன்முளரியங்கண்ணன்
மறுவிலாததேர்வடிக்கணெதாடுத்துறவாங்கி
இறதியெய்துநாட்கால்பொரமந்தரமிடையிட்
டுறுவதாமெனவிராவணன்சிலையினையறுத்தான். (உஙக)

மாற்றும்வெஞ்சிலவாங்கினன்வடிம்புடைநெடுநாண்
ஏற்றுரமுனமிடையறக்கணைகளாலெய்தான்
காற்றினுங்கடிதாவனகதிர்மணிநெடுந்தேர்
ஆற்றுகொய்யுளைப்புரவியின்சிரங்களுமறுத்தான். (உகஉ)

மற்றும்வெம்படைவாங்கினன்வழங்குரமுன்னம்
இற்றவிந்துகவெரிகணையிடையறவெய்தான்
கொற்றவெண்குடைகொடியொடுந்துணிபடக்குறைத்தான்
கற்றையஞ்சுடர்க்கவசமுங்கட்டறக்கழித்தான். (உகங)

மாற்றுத்தேரவண்வந்தனவந்தனவாரா
வீற்றுவீற்றுகவெயிலுமிழ்கதிங்கணைவிட்டான்
சேற்றுச்செம்புனற்படுகளப்பரப்பிடைச்செங்கட்
கூற்றுங்கையெடுத்தாடிடவிராவணன்கொதித்தான். (உகச)

இராவணன் மகுடபங்கம்.

மின்னும்பன்மணிமவுலிமேலொருகணைவிட்டான்
அன்னகாய்கதிரவிமேற்பாய்ந்தபோரநுமன்
என்னலாயதோர்விசையினிற்சென்றவன்றலையில்
பொன்னின்மாமணிமகுடத்தைப்புணரியில்வீழ்த்த. (உகந)

செறிந்தபன்மணிப்பெருவனத்திசைபரந்தெரியப்
பொறிந்தவாய்வயக்கதிருஞ்சுடர்க்கணைபடும்பொழுதின்
எறிந்தகால்பொரமேருவின்கொடுமுடியிழந்து
மறிந்துவீழ்ந்ததுமொத்ததவ்வரக்கன்றன்மகுடம். (உகசு)

அண்டர்நாயகனதிருஞ்சிலையுதைத்தபரம்பு
கொண்டுபோகப்போய்க்குரைகடற்குளித்தவக்கொள்கை
மண்டலந்தொடர்வயங்குவெங்கதிர்களாவாயால்
உண்டகோளொடுமொலிகடல்வீழ்ந்ததுமொக்கும். (உகள)

சொல்லுமத்தனையளவையின்மணிமுடிதுறந்தான்
எல்லிமைத்தெழுமதியமுளாயிறுமிழ்ந்த
அல்லுமொத்தனன்பகலுமொத்தனனமர்பொருமேல்
வெல்லுமத்தனையல்லதுதோற்றிலாவிறலோன். (உகஅ)

மாற்றருந்தடமணிமுடியிழந்தவாளரக்கன்
ஏற்றமெவ்வுலகத்தினுமுயர்ந்துளானெனினும்
ஆற்றனன்னெடுங்கவிஞரோரங்கதமுரைப்பப்
போற்றரும்புகழிழந்தபேரொருவனும்போன்றான். (உகக)

அறங்கடந்தவர்செயலிதென்றுலகெலாமார்ப்ப
நிறங்கரிந்திடநிலம்விரல்கிளைத்திடநின்றான்

இறங்குகண்ணினனெல்லழிமுகத்தினன்றலையன்
வெறுங்கைநாற்றினன்விழுதுடையாலன்னமெய்யன். (உருஅ)

இராமனிராவணனுக்கற முரைத்தல்.

நின்றவன்னிலேநோக்கியநெடுந்தகையிவனைக்
கொன்றலுன்னிலன்வெறுங்கைநின்முனைனக்கொள்ளா
இன்றவிந்ததுபோலுமுன்றீமையென்றிசையோ
டொன்றவந்தனவாசகமினையனவுரைத்தான். (உருக)

அறத்திலைன்றியமரர்க்குமருஞ்சமங்கடத்தல்
மறத்திலைரிதென்பதுமனத்திடைவலித்தி
பறத்திநின்னெடும்பதிபுகக்கிளையொடும்பாவி
இறத்தியானதுநினைக்கிலென்றனிமைகண்டிரங்கி. (உருஉ)

உடைப்பெருங்குலத்தினொடுமுறவொடுமுதலும்
படைக்கலங்களுமற்றுநீதடியபலவும்
அடைத்துவைத்தன திறந்துகொண்டாற்றுதியாயின்
கிடைத்தியல்லையேலொளித்தியாற்சிறுதொழிற்கீழாய். (உருங)

சிறையில்வைத்தவடன்னைவிட்டுலகினிற்றேறவர்
முறையில்வைத்துநின்றம்பியையிராக்கதர்முதற்போர்
இறையில்வைத்தவற்கேவல்செய்திருத்தியேலின்னும்
தறையில்வைக்கிலெனின்றலைவாளியிற்றடிந்து. (உருச)

அல்லையாமெனிராமராற்றெறுங்தோற்றம்
வல்லையாமெனினுனக்குளவலியெலாங்கொண்டு
நில்லையாவெனநேர்நின்றுபொன்றுதியெனினும்
நல்லையாகுதிபிழைப்பினியுண்டெனநயவேல். (உருஞ)

* ஆளையாவுனக்கமைந்தனமாருதமறைந்த
பூளையாயினகண்டனையின்றுபோய்ப்போர்க்கு
நாளைவாவெனநல்கினகிளங்கமுகின்
வாளைதாவுறுகோசலைநாடுடைவள்ளல். (உருசு)

கசு-வது, முதற்போர்ப்படலம் — முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஉக அ.

---

* ஆளையா-அரக்கரை ஆளும் அரசனே.

கந்-வது, கும்பகருணன்வதைப்படலம்.

வாரணம்பொருதமார்பும்வரையினெடுத்ததோளும்
நாரதமுனிவற்கேற்பநயம்படவுரைத்தநாவும்
தாரணிமவுலிபத்துஞ்சங்கரன்கொடுத்தவாளும்
வீரமுங்களத்தேதபோட்டுவெறுங்கையோடிலங்கைபுக்கான். (க)

கிடந்தபோர்வலியார்மாட்டேகெடாதவானவரையெல்லாம்
கடந்துபோயுலகமூன்றுங்காக்கின்றகாவலாளன்
தொடர்ந்துபோம்பழியிலேடுத்தூக்கியகரங்களோடும்
நடந்துபோய்நகரம்புக்கானருக்கனுநாகஞ்சேர்ந்தான். (உ)

மாதிரமெலையுநோக்கான்வளநகர்நோக்கான்வந்த
காதலர்தம்மைநோக்கான்கடற்பெருஞ்சேனைநோக்கான்
தாதவிழ்கூந்தன்மாதர்தனித்தனிநோக்கத்தானப்
பூதலமென்னுங்கைதன்னையேநோக்கிப்புக்கான். (ங)

நாளொத்தநளினமன்னமுகத்தியர்நயனமெல்லாம்
வாளொத்தமைந்தர்வார்த்தையிராகவன்வாளியொத்த
கோளொத்தசிறைறவைத்தாண்டகொற்றவற்கற்றைநாடன்
தாளொத்தநுணைமென்கொங்கைநோக்கங்குத்தொடர்கிலாமை. (சு)

மந்திரச்சுற்றத்தாரும்வாணுதல்சுற்றத்தாரும்
தந்திரச்சுற்றத்தாருந்தன்கிளைச்சுற்றத்தாரும்
எந்திரப்பொறியினிற்பயாவருமின்றித்தாமேர்
சிந்துரக்களிறுகூடம்புக்கெனக்கோயில்சேர்ந்தான். (ஞ)

ஆண்டொருசெம்பொற்பீடத்திருந்துதன்வருத்தமாறி
நீண்டுயர்நினைப்பனைகிக்கஞ்சுகியயனின்றுனை
ஈண்டுநந்தாதர்தம்மையிவ்வழித்தருதியென்றுன்
பூண்டதோர்பணியின்வல்லைநால்வரைக்கொண்டுபுக்கான். (சு)

மனகதிவாயுவேகன்மருத்தன்மாமேகனென்றிவ்
வினையறிதாழிலர்மூன்றுவாயிலர்விரவிநுழை
நினைவதன்முன்னைநீர்போய்நெடுந்திசையெட்டுநீந்தி
கனைகழலரக்கர்தானைகொணருதிர்கடிதினென்றான். (எ)

ஏழ்பெருங்கடலுஞ்சூழ்ந்தவேழ்பெருந்தீவுமெண்ணில்
பாழியம்பொருப்புங்கீழ்பாலுதித்தபாதாளத்துள்ளும்

ஆழியங்கிரியின்மேலுமரக்கரானவரையெல்லாம்
தாழ்விலிர்கொணர்திரென்ரூனவரதுதலைமேற்கொண்டார். (அ)

மூவகையுலகுளோருமுறையினின்றேறவல்செய்வார்
பாவகமின்னதென்றுதெரிகிலர்பதைத்துவிம்மித்
தூவகலாதவைவாயெஃகுறத்தொளக்கையாலே
சேவகமமைந்ததென்னச்செறிமலரமளிசேர்ந்தான். (கூ)

பண்ணிறைபவளச்செவ்வாய்ப்பைந்தொடிச்சீதையென்னும்
பெண்ணிறைகொண்டகெஞ்சிணிறைகொண்டபின்னர்க்
கண்ணிறைகோடல்செய்யான்கையறுகவலைசுற்ற
உண்ணிறைமானந்தன்னையுமிழ்ந்தெரியுயிர்ப்பதானான். (கக)

வானகுமண்ணுமெல்லாநகுநெடுவயிரத்தோளான்
நானகுபகைஞரெல்லாநகுவரென்றதற்குநாணான்
வேனகுநெடுங்கட்செவ்வாய்மெல்லியன்மிதிலைவந்த
சானகிநகுவளென்றேறநாணத்தாற்சாம்புகின்ரூன். (கஉ)

மாலியவான் இராவணனிடம் வருதல்.

ஆங்கவன்றன்மூதாதையாகியமூப்பின்யாக்கை
வாங்கியவர்விலன்னமாலியவானென்ரோதும்
பூங்கழலரக்கன்வந்துபொலங்கழலிலங்கைவேந்தைத்
தாங்கியவமளிமாடோர்தவிசுடைப்பீடஞ்சார்ந்தான். (கஎ)

இருந்தவனிலங்கைவேந்தனியற்கையையெய்தநோக்கிப்
பொருந்தவந்துற்றபோரிற்ரோற்றனன்போலுமென்ரை
வருந்தினைமணமுந்தோளுரம்வாடினைநாளுரம்வாடாப்
பெருந்தவமுடையயைவையவென்னுற்றபெற்றியென்ரூன். (கஅ)

இராவணன் மாலியவானிடமிராமன் போர்வலி கூறுதல்.

கவையுறுநெஞ்சன்காந்திக்கனல்கின்றகண்ணன்பத்துச்
சிவையின்வாயென்னச்செந்தீயுயிர்ப்புறச்சிவந்தமூக்கன்
நவையறுபாகையன்றியமுதினைநக்கிலுலும்
சுவையறப்புலர்ந்தநாவானினையனசொல்லலுற்ரூன். (கக)

சங்கம்வந்துற்றகொற்றத்தாபதர்தம்மோடெம்மோ
டங்கமவந்துற்றதாகவமராவந்துற்றதாறரூ
கங்கம்வந்துற்றசெய்யகளத்துநங்குலத்துக்கொவ்வாப்
பங்கம்வந்துற்றதன்றிப்பழியும்வந்துற்றதென்ரூன். (கஉ)

இராவணனிலக்குமணனை வியத்தல்.

மூவாயமைதிங்கள்சூடுமுக்கணன்முதல்வனைக
கோவாயமைபுவனமூன்றும்வந்துடன்கிடைத்தவேனும்

வளையமைவரிவில்வாளிமெய்யுறவழங்குமாயின்
இளையவன்றனக்குமாற்றுதென்பெருஞ்சேனைநம்ப. (கசு)

இராமனை வியத்தல்.

எறித்தபோரரக்காவியெண்ணிலாவெள்ளமெஞ்சப்
பறித்தபோதென்னையந்தப்பரிபவமுதுகிற்பற்றப்
பொறித்தபோதன்னைநந்தக்கூனிகூன்போகவுண்டை
செறித்தபோதாத்ததன்றிச்சினவுண்மைதெரிந்திலேல. (கள)

மலையுறப்பொரியராயவாளெயிற்றரக்கர்தானை
நிலையுறச்செறிந்தவெள்ளநூற்றிரண்டெனினுநேரே
குலையுறக்குளித்தவாளிகுதிரையைக்களிற்றையாளின்
தலையறப்பட்டதல்லாலுடல்களிற்றங்கிற்றுண்டோ. (கஅ)

போயபினவன்கைவாளியுலகெலாம்புகுவதல்லால்
ஓயுமென்றுரைக்கலாமோவூழிசென்றுலுலாழித்
தீயையுந்தீக்குஞ்செல்லுந்திசையையுந்தீக்குஞ்சொல்லும்
வாயையுந்தீக்குமுன்னின்மனத்தையுந்தீக்குமன்றே. (கக)

மேருவையுருவுமென்றுல்விண்கடந்ததுமென்றுல்
பாரினைப்பிளக்குமென்றுற்கடல்களைப்பருகுமென்றுல்
ஆருமேயவற்றினுற்றலாற்றுமேலநந்தகோடி
மேருவும்விண்ணுமண்ணுங்கடல்களுந்வேண்டுமென்றே. (உ0)

வரிசிலைநாணிற்கோத்துவாங்கினன்விடுதலொன்றும்
தெரிகிலதமர்தலைற்றல்யாரவன்செய்கைதேர்வார்
பொருசினத்தரக்காவிபோகியபோகவென்று
கருதியவுலகமெல்லாஞ்சரங்களாய்க்காட்டுமன்றே. (உக)

நல்லியற்கவிஞர்நாவிற்பொருள்குறித்தமர்ந்தநாமச்
சொல்லெனச்செய்யுட்கொண்டதாடையெனத்தொடையைநீக்கி
எல்லையில்செல்வந்தீராவிசையெனப்பழுதிலாத
பல்லலங்காரப்பண்பேகாகுத்தன்பகழிமாதோ. (உஉ)

இந்திரன்குலிசவேலுமீசன்கையிலமுன்றென்னு
மந்திரவயிலுமாயோன்வளையெஃகின்வரவுங்கண்டேன்
அந்தரநீளிதம்மாதாபதனம்புக்காற்று
நொந்தனர்யானலாதாராரவைநோக்கநிற்பார். (உங)

பேயிருங்கணங்களோடுசுடுகளத்துறையும்பெற்றி
எயவன்றேர்ள்களெட்டுமிந்திரனிரண்டுதேரும்
மாயிருஞாலமூற்றும்வயிற்றிடைவைத்தமாயன்
ஆயிரந்தேரும்மன்னன்விரலொன்றிலுற்றலாற்று. (உச)

சீர்த்தவீரியராயுள்ளார்செங்கண்மாலெனினும்யானைக்
கார்த்தவீரியனேநேர்வாருளரெனக்கருதலாற்றேறன்
பார்த்தபோதவனுமற்றத்தாபதன்றம்பிபாதத்
தார்த்ததோர்துகளுக்கொவ்வாரைவற்காற்றகிற்பார். (உரு)

இராமனம்பினை இராவணன்மெச்சுதல்.

மூப்புரமொருங்கச்சுட்டமூரிவெஞ்சிலையும்வீரன்
அற்புதவில்லுக்கையவம்பெனக்கொளலுமாகா
ஒப்புவேறுரைக்கலாவதாருபொருளில்லைவேதம்
தப்பினபோதுமன்னென்றனுவுமிழ்சரங்கடப்பா. (உசு)

உற்பத்தியயனேயொக்குமோடும்போதரியேயொக்கும்
கற்பத்தினரனேயொக்கும்பகைருரைக்கலந்தகாலச்
சிற்பத்தினம்மாற்பேசச்சிறியவோவென்னைத்தீராத்
* தற்பத்தைத்துடைத்தவென்றூற்பிறிதொருசான்றுமுண்டோ. (உஎ)

குடக்கதோகுணக்கதேயோகோணத்தின்பாலதேயோ
தடத்தபேருலகத்தேயோவிசும்பதோவெங்குந்தாரை
வடக்கதோதெற்கதோவென்றுணர்ந்திலென்மனிசன்வல்வில்
இடத்ததோவலத்ததோவென்றுணர்ந்திலேன்யானுடின்னும். (உஅ)

எற்றமொன்றில்லையென்பதேதழுமைப்பாலதன்றே
ஆற்றல்சால்கலுழனேதானற்றுமேயமரிலற்றல்
காற்றையேமேற்கொண்டாரைகனலையேகடாவினரே
கூற்றையேயூர்கின்றூரைகுரங்கின்மேற்கொண்டுகின்றான். (உக)

போயினித்தெரிவதென்னைபொறையினலுலகம்போலும்
வேயெனத்தகையதோளியிராகவன்மேனிநோக்கித்
தீயெனக்கொடியலீரச்சேவகச்செய்கைகண்டால்
நாயெனத்தகுதுமன்றேறகாமனுநாமுமெல்லாம். (உo)

வாசவன்மாயன்மற்றைமலருளோன்மழுவாளங்கை
ஈசனென்றினையதன்மையிளிவருமிவரானென்றி
† நாசம்வந்துற்றபோதுநல்லதார்பகையைப்பெற்றேறன்
பூசல்வண்டுறையுந்தாராயிதுவிங்குப்புகுந்ததென்றான். (உக)

இராவணனுக்கு மாலியவான் புத்திகூறல்.

முன்னுரைத்தேதினவாளாமுனிந்தனைமுனியாவும்பி
இன்னுரைப்பொருளுங்கேளாயேதுவுண்டெனினுமோராய்
நின்னுரைக்குரைவேறுண்டோநெருப்புரைத்தாலுநீண்ட
மின்னுரைத்தாலுமொவ்வாவிளங்கொளியலங்கல்வேலாய். (உஉ)

---

* தற்பம்-அகங்காரம்.

† நாசம்வந்துற்றபோது-எனக்கழிவுவந்தகாலத்து.

உளவனவெனினுமெய்ம்மையுற்றவர்முற்றுமோர்ந்தார்
விளவணசொன்னபோதுங்கொள்கிலவிதிகண்டாய்
நிளதருசுற்றம்வெற்றிகேண்மைநங்கல்விசெல்வம்
களவருதானையோடுகழிவதுகாண்டியென்றான். (நந)

மாலியவானைத்தடுத்து மகோதரனுறுதிகூறல்.

ஆயவனுரைத்தலோடுமப்புறத்திருந்தானென்ற
மாயைகள்பலவும்வல்லமகோதரன்கடிதின்வந்து
தீயெழநோக்கியென்னிச்சிறுமைநீசெப்பிற்றென்னை
ஓயுறுசிந்தையானுக்குரைதபெருறுதிசொன்னான். (நூ)

நன்றியீதென்றுகொண்டகயத்தினைநயந்துவேறு
வென்றியேயாகமற்றோர்தோற்றுயிர்விடுதலாக
ஒன்றிலேநிற்றல்போலாமுத்தமற்குரியதொல்கிப்
பின்றுமேலவனுக்கன்றோபழியொடுநரகம்பின்னை. (நஙி)

திரிபுரமெரியவாங்கோர்தனிச்சரந்துரந்தசெல்வன்
ஒருவனிப்புவனமூன்றுமோரடியொடுக்கிக்கொண்டோன்
பொருதுனக்குடைந்துபோலுர்மானுடர்பொருதபோர்க்கு
வெருவுதிபோலுமானக்கயிலையைவெருவல்கண்டாய். (நஎ)

வென்றவர்தோற்பர்தோற்றோர்வெல்குவரெவர்க்குமேலாய்
ன்றவர்தாழ்வர்தாழ்ந்தோருயர்குவர்நெறியுமஃதே
ன்றனரறிஞரன்றேறயாற்றலுக்கெல்லையுண்டோ
புன்றவரிருவர்போலைப்புகழ்தியோபுகழ்க்குமேலாய். (நஏ)

தேவியைவிடுதியாயிற்றீருமுன்றீமையன்றேறல்
ஆவியைவிடுதலன்றியல்லதான்றுவதுண்டோ
தாவரும்பெருமையம்மாநீயினித்தாழ்ந்ததென்னை
காவலவிடுதியின்றிக்கையறுகவலைநொய்தின். (நஅ)

இனியிறைதாழ்த்தியாயினிலங்கையும் † யாமுமெல்லாம்
கனியுடைமரங்களாகக்கவிக்குலங்கடக்குங்காண்டி
பணியுடைவேலைச்சின்னீர்பருகினனிரவியென்னத்
துனியுழந்தயர்வதென்னைதுறத்தியாற்றுன்பமென்றான். (நக)

முன்னுனைக்கிறைவரானமூவருந்தோற்றுர்தேவர்
பின்னுனைக்கேவல்செய்யவுலகொருமூன்றும்பெற்றாய்
புன்னுனைப்பனிநீரன்னமணிசுரைப்பொருளென்றுன்னி
என்னுனைக்கியையகும்பகருணனையிகழ்ந்ததெந்தாய். (கo)

---

* புன்றவர் – குறைந்ததவத்தினையுடையவர்.

† யாமுமெல்லாம் – நம்மனைவரையும்.

ஆங்கவன் றன்னைக் கூவியேவுதியென்னினைய
ஓங்கலேபோல்வான்மேனிகாணவேயொளிப்பான்றே
றாங்குவார்செருமுன்னென்னிற்றபதருயிரைத்தானே
வாங்குமென்றினையசொன்னனவனதுமனத்துக்கொண்டான். (சக)

பெறுதியேயெவையுஞ்சொல்லிப்பேரறிவாளசீரிற்
றறிதியேயென்பால்வைத்தவன்பினுக்கவதியுண்டோ
உறுதியேசொன்னுயென்னுவுள்ளமும்வேறுபட்டான்
* இறுதியேயியையவதாலுலிடையொன்றுற்றடையுண்டாமோ. (சஉ)

கும்பகருணனை இராவணனழைத்துவரச்சொல்லுதல்.

நன்றிதுகருமமென்னுநம்பியைநணுகவோடிச்
சென்றிவட்டருதிரென்றுரைன்றலுநால்வர்சென்றார்
தென்றிசைக்கிழவன்றாதர்தேடினர்திரிவரென்னக்
குன்றினுமுயர்ந்ததோளான்கொற்றமாக்கோயில்புக்கார். (சங)

கிங்கரர் கும்பகருணனை எழுவாலழைத்தணர்த்தல்.

கிங்கரர்நால்வர்சென்றக்கிரியனைன்கிடந்தகோயில்
மங்குறேய்வாயில்சார்ந்துமன்னரீயுணர்திபென்னுத்
தங்கையினெழுவினுலேதலைசெவிதாக்கிப்பின்னும்
வெங்கணர்துயில்கின்றனவெகுளியாலினையசொன்னர். (சஎ)

வேறு.

உறங்குகின்றகும்பகன்னவுங்கண்மாயவாழ்வெலாம்
இறங்குகின்றதின்றுகாணெழுந்திராயெழுந்திராய்
கறங்குபோலவிற்பிடித்தகாலதூதர்கையிலே
உறங்குவாயுறங்குவாயினிக்கிடந்துறங்குவாய். (சஅ)

என்றுமீறிலாவரக்கரின்பமாயவாழ்வெலாம்
சென்றுதியநும்முமேனைன்றெரிந்துதிமைதேடினன்
இன்றிறத்தறிண்ணமாகவின்னுமுன்னுறக்கமே
அன்றலத்தசெங்கையாலலத்தலத்துணர்த்திரோர். (சஙு)

என்றுசொல்லவன்னவன்னெழுந்திராமைகண்டுபோய
மன்றறங்குமாலமார்பவன்றுயில்லெழுப்பலம்
அன்றுகொள்கைகேண்மினென்றுமாகொடாளியேவினன்
ஒன்றின்மேலொராயிரம்முழக்கிவிட்டெழுப்புவீர். (சஎ)

அனையதானையன்றுசெல்லவாண்டின்றுபோர்ந்திலன்
இனையசேனைமீண்டதென்றிராவணற்கியம்பலும்

---

* இறுதியேயியையவதாலல் – முடிவுகாலம்பொருந்துமாலல்.

வினையம்வல்லநீங்களுங்கடானையோடுசென்மினென்
றினையமல்லராயிராரையேவினின்றியம்பினன். (சஅ)

வேறு.

சென்றனர்பத்துநூற்றுச்சீரியவீரோடி
மன்றலந்தொங்கலான்றன்மனந்தனின்வருத்தமாற
இன்றிவன்முடிக்குமென்னுவெண்ணினரெண்ணிமீண்டக்
குன்றெனவுயர்ந்ததேராளான்கொற்றமாக்கோயில்புக்கார். (சக)

கும்பகருணன்விட்டமூச்சினல் மல்லர்அலைதல்.

திண்டிறல்வீரர்வாயிற்றிறத்தலுஞ்சுவாதவாதம்
மண்டுறவீரெல்லாம்வருவதுபோவதாகிக்
கெண்டுறுதடக்கைபற்றிக்குலமுடைவலியினேலே
கண்டுயிலெழுப்பவெண்ணிக்கடிதாருவாயில்புக்கார். (கo)

கும்பகருணனது பிளந்தவாயையு மகன்றமூக்கினையுங்கண்டு
மல்லரஞ்சுதல்.

இங்கிவன்றன்னையாமின்றெழுப்பலாம்வகையேதன்று
துங்கமேழ்வாயுமூக்குங்கண்டுமெய்துணுக்கமுற்றார்
அங்கைகடண்டவஞ்சியாழ்செவியதனினூடு
சங்கொடுதாரைசின்னஞ்சமைவுறச்சாற்றலுற்றார். (கக)

இராவணன் கும்பகன்னன்மீது குதிரைகளவிடச்சொல்லுதல்.

கோடிகறண்டுகூடங்குந்தம்வல்லோர்கள்கூடித்
தாடைகள்சந்துமார்புதலையெனுமவையிற்றாக்கி
வாடியகையராகிமன்னவற்குரைப்பப்பின்னும்
நீடியபரிகளெல்லாநிரப்பிடும்விரைவினென்றான். (கஉ)

குதிரைவீரராயிரம்குதிரைகளை கும்பகருணன்மீது நடத்துதல்.

கட்டுறுகவனமாவோராயிரங்கடிதின்வந்து
மட்டறவுறங்குவான்றன்மார்பிடைமாலுமான
விட்டுறநடத்தியோட்டிவிரைவுளசாரிவந்தார்
* தட்டுறுகுறங்குபோலத்தடந்துயில்கொள்வதானன். (கங)

கொய்மலர்த்தொங்கலான்றன்குரைகழல்வணங்கியைய
உய்யலாம்வகைகளென்றிங்கெழுப்பலாம்வகையேசெய்தும்
கய்யெலாம்வலியுமோய்ந்துகவனமாக்காலுமோய்ந்த
செய்யெலாம்வகைவேறுண்டோசெப்புதிதெரியவென்றார். (கச)

---

* தட்டுறுகுறங்குபோல - உறக்கம்வருதற்கு கால்பிடிக்கப்பட்டாற் போல். குறங்கு - தொடை.

உயுத்தகாண்டம்

வேறு.

இடைபோராவினாயானையினையாழிமணிநெடுந்தேர்
படைபோராவரும்போதும்பதையாதவுடம்பானை
மடைபோராச்சூலத்தான்மழுவாட்கொண்டெறிந்தாலும்
புடைபோராத்துயிலானைதுயிலெழுப்பிக்கொணர்கென்றான். (நந)

ஆயிரமரக்கர் கும்பகன்னனை கன்னத்திலாயிரமிருப்புலக்கைகளாற்
குத்துதலு மவனெழுதலும்.

என்றலுமேயடிவணங்கியீரைஞ்ஞூறிராக்கதர்கள்
வன்றிருழிலாற்றுயில்கின்றமன்னவன்றன்மாடணுகி
நின்றிரண்டுகதுப்புமுறவெடுமுசலங்கொண்டடிப்பப்
பொன்றினவனெழுந்தாற்போற்புடைபெயர்ந்தங்கெழுந்திருந்தான். (நஙி)

வேறு.

கும்பகருணன் துருவின்றன்மை.

விண்ணினையிடறுமேன்மைவிசும்பினைநிறைக்குமேனி
கண்ணெனுமவையிரண்டுங்கடல்களிற்பெரியவாகும்
எண்ணினும்பெரியனைவிலங்கையர்வேந்தன்பின்னோன்
மண்ணினையளந்துநின்றமாலெனவளர்ந்துநின்றான். (நஙக)

மூவகையுலகுமுட்கமுரட்டிசைப்பனைக்கையானை
தாவருந்திசையினின்றுசலித்திடக்கதிருமுட்கப்
பூவுளான்புணரிமேலான்பொருப்பினன்முதல்வராய
யாவருந்துணுக்குற்றேறுங்கவெளிதினினெழுந்தான்வீரன். (நஙஎ)

வேறு.

உறக்கமவ்வழிநீங்கியுணர்த்தகும்
வறைக்கமைந்தனவுலைவுவாக்கிய
நறைக்குடங்கள்பெறுன்கடைநக்குவான்
இறக்கநின்றமுகத்தினையெய்துவான். (நஙக)

ஆறுநூறுசகடத்தடிசிலும்
நூறுநூறுகுடங்களுநுங்கினன்
எறுகின்றபசியையெழுப்பினன்
சீறுகின்றமுகத்திருசெங்கணன். (நச0)

எருமையேற்றையோரீரறுநூற்றையும்
அருமையின்றியேதின்றிறையாறினன்
பெருமையேற்றதுகோடுமென்றேறபிறங்
குருமையேற்றைப்பிசைந்தெரியூதுவான். (நசக)

இருந்தபோதுமிராவணனின்றெனத்
தெரிந்தமேனியன்றிண்கடலின்றிரை
நெரிந்ததன்னபுருவத்துநெற்றியான்
சொரிந்தசோரிதன்வாய்வரத்தூங்குவான். (சூஉ)

உதிரவாரியோடுநெடலும்புதோல்
உதிரவாரிநுகர்வதோரூணினன்
கதிரவாள்வயிரப்பணைக்கையினன்
கதிரவாள்வயிரக்கழற்காலினன். (சூந)

(இ-ள்.) உதிரவாரியோடு – உதிரப்பெருக்கத்தையும், ஊனெடு-ஊனையும், எலும்புதோல் – எலும்புந்தோலும், உதிர – சிந்துமாறு, வாரி-ஒருங்கெடுத்து, நுகர்வது – உண்ணுதலாகிய, ஓரூணினன் – ஒருவகை யூணுடையான், கதிர – நெற்கதிரின்வடிவினதாயுள்ள, வாள் – வாளையும், வயிரம் – தண்டத்தையுந் தாங்குகின்ற, பணைக்கையினன் – பனையை யொத்தகையையுடையான், கதிர – சந்திரனுடைய, வாள் – கிரணங்கள் போலுங் கிரணங்களமைந்த, வயிரம் – வயிரமணிகளழுத்திய, கழற்காலி னன் – வீரக்கழலணிந்த பாதமுடையான். எ-று.

ஒவிரண்டும் – எண்ணுப் பொருள். கதிர என்னு மிரண்டனுள் முன்னையது பெயரெச்சக்குறிப்பு – பின்னையது ஆறனுருபேற்ற பெயர். கதிரிரண்டும் – ஆகுபெயர். புகழ்பொருளுக்கினையகக் கதிரென்பதற்குச் சந்திரனென்று பொருள் கூறலாயிற்று. பண - மெய்புருவங்களையும், வாள் – உருவத்தையும் பற்றிவந்தவுவமை. (சூந)

இரும்பசிக்குமருந்தெனவெஃகிதேரை
டிரும்பசிக்குமருந்துமெயிற்றினன்
வருங்களிற்றினைத்தின்றனன்மாலரு
அருங்களிற்றிரிகின்றதோராசையான். (சூச)

(இ-ள்.) இரும்பசிக்கு – மிக்க பசி நோய்க்கு, மருந்தென – ஆற்று மருந்தென்று, எஃகிதேரைடிரும்பு – தன்பக்கலுள்ள எழுப்படைகளையும் இருப்புப்படைகளையும், அருந்தும் – மென்றுண்ணும், அசிக்கும் – இவை வலியிலவென்று அவமதித்துச் சிரிக்கும், எயிற்றினன் – பற்களையுடை யான், வருங்களிற்றினை – தன்பாற் செல்லுகின்ற யானைகளை, தின்ற னன் – தின்று, மாலரு – பசிமயக்கம் நீங்காமல், அருங்களில் – அருமை யாகிய களரில், திரிகின்றது – இடைவிடாது செல்லுகின்றதாகிய, ஓ ராசையான் – ஒப்பற்ற ஆசையையுடையான். எ-று.

எண்ணெஞெடுநீட்டல்; அவ்வெண்ணினைடைச் சொல்லை இரும்பென்பத னோடுங் கூட்டுக. எஃகு – இரும்பு ஆகுபெயர். அருகுதென்பதனீறுதொ குத்தல். எனவெனைச்சம் அருந்துமென்னும் வினையொடு முடிதலின் அதனை அசிக்குமென்பதன்முன் கூட்டப்பட்டது. காரியப்பொருள

வாய்நின்ற அருந்துமசிக்குமென்னும் பெயரெச்சமிரண்டடுக்கி எயிறென்னுங் கருவிப்பெயரோடு முடிந்தன. வருங் களிற்றினைத் தின்றனனெனவே புடைபெயரா நிலைமையவாய் நிற்றலிற்றிசைக்களிறுகள் இவனுண்ணப்படாமலுய்ந்தன வென்பதும், உறங்குதலின்றி உலாவலின்மிக்க வேட்கையிலனென்பதுங் குறிப்பெச்சம். வருமென்பது – இட வழுவமைதி. "அவற்றுள், தருசொல் வருசொலாயிருகிளவியுந் தன்மை முன்னிலை யாயீரிடத்த" என்பதோத்தாகலின். மது அரக்கர்க்குச் சிறந்ததோர் பானமாகலின் அருங்களென்றார். (சுச)

சூலமேகந்திருத்தியதோளினன்
சூலமேகமெனப்பொலிதோற்றத்தான்
காலன்மேனிமிர்மத்தன்கழற்பொரு
காலன்மேனிமிர்செம்மயிர்க்கற்றையான். (சுரு)

(இ-ள்.) சூலமே – சூலமொன்றையே, கந்து – கழுத்தடியில், இருத்தியை – தங்கப்பிடித்த, தோளினன் – கையையுடையான், சூல – சூல் கொண்ட, மேகம் – கார்மேகத்தை, திருத்திய – திருத்தச்செய்த, தோற்றத்தான் – காட்சியையுடையான், காலன் – காலனனவன், மேனி மிறைக்க – உடல்வருந்திநடுங்க, கழல் – வீரகண்டை, பொரு – தாக்குண்டொலிக்கின்ற, காலன் – காலையுடையான், மேனிமிர் – (தலையில்) மேலோங்கிய, செம்மயிர்க் கற்றையான் – மயிர்த் தொகுதியை யுடையான். எ-று.

ஆலமுண்டவனற்றாப்பட்டுச் சூருளோர்காலமுண்ட வெற்றியதாகலிற் படைபலவற்றுள்ளு மிஃதொன்றுமே மிகுதியும் பயிறலுடையாளனென்பார் சூலமேகந்திருத்திய தோளினனென்றார். ஏ – பிரிநிலைக்கண் வந்தது. மிறைக்க வென்னுங் காரியப் பொருட்டாகிய வினையெச்சம் பொரு என்னும் வினைகொண்டது. மேனி ஆகுபெயர். சூலமேகந் திருத்திய தோற்றத்தானென்பது பெயர்பொருட்டற்குறிப்பேற்றவணி.

எயிறலத்தகரதலத்திந்திரன்
எயிறலத்தகரதலத்தெற்றினன்
அயிறலத்தொடரங்கையன்சிங்கவூன்
அயிறலத்தொடரங்ககல்வாயினன். (சுசு)

(இ-ள்.) எயிறலத்த – சினங்கொண்டு பற்களை மென்றெதிர்த்த, கரதலத்து – திண்ணிய கரத்தையுடைய, இந்திரன் – இந்திரனை, எயிறலை – அண்டப்பித்திகையின் கண், தகர – வலிசிதையும்படி, தலத்து-பூலோகத்தில், எற்றினன் – எறிந்தான், அயில் – முத்தலையயிலையும், தலை – சிறப்பாகிய, தொடர் – பாசத்தையும் பற்றிய, அங்கையன்-அகங்கையையுடையான், ஊன் – (தொழிலாளர் கொண்டுவந்த) தசை, சிங்க-குறைந்தால், அயிறலை – உண்ணலை, தொடர் – மேலுந் தொடர்ந்து; அங்கு – உண்ணவிருந்தவிடத்தே, அகல்வாயினன் – வாயையங்காத்திருப்பவன். எ-று.

எயிறலை தகரதலத்தென்பவற்றில் றகரதகரம்முறையே தொகுத்
தல். அயில்தொடரென்பன ஆகுபெயர். தொடரென்னு முதனிலை
தொடர்ந்தென வினையெச்சப்பொருள் தந்தது. மற்றையோரால் தாங்
கப்படாத திண்மையாகிய வச்சிரத்தைத்தாங்கும் வன்மை சான்றகையை
யுடையா னென்பார் வாளாகரதலத்திந்திர னென்றார். இவனதூணையும்
படையையும் பலமுறைகூறியது, உணவின் தொழிலையும் சாதுக்களை
நலிதலையுமே மிகுதியும் விநோதமாக வேட்டானென்பது தோன்றற்கு.
சிங்கவூன் என்பதற்குச் சிங்கத்தினதூனெனினுமாம் பொருந்தும். (கூகூ)

உடர்கிடந்துழியும்பர்க்குமுற்றுயிர்
குடர்கிடந்தடங்காநெடுங்கோளிணன்
கடர்கிடந்ததுநின்றதன்மேற்கதழ்
படர்கடுங்கனல்போன்மயிர்ப்பங்கியான். (கூஎ)

திக்கடங்கலும்வென்றவன்சீறிட
மிக்கடங்கலில்வெங்கதிரங்கிகள்
புக்கடங்கியமேருப்புழையெனத்
தொக்கடங்கித்துயிறருகண்ணினன். (கூஅ)

காம்புறங்குங்கனவரைக்கைம்மலைத்
தூம்புறங்குழகத்தினதூய்த்துடல்
ஓம்புறும்முழையென்றுயர்மூக்கினன்
பாம்புறங்கும்படர்செவிப்பாழியான். (கூக)

கூயினன்னும்முனென்றவர்கூறலும்
போயினன்னகர்பொம்மென்றிரைத்தெழ
வாயில்வல்லுநழைந்துமதிதொடும்
கோயிலெய்தினன்குன்றனகொள்கையான். (எ0)

நிலகிடந்தநெடுமதிட்கோபுரத்
தலகிடந்தவிலங்கையரண்ணலைக்
கொலகிடந்தவேற்கும்பகருணமேலர்
மலகிடந்ததுபோலவணங்கினன். (எக)

வன்றுணட்பெருந்தம்பிவணங்கலும்
தன்றிரண்டதோளாரத்தழுவினன்
நின்றகுன்றெனின்றுநீணெடுங்காலொடும்
சென்றகுன்றைறத்தழீஇயன்னசெய்கையான். (எஉ)

உடனிருத்தியுதிரத்தொடொண்ணைறக்
குடனிரைத்தவையூட்டித்தசைகொளீஇக்
கடனுரைத்துகில்சுற்றிக்கதிர்க்குழாம்
புடைநிரைத்தொளிர்பல்கலன்பூட்டினன். (எங)

போவிட்டபெருவலியிந்திரன்
ஊடாவிட்டகளிற்றெருடுமோதுநாள்
சோரவிட்டசுடர்மணியோடையை
வீரபட்டமெனநுதல்வீக்கிணன். (எசு)

மெய்யெலாமிளிர்மின்வெயில்வீசிடத்
தொய்யில்வாசத்துவர்துதைந்தாடிய
கய்யிணகமெனக்கடலாமெனத்
தெய்வநாறுசெஞ்சாந்தழுஞ்சேர்த்திணன். (எந)

விடமெழுந்ததுபோனெடுவிண்ணினைத்
தொடவுயர்ந்தவன்மார்பிடைச்சுற்றிணன்
இடபழுந்துமெரிபுரைநான்குதோட்
கடவுளீந்தகவசமுங்கட்டிணன். (எசு)

அன்னகாலையிலாயத்தம்யாவையும்
என்னகாரணத்தாலென்றியம்பிணன்
டின்னினன்னபுருவமும்விண்ணினைத்
துன்னுதோளுமிடந்துடியாநின்றுன். (எள)

வானரப்பெருந்தானையர்மாணுடர்
கோனகர்ப்புறஞ்சுற்றினர்கொற்றமும்
எனையுற்றனர்நீயவரின்னுயிர்
போனகத்தொழின்முற்றுதிபோயென்றுன். (எஅ)

கோ று.

கும்பகருணன் இராவணனுக்குப் புத்திகூறுதல்.

ஆனதோவெஞ்சமமலகில்கற்புடைச்
சானகிதுயரினந்தவிர்ந்ததில்லையோ
வானமும்வையமும்வளர்ந்தவான்புகழ்
போனதோபுகுந்ததோபொன்றுங்காலமே. (எக)

கிட்டியதோசெருக்கிளர்பொற்சீதையைச்
சுட்டியதோமுனஞ்சொன்னசொற்களால்
திட்டியின்விடமன்னகற்பின்செல்வியை
விட்டிலையோவிதுவிதியின்வண்ணமே. (அ0)

கல்லலாமுலகினவரம்புகட்டவும்
சொல்லலாம்பெருவலியிராமன்றூள்களை
வெல்லலாமென்பதுஞ்சீதைதேனியைப்
புல்லலாமென்பதுபோலுமாலைய. (அக)

புலத்தியன்வழிமுதல்வந்தபொய்யறு
குலத்தியல்பழிந்ததுகொற்றமுற்றுமோ
வலத்தியலழிவதற்கேதுமையறு
நிலத்தியனீரியலென்னுநீரதால். (அஉ)

கொடுத்தனையிந்திரற்குலகுங்கொற்றமும்
கெடுத்தனைநின்பெருங்கிளையுநின்னையும்
படுத்தனைபலவகையமரர்தங்களை
விடுத்தனைவேறினிவீடுமில்லையால். (அஙூ)

அறமுனைக்கஞ்சியின்றொளித்ததாலதன்
திறமுனைமுழத்தலின்வலியுஞ்செல்வமும்
நிறமுனைக்களித்ததங்கதனைநீக்கிநீ
இறமுனைங்கியாருனையெடுத்துநாட்டுவார். (அகூ)

தஞ்சமுந்தருமமுந்தகவுமேயவர்
நெஞ்சமுங்கருமமுமுறையுமேமெதி
வஞ்சமும்பாவமும்பொய்யும்வல்லநாம்
உஞ்சுமோவதற்கொருகுறையுண்டாகுமோ. (அஙூ)

என்றுகொண்டினையனவிளம்பியாளுனைக்
கொன்றுளதுணைத்துவதுணைந்துகோடியேல்
நன்றதுநாயகநயக்கிலாயெனின்
பொன்றினையாகவேகோடிபோக்கிலாய். (அகூ)

காலினிற்கருங்கடல்கடந்தகாற்றது
போலவன்குரங்குளசீதைபோகிலள்
வாலியையுரங்கிழித்தேதகவல்லன
கோலுளயாமுளேங்குறையுண்டாகுமோ. (அளூ)

தய்யலவிட்டவன்சரணந்தாழ்ந்துநின்
மய்யறுதம்பியோடளவளாவுதல்
உய்திறமன்றெனினுளதுவேறுமோர்
செய்திறமுண்டதுதெளிந்துகோடியால். (அஅூ)

பந்தியிற்பந்தியிற்படையைவிட்டவை
சிந்துதல்கண்டுநீயிருந்துதேம்புதல்
மந்திரமன்றுநம்வலியெலாமுடன்
உந்துதல்கருமமென்றுனைக்கூறினன். (அகூ)

இராவணன் கும்பகருணன் மொழியைத் தடுத்துரைத்தல்.

உறுவதுதெரியவன்றுன்னைக்கூயது
சிறுதொழின்மனிசரைக்கோறிசென்றலை

கறிவுடையமைச்சனீயல்லையஞ்சினை
வெறிவிதுன்வீரமென்றிவைவிளம்பிஞன். (கூ0)

மறங்கிளர்செருவிணுக்குரிமைமாண்டனை
பிறங்கியதசையொடுநறவும்பெற்றனை
இறங்கியகண்முகிழ்த்திரவுமெல்லியும்
உறங்குதிபோயெனவுளையக்கூறிஞன். (கூக)

மானுடரிருவரைவணங்கிமற்றுமக்
கூனுடைக்குரங்கையுங்கும்பிட்டுய்தொழில்
ஊனுடையும்பிக்குமுனக்குமேகடன்
யானதுமுடிக்கிலேனெழுதிபோதியால். (கூஉ)

தருகவென்றேர்படைசாற்றென்கூற்றையும்
வருகவென்வானமுமண்ணுமற்றவும்
இருகைவன்சிறுவரோடொன்றியென்றெதும்
பொருகைவெம்போரெனப்போதன்மேயிஞன். (கூஙூ)

அன்னதுகண்டவன்றம்பியாயவன்
பொன்னடிவணங்கிநீபொறுத்தியாலென
வன்னெடுஞ்சூலத்தைவலத்துவாங்கிஞன்
இன்னுமொன்றுரையுளதென்னக்கூறிஞன். (கூசு)

பின்னுங் கும்பகருணனுரைத்தல்.

வென்றிவண்வருவெனென்றுரைக்கிலேன்விதி
நின்றதுபிடர்பிடித்துந்தின்றது
பொன்றுவென்பொன்றிஞற்பொலன்கொடோளியை
நன்றெனநாயகவிடுதிநன்றரோ. (கூருு)

இந்திரன்பகைஞனுமிராமன்றம்பிகை
மந்திரவலியிஞன்மடிதல்வாய்மையால்
தந்திரங்காற்றுறுசாம்பர்பின்னரும்
மந்திரமுணர்ந்துனக்குறுவதாற்றுவாய். (கூசுு)

என்னைவென்றுளரெனினிலங்கைகாவல
உன்னைவென்றுயருதலுண்மையாதலால்
பின்னைநின்றெண்ணுதல்பிழையப்பெய்வளை
தன்னைநன்களிப்பதுதவத்தின்பாலதே. (கூஎ)

இற்றைநாள்வரைமுதல்யான்முன்செய்தன
குற்றமுமுளவெனிற்பொறுத்திகொற்றவ
அற்றதான்முகத்தினில்விழித்தலாரிய
பெற்றனென்விடையெனப்பெயர்ந்துபோயிஞன். (கூஅ)

அவ்வழியிராவணனனுத்துநாட்டமும்
செவ்வழிநீரொடுங்குருதிதேக்கிணன்
எவ்வழியோர்களுமிரங்கியேங்கினர்
இவ்வழியவனும்போய்வாயிலெய்தினன். (கூகூ)

இரும்படைகடிப்பெடுத்தெதற்றியேகுக
பெரும்படையிளவலோடென்றபேச்சினல்
வரும்படைவந்ததுவானுளோர்கடம்
சுரும்படைமலர்முடிதூளிதூர்க்கவே. (க00)

தேர்க்கொடியானையின்பதாகைசேணுறு
தார்க்கொடியென்றிவைதகைதந்துவீங்குவ
பார்க்கொடுந்தூளிபோய்த்துறக்கம்பண்புற
ஆர்ப்பதுதுடைப்பதுபோன்றவாடுவ. (க0க)

எண்ணுறுபடைக்கலமிழுகவெற்றிட
நண்ணுறுபொறிகளும்படைக்குநாயகர்
கண்ணுறுபொறிகளுங்கதுவக்கண்ணைகல்
விண்ணுறுமழையெலாங்கரிந்துவீழ்ந்தவால். (க0உ)

தேர்செலக்கரிசெலநெருக்கிச்செம்முகக்
கார்செலத்தேர்செலப்புரவிக்கால்செலத்
தார்செலக்கடைசெலச்சென்றதாணையும்
பார்செலற்கரிதெனவிசும்பிற்பாய்ந்ததால். (க0ங)

ஆயிரங்கோளரியாளியாயிரம்
ஆயிரமதகரிபூதமாயிரம்
மாயிருஞாலத்தைதச்சுமப்பவாங்குவ
தேயிருஞ்சுடர்மணித்தேரொன்றேறினன். (க0ச)

தோமரஞ்சக்கரஞ்சூலங்கோன்மழு
நாமவேலுலக்கைவாணுஞ்சிறண்டெழு
வாமவில்வலயங்கற்பரிசைமற்றுள
சேமவெம்படையெலாஞ்சுமந்துசென்றவால். (க0ஞ)

நறையுடைத்தசும்பொடுநறையின்வெந்தவூன்
குறைவினற்சகடமோராயிரங்கொடு
பிறையுடையெயிற்றவன்பின்புசென்றனர்
முறைமுறைறகைக்கொடுமுடுகிநீட்டுவார். (க0சு)

ஒன்றலபற்பலருதவுமூனைற
பின்றரும்பிலனிடைப்பெய்யுமாறுபோல்
வன்றிறலிருகரம்வழங்கமாந்தியே
சென்றனன்யாவருந்திடுக்கமெய்தவே. (க0எ)

கணைந்தருகுரங்கொடுகழிவதன்றிது
நிணைந்தருநெடிந்தடிக்குலகுநேருமோ
பிணைந்தலைப்பட்டதுபெயர்வதெங்கினி
உணர்ந்ததுகூற்றமென்றும்பரோடிரும். (கஎஅ)

பாந்தளினெடுந்தலைவழுவிப்பாரொடும்
வேந்தனவிளங்கியமேருமால்வரை
போந்ததுபோற்பொலந்தேரிற்பொங்கிய
வந்தலையெந்தெழிலிராமனைக்கிறன். (கஎக)

வீணையென்றுணரினதன்றுவின்னெடோடும்
சேணுயர்கொடியதுவயவெஞ்சீயமாக்
காணினுங்காலின்மேலரியகாட்சியன்
பூணெளிமார்பினன்யாவன்போலுமால். (கஎ0)

தோளொடுதோள்செலத்தொடர்ந்துநோக்குறின்
நாள்பலகழியுமானடுவணின்றதேர்
தாளுடைமலைகொலாஞ்சமரம்வேட்டதேர்
ஆளெனவுணர்கிலேனுர்கொலாமிவன். (கஎக)

அரக்கனவ்வுருவொழித்தரியின்சேனையை
வெருக்கொளத்தோன்றுவான்கொண்டவேடமோ
தெரிக்கிலேனிவ்வுருத்தெரியும்வண்ணநீ
பொருக்கெனவீடணுபுகறியாலென்றான். (கஎஉ)

வேறு.

விபீடணன் கும்பகருணன் திறமிராமனுக்குரைத்தல்.

ஆரியனனையகூறவடியிணையிறைஞ்சியைய
பேரியலிலங்கைவேந்தன்பின்னவனெனக்குமுன்னேனன்
காரியல்காலனன்னகழற்கும்பகருணனென்னும்
கூரியகுலத்தானென்றவனிலகூறலுற்றான். (கஎங)

தவனுணங்கியரும்வேதத்தலைவருமுணருந்தன்மைச்
சிவனுணர்ந்தலின்மேலத்திசைமுகனுணருந்தேவன்
அவனுணர்ந்தெழுந்தகாலத்தசுரர்கள்படிவமெல்லாம்
இவனுணர்ந்தெழுந்தகாலத்திமையவர்படிவமெந்தாய். (கஎச)

வேறு.

ஆழியாயிவனுகுவான்
ஏழைவாழ்வுடையெம்முனேனன்
தாழ்விலாவொருதம்பியோர்
ஊழிநாளுமுறங்குவான். (கஎஞ)

காலனுருயிர்காலனுல்
காலின்மேனிமிர்காலிணன்
மாலினர்கெடவாகையே
சூலமேகொடுசூடிணன். (ககசு)

தாங்குகொம்பொருநான்குகால்
ஓங்கலொன்றினையும்பர்கோன்
வீங்குநெஞ்சன்விழுந்திலான்
தூங்கநின்றுசுழற்றிணன். (ககள)

ஒழிந்ததீயொடுகாலையும்
பிழிந்தசாறுகொள்பெற்றியான்
அழிந்துமீதுகவாழிநீர்
இழிந்துகாலினினெற்றுவான். (ககஅ)

ஊனுயர்ந்தவுரத்திணன்
மேனிமிர்ந்தமிடுக்கிணன்
தானுயர்ந்ததவத்திணன்
வானுயர்ந்தவரத்திணன். (ககக)

திறங்கொள்சாரிதிரிந்தநூள்
கறங்கலாதுகணைக்கிலான்
இறங்குதாரவனின்றுகா
றுறங்கலாலுலகுய்ந்ததால். (கஉ0)

சூலமுண்டத்துசூருளோர்
காலமுண்டதுகைக்கொள்வான்
ஆலமுண்டவ * ணழிவாய்
ஞாலமுண்டவனல்கிணன். (கஉக)

மின்னிலெணன்றியவிண்ணுளோர்
முன்னிலென்றமர்முற்றிணர்
என்னினென்றுமவெண்ணிலார்
வென்னிலன்றிவிழித்திலான். (கஉஉ)

தருமமன்றிதுதானிதால்
வருநமக்குயிர்மாய்வெனு
உருமில்வெய்யவனுக்குரை
இருமைமேலுமியம்பிணன். (கஉங)

மறுத்ததம்முனைவாய்மையால்
ஒறுத்துமாவதுணர்த்திணன்

---

* ஆழிவாழ்ஞாலமுண்டவனல்கிணன் என்றும் பாடம்.

வெறுத்துமாய்வதுமெய்யெனை
இறுத்துநின்னெதிரெய்திணன். (களச)

நன்றிதன்றுமக்கெனை
ஒன்றுநீதியுணர்த்திணன்
இன்றுகாலன்முனைப்திணன்
என்றுசொல்வியிறைஞ்சிணன். (களடு)

வேறு.

என்றவனுரைத்தலோடுமிரவிசேயிவனையின்று
கொன்றெருருபயனுமில்லைக்கூடுமேற்கூட்டிக்கொண்டு
நின்றதுபுரிதுமற்றிங்கிருதர்கோனிடருநீங்கும்
நன்றெனநினைத்தேதனென்றுதனுநலனீதென்றான். (களசு)

ஏதுதற்குரியார்யாரேயென்னலுமிலங்கைவேந்தன்
ஆகின்மற்றடியனேனென்றறிவிலைலவனையுள்ளம்
சேகறத்தெருட்டியீண்டிச்சேருமேற்சேர்ப்பலென்றான்
மேகமொப்பானுநன்றுபோகென்றுவிடையுமீந்தான். (களள)

விபீடணன் கும்பகருணனைக்கண்டு வணங்குதல்.

தந்திரக்கடலைநீந்தித்தன்பெரும் * பலத்தைச்சார்ந்தான்
வெந்திறலவனுக்கையவீடணன்விரைவினுன்பால்
வந்தனனென்னச்சொன்றுர்வரம்பிலாவுவகைகூரச்
சிந்தையாற்களிக்கின்றுன்றன்செறிகழற்சென்னிசேர்த்தான். (களஅ)

முந்திவந்திறைஞ்சிணனை முகந்துயிர்முழ்கப்புல்லி
உந்தனையொருவைபோனுயெனமனமுவக்கின்றனென்
சிந்தனைமுழுதுஞ்சிந்தத்தெளிவிலார்போலமீள
வந்ததென்றனியேயியென்றுன்மழையினீர்வழங்குகண்ணன். (களக)

கும்பகருணன் விபீடணனை விளவுதல்.

அவையநீபெற்றவாறுமமராரும்பெறுதலாற்று
உவையயலோகத்திலுள்ளசிறப்புங்கேட்டுவந்தேதனுள்ளம்
கவிஞரினறியுமிக்காய்கலன்வாய்க்களிக்கின்றேறம்பால்
நவையிலவந்ததென்னியமுதுண்பாய்ந்சுண்பாயோ. (களடு)

குலத்தியல்பழிந்தேதனுங்குமரமற்றுன்னைக்கொண்டே
புலத்தியன்மரபுமாயாப்புண்ணியம்பொருந்திற்றென்ன
வலத்தியரேருளைநோக்கிமகிழ்கின்றேறன்மன்னவாயை
உலத்தினைதிரியவந்தாயுளைகின்றதுள்ளமந்தோ. (களக)

---

* பலம் – முன்வருசேனை.

அறப்பெருந்துணைவர்தம்மையபயமென்றடைந்தவுன்னைத்
துறப்பதுதுணியார்தங்களாருயிர்துறந்தபோதும்
இறப்பெனும்பதத்தைதவிட்டாயிராமனென்பளவுமற்றிப்
பிறப்பெனும்புன்மையில்லைனிங்தென்கொல்பெயர்ந்தவண்ணம். ()

அறமெனநின்றநம்பற்கடிமைபெற்றவன்றலைலே
மறமெனநின்றமூன்றுமருங்கறமாற்றிமற்றும்
திறமெனநின்றதீமையின்மையேதீர்ந்தசெல்வ
பிறர்மனேநோக்குவேமையுறவெனப்பெறுதிபோலாம். (கஉக)

நீதியுந்தருமநின்றநிலைமையும்புலமைதானும்
ஆதியங்கடவுளாலேயருந்தவமாற்றிப்பெற்றாய்
வேதியர்தேதவன்சொல்லால்விளிவிலாவாயுப்பெற்றாய்
காதியின்புன்மையின்னுந்தவிர்ந்திலபோலுந்தக்கோய். (கஉச)

ஏற்றியவில்லோன்யார்க்குமிறையவனிராமனின்றான்
மாற்றருந்தம்பினின்றான்மற்றையோர்மூற்றுநின்றார்
கூற்றமுனின்றதெம்மைக்கொல்லியவிதியுநின்ற
தோற்றவெம்பக்கலையவெவ்வலிதாலையவந்தாய். (கஉஞ)

அய்யநீயேயாத்திவேந்தற்கடைக்கலமாகியாங்கே
உய்கிலையென்னின்மற்றிவ்வரக்காயுள்ளோரெல்லாம்
மொய்கணைமாரியாலேயிறந்துபாழ்முழுதும்பட்டால்
கய்யிலைலெண்ணீர்நல்கிக்கடன்கழிப்பாரைக்காட்டாய். (கஉசு)

வருவதுமிலங்கையூர்க்கிப்புலையெலாமாண்டபின்னைத்
திருவுறைமார்பனேறும்புகுந்தபின்னென்றுந்தீராப்
பொருவருஞ்செல்வந்துய்க்கப்போதுதிவிரைவினென்றான்
கருமமுண்டுரைப்பவென்றானுரையெனக்கழறலுற்றான். (கஉஎ)

விபீடணன் கும்பகருணனை இராமனிடம் அடைக்கலம் புகுதியெனல்.

இருளுறுசிந்தையேற்குமின்னருள்சுரந்தவீரன்
அருளுநீசரிலெனன்றேறுவவயமுமளிக்குமன்றி
மருளுறுபிறவிநோய்க்குமருந்துமாமாறிச்செல்லும்
உருளுறுசகடவாழ்க்கையொழித்துவீடளிக்குமன்றே. (கஉஅ)

எனக்கவன்றந்தசெல்வத்திலங்கையுமரசுமெல்லாம்
நினக்குநான்றருவென்றந்துன்னேவலினெளிதினிற்பென்
உனக்கிதினுறுதியில்லையுத்தமவுன்பின்வந்தேதன்
மனக்குநோய்துடைத்துவந்தமாயையும்விளக்கும்வாழி. (கஉக)

போதலோவரிதுபோனற்புகவிடமில்லைவல்லே
சாதலோசரதநீதியறத்தொடுந்தழுவினின்றாய்

ஆதலாணுளதாமாவியாயமேயுகுத்தென்னைய
வேதநூன்மரபுக்கேற்றவொழுக்கமேபிடித்தல்வேண்டும். (கசுஅ)

தீயவைசெய்வராகிற்சிறந்தவர்பிறந்தவுற்றூர்
தாயவைதந்தைதமாரென்றுணர்வரோதருமம்பார்ப்பார்
நீயவையறிதியன்றேநினைக்கியாணுரைப்பதென்னே
தாயவைதுணிந்தபோதுபழிவந்துதொடர்வதுண்டோ. (கசுக)

மக்களைக்குரவர்தம்மைமாதரைமற்றுளோரை
ஒக்குமின்னுயிரன்னரையுதவிசெய்தாரோடொன்றத்
துக்கமித்தொடர்ச்சியென்றுதுறப்பராற்றுணிவுபூண்டோர்
மிக்கதுநலனேயாகிவீடுபேறளிக்குமன்றே. (கசுஉ)

தீவினையொருவன்செய்யவவனெடுந்தீங்கிலாதோர்
வீவினையுறுதலையமேன்மையோகீழ்மைதானே
ஆய்வினையுடையையன்றேயறத்தினைநோக்கியீன்ற
தாய்வினைசெய்யவன்றேருகொன்றனன்றவத்தின்மிக்கோன். (கசுங)

கண்ணுதற்றீமைசெய்யக்கமலத்துழுளைத்ததாதை
அண்ணறன்றலையிலென்னைறயறுக்கவென்றமைந்தானன்றே
புண்ணுறுபுலவுவேலாய்பழியொடும்பொருந்திப்பின்னை
எண்ணுறுநரகின்வீழ்வதறிருருமியற்றுவாரோ. (கசுச)

உடலிடைத்தோன்றிற்றென்னைறயறுத்ததனுதிரமுற்றிச்
சுடருறச்சுட்டுவேறேர்மருந்திறற்றுயரந்தீர்வர்
கடலிடைக்கோட்டம்தேய்த்துக்கழிவதுகருமமன்றால்
மடலுடையலங்கன்மார்பமதியுடையவர்க்குமன்றே. (கசுஙு)

காக்கலாநும்முன்றன்னையெனினதுகண்டதில்லை
ஆக்கலாமறத்ததேவேறயெனினுமாங்காவதில்லைத்
தீக்கலாங்கொண்டதேதவர்சிரிக்கலாஞ்செருமுன்னிவி
போக்கலாம்புகலாம்பின்னைநரகன்றிப்பொருந்திற்றுண்டோ. (கசுசு)

மறங்கிளருலகைவென்றுவாழ்ந்திலமண்ணின்மேலா
இறங்கினையின்றுகாறுமிளமையும்வறிதேதபோக
உறங்கினையென்பதல்லாலுற்றதான்றுளதாவென்னை
அறங்கெடவுயிரைநீத்துமேற்கொள்வானமைந்ததைய. (கசுஎ)

திருமறுமார்பனல்கவனந்தருந்தீர்ந்துசெல்வப்
பெருமையுமெய்திவாழியீறிலாநாளும்பெற்றாய்
ஒருமையேயரசுசெய்வாயுரிமையேயுளதேதையொன்றும்
அருமையுமிவற்றினில்லைக்காலமுமடித்ததைய. (கசுஅ)

தேவர்க்குந்தேவனல்கவிலங்கையிற்செல்வம்பெற்றூல்
எவர்க்குஞ்சிறியையல்லையாருனைநலியுமீட்டார்
மூவர்க்குந்தலைவராயமூர்த்தியாரறத்தைமூற்றும்
காவற்குப்புகுந்துன்னூர்காகுத்தவேடங்காட்டி. (கசக)

உன்மக்களாகியுள்ளாருன்னுடுமொருங்குதான்றும்
என்மக்களாகியுள்ளாரிக்குடிக்கிறுதிசூழ்ந்தான்
தன்மக்களாகியுள்ளார்தலையொடுந்திரிவரன்றே
புன்மக்கட்டருமம்பூணப்புலமக்கட்டருமம்பூண்டால். (கநo)

முனிவருங்கருணைவப்பர்மூன்றுலகத்துந்தான்றி
னிவரும்பகையுமில்லையீறுண்டென்றிரங்கல்வேண்டா
துனிவருஞ்செறுநரானதேவரேதுணைவராவர்
கனிவருங்காலத்தையூக்கொய்யக்கருதலாமோ. (கநக)

வேதநாயகனேயுன்னைக்கருணையால்வேண்டிவிட்டான்
காதலாலென்மேல்வைத்தகருணையாற்கருமமீதே
ஆதலானவனைக்காணவறத்தைதாங்திறம்பலைய
போதுவாய்நீயேயென்னப்பொன்னடியிரண்டும்பூண்டான். (கநஉ)

தும்பியந்தொடையன்மாலைச்சுடர்முடியடியிற்றோயப்
பம்புபொற்கழல்கள்கையால்பற்றினன்புலம்பும்பொற்றோட்
டம்பியையெடுத்துமார்பிற்றழுவித்தன்றறுகணூடு
வெம்புணீர்சொரியநின்றுனினையனவிளம்பலுற்றான். (கநங)

கும்பகருணன் விபீடணனுரையை மறுத்துரைத்தல்.

நீர்க்கோலவாழ்வைநச்சிநெடிதுநாள்வளர்த்துப்பின்னைப்
போர்க்கோலஞ்செய்துவிட்டாற்குயிர்கொடாதங்குப்போகேன்
தார்க்கோலமேனிமைந்தவென்றுயர்தவிர்த்தியாயின்
கார்க்கோலமேனியானைக்கூடுதிகடிதினென்றான். (கநச)

மலரின்மேலிருந்தவள்ளல்வழுவிலாவரத்திறனீ
உலவிலாத்தருமம்பூண்டாயுலகுளதனையுமுள்ளாய்
தலைவனீயுலகுக்கெல்லாமுனக்கதுதக்கதேயால்
புலையுறுமரணமெய்தலெனக்கதுபுகழதேயால். (கநஞ)

கருத்திலாவிறைவன்றீமைகருதிலைதனைக்காத்துத்
திருத்தலாமாகினன்றேதிருத்துதற்றீராதாயின்
பொருத்துறுபொருளுண்டாமோபொருதொழிற்குரியராகி
ஒருத்தரின்முன்னஞ்சாதலுண்டவர்க்குரியதம்மா. (கநசு)

தும்பியந்தொடையல்வீரன்சுடுகணைதுரப்பச்சுற்றும்
வெம்புவெஞ்சேனையோடும்வேறுளகிளருரோடும்

உம்பரும்பிறரும்போற்றவொருவன்மூவுலகையாண்டு
தம்பியின்றிமாண்டுகிடப்பதேதமையன்மண்மேல். (கருள)

அணையின்றியயர்ந்தவென்றியஞ்சிஞர்நகையதாகப்
பிணையொன்றுகண்ணுள்பங்கன்பெருங்கிரிநெருங்கப்பேர்த்த
பணையொன்றுதிரடோள்காலபாசத்தாற்பிணிப்பக்கூசித்
துணையின்றிச்சேறனன்மேருதாற்றுளகூற்றின்சூழல். (கருஅ)

செம்பிட்டுச்செய்தவிஞ்சித்திருநகர்ச்செல்வந்தேறி
வம்பிட்டதெரியலெம்முனுயிர்கொண்டபகையைவாழ்த்தி
அம்பிட்டுத்துன்னங்கொண்டபுண்ணுடைநெஞ்சோடையு
கும்பிட்டுவாழ்கிலேன்யான்கூற்றையுமாடல்கொண்டேன். (கருக)

அணுமனைவாலிசேயையருக்கன்சேய்தன்னையம்பொற்
றணுவுடையவனைவேமேர்நீலனைச்சாம்பன்றன்னைக்
கணிதாடர்குரங்கின்காலக்கடலொடுங்கடந்துமற்றப்
பணிதுடைத்துலகஞ்சுற்றுங்கதிரெனத்திரிவென்பார்த்தி. (கசூ0)

ஆலங்கண்டஞ்சியோடுமமரர்போலரிகளோடச்
சூலங்கொண்டோடிவேலுதாடர்வதார்தாற்றந்தான்ற
நீலங்கொள்கடலுமோடக்காலொடுநெருப்புமோடக்
காலங்கொளுலகுமோடக்கறங்கெனத்திரிவென்காண்டி. (கசூக)

செருவிடையஞ்சார்வந்தென்கண்ணெதிர்சேர்வரேலக்
கருவரைகனகக்குன்றமென்னலாங்காட்சிதந்த
இருவருநிற்கமற்றிங்கியாருளரவரையெல்லாம்
ஒருவருந்திரியவொட்டேனுயிர்சுமந்துலகினென்றான். (கசூஉ)

தாழ்க்கிற்பாயல்லையென்சொற்றலைக்கொளத்தக்கதென்று
கேட்கிற்பாயாயினெய்தியவொருங்கெழீஇயநட்பை
வேட்கிற்பாயினியோர்மாற்றம்விளம்பிலுல்வினவுண்டென்று
சூழ்க்கிற்பாயல்லையாருந்தாழுகிற்பாயென்னச்சொன்னான். (கசூங)

நீ இறந்தார்க்குப் பிதிர்க்கடனியற்றனல்.

போதுநீயையபின்னப்பொன்றிஞர்க்கெல்லாஞின்ற
வேதியர்தேவன்றன்னைவேண்டினைபெற்றுமெய்ம்மை
ஆதிநான்மரபிலுலகடன்மையுமாற்றியேற்ற
மாதுயர்நரகநண்ணுவண்ணமுங்காத்திமன்னே. (கசூச)

ஆகுவதாகுங்காலத்தழிவதுமழிந்துசிந்திப்
போகுவதயலேநின்றுபோற்றினும்போதல்செய்யும்
சேகறவுணர்ந்தோர்நின்னின்யாருளர்வருத்தல்செய்யா
தேகுதியெம்மைநோக்கியிரங்கலையென்றுமுள்ளாய். (கசூஞ)

என்றவன்றன்னைமீட்டுமெடுத்துமார்பிறுகப்புல்லி
நின்றுநின்றிரங்கியேங்கிநிறைகணைனெடிதுநோக்கி
இன்றொடுந்தவிர்ந்ததன்றேயுடன்பிறப்பென்பதென்றான்
வென்றிவெந்திறலினுமவனடித்தலத்துவீழ்ந்தான். (கசுசு)

வணங்கினன்வணங்கிக்கண்ணும்வதனமுமனமும்வாயும்
உணங்கினவுயிரோடியாக்கையொடுங்கினவுரைசெய்தின்னும்
பிணங்கினலாவதில்லைப்பெயர்வதென்றெழுந்துபோந்தான்
குணங்களாலுயர்ந்தாண்சேனைக்கடலெலாங்கரங்கள்கூப்ப. (கசுள)

கள்ளநீர்வாழ்க்கையேயமைக்கைவிட்டுக்காலும்விட்டான்
பிள்ளைமைதுறந்தானென்னுப்பேதுறுநிலையனாகி
வெள்ளநீர்வேலைதன்னில்வீழ்ந்தநீர்வீழிவெங்கண்
உள்ளநீரெல்லாமாறியுதிரநீரொழுகநின்றான். (கசுஅ)

விபீடணன் இராமனிடங் கும்பகருணன் மனநிலைகூறுதல்.

எய்தியநிருதர்கோனுமிராமனையிறைஞ்சியெந்தாய்
உய்திறவுடையார்க்கன்றிவுறநெறியொழுக்கமுண்மை
பெய்திறனெல்லாம்பெய்துபேசினன்பெயருந்தன்மை
செய்திலன்குலத்துமானந்தீர்ந்திலன்சிறிதுமென்றான். (கசுக)

கொய்திறச்சடையின்கற்றைகொந்தளக்கோலக்கொண்டல்
நொய்தினிற்றுளக்கியையநுன்னெதிர்நும்மூரனை
எய்துறத்துணித்துவீழ்த்தலினிதன்றென்றியசொன்னேன்
செய்திறனினிவேறுண்டோவிதியையார்தீர்க்கநிற்பார். (கஎ0)

எனவினிதுரைக்கும்வேலையிராக்கதர்சேனையென்னும்
கனைகடல்கவியின்றூனைக்கழியினவளைந்துகட்டி
றூனைதொழின்முயன்றதாகமூவகையுலகுமுற்றத்
தனிநெடுந்தூளியார்த்ததார்த்திலபரவைதள்ளி. (கஎக)

அசுரவானர யுத்தம்.

ஓடினபுரவிவேழமோடினவுருளைத்திண்டேர்
ஓடினமலைகளோடவோடினவுதிரப்பேரா
றூடினகவந்தபந்தமாடினவலகைமேன்மேல்
ஆடினபதாகையோங்கியாடினபறவையம்மா. (கஎஉ)

மூளையுந்தசையுமென்புங்குருதியுங்கிணமுமூரி
வாளொடுங்குழம்புபட்டார்வாளையிற்றராக்கர்மற்றவ்
வாளிருங்குருதிவெள்ளத்தழுந்தியகவிகளம்பொற்
றேரொளிமரனுங்கல்லுஞ்சூலமும்வேலுந்தாக்க. (கஎங)

எய்தனர்நிருதர்கல்லாலெறிந்தனகவிகளேந்திப்
பெய்தனவரக்கர்பற்றிப்பிசைந்தனராகிகள்பின்ரு
வைதனயாதுதானர்வலித்தனர்வானரேசர்
செய்தனர்பிறவும்வெம்போர்திகைத்தனர்தேவரெல்லாம். (களச)

நீரினையோட்டுங்காற்றுங்காற்றெதிர்நிற்குநீரும்
போரினையாகவென்றுபொருகின்றபூசலேக்கித்
தேரினையோட்டிவந்தான்றிருவினைத்தேவர்தங்கள்
ஊரினைநோக்காவண்ணமுதிரவேவேணக்கியுள்ளான். (களரு)

கும்பகருணன் வானரங்களை வதைத்தல்.

ஊழியிற்பட்டகாலத்துலகங்கள்பட்டாலொப்பப்
பூழியிற்பட்டுச்செந்நீர்ப்புணரியிற்பட்டுப்பொங்கும்
சூழியிற்பட்டநெற்றிக்களிற்ரூடுந்துரந்ததேரின்
ஆழியிற்பட்டவன்றேறயவணியிற்பட்டவெல்லாம். (களசு)

குன்ரூகொண்டெறியும்பாரிற்குதிக்கும்வெங்கூலம்பற்றி
ஒன்ரூகொண்டொன்றையெற்ரூழுதைக்கும்விட்டுழக்கும்வாரித்
தின்ரூதின்ரூமிழும்பற்றிச்சிரங்களைத்திருகுந்தேய்க்கும்
மென்ரூமென்றிழிச்சும்விண்ணில்வீசுமேற்பிசைந்துபூசும். (களள)

வாரியின்முகக்குங்கையான்மண்ணிடைத்தேய்க்கும்வாரி
நீரிடைக்குவிக்குமப்பானெருப்பிடைநிமிரவீசும்
தேரிடையெற்ரூமெட்டுத்திசையினுஞ்செல்லச்சிந்தும்
தூரிடைமரத்துமோதுமலைகளிற்புடைக்குஞ்சுற்றி. (களஅ)

பறந்தனரமரஞ்சிப்பல்பெரும்பிணத்தின்பம்மல்
நிறைந்தனபறவையெல்லாமெடுந்திசைநான்குநான்கும்
மறைந்தனபெருமைதீர்ந்தமலக்குலம்வற்றிவற்றிக்
குறைந்தனகுரக்குவெள்ளங்கொன்றனன்கூற்ரூங்கூச. (களகூ)

மற்றினியொருவன்மேலோர்மரமெடுங்கற்கள்வைக்கப்
பெற்றிலமாதுமன்றேறயின்ரூடும்பெறுவதாதும்
அற்றனதீங்குமென்ரூவரிகுலத்தலைவர்பற்றி
எற்றினவெறிந்தவெல்லாமிணைநெடுந்தோளினேற்ரூன். (கஅ0)

கல்லொடுமரனும்வேருங்கட்டையுங்காலிற்றீண்டும்
புல்லொடுபிறவுமெல்லாம்பொடிப்பொடியாகிப்போன
இல்லைமற்றெறியத்தக்கவெற்ரூவசுற்ரூமென்னப்
பல்லொடுபல்லுமென்ரூபட்டனகுரங்குமுட்டி. (கஅக)

குன்றின்வீழ்குரீஇக்குழாத்திற்குழாங்கொளக்குதித்துக்கூடிச்
சென்ரூமேலெழுந்துபற்றிக்கைத்தலந்தேயக்குத்தி

வன்றிறலெயிற்றூற்கவ்விவள்ளுகிர்மடியக்கீளா
ஒன்றுமாகின்றதில்லையென்றிழிந்தோடிப்போன. (கஅஉ)

மூலமேமண்ணின்மூழ்கிக்கிடந்தமேதார்பொருப்பைமுற்றும்
காலமேலெழுந்தகால்போற்கையிறக்கடிதின்வாங்கி
நீலன்மேனிமிர்ந்ததாங்கோர்நெருப்பெனத்திரித்துவிட்டான்
சூலமேகொண்டுநூறிமுறுவலுன்றோன்றினின்றான். (கஅங)

பெயர்ந்தொருசிகரந்தேடினச்சமாம்பிறற்குமென்னப்
புயங்களேபடைகளாகத்தேதெரிதிரோடிப்புக்கான்
இயங்களுங்கடலுமேகத்திடிகளுமொழியயாரும்
பயங்கொளக்கரங்களோச்சிக்குத்திநுனுதைத்தான்பல்கால். (கஅச)

கைத்தலஞ்சலித்துக்காலுங்குலந்துதன்கருத்துமுற்றி
நெய்த்தலையழலிற்காந்தியெரிகின்றநீலன்றன்னை
எற்றுயிர்குடிப்பலென்னுவெற்றிநுனிடதுகையால்
மெய்த்தலைச்சூலமோச்சான்வெறுங்கையாவனென்றுவெள்கி. (கஅஞ)

ஆண்டதுநோக்கிநின்றவங்கதழிதன்னுள்
நீண்டதோள்நெடுந்திண்குன்றநிலமுதுகாற்றநீக்கி
மாண்டனனரக்கன்றம்பியென்றுலகேழும்வாழ்த்தத்
தூண்டினனதனையன்னுனெருதனித்தோளினேற்றான். (கஅசு)

எற்றபோதனையகுன்றமெண்ணிருந்துகளதாகி
வீற்றுவீற்றுகியோடிவிழுதலுங்கவியின்வெள்ளம்
ஊற்றமேதமக்கென்றெண்ணியுடைந்ததுகுமரனுற்ற
சீற்றமுந்தானுநின்றான்பெயர்ந்திலன்சென்றுபாதம். (கஅள)

இடக்கையாலரக்கனுங்கோரெழுமுனைவயிரத்தண்டு
தடுக்கலாந்தரத்ததல்லாவலியதுதருக்கின்வாங்கி
மடக்குவாயுயிரையென்னுவீசினனதனைமைந்தன்
தடக்கையாற்பிடித்துக்கொண்டான்வானவர்தன்னைவாழ்த்த. (கஅஅ)

பிடித்ததுசுழற்றிமற்றப்பெருவலியரக்கன்றன்னை
இடித்துருமேறுகுன்றத்தெரிமடித்தியங்குமாபோல்
அடித்துயிர்குடிப்பெனென்னுவனல்விழித்தார்த்துமண்டிக்
கொடித்தடந்தேரின்முன்னர்க்குதித்ததிர்குறுகினின்றான். (கஅக)

நின்றவன்றன்னையன்னுனெருப்பெழநிமிரநோக்கிப்
பொன்றவந்தடைந்ததானைப்புரவலனெருவன்றூதை
அன்றவன்மகனேவெம்மூரனன்மடித்தரக்கர்தம்மை
வென்றவன்றூதைவாரோசொல்லுதிவிரைவினென்றான். (கஆ0)

நும்முனைவாலிற்சுற்றிநோன்றிசைநான்குந்தாவி
மும்முனைநெடுவேலண்ணன்முளரியஞ்சரணந்தாழ்ந்த
வெம்முனைவீரன்மைந்தனின்னையென்வாவின்வீக்கித்
தெம்முனையிராமன்பாதம்வணங்கிடச்செல்வெனென்றான். (ககக

உந்தையையமறைந்தோரம்பாலுயிருண்டவுதவியோற்குப்
பந்தனைபகையைச்செற்றுக்காட்டலையென்னிற்பாரோர்
நிந்தனைநின்னைச்செய்வர்நல்லதுநினைந்தாய்நேரே
வந்தனைபுரிவரன்றேறவீராய்வசையிற்றீர்ந்தார். (ககஉ

இத்தலைவந்ததென்னையிராமன்பால்வாலினீர்த்து
வைத்தலைநுதலியன்றுவானவர்மார்பிற்றைத்த
முத்தலையயிலினுச்சிமுதுகுறழ்மூரிவால்போல்
கைத்தலங்காலுந்தூங்கக்கிடத்தலைக்கருதியென்றான். (ககங

அற்றவனுரைத்தலோடுமனல்விழித்தசனிகுன்றத்
துற்றதுபோலுமென்னுமொலிபடவுலகமுட்கப்
பொற்றடந்தோளின்வீசிப்புடைத்தனள்பொறியிற்சிந்தி
இற்றதுநூறுகூருயெழுமுனைவயிரத்தண்டு. (ககச

தண்டிறத்தடக்கையோச்சித்தழுவியதறுகணுனைக்
கொண்டிறப்புறுவெனென்னுத்தலையுறக்குனிக்குங்காலைப்
புண்டிறப்புறவலாளன்கையினுற்புகைந்துகுத்த
மண்டிறப்பெய்தவீழ்ந்தான்மாருதியிமைப்பின்வந்தான். (ககஞ)

மறித்தவனவனத்தன்கைவயிரவாட்சூலமார்பில்
குறித்துறவெறியலுற்றகாலையிற்குன்றமொன்று
பறித்தவனெற்றிமுற்றப்பார்ப்பிடைப்பாகமுன்னே
செறித்தெனச்சுரிக்கவீசித்தீர்த்தனவாழ்த்தியார்த்தான். (ககசு)

தலையினிற்றைத்துவேரூர்தலையெனநின்றதன்ன
மலையினைக்கையின்வாங்கிமாருதிவயிரமார்பின்
உலையுறவெந்தபொன்செய்கம்மியர்கூடமொப்பக்
கொலையுறுபொறிகள்சிந்தவீசித்தோள்கொட்டியார்த்தான். (ககஎ)

அவ்வழிவாலிசேயையரிகுலவீரரஞ்சார்
வவ்வினர்கொண்டுபோந்தார்மாருதிவானைமுற்றும்
கவ்வியதனையதாங்கோர்நெடுவரைகடிதின்வாங்கி
எவ்வமிலாற்றலானைநோக்கிநின்றினையசொன்னான். (ககஅ)

எறிகுவெனிதனைநின்மேலிணைமப்புறுமளவிலாற்றல்
மறிகுவதன்றியல்லான்மாற்றினையென்னின்வன்மை

அறிகுவரெவரும்பின்னையானுன்லேடமருஞ்செய்யேன்
பிறிகுவெனுலகில்வல்லோய்பெரும்புகழ்பெறுதியென்றான். (கஙங)

மாற்றமஃதுரைப்பக்கேளாமலமுழுதிறந்ததன்னக்
கூற்றுறழ்பகுவாய்விள்ளச்சிரித்துநீகாணர்ந்தகுன்றை
ஏற்றனனேற்றகாலத்திறையதற்கொற்கமெய்தின்
தோற்றனனுனக்கென்வன்மைசுருங்குமென்றரக்கன்சொன்னான். ()

மாருதிவல்லையாயினில்லடாமாட்டாயாயின்
பேருதியுயிர்கொண்டென்றுபெருங்கையானெருங்கிவிட்ட
காருதிர்வயிரக்குன்றைக்காந்திலன்றூண்மேலேற்றான்
ஓருதிர்நூறுகூறுயுக்கதெவ்வுலகுமுட்க. (உ0க)

இளக்கமொன்றின்றினின்றவியற்கைபார்த்திவனதாற்றல்
அளக்குறற்பாலுமாகாகுலவரையமானற்று
துளக்குறுநிலையானல்லன்சுந்தரத்தோளன்வாளி
பிளக்குமேற்பிளக்குமென்னுமாருதிபெயரப்போனான். (உ0உ)

எழுபதுவெள்ளத்துள்ளாரிறந்தவொழியயாரும்
முழுமுதன்மாள்வரின்றேறியவன்வலத்தமைந்தமுச்சூற்
கழுவினினென்றுவாரேனைக்கலங்கினர்நடுங்கினரால்
பொழுதினினுலகமூன்றுந்திரியுமென்றுள்ளம்பொங்கி. (உ0ஙு)

தாக்கினர்தாக்கினர்தங்கைத்தலஞ்சலித்ததன்றி
நூக்கினரில்லையாருநோவுசெய்தாருமில்லை
ஆக்கினன்களத்தினங்கோர்குரங்கினதடியுமின்றிப்
போக்கினனுண்மையோடும்புதுக்கினன்புகழையம்மா. (உ0ச)

சங்கத்தார்குரங்குசாயத்தாபதரென்னத்தக்கார்
இங்குற்றூரல்லரோதான்வேறுமோரிலங்கையுண்டோ
எங்குற்றூரெங்குற்றூரென்றெறுத்தழைத்திமையாரஞ்சத்
துங்கத்தோள்கொட்டியார்த்தான்கூற்றையுந்துணுக்கங்கொண்டான். ()

* பறந்தலையதனின்வந்தபலபெருங்கவியின்பண்ணை
இறந்ததுகிடக்கநின்றதிரிதலின்யாருமின்றி
வறந்ததுசோரிபாயவளர்ந்தனமகரவேலை
குறைந்தனவுவாவுற்றூருதங்கிளர்ந்துமீக்கொண்டதென்ன. (உ0சு)

வேறு.

இலக்குமணகும்பகருணயுத்தம்.

குன்றுங்கற்களுமரங்களுங்குறைந்தனகுரங்கின்
வென்றியம்பெருஞ்சேனையோர்பாதியின்மேலும்

---

* பறந்தலை — போர்க்களம்.

இன்றுதேய்ந்ததென்றுரைத்தலுமமரர்கண்டுவப்பச்
சென்றுதாக்கினெனுருதனிச்சுமித்திரைச்சிங்கம். (உ0எ)

நாணெறிந்தனன்சிலையினையரக்கியர்நகுபொற்
பூணெறிந்தனர்படியிடையிடிபொடித்தென்னச்
சேணெறிந்தெழுதிசைசெவிடெறிந்தனவலகை
தூணெறிந்தனகையெடுத்தாடின துணங்கை. (உ0அ)

இலக்குவன்கடிதேதவியதிரைபெறுதிரைப்பச்
சிலைக்கடுங்கணெடுங்கணைஞ்சிறையுடன்செல்ல
உலைக்கொடுங்கனல்வெதும்பிடவாயெரிந்தோடிக்
குலக்கயங்களிற்குளித்தனகுடித்தனகுருதி. (உ0க)

அலைபடைத்தவாளரக்கனைச்சிலகழுத்தரிவ
சிலசிரத்தினைத்துணித்தலைதிசைகொண்டுசெல்வ
கொலைபடைத்தவெங்களத்திடைவிழாக்கொண்டுபோவ
தலைபடைத்தனபோன்றனவானெடுஞ்சரங்கள். (உ க0)

உருப்பதங்களையொப்பனசிலகணையோடைடப்
பொருப்பதங்களையுருவிமற்றப்புறம்போவ
செருப்பதம்பெறுவரக்கர்தந்தலைபலசிந்திப்
பருப்பதங்கள்புக்கொளிப்பனமுழைபுகுபாம்பின். (உ கக)

மின்புகுந்தனபல்குழுவாமெனமிளிர்வ
பொன்புகுந்தொளிர்வடம்பினகடுங்கணைபோவ
முன்புநின்றவர்முகத்திற்குங்கடைக்குழைமுதுகின்
பின்புநின்றவர்பிடர்க்குமிவ்விசையொக்கும்பிறழா. (உ கஉ)

போர்த்தபோரியின்கண்ணனகாளத்தின்பொகுட்ட
ஆர்த்தவாயனகையனவாயினின்கழுத்த
ஈர்த்ததேரனவிவுளியின்றலையனவெவர்க்கும்
பார்த்தநோக்கனகலந்தனவிலக்குவன்பகழி. (உ கங)

மருப்பிழந்தனகளிறலாம்வால்செவியிழந்த
நெருப்புகுங்கண்களிழந்தனநெடுங்கரந்துணிந்த
செருப்புகுங்கடுங்காற்றுரஞ்சிந்தினசிகரப்
பொருப்புருண்டனவாமெனத்தலத்திடைப்புரண்ட. (உ கச)

நிரந்தரந்தொடைநெகிழ்த்தலிற்றிசையெங்குநிறைந்த
சரந்தலத்தலைபடப்படமயங்கினசாய்ந்த
உரந்தலத்துறவுழைத்தலாற்பிழைத்ததான்றில்லைக்
குரந்தலத்தினுமம்விசும்பினுமிதித்திலாக்குதிரை. (உ கஞ)

பல்லவப்படைபடப்படுபுரவியபல்கால்
வில்லுடைத்தலையாளொடுசூதரைவீழ்த்த
எல்லையுற்றவெங்குருதியினீர்ப்புண்டவல்லால்
செல்லகிற்றிலநின்றிலகொடிநெடுந்தேர்கள். (உகசு)

பேழையொத்தகல்வாயனபேய்க்கணமுகக்கும்
மூழையொத்தனகழுத்தறவீழ்ந்தனமுறைசால்
ஊழையொத்தனவோர்கணைதத்தனவுதிரத்
தாழியொத்தவெங்குருதியின்மிதப்பனதலைகள். (உகஎ)

ஒட்டிநாயகன்வென்றிநாள்குறித்தெதாளிர்மூளைகள்
அட்டிவைத்தனபாலிகைநிக்கர்த்தனவழிந்து
நட்டவாமெனவீழ்ந்தனதுடிகளினவைதிர்
வட்டவான்கணில்வதிந்தனவருணசாமரைகள். (உகஅ)

எரிந்தவெங்கணெநற்றியிற்பதெதாறும்யானை
அரிந்தவங்குசத்தங்கையிற்கல்வியினமைவால்
திரிந்தவேகத்தபாரங்களூர்ந்தனசெருவில்
புரிந்தவானரத்தானையிற்புக்கனபுயவின். (உகக)

வேனிலானன்னவிலக்குவன்கடுங்கணெவிலக்க
மானவெள்ளெயிற்றரக்கர்தம்படைக்கலம்வாரிப்
போனபோயினதிசைதெதாறும்பொறிக்குலம்பொடிப்ப
மீனெலாமுடன்விசும்பினின்றுதிர்ந்தெனவீழ்ந்த. (உஉ0)

கரங்குடைந்தனதாடர்ந்துபோய்க்கொய்யுளைக்கடுமாக்
குரங்குடைந்தனவெரிறுறக்கொடிநெடுங்கொற்றத்
தரங்குடைந்தனவணிநெடுந்தேர்க்குலங்குடைந்த
அரங்குடைந்தனவயினெவாளிகளம்மா. (உஉக)

துரக்குமெய்யுணர்விருவினைகளையெனுஞ்சொல்லில்
கரக்கும்வீரதைதீமையையெனுமிதுகண்டோடம்
இரக்கநீங்கினரறத்தெதாடுந்திறம்பினரெனினும்
அரக்கராக்கையையரம்பையர்தழுவினர்விரும்பி. (உஉஉ)

மறக்கொடுந்தெதாழிலரக்கர்கண்மறுக்கிலாமழைபோல்
நிறக்கொடுங்கணெநெருப்பொடுநிகர்வனநிமிர
இறக்கமெய்தினர்யாவருமெய்தினரெனினத்
துறக்கமென்பதிற்பெரியதென்றுளதெனச்சொல்லேலம். (உஉங)

ஒருவரைக்கரமொருவரைச்சிரமற்றங்கொருவர்
குரைகழற்றுணைதெதாளிணைபிறமற்றுங்கொளலால்

வீரவலர்ப்பெரூவறுமையவாயினவெவ்வே
றிரவுகற்றனபோன்றனவிலக்குவன்பகழி. (உஉக

சிலவரைக்கரஞ்சிலவரைச்செவிசிலர்நாசி
சிலவரைக்கழல்சிலவரைக்கண்கொளுஞ்செயலால்
நிலவரைத்தருபொருள்வழிதண்டமிழ்நிரப்பும்
புலவர்சொற்றுறைபுரிந்தவும்போன்றனபுங்கம். (உஉந

அறத்தினின்னுயிரனையவன்கணபடவரக்கர்
இறத்துமிங்கிறைநிற்பினென்றியலின்மயங்கித்
திறத்திறம்படத்திசைதொறுந்திசைதொறுஞ்சிந்திப்
புறத்திறைஞடினரோடினகுருதியேபோல. (உஉசு

செருவின்மாண்டவர்பெருமையுமிலக்குவன்செய்த
வரிவிலாண்மையுநோக்கியபுலத்தியன்மருமான்
திரிபுரஞ்செற்றதேவனுமிவனுமேமசெருவின்
* ஒருவிலாளரொன்றுயிரக்காலெடுத்துரைத்தான். (உஉஎ)

படர்நெடுந்தடந்தட்டிடைத்திசைதொறும்பாகர்
கடவுகின்றதுகாற்றினுமனத்தினுங்கடிய
தடல்வயங்கொள்வெஞ்சீயநின்றுர்க்கின்றதம்பொன்
வடபெருங்கிரிபோல்வதேதேரோட்டினன்வந்தான். (உஉஅ)

தொளைகொள்வாணுகச்சுடர்நெடுந்தோண்மிசைத்தோன்றி
வளைகொள்வெள்ளெயிற்றரக்கன்வெஞ்செருத்தொழின்மலையக்
கிளைகொளாதிகலென்றெண்ணிமாருதிகிடைத்தான்
இளையவள்ளலேயேறுதிதேரண்மிசையென்றான். (உஉக)

அனுமன்றேரளி லிலக்குமணனேறி நிற்றல்.

எறிஞனிளங்கோளரியிமையவராசி
கூறிஞரெடுத்தார்த்ததுவானரக்குழுவும்
நூறுபத்துடைப்பத்தியிஞறிற்பரிபூண்ட
ஆறுதேரினுமகன்றதவ்வநுமன்றன்றடந்தேர். (உஙo)

தன்னினேர்பிறர்தானலாதில்லவன்றுண்மேல்
துன்னுபேரொளியிலக்குவன்றுன்றியதோற்றம்
பொன்னின்மால்வரைவெள்ளிமால்வரைமிசைபொலிந்த
தென்னுமாறன்றிப்பிறிதெடுத்தியம்புவதியாதோ. (உஙக)

ஆங்குவீரரேடமர்செய்வானமைந்தவாளரக்கன்
தாங்குபல்கணைப்புட்டிலுந்தகைபெறக்கட்டி

---

* ஒருவிலாளர்-நீங்காத சமானமாளர்.

வீங்குதோள்வலிக்கேயது * விசும்பில்வில்வெள்க
வாங்கிஞனெடுவடவரைபுரைவதோர்வரிவில். (உங-உ)

இராமன்றம்பிநீயிராவணன்றம்பிநானிருவேம்
பொராநின்றேறிதுகாணியவந்தனர்புலவோர்
பராவுந்தொல்செருமுறைவலிக்குரியனபகர்ந்து
விராவுநல்லமர்விளைக்குதும்யாமெனவிளம்பா. (உங-ங)

பெய்தவத்திரேர்பெண்கொடியெம்முழைப்பிறந்தாள்
செய்தகுற்றமொன்றில்லவணுசிவெஞ்சினத்தால்
கொய்தகொற்றவமற்றவள்கூந்தலிரட்டூர்த்த
கய்தலத்திடைக்கிடத்துவென்காக்குதியென்ரூன். (உங-ச)

அல்லிணற்செய்தநிறத்தவனேயதுபகர
மல்லிணற்செய்ததோளினன்மாற்றங்கணும்பால்
வில்லிணற்சொல்லினல்லதுவெந்திறல்வெள்கச்
சொல்லிணற்சொலக்கற்றிலம்யாமெனச்சொன்ரூன். (உங-ஞ)

விண்ணிரண்டுகூரியதுபிளந்ததுவெற்பு
மண்ணிரண்டுறக்கிழிந்ததென்றிமையவர்மறுக
கண்ணிரண்டிலுந்தீயுகக்கதிர்முகப்பகழி
எண்ணிரண்டிரேழிரண்டொருதொடைதொடுத்தெய்தான். (உங-சு)

கொம்புநாலுடைக்குலக்கரிகும்பத்திற்குளித்த
உம்பராற்றலையொதுக்கியவுருமெனச்செல்வ
வெம்புவெஞ்சினத்திராவணற்கிளையவன்விட்ட
அம்புநான்கிணற்பத்திரேரெடட்டையுமறுத்தான். (உங-எ)

அறுத்தகாலையினரக்கனுமமரைநெடுநாள்
ஒறுத்ததாயிரமுருவதுதிசைமுகனுதவப்
பொறுத்ததாங்கொருபுகர்முகக்கடுங்கணைப்புத்தேள்
இறுத்துமற்றிதுவல்லையேலென்றுகோத்தெய்தான். (உங-அ)

புரிந்துநோக்கியதிசைதொறும்பகழியின்புயலால்
எரிந்துசெல்வதைநோக்கியவிராமனுக்கிளையான்
தெரிந்துமற்றதுதன்னையோர்தெய்வவெங்கணையால்
அரிந்துவீழ்த்தலுமாயிரவுருச்சரமற்ற. (உங-க)

ஆறிரண்டுவெங்கடுங்கணையநுமன்மேலழுத்தி
வேறுவெஞ்சரமிரண்டிளங்குமரன்மேலேற்றி
நூறுமைம்பதுமொருதொடைதொடுத்தொருநொடியில்
கூறுதிக்கையும்விசும்பையுமறைத்தனன்கொடியோன். (உசo)

---

* விசும்பில்வில் – இந்திரவில்.

மறைத்தவாளிகளவற்றையுமவற்றிணன்மாற்றித்
துறைத்தலந்தொறுந்தலந்தொறுநின்றுதேர்சுமக்கும்
பொறைக்கமைந்தவெங்கரிபரியாளிமாப்பூதம்
திறத்திறம்படத்துணித்தவன்றேரையுஞ்சிதைத்தான். (உசக)

தேரழிந்ததுசெங்கதிர்ச்செல்வனைச்சூழ்ந்த
ஊரழிந்ததுபோற்றுறந்தூர்பவருலந்தார்
நீரழிந்திடாநெடுமழைக்குழாத்திடைநிமிர்ந்த
பாரவெஞ்சிலையழிந்தெனத்துமிந்ததப்பருவில். (உசட)

ஊன்றுதேரொடுசிலையிலன்கடல்கிளர்ந்தெதாப்பான்
என்றுமற்றவனின்னுயிர்குடிப்பலென்றுலக
மூன்றும்வென்றமைக்கிடுகுறியென்னமுச்சிகைத்தாய்த்
தோன்றும்வெஞ்சுடர்ச்சூலவெங்கூற்றினைத்தொட்டான். (உசஞ)

செய்தபோரினைநோக்கியித்தேரிடைச்சேர்ந்த
கொய்யுளைக்கடுங்கோளரிமுதலியகுழுவை
எய்துகொன்றனனேனெடுமந்திரமியம்பி
வய்துகொன்றனனேனெவனவானவர்மயர்ந்தார். (உசக)

இழியப்பாய்ந்தனனிருநிலம்பிளந்திருகூறாக்
கிழியப்பாய்புனல்கிளர்ந்தெனக்கிளர்சினத்தரக்கன்
பழியப்பாலிவன்பதாதியென்றநுமன்றன்படர்தோள்
ஒழியப்பார்மிசையிழந்துசென்றிளவலுமுற்றான். (உசஞ)

உற்றகாலையினிராவணன்றம்பிமாடுதவ
இற்றதானையினிருமடியிகற்படையேவ
முற்றியன்னைவைமுழங்குமுந்நீரெனமுடுகிச்
சுற்றியார்த்தனசுமித்திரைசிங்கத்தைத்தொடர. (உசஎ)

இரிந்துவானவரிரியலின்மயங்கினரெவரும்
சொரிந்தவெம்படைதுணித்திடத்தடுப்பருந்தொழிலால்
பரிந்தவண்ணலும்பரிவிலனெருபுடைபடரப்
புரிந்தவண்னெடுஞ்சேனையங்கருங்கடல்புக்கான். (உசள)

முருக்கிணண்மலர்முகைவிரிந்தாலன்னமுரட்கண்
அரக்கர்செம்மயிர்க்கருந்தலையடுக்கலினணைகள்
பெருக்கிணற்பெருங்கடலிடைப்பெய்துபெய்தருவை
உருக்கிணலன்னகுருதிநீராறுகளொதுங்க. (உசஅ)

கரியின்கைகளும்புரவியின்கால்களுங்காலின்
தெரியுந்தேர்களின்சில்லியுமாக்கர்தஞ்சிரமும்

சொரியுஞ்சோரியுந்துறைதொறுந்துறைதொறுஞ்சுழிப்ப
நெரியும்பல்பிணப்பெருங்கரைகட்ந்திலநீத்தம். (உசகூ)

கொற்றவாளெழுத்தண்டுதேவல்கோன்மழுக்குலிசம்
மற்றும்வேறுளபடைக்கலமிலக்குவன்வாளி
சுற்றுமோடுவதாடர்ந்திடைதுணித்திடத்தாகையா
அற்றதுண்டங்கள்படப்படத்துணிந்தனவனந்தம். (உருo)

குண்டலங்களுமோலியுமாரமுங்கோவை
தண்டைதாள்வளைகடகமென்றினையனதறுகட்
கண்டகண்டங்களொடுங்கவணதுரந்தனகதிர்சூழ்
மண்டலங்களுமாறுகொண்டிமைத்தனவாளி. (உருக)

பரந்தவெண்குடைசாமரைநெடுங்கொடிபதாகை
சரந்தருஞ்சிலைகேடகம்பிச்சமொய்சரங்கள்
துரந்துசெல்வனகுருதிநீராறுகடோறும்
நிரந்தபேய்க்கணங்கரைதொறுங்குவித்தனநீந்தி. (உருஉ)

ஈண்டுவெஞ்செருவினையனிகழ்வுழியெவர்க்கும்
நீண்டவெள்ளையிற்றரக்கன்மற்றொருதிசைநின்றூன்
பூண்டவெஞ்செருவிரவிகான்முளையொடும்பொருதான்
காண்டகும்மெனவிமையவர்குழுக்கொண்டுகண்டார். (உருந)

வேறு.

சுக்கிரீவ கும்பகருண யுத்தம்.

பொறிந்தெழுகண்ணினன்புகையும்வாயினன்
செறிந்தெழுகதிரவன்சிறுவன்சீறினன்
முறிந்தனவரக்கன்மாமுரட்டிண்டோளென
வெறிந்தனன்விசும்பின்மாமலையொன்றேந்தியே. (உருச)

அம்மலைதின்றுவந்தவனியெய்திய
செம்மலையனையவெங்களிறுஞ்சேனையின்
வெம்மலைவேழமும்பொருதவேறினி
எம்மலையுளவவற்கெடுக்கொணாதன. (உருஞ)

இவ்வகைநெடுமலையிழிந்தமாசுணம்
கவ்வியநிருதர்தங்களிறுங்கட்டற
அவ்வகைமலையினையேற்றொருகங்கையால்
வவ்வினனரக்கன்வாளவுணர்வாழ்த்திரைர்.
(உருசு)

ஏற்றொருகையிலைவிதுசானீயடா
ஆற்றியகுன்றமென்றளவிலாற்றலான்

நீற்றியனுணுகுறப்பிசைந்துநீங்கெனத்
தூற்றினனிமையவர்துணுக்கமெய்திரைர். (உருள)

செல்வெமேரைர்நெடுங்கிரியின்னுந்தேர்ந்தெனை
எல்லவன்கான்முளையுணருமேல்வையில்
கொல்லெனவெறிந்தனன்குறைவிணென்பிணைர்
சொல்லெனப்பிழைப்பிலாச்சூலஞ்சோர்விலான். (உருஅ)

பட்டனன்பட்டனனென்றுபார்த்தவர்
விட்டலம்பிடநெடுவிசும்பிற்சேறலும்
எட்டினனதுபிடித்திறுத்துநீக்கிணன்
ஒட்டுமோமாருதியறத்தையோம்புவான். (உருக)

சித்திரவனமுலைச்சீதைசெவ்வியால்
முத்தனர்மிதிலையூரறிவுமுற்றிய
பித்தன்வெஞ்சிலையினையிறுத்தபேரொலி
ஒத்ததுசூலமன்றிற்றவோசையே. (உரு0)

நிருதனுமனையவனிலைமைநோக்கியே
கருதவுமியம்பவுமரிதுன்கைவலி
அரியனமுடிப்பதற்கனைத்துநாட்டிணும்
ஒருதனியுனையிதற்குவமம்யாதென்றான். (உருக)

என்னெடும்பொருதியேலின்னும்யானமர்
சொன்னனபுரிவலென்றரக்கன்சொல்லலும்
முன்னினியெதிர்க்கிலேனென்றுமுற்றிய
பின்னிகல்பழுதனைப்பெயர்ந்துபோயினன். (உருஉ)

அற்றதுகாலையினரக்கனுயுதம்
பெற்றிலண்பெயர்ந்திலனனையபெற்றியில்
பற்றினன்பாய்ந்ததிர்பருதிகான்முளை
எற்றினன்குத்தினனெறியுங்கைகளால். (உருங)

அரக்கனுநன்றுநின்னுண்மையாயினும்
தருக்கினியின்றெறுது * சமையுந்தானென
நெருக்கினன்பற்றினனீங்கொணுவகை
உருக்கியசெம்பெனவுதிரக்கண்ணினன். (உரூ)

திரிந்தனர்சாரிகைதேவர்கண்டிலர்
புரிந்தனர்நெடுஞ்செருப்புகையும்போர்த்தெழ
எரிந்தனவுருமெலாமிருவர்வாய்களும்
சொரிந்தனகுருதிதாமிறையுஞ்சோர்ந்திலர். (உருங)

---

* சமையும் — முடியும்.

உறுக்கினரொருவரையொருவருற்றிகல்
முறுக்கினர்முறைறமுறையரக்கன்மொய்ம்பிலுல்
பொதுக்கிலாவகைநெடும்புயங்களாற்பிடித்
திறுக்கினனீவன்சிறிதுணர்வுமெஞ்சிலன். (உசுசு)

சுக்கிரீவனைக் கும்பகருண னெடுத்துச் செல்லுதல்.

மண்டமரின்றுடுமடங்குமன்னிலாத்
தண்டலில்பெரும்படைசிந்துந்தக்கதார்
எண்டருகருமமற்றிதனினில்லெனக்
கொண்டனன்போயினனிருதர்கோமகர். (உசுள)

உரற்றினபறவையையூறுகொண்டெழச்
சிரற்றினபார்ப்பினிற்சிந்தைசிந்திட
விரற்றுறுகைத்தலத்தடித்துவெய்துயிர்த்
தரற்றினகவிக்குலமரக்கரார்த்தனர். (உசுஅ)

நடுங்கினரமரருநாவும்வேர்த்துலர்ந்
தொடுங்கினர்வானரத்தலைவருண்முகிழ்த்
திடுங்கினகண்ணினனெரிந்தநெஞ்சினன்
அடங்கினனெழுயிர்ப்பென்னுமன்பினர். (உசுக)

புழுங்கியவெஞ்சினத்தரக்கன்போகுவான்
அழுங்கலில்கோண்முகத்தரவமாயினன்
எழுங்கதிரிரவிதன்புதல்வனெண்ணுற
விழுங்கியமதியெனவெலிந்துதோன்றினன். (உஎ0)

திக்குறவிளங்குவான்சிறுவன்றீயவன்
மைக்கருநிறத்திடைமறைந்ததன்னுரு
மிக்கதுங்குறைந்ததுமாகமேகத்துப்
புக்கதும்புறத்துமாமதியும்போன்றனன். (உஎக)

ஒருங்கமர்புரிகிலேனுன்னெழுடியாவனை
நெருங்கியவுரையினைநினைந்துநேர்கிலன்
கருங்கடல்கடந்தவக்காலன்காலன்வாழ்
பெருங்கரம்பிணைசந்தவன்பின்புசென்றனன். (உஎஉ)

ஆயிரம்பெயரவனடியில்வீழ்ந்தனர்
நாயகரெமக்கினியாவர்நாட்டினில்
காய்கதிர்ச்சிறுவனைப்பிணித்தகையினன்
போயினனாக்கனென்றிசைத்தபூசலார். (உஎங)

தீயினுழுதிர்வுறச்சிவந்தகண்ணினன்
காய்கணைசிலையொடுங்கவர்ந்தகையினன்

எயெனுமளவினினிலங்கைமாநகர்
வாயில்சென்றெய்திஞன்மழையின்மேனியான். (உஎச)

இராமன் சரக்கூடங்கட்டிக் கும்பகருணனைத் தடுத்தல்.

உடைப்பெருந்துணவனையுயிரிற்கொண்டுபோய்க்
கிடைப்பருங்கொடிநகரடையிற்கேடெனத்
தொடைப்பரும்பகழியின்மாரிதூர்த்துற
அடைப்பனென்றடைத்தனன்விசும்பிறைறலாம். (உஎஞ)

மாதிரமறைந்தனவயங்குவெய்யவன்
சோதியின்கிளர்நிலைதொடர்தலோவின
யாதும்விண்படர்கிலவியங்குகார்மழை
மீதுநின்றகன்றனவிசும்புதூர்த்தலால். (உஎசு)

மனத்தினுங்கடியதேர்விசையின்வான்செல்வான்
இனக்கொடும்பகழியின்மதிலையெய்திஞன்
நினைத்தவைநீக்குதலருமையின்றெனச்
சினக்கொடுந்திறலவன்றிரிந்துநோக்கினான். (உஎள)

கும்பகருண னிராமனைக் காண்டல்.

கண்டனன்வதனம்வாய்கண்கைகாலெனப்
புண்டரீகத்தடம்பூத்துப்பொற்சிலை
மண்டலந்தொடர்ந்துமண்வயங்கவந்தசேதார்
கொண்டலிற்பொலிதருகோலத்தான்றனை. (உஎஅ)

மடித்தவாய்கொழும்புகைவழங்கமாறிதழ்
துடித்தமார்புருவங்கள்சுறுக்கொண்டோடறிடப்
பொடித்ததீநயணங்கள்பொறுக்கிலாமையால்
இடித்தவான்றழிப்பிணவிடிந்தகுன்றெனாம். (உஎக)

இராமனைப்பார்த்துக் கும்பகருணன் சிலவுரைத்தல்.

மாக்கவந்தனும்வலிதொலைந்தவாவியாம்
பூக்கவர்ந்துண்ணியும்போலுமென்றனைத்
தாக்கவந்தனையிவன்றன்னையின்னுயிர்
காக்கவந்தனையெனக்கழறன்மேயினான். (உஅ0)

உம்பியையுணிந்திலேனவனுக்கூர்தியாம்
தும்பியையுணிந்திலேன்றொடர்ந்தவாலிதன்
தம்பியையுணிந்திலேன்சமரந்தன்னில்யான்
அம்பியல்சிலையினுய்புகழுன்றுதலான். (உஅக)

தேடினென் றிரிந்தனனின்னேத்திக்கிறந்
தோடியதுன்படையும்பியோர்ந்தொரு
பாடுறநடந்தனனுமன்பாறினன்
ஈடுறுதிவனைக்கொண்டெனிதினெய்தினேன். (உஎஉ)

காக்கியவந்தனையென்னிற்கண்டவென்
பாக்கியந்தந்ததுநின்னைப்பன்முறை
ஆக்கியசெருவெலாமாக்கியம்முனைப்
போக்குவென்மனத்துறுகாதற்புன்கணேய். (உஎங)

ஏதிவெந்திறலிணையிமைப்பிலோரெதிர்
பேதுறுகுரங்கையான்பிணித்தகைப்பிணி
கோதைவெஞ்சிலையிறற் * கோடிவீடெனின்
சீதையும்பெயர்ந்தனள்சிறைநின்றுமென்றனன். (உஎச)

இராமன் கும்பகருணனுக்குப் பதிலுரைத்தல்.

என்றலுமுறுவலித்திராமன்யாவுடை
இன்றுணையொருவனையெடுத்ததோளிணைக்
குன்றினுமுயர்ந்தனகுறைக்கிலேனெனினின்
பின்றினனெனக்குவிற்பிடிக்கிலேனென்றனன். (உஎஞ)

இராமன் கும்பகருணன்மீது அம்பேவுதல்.

மீட்டவன்கரங்களால்விலங்கலானையே
மூட்டறநீக்குவான்முயலுமவ்வேலையில்
வாட்டலைபிடர்த்தலைவயங்கவாளிகள்
சேட்டகனைற்றியினிரண்டுசேர்த்தினான். (உஎட)

சுற்றியகுருதியின்செக்கர்சூழ்ந்தெழு
நெற்றியினெடுங்கணையொளிரநின்றவன்
முற்றியகதிரவன்முளைக்குமுந்துவந்
துற்றெறுமருணனதுதயம்போன்றனன். (உஎள)

குன்றின்வீழருவியிற்குதித்துக்கோத்திழி
புன்றலைக்குருதிநீர்முகத்தைப்போர்த்தலும்
இன்றுயிலெழுந்தனவுணர்ச்சியெய்தினான்
† வன்றிறலோற்றிலான்மயக்கமெய்தினான். (உஅ)

நெற்றியினின்றெரிவிழிநெடிதுமைப்பன
கொற்றவன்சரமெனக்குறிப்பினுன்னினான்

---

* கோடிவீடெனின் – விடுதலைக்கொள்ளுவாயாகின்.

† வன்றிறலோற்றிலான் – வலிய வெற்றியை இழக்காத கும்பகருணன்.

சுற்றுறநோக்கினன்மெழுதுநோக்கிணன்
முற்றியபொருட்கெலாமுடிவுளான்றனை. (உஅக)

கும்பகருணன் மூக்கினையுங் காதுகளையுஞ் சுக்கிரீவன்
கடித்தெடுத்துச் செல்லுதல்.

கண்டனையகன்றன்னைக்கண்ணுறுத்
தண்டலின்மானமுநாணுந்தாங்கிணன்
விண்டவனசியுஞ்செவியும்வேரொடும்
கொண்டனனெழுந்துபோய்த்தமரைக்கூடினன். (உகூ0)

வானரமார்த்தனமழையுமார்த்தன
தானரமகளிருந்தமருமார்த்தனர்
மீனரல்வேலையும்வெற்புமார்த்தன
வானவரோதிநின்றறமுமார்த்ததே. (உகூக)

சுக்கிரீவன் விடுதலையடைந்ததற்காக இராமன் மகிழ்வுறல்.

காந்திகலரக்கன்வெங்கரத்துணீங்கிய
ஏந்தலையகமகிழ்ந்தெதிர்தோக்கிய
வேந்தனுஞ்சானகியிலங்கைவெஞ்சிறை
போந்தனளாமெனப்பொருமனீங்கிணன். (உகூஉ)

மத்தகம்பிளந்துமாடுருவவார்சிலை
வித்தகன்சரந்தொடமெலிவுதோன்றியச்
சித்திரம்பெறுதலிற்செவியுமூக்குங்கொண்
டத்திசைபோயினனல்லதாண்ணுமோ. (உகூங)

அக்கணத்தறிவுவந்தணுகவங்கைகின்
றுக்கணன்கவியரசன்னுமுண்மையும்
மிக்குயர்ஞாசியுஞ்செவியும்வேறிடம்
புக்கதுமுணர்ந்தனனுதிரப்போர்வையான். (உகூச)

தாதுராகத்தடங்குன்றந்தாரைசால்
கூதிர்காலனெடுமழைசொரியக்கோத்திழி
ஊதைதேயாடருவிகளுமிழ்வதொத்தனன்
மீதுறுகுருதியாலெழுகுமேனியான். (உகூஞ)

எண்ணுடைத்தன்மையனியனையவெண்ணிலாப்
பெண்ணுடைத்தன்மையனையபீடையால்
புண்ணுடைச்செவியொடுமுக்கும்பொன்றலால்
கண்ணுடைச்சுழிகளுங்குருதிகால்வன. (உகூசு)

ஏசியுற்றெழும்விசும்பினரைப்பார்க்குந்தன்
நாசியைப்பார்க்குமுன்னடந்தநாளுடை

வாசியைப்பார்க்குமிம்மண்ணைப்பார்க்குமால்
சீசியுற்றதுவெனத்தீயுநெஞ்சினன். (உகூள)

என்முகங்காண்பதன்முன்னம்யானவன்
தன்முகங்காண்பதுசரதந்தானைனைப்
பொன்முகங்காண்பதோர்தோலும்போரிடை
வன்முகங்காண்பதோர்வாளும்வாங்கினன். (உகூஅ)

வீசினன்கேடகம்விசும்பின்மீனெலாம்
கூசினவமரருங்குடர்குழம்பினர்
காய்சினவரக்கனுங்கன்னற்போதவன்
நாசியுஞ்செவியும்வெங்குருதிஆன்றதே. (உகூக)

ஆயிரம்பேய்சுமந்தளித்ததாங்கொரு
மாயிருங்கேடகமிடத்துவாங்கினன்
பேயிரண்டாயிரஞ்சுமந்துபேர்வதோர்
காயொளிவயிரவாள்பிடித்தகையினன். (கூ00)

விதிர்த்தனன்வீசினன்விசும்பின்மீனெலாம்
உதிர்த்தனனுலகினையநந்தனுச்சியோ
டதிர்த்தனரத்தனையிரம்பெருங்
கதிர்த்தலஞ்சூழ்வடவரையின்காட்சியான். (கூ0க)

வீசினகேடகமுகத்துவீங்குகால்
கூசினகுரக்குவெங்குழுவைக்கொண்டெழுந்
தாசைகடோறும்விட்டெறியவார்த்தெழும்
ஓசையொண்கடலையுந்திடர்செய்தோதுமால். (கூ0உ)

போயினகேடகம்போகநோக்கினன்
ஆயிரம்பெயரவனறியுமுன்பவன்
பேயிரண்டாயிரம்பேணுங்கேடகம்
எயினுமளவினினெய்தச்சென்றதால். (கூ0ங)

தோலிடைத்துரக்கவுந்துகைக்கவுஞ்சுடர்
வேலுடைக்கூற்றினுற்றுணியவீசவும்
காலுடைக்கடலெனச்சிந்திக்கைகெட
வாலுடைநெடும்படையிரிந்துமாய்ந்ததால். (கூ0ச)

ஏறுபட்டதுமிடையெதிர்ந்துளாவொலாம்
கூறுபட்டதுங்கொழுங்குருதிகோத்திழிந்
தாறுபட்டதுநிலமகந்தனுச்சியும்
சேறுபட்டதுமொருகணத்திற்றீர்ந்ததால். (கூ0ஞ)

இடுக்கிலையெதிரினியிவனையிவ்வழித்
தடுக்கிலையாமெனிற்குரங்கின்ரூனையை
ஒடுக்கினையரக்கனையுயர்த்திரையெல
* முடுக்கினனிராமனைச்சாம்பன்முன்பிரன். (கூ0சு)

அண்ணலுந்தானையினழிவுமாங்கவன்
திண்ணெனெங்கொற்றமும்வலியுஞ்சிந்தியா
நண்ணினனடந்ததிர்நமனையின்றிவன்
கண்ணினைடநிறுத்துவெனென்னுங்கற்பினன். (கூ0எ)

ஆறிலேடழுகோலசனியேயெறன
ஈறிலாவிசையனவிராமனெய்தனன்
பாறுகுசிறையெனவிசும்பிற்பாறிட
நூறினென்வாளினனுணங்குகல்வியான். (கூ0அ)

ஆடவர்க்கரசனுந்தாடரவவ்வழிக்
கோடையிற்கதிரெனக்கொடியகூர்ங்கணை
ஈடுறத்துரந்தனனையுமிற்றுகக்
கேடகப்புறத்திரற்கிழியச்சிந்தினன். (கூ0கூ)

சிறுத்ததோர்முறுவலுந்தெரியச்செங்கணன்
மறித்தொருவடிக்கணைதொடுக்கமற்றவன்
ஒறுத்தொளிர்வாளனுமுரவுநாகத்தை
அறுத்ததுகலுழனினமரார்க்கவே. (கூகo)

அற்றதுதடக்கைவாளற்றதில்லென
மற்றொருருவயிரவாள்கடிதின்வாங்கினன்
முற்றினன்முற்றினனென்றுமுன்புவந்
துற்றனனுழித்தியவியலுதுவான். (கூகக)

அந்நெடுவாளையுந்துணித்தவாண்டகை
பொன்னெடுங்கேடகம்புரட்டிப்போர்த்ததோர்
நன்னெடுங்கவசத்துநாமவெங்கணை
மின்னெடுநிகர்ப்பனபலவும்வீசினன். (கூகஉ)

அந்தரமன்னதுநிகழுமவ்வழி
இந்திரன்றமரொடுமிரியலெய்திடச்
சிந்துவுந்தன்னிலகுலையச்சேணுற
வந்ததுதசமுகன்விடுத்தமாப்படை. (கூகங)

வில்வினையொருவனுமிவனைவீட்டுதற்
கொல்வினையிதுவெனக்கருதியுன்றினன்

---

* முடுக்கினன் = முன்செல்லச் செய்தான்.

வல்வினை தீயெனவந்தபோதொரு
நல்வினையொத்ததுநடந்ததானையே. (நகச)

கோத்தது புடைதொறுங்குதிரைதேரொடாள்
பூத்திழிமதமலைமிடைந்தபோர்ப்படை
காத்தது கருணனைக்கண்டுமாயமாக்
கூத்தனும்வருகெனக்கடிதுகூவினன். (நகந)

சூழிவெங்கடகரிபுரவிதாண்டுமால்
ஆழியந்தேரொடுமிடைந்தவார்கலி
ஏழிருகோடிவந்தெய்திற்றென்பரால்
ஊழியிலெருவனுமெதிர்சென்றான்றிலன். (நகசு)

காலமுங்காலனுங்கணக்கிறீமையும்
மூலமூன்றிலையெனவகுத்துமுற்றிய
சூலமுநாகரும்விசும்புநக்குறும்
சூலமொன்றரக்கனும்வாங்கித்தோன்றினன். (நகஎ)

வேறு.

அரங்கிடந்தனவறுகுறைநடிப்பனவல்லவென்றிமையோரும்
மரங்கிடந்தனமலைக்குவைகிடந்தனவாமெனமாழுடிக்
கரங்கிடந்தனகாத்திரங்கிடந்தனகறைபடும்படிகவ்விச்
சிரங்கிடந்தனகண்டனர்கண்டிலருயிர்கொடுதிரிவாரை. (நகஅ)

இற்றவல்லவுமீர்ப்புண்டவல்லவுமிடையிடைமுறிந்தெங்கும்
தற்றவல்லவுந்துணிபட்டவல்லவுஞ்சுடுபொறித்தொகைதூவி
வெற்றவெம்பொடியாயினவல்லவும்வேறுரன்றுநூறுகி
அற்றவல்லவுங்கண்டிலர்படைக்கலமதுகளந்திடராக. (நகக)

படர்ந்தகும்பத்துப்பாய்ந்தனபகழிகள்பாகரைப்பறிந்தோடிக்
குடைந்துவையகம்புக்குறத்தாக்கியகுருதியாற்குடர்சோரத்
தொடர்ந்துநோயொடுந்துணைமருப்பிழந்துதங்காத்திரந்துணியாகிக்
கிடந்தவல்லதுநடந்தனகண்டிலர்கிளர்மதகரியெங்கும். (ந.உ0)

வீழ்ந்தவாலனவிளிவுற்றபதாகையவெயிலுமிழயிலம்பு
போழ்ந்தபன்னெடும்புரவியமுறைமுறையச்சொடும்பொறியற்றுத்
தாழ்ந்தவெண்ணிணந்தயங்குவெங்குழம்பிடைத்தலத்தலமாழுடி
ஆழ்ந்தவல்லதுபெயர்ந்தனகண்டிலரதிர்குரன்மணித்தேர்கள். (நஉக)

ஆடறீர்ந்தனவலகழுத்தற்றனவதிர்பெருங்குரனீத்த
தாடிணிந்தனதறுகண்வெங்கரிநிரைதாங்கியபிணத்தோதங்கற்
கோடமைந்தவெங்குருதிநீராறுகள்சுழிதொறுங்கொணர்ந்துந்தி
ஓடலன்றிநின்றுகள்வனகண்டிலருருகெழுபரியெல்லாம். (நஉஉ)

வேதநாயகன்வெங்கணைவழக்கத்தின்மிகுதியைவெவ்வேறிட்
டோதுகின்றதென்னும்பருமரக்கர்வெங்களத்துவந்துற்றுரைக்
காதல்விண்ணிடைக்கண்டனரல்லதுகணவர்தமுடனுமே
மாதர்வெள்ளமேகண்டனர்கண்டிலர்மலையினும்பெரியாரை. (கூஉக

பனிப்பட்டாலெனக்கதிர்வரப்படுவதுபட்டதப்படைபற்றூர்
துனிப்பட்டாரெனத்துலங்கினரிமையவர்யாவர்க்குந்தாலாதான்
இனிப்பட்டாரெனவீங்கினவரக்கருமேங்கினரிவனந்தா
தனிப்பட்டானெனவவன்முகநோக்கியொன்றுரைத்தனன்றனிநாதன்.

கும்பகருணனை இராமன் சிலவினுதல்.

ஏதியோடெதிர்பெருந்துணையிழந்தனையெதிரொருதனிநின்றாய்
நீதியோனுடன்பிறந்தனையாகலினின்னுயிர்நினக்கீவேன்
போதியோபின்றைவருதியோவன்றெனிற்போர்புரிந்திப்போதே
சாதியோரினக்குறுவதுசொல்லுதிதெரிவுறச்சமைந்தம்மா. (கூஉஞ)

இழைத்ததீவினையிற்றிலதாகலின்யானுனையிளையோனால்
அழைத்தபோதினும்வந்திலையந்தகனுணையின்வழிநின்றாய்
பிழைத்ததாலுனக்கருந்திருநாளொடுபெருந்துயினெடுங்காலம்
உழைத்துவீடுவதாயினையென்னுனக்குறுவதொன்றுரையென்றான். ()

கும்பகருணன் விடை யிறுத்தல்.

மற்றெலாநிற்கவாசியுமானமுமறத்துறைறவழுவாத
கொற்றநீதியுங்குலமுதற்றருமமுமென்றிவைகுடியாகப்
பெற்றநுங்களாலெங்களைப்பிரிந்துதன்பெருஞ்செவிமூக்கோடும்
அற்றவெங்கைபோலென்முகங்காட்டிநின்றூற்றலெனுயிரம்மா. (கூஉஎ)

நோக்கிழந்தனர்வானவரெங்களாலவ்வகைநிலைநோக்கித்
தாக்கணங்கனையவள்பிறர்மனையெனத்தடுத்தனென்றக்கோர்முன்
வாக்கிழந்ததென்றயர்வுறுவேன்செவிதன்னெடுமாற்றூரால்
மூக்கிழந்தபின்மீளலென்றூலதுமுடியுமோமுடியாதாய். (கூஉஅ)

உங்கடோடலைவாள்கொடுதுணித்துயிர்குடித்தெம்முனுவந்தெய்த
நங்கைநன்னலங்கொடுக்கியவந்தநான்வானவர்நகைசெய்யச்
செங்கைதாங்கியசிரத்தெடுங்கண்ணினீர்குருதியினெடுதேக்கி
எங்கைபோலெடுத்தழைத்தநான்வீழ்வெனோவிராவணனெதிரம்மா. ()

ஒருத்தனீதனியுலகொருமூன்றிற்குமாயினும்பழியோரும்
கருத்தினல்வருஞ்சேவகனல்லையோசேவகர்கடனோராய்
செருத்தின்வாளினற்றிறத்திறனுங்களையமர்த்துறைசிரங்கொய்து
பொருத்தினலதுபொருந்துமோதக்கதுபுகன்றிலபோலென்றான். ()

என்றுதன்னெடுஞ்சூலத்தையிடக்கையின்மாற்றினன்வலக்கையால்
குன்றுபின்றதுதோகாத்தெடுத்திருநிலக்குடர்கவர்ந்தெனக்கொண்டான்
சென்றுவிண்ணெறிபொறியொடுதீச்செலச்சேவகன்சினிநேரே
வென்றுதீர்கெனவிட்டனனதுவந்துபட்டதுமேலென்ன. (ஙஙக)

அனையகுன்றனுமசனியையாவர்க்குமறிவருந்தனிமேனி
புனையவங்கெழுதுகளெனநூறியபுரவலன்பொரவென்று
தினையுமாத்திரையொருகைநின்றெருகையினிமிர்கின்றநெடுவேலை
தினையின்மாத்திரைதுணிபடவரன்முறைசிந்தினன்சரஞ்சிந்தி. (ஙஙஉ)

அண்ணல்விற்கொடுங்கால்விசைத்துகைத்தனவலகடல்வறளாக
உண்ணகிற்பனவுருமையுஞ்சுடுவனமேருவையுருவிப்போய்
விண்ணகத்தையுங்கடப்பனபிழைப்பிலாவமய்யனமேற்சேர்ந்த
கண்ணுறுதற்பெருங்கடவுடன்கவசத்தைக்கடந்திலகதிர்வாளி. (ஙஙங)

தாக்குகின்றனனுழைகிலதலையதுதாமரைத்தடங்கண்ணுன்
நோக்கியிங்கிதுசங்கரன்கவசமென்றுணர்வுறநுனித்துன்னி
ஆக்கியங்கவனுபடைதொடுத்துவிட்டறுத்தனனதுசிந்தி
வீக்கிழந்ததுவீழ்ந்ததுவரைசுழல்விரிசுடர்வீழ்ந்தென்ன. (ஙஙச)

காந்துவெஞ்சுடர்க்கவசமற்றுகுதலுங்கண்டொறுங்கனல்சிந்தி
ஏந்துவன்னெடுந்தோள்புடைத்தார்த்தங்கொரெழுமூவுலகயிரப்போர்
வாய்ந்தவன்னெடுந்தண்டுகைப்பற்றினன்வானரப்படைமுற்றும்
சாந்துசெய்குவனுமெனமுறைமுறையரைத்தனன்றரையோடும். (ஙஙஞ)

பறப்பவாயிரம்படுவனவாயிரம்பட்டெழிலகன்மார்பம்
திறப்பவாயிரந்திரிவனவாயிரஞ்சென்றுபுக்குருவாது
மறைப்பவாயிரம்வருவனவாயிரம்வடிக்கணெயென்றூலும்
பிறப்பவாயிடைத்தெழித்துறத்திரிந்தனன்கறங்கெனப்பெருஞ்சாரி. ()

தண்டுகைத்தலத்துளதெனினுளதன்றுதானெயென்றதுசாற்றக்
கொண்டலொத்தவன் கொடுங்கணெபத்தொரு தொடையினிற் றெரிந்து
அன்னதுகேட்டமைந்தனரும்பியன்முறுவலோன்றச்
சொன்னவர்வாரார்யானேதாற்கினுந்தாற்கத்தக்கேன்
என்னைநீபொருதுவெல்லினவரையும்வென்றியென்ன
மின்னினுமிளிர்வதாங்கோர்வெஞ்சரங்கோத்துவிட்டான். (கஙக)

அதிகாயவிலக்குமணயுத்தம்.

விட்டவெம்பகழிதன்னைவெற்பினைவெதுப்புந்தோளான்
சுட்டதோர்கணையினாலேலவிசும்பிடைத்துணித்தான்நீக்கி
எட்டிநாலெடட்டுவாளியிலக்குவவிலக்காயென்னத்
திட்டியின்விடத்துநாகமனையனசிந்தியார்த்தான். (கஙஉ)

ஆர்த்தவனெய்தவாளியனைத்தையுமறுத்துமாற்றி
வேர்த்தொலிவயிரவெங்கோன்மேருவைப்பிளக்கற்பால
தூர்த்தனனிராமன்றம்பியவையெலாந்துணித்துச்சிந்திக்
கூர்த்தனபகழிகோத்தான்குபேரனையாடல்கொண்டான். (கஙங)

எய்தனவெய்தவெல்லாமெரிமுகப்பகழியாலே
கொய்தனனகற்றியார்க்குமரக்கனைக்குரிசில்கோபம்
செய்தனன்றுரந்தான்றெய்வச்செயலன்னகணையைவெங்கோல்
நொய்தவன்கவசங்கீறிநுழைவனபிழைப்பிலாத. (கஙச)

நூறுகோல்கவசங்கீறிநுழைதலுங்குழைவுதோன்றத்
தேறலாந்துணையுந்தெய்வச்சிலைநெடுந்தேரினான்றி
ஆறினைதுகாலத்தங்கவனுடையனீகமெல்லாம்
கூறுகூறுக்கியம்பாற்கோடியின்மேலுங்கொன்றான். (கஙஞ)

புடைநின்றூர்புரண்டவாறும்போகின்றபுங்கவாளி
கடைநின்றுகணிக்கவாங்கோர்கணைக்கிலாவாறுங்கண்டான்
இடைநின்றமயக்கந்தீர்ந்தானேந்தியசிலையன்காந்தித்
தொடைநின்றபகழிமாரிமாரியின்மும்மைதூர்த்தான். (கஙட)

வானெலாம்பகழிவானின்வரம்பெலாம்பகழிமண்ணை
தானெலாம்பகழிகுன்றின்றலையெலாம்பகழிசார்ந்தோர்
ஊனெலாம்பகழிநின்றேருடலெலாம்பகழிவேலை
மீனெலாம்பகழியாகவித்தினன்வெகுளிமிக்கோன். (கஙண)

மறைந்தனதிசைகளெல்லாம்வானவர்மனமேமேபோலக்
குறைந்தனசுடரின்மும்மைக்கொழுந்துகுவிந்தொன்றைறை
அறைந்தனபகழிவையமதிர்ந்ததுவிண்ணுமஃதே
நிறைந்தனபொறியின்குப்பைநிமிர்ந்தனநெருப்பின்கற்றை. (கஙஅ)

முற்றியதின்றேறயன்றேரவானரமுழங்குதானை
மற்றிவன்றன்னைவெல்லவல்லரேரவள்ளறம்பி

கற்றதுகாலனேடோகொலையிவனெருவன்கற்ற
விற்றெழிலென்னேயென்னத்தேவரும்வெருவலுற்றார். (ககக)

அங்கதனெற்றிமேலுந்தோளினுமாகத்துள்ளும்
புங்கமேதான்ரவண்ணம்பொருசரம்பலவும்போக்கி
வெங்கணையிரண்டுமொன்றும்வீரன்மேலவிமேகச்
சங்கமுழுதிவிண்ணேர்தலபொதிறெறியவார்த்தான். (உ00)

வாலிசெய்மேனிமேலுமழைபொருகுருதிவாரி
காலுயர்வரையிற்செங்கேழருவிபோலொழுகக்கண்டான்
கோலொருபத்துநூற்ரூற்குதிரையின்றலைகள்கொய்து
* மேலவன்சிரத்தைச்சிந்திவில்லையுந்துணித்தான்வீரன். (உ0க)

மாற்றெருருதடந்தேரறிமாரெருருசிலையும்வாங்கி
ஏற்றவல்லரக்கன்றன்மேலெரிமுதற்கடவுளன்பான்
ஆற்றல்சால்படையெவிட்டாரியனரக்கனம்மா
வேற்றுளதாங்கவென்ரவெய்யவன்படையெவிட்டான். (உ0உ)

பொருபடையிரண்டுந்தம்மிற்பொருதனபொருதலோடும்
எரிகணையுருமின்வெய்யவிலக்குவன்றுரந்தமார்பை
உருவினவுலப்பிலாதவுளகிலரற்றலோயான்
சொரிகணைமழையின்மும்மைசொரிந்தனன்றெழிக்குஞ்சொல்லான். ()

பின்னின்ரூர்முன்னின்ரூரைக்காணலாம்பெற்றித்தாக
மின்னின்றவயிரவாளிதிறந்தனமேனிமுற்றும்
அந்நின்றநிலையிரற்றல்குறைந்திலரவிநீங்கான்
பொன்னின்றவடிம்பின்வாளியுருமெனப்பொழியும்வில்லான். (உ0ச)

வாயுதேவனதிகாயன்மீது பிரமாத்திரம் விடவுரைத்தல்.

கோன்முகந்தள்ளியள்ளிக்கொடுஞ்சிலாணிற்கோத்துக்
கான்முகங்குழையவாங்கிச்சொரிகின்றகாலவீரன்
பான்முகந்தோன்றநின்றுகாற்றினுக்காசன்பண்டை
நான்முகன்படையாலன்றிச்சாகிலனம்பவென்ரூன். (உ0ஞ)

அதிகாயன்தலையை இலக்குமணன் பிரமாத்திரத்தாலறுத்தல்.

நன்றெனவுவந்துவீரனன்முகன்படையைவாங்கி
மின்றனிதிரண்டதென்னச்சரத்தைதாடுங்கூட்டிவிட்டான்
குன்றினுமுயர்ந்ததியோன்றலையினைக்கொண்டவாளி
சென்றதுவிசும்பினூடுதேவருந்தெரியக்கண்டார். (உ0ரு)

---

* மேலவன் — சாரதி.

பூமழைபொழிந்துவாளேர்போயதெம்பொருமலென்றூர்
தாமழைத்தலறியெங்குமிரிந்தனராரக்கர்தள்ளித்
தீமையுங்களிப்புநீங்கித்திகைத்தனர்குரக்குச்சேனைக்
கோமகன்றோளினின்றுங்குதித்தனன்கொற்றவில்லான். (உoஎ)

வெந்திறற்சித்திகண்டவீடணன்வியந்தநெஞ்சன்
அந்தரசித்தராற்ப்புமமலையுங்கேட்டானெயன்
மந்திரசித்தியன்னசிலத்தொழில்வலியிதாயின்
இந்திரசித்திறற்குமிறுதியேயியையவதென்றான். (உoஅ)

அங்கதநராந்தகயுத்தம்.

ஏந்தெழிலாகத்தெம்முனிறந்தனனென்றுநீரின்
சாந்தகன்மார்புதிண்டோணைக்கிரின்றனுவைநோக்கிப்
போந்தகைக்குரியையன்றற்போகலபோகலென்ன
நாந்தகமின்னும்வீசிநராந்தகனடந்துவந்தான். (உoக)

தேரிடைநின்றுகண்கடூயுகச்சீற்றம்பொங்கப்
பாரிடைகிழியப்பாய்ந்துபகலிடைப்பரிதியென்பான்
ஊரிடைநின்றூனென்னைக்கேடகமொருகைதான்ற
நீரிடைமுகிலின்மின்போல்வானிடைநிமிரவந்தான். (உoக)

வீசினமராமுங்கல்லும்விலங்கலும்வீற்றுவீற்ற
ஆசைகடோறும்வீசவாளிலைலுத்துமாற்றித்
தூசியுமிரண்டுகையுநெற்றியுஞ்சுருண்டுநீர்மேல்
பாசியிலைதுங்கவந்தானங்கதனதனைப்பார்த்தான். (உoக)

மரமொன்றுவிரைவின்வாங்கிவாய்மடித்துருத்துவள்ளல்
சரமொன்றுகடிதிற்சென்றுதாக்கிலனென்றூக்கிலன்றன்
கரமொன்றிற்றினிவதாருங்காண்கிலாததனைத்தன்கை
அரமொன்றுவயிரவாளாலாயிரங்கண்டங்கண்டான். (உoஉ)

அவ்விடைவெறுங்கைநின்றவங்கதனுண்ணையன்றால்
இவ்விடைபெயர்தலென்னுவிமையிடையொதுங்காமுன்னம்
வெவ்விடமென்னப்பொங்கியவனிடையெறிந்தவீச்சு
தவ்விடையுருமிற்புக்குவாளொடுந்தழுவிக்கொண்டான். (உoங)

அத்தொழில்கண்டவாரேரோவலங்கொட்டியார்த்தார்
இத்தொழிலிவனுக்கல்லாலீசற்குமியலாதென்பார்
குத்தொழித்தவன்கைவாடன்கூருகிர்த்தடக்கைக்கொண்டான்
ஒத்திருகூறுய்வீழுவீசினனுலையவார்த்தான். (உoச)

மத்தநீலயுத்தம்.

கூர்மத்தின்வெரிநின்வைத்துவானவாழுதங்கொண்ட
நீர்மத்தினிமிர்ந்ததோளானிறைமத்தமதுவைத்தேக்கி

* ஊர்மத்தமுண்டாலன்னமயக்கத்தானுருமுத்தின்பான்
போர்மத்தனென்பான்வந்தான்புகர்மத்தப்பூட்கைமேலான். (உகஞ)

காற்றன்றேறற்கடுமையென்னுங்கடலன்றேறன்முழக்கமென்னும்
கூற்றன்றேறற்கொலைமற்றென்னுமுருமன்றேறற்கொடுமையென்னும்
சீற்றந்தானன்றேறற்சீற்றம்வேலுருன்றுதெரிப்பதெங்கே
மாற்றன்றேறமலைமற்றென்னைமத்தன்றன்மத்தயானை. (உகசு)

வேகமாக்கவிகள்வீசுமெற்பினம்விழுவமென்மேல்
பாகர்காற்சிலையிற்றூண்டுமுண்டையாமெனவும்பற்ரு
மாகமாமரங்களெல்லாங்கடாத்திடைவண்டுசேர்வ
தாகினுமாமதன்றேறற்கரும்பென்றேறயறையலாமால். (உகள)

காலிடைப்பட்டுமானக்கையிடைப்பட்டுங்கால
வாலிடைப்பட்டும்வெய்யமருப்பிடைப்பட்டுமாண்டு
நாலிடைப்பட்டசேனைநாயகன்றம்பியெய்த
கோலிடைப்பட்டவெல்லாம்பட்டனகுரக்குச்சேனை. (உகஎ)

தன்படையுற்றதன்மைநோக்கிலென்றரிக்கிலாமை
அன்படையுள்ளத்தண்ணலனலின்றன்புதல்வனுழி
வன்படையனையதாங்கோர்மராமரஞ்சுழற்றிவந்தான்
பின்படைசெல்லநள்ளார்பெரும்படையிரிந்துபோர. (உகஅ)

சேறலுங்களிற்றின்மேலான்றிண்டிறலரக்கன்செவ்வே
ஆறிரண்டம்பிலைலங்கெடுமரமறுத்துவீழ்த்தான்
வேறிருருகுன்றநீலன்வீசினதனவிண்ணின்
ஊறுவெம்பகழிதன்னுறுக்கினன்களிறுநூக்கி. (உஉ0)

பின்னெடுங்குன்றந்தேடிப்பெயர்குவான்பெயராவண்ணம்
பொன்னெடுங்குன்றஞ்சூழ்ந்தபொறிவரியரவம்போல
அந்நெடுங்கோபயானையமரரும்வெயர்ப்ப † வங்கி
தன்னெடுமகனேப்பற்றிப்பிடித்ததுதடக்கைநீட்டி. (உஉக)

ஒடுங்கினனுரமுமாற்றலூற்றமுமுயிருமென்னக்
கொடும்படைவயிரக்கோட்டாற்குத்துவான்குறிக்குங்காலை
நெடுங்கையுந்தலையும்பிய்யாநொய்தினினிமிர்ந்துபோனான்
நடுங்கினரரக்கர்விண்ணேணேர்ந்தன்றுநன்றென்னநக்கார். (உஉஉ)

தறைத்தலையுற்றூனீலனென்பதோர்காலந்தன்னில்
நிறைத்தலைவழங்குஞ்சோரிநீர்த்தடுநெடுங்குன்றென்னக்
குறைத்தலைவேழம்வீழுவிசும்பின்மேற்கொண்டுநின்றூன்
பிறைத்தலைவயிரவாளிமழையெனப்பெய்யுங்கையான். (உஉங)

---

* ஊர்மத்தம்-ஊரிலுள்ள பூமத்தங்காய் இஃதிக்காலத்துஊமத்தங்காயென வழங்குகின்றது. † அங்கிதன்னெடுமகன்-அக்கினிகுமாரனை நீலன்.

வாங்கியசிரத்தின்மற்றைவயிரவான்கோட்டைவவ்வி
வீங்கியவிசையினீலனரக்கன்மேற்செல்லவிட்டான்
ஆங்கவனவற்றையாண்டோரம்பிலைலறுத்தோரம்பால்
ஓங்கல்போற்புயத்திரண்றனூரத்திடையொளிக்கவெய்தான். (உஉச)

எய்ததுகாலமாகவீழ்ந்திலதியானேயென்னக்
கய்யுடைமலையொன்றேறறிக்காற்றெனக்கடாவிவந்தான்
வெய்யவனவனத்தானுமேற்கொளாவில்லிடைடும்
மொய்பெருங்களிற்றினிட்டான்மும்மதக்களிற்றின்முன்னர். (உஉங)

இட்டனனவனினின்றுமெழுவதன்முன்னம்யானே
கட்டமைவயிரக்கோட்டாற்களப்படவீழ்த்திக்காலால்
வெட்டிவன்றடக்கைதன்னிலெடுத்தெதங்கும்விரைவின்வீசப்
பட்டிலன்றானேதன்போர்க்கரியினைப்படுத்துவீழ்த்தான். (உஉசு)

தன்கரிதானேகொன்றுதடக்கையாற்படுத்துவீழ்த்த
மின்கரிதன்னைமின்னுமெயிற்றிரண்வெகுளிநோக்கிப்
பொன்கரிதன்னுங்கண்கள்பொறியுகநீலன்புக்கான்
வன்கரமுறுக்கிமார்பிற்குத்தினன்மத்தன்மாண்டான். (உஉஎ)

இடபவயமத்தயுத்தம்.

உன்மத்தன்வயிரமார்பினுருமொத்தகரஞ்சென்றுற்ற
வன்மத்தைக்கண்டுமாண்டமதமத்தமலையைப்பார்த்தும்
சன்மத்தின்றன்மையானுந்தருமத்தைத்தள்ளிவாழ்ந்த
கன்மத்தின்கடைக்கூட்டானும்வயமத்தன்கடிதின்வந்தான். (உஉஅ)

பொய்யினும்பொியமெய்யான்பொருப்பினைப்பழித்ததோளான்
வெய்யனென்றுரைக்கச்சாலத்திண்ணியான்வில்வின்செல்வன்
பெய்கழலரக்கன்சேனையார்த்தெழப்பிறங்குபல்பேய்
அய்யிருநூறுபூண்டவாழியந்தேரின்மேலான். (உஉக)

ஆர்க்கின்றனுலகையெல்லாமதிர்க்கின்றனுருமுமஞ்சப்
பார்க்கின்றன்பொன்றிரைப்பழிக்கின்றன்பகழிமாரி
தூர்க்கின்றன்குரக்குச்சேனைதுரக்கின்றன்றுணிவைநோக்கி
ஏற்கின்றானில்லையென்னவிடபன்வந்தவனேடேற்றான். (உஙo)

சென்றவன்றன்னைநோக்கிச்சிரித்துநீசிறியையுன்னை
வென்றவமும்மையெல்லாம்விளிப்பெனேவிரிஞ்சன்றானே
என்றவனெதிர்ந்தபோதுமிராவணன்மகனையின்று
கொன்றவன்றன்னைக்கொன்றேறகுரங்கின்மேற்கொதிப்பெனென்றான்.

வாய்கொண்டுசாற்றற்கேற்றவலிகொண்டுபலியுண்வாழ்க்கைப்
பேய்கொண்டுவெல்லவந்தபித்தனேமிடுக்கைப்பேணி

நோய்கொண்டுமருந்துசெய்யாவொருவன்றன்னைமையெல்லாம்
ஓய்கின்றுய்காண்டியென்றுவுரைத்தனனிடபவெல்கான். (உகஉ)

ஓதியென்னவோடாதுரைத்தியேலுன்றனைடின்னே
ஆடுவென்விளையாட்டென்றுவயிலெயிற்றரக்கனம்பொற்
கோடுறுவயிரப்போர்விற்காலொடுபுருவங்கோட்டி
ஈறவிடபன்மார்பத்தீரைந்துபகழியெய்தான். (உகங)

அசும்புடைக்குருதிபாயுமாகத்தான்வேகத்தாலத்
தசும்புண்டைக்கொடுந்தேர்தன்னைத்தடக்கையாலெடுத்துவீசப்
பசுங்கழற்கண்ணபேயும்பறந்தனபாவைநோக்கி
விசும்பிடைச்செல்லுங்காரின்றூரைபோனன்றமெய்யான். (உகச)

தேரொடுங்கடலின்வீழ்ந்துசிலையுந்தன்றலையுமெல்லாம்
நீரிடையழுந்திப்பின்னுநெருப்பொடுநிமிரவந்தான்
பாரிடைக்குதியாமுன்னமிடபனும்பதகன்போய்
ஆரிடைப்புகுதியென்றுவந்தரத்தார்த்துவந்தான். (உகஞ)

அல்லினைத்தழுவினின்றபகலெனவரக்கன்றன்னைக்
கல்லினும்வலியதோளாற்கட்டியிட்டிறுக்குங்காலைப்
பல்லிடைப்பிலவாயூடும்பசும்பெருங்குருதிபாய
வில்லுடைமேகமென்னவிழுந்தனனுயிர்விண்செல்ல. (உகசு)

சுக்கிரீவ கும்ப யுத்தம்.

குரங்கினுக்கரசும்வென்றிக்கும்பனுங்குறித்தவெம்போர்
அரங்கினுக்கழகுசெய்யவாயிரஞ்சாரிபோந்தார்
மரங்கொடுந்தண்டுகொண்டுமலையெனமலையாகின்றூர்
சிரங்களுங்கரமுமெல்லாங்குலைந்தனர்கண்டதேவர். (உகள)

வேறு.

கிடைத்தாருடலிற்கிழிசோரியைவாரித்
துடைத்தார்விழியிற்றழன்மாரிசொரிந்தார்
உடைத்தாரொடுபைங்கழலார்ப்பவுலாவிப்
புடைத்தார்பொருகின்றனர்கோளரிபோல்வார். (உகஎ)

தண்டங்கையின்வீசியதாகவரக்கன்
அண்டங்கள்வெடிப்பனவென்னவடித்தான்
கண்டங்கதுமாமரமேகொடுகாத்தான்
விண்டங்கதுதீர்ந்ததுமன்னன்வெகுண்டான். (உகஅ)

பொன்றப்பொருவேனினியென்றுபொரூதான்
ஒன்றப்புகுகின்றதொர்காலமுணர்ந்தான்
கின்றப்பெரியோனினையாதமுனீலன்
குன்றெறுப்பதொர்தண்டுகொணர்ந்துகொடுத்தான். (உக0)

அத்தண்டுகொடுத்தகுகைக்கொடமைந்தான்
ஒத்தண்டமுமண்ணுநடுங்கவுருத்தான்
பித்தன்றடமார்பொடுதோள்கள்பிளந்தான்
சித்தங்கணடுங்கியரக்கர்திகைத்தார். (உசக)

அடியுண்டவரக்கனருங்கனன்மின்னு
இடியுண்டதொர்மால்வரையென்னவிழுந்தான்
மூடியும்மிவனென்பதொர்முன்னம்வெகுண்டான்
ஓடியும்முனதோளெனமோதியுடன்றான். (உசஉ)

தோளிற்புடையுண்டயர்சூரியன்மைந்தன்
தாளிற்றடுமாறறவிர்ந்துதகைந்தான்
வாளிக்கடுவல்விசையாலெதிர்மண்டி
ஆளித்தொழிலன்னவன்மார்பினறைந்தான். (உசங)

அடியாயிரகோடியின்மேலுமடித்தார்
மூடிவானவன்யாரெனவானவர்மொய்த்தார்
இடியோடிடிகிட்டியதென்னவிரண்டும்
பொடியாயினதண்டுபொருந்தினர்புக்கார். (உசச)

மத்தச்சினமால்களிறன்னமலைந்தார்
பத்துத்திசையுஞ்செவிடெய்தினபல்கால்
தத்தித்தழுவித்திரடோள்கொடுதள்ளிக்
குத்தித்தனிகுத்தெனமார்புகொடுத்தான். (உசஞ)

நிலையிற்சுடரோன்மகன்வன்கைநெருங்க
வலையிற்படுகம்பியர்கூடமலைப்ப
உலையிற்படிரும்பெனவன்மையொடுங்க
மலையிற்பிளவுற்றதுதியவன்மார்பம். (உசசு)

செய்வாயிகலென்றவனின்றுசிரித்தான்
அய்வாயரவம்முழைபுக்கெனவையன்
கய்வாய்வழிசென்றவனுருயிர்கக்கப்
பய்வாய்நெநொவைமுனிந்துபறித்தான். (உசஎ)

அங்கத நிகும்ப யுத்தம்.

அக்காலநிகும்பனனற்சாரிகண்ணன்
புக்கானினியெங்கடபோகுவதென்னு
மிக்கானெதிரங்கதனுற்றுவெகுண்டான்
எக்காலமுமில்லதோர்பூசலிழைத்தார். (உசஅ)

சூலப்படையானிடைவந்துதொடர்ந்தான்
ஆலத்தினும்வெய்யவனங்கதனங்கோர்

தாலப்படைகைக்கொடுசென்றுதடுத்தான்
நீலக்கிரிமேனிமிர்பொற்கிரிநேர்வான். (உசக)

எறிவானிகல்சூலமெடுத்தலுமின்னே
முறிவானிகலங்கனென்பதன்முன்னே
அறிவானடன்மாருதியற்றமுணர்ந்தான்
பொறிவாளுகுதீயெனவந்துபுகுந்தான். (உஙo)

நிகும்பனை அனுமன் கொல்லுதல்.

தடையேதுமில்சூலமுனிந்துசலத்தால்
விடையேநிகரங்கதன்மேல்விடுவானை
இடையேதடைகொண்டுதனேடவிழுங்கைப்
புடையேகொடுகொன்றடன்மாருதிபோனான். (உஙக)

நின்ரூர்கடடுப்பவரின்மைமெளிந்தார்
பின்ரூதவர்பின்றியிரிந்துபிரிந்தார்
வன்ரூண்மரம்வீசியவானரவீரர்
கொன்ரூர்மிகுதானையரக்கர்குறைந்தார். (உஙஉ)

ஓடிப்புகுவாயினெருக்கிணுலந்தார்
கோடிக்கதிகத்திணுமேலுளர்குத்தால்
பீடிப்புறுபுண்ணுடனேலாடுபெயர்ந்தார்
பாடித்தலையுற்றவரெண்ணிலர்பட்டார். (உஙங)

தண்ணீர்தருகென்றனர்தாவுறவேவாடி
உண்ணீரறவாவியுலர்ந்தனருக்கார்
கண்ணீரொடுமாவிகலுழ்ந்தனர்காலால்
மண்ணீரமுறக்கடிதூர்புகவந்தார். (உஙச)

விண்மேனெடிதேதாடினராருயிர்விட்டார்
மண்மேனெடுமால்வரையென்னமறிந்தார்
எண்மேலுநிமிர்ந்துளநீருடையங்கப்
புண்மேலுடைமேனியினர்திசைபோனர். (உஙஞ)

அறியும்மவர்தங்களையையவிவம்பைப்
பறியும்மெனவந்துபறித்தலுமாவி
பிறியும்மவரெண்ணிலர்தம்மனெபெற்ரூர்
குறியும்பறிகின்றிலர்சிந்தைகுறைந்தார். (உஙசு)

பரிபட்டுவிழுச்சிலர்ன்றுபதைத்தார்
கரிபட்டருளச்சிலர்கால்கொடுசென்ரூர்
நெரிபட்டழிதேரிடையேபலர்ன்ரூர்
எரிபட்டமனைக்குளிருந்தவரென்ன. (உஙள)

மண்ணின்றலைவானரமேனியர்வந்தார்
புண்ணின்றவுடற்பொறையோர்சிலர்புக்கார்
கண்ணின்றகூரங்குகலந்தனவென்ன
உண்ணின்றவரக்கர்மலைக்கவுலந்தார். (உநஅ)

வேறு.

இருகணுந்திறந்துநோக்கியயலிருந்திரங்குகின்ற
உருகுதங்காதலோரையுண்ணுநீருதவுமென்றூர்
வருவதன்முன்னமாண்டார்சிலர்சிலர்வந்ததண்ணீர்
பருகுவாரிடையேயபட்டார்சிலர்சிலர்பருகிப்பட்டார். (உநக)

மக்களுச்சுமந்துசெல்லுந்தாதையர்வழியினுவி
உக்கனரென்னவீசித்தம்மைக்கொண்டோடிப்போனர்
கக்கினர்குருதிவாயாற்கண்மணிசிதறிக்காலால்
திக்கொடுநெறியுங்காணர்திரிந்துசென்றுயிருந்தீர்ந்தார். (உசுo)

இன்னதோர்தன்மையெய்தியிராக்கதரிரிந்துசிந்திப்
பொன்னகர்புக்காரிப்பாற்பூசல்கண்டோடிப்போன
துன்னருந்தூதர்சென்றூர்தொடுகழலரக்கர்க்கெல்லாம்
மன்னவனடியில்வீழ்ந்தார்மழையினீர்வழங்குகண்ணர். (உசுக)

நோக்கியவிலங்கைவேந்தனுற்றதுறுவன்மினென்றூன்
போக்கியசேனைதம்மிற்புகுந்துளவிறையும்போதா
ஆக்கியபோரினையவதிகாயன்முதல்வராய
கோக்குலக்குமரரெல்லாங்கொடித்தனராவியென்றூர். (உசுஉ)

அதிகாயாதியரிறந்தாரெனக்கேட்ட விராவணனது தன்மை.

எங்கியவிம்மன்மானமிரங்கியவிரக்கம்வீரம்
ஓங்கியவெகுளிதுன்பமென்றிவையொன்றிற்கொன்று
தாங்கியதரங்கமாகக்கரையினைத்தள்ளித்தள்ளி
வாங்கியகடல்போனின்றுனருவிநீர்வழங்குகண்ணன். (உசுங)

திசையினைநோக்குநின்றதேவரைநோக்கும்வந்த
வசையினைநோக்குங்கொற்றவாளினைநோக்கும்பற்றிப்
பிசையுறுங்கையையீசைசுறுக்கொளவுயிர்க்கும்பேதை
நசையிடைக்கண்டானென்னநகுமழுமுனியுநானும். (உசுச)

மண்ணினையெடுக்கவெண்ணும்வானினையிடுக்கவெண்ணும்
எண்ணியவுயிர்களெல்லாமொருகணத்தெற்றவெண்ணும்
பெண்ணெனும்பெயரவெல்லாம்பிளப்பெனென்றெண்ணுமென்னின்
புண்ணிடையெரிபுக்கென்னமானத்தாற்புழுங்கினையும். (உசுஞ)

தானிமாலை புலம்பல்.

ஒருவருமுரையார்வாயினுயிர்த்திலருள்ளமோய்வார்
வெருவருந்தகையராகிவிம்மினிருந்தவேலை
தருவனமனையதாளான்றன்னெதிர்தானமாலை
இரியலிட்டலறியோயாப்பூசலிட்டேடங்கிவந்தாள். (உசுசு)

மலைக்குவட்டிழிவீழ்ந்தென்னவலகளாடாரமேங்க
முலைக்குவட்டெடற்றுங்கையாண்முனைழுதிறந்தன்னவாயாள்
தலைக்குவட்டணைந்தசெக்கர்சரிந்தனகுழல்கடத்தி
உலைக்குவட்டுருகுசெம்பொத்துதிரநீர்வழங்குங்கண்ணுள். (உசுஎ)

வீழ்ந்தனளரக்கன்ரூண்மேன்மென்மைத்தோணிலத்தைமேவப்
போழ்ந்தனள்பெரும்பாம்பென்னப்புரண்டனள்பொருமிப்பொங்கிச்
சூழ்ந்தனெகாடியாயென்னுத்துடித்தருந்துயரவெள்ளத்
தாழ்ந்தனள்புலம்பலுற்ரூளழக்கண்மறிந்திலாதாள். (உசுஅ)

வேறு.

மாட்டாயோவிக்காலம்வல்லோர்வலிதீர்க்க
மீட்டாயோவீரமெலிந்தாயோதாளாற்றல்
கேட்டாயுணர்ந்திலையோவென்னுரையுங்கேளாயோ
காட்டாயோவென்னுடையகண்மணியைக்காட்டாயோ. (உசுக)

இந்திரற்குந்தேலாதநன்மகனேமீன்ரூளென்
றந்தரத்துவாழ்வாருமேத்துமளியத்தேன்
மந்தரத்தேதாளென்மகனேமாட்டாமணிசன்றன்
உந்துசிலைப்பகழிக்குண்ணைக்கொடுத்தேனே. (உஎ0)

அக்கனுலந்தானதிகாயன்ரூனுலந்தான்
மிக்கதிறத்துள்ளார்களெல்லாரும்வீடினர்
மக்களினினின்றுள்ளான்மண்டோதரிமகனே
திக்குவிசயமினியொருகாற்செய்யாயோ. (உஎக)

எதையாசிந்தித்திருக்கின்ரூயெண்ணிறந்த
கோதையார்வேலரக்கர்பட்டாரைக்கூவாயோ
பேதையாய்க்காமம்பிடிப்பாய்பிழைப்பாயோ
சீதையாலின்னும்வருவசிலவேயோ. (உஎஉ)

உம்பியுணர்வுடையான்சொன்னவுரைகேளாய்
நம்பிகுலக்கிழவன்கூறுநலமோராய்
கும்பகருணனையுங்கொல்வித்தன்காமமகனை
அம்புக்கிரையாக்கியாண்டாயரசையா. (உஎங)

என்றுபலபலவும்பன்னியெடுத்தழைத்துக்
கன்றுபடப்பிழைத்ததாய்போற்கவல்வாளை
நின்றவுருப்பசியுமேனகையுநேர்ந்தெதிர்த்துக்
குன்றுபுரையுநெடுங்கோயில்கொண்டணைந்தார். (உஎசு)

தானகரத்தரக்கர்தலைமயங்கிப்
போனமகவுடையார்போலப்புலம்பினர்
ஏனமகளிர்நிலையென்னுகும்போயிரங்கி
வானமகளிருந்தம்வாய்திறந்துமாழ்கினர். (உஎந)

தாரகலத்தண்ணறனிக்கோயிருசுரதி
பேரவுலகுற்றதுற்றதாற்பேரிலங்கை
ஊரகலமெல்லாமரந்தையுவாவுற்ற
ஆர்கலியேயொத்ததழுகுரலோசை. (உஎசு)

களவது, அதிகாயன்வதைப்படலம் – முற்றிற்று.

ஆஉ திருவிருத்தம்-ககூடுக.

கஅவது, நாகபாசப்படலம்.

குழுமிக்கொலைவாட்கணரக்கியர்கூந்தழுழத்
தழுவித்தலைப்பெய்துதங்கைகொடுமார்பினைற்றி
அழுமித்தொழிலியாதுகொலென்றுரயிர்ப்புமுற்றுன்
எழிலித்தனியேறனவிந்திரசித்தெழுந்தான். (க)

எட்டாகியதிக்கையும்வென்றவனின்றுமீடு
பட்டான்கொலதன்றனிற்பட்டழிந்தான்கொல்பண்டு
சுட்டானிவகன்பதியைத்தொடுவேலையோடும்
கட்டான்கொலிதற்கொருகாரணமென்கொலென்றுன். (உ)

கேட்டானிடையுற்றவதன்னென்றுகிளத்தல்யாரும்
மாட்டாதுதடுங்கினர்மாற்றமறந்துநின்றுர்
ஓட்டாநெடுந்தேர்கடிதோட்டியிமைப்பினுற்றுன்
காட்டாதனகாட்டியதாதையைச்சென்றுகண்டான். (ங)

இராவணனிந்திரசித்தனிட மதிகாயாதியர் மரணமுரைத்தல்.

கண்டானிறையாறியநெஞ்சினன்கைகள்கூப்பி
உண்டாயவதனிவ்வுழியென்றலுமும்பிமாரைக்

கொண்டானுயிர்காலனுங்கும்பனிகும்பரோடும்
விண்டானடைந்தானதிகாயனும்வீரவென்றான். (சு)

சொல்லாதமுன்னஞ்சுடரைச்சுடர்தாண்டுகண்ணுன்
பல்லாலதரத்தையதுக்கிவிண்மீதுபார்த்தான்
எல்லாருமிறந்தனரோவெனவேங்கிநைந்தான்
வில்லாளரையெண்ணில்விரற்குமுன்னிற்கும்வீரன். (ரு)

ஆர்கொன்றவரென்றலும்பேரதிகாயனென்னும்
பேர்கொன்றவன்வென்றியிலக்குவன்பின்புநின்றூர்
ஊர்கொன்றவனுற்பிறராலெனவுற்றவெல்லாம்
தார்கொன்றைறயிஞன்கிரிசாய்த்தவன்றூனுரைத்தான். (சூ)

கொன்றூரவரோகொலகூழ்கெனநீகொடித்தாய்
வன்றூனையர்மானுடர்வன்மையறிந்துமன்ஞ
என்றூனுமெனைச்செலவேவலையிற்றதென்ஞ
நின்றூனெடிதுன்னிமுனிந்துநெருப்புயிர்ப்பான். (எ)

அக்கப்பெயரோனைநிலத்தெதாடரைத்துளானை
விக்கற்பொருதாதுவனென்றுவிளம்பிவிட்டாய்
புக்கத்தலையெய்தநினைந்திலபுந்தியில்லாய்
மக்கட்டுனையற்றனையிற்றதுன்வாழ்க்கைமன்னே. (அ)

என்னின்றுநினைத்துமியம்பியுமெண்ணியுந்தான்
கொன்னின்றபடைக்கலத்தெதம்பியைக்கொன்றுளானை
அந்நின்றநிலத்தவணைக்கையைநீக்கியல்லால்
மன்னின்றநகர்க்கினிவாரலென்வாழ்வும்வேண்டேன். (க)

இந்திரசித்துச் சூளுரைத்தல்.

மாற்றூவுயிரெம்பியைமாற்றியமானுடன்றன்
ஊற்றூர்குருதிப்புனல்பார்மகளுண்டிலாளால்
எற்றூனிகலிந்திரனீரிருகாலெனக்கே
தோற்றூன்றனக்கென்னெடுஞ்சேவகந்தோற்கவென்றான். (கஎ)

வெங்கண்ணெடுவானரத்தானையவீற்றுவீற்றூய்ப்
பங்கம்முறநூறியிலக்குவனைப்படேனேல்
அங்கந்தரவஞ்சியென்னுணைகடக்கிலாத
செங்கண்ணெடுமான்முதற்றேறவர்சிரிக்கவென்னை. (கக)

பாம்பிற்றருவெம்படைபாசுபதத்திணையும்
தேம்பற்பிறைசென்னிவைத்தான்றருதெய்வவேதி
ஓம்பித்திரிந்தேதற்கினியின்றுதவாதுபோமேல்
சோம்பித்துறப்பென்னுயிர்சோறுமுகந்துவாழேன். (கஉ)

மருந்தேதநிகரெம்பிதன்னுருயிர்வெளவிணனை
விருந்தேதயெனவந்தகற்கீகிலென்வில்லுமேந்திப்
பொருந்தேதவர்குழாநகைசெய்திடப்போந்துபாரின்
இருந்தேதனெணிணனவிராவணியல்லெனென்ரான். (கந)

எகாவிதுசெய்தெனதின்னலைநீக்கிடென்ணைதக்
காகாதனவும்முளவோவெனக்காற்றலார்மேல்
மாகால்வரிவெஞ்சிலையோடும்வளைத்தபோது
சேகாகுமென்றெண்ணியிவ்வின்னலிற்சிந்தைசெய்தேதன். (கஎ)

இந்திரசித்து போர்க்கோலங் கொள்ளுதல்.

என்ரனைவணங்கியிலங்கயில்வாளுமார்த்திட்
டொன்ரனுமரூவுருவாவுடற்காவலோடும்
பொன்ரழ்கணையின்னெடும் * புட்டில்புறத்துவீக்கி
வன்ரள்வயிரச்சிலவாங்கினன்வானைவென்ரான். (கஅ)

வயிரந்நெடுமால்வரைகொண்டுமலர்க்கண்வந்தான்
செயிரொன்றுமுருவகையிந்திரற்கென்றுசெய்த
உயர்வெஞ்சிலையஞ்சிலபண்டவன்றன்னையோட்டித்
துயரின்றலைவைத்திவன்கொண்டதுதோற்றமீதால். (கக)

தோளிற்கணைப்புட்டிலுமிந்திரன்ரோற்றநாளே
ஆளித்திறலன்னவன்கொண்டனவாழியேழும்
மாளப்புனல்வற்றினும்வாளியரூதவன்கட்
கூளிக்கொடுங்கூற்றினுணைத்ததோர்கூடுபோல்வ. (கஉ)

பல்லாயிரகோடிபடைக்கலம்பண்டுதேவர்
எல்லாருமுனைத்தலையாவருமீந்தமேரு
வில்லாளன்கொடுத்தவிரிஞ்சனளித்தமெய்ம்மை
அல்லாற்புரியாதனயாவையுமாய்ந்துகொண்டான். (கஅ)

இந்திரசித்தன் சதுரங்காதிய.

நூரூயிரம்யாளியினென்மைதரிந்தசீயத்
தேரூமவையன்னவையாயிரம்பூண்டதென்ப
மாரூயொரிலங்கைநிகர்ப்பதுவானுளோரும்
தேரூததுமற்றவனேறியதெய்வமாத்தேர். (கக)

பொன்சென்றறியாவுவணத்தனிப்புள்ளினுக்கும்
மின்சென்றறியாமழுவாளன்விடைக்குமேலுள்
பின்சென்றதல்லதொருமாண்சிறப்புற்றபோதும்
முன்சென்றறியாததுமூன்றுலகத்தினுள்ளும். (உo)

---

* புட்டில் – அம்பரூத்தூணி.

னையாத்தனிப்போர்வலிகாட்டியவிந்திரன்றன்
சாயாப்பெருஞ்சாய்கெடத்தாம்புகளாற்றடந்தோள்
போயார்த்தவன்வந்தனன்வந்தனனென்றுபூசற்
பேயார்த்தெழுந்தாடுநெடுங்கொடிபெற்றதம்மா. (உக)

செதுகைப்பெருந்தானவரூனெடுங்தேய்த்தநெமி
யதுகைத்திசையானையையோட்டியதென்னலாமே
மதுகைத்தடந்தோள்வலிகாட்டியவானவேந்தன்
முதுகைத்தழும்பாக்கியமொய்யொளிமொட்டதம்மா. (உஉ)

அத்தேரினேயேறியதாப்பனவாயிரந்தேர்
ஒத்தேய்வனசேமமதாய்வரவுள்ளம்வெம்போர்ப்
பித்தேறினனென்னநடந்தனன்பின்பலான்மற்
றெத்தேவரையும்முகங்கண்டறியாதவீட்டான். (உங)

அன்னவெடுபோகியதானையறிந்துகூற
என்னலரிதேனுமியம்புவான்மீகனென்னும்
நன்னன்மறையானதுநாற்பதுவெள்ளமென்னச்
சொன்னன்பிறர்யாரஃதுணர்ந்துதொகுக்கவல்லார். (உசு)

தூமக்கணைக்கனுந்தொல்லமர்யார்க்குந்தோலா
மாமக்கனுமந்நெடுந்தேர்மணியாழிகாக்கத்
தாமக்குடைமீதுயரப்பெருஞ்சங்கம்விம்ம
நாமக்கடற்பல்லியநாற்கடன்மேலுமார்ப்ப. (உஎ)

தேராயிரமாயிரகோடிதன்மாடுசெல்லப்
போராளனபுறத்தினவற்றினிரட்டிபோதத்
தாராரர்புரவிக்கடல்பின்செலத்தானவீரப்
போராழிமுகஞ்செலச்சென்றனன்பேர்க்கியில்லான். (உசு)

(வேறு.

நின்றனனிலக்குவன்களத்தைதீங்கலன்
பொன்றினனிராவணன்புதல்வன்போர்க்கினி
அன்றவனல்லனேலமரர்வேந்தனை
வென்றவன்வருமெனவிரும்புஞ்சிந்தையான். (உஎ)

விபீடணனிலக்குமணனுக்கிவனிந்திரசித்தெனன் முதலிய.

யாரிவன்வருபவனியம்புவாயென
வீரவெந்தாழிலிரண்விளம்பவீடணன்
ஆரியவிவனிகலமரர்வேந்தனைப்
போர்கடந்தவனின்றுவலிதுபோரென்றான். (உஅ)

எண்ணினதுணர்த்துவதுளதொன்றெம்பிரான்
கண்ணகன்பெரும்படைத்துணைவர்காத்திட

நண்ணினனதுணையொடுபொருதனன்றிது
திண்ணிதிணுணர்தியாற்றெளியுஞ்சிந்தையால். (உக)

மாருதிசாம்பவன்வானரேந்திரன்
தாரைசேய்நீலனென்றினையதன்மையார்
வீரர்வந்துடனுறவிமலநீநெடும்
போர்செயத்தகுதியாற்புகழின்பூணினுய். (உ0)

பல்பதிணுயிரந்தேவர்பக்கமா
எல்லையில்சேனைகொண்டெதிர்ந்தவிந்திரன்
ஒல்லையினுடைந்தனனுயிர்கொண்டுப்ந்துளான்
மல்லலந்தாளிணுயடிழ்தின்வன்மையால். (உக)

இனியவைமறையுமோவிந்திரன்புயப்
பனிவரையுளநெடும்பாசப்பஃறழும்
பனுமனைப்பிணித்துளனைபோதவன்
தனுமறைவித்தகந்தெக்கற்பாலதோ. (உஉ)

என்றவணிறைஞ்சலுமிளையவள்ளலும்
நன்றெனமொழிதலுநணுகிணனரோ
வன்றிறன்மாருதியிலங்கைக்கோமகன்
சென்றனனிளவன்மேலென்னுஞ்சிந்தையான். (உங)

கூற்றமுங்கட்புலம்புதைப்பக்கோத்தெழு
தோற்றமுமிராவணிதுணிபுநோக்குரு
மேற்றிசைவாயிலவிட்டுவெங்கடுங்
காற்றெனவணுகிணன்கடிதின்வந்தரோ. (உச)

அங்கதன்முன்னரேயாண்டையானயல்
துங்கவன்ரூளிணுரெவருஞ்சுற்றிணர்
செங்கதிரோன்மகன்முன்புசென்றனன்
சுங்கநீர்கடலெனத்தழீஇயதானையான். (உஞ)

அசுரவானர யுத்தம்.

இருதிரைப்பெருங்கடலிரண்டுதிக்கிணும்
பொருதெதாழில்வேட்டுவந்தார்த்துப்பொங்கின
வருவனபோன்றனமனத்திணற்சினம்
திருகினவெதிரெதிர்செல்லுஞ்சேனையே. (உசு)

கண்ணினுன்மனத்திணுற்கருத்திணுற்றெரிந்
தெண்ணினுற்பெறுபயனெய்துமின்றெனு
நண்ணினுரிமையவர்நங்கைமாரொடும்
விண்ணினுடுணறவிடம்வெறுமைமகூரவே. (உஎ)

ஒத்திருதாளையுமுடற்றவுற்றுழி
அத்தனைவீரருமார்த்தவார்கலி
நத்தெதாலிமுரசொலிநடுக்கலாற்றலை
பொத்தினர்செவிகளைப்புரந்தராதியர். (உஅ)

எற்றுமின்பற்றுமினெறிமினெய்ம்மினென்
றுற்றனவுற்றனவுரைக்குமோதையும்
முற்றுறுகடையுகத்திடியின்மும்மடி
பெற்றனபிறந்தனசிலையின்பேரொலி. (உஆ)

கற்படமரம்படக்காலவேல்பட
விற்படுகணைபடவீழும்வீரர்தம்
எற்படுமுடல்படவிரண்டுசேனையும்
பிற்படநெடுநிலம்பிளந்துபேருமால். (உ0)

எழுத்தெடார்மரங்களாலெற்றமுற்றிய
விழுத்தலைமுழுவதுஞ்சிதறிவீழ்ந்தன
வழுத்தியபெருஞ்சினத்தாக்காராக்கைகள்
கழுத்துளதலையிலகளத்திறுவ. (உக)

வெட்டியதலையனநாம்புவீசுமேல்
முட்டியகுருதியகுரங்கின்மொய்யுடல்
சுட்டுயர்நெடுவனந்தாலந்தபின்னெடுங்
கட்டைகளெரிவனபோன்றுகாட்டுவ. (உஉ)

பிடித்தனநிருதரைப்பெரியதோள்பெயர்த்
தெடித்தனகால்விசைத்துதைத்தவுந்தின
கடித்தனகழுத்தறக்கைகளாலெடுத்
தடித்தனவரைத்தனவார்த்தவானரம். (உங)

வாள்களிற்கவிக்குலவீரர்வார்கழற்
ரூள்களைத்துணித்தனர்தலையைத்தள்ளினர்
தோள்களைப்பிரித்தனருடலத்துண்டவன்
போழ்களிற்புரட்டினர்நிருதர்பொங்கினர். (உச)

மரங்களிலரக்கரைமலைகள்போன்றுயர்
சிரங்களைச்சிதறினவுயிரைச்சிந்தின
கரங்களைக்கழல்களையொடியக்காதின
குரங்கெனப்பெயர்கொடுதிரியுங்கூற்றமே. (உரு)

சுடர்த்தவெநெடும்பொறிசொரியுங்கண்ணன
அடர்த்தலெநெடுமரமற்றகையன

உடர்த்தலைவயிரவேலுருவவுய்த்தவர்
மிடற்றினைக்கடித்துடன்விளிந்துபோவன. (சக)

அடர்ந்தனகிரிகளையசனியேறெனத்
துடர்ந்தனமழைபொழிதும்பிக்கும்பங்கள்
இடந்தனழுளைகளினிதிணுண்டன
கடந்தனபசித்தழல்கரடிகாதுவ. (சஎ)

கொலைமதகரியனகுதிரைமேலன
வலமணித்தேரனவாளின்மேலன
சிலைகளின்குடுமியசிரத்தின்மேலன
மலைகளிற்பெரியனகுரங்குவாவுவ. (சஅ)

வேறு.

தண்டுகொண்டாரக்கர்தாக்கச்சாய்ந்துகுரிலையசந்தில்
துண்டங்களாகவாளிற்றுணிந்தபேருடலத்தூவிக்
கொண்டெழுமலகளோடுங்குரக்கினப்பினைத்தின்குப்பை
மண்டுவெங்குருதியாறம்மறிகடன்மடுத்தமாதோ. (சக)

பனிவென்றபதாகையென்றும்பல்லுளைப்பரிமாவென்றும்
தனுவென்றும்வாளியென்றுந்தண்டென்றுந்தனிவேலென்றும்
சினவென்றிமதமாவென்றுந்தேரென்றுந்தெரிந்ததில்லை
அனுமன்கையவயிரக்குன்றுலரைப்புண்டவரக்கர்தானை. (ஙo)

பொங்குதேர்புரவியானைபொருகழுனிருதரென்னும்
சங்கையுமில்லாவண்ணந்தன்னுளேதழுவிக்கூற்றம்
எங்குளவுயிரென்றெண்ணியிணக்கையாற்கிளைத்தவதன்ப
அங்கத்தன்மரங்கொண்டெற்றவளறுபட்டழிந்ததானை. (ஙக)

தாக்கியதிசைகடோறுந்தலைத்தலைமயங்கித்தம்மின்
நூக்கியகளிறுந்தேரும்புரவியுநூழில்செய்ய
ஆக்கியசெருவைநோக்கியமராடசுரர்போரைத்
தூக்கியமுனிவரென்னையிதற்கதுதோற்றமென்றார். (ஙஉ)

எடுத்ததுனிருதர்தானையிரிந்ததுகுரங்கினீட்டம்
தடுத்தனர்முகங்கடாங்கித்தனித்தனிதலைவர்தள்ளிப்
படுத்தனரரக்கர்வேலைபட்டதும்படவும்பாரார்
கடுத்தனர்கடுத்தபின்னுங்காத்தனர்கவியின்வீரர். (ஙஎ)

சூலமுமழுவுந்தாங்கித்தோளிருநான்குந்தோன்ற
* மூலம்வந்துலகையுண்ணுமுருத்திரமூர்த்தியென்ன

---

* மூலம் — முடிவுகாலம்.

நீலனின் றுழியேகின் றுனிரந்தரங்கணங்களோடு
காலனென்றொருவன்யாண்டும்பிரிந்திலன்பாசக்கையான். (நிச)

காற்றலன்புனலோவல்லன்கனலல்லனிரண்டுகையால்
ஆற்றலனற்றுகின்றவருஞ்சமமிதுவேயாகின்
எற்றமென்பலவுஞ்சொல்லியென்பதமிழந்தேதனென்னைக்
கூற்றமுங்குலுங்கியஞ்சவெங்கதக்குமுதன்கொன்றான். (நிந)

மறிகடல்புடைசூழ்வைப்பின்மானவன்வாளிபோன
செறிபணைமாமேகின்றமரங்களிற்றெறியச்செப்பும்
குறியுடைமலைகடம்மிற்சூலவரைக்குலமேகொள்ளா
எறிதலோடறைதல்வேட்டவிடவனன்றிடந்திலாத. (நிசு)

வாம்பரிமதமாமான்றேர்வாளெயிற்றரக்கர்மாயப்
பாம்பினும்வெய்யோர்சாலப்படுகுவர்பயமின்றின்றே
தாம்புறழ்குருதிமண்டத்தொடர்நெடுமரங்கள்சுற்றிச்
சாம்பவன்கொல்லச்சாம்புமன்றுரையமரர்தந்தார். (நிள)

பொருங்குலப்புரவியானதிரைகளுங்கலம்பொற்றேறரும்
இருங்களியானையானமகரமுமிரியல்போக
நெருங்கியபடைகளானமீன்குலமிரிந்துசிந்தக்
கருங்கடல்கலக்குமத்திற்பனசனுங்கலக்கிப்புக்கான். (நிஅ)

மயிந்தனுமிளவரனுமழைக்குலங்கிழித்துவானத்
துயர்ந்தெழுமெருவைவேந்தருடன்பிறந்தவரையொத்தார்
கயங்குடைந்தாடும்வீரக்களிறுத்தான்கவயன்காலில்
பெயர்ந்திலனுற்றதல்லாற்கேசரிபெரும்போர்பெற்றான். (நிக)

பெரும்படைத்தலைவர்யாரும்பெயர்ந்திலர்பிணத்தின்குப்பை
வரம்பிலபரம்பியார்த்துமலகின்றபொழுதின்வந்துற்
றிரிந்தனகவியுங்கூடியெடுத்தனவெடுத்தலோடும்
சரிந்ததுநிருதர்தானைதாக்கினனரக்கன்றானே. (கூ0)

வேறு.

இந்திரசித்தன் போர்த்திறம்.

பூணெறிந்தகுவடனையதோள்களிருபுடைபரந்துயரவடல்வலித் [படச்
தூணெறிந்தனையவிரல்கள் கோதைதையாடு சுவடெறிந்ததொருதாழில்
சேணெறிந்துநிமிர் திசைகளோடுமலசெவிடெறிந்துடையமிடல்வலோ
ன், நாணெறிந்துமுறைமுறைதொடர்ந்துகடலுலகம்யாவையுநடுக்கினான்

சிங்கவேறுகடல்போன்முழங்கிநிமிர்தேர்கடாய்நெடிதுசெல்கென
அங்கதாதிபனனுங்கவானவர்களஞ்சவெஞ்சினமடந்தமாச்

சங்கபாலகுளிகா திவாலையி றுதந்ததீவிடமுமிழ்ந்துசார்
வெங்கணாகமெனவேகமாயுருமுமஞ்சவெங்கணைகள்சிந்திணன். (சுஉ)

சுற்றும்வந்துகவிவீரர்வீசியசுடர்த்தடங்கல்வரைதாய்மரம்
இற்றெரிந்துபொடியாயுதிர்ந்தனவெழுந்துசேணிடையிழிந்தபோல்
வெற்றிவெங்கணைபடப்படத்தலைகள்விண்ணினூடுதிசைமீதுபோய்
அற்றெழுந்தனவிழுந்துமண்ணிடையழுந்துகின்றனவயந்தமால். (சுங)

சிலைத்தடம்பொழிவயக்கடம்பகழிசெல்லவொல்கினர்சினத்திரல்
உலைத்தெறிந்திடவெடுத்தகுன்றுதாறுடற்பரங்கள்கொடோதுங்கிரர்
நிலைத்துநின்றுசினமுந்துசெல்லவெதிர்சென்றுசென்றுறநெருக்கலால்
மலைத்தலங்களொடுரத்தலங்கழலவூடுசென்றபலவாளியே. (சுச)

முழுத்தமொன்றிலொருவெள்ளவானரமுடிந்துமாள்வனதடிந்துபோய்க்
கழுத்தகையநிமிர்காலவாலபலகண்டமானபடிகண்டுநேர்
எழுத்தொடர்ந்தபடர்தோள்களாலெறியவெற்றவுற்றனவெழுந்துமேல்
விழுத்தலைந்தலையவேணுமால்வரைகள்வீசிவீசியுடன்வீழுமால். (சுஞ)

அற்றலைந்தலையரிந்துசென்றனவயிற்கடுங்கணைவெயிற்கள்போல்
புற்றடைந்தகொடுவெவ்வராவினெடுநாகலோகமதுபுக்கவால்
வெற்றவெள்ளிடைவிரிந்துபோவதொருமேடுபள்ளம்வெளியின்மையால்
உற்றசெங்குருதிவெள்ளமுள்ளதிரையோதவேலையொடுமொத்ததால். ()

விழிக்குமேல்விழியநிற்கின்மார்பிடையமீருமேன்முதுகமேனிய
கழிக்குமேலுயரிலேடுமேனெடியகாலவீசினிமிர்கையவாய்
தெழிக்குமேலகவுநாவசிந்தையினவுண்ணுமேற்சிகரம்யாவையும்
பழிக்குமேனியகுரக்கின்மேலவன்விடுங்கொடும்பகழிபாயவே. (சுஎ)

மொய்யெடுத்தகணைமாரியாலிடைமுடிந்ததொன்றுமுறைகண்டிலார்
எய்விடத்தெதிர்யுநாணிலேனையலதியாதுமொன்றுசெவியுற்றிலார்
மெய்யெடுத்தகவிவெள்ளம்யாவையும்விழுந்துபோனவெணும்விம்மலால்
கய்யெடுத்தனகுரங்கிலேடுமுறைகண்டுதேவர்கள்கலங்கினர். (சுஅ)

சுக்கிரீவனது போர்த்திறம்.

கண்டவானரமநந்தகோடிமுறைகண்டமானபடிகண்டவக்
கண்டன்மாருருவரின்னமைகண்டுகணமாறிணன்விடுதலின்னமையாக்
கண்டகாலையில்விலங்கினரவிகாதல்காதுவதொர்காதலால்
கண்டகார்சிதையமீதுயர்ந்தொளிர்மராமரஞ்சுலவுகையினன். (சுக)

உடைந்துதன்படையுலந்துசிந்தியுயிரொல்கவெல்செருவுடற்றலால் [ன்
கடைந்தவெள்ளமுதுகொள்ளும் வள்ளலெனமேனிமிர்ந்தவெதார்கறுப்பி
ஞ;இடைந்துசென்றவனையெய்திபெய்தரியகாவல்பெற்றிகலியற்றுவான்
மிடைந்துநின்றபடைவேலைகாறளாவீசினனிருதர்கூசினர். (எ0)

சுற்றினின்றபடைசிந்தியோடவொர்மராமரங்கொடுதுகைத்துளான்
வெற்றிகண்டுவலிநன்றுநன்றெனவியந்துவெங்கணைதொரிந்தவன்
நெற்றியின்றலையிரண்டுமார்பிடையொரஞ்சுநஞ்சனகிறுத்தவன்
பற்றிவந்தமரம்வேறுவேறுறநுறுக்கிநுண்பொடிபரப்பினன். (எக)

அக்கணத்தநுமனுலகாலமெனலாயதோர்வெகுளியாயினன்
புக்கனைத்துலகமுங்குலுங்கநிமிர்தோள்புடைத்துருமுபோலுரு
இக்கணத்தவனிறக்குமென்பதொருகுன்றெடுத்துமிசையேயினன்
உக்கதக்கிரிசொரிந்தவானிகளினூழிலாதசிறுபூழியாய். (எஉ)

அனுமவிந்திரசித்தர் வீரவசனங்கள்.

நில்லடாசிறிதுநில்லடாவுனைநினைத்துவந்தனெண்முனைக்குநான்
வில்லெடாமைனினதாண்மைபேசியுயிரோடுநின்றுவிளையாடினாய்
கல்லடாநெடுமரங்களோவருகருத்தினேன்வலிகடப்பரீ
சொல்லடாவெனவியம்பினனிகலரக்கனாயனிவைசொல்லினன். (எங)

வில்லெடுக்கவுரியார்களாயசிலவீரிங்குமூளர்மெல்லியோய்
* கல்லெடுக்கவுரியானுனின்றனனதின்றுநாளாயிடைகாணலாம்
மெல்லெடுத்தபடையிந்திராதியருனக்கிடைந்துயிர்கொடேகுவார்
புல்லெடுத்தவர்களல்லம்வேறுசிலபோரெடுத்ததிர்புகுந்துளேம். (எச)

என்னெடேபொருதியோவதன்றனிலக்குவப்பெயரினெம்பிரான்
தன்னெடேபொருதியோவுனுந்தைதலைதள்ளநின்றதனிவள்ளலாம்
மன்னெடேபொருதியோவுரைத்ததுமறுக்கிலேமெனவழங்கினன் [ன்.
பொன்னெடேபொருவினல்லதான்றெடு பொதுப்படாவுயர்புயத்தினு

எங்குநின்றனனிலக்குவப்பெயரவ்வேழையெம்பியதிகாயனும்
சிங்கம்வந்தவனெவென்றுதன்னுயிரெனக்குவைத்ததொர்சிறப்பினன்
அங்கவன்றனைமலந்துகொன்றுமுனிவாறவந்தனனதன்றியும்
உங்கடன்மையினடங்குமோவுலகொடுக்கும்வெங்கணைதொடுக்கினே. ()

ஆருமென்படைகுரெய்தலின்றியடலேகயானுடிகல்வில்லுமோர்
தேரினின்றுமையடங்கலுந்திரள்சிரந்துணிப்பெனிதுதிண்ணமால்
வாருமுங்களுடன்வானுளோர்களையுமண்ணுளோரையும்வரச்சொலும்[ன்
போருமின்றெருருபகற்கணைபொருதுவெல்வென்வென்றலதுபோகிலே

.என்றுவெம்பகழியேழுநூறுமிருநூறும்வெஞ்சிலைகொடேவினன்
குன்றுநின்றனையவீரமாருதிதன்மேனிமேலவைகுழுக்களாச்
சென்றுசென்றுருவலோடும்வாளெயிறுதின்றுசீறியொருசேமவன்
குன்றுநின்றதுபறித்தெடுத்தவனையெய்திநொய்தினிதுகூறினன். (எஅ)

---

* கல்லெடுக்கவுரியான் – பிதிர்க்கடன் செய்யுங்காலத்து, பாடாணத்தாபனஞ் செய்தற்குரிய விடீடணன்.

தம்பியென்றுலகினுள்ளயாவையவையேயவையுந்தொகுபுதுள்ளுதாள்
வெம்புவெஞ்சினமடங்கலொன்றின் வலிதன்னை நின்றெளிதின் வெல்லு
நம்பிதம்பியெனதெம்பிரான்வருதுணைத்தரிக்கிலநலித்தியேல் [மோ
அம்பின்முந்தியுனதாவியுண்ணுமிதுகாவடாசிலவலாண்மையால். (எக)

செருப்பயிற்றியதடக்கையாளிசெலவிட்டகுன்றுதிசையானையின்
மருப்பையுற்றதிரடோளிராவணன்மகன்றன்மார்பினுயர்வச்சிரப் [தால்
பொருப்பையுற்றதொர்பொருப்பெனக் கடிதொடிந்திடிந்து திசைபோய
நெருப்பையுற்றதொரிரும்புகூடமுறநீறுபட்டதுநிகர்த்ததால். (அ0)

விலங்கன்மேல்வரவிலங்கவீசியவிலங்கனீறுபடுவேலையில்
சலங்கைமேனிமிரவெஞ்சினந்திருகிவஞ்சன்மேனிகர்தருக்கினன்
வலங்கொள்பேருலகமேருவோடெனமறிக்குமாருதிதன்வாசநா
றலங்கன்மார்பிலெடுதோளிலேநெருவவாயிரஞ்சரமழுத்தினன். (அக)

ஒன்றுபோல்வனவொராயிரம்பகழியூடுபோயுருவவாடகக்
குன்றுகால்குடையமேலுயர்ந்திடைகுலுங்குகின்றனையகொள்கையான்
மன்றலுறுதடமேனிமேலுதிரவாரிசோரவருமாருதி
நின்றுதேறுமளவின்கண்வெங்கண்விழிநீலன்வந்திடைநெருக்கினன். ()

நீலனின்றதொருநீலமால்வரைநெடுந்தடக்கையினிடந்துநேர்
மேலெழுந்தெரிவிசும்புசெல்வதொருவெம்மையோடுவரவீசலும்
சூலமந்தகனெறிந்ததன்னதுதுணிந்துசிந்தவிடைசொல்லுறும்
காலமொன்றுமறியாமலம்புகொடுகல்லினனெடியவில்லினன். (அங)

ஊகமெங்குமுயிரோடுநின்றனவுமோடவானவர்களுள்ளமும்
மோகமெங்குமுளவாகமேருவினுமும்மடங்குவலிதிண்மைசால்
ஆகமெங்கும்வெளியாகவெங்குருதியாறுபாயவனலஞ்சுவாய்
நாகவெங்கணைகுவாளிபாய்தொறுநடுங்கினன்மலைபிடுங்கினன். (அச)

மேருமேருவெனவல்லதல்லதெனவேரிமேடுநெடுவெற்பெலாம்
மாரின்மேலுமுயர்தோளின்மேலும்வரவாலிகாதலன்வழங்கினன்
சேருமேயவைதனுக்கைநிற்கவெதிர்செல்லுமேகடிதுசெல்லினும்
பேருமேகொடியவாளியான்முறிபெறுக்கலாவவைநுறுக்கினன். (அசு)

நெற்றிமேலுமுயர்தோளின்மேலுநெடுமார்பின்மேலுநிமிர்தாளினும்
புற்றினூடுறுழைநாகமன்னபுகைவேகவாளிகள்புகப்புகத்
தெற்றிவாளெயிறுதின்றுகைத்துணைபிசைந்துகண்களெரிதியுக
வற்றிமேடுதிரவாரிசோர்வுறமயங்கினனிலமுயங்கினன். (அசு)

மற்றைறவீரர்கடமார்பின்மேலுமுயர்தோளின்மேலுமழைமாரிபோல்
கொற்றவெங்கணையுலக்கவெய்தவைகுளிப்பநின்றுடல்குலுங்கினர்

இற்றவிந்தனபெரும்பதாதியுயிருள்ளவெங்கணுமிரிந்தவப்
பெற்றிகண்டிலையவள்ளலொள்ளெரிபிறந்தகண்ணனிவைபேசினான். ()

வேறு.

பிழைத்ததுகொள்கைபோதப்பெரும்படைத்தலைவர்யாரும்
உழைத்தனர்குருதிவெள்ளத்துலந்ததுமுலப்பிற்றன்றே
அழைத்திவன்றன்னையானேயாருயிர்கொளப்படாதே
இழைத்ததுபழுதேதயன்றேவீடணவென்னச்சொன்னான். (அஅ)

வீடணனைலோசனை கூறுதல்.

அய்யவீதன்னதேயாலாயிரகோடிதேவர்
எய்தினரெய்திலரேயிடபட்டிலிந்ததல்லால்
செய்திலரிவனையொன்றுநீயிதுதீர்ப்பினல்லால்
உய்திறனுண்டோவேறிவ்வுலகினுக்குயிரோடென்றான். (அக)

இந்திரசித் திலக்குமணனைக்காண்டல்.

என்பதுசொல்லக்கேட்டவிந்திரவில்லிலைதும்
பொன்பொருமேகமொன்றுவருவதுபோல்கின்றானை
முன்பனைமுன்புநோக்கியிவன்கொலாம்பரதன்முன்னை
தன்பெருந்தம்பியென்றுனைமனச்சாரன்சொன்னான். (கo)

தியவனிளவறன்மேற்செல்வதன்முன்னஞ்செல்கென்
றேயினரொருவரின்றியிராக்கதத்தலைவரெங்கள்
நாயகன்மகனைக்கொன்றுய்ந்தண்ணினைநாங்கள்காணப்
போயினியுய்வதெங்கேயென்றெரிவிழித்துப்புக்கார். (கக)

இலக்குமணன் போர்த்திறம்.

கோடிநூறியையந்தகூட்டத்திராக்கதர்கொடித்தின்டேரும்
ஆடன்மாக்களிறுமாவுங்கடாவினரார்த்துமண்டி
மூடினர்மூடினரைமுறைமுறைதுணித்துவாகை
சூடினனிராமன்பாதஞ்சூடியதோன்றறம்பி. (கஉ)

அதிர்ந்தனவுலகமேழுமனற்பொறியசனியென்னப்
பிதிர்ந்தனமலையும்பாரும்பிளந்தனபிணத்தின்மேன்மேல்
உதிர்ந்தனதலைகண்மண்டியோடினவுதிரநீத்தம்
விதிர்ந்தனவமரர்கைகள்விளைந்ததுகொடியவெம்போர். (கங)

விட்டனன்விசிக்கம்வேகம்விடாதனவீரன்மார்பில்
பட்டனவுலகமெங்கும்பரந்தனபதாகைக்காட்டைச்
சுட்டனதுரகராசிதுணித்தனபினக்கைமாவை
அட்டனகூற்றமென்னவடர்ந்தனவந்தமம்மா. (கச)

உலக்குநருலக்கின்ருரையெண்ணுவாணுற்றவிண்ணேணர்
கலக்குறுகண்ணார்நோக்கிக்கடையுறக்காணலாற்ரூர்
விலக்கரும்பகழிமாரிவிளக்கின்றவிளவையுன்னி
இலக்குவன்சிலகொடேகொலெழுமழபயின்றவதென்ரூர். (கரு)

ஒளியொண்கணேகடோறுமுந்தியவேழமொற்றை
வாளியின்றலையபாரின்மறிவனமலயிற்சூழ்ந்த
ஆளியின்றுப்பின்வீரர்பொருகளத்தார்த்தவாழித்
தூளியின்ரூகையவள்ளல்சுடுகணேத்தொகையுமம்மா. (கசு)

பிறவியிற்பெரியநோக்கிற்பிசிதமுண்டுழலும்பெற்றிச்
சிறையனவெண்ணநோக்கித்தவருந்திகைக்கத்தேற்றித்
துறைதொறுந்தொடர்ந்துவானம்வெளியறத்துவன்றிவீழும்
பறைணையிற்பெரிதுபட்டார்பிணத்தின்மேற்படிவமாதோ. (கள)

திறந்தருகவியின்சேனைசெறிகழனிருதன்சீற
இறந்தனகிடந்தவெள்ளமெழுபதிற்பாதிமேலும்
பறந்தலைமுழுதும்பட்டவஞ்சகர்படிவமூடி
மறைந்ததுகுருதியோடிமறிகடன்மடித்திலாத. (கஅ)

கய்யற்ரூர்கால்களற்ரூர்கழுத்தற்ரூர்கவசமற்ரூர்
மெய்யற்ரூர்குடர்கள்சோரவிசையற்ரூர்விளிவுமற்ரூர்
மய்யற்ரூர்க்கரியுந்தேருமும்வாசியுமற்றுமற்ரூர்
உய்யச்சாய்ந்தோடிச்சென்ரூருயிருள்ளாராகியுள்ளார். (கக)

இலக்குமண விந்திரசித்தர்களின் யுத்தத்திறம்.

வற்றியகடலுணின்றமலையெனமருங்கின்யாரும்
சுற்றினரின்றித்தோன்றுந்தசமுகன்ரூன்றறுள்ளித்
தெற்றினபுருவத்தோன்றன்மனமெனச்சொல்லுந்தோன்
உற்றனனிளையகோவையநுமனுமுடன்வந்துற்ரூன். (கo)

தோளின்மேலாதியையவென்றடிதொழுதுநின்ரூன்
ஆளிபோன்மொய்ம்பிளைஞுமேறினனமராரார்த்தார்
காளியேயனையகாலன்கொலையனகனலின்வெய்ய
வாளிமேல்வாளிதூர்த்தார்மழையின்மேன்மழைவந்தன்ரூர். (கக)

இடித்தனசிலையிளைஞுகளிரிந்தனதிசைகளிற்று
வெடித்தனமலைகள்விண்டுபிளந்தனவிசும்புமேன்மேல்
பொடித்தவிவ்வுலகமெங்கும்பொழிந்தனபொறிகள்பொங்கிக்
கடித்தனகணைகளோடுகணைகடம்மயில்வாய்கவ்வி. (கஉ)

அம்பிடைடம்பொன்ரூன்றையறுக்கமற்றறுக்கிலாத
வெம்பொறிகதுவவிண்ணில்வெந்தனகரிந்துவீழ்ந்த

உம்பருமுணர்வுசிந்தியொடுங்கிருலகம்யாவும்
கம்பமுற்றுலந்தவேலைக்கலமெனக்கலங்கிற்றண்டம். (கஐக)

அரியினம்பூண்டதேருமநுமனுமந்தசாரி
புரிதலினிலங்கையூருந்திரிந்ததுபுலவரேயும்
எரிகணைப்படலமூடவிலருளரென்னுந்தன்மை
தெரிகிலர்செவிடுசெல்லக்கிழிந்தனதிசைகளெல்லாம். (கஐச)

நாண்பொருவரிவிற்செங்கைநாமநூனவின்றகல்வி
மாண்பொருவகையிற்றன்றுவலிக்கிலையவதிவானம்
சேண்பரிதென்றுசென்றதேவருமிருவர்செய்கை
காண்பரிதென்றுகாட்சிக்கையுறவெய்திற்றன்றே. (கஐஞ)

என்செய்தாரென்செய்தாரென்றியம்புவாரினையதன்மை
முன்செய்தார்யாவரென்பார்முன்னேதுபின்னேதென்பார்
கொன்செய்தார்வீரரின்னதிசையிலரென்றுங்கொள்ளார்
பொன்செய்தார்மவுலிவிண்ணேரருணர்ந்திலர்புகுந்ததென்றும். (கஐஎ)

ஆயிரகோடிபல்லமயிலையிற்றரக்கனெய்தான்
ஆயிரகோடிபல்லத்தவைதுணித்தறுத்தானையன்
ஆயிரகோடிநாகக்கணைதொடுத்தரக்கனெய்தான்
ஆயிரகோடிநாகக்கணைகளாலறுத்தானண்ணல். (கஐஅ)

கோட்டியின்றலையகோடிகோடியம்பரக்கன்கோத்தான்
கோட்டியின்றலையகோடிகோடியாற்குறைத்தான்கொண்டல்
மீட்டொருகோடிகோடிவெஞ்சினத்தரக்கன்விட்டான்
மீட்டொருகோடிகோடிகொண்டவைதடுத்தான்வீரன். (கஐஆ)

கங்கபத்திரமோர்கோடிகைவிசைத்தரக்கனெய்தான்
கங்கபத்திரமோர்கோடிகணைதொடுத்திளவல்காத்தான்
திங்களிற்பாதிகோடியிலக்குவன்றெரிந்துவிட்டான்
திங்களிற்பாதிகோடிதொடுத்தவையரக்கன்றீர்த்தான். (கஐஊ)

கோரையின்றலையகோடிகொடுங்கணையரக்கன்கோத்தான்
கோரையின்றலையகோடிதொடுத்தவையிளவல்கொன்றான்
பாரையின்றலையகோடிபரப்பிணிளவல்பல்கால்
பாரையின்றலையகோடியரக்கனும்பதைக்கவெய்தான். (கஈஐ)

தாமரைத்தலையவாளிதாமரைக்கணைக்கிற்சார்ந்த
தாம்வரத்துரந்துழுந்தித்தசமுகன்றாயலர்த்தான்
தாமரைத்தலையவாளிதாமரைக்கணைக்கிற்சார்ந்த
தாம்வரத்தடுத்துவீழ்த்தான்ரூமரைக்கண்ணன்றம்பி. (கஈக)

வச்சிரப்பகழிகோடிவஜையெயிற்றரக்கனெய்தான்
வச்சிரப்பகழிகோடிதுரந்தவையகன்மாய்த்தான்
முச்சிரப்பகழிகோடியிலக்குவன்முடுகவிட்டான்
முச்சிரப்பகழிகோடிதொடுத்தவைதடுத்தான்முன்பன். (ககஉ)

அஞ்சலியஞ்சுகோடிதொடுத்திகலரக்கனெய்தான்
அஞ்சலியஞ்சுகோடிதொடுத்தலையறுத்தாஜையன்
குஞ்சரக்கன்னங்கோடியிலக்குவன்சிலயிற்கோத்தான்
குஞ்சரக்கன்னங்கோடிதொடுத்தலையரக்கன்காத்தான். (ககங)

எய்யவுமெய்தவாளிவிலக்கவுமுலகமெல்லாம்
மொய்கணைக்கானமாகிமுடிந்ததுமுழங்குவேலை
பெய்கணைப்பொதிகளாலேவளர்ந்ததுபிறந்தகோபம்
கய்ம்மிகக்கனன்றதல்லாற்றளர்ந்திலர்காஜவீரர் (ககச)

வீழியின்கனிபோன்மேனிகிழிபடவநுமன்வீரச்
சூழழுவனையதோண்மேலாயிரம்பகழிதூவி
ஊழியினிமிர்ந்தசெந்தீயுருமினையுமிழ்வதென்ன
ஏழிருநூறுவாளியிலக்குவன்கவசத்தெய்தான். (ககஙி)

முற்கொண்டானரக்கனென்னுமுளரிவாண்முகங்கடேவர்
பிற்கொண்டாரிஜயகோவைப்பியல்கொண்டான்பெருந்தோணின்றும்
கற்கொண்டார்கிரியினுலுமருவிபோற்குருதிகண்டார்
விற்கொண்டாரிவனேயென்னுவெருக்கொண்டார்முனிவர்மேலார். ()

சீறுநூறெரிந்தசிந்தையிலக்குவன்சிலக்கைவாளி
நூறுநூறேறவிகொய்தினுடங்குஜமடங்கன்மாவும்
வேறுகூறியற்றிவீரக்கொடியையுமறுத்துவீழ்த்தி
ஆறுநூறம்புசெம்பொற்கவசம்புக்கழுந்தவெய்தான். (ககன)

காளமேகத்தைச்சார்ந்தகதிரவனென்னக்காந்தித்
தோளின்மேன்மார்பின்மேலுஞ்சுடர்விடுகவசஞ்சூழ
நீளநீள்பவளவல்லிநிரையொளிநிமிர்வவென்ன
வாளிவாய்தோறும்வந்துபொடித்தனகுருதிவாரி. (ககஅ)

பொன்னுறுதடந்தேர்பூண்டமடங்கன்மாப்புரண்டபோதும்
மின்னுறுபதாகையோடுசாரதிவீழ்ந்தபோதும்
தன்னிறத்துருவவாளிதடுப்பிலசார்ந்தபோதும்
பின்னுதன்றறியானன்னுனினையதோர்மாற்றஞ்சொன்னன். (ககக)

இலக்குமணனை இந்திரசித்து மெச்சிப்பேசுதல்.

அந்நானல்லனுகிரானனனையனன்றேல்
பின்னரன்பிரமனென்பார்ப்பேசுகபிறந்துவாழும்

மன்னர்நம்பதியின்வந்துவரிசிலைபிடித்தகல்வி
இந்தரன்றன்னேடொப்பார்யாருளரினையரென்றான். (கஉ0)

வாயிடைநெருப்புக்காலவுடனெங்குருதிவாரத்
தீயிடைநெய்வார்த்தன்னவெகுளியாணுயிர்தீர்ந்தாலும்
ஓய்விடமில்லான்வல்லேயோரிமையொடுங்காமுன்னம்
ஆயிரம்புரவிபூண்டவாழியந்தேரினைனென். (கஉக)

வேறு.

* ஆசையெங்கணுமம்புகவெம்புபோர்
ஓசைவிம்மவுருத்திரணும்மூடல்
கூசவாயிரகோடிகொலைக்கணை
வீசிவிண்ணேவெளியிலதாக்கினென். (கஉஉ)

அத்திறத்திலகணுமாயிரம்
பத்திபத்தியினெய்குவபல்கணை
சித்திரத்தினிற்சிக்தியிராவணன்
புத்திரற்குமோராயிரம்போக்கினென். (கஉங)

ஆயிரங்கணைபாய்ந்தனவாற்றருங்
காயெரித்தலெநெய்யெனக்காந்துரூத்
† தூயவன்சுடர்சூழொளிநெற்றியில்
தீயவெங்கணைநூறுசெலுத்தினென். (கஉச)

நெற்றிமேலொருநூறுநெடுங்கணை
உற்றபோதினுமியாதுமொன்றுற்றிலன்
மற்றவன்முழிலோன்மணிமார்பிடை
முற்றவெங்கணைநூறுமுடுக்கினென். (கஉஞ)

நூறுவெங்கணைமார்பினுழைதலின்
ஊறுசோரியொடுள்ளமுஞ்சோர்தரத்
தேறலாந்துணையுஞ்சிலயூன்றியே
ஆறினின்றனனற்றவிற்றேரற்றிலான். (கஉசு)

அனுமனிந்திரசித்தன் தேரைக் காலாலுதைத்துத்தள்ளுதல்.

புதையுநன்மணிபொன்னுருளச்சொடு
சிதையவாயிரம்பாய்பரிசிந்திட
வதையின்மற்றொருகூற்றெனமாருதி
உதையினலவன்றேரையுருட்டினென். (கஉஎ)

பேயொராயிரம்பூண்டதுபெய்ம்மணி
யேதரிமைப்பின்னரிடையேறினென்

---

* ஆசை – திசை. † தூயவன் – இலக்குமணன்.

தாயவன்சுடர்த்தோளிணைமேற்சுடர்
தீயவெங்கணையெம்பதுசிந்திரன். (கஉஅ)

எறியேறியிழந்ததல்லாலிகல்
வேறுசெய்திலன்வெய்யவன்வீரனும்
ஆறுகோடிப்பகழியினையிரு
நாறுதேரொருநாழிகைநூறினான். (கஉக)

ஆசிசூறினரார்த்தனராய்மலர்
வீசிவீசிவணங்கினர்விண்ணவர்
* ஊசனீங்கினருத்தரிகத்தொடு
தூசுவீசினர்நன்னெறிதுன்னினர். (கஉ0)

அக்கணத்திரோயிரமாயிரம்
மிக்கவெங்கணைரக்கரவ்வீரரே
டொக்கவின்பமொருவழியூணினர்
புக்குமுந்தினர்போரிடைப்பொன்றுவார். (கஉக)

தோர்தோளினிவுளியர்செம்முகக்
காரர்காரினிடிப்பினர்கண்டையின்
தாரர்தாரணியும்விசும்புந்தவழ்
பேரர்பேரிமுழக்கன்னபேச்சினர். (கஉஉ)

பார்த்தபார்த்ததிசைதொறும்பன்மழை
போர்த்தவானமெனவிடிபோர்த்தெழ
ஆர்த்தவோசையுமம்பொடுவெம்படை
தூர்த்தவோசையும்விண்ணினைத்தூர்த்தவால். (கஉங)

ஆளியார்த்தனவாளரியார்த்தன
கூளியார்த்தனசூஞ்சரமார்த்தன
வாளியார்த்தனதேரிவர்மண்டிலம்
தூளியார்த்திலதாற்பிணந்துன்னலால். (கஉச)

வந்தணைந்தவெதார்வாளரிவாவுதேர்
இந்திரன்றனெவென்றவனேறினான்
சிந்தினன்சரமாரிதிசைத்திசை
அந்திவண்ணனெரம்பினகற்றினான். (கஉஞ)

சுற்றும்வந்துபரந்துதொடர்ந்தவர்
எற்றுகின்றனவெய்தவெறிந்தன
அற்றுதிர்ந்தனவாயிரம்வன்றலை
ஒற்றைவெங்கணையோடுமுருண்டவால். (கஉசு)

---

* ஊசனீங்கி – தடுமாற்றமொழிந்து.

குடர்கிடந்தனபாம்பெனக்கோண்மதித்
திடர்கிடந்தனசிந்தினதேர்த்திரள்
படர்கிடந்தனர்பல்படைக்கையினர்
கடர்கிடந்தனபோன்றகளத்தினே. (கஉ)

குண்டலங்களுமாரமுங்கோவையும்
கண்டநாணுங்கழலுங்கவசமும்
சண்டமாருதம்வீசத்தலத்துகும்
விண்டலத்தினின்மீனெனவீழ்ந்தவால். (கஊ)

அரக்கன்மைந்தனையாரியனம்பிலல்
கரக்கநூறியெதிர்பொருகண்டகர்
சிரக்கொடுங்குவைக்குன்றுதிரட்டிலன்
இரக்கமெய்திவெங்காலனுமஞ்சவே. (கஎ)

சுற்றிவால்கொடுதூவுந்துகைக்கும்விட்
டெற்றும்வானினெடுத்தெதிரும்மெதிர்
உற்றுமோதுமுனைதக்குமுறுக்குமால்
‡ கொற்றவில்லியன்றேறியகூற்றமே. (கஅ0)

பார்க்குமஞ்சவுறுக்கும்பகட்டிலல்
தூர்க்கும்வேலையைத்தோள்புடைகொட்டினின்
ரூர்க்குமாயிரந்தேர்பிடித்தங்கையால்
ஈர்க்குமையனன்றேறியயானையே. (கஅக)

மாவும்யானையும்வாளுடைத்தானையும்
பூவுநீரும்புனைதளிரும்மெனத்
தூவுமள்ளிப்பிசையுந்துகைக்குமால்
சேவகன்றெரிந்தேதறியசீயமே. (கஅஉ)

உரகம்பூண்டவுருளைபொருந்தின
இரதமாயிரமேயெனுமாத்திரை
சரதமாகத்தரைப்படச்சாடுமால்
வரதனன்றுவந்தேதறியவாசியே. (கஅஊ)

அவ்விடத்தினிலாய்மருந்தாலழல்
வெவ்விடத்தினையுண்டவர்மீண்டென
எவ்விடத்தினும்வீழ்ந்தவினத்தலத்
தெவ்வடக்கும்வலியவர்தேறினர். (கஅஎ)

தேறினர்கணைருப்புகச்சீறினர்
ஊறினர்வந்திளவலையொன்றினர்

---

‡ கொற்றவில்லி-வெற்றிபொருந்திய விற்படையினன இலக்குமணன்.

மாறுமாறுமலையுமாங்களும்
நூறுமாயிரமுங்கொடுநூறினர். (கசுஞ)

விகடமுற்றமரவெறுவெற்பினம்
புகடவுற்றபொறுத்தனபோவன
துகடவத்தொழில்செய்துறைக்கம்மியர்
சகடமொத்தனதாரணிதெலாம். (கசுசு)

வாலிமைந்தரேர்மாமரம்வாங்கினன்
காலின்வந்தவரக்கனைக்காவிது
போலுமுன்னுயிருண்பதுபுக்கெனை
மேனிமிர்ந்துநெருப்புகவீசினன். (கசுஎ)

எழித்ததுசெய்தவனீண்டெழிற்
சீரழித்தவனுமெனத்தேவர்கள்
ஊரழித்தவுயர்வரைத்தோளவன்
தேரழித்ததிமைப்பினிற்சென்றதால். (கசுஅ)

அந்தவேலையினுர்த்தெழுந்தாடினர்
சிந்தைசீரினுயர்ந்தனர்தேவர்கள்
தந்தைதந்தைதபண்டுற்றசழக்கெலாம்
எந்தைதீர்த்தனனென்பதோரம்பலால். (கசுக)

அழிந்ததேரினின்றந்தரத்தக்கணத்
தெழுந்துமற்றோரிரதமூற்றேறினன்
கழிந்துபோகலநில்லெனக்கைக்கணை
பொழிந்துசென்றனன்றீயெனப்பொங்கினன். (கருo)

இந்திரன்மகன்மைந்தனையின்னுயிர்
தந்துபோகெனச்சாரலுற்றுன்றனை
வந்துமற்றையவானரவீரரும்
மூந்துபோர்க்குமுறைமுறைமுற்றினர். (கருக)

மரமுங்குன்றுமடிந்தவரக்கர்தம்
சிரமுந்தேருங்புரவியுந்திண்கரிக்
கரமுமாளியும்வாரிக்கடியவன்
சரமுந்தாழ்தரவீசினர்தாங்கினர். (கருஉ)

அனையகாலையிலாயிரமாயிரம்
வினையவெவங்கணரக்கரைவீண்ணவர்
நினையுமாத்திரத்தாருயிர்நீக்கினன்
மனையும்வாழ்வுமுறக்கமுமாற்றினன். (கருங)

ஆனையுந்தடந்தேருந்தன்னுருயிர்த்
தானையும்பரியும்பட்டதன்மையை
மானவெங்கணரக்கன்மனக்கொளாப்
போனவென்றியன்றீயெனப்பொங்கினன். (கநச)

சீர்த்தடம்பெருஞ்சில்லியந்தேரினர்
காத்துநின்றவிருவரைக்கண்டனன்
ஆர்த்ததம்பெருஞ்சேனைகொண்டண்டமேல்
ஈர்த்தசோரிப்பரவைவின்றீர்த்தலால். (கநந)

நேர்செலாதிடைநின்றனர்நீணெடுங்
கார்செலாவிருள்சீறியகண்ணகன்
தேர்செலாதுவிசும்பிடைச்செல்வதேர்
போர்செலாது * பிணத்தின்பிறக்கமே. (கநசு)

அன்றுதன்னயனின்றவரக்கரை
ஒன்றுவாண்முகநோக்கியொருவிலான்
நன்றுநம்படைநாற்பதுவெள்ளமும்
கொன்றுநின்றபடியெனக்கூறினன். (கநள)

ஆயவீரருமையவமர்த்தலை
நீயுநாற்பதுவெள்ளநெடும்படை
மாயவெங்கணைமாரிவழங்கினை
ஓய்வில்வெஞ்சொருவொக்குமென்றேறுதிரைர். (கநஅ)

வந்துநேர்ந்தனர்மாருதிமேல்வரும்
அந்திவண்ணனுமாயிரமாயிரம்
சிந்திநின்கணைதேவரைவென்றவன்
நுந்தநுந்தமுறைறமுறைறநூறினன். (கநக)

ஆறுமேழுமறுபதுமைம்பதும்
நூறுமாயிரமுங்கணைநூக்கிவந்
தூறினரையுணர்வுதொலத்துயிர்
தேறினரைநெடுநிலஞ்சேர்த்தினன். (கசுO)

கதிரின்மைந்தன்முதலிரேர்காவலர்
உதிரவெள்ளத்திலெல்கியொதுங்கலும்
எதிரினின்ற † விராவணியீடுற
வெதிரின்காட்டெரிபோற்சரம்வித்தினன். (கசுக)

உளவுதான்றவிராவணியொல்கினன்
கிளையினின்றவிருவர்கிளத்தலும்

---

* பிணத்தின்பிறக்கம்-பிணத்தினச்சம்.

† இராவணி-இராவணன்மகன்.

அளவில்சேனையவிதாவாரியற்
கிளையவீரன்சுடுசரமேவிணன். (கசுஉ)

வேறு.

தெரிகணைமாரிபெய்யத்தேர்களுஞ்சினைக்கைமாவும்
பரிகளுந்தாமுமன்றுபட்டவர்கிடக்கக்கண்டார்
இருவருநின்ரூர்மற்றங்கிராக்கதரென்னும்பேரார்
ஒருவருநின்ரூரில்லையுள்ளவரோடிப்போனார். (கசுஙூ)

ஓடினராக்கர்தண்ணீருண்ணைசையுலந்தநாவர்
தேடினரெதிர்ந்துகையான்முகிலினைமுகந்துதேக்கிப்
பாடுறுபுண்கடோறும்பசும்புனல்பாயப்பாய
வீடினர்சிலவர்சில்லோர்பெற்றிலர்விளிந்துவீழ்ந்தார். (கசுசு)

வெங்கணைதிறந்தமெய்யர்விளிந்திலர்விரைந்துசென்ரூர்
செங்குழற்கற்றைசோரத்தெரிவையராற்றத்தெய்வப்
பொங்கிரும்பள்ளிபுக்காரவருடல்பொருந்தப்புல்லி
அங்கவராவியோடுந்தம்முயிர்போக்கியற்ரூர். (கசுஞ)

பொறிக்கொடும்பகழிமார்பர்போயினரிடங்கள்புக்கார்
மறிக்கொளுஞ்சிறுவர்தம்மைமற்றுளசுற்றந்தம்மைக்
குறிக்கொளுமென்றுகூறியவர்முகங்குழையநோக்கி
நெறிக்கொளுங்கூற்றைநோக்கியாருயிரொறுத்துநீத்தார். (கசுசு)

தாமரைக்கண்ணன்றம்பிதன்மையீதாகின்மெய்ம்மை
வேமரைக்கணைத்தினிவ்வூரிராவணிவிளிதன்முன்னம்
மாமரக்கானிற்குன்றின்மறைந்திருமறையவல்லை
போமெனத்தமரைச்சொல்லிச்சிலருடன்றுறந்துபோனர். (கசுஎ)

வரையுண்டமதுகைமேனிமருமத்துவள்ளல்வாளி
இரையுண்டுதுயிலச்சென்ரூர்வாங்கிடினிறப்பெனென்பார்
பிரையுண்டபாலினுள்ளம்பிறிதுறப்பிறர்முன்சொல்லா
உரையுண்டநல்லோரென்னவுயிர்த்துயிர்த்துழைப்பதானர். (கசுஅ)

தேரிடைச்செல்லார்மானப்புரவியிற்செல்லார்செங்கட்
காரிடைச்செல்லார்காலிற்காலெனச்செல்லார்காவல்
ஊரிடைச்செல்லார்நாணுலுயிரின்மேலுடையவன்பால்
போரிடைத்திரியாநின்றுநடுங்கினர்புறத்தும்போகார். (கசுகூ)

நொய்தினிற்சென்றுகூடியிராவணியுளைவைநோக்கி
வெய்தினிற்கொன்றுவீழ்ப்பலென்பதோர்வெகுளிவீங்கிப்
பெய்துழிப்பெய்யுமாரியனையவன்பிணங்குகூற்றின்
கய்யினிற்பொரியவம்பாற்கவசத்தைக்கழித்துவீழ்த்தான். (கஎ0)

கவசத்தைக்கழித்துவீழ்ப்பக்காப்புறுகடனின்ரூகி
அவசத்தையடைந்தவீரனறிவுறுந்துணையின்வீரத்
துவசத்தின்புரவித்திண்டேர்கடிதுறத்தாண்டியாமித்
திவசத்தின்முடித்தும்வெம்டோரெனச்சினந்திருகிச்சென்ரூர். (களக)

மாருதிமேலுமையன்மார்பினுந்தாளின்மேலும்
தேரினரிருவர்சென்ரூர்சிந்தினபகழிசிந்தி
ஆரியன்வாகைவில்லுமச்சுடைத்தேதருமத்தேர்
ஊர்குவாருயிருங்கொண்டான்புரவியினுயிருமுண்டான். (களஉ)

இருவருமிழந்தவில்லாரெழுமுவாவயிரத்தண்டர்
உருமெனக்கடிதிரேழியநுமனையிமைப்பினுற்ரூர்
பொருகனற்பொறிகள்சிந்தப்புடைத்தனர்புடைத்தலோடும்
பருவலிக்கரத்திறற்றண்டிரண்டையும்பறித்துக்கொண்டான். (களங)

தண்டவன்கையதாயதன்மையைத்தறுகணுளர்
கண்டனர்கண்டுசெய்யலாவதொன்ரூனுங்காணர்
கொண்டனனெறிந்துநம்மைக்கொல்லுமென்றச்சங்கொண்டார்
உண்டசெஞ்சோறுநோக்காருயிருக்கேயுதவிசெய்தார். (களச)

காற்றுவந்தசைத்தலாலுங்காலமல்லாமையாலும்
கூற்றுவந்தாவிகொள்ளுங்குறியின்மைகுறித்தலாலும்
தேற்றம்வந்தெய்திநின்றமயக்கமுநோவுந்தீர்ந்தார்
ஏற்றமும்வலியும்பெற்ரூரெழுந்தனர்வீரரெல்லாம். (களஞ)

அங்கதன்குழுதனீலன்சாம்பவனருக்கன்மைந்தன்
பங்கமின்மயிந்தன்றம்பிசதவலிபனசன்முன்னுச்
சிங்கவேறனையவீரர்யாவருஞ்சிகாமேந்தி
மங்கலம்வாழ்ரூர்சொல்லமழையெனவார்த்துவந்தார். (களசு)

அத்தனையோருங்குன்றமளப்பிலாவசனியேற்ரூர்
டொத்தனரெருப்புவீசுமுருமெனவொருங்கவுய்த்தார்
இத்தனைபோலுஞ்செய்யுமிகலெனுமுறுவலெய்திச்
சித்திரவில்வலோனுஞ்சின்னபின்னங்கள்செய்தான். (களள)

சூரியாத்தமனகாலம் ஆதல்.

மரங்களுமலையுங்கல்லுமழையெனவழங்கிவந்து
நெருங்கிரூர்நெருங்கக்கண்டுமொருதனிநெஞ்சும்வில்லும்
சரங்களுந்துணையாய்ன்றநிசாசரன்றனிமைநோக்கி
இரங்கிரூனென்னைமேல்பாற்குன்றுபுக்கருக்கனின்ரூன். (களஅ)

வாழியவேதநான்குமனுமுதல்வந்தநூலும்
வேழ்வியுமெய்புந்தெய்வவேதியர்விளவுமஃதே

ஆழியங்கமலக் * கையாளுகியபரமனென்னு
ஏழையருள்ளமென்னவிருண்டன திசைகளெல்லாம். (கஎகூ)

நாகமேயினையநம்பநாழிகையொன்று † நான்கு
பாகமேகாலமாகப்பகுத்தியேற்பட்டானன்றேறல்
வேகவாளரக்கர்காலம்விளைந்ததுவிசும்பின்மீதா
ஏகுமேல்வெல்வனென்பதிராவணற்கிளவல்சொன்னான். (கஅ0)

அத்தனைவீர்மேலுமாண்டகையநுமன்மேலும்
எத்தனைகோடிவாளிமழையெனவெய்யாநின்ற
வித்தகவில்லினைக்கொல்வதுவிரும்பிவீரன்
சித்திரத்தேரைத்தெய்வப்பகழியாற்சிதைத்துவீழ்த்தான். (கஅக)

இந்திரசித்து வானத்தின் மறைதல்.

அழித்தேரழுந்தாமுன்னமம்பொடுகிடந்துவெம்பி
உழைத்துயிர்விடுவதல்லாலுறுசெருவென்றேறமென்று
பிழைத்திவர்போவரல்லர்பாசத்தாற்பிணிப்பினென்னு
விழித்திமையாதமுன்னம்வில்லொடும்விசும்பிற்சென்றான். (கஅஉ)

பொன்குலாமேனிமைந்தன்றன்னுடம்புகழ்தற்கொத்தான்
வன்கலாமியற்றிநின்றான்மற்றொருருமனத்தனாகி
மின்குலாங்கழற்கால்வீரன்விண்ணிடைவிரைந்ததன்மை
என்கொலாமென்னவஞ்சிவானவரிரியல்போனார். (கஅங)

தாங்குவிற்கரத்தன்றூணிதழுவியபுறத்தன்றன்னின்
ஓங்கியுற்றெரியாநின்றவெகுளியினுயிர்ப்பன்றீயன்
தீங்கிழைப்பவர்கட்கெல்லாஞ்சீரியன்மாயச்செல்வன்
வீங்கிருட்பிழம்பினும்பர்வேகத்தின்மீதிறைஞ்சான். (கஅச)

இந்திரசித்தன்மாயையால் அனுவுருக்கோடல்.

தணிவறப்பண்டுசெய்ததவத்தினுந்தருமத்தானும்
பிணியறுப்பவரிற்பெற்றவரத்தினும்பிறப்பினுனும்
மணிநிறத்தரக்கன்செய்தமாயமந்திரத்தினுனும்
அணுவெனச்சிறியதாங்கோராக்கையுமுடையனானான். (கஅஞ)

வாங்கிரன்மலரின்மேலவானவன்வானகங்கை
தாங்கிரனுலகந்தாங்குஞ்சக்கரத்தவனென்றாலும்
வீங்குவான்றோளாவீக்கிவீழ்த்தலான்மீள்கிலாத
ஓங்குவாளரவினமத்தெதாருதனிப்படையையுன்னி. (கஅசு)

---

* கையாளுதியம்பரமனென்னு என்றும் பாடம்.

† நான்குபாகம்-கால்நாழிகையளவு.

ஆயினகாலத்தார்த்தாரமர்த்தொழிலஞ்சியப்பால்
போயினனென்பதுன்னிவானரவீர்போல்வார்
நாயகற்கிளையகோவுமன்னேதனினைந்துநக்கான்
மாயையைத்தெரியவுன்னூர்போர்த்தொழின்மாற்றினின்றூர். (கஅஎ)

அதுகணத்தநுமன்றூணின்றையனுமிழிந்துவெய்ய
கதுவலிச்சிலையைவென்றியங்கதன்கையதாக்கி
முதுகுறச்சென்றுனின்றகணையெலாமுறையின்வாங்கி
விதுவிதுப்பாற்றலுற்றூன்விளகின்றதுணர்ந்திலாதான். (கஅஅ)

வீட்டனனரக்கன்வெய்யபடையினைவிடுத்தலோடும்
எட்டிறைடிரண்டுதிக்குமிருடிரிந்தியவோடிக்
கட்டினதென்பமன்றேகாகுத்தற்கிளையகாளை
வட்டவான்வயிரத்திண்டோணமலகளையுளையவாங்கி. (கஅக)

இறுகுறப்பிணித்தலோடும்யாவையுமெதிர்ந்தபோதும்
மறுகுறக்கடவானல்லன்மாயமென்றுணர்வானல்லன்
உறுகுறைத்துன்பமில்லாவெருங்கினன்செய்வதாரான்
அறுகுறைக்களத்தைதோக்கியந்தரமதனைநோக்கும். (ககo)

* காலுடைச்சிறுவன்மாயக்கள்வனைக்கணத்தின்காலை
மேல்விசைத்தெழுந்துநாடிப்பிடிப்பெனென்றுறுக்கும்வேலை
ஏல்புடைப்பாசமேலுளிராவணன்புயத்தைவாலி
வால்பிணித்தென்னச்சுற்றிப்பிணித்ததுவயிரத்தோளை. (ககக)

மற்றையோர்தமையுமெல்லாம்வாளெயிற்றரவம்வந்து
சுற்றினவயிரத்தூணின்மலையினிற்பெரியதோள்கள்
இற்றனவிற்றவென்னவிறுக்கினவிளகாவுள்ளம்
தெற்றெறனவுடையவீரிருந்தனர்செய்வதாரார். (ககஉ)

மலையெனவெழுவர்வீழ்வர்மண்ணிடைப்புரள்வர்வானில்
தலைகளையெடுத்துநோக்கித்தழலெழவிழிப்பர்தாவி
அலகிளர்வாலாற்பாரினடிப்பர்வாய்மடிப்பராண்மைச்
சிலையவற்கிளையகோவைநோக்குவருள்ளந்தீவர். (ககங)

வீடணன்முகத்தைதோக்கிவினையுண்டேயிதனுக்கென்பர்
மூடினகங்குன்மாலையிருளினைமுனிவர்மொய்ம்பில்
ஈறெறத்தக்கபோலாநம்மெதிரென்னுவேந்தல்
ஆடகத்தோளைநோக்கிநகைசெய்வர்விழுவரஞ்சார். (ககச)

ஆரிதுதீர்க்கவல்லாரஞ்சனைபயந்தவள்ளல்
மாருதிபிழைத்தான்கொல்லோவென்றனர்மறுகிநோக்கி

---

* காலுடைச்சிறுவன்-அநுமன்.

வீரனைக்கண்டபட்டதிதுகொலாமென்றுவிம்மி
வார்கழற்றம்பிதன்மைகாணுமோவள்ளலென்பார். (ககுநி)

என்சென்றதன்னசொல்லினெறுழ்வலியரக்கனெய்தான்
மின்சென்றதன்னவானத்துருமினம்வீழ்வவென்னப்
பொன்சென்றவடிம்பின்வாளிபுகையொடுபொறியுஞ்சிந்தி
முன்சென்றமுதுகிற்பாயப்பின்சென்றமார்பமுற்ற. (ககூ)

மலைத்தலைக்காலமாரிமறித்தெறிவாடைமோதத்
தலைத்தலைமயங்கிவீழ்ந்தன்மையிற்றலைகள்சிந்தும்
கொலைத்தலைவாளிபாயுங்குன்றனகுவவுத்தோளார்
நிலைத்திலருலைந்துசாய்ந்தார்நிமிர்ந்ததுகுருதிநீத்தம். (ககஎ)

ஆயிரகோடிமேலுமம்புதலைகத்தூடு
போயினபோதுமொன்றுந்துடித்திலன்பொடித்துமானத்
தீயெரிசிதறுஞ்செங்கணஞ்சனைச்சிங்கமேனி
நாயகன்றம்பிக்குற்றதுயர்சுடநடுங்குகின்றான். (ககூஅ)

வேறுளவீரரெல்லாம்வீழ்ந்தனருருமின்வெய்ய
நூறுமாயிரமும்வாளியுடலிடைநுழையச்சோரி
ஆறுபோலொழுகவண்ணலங்கதனந்தவாளி
எறினமெய்யனேனுமிருந்தனனிடைந்திலாதான். (ககக)

கதிரவன்காதன்மைந்தன்கழலிளம்பசுங்காயன்ன
எதிரதிர்பகழிதைத்தயாக்கையனெரியுங்கண்ணன்
வெதிர்நெடுங்கானமென்னவேகின்றமனத்தன்மெய்யன்
உதிரவெங்கடலுட்டாதையுதிக்கின்றான்றனையுமொத்தான். (உ00)

வெப்பாரும்பாசம்வீக்கிவெங்கணைவஃாக்குமெய்யன்
ஒப்பாருமில்லான்றம்பியுணர்ந்திருந்தின்னலுய்ப்பான்
இப்பாசமாய்க்குமாயம்யான்வல்லெனென்பதோர்ந்தும்
அப்பாசம்வீசவாற்றுதழிந்தநல்லறிவுபோன்றான். (உ0க)

வேறு.

அம்பெலாங்கதிர்களாகவழிந்தழிந்திழியுமாகச்
செம்புனல்வெயிலிற்றோன்றத்திசையிருளிரியச்சீறிப்
பம்புபேரொளியநாகம்பற்றியவடிவத்தோடும்
உம்பர்நாடிறந்துவீழ்ந்தவொளியவனேயுமொத்தான். (உ0உ)

மயங்கினன்வள்ளறம்பிமற்றையோர்முற்றுமண்ணை
முயங்கினர்மேனியெல்லாமூடினனரக்கன்மூரித்
தயங்குபோராற்றலானுந்தன்னுடைறத்தவாளிக்
குயங்கினனுளைந்தான்வாயாலுதிரநீருமிழாநின்றான். (உ0ங)

இந்திரசித்து ராவணனாண்மையடைதல்.

சொற்றதுமுடித்தேதனையென்னுடற்சோர்வைநீக்கி
மற்றதுமுடிப்பெனென்னவெண்ணினன்மனிசன்வாழ்க்கை
இற்றதுகுரங்கின்னுயிறந்ததென்றிரண்டுபாலும்
கொற்றமங்கலங்களார்ப்பவிராவணன்கோயில்புக்கான். (உ0சு)

ஈர்க்கடைப்பகழிமாரியிலக்குவனென்னநின்ற
நீர்க்கடைமேகந்தன்னைநீங்கியுஞ்செருவினீங்கான்
வார்க்கடைமதுகைக்கொங்கைமணிக்குறுமுறுவன்மாதர்
போர்க்கடைக்கருங்கண்வாளிபுயந்தொறும்பொழியப்புக்கான். (உ0ரு)

ஐயிருகோடிசெம்பொன்மணிவிளக்கங்கையேந்தி
மையறுவானநாட்டுமாதருமற்றைநாட்டுப்
பையரவல்குலாரும்பலாண்டிசைபரவத்தங்கள்
தையலரறுகுதூவிவாழ்த்தினர்தழுவச்சார்ந்தான். (உ0சூ)

இந்திரசித்துத் தன்மாளிகையடைதல்.

தந்தையையெய்தியன்றுங்குற்றுளதன்மையெல்லாம்
சிந்தையினுணரக்கூறித்தீருதியிடர்நீயென்தாய்
கொந்தணைன்யாக்கைகொய்திறற்றிமேனுவல்வனென்னைப்
புந்தியிலனுக்கந்தீர்ப்பான்றன்னுடைக்கோயில்புக்கான். (உ0எ)

விபீடணன் புலம்புதல்.

இத்தலையின்னலுற்றவீடணனிழைப்பதோரான்
மத்துறுதயிரினுள்ளமறுகினன்மயங்குகின்றான்
அத்தலைக்கொடியனென்னையட்டிலனளியத்தேனென்
செத்திலென்வலியெனின்றேறனென்றுபோய்வையஞ்சேர்ந்தான். (உ0அ)

பாசத்தாலுநகன்றம்பிபிணிப்புண்டபடியேபட்ட
நேசத்தாரெல்லாம்வீழ்ந்தார்யாரொருதமியேனின்றேறன்
தேசத்தாரென்னையென்னென்சிந்திப்பாரென்றுதியும்
வாசத்தார்மாலைமார்பன்வாய்திறந்தரற்றலுற்றான். (உ0க)

கொல்வித்தானுடனேநின்றானென்பரோகொண்டுபோனான்
வெல்வித்தான்மகனையென்றுபகர்வரோவிளைவிற்கெல்லாம்
நல்வித்தாய்நடந்தான்முன்னேயென்பரோநயந்தோர்த்தத்தம்
கல்வித்தாய்வார்த்தையென்றுகரைவித்தானுயிரைக்கண்போல். (உக0)

போரவன்புரிந்தபோதேபொருவருவயிரத்தண்டால்
தேரொடும்புரண்டுவீழச்சிந்தியென்சிந்தைசெப்பும்
வீரமுன்றெரித்தேதனல்லேன்விளிந்திலேன்மெலிந்தேனிருந்தான்
ஆருறவாகத்தக்கேனளியத்தேனழுந்துகின்றேறன். (உகக)

ஒத்தலத்தொக்கவீடியுய்வினுமுய்வித்துள்ளம்
கைத்தலநெல்லிபோலக்காட்டிலேன்கழிந்துமில்லேன்
அத்தலக்கல்லேனியானீண்டவயமென்றடைந்துநின்ற
இத்தலக்கல்லேனல்லேனிருதலக்கொள்ளியொப்பேன். (உகஉ)

அனையனபலவும்பன்னியாகுலித்தரற்றுவானை
வினையுளபலவுஞ்செய்யத்தக்கனவீரநீயும்
நினைவிலார்போலநெஞ்சநெகிழ்திபோநீத்தியென்ன
இனையனசொல்லித்தேற்றியனலன்மற்றிதுவுஞ்சொன்னான். (உகஙு)

இலக்குமணனை நாகபாசங் கட்டியதுகேட்டு இராமன் வருந்துதல்.

நீயினிதிருத்தியான்போய்நெடியவற்குரைப்பெனென்னப்
போயினனனலன்போயப்புண்ணியன்பொலன்கொள்பாதம்
மேயினன்வணங்கியுற்றவினையெலாமியம்பிநின்றான்
ஆயிரம்பெயரினுமருந்துயர்க்கடலுளாழ்ந்தான். (உகசு)

உரைத்திலனென்றுந்தன்னையுணர்ந்திலனுயிருமோடக்
கரைத்திலன்கண்ணினீரைக்கண்டிலன்யாதுங்கண்ணல்
அரைத்திலனுலகமெல்லாமங்கையாற்பொங்கிப்பொங்கி
இரைத்திலனுளனென்றெண்ணியிருந்தனன்விம்மியேங்கி. (உகஞ)

இராமன் செருக்களமடைதல்.

விம்மினன்வெதும்பிவெய்துற்றேறங்கினனிருந்தவீரன்
இம்முறையிருந்துசெய்வதியாவதுமில்லென்றெண்ணிப்
பொம்மெனவெழுந்துநொய்திற்பொருக்கெனவிசையிற்போனன்
தெம்முறைதுறந்துவென்றசெங்களமருங்கிற்சேர்ந்தான். (உகசூ)

இருளின் தன்மை.

இழிந்தெழுகாளமேகமெறிகடலனையமற்றும்
ஒழிந்தனநீலவண்ணமுள்ளனவெல்லாமொக்கப்
பிழிந்ததுகாலமாகக்காளிமைப்பிழம்புபோதப்
பொழிந்ததுபோன்றதன்றேறபொங்கிருட்கங்குற்போர்வை. (உகள)

இராமனக்கினியாத்திரத்தாலொளியுண்டாக்குதல்.

ஆரிருளன்னதாகவாயிரநாமத்தண்ணல்
சீரியவனலித்தெய்வப்படைக்கலந்தெரிந்துவாங்கிப்
பாரியவிடுத்தலோடும்பகையிருளிரிந்துபாறச்
சூரியனுச்சியுற்றுலாத்ததவ்வுலகின்சூழல். (உகஅ)

படையுறபினைத்தின்பம்மற்பருப்பதந்துவன்றிப்பல்வே
றிடையுறுகுருதிவெள்ளத்தெறிகடலெழுநீர் * தும்பி

---

* பொங்கி என்றும் வேறுபாடமுண்டு.

உடையுறுதலைக்கையண்ணலுயிரெலாமொருங்கியுண்ணும்
கடையுறுகாலத்தாழியுலகன்னகளத்தைக்கண்டான். (உகக)

இராம னிலக்குமணனைக் காண்டல்.

பிணப்பெருங்குன்றினூடுங்குருதிநீர்பெயரப்பேரும்
நிணப்பெருஞ்சேற்றினூடும்படைக்கலநெருக்கினூடும்
மணப்பெருங்களத்தின்மோடிமங்கலவாழ்க்கைவைப்பில்
கணத்தினும்பாதிப்போதிற்றம்பியைச்சென்றுகண்டான். (உஉ0)

இராமன் புலம்புதல்.

அய்யவலைக்கைதன்மேல்விழுந்துமார்பழுந்தப்புல்லி
உய்யலனென்னவாவியுயிர்த்துயிர்த்துருகுகின்றான்
பெய்யிருதாரைக்கண்ணன்பெருந்துளிபிறங்கவானின்
வெய்யவன்றன்னைச்சேர்ந்தநீனிறமேகமொத்தான். (உஉக)

உழைக்கும்வெய்துயிர்க்குமாவியுருகும்போயுணர்வுசோரும்
இழைக்குவதறிதறேற்றானிலக்குவாவிலக்குவாவென்
றழைக்குந்தன்கையைவாயின்மூக்கின்வைத்தயர்க்குமையா
பிழைத்தியோவென்னுமெய்யேபிறந்தேதயும்பிறந்திலாதான். (உஉஉ)

தாமரைக்கையாற்றானைத்தைவருங்குறங்கைத்தட்டும்
தூமலர்க்கண்ணைநோக்குமார்பிடைத்துடிப்புண்டென்னை
ஏமுறும்விசும்பைநோக்குமெடுக்குந்தன்மார்பினேற்றும்
பூமியின்வளர்த்துங்கள்வன்போயகன்றானேவென்னும். (உஉங)

வில்லினைநோக்கும்பாசவிசிப்பினைநோக்கும்வீயா
வல்லினைநோக்கும்வானத்தமரரைநோக்கும்பாரைக்
கல்லுவென்வேரோடென்னும்பவளவாய்கறிக்குங்கற்றோர்
சொல்லினைநோக்குந்தன்போற்புகழினைநோக்குந்தேளான். (உஉச)

வீரரையெல்லாம்பார்க்கும்விதியினைப்பார்க்கும்வீரப்
பாரவெஞ்சிலையைப்பார்க்கும்பகழியைப்பார்க்கும்பாரின்
யாரிதுபட்டாரென்போலெளிவந்தவண்ணமென்னும்
*நேரிதுபெரிதென்றோதுமளவையினிமிரின்றான். (உஉஞ)

விபீடணன்இது நாகபாசத்தாலானதெனல்.

எடுத்தபோரிலங்கைவேந்தன்மைந்தனேழையேகாவுக்
கடுத்ததென்றனனவல்லையழைத்திலையமர்பாசம்
தொடுத்தகைதலையிலேறுந்துணித்துயிர்துடைக்கவென்னைக்
கெடுத்தனவீடணாநீயென்றனன்கேடிலாதான். (உஉசு)

---

*'நேரிது பெரிதென்றோது மளவையான் நிமிரின்றான்'—நேராக இது பெரிதென்று சொல்லுகின்ற அளவையினுமுயர்கின்றான்.

அவ்வுரையருளக்கேட்டானழிகின்றவரக்கன்றம்பி
இவ்வழியவன்வந்தேதற்பதறிந்திலமெதிர்ந்தபோதும்
வெவ்வழியவனேதாற்குமென்பதுவிரும்பினின்றேறன்
தெய்வவன்பாசஞ்செய்தசெயலிந்தமாயச்செய்கை. (உஉஎ)

விபீடணன் பின்னு நடந்தவைகளையுரைத்தல்.

அற்றதிகாயனுக்கைதலையிலதாக்கியாண்ட
வெற்றியனுயவீரன்மீண்டிலனிலங்கைமேனுள்
பெற்றவனெய்துமென்னும்பெற்றியையுன்னிப்பிற்போ
துற்றனன்மைந்தன்முனைநாற்பதுவெள்ளத்தோடும். (உஉஅ)

ஈண்டுநஞ்சேனைவெள்ளமிருபதிற்றிராட்டிமாளத்
தூண்டினன்பகழிமாரிதலைவர்கடொலைந்துசோர
மூண்டெழுபோரிற்பாரின்முறைறமுறைறமுடித்தான்பின்னர்
ஆண்டகையோடுமேற்றுணையிரமடங்கற்றேறரான். (உஉக)

அனுமன்மேனின்றவையனுயிரந்தேருமாயத்
தனுவலங்காட்டிப்பின்னைநாற்பதுவெள்ளத்தானை
பனியெனப்படுவித்தன்னுன்பலத்தையுந்தொலத்துப்பட்டான்
இனியெனவயிரவாளியெண்ணிலநிறத்தினெய்தான். (உஉ0)

ஏவுண்டபகுவாயோடுங்குருதிநீரிழியுயின்றூன்
தாவுண்டதானைமுற்றும்படவொருதமியன்சார்வான்
போவுண்டதென்னினையபுனர்க்குமாமாயமென்று
பாவுண்டகீர்த்தியானுக்குனர்த்தினன்பரிதிபட்டான். (உஉக)

மாயத்தாலிருண்டதாழியுலகெலாம்வஞ்சன்வானில்
போயத்தானுடையவஞ்சவரத்திறலொளித்துப்போயிவ்
வாயத்தார்பாசமேவியயர்வித்தானம்பில்வெம்பும்
காயத்தானென்னைச்சொல்லிவணங்கிறன்கலுழிக்கண்ணன். (உஉஉ)

விபீடணனுபாயங் கூறல்.

பின்னையுமெழுந்துபேர்த்தும்வணங்கியெம்பெருமையாரும்
இன்னுயிர்துறந்தாரல்லரிறுக்கியபாசமிற்றூல்
புன்னுனைப்பகழிக்கோயுந்தரத்தோபுலம்பியென்னை
இன்னலுற்றயரல்வெல்லாதருமத்தைப்பாவமென்றூன். (உஉங)

நாகபாசத்தின் வரலாறு கூறுதல்.

யாரிதுகொடுத்ததேவனென்னையீதினைத்தீரும்
காரணம்யாதுநின்னுலுணர்ந்ததுகழறிக்காணென்
றூரியன்வினவவண்ணல்வீடணனமலசாலச்
சீரிதென்றதனையுள்ளபரிசெலாந்தெரியச்சொன்னான். (உஉச)

ஆழியஞ்செல்வபண்டிங்ககலிடமளித்தவண்ணல்
வேழ்வியிற்படைத்ததீசன்வேண்டினன்பெற்றுவெற்றித்
தாழ்வுறுசிந்தையோற்குத்தவத்திலைலளித்ததாணை
ஊழியினிமிர்ந்தகாலத்துருமினதூற்றமீதால். (உகஙி)

அன்னதலைற்றலன்றேறயாயிரங்கண்ணிலுனைப்
பின்னுறவயிரத்திண்டோள்பிணித்ததுபெயர்த்தென்றெண்ணி
என்னினியநுமன்றூளையிறுக்கியதிதலைலாண்டும்
பொன்னுலகாளுஞ்செல்வந்துறந்ததுபுலவோரெல்லாம். (உகசு)

தான்விடின்விடுமிதென்றேறசதுமுகன்முதல்வராய
வான்விடின்விடாதுமற்றிம்மண்ணினையெண்ணியென்னே
ஊன்விடவுயிர்போய்நீங்கநீங்கும்வேறுய்தியில்லத்
தேன்விடுதுளபத்தாராயிதுவிதன்செய்கையென்றான். (உகஎ)

ஈய்ந்துளதேவர்மேலையெழுகெலைவுலகம்யாவும்
தீய்ந்துகநூறியாளுந்தீர்கெலைவிலங்கைசிந்தப்
பாய்ந்தவர்சுற்றமுற்றும்படுப்பெலைவியன்றபண்போ
டேய்ந்ததுபகர்திபென்றுனிமையவரிடுக்கண்டீர்ப்பான். (உகஅ)

வரங்கொடுத்தினையபாசம்வழங்கிலன்தானைநேர்வந்
திரங்கிடத்தக்கதுண்டேலிகழ்கிலெனில்லையென்னின்
உரங்கெடுத்துலகமூன்றுமொருவலைரம்பிற்சுட்ட
புரங்களிற்றீத்துக்காண்பென்பொடியொருகடிகைப்போழ்தின். (உகஙி)

எம்பியேயிறக்குமென்னினெனக்கினியிலங்கைவேந்தன்
தம்பியேபுகழ்தானென்னபழியென்னையறந்தானென்ன
நம்பியேயென்னைச்சேர்ந்தநண்பரினல்லவாமேல்
உம்பருமுலகத்துள்ளவுயிர்களுமுதவிபார்த்தால். (உகo)

என்றுகொண்டியம்பியீண்டிங்கொருவனிங்கிடுக்கண்செய்ய
வென்றருமுலகைமாய்த்தல்வியன்றூலென்றுவிம்மி
நின்றுநின்றுன்னியுன்னிநெடிதுயிர்த்தலக்கணுற்றான்
தன்றுணைத்தம்பிமேலுந் † துணைவர்மேற்றூழ்ந்தவன்பான். (உகக)

மீட்டும்வந்தினையவீரன்வெற்பன்னவிசயத்தோளைப்
பூட்டுறுபாசந்தன்னைப்பன்முறைபுரிந்துநோக்கி
வீட்டியதென்னிற்பின்னைவீவெனென்றெண்ணுமேவதத்
தோட்டியின்றொடக்கினிற்குந்துணைக்கைமால்யானையன்றான். (உகஉ)

---

† துணைவர்-வானரவீரர்.

பெரியதிருவடிதோத்திரம்.

இத்தன்மையெய்துமளவின்கண்வந்தவிமையோர்களஞ்சியிதுபோய்
எத்தன்மையெய்திமுடியுங்கொலென்றுகுலகின்றவெல்லையிதன்வாய்
அத்தன்மைகண்டுபுடைநின்றவண்ணல்கலுழன்றனன்பின்மிசையால்
சித்தந்நடுங்கியிதுதீரமெள்ளவிருளூடுவந்துதெரிவான்.

இதன்பதப்பொருள்.

இத்தன்மை – இவ்வண்ணம்; எய்துமளவின்கண் – நடக்குங்காலத்தில்; வந்த – இராமாநுஜன் விறல்காணவுற்ற, இமையோர்கள் – பிரமவுருத்திரேந்திராதிதேவர்கள், அஞ்சி – பயந்து; இது – இக்கோபம், போய் – மிகுந்து, எத்தன்மை – எவ்விதமாய், எய்தி – நடந்து, முடியுங்கொலென – ஆறுமோவென்று, குலகின்ற – நடுங்குகின்ற, எல்லை – சமயமாகிய. இதன்வாய் – இத்தருணத்தில், அத்தன்மை – அந்தப் பிரகாரத்தை, கண்டு – பார்த்து, புடை – பக்கத்திலே, நின்ற – நில்லாநின்ற, அண்ணல்கலுழன் – பெருமாளுடைய பெரியதிருவடி, தன் – பெருமாளுடைய, அன்பின் மிசையால் – பிரியத்தின்மிகுதியால், சித்தம் – மனது, நடுங்கி – கலங்கி, இது – இத்தத்துயரம், தீர – நீங்க, மெள்ள – பைய, இருளூடு – அந்தகாரத்திலுள்ளே, வந்துதெரிவான் – தோன்றிவிளங்குகிறான்,—என்றவாறு.

இதுமுதலெட்டுப்பாட்டும் குளகம். இதன்கருத்து பெரியதிருவடிகள் வருமாறும் பெருமாளைக்கண்டுதொழுமாறுந் துதிக்குமாறுங்கூறுகின்றது. பதப்பொருள் கீழுரைத்தாங்குரைக்க. காட்டு கோயில்கடோறும் பெரியதிருவடியைபுறப்பாட்டிற்சேவித்து நடத்தல் – நிற்றல் – கைகுவித்தல் – பணிதல் – மொழிதல்களைப் பாவித்துக்காண்க. இனிவிடைகூறவே விளுவும் விளங்குமாகலானவ்விரண்டு முள்ளுறுத்திக்கூறுகின்றும். மறைந்துவந்த நியாமகனைத்தொடர்ந்தடிமைசெய்யக்கடவ நியாமியங்களு மறைந்துநின்றமையாற் புடைநின்றவண்ணல்கலுழனென்றான்.()

அசையாதசிந்தையரவாலனுங்கவழியாதவுள்ளமழிவான்
இசையாவிலங்கையரசோடுமண்ணலருளின்மைகண்டுநயவான்
விசையாலனுங்கவடமேருவையமொளியால்விளங்கவிமையாத்
திசையானைகண்கண்முகிழாவொடுங்கநிறைகால்வழங்குசிறையான்.

இ-ள். அசையாத – கலங்காத, சிந்தை – மனம், அரவால் – நாகபாசத்தாலே, அனுங்க-பெருமாள்கலங்க, (அதுகண்டு)அழியாத-நடுங்காத, உள்ளம்-மனம், அழிவான்-நடுங்குவானாய், இசையா-சரணாகதிக்குடன்படாத, இலங்கையரசோடும்-இராவணன்முதலிய யாவர்விஷயத்திலும், அண்ணல் - பெருமாள்,அருளின்மை-அருளின்றிக்கோபங்கொள்ளுதலை, கண்டும் – பார்த்தும், நயவான்-விரும்பாதவனாய், விசையால் – வேகத்தாலே, அனுங்கவடமேரு – மேருமலகுலைபவும், வையம் – உலகமெல்

லாம், ஒளியால் – காந்தியால், விளங்க – பிரகாசிக்கவும், இமையா–நிமை யாத; திசையானை – திக்காணைகள், கண்கள் – விழிகள், முகிழா – மூடி, ஒடுங்க – பதுங்கவும், நிறை – நிரம்பிய, கால் – காற்றை, வழங்கு – தரு கின்ற, சிறையான் – இறகையுடையவனுய்;—எ–று.

கலங்காத திருவுள்ளம் பெருமாள் கலங்கக்கண்டு திருவடி தானுங் கலங்கினனென்றார். இசையா விலங்கையரசோடுமென்ற தெச்சவும்மை யாகலான் யாவர் விஷயத்திலுமென்றும். (உசச)

காதங்கள்கோடிகடைசென்றுகாணுநயனங்கள்வாரிகலுழக்
கேதங்கள்கூரவயர்கின்றவள்ளறிருமேனிகண்டுகிளர்வான்
சீதங்கொள்வேலையலைசிந்தஞாலமிருள்சிந்தவந்தசிறையான்
வேதங்கள்பாடவுலகங்கள்யாவும்வினைசிந்தநாகமெலிய.

இ-ள். காதங்கள் கோடி – கோடிகாதத்தின், கடைசென்று-எல்லை யளவுஞ்சென்று, காணும்–அங்குள்ளனவற்றையுந் தெரியத்தக்க, நயனங் கள் – கண்களிலே, வாரி – ஊறிவருகிறநீர், கலுழ – சிந்தவும், கேதங் கள்கூர – துக்கமிகுதியாக, அயர்கின்ற – சோர்ந்து கிடக்கிற, வள்ளல்-பரமோதாரராகிய பெருமாளுடைய, திருமேனி – திவ்விய மங்கள விக் கிரகத்தை, கண்டு – பார்த்து, கிளர்வான் – பூரித்தவனுய், சீதங்கொள்-குளிர்ச்சியைக்கொண்ட, வேலை – சமுத்திரமானது, அலை-தரங்கங்களை, சிந்த – மிகுத்து வீசவும், ஞாலம் – உலகத்தை மூடிய, இருள் – அந்த காரம், சிந்த – சிதறிவிலகவும், வந்த – விளங்கி வருகிற, சிறையான் – இறகினுலே, வேதங்கள் – வேதகானங்களை, பாட – கோஷிக்கவும், உலகங்கள் யாவும் – எல்லாவுலகங்களும், வினை – பாவங்களை; சிந்த-நீங் கவும், நாகம் – பிடித்திருக்கிற நாகபாசம், மெலிய – தளரவும்;—எ–று.

இருக்கசுச்சாமவதருவச் சிறையாகலா னச்சிறகொலியான் வேதங் கள் பாடவென்றார். (உசந)

அல்லைச்சுருட்டிவெயிலைப்பரப்பியகலாசையெங்குமழியா
வில்லைச்செலுத்திநிலவைத்திரட்டிவிரிகின்றசோதிமிளிர
எல்லைக்குயிற்றியெரிகின்றமோலியிடைநின்றமேருவெனுமத்
தொல்லைப்பொருப்பின்மிசையேயிளங்குசுடரோனின்மும்மைசுடர.

இ-ள். அல்லை – இருளை, சுருட்டி – இறகடிக்கொள்ளுதலாலே சுரு ளப்பண்ணியும், வெயிலை – சூரியகிரணத்தை, பரப்பி – பொன்னொளி யாலே விரித்து, அகல் – அகன்ற, ஆசையெங்கும் – திக்குகளெல்லாம், அழியா – சேதியாத, வில்லை – மூக்கின் வளைவாகிற வில்லொளியை, செலுத்தி – ஒதுங்கப்பண்ணியும், நிலவை – சந்திரனை, திரட்டி–கண்டத் தொளியாலே திரளப்பண்ணியும், விரிகின்ற – அச்சந்திரனிழலிருந்து மிகாநிற்கிற, சோதி – சந்திரிகை, மிளிர – விளங்கவும், எல்லை – சூரிய னொளியை, குயிற்றி – சேரப்பண்ணி, எரிகின்ற – காந்துகின்ற,

மோலி – கிரீடமானது, இடைநின்ற – உலக நடிவிலே நில்லா நிற்கிற, மேருவெனும் – வடமேரு வென்கிற, அ – அந்த, தொல்லை – பழமையான, பொருப்பின்மிசையே – மலையின்மேலே, விளங்கு – பிர காசியாநின்ற, சுடரோனின் – சூரியனைப்பார்க்கிலும், மும்மை – மும் மடங்கு, சுடர் – விளங்க;—எ-று.

தோன்றிமறையும் வானவில்லைப்போலாது அழியாவில்லென்றது வேற்றுமையணி. விற்போல் வளைந்தழுக்கை வில்லென்றதும் நிலவைப் போலுங் கண்டத்தொளியை நிலவென்றது முருவகவுயர்வு நவிற்சியணி கள். செலுத்தலும் திரட்டலும் அதனதன் பிரதிபிம்பத்தை. மோலிசுட ரோனின் மும்மைசுடரவென்ற தெதிர்நிலையணி. பெரிய திருவடியை யிடைநின்ற மேருவெனு மத்தொல்லைப் பொருப்பென்ற துருவகவுயர்வு நவிற்சியணி. ஆகவே வில்லுநிலவுஞ் சுடரோனுமொருகாலத்தின் மேரு மிசை தொடரச்செய்தது தொடர்புயர்வு நவிற்சியணி. (உசசு)

நன்பால்விளங்குமணிகோடியோடுநளிர்போதுசெம்பொன்முதலாத்
தன்பாலினையந்தநிழல்கொண்டமைந்ததழுவாதுவந்துதழுவ
மின்பாலியன்றதொருகுன்றம்வானின்மிளிர்கின்றதென்னவெயிலோன்
தென்பாலெழுந்துவடபானிமிர்ந்துவருகின்றசெய்கைதெரிய.

இ-ள். நன்பால் – கண்டத் தொளியாகிய பரிசுத்த வெள்ளையில், விளங்கும் – விளங்காநின்ற, மணிகோடியோடு – கோடி அரதகக்கோ வை மாலையோடு, நளிர் – பிரகாசியாநின்ற, போது – புட்ப மாலையும், செம்பொன் – சிவந்த பொன்னரிமாலையும், முதலா – ஆதியாகிய, தன் பால் – அம்மாலைகளிடத்து, இயைந்த – தனித்தனியே பொருந்திய, நிழல்கொண்டு – பிரபைகளைக் கொண்டு, அமைந்த – உண்டாகியவை, தழுவாது – மார்பிலே பொருந்தாமல், வந்து – அம்மாலைகளாய்த்தோ ன்றி, தழுவ – பொருந்தவும், மின்பால் – ஒளிவிடும் பகுதிகளெல்லாம், இயைந்தது – கூடியதாகிய, ஒருகுன்றம் – ஒருநெடியமலை, வானின்- ஆகாயத்தினின்றும், விழுகின்றதென்ன – இறங்குவதுபோல, வெயி லோன் – சூரியன், தென்பால் – தென்றிசையில், எழுந்து – உதயமாகி, வடபால் – வடதிசைநோக்கி, நிமிர்ந்து – மேலெழுந்து, வருகின்ற – வாராநிற்கிற, செய்கைதெரிய–நூதனவிசேஷமாய்த்தோன்றவும்;-எ-று.

பொன்னரிமாலை – என்பது – பொன்வண்டுமாலை.

பால்போலுங் கண்டத் தொளியைப் பாலென்ற துருவகவுயர்வு நவிற்சியணி. மணியாலும் பூவாலும் பொன்னாலுமாகிய மாலைகளைத் தழுவாதென்றது அதனதன் பிரதிபிம்பத்தை. தழுவவென்றது அம் மாலைகளை. மின்பாலியைந்த தொருகுன்ற மென்னவென்றது பண்புவ மை. அம்மாலைகளது தொங்குதலை குன்றம் வானின் விழுகின்றதென் னவென்றது தொழிலுவமை. தகுதிபற்றி விழுகின்றதென்றதற்கியை யத் தொங்குதலைவருவிக்க. கீழ்ப்பாட்டிலுரைத்தாமென்ற வுத்தியான்

மோலியாகிய சூரியன் மின்பாலினையந்த தொருகுன்றமாகிய வுதயகிரியி லே தென்றிசையிலுதித்து வடதிசைமேற் செல்வதாகச்செய்தது தொ டர்புயர்வு நவிற்சி. உதயகிரியென்னது மின்பாலினையந்ததொரு குன்ற மென்றதும், மோலியென்னது வெயிலோனென்றதும் உருவகவுயர்வு நவிற்சி. மொழிந்தபொருளோடென்ற வவ்வயின் மொழியாததனையு முட்டின்று முடித்தலென்னு முத்தியால் உதயகிரிக்குந் தென்றிசைக்கும் வெயிலோனுக்கு மியையப் பெரியதிருவடி தலையாகிய தேர்மேலென்று கொள்வது முருவகவுயர்வு நவிற்சி. (உசுள)

பன்னகர்சென்னிமணிகோடிகோடிபலகொண்டுசெய்தவகையால்
மின்னலியன்றதனலாய்வினங்குமிளிர்பூண்வயங்கும்வெயில்கால்
பொன்னலியன்றநகையோடைபொங்கவனமாலைமார்புபுரளத்
தொன்னள்பிரிந்ததுயர்தீரவண்ணறிருமேனிகண்டுதொழுவான்.

இ-ள். பன்னகர் – பலநாகங்களுக்குஞ் சிரேஷ்டர்களுடைய, சென்னிமணி – சிரோரத்திநங்களை, கோடிகோடி – உச்சியினின்றும் உச்சியி னின்றும், பல – அநேகமாக; கொண்டு – சித்ததடித்து, செய்தவகை யால் – இழைத்தவகுப்புகளாலே, மின்னல் – மின்னலைக்கொண்டு, இய ன்றது – செய்தது, எனலாய் – என்று சொல்லும்படியாய்; விளங்கும்- பிரகாசியாநின்ற, மிளிர் – காந்தியையுடைய, பூண் – ஆபரணங்களும், வயங்கும் – பிரகாசியாநின்ற, வெயில் – சூரியப்பிரபையை, கால் – கக்கு கின்ற, பொன்னல் – சுவர்ணத்தால், இயன்ற – செய்த, நகை – விளங்கு தலையுடைய, ஓடை – நெற்றிப்பட்டமும், பொங்க – பிரகாசிக்கவும்;வன மாலை – துளசிமணிமாலை, மார்பு – மார்பின்கண்ணே, புரள – அசைய வும்,| தொன்னள் – ஆதிகாலத்தில், பிரிந்த – நீங்கலாகிய, துயர் – கிலே சம், தீர – போக, அண்ணல் – பெருமாளுடைய, திருமேனி – திவ்விய மங்கள விக்கிரகத்தை, கண்டு – பார்த்து, தொழுவான் – கைகுவிப்பா னாய்,—எ-று.

கோடிகோடி யென்பவற்றி லுந்தனுருபுகடொக்கன. இவ்வதிக்கு மொழி பலவுச்சிகளைக் குறிப்பிக்கின்றது. பலகொண்டென் றமையால் பூண் – ஓடை – மாலை – என்பவற்றி லெண்ணும்மைக டொக்கன. ()

முடிமேனிமிர்ந்தமுகிழ்றுகையன்முகின்மேனிமிர்ந்தவொளியான்
அடிமேல்விழுந்துபணியாமனின்றநிலையுன்னியுன்னியழிவான்
கொடிமேலிருந்திவ்வுலகேழுடனேழுதாழநின்றகோளுமிலையப்
படிமேலெழுந்துவருவான்விரைந்துபலகாலினைந்துபணிவான்.

இ-ள். முடிமேல் – உச்சிக்குமேலே, நிமிர்ந்த – உயர்ந்த, முகிழ்று- குவித்தலைக்கொண்ட, கையன் – கரங்களையுடையவனுய், முகின்மேல்- மேகத்தைக்காட்டிலும், நிமிர்ந்த – அதிகமான, ஒளியான் – சாமளவர்ண த்தையுடைய பெருமாளுடைய, அடிமேல் – திருவடியின்கீழே, விழுந்து பணியாமல் – சாஷ்டாங்கதண்டஞ்சமர்ப்பியாமல், நின்று – நின்றுகொ ண்டு, அந்நிலை – சோகித்துக்கிடக்கிற வந்தச்சுபாவத்தை, உன்னி

யுன்னி – நினைத்து நினைத்து, அழிவான் – தளர்வாளுய், கொடிமேல்-துவசத்தின்மேல், இருந்து -- வாசம்பண்ணி, இ – இந்த, உலகேழா டேழு – பதிணுலுலகமும் தொழ – வணங்குதல்செய்ய, நின்றகோளும்-நில்லாநின்றகொள்கையும், இலஞய் – இல்லாதவஞய், படிமேல் – பூமியின் கண்ணே, எழுந்து – எழுந்தருளி, வருவான்விரைந்து – விரைந்து கடப்பவஞய், பலகால் – அநேகவிதமாய், நினைந்து – எண்ணியெண்ணி, பணிவான் – வணங்குவாஞய்;—எ-று.

தெரிவான் முதற்றெழுவானிறுதியாகிய மூற்றுக்களெச்சமாய் முகிழ்றுகையஞய்ப் பணியலாயினன் எனக்கூட்டுக. (உசுக)

வந்தான்மறைந்துபிரிவால்வருந்துமலர்மேலயன்றன்முதலோர்
தந்தாதைதாதையிறைவாமறைந்துவிளையாடுகின்றதனியோய்
சிந்தாகுலங்கள்களைவாய்தளர்ந்துதுயர்கூரலென்னசெயலோ
எந்தாய்வருந்தலுடையாய்வருந்தலெனவின்னபன்னிமொழிவான்.

இ-ள். வந்தான்மறைந்து – மறைந்துவந்தானென்றபடி., (இனிச்சொல்லாமல் வந்தால்) பிரிவால் – பிரிவாற்றுமையாலே, வருந்தும்-நோவையடைவான், (யாரென்றூல்) மலர்மேல் – பூமேலிருக்கிற, அயன் – நான்முகன்,; தன் – தனக்கு, முதலோர் – பூருவராகிய நித்தியசூரிகள், தம்-தமக்கு, தாதை – காரணராகிய சேனையர்கோனுக்கு, தாதை – பிரதானராகிய, (திருவநந்தாழ்வான் மறைந்துவந்தால் வருந்துமென்றய்வயம்) இறைவா - பரமபுருஷனே, மறைந்து – எனக்குரையாது, விளையாடுகின்ற – லீலைசெய்கின்ற, தனியோய் – ஒப்பற்றவனே, சிந்தாகுலங்கள்-மனக்கிலேசங்களை, களைவாய் – எல்லாருக்கும் போக்குகிறவனே, தளர்ந்து – மெலிந்து, துயர்கூரல் – துக்கத்தழுந்துதல், என்னசெயலோ-யாதுகாரணமோ, எந்தாய் – என்சுவாமியே, வருந்தல் – நோவுபடாதை, உடையாய் – சர்வசுவாமியே, வருந்தல் – நோவுபடாதை, என – என்று, இன்ன – இவ்விதங்களாய். பன்னி – பிரலாபித்து, மொழிவான் – துதிக்கத் தொடங்குவான்;—எ-று.

தாதையென்றது மகனெனுங் காரியம்பிறக்கக் காரணமாயினனை யாகலா லயனுக்குக்காரணமாயினர் நித்தியசூரிகளாகவும், அவருக்குக் காரணஞ் சேனையர்கோனுகவும், அவருக்குக்காரணங் கருடனுகிய தாமாயிருக்க னைச்சியாநுசந்தானத்தாற் றம்மைக்கூறுது திருவநந்தாழ்வானைக் கூறினரென்று கொள்க. அண்ணல்கலுழனென்னு மெழுவாய் பணிவாஞய் மொழிவானென்னும் பயனிலைகொண்டது. இனிவரும் பாட்டுகளுக்குக் கருத்து முதலியனவந்தும் பொருள்விளக்க வேண்டியவாறே யெழுதுகின்றமையாலாங்காங்குணர்க. இருக்கெசுச்சாம வதரு வச்சிறையென்றது சிறையையுடையனென்றருகுபெயராய் சிரஞ்சேதனமென்கிற செய்யுளிற் காண்க. (உஙo)

தேவாதிதேவர்பலராலுமுந்துதிருநாமமோதுசெயலோய்
மூவாதகாளருமுலகேழாடேழுமாசாளுமேன்மைமுதல்வா

மேவாதவின்பமவைமேவிமேவநெடுவீடுகோட்டமுடியாய்
ஆவாய்வருந்தியழிவாய்கொலாரிவ்வதிரேகமாயையறிவார்.

இதில் வீற்றிருந் தேழுலகுந் தனிக்கோல்செல்ல வீவில் சீராற்றன் மிக்காளுமம்மானே வருந்தாதையென்கிறார்.

இ-ள். தேவு – சேனையர்கோனே, ஆதி – முதலாகவுடைய, தேவர்-நித்தியசூரிகள், பலராலும் – அநேகராலும், முந்து – ஆரம்பத்திலே, திருநாமம் – ஹரிஃ என்கிற திருநாமத்தைக்கொண்டு, ஓது – துதிக்கத் தக்க, செயலோய் – செய்கையையுடையவனே; மூவரது – தேவ மனித திரியக்குத் தாவரமாம் யாவையுங்கெடாமல், அந்நாளும் – உட்கொண்ட அக்காலத்திலும், உலகு – உலகங்கள்; எழொடேழும் – பதினெலும், அரசு – தனிக்கோல்வழியே, ஆளும் – செல்லநடாத்துகிற, மேன்மை-மேம்பாட்டையுடைய, முதல்வா – காரணபூதனே, மேவாத – மானிடராகவரலரிதாகிய, இன்பம் – ஆநந்தங்கள், அவை – அப்பதினென்றும், மேவி - அடைந்து, மேவு – பின்படையத்தக்க, அந்நெடுவீடு – அவ்வின் பங்களினெடியவின்பத்தை, காட்டு – காட்டுதற்கிடமான, அம் – அழகிய, முடியாய் – பதினெலுலகுக்குந் தலையான திருநாட்டையுடையவனே, ஆவாய் – இங்குநின்ற நிலையிலுமாகுமவன், வருந்தி – இங்ஙனேநோவுபட்டு, அழிவாய்கொல் – கலங்குமவனே; ஆர் – மயர்வறமதிநலமருளப் பெறுதாரில் யாவர், இவ் – கலங்காதவன் கலங்குதலாகியவிந்த, அதிரேகமாயை – மகாமாயையை, அறிவார் – அறியத்தக்கவர், ஒருவருமறியா ரென்றபடி;—எ-று.

நாளுமென்றவும்மையா லுட்கொள்ளாத காலத்திலு மாசாளுகை தானேபோதரும். உருத்திரனுக் கந்தரியாமியாய்நின் றுயிர்வாழ்த்தற் கிடமாகிய பூதவுடம்பைப்பிரித்தபோ தவ்வுடம்பழிதல்பற்றி அழித்தலு மோர்செய்கையென்னும் பிறர்தம்மதமேற்கொண்டுகளைந்து தாளட்டித் தனது நிறுப்பாலுண்டபோது முண்ணுதபோதும் அரசாளுகை தவிரா னென்கிறார். இதுபற்றியன்றே கடவுள்வாழ்த்தில் உலகம் யாவையுந் தாமுளவாக்கலு நிலைபெறுத்தலு நீக்கலுமென்றது. மனிதன் மனித கந்தருவன் றேவகந்தருவன் பிதிர்கருமத் தேவன்றனுடன்ன சுரன்சுர னிந்திரனைசானும் பிரசாபதியாதேன் கனகன் விராட்டிரணிய கர்ப்பன் முறைகருதுமிப் பதினெருபேர்கள் பினவானந்தங்களுரையாம்பிரளய வெள்ளக்கடல் பிரமாநந்தம் என்னுமிப்பாட்டானே உயர்வறவுயர்நல மென்றுகொள்க. மனிதவின்பந்தொடங்கி மலரோனின்பங்காறு மொ வ்வொன்றுக விட்டடையுமின்பத்தை வீடென்றதாகுபெயர். மேவகாட் டவனைப் பெயரெச்சங்களாகவும், உயர்வறவுயர்நலத்தைக் காட்டுகின்ற திருநாட்டை முதலியாகவும், அதனீற்றயலெதிர் மறையாகாரமாகவு மயங் ககக்கூறுதல் குற்றமன்றே வென்னிலன்று; தேவாதியென்று தொடங் கிப கீழுவமருவாயென்று நடத்துகிற மேலுநோக்கி எற்புழியறிந்திதற்

கிவ்வகையாமெனத்தகும் வகைசெலுத்துதறந்திரவுத்தி யென்கிறபடியே யுய்த்துணர்கவென்பார் ஆழமுடைத்தாதலாகிய வழகுதோன்றக் கூறினர். இங்ஙனங் கூறுகின்ற வெல்லாங் கம்பசூத்திரமென்பது நாடகவழக்கு சித்திரமெனவுங் கூறுப. (உருக)

எழுவாயெவர்க்குமுதலாகியீறெடையாகியெங்குமுளாயாய்
வழுவாதவர்க்கும்வரமீயவல்லையவரால்வரங்கள்பெறுவாய்
தொழுவாயுணர்ச்சிதொடராததன்மையுருவாய்மறைந்துதுயரால்
அழுவாயொருத்தனுளேபோலுமாரிவ்வதிரேகமாயையறிவார்.

கீழே பரத்துவங்கூறி யிதிலே வியூகமும் அந்தரியாமித்துவமும் விபவமுங் கூறத்தொடங்கி எகமூர்த்தி யிருமூர்த்தி மூன்றுமூர்த்தி பல மூர்த்தியாகி யைந்துபூதமா யிரண்டுசுடராயருவாகி நாகமேறி நடுக்கடலுட்டுயின்ற நாராயணனே வருந்தாதை யென்கிறார்.

இ-ள். எழுவாய் – பாற்கடலில் வாசுதேவரை யெழுந்தருளுவாய், எவர்க்கும் – எவ்வகைமெம்பாட்டோருக்கும், முதலாகி – ஆக்குங்காரணனுமாய், ஈறெடு – நீக்குங்காரணனுதலோடு, இடையாகி – காக்குங்காரணனுமாயெழுவாயென்றந்வயம். எங்கும் – கரந்தசிலிடந்தொறு மிடந்திகழ் பொருடொறும், உளையாய் – வியாபிக்குமவனுய், வழுவாது – தப்பாமல், அவர்க்கும் – அந்த மூவருக்கும், வரம் – வேண்டுமவைகள, ஈயவல்லை – கொடுக்கமாட்டுவை, அவரால் – அந்த மூவராலும், வரங்கள்-வேண்டுமவைகள, பெறுவாய் – பிரமாவிஷ்ணுருத்திரர்களாகிக் கொள்ளுவாய், தொழுவாய் – இந்திராதிதேவர்களாய் வணங்குவாய்; உணர்ச்சி – மெய்யுணர்வை, தொடராது – பொருந்தாமல் பிரமாதிகளைத் தொழுவாயென்றந்வயம், அது – அந்த மெய்யுணர்வை, அன்மை – அல்லாத வையந்திரிபறியாமைகளையுடைய, உருவாய் – மனிதவடிவாகி, மறைந்து – தெரியாதவனுய், துயரால் – துன்பத்தாலே, அழுவாய்-அழுமவனுய், ஒருத்தன் – இராமனென்னுமொப்பற்றவனுய், உள – உளனுகிறுய், போலும் – முன்னிலையசை, ஆர் – எவர், இ – இந்த, அதிரேகம்-பெரிதாகிய, மாயை – மயக்கத்தை, அறிவார் – தெரிகிறவர், இப்படிப்பட்ட மகாமாயையை யறிவாரார்;—எ-று.

ஆமோத – பிரமோத – சம்மோதமென்கிற மூன்றுலகங்களிலும் சங்கருஷ்ணப் பிரத்யும்நாநிருத்தர்களாயெழுந்தருளி யிருக்கிறார்க ளென்பது சித்தாந்தமாகலாற் பிரமாதி மூவர்க்குரிய மூத்தொழிற்குங் காரணமாக வம்மூவரையுங் கூறினராயிற்று. வரங்கள் பெறுவாயென்றதனுலே அம்மூவரதருக்கிரகத்தாலிம்மூவரு மூத்தொழிற்குரியராயினு ரென்றுயிற்று. இப்பாட்டுமிகைபடக்கூறுது சுருங்கச்சொல்லென்னு மழகுகுன்றக்கூறலன்று மேல்விளங்கவைத்தலால். (உருஉ)

உன்னெக்கவைத்தவிருவர்க்குமொத்தியொருவர்க்குமுண்மையுரையாய்
முன்னெக்கநிற்றியுலகொக்கவொத்திமுடிவொக்கினென்றுமுடியாய்

என்னெக்குமின்னசெயலோவிதென்னிலிருளொக்குமென்றுவிடியாய்
அந்நொப்பமேகொல்பிறிதேதகொலாரிவ்வதிரேகமாயையறிவார்.

கீழே வைகுந்தத்திற் பரவாசுதேவனென்றேகமூர்த்தி பாற்கடலில் வாசுதேவனே டிருமூர்த்தி மூன்றுமூர்த்தி பலமூர்த்தியென்று ராதியிலே மூன்றுமூர்த்தி பலமூர்த்தியென்றதை யநுவாதித் தைந்துபூதமாயிரண்டுசுடரா யருவானவனே வருந்தாதையென்கிறார்.

இ-ள். உன் – விஷ்ணுவாகிய உன்னோடு, ஒக்க – கூட்டியென்ன, வைத்த – நிறுத்திய, இருவர்க்கும் – பிரமருத்திரர்க்கும், ஒத்தி – வியாபகத்தி லொத்திருக்கிறாய், ஒருவர்க்கும் – இருவரிலொருவருக்காயினும், உண்மை – (எல்லாநாராயணனேயென்கிற) மெய்யுணர்ச்சியை, உரையாய் – தெரியப்படுத்தாய், மூன் – இம்மூவருக்குமுன்பே, ஒக்க-விஷ்ணுவவதரித்தானென்பதற்கியைய, நிற்றி – இராமனாய் நிற்கிறாய், உலகுஐந்துபூதமிரண்டுசுடரென்பதற்கு, ஒக்க – இயைய, ஒத்தி – வியாபகத்திலொத்திருக்கிறாய், முடிவு – இந்தலீலாவிபூதியடங்கலும், ஒக்கின் – இருமூர்த்தியு மேகமூர்த்தியேயென்று கலக்குமிடத்தில், ஒன்றும் – பொருந்துதற்கிடமான, முடியாய் – திருநாடாகிய நித்தியவிபூதிநாதனே, என்யாதொன்று, ஒக்கும் – இப்படியெல்லாவற்றிலும் வியாபித்திருக்கும், இன்ன – இப்படிப்பட்ட, செயலோ – செய்கைதானே, இது – இந்த வியாபகவஸ்து, என்னில் – என்றுராயப்புக்கால், இருள் – அந்தகாரத்தை, ஒக்கும் – ஒத்து விளங்காதிருக்கும், (இது இன்னசெயலோ என்னெக்குமென்னி லிருளொக்குமென் றந்வயம்) என்று – சூரியன்போல, விடியாய் – விளக்கமாகாய், (இரண்டு சுடரென்பதில்லையெனின்-இருளென்பதில் மதிதோன்றி யென்றி லடங்கினதற் கொண்சுடரிரவியிடத்தினிற் றிங்கடொறுமினிதுறவு செய்குவதேயென்பதனுற் காண்க.) அந்நொப்பமே – எங்குமுளனெயென் றங்குச்சொன்னநொப்பமே, (மங்கியவருவாநொப்பமுந்தீயே) பிறிதே – வேறொன்று அன்று, இரண்டுகொல்லுமனைசுலை, நொப்பத்தினேகாரந் தேற்றம், பிறிதினேகாரம் வினை, முடிவொக்கினென்பதில் ஏழனுருபைந்தனுருபாய் மயங்கிற்று;—என்று. ()

வாணுளைளித்திமுடியாமனீதிவருநாளுநிற்றிமறையோய்
பேணியுனக்கொர்பொருள்வேண்டுமென்றுபெறுவானருத்திபிழையாய்
ஊணையுயிர்க்குமுயிராகிநிற்றியுணர்வாயபெண்ணினுருவாய்
ஆணுமற்றுமலியாகியாரிவ்வதிரேகமாயையறிவார்.

இதில் ஆய பதப்பொருளைக்கூறிக் கீழே எல்லாநாராயணனே யென்றதைத் திருவஷ்டாந்தரத்தாற்கூறி வருந்தாதையென்கிறார்.

இ-ள். வாழ்நாள் – உடம்போடுகூடி வாழுநாளை, அளித்தி – கொடுக்கிறாய், முடியாமல் – தீராமல், (நீங்காது பந்தத்தைக் கொடுக்கிறாயென்றுயிற்று.) நீதி – சிங்காமைவிரித்தவறநூலின்வழியே, வருநாளும்-

அடையுங்காலத்திலும், நிற்றி வீட்டையுந் தந்துநிற்கிறாய், மறையோய்-வேதவிளக்கே, பேணுய் – அறம் பொரு ளின்பங்களை வேண்டினோரை விரும்பாய், உனக்கு – ஒன்றுலொன்று குறைவில்லாதவுனக்கு, ஓர்பொருள் வேண்டுமென்று – ஏதேனுமொரு பொருளையாயினுங் கருதிப்பேணுயென்றவ்வயம், (அவர்கருதிய மூன்றிலொன்றைறத்தந்து பந்தத்தில் விடுகிறுயென்று கருத்து.) பெறுவான் – கைங்காரியமாகிற பரமபுருஷார்த்தத்தை வேண்டினோரைப்பெறுதற்கு, அருத்தி – விரும்பி நிற்றலை, பிழையாய் – தவிராய், (இவ்விரண்டடியாலும் உருவோபாய புருஷார்த்தங்களின்னபடியென்றும், அதற்குத்தகுதியாகத் தலைக்கட்டுகிறுன் அர்ச்சாவதாரமாயென்றுங் கூறினுராயிற்று. தமருகந்த தெவ்வுருவமவ்வுருவந்தானே தமருகந்ததெப்பேர் மற்றப்பேர்,மாறுயினைந்த தன்பொன்னடியன்றி இவைகளாற்காண்க.) ஊணுய் – அன்னமயமாகியவுடம்பாகியும், உயிர்க்கும் – அவ்வுடம்பில்வாழு மான்மாவாகியு மவ்வான்மாவுக்கும்,உயிராகி – பரமான்மாவாகி, நிற்றி – நிற்கிறுய், (அசித்தும்-சித்தும்-ஈஸ்வரனுமாகி நிற்கிறுயென்றுயிற்று. ஆகவே அசித்தும் – சித்தும்-சரீரமாகத்தான் சரீரியாய் நிற்கிறுனென்றுகருத்து எங்ஙனே யென்னின்)உணர்வாய – இம்மூன்றையுங் காட்சியளவையாலறிதற்காகிய, பெண்ணினுருவாய் – பிராகிருதியென்றறிதற்குப் பெண்வடிவாகியும், ஆணுகி-அத்தாலே மயங்கிக்கிடக்கிற புருடனென்றறிதற் காண்வடிவாகியும், மற்று – அசைநிலை, (இவ்விரண்டுக்கும் வேறுகிய பிறிதினப்பொருள் கூறவுமாம்.) அலியாகி – பெண்டன்மையும் ஆண்டன்மையு மல்லாததுமாகி - ஊணுயுயிர்க்குமுயிராகி நிற்றியென்றநவயம். மற்றின்கணும்மையை நடுநிலைச் சொற்றீவகமாக்கி யேனையிரண்டிடத்துங்கூட்டுக. ஊணுயென்றபோதே யுயிராயென்பதுதானே போதரவேண்டியுயிர்க்கு மென்றுடனே விதந்தார் இவ்விடத்தும்மைகடொக்கன ;—எ-று. (உருசு)

தானந்தமில்லபலவெண்ணுமான்றுதனியென்ணுமான்றுதவிரா ஞானந்தொடர்ந்தசுடரென்ணுமான்றுநயனந்தொடர்ந்தவொளியால் வானந்தொடர்ந்தபதமென்ணுமுன்னமறைநாவின்வந்தமுறையால் ஆனந்தமென்ணுமயலென்ணுமாரிவ்வதிரேகமாயையறிவார்.

கீழே திருமந்திரத்தைச்சொன்றுராய் வேதவிளக்கென்றது நால்வகையென்றும் அவற்றினதுசார மிருவகையென்றும்கூறி வருந்தாதையென்கிறுர்.

இ-ள். தான் – வேத விளக்காகியதுதான், அந்தமில்லை – முடிவில்லையாகலால், பல – மனமும்வாசகமுஞ்செய்கையும் யாணுநீதானே, என்னும்-(ப்ரக்ஞாப்ரம்மம்) என்றுசொல்லும், ஒன்று – இருக்கு, தனி-யாணுந்தாணுயொழிந்தானே, என்னும் (அஹம்ப்ரம்மாஸ்மி) என்றுசொல்லும், ஒன்று – எசு, தவிரா – நீங்காத, ஞானம் – அறிவை, தொடர்ந்த-கூடிய, சுடர் – ஜோதி அவனென்னுகியொழிந்தான், என்னும் – (தத்வமஸி) என்றுசொல்லும், ஒன்று – சாமம், நயனம்-(எண்ணிற்கண்ணினிலான்றே

என்கையால் அன்றிக்கே நயனம்) இரண்டுகண்களும், தொடர்ந்த-(கூட லான்கண்ணுகிய சூரியமண்டலத்தை தொடர்ந்த) பற்றிச்செல்லுகிற, ஒளியால் – ஜோதியாலே, வானம் – பரமாகாசமாக, தொடர்ந்த – கூடப் பெற்ற, பதம் – இடம், (யானேநீயாகி யென்னையாள்வானே) என்னும்— (அயமான் மாப்ரம்மம்) என்றுசொல்லும் தகுதிபற்றிவருவித்து, ஒன்று– அதர்வணம், உன்னை – நாராயணுகியவுன்னையே, மறைநாலின் – நான்கு வேதத்தாலும், வந்த – திரண்டுவந்த, முறையால் – கிரமமிதுவாகை யாலே ஆநந்தம் – முழுநலம், என்னும் – என்றுசொல்லும், அயல் – அவ் வாநந்தத்துக்கிடமாகிய முழுவுணர்வு, என்னும் – என்றுசொல்லும், ஆக ஞாநாநந்த மயனென்றது சாரம். உன்னையேயென்பதிற் றேற்றேகாரந் தொக்கது செய்யுளாகலான்;—எ-று. (உருரு)

மீளாதவேதமுடிவின்கணின்னைமெய்யாகமெய்யினினையும்
கேளாதவென்றுபிறவென்றுசொன்னகெடுவார்கள்சொன்னகடவான்
மாளாதநீதியிகழாமைநின்கணபிமானமில்லைவறியோர்
ஆளாயும்வாழ்தியரசாள்தியாரிவ்வதிரேகமாயையறிவார்.

வேதாந்தக்கருத்துணராத சூனியவாதிகளைக் கண்டித்து அடிமை யும் ஆண்டாளுமானவனே வருந்தாதை யென்கிறார்.

இ-ள். மீளாதவேதம் – அவ்வேதம் மீளாது (இதன்றிதன் றென்று சென்ற வேதங்கள் மீட்சியின்றிக்கே,) முடிவின்கண் – அந்தங்களிலே, நின்னை – நாராயணுகிய வுன்னை, மெய்யாக – ஞாநாநந்தமயனுக,மெய் யில் – தமதறிவின்கண்ணே, நினையும் – எண்ணும் இவற்றை, கேளாத வென்று – கேட்டறியாதனவென்றும், பிறவென்று – கண்டறியாதன வென்றும், சொன்ன - முதலிலே சொன்னவைக்கு, கெடுவார்கள்- அறிவு கெடுமவர்கள், சொன்ன – அவாங்மனகோசரமென்றவற்றைத் தானேசொல்லிய, கடவால் – மறுமொழியிலுலே, மாளாத – அழியாத, நீதி – வேதங்களது சொல்லுகையை, இகழாமல் – தப்பாமல், நின் – உன் னுடைய, கண்ணபிமானம் – கடாக்ஷவீக்ஷண்யம், இல்லை – இல்லையாகி; வறியோர் – சூனியவாதிகளானார்கள், (அவர்கள் வேதவிரோதிகளாகை யாலே அவ்வேதவிளக்காகிய வுனக்கு விரோதிகளாரென்று கரு த்து. ஊன்சுடர்மிகு சுருதியுளென்றதை யறியாரே வறியார் நித்திய மாகலான் ஞானத்தை மெய்யென்றார்.) ஆளாயும் – நானென்கிறவடிமை யாகியும், வாழ்தி – கைங்கரியமாகிற புருஷார்த்தத்தோடு வாழ்கிறாய், அரசு – நாராயணனென்கிற ஆண்டாளுகியும், ஆள்தி – அக்கைங்கரியத் தைக் கொள்ளுகிறாய்;—எ-று. (உருசு)

சொல்லொன்றுரைத்திபொருளாதிதூயமறையுந்துறந்துதிரிவாய்
வில்லொன்றெடுத்திசரமொன்றெடுத்திமிளிர்சங்கமங்கையுடையாய்
கொல்லென்றுரைத்திகொலையுண்டுநிற்றிகொடியாயுன்மாயையறியேன்
அல்லென்றுநிற்றிபகலாதியாரிவ்வதிரேகமாயையறிவார்.

கீழே திருமந்திரத்தை வெளியிட்டபடியைக்கூறி யிதிலே அதனது சங்கிரகமாகிய பிரணவத்தையு மதனது பொருளையுங்கூறி வேத விளக்கென்பதை யறியாது சூனியரான விராவணதிகளறிய வெளிவந்தவனே வருந்தாதை யென்கிறார்.

இ-ள். சொல்லொன்று – மூன்றெழுத்தாகிய பதமொன்றை, உரைத்தி – உபதேசிக்கிறாய், பொருள் – ஆண்டானுக்கே அடிமைகளென்கிற பொருளும், ஆதி-நாராயணவடிவாகிறாய்(மூந்து திருநாமமென்றதிலே ஹரி என்று இதிலே ஓம் என்றுஇப்படித்தொடங்குவதாகிய), தூய – பரிசுத்தத்தையுடைய, மறையும் – வேதத்தையும், துறந்து – விட்டு, திரிவாய் – நூனைனந்தமய னென்பதற்குவேறாய், வில்லொன்று – வேறே ஒருவில்லை, எடுத்தி – எடுக்கிறாய், சரமொன்று – அவ்வில்லுக்கேற்ற பாணமொன்றும், எடுத்தி – எடுக்கிறாய், மிளிர் – பிரகாசியாநின்ற, சங்கம் – சங்குமுதலிய திவ்வியாயுதங்களை, அங்கை – அழகியகையிலே, உடையாய் – வேதத்திலே உடையவனென்று சொல்லப்படுகிறாய், (சங்கென்றதில் மற்றையாயுதங்களையு முபலக்ஷணமாய்க்கூட்டுக.) கொல்லென்றுரைத்தி – தேவருக் கந்தரியாமியாய் வதைபண்ணென்கிறாய், கொலையுண்டு – இராக்கதருக்கந்தரியாமியாய் வதைபட்டு, நிற்றி – நிற்கிறாய், கொடியாய் – இப்படிக் கோணலாயிருக்கிறவனே, உன்மாயை-உனது மயக்கச்செய்கையை, அறியேன்-ஊர்தியாகிய யானேயறியேன், ஆல்லென்றும் – ஆவரணமாகவும், நிற்றி – நிற்கிறாய், பகல்–விக்ஷேபமும், ஆதி – ஆகிறாய்;—எ-று. (உருஎ)

மறந்தாயுமொத்திமறவாயுமொத்திமயலாரும்யானுமறியேம்
துறந்தாயுமொத்திதுறவாயுமொத்தியொருதன்மைசொல்லவரியாய்
பிறந்தாயுமொத்திபிறவாயுமொத்திபிறவாமனல்குபெரியோய்
அறந்தானிறுத்தலரிதாகவாரிவ்வதிரேகமாயையறிவார்.

கீழே அந்தரியாமியாகையாலே ஆவரணசத்தியாலே யொருகான்மயக்கியும், விக்ஷேபசத்தியாலே யொருகால் விளக்கியும் நிற்கிறதேயன்றிச் சூனியவாதிகளறிய விபவமாகி நிற்கிறநிலையிலும் அம்மயக்க விளக்கங்களையுடையவனே வருந்தாதை யென்கிறார்.

இ-ள். மறந்தாயும் – முற்றுமுணர்தல் முடிவிலாற்றல்களை மறந்தா யென்றாலும், ஒத்தி – அன்புமிகுத்துச் சித்தங்கலங்குதலாலே ஒத்திருக்கின்றாய், மறவாயும் – அவற்றை மறவாயென்றாலும், ஒத்தி – இலங்கையரசு முதலாளோடரு ளின்மையாலே யொத்திருக்கின்றாய், மயல்-பிரகிருதிக்குள்ளாகிய, ஆரும் – எல்லாரும், யானும் அது நீங்கியயானும், அறியேம் – அறியாதிருக்கிறோம், துறந்தாயும் – நீ சங்கசக்கராதி அநந்தகருடாதிகளை விட்டிருக்கிறாயென்றாலும், ஒத்தி – மறைந்து வந்தமையாலொத்திருக்கிறாய், துறவாயும் – அவைகளை விடாதிருக்கின்றா யென்றாலும், ஒத்தி – அவைகள் புடையே நின்றமையாலொத்திருக்கிறாய், ஒரு

தன்மை – (மறத்தல் துறத்தல்களையுடையன் மறவாமைதுறவாமைகளையிலனென்) றொருருபடியாக, சொல்ல – (மயலாலேயவைகளையுடையனென்றும் என்றலே யவைகளை யிலனென்றுஞ்) சொல்லுதற்கு, அரியாய்-அருமையானவனே (இருதிறத்தாருக்கு மிரண்டுபடியாகையா லொருபடியல்லை யென்கிறார்.) இவை யுரைத்தாமென்னு முத்திகள். பிறந்தாயும் – (சக்கிரவர்த்தித்திருமகனை) யவதரித்தாயென்றாலும், ஒத்தி – வில்லொன்று சரமொன்றெடுத்தமையா லொத்திருக்கிறாய், பிறவாயும்-நெடுவீடுகாட்ட முடியாயென்றாலும், ஒத்தி – (பல்லாயிரத்தின் முடியாத பக்கமவைவீசமேனி வடித்தீரவும், தன்னசங்கமுந் தானுமுழங்கிற்றாகவும், மேலெவிக் கொள்ளுதலாலே) ஒத்திருக்கிறாய், இவை உரைத்து மென்னுமுத்தி, பிறவாமல் – பிறவித்துன்பமென் றடைந்தாரைமீள) வப்பிறவியில்விடாமல், நல்கு – கடைகணிக்கின்ற, பெரியோய் – இயல்பாகவே பாசங்களினீங்கிலேயை, அறம் – தருமத்தை, தான் – தானை தன்மையொன்றையே கொண்டு, நிறுத்தல் – நிலைநிற்கச்செய்தலில், அரிதாகி-கூடாமையா யிரண்டுபடியுங்கொண்டு நிற்கிறாயென்றந்வயம் என்றாலென்பது – சொல்லெச்சம்;—எ-று. (உதி அ)

வினைவர்க்கமுற்றுமுடனேபடைத்தியலையெய்தியென்றும்வீளையா
நினைவர்க்குநெஞ்சினுறுகாமமுற்றியறியாமைநிற்றிமனமா
முனைவர்க்குமொத்தியமரர்க்குமொத்திமுழுமூடரென்றிம்முதலோர்
அனைவர்க்குமொத்தியறியாமையாரிவ்வதிசயமாயையறிவார்.

இதில் முக்காலங்களுமுணர்ந்த பெரியதிருவடி தாமாக இந்திரியங்களின் மனமாகின்றேறனும் யானேயென்னுங் கீதோபதேசாரியனே வருந்தாதை யென்கிறார்.

இ-ள். வினை – வினையைத் தருகையாலே வினையென்றதாகுபெயர், வர்க்கமுற்றும் – அவ்வினைமுழுதும், உடனே – ஏககாலத்திலே, படைத்தி – சிருட்டிக்கிறாய், அவை – அவ்வினங்களை, எய்தி – அடைந்து, என்றும் – (அவற்றின்பயனைப்பொறுக்கமாட்டாம) லெக்காலத்திலும், வினையா – மீளவுண்டாகாமல், நினைவர்க்கு – எண்ணுவோர்க்கு, நெஞ்சில் – சுழுத்திநிலையில், உறு – எல்லாவற்றிலு மிகுந்த, காமம் – காமத்தை, முற்றி – நிரம்பச்செய்து, அறியாமல் – அவ்வினையாமையை யெண்ணுவோரை யறியவொட்டாமல், நிற்றிமனமா – மனமாக நிற்கிறாய், முனைவர்க்கும் – முதல்வராகிய பிரமருத்திராதிகளுக்கும், ஒத்தி – ஒத்துநிற்கிறாய், அமரர்க்கும் – இந்திராதி தேவர்களுக்கும், ஒத்தி – ஒத்துநிற்கிறாய், முழுமூடர்–முழுதுமறிவீனர், என்று – என்று சொல்லப்படுகிற, இம்முதலோர் – இவ்விராவணாதிகளோடு, அனைவர்க்கும் – எல்லாருக்கும், ஒத்தி – (உருப்பசி–மோகினி –அகலிகை–சீதை–கைகேசிமுதலாயினோர் விஷயத்தில், பிரம னுருத்திர னிந்திர னிராவணன் சக்கிரவர்த்தி முதலாயினோர் மிக்க காமங்கொண்டமையா) லொத்து நிற்கிறாய், அறியா

மை—மதிநல மருளப்பெற்றறியாமல், இவ்வதிரேகமாயையையறிவாராச்
எல்லாவற்றிலு மிக்கது காமமென்பதை காதலகாதலறியாமையென்கிற
திருவள்ளுவராற் காண்க—எ—று. (உஙிக)

எறிந்தாருமேறுபடுவாருமின்னபொருள்கண்டிரங்குபவரும்
செறிந்தாரினுண்மையெனலாயதன்மைதெரிகின்றதுன்னதிடையே
பிறிந்தார்பிறிந்தபொருளோடுபோதிபிறியாதுநிற்றிபெரியோய்
அறிந்தாரறிந்தபொருளாதியாரிவ்வதிரேகமாயையறிவார்.

இதில் அவ்வினைவர்க்க மித்துணைத்தென்று மகத்துணையுமனமாகிய
நின்னிடத்துந் தோன்றநிற்கிறவனே வருந்தாதை யென்கிறூர்

இ-ள். எறிந்தாரும் — ஈகபாசத்தை வீசினோரும், எறுபடுவாரும் - அவ்வீசலை யேற்றுக்கிடக்கிறவரும், இன்னபொருள் — வெற்றி தோல்வி யென்றிருவகையானபொருளையும், கண்டு — பார்த்து, இரங்குபவரும் - கலங்குபவருமாக, செறிந்தாரில் — கூடினோரிடத்தே, நுண்மையென லாயதன்மை — அணுரூபமானமனமென்றுசொல்லலாகியபடி, தெரிகின் றது — விளங்குகின்றது, உன்னதிடையே — உனது விஷயத்திலே, (எவ் வாறென்னில்) பிறிந்தார்—வெகுளியாற் பிறிந்தாராகிய இராவணுதிகள் விஷயத்தில், பிறிந்தபொருளோடு-பிறிதற்கேதுவான வெகுளியென்கிற பொருளோடு, போதி—போகிறூய், பிறியாது—(காமத்தாற் பிறியாராகிய இளையபெருமாளாதிகள் விஷயத்திற் காமத்தோடு) பிறியாமல், நிற்றி - நிற்கிறூய், பெரியோய் — வரம்பிலின்பத்தால் பெரியோனே, அறிந்தார்— இவ்விருதிறத்தையுங் கண்டறிந்தாராகிய விந்திராதிகள் விஷயத்தில், அறிந்தபொருள் — (எத்தன்மையெய்தி முடியுங்கொலென்னு) மயக்கமா கிய பொருள், ஆதி — காமித்தலும் கோபித்தலுமின்றி மயக்கமாகி நிற் கிறூய், இவ்வதிரேகமாயையறிவாராச், வாணுள் — மறந்தாய் — எறிந்தார் இம்மூன்றுசெய்யுளு நிரனிறையணி. கண்டிருந்த தேவர்களையென்செய் யலாமென் றெண்ணுகையான் மயக்கமாயிற்று. காமாதி — ஆறுவர்க்க மும், இராகாதி — பதின்மூன்று வர்க்கமுமடங்க காமம் வெகுளி மயக்க மிவை மூன்றென்ற திருவள்ளுவ ரினிவருமடக்கினமைகாண்க.—எ—று.

பேராயிரங்களுடையாய்பிறந்தபொருடோறுநிற்றிபிரியாய்
தீராய்பிரிந்துதிரிவாய்திறந்தெறவைதேறுமென்றுதெளியாய்
கூராழியங்கையுடையாய்திரண்டோருருவாதிகோடலுரிபோல்
ஆராயினேதுமிலையாதியாரிவ்வதிரேகமாயையறிவார்.

இதிலே திரிபுடியாய்த் தேடுதற்கரியவனே வருந்தாதையென்கிறூர்.

இ-ள். பேராயிரங்களுடையாய் — ஆயிரநாமங்களை யுடையவனே, பிறந்த — உடம்போடுபிறந்த, பொருடோறும் — ஆன்மாக்களெல்லாம், நிற்றி—நிற்கிறூய், பிரியாய் — பிரியாதவனுய், தீராய்—அப்படி ஒருபடியே நீங்காதவனுய், பிரிந்து-மெய் வாய் கண்ணேடு மூக்குச்செவிவழியாலே, திரிவாய்-வேறுபடுவாய், திறந்தெறு — இதிலும்மைதொக்கது, (சுவை

யொளியூடேறுசை நாற்றங்களையுண்டு) அவை-அப்பொறிகளும், தேறுமென்று-அறியுமென்று, தெளியாய்-தெளியப்படாதாய், கூர்-கூரிய, ஆழி-திருவாழியை, அங்கை – அழகிய கையிலே, உடையாய் – உடையவனே, திரண்டு – திரிபுடியாகத்திரண்டு, ஒருருவாதி – ஒருவடிவாகிறாய், கோடல் – வெண்காந்தற்கிழங்கை, உரிபோல் – உரித்தாற்போல, ஆராயின் – உள்ளேயிருப்ப தெதுவென்றாராயப்புக்கால், ஏதுமிலையாதி – ஒன்றுமில்லையாகிறாய், இவ்வதிரேகமாயையறிவாராரர், இன்பமுதலிய பேற்றுக்கேதுவா மிந்திரியமனமாமஃதே – யின்பமலியான்மாத்தோறும்மிருப்பதாலநந்தமெனவுரித்தத் – தின்பகுதியெனவு மணுரூபமெனவுந் துலங்கவிலங்குமான்கண் – ணின்பகுதிகவர்ந்து கெண்டையெனப் பிறழ்ந்து வண்டுறழ்நேத்திரத்திறைளே, என்பது நியாயவிவேகம். இம்மூன்றுபாட்டும் பிறர்மதத்திற்குடன்படல்;—எ—று. (உசுக)

என்றின்னபன்னியழிவானெறிந்தவெறிசோதிகீறவிருள்போய்ப்
பொன்றுன்னியன்னவெயில்வீசுகின்றபொருள்கண்டுநின்றபுகழோன்
நின்றுன்னியுன்னியிவன்யாவனென்றுநிமிர்கின்றவெல்லைநிமிர்ச்
சென்றுன்னிமுன்னருடனையினுனிவ்வுலகேழுமூடுசிறையான்.

இவ்வாறு திருவடிதருட்டப் பெருமாள் சோகந்தெளிந்து கண்டமைகூறுகின்றது.

இ-ள். என்று – என்றுசொல்லி, இன்ன – இவ்விதமாக, பன்னி – பிரலாபித்து, அழிவான் – கலங்குகின்றதிருவடி, எறிந்த – வீசிய, எறிசோதி – காந்துகிற சூரியன், கீற – கிழிக்க, இருள் – மயக்கவிருளானது, போய் – கழிந்து, பொன் – சுவர்ணப்பிரபை, துன்னியன்ன – நெருங்கிறைற்போல, வெயில் – சூரியப்பிரபையை, வீசுகின்ற – தந்துநிற்கிற, பொருள் – தமது பொருளாகிய திருவடியை, கண்டு – பார்த்து, நின்ற-நிலைபெற்ற, புகழோன் – வாத்ஸல்யாதி கல்யாணகுணங்களையுடையபெருமாள், நின்று – நிதானித்து, உன்னியுன்னி – எண்ணியெண்ணி, இவன் – இந்தமஹாபுருஷன், யாவனென்று எவ்வுலகத்தானென்று, நிமிர்கின்ற – தலைதூக்குகிற, எல்லை – சமயத்தில், நிமிர – முழுதுந்தலைதூக்க, சென்று – போய், உன்னிமுன்னர் – ஆலோசிக்கிற பெருமாளுக்குமுன்னே, உடனையின் – கூடலாணன், இவ்வுலகேழும் – இந்தவுலகேழையும், மூடு – மறைக்கத்தக்க, சிறையான் – சிறகையுடையவன்,—எ-று.

எறிந்தவெறிசோதி – இருள் உருவகவுயர்வுநவிற்சி. பொன்றுன்னியன்னவெயில் உவமையணி. வீசுகின்ற பொருளென்பதுமது. வில்லியென்றுற்போல வுன்னியென்றது வினைமுதற்பொருண்மையுணர்த்து மிகரவிகுதி. (உசுஉ)

வாசங்கலந்தமரைநாளநூலின்வகையென்பதன்னமழையென்
றூசங்கைகொண்டுகாடைமீளியண்ணல்சராமன்வெண்ணெயணுகும்
தேசங்கலந்தமறைவாணர்செஞ்சொலறிவாளரென்றிம்முதலோர்
பாசங்கலந்தபசிபோலகன்றபதகன்றுரந்தவுரகம்.

இ-ள். வாசம்-பரிமளத்தோடு, கலந்த-கூடிப்பிறந்த, மரை-தாமரையினது, காளம்-தண்டிலுண்டாகிய, நூலின்-மெல்லியவிழையினது, வகை-விதமாயிற்று, என்பது-என்றுசொல்லுமது, என்னை-எப்படி, (தேவரீர்க்கும் வடம்போலு நாகபாசத்தை மெல்லிய தாமரை நூல்போலாயிற் றென்கிறது முழுதுந் தேயாமையா லவ்வுவமை கூடாதென்றபடி.) மழையென்று-கைம்மாறு கருதாது வழங்குமேகமென்று, ஆசங்கைகொண்ட-மயங்குதலுச்செய்து நிற்கிற, கொடை-கொடுத்தற்றொழிலிலே, மீளி-மீட்சியில்லாதவணுகையால், அண்ணல்-அக்கொடைவீரரிற்றலைவணுகிய, சராசமன்-சராசமுதலியார்வாழும், வெண்ணெயணுகும்-வெண்ணெய்நல்லூரையடைந்த, தேசங்கலந்த-ஞானவொளியாகிய வழகுகூடிய, மறைவாணர்-வடநூன்முனிவரும், செஞ்சொலறிவாளர்-தென்மொழிப்புலவரும், என்று-என்றுசொல்லுகிற, இம்முதலோர்-இவர் முதலாயினோரை, பசம்-கயிறுக, கலந்த-பிணிக்கப்பட்டிருக்கிற, பசிபோல்-உதராக்கினிபோல, அகன்ற-நீங்கின, பதகன்-இந்திரசித்தாகிய வஞ்சகன், துரந்த-பிரயோகித்த, உரகம்-நாகபாசம், இவ்வுவமை நாகபாசமுழுது மில்லையாயிற்றென்று துவனிக்கின்றதாகையாற் கூடுமவ்வுவமை கூடாதென்றூர் என்றதொழிப்பணி. சராசமனென்பதுருவகவுயர்வுநவிற்சி. ஆசங்கித்தல்-மயங்குதல். இன்னதல்ல திதுவெனமொழிதலென்னுமுத்தி,—எ-று. (உசுங)

பல்லாயிரத்தின்முடியாதபக்கமவைவீசவந்துபடர்கால்
செல்லாநிலத்தினிருளாதல்செல்லவுடனின்றவாளிசிதறுற்
றெல்லாவிதத்துமுணர்வோடுநண்ணியிவனேபிழைக்குமெனவோர்
வல்லாளனுருத்தனிடையேயபடித்தவடுவானமேனிவடுவும்.

இவ்விரண்டுபாட்டும் நாகபாசம் நீங்கினமை கூறுகின்றன.

இ-ள். பல்-பல்லுக்குவமையான முருந்து, (அதாவது இறகினடிக்குருத்து.) ஆயிரத்தின்-ஆயிரமென்கிற கணக்கினும், முடியாத-அளவுபடாதுமேலிடுகிற, பக்கம்-சிறகுகளாகிய, அவை-அவ்விரண்டாலும், வீச-வெயிலெயெறிய, வந்து-நாசிவழியேவந்து, படர்-பாதிகழிந்து பாதிமீண்டு மவ்வழியே செல்லுகிற, கால்-பிராணவாயு, செல்லாத-போகக்கூடாத, நிலத்தின்-சுவாதிட்டான நிலையிலுள்ள, இருள்-மயக்கமாகியவிருள், ஆதல்-ஆகியிருந்தது, செல்ல-கழியுமளவில், உடல்-அவயவருடம்புகளிலே, நின்ற-தைத்திருந்த, வாளி-பாணங்களும், சிதைவுற்று-அழிவுபட்டு, எல்லாவிதத்தும்-சகல விஷயங்களிலும், உணர்வோடு-சோர்வுறுத வுணர்வோடு, நண்ணி-நடக்கப்பெற்று, இவனே-இத்தன்மையவனை, பிழைக்கும்-சோர்வை யடைவான், என-என்றுசொல்லலாக, ஓர்-ஒப்பற்ற அல்லதுணருமவனை, வல்லாளனுருத்தன்-உணர்வால்வல்ல வொருவன், இடையே-இவ்வுணர்வோடு நண்ணிய நடுவிலே, படுத்த-பூர்வகர்மத்தா லடையலான, வடு-சோர்வாகிய குற்றத்தை, ஆன-ஒப்பாயின, மேனி-அவருடம்

பிலுள்ள, வடுவும் – பாணத்தாலாகிய தழும்புகளும், உடலிற் றழும்பு கூட வில்லையென்றுயிற்று,—எ-று.

இசையுமெனினு மிசையாதெனினும் வசைதீரவெண்ணுவர் சான் ரோராகலான் இடையேபடுத்த வடுவிசையினி மாவுளங்கிழித்த வம்பி னிற்றீதோ வரிமாப்பிழைப்பெய்த கோல்தீதன்றுகையாலே இடையே படுத்த வடுகுற்றமன்றென்றூர். இது வேற்றுப்பொருள் வைப்பணி இதற்குவமையணியங்கம். முருந்தைப்பல்லென்றது ஏதிர்நிலையை யங்கமாகக்கொண்ட வுருவகவுயர்வு நவிற்சி. மயக்கத்தை யிருளென்றதுமது. ()

தருமத்தினென்றுமொழுகாதசெய்கைதழுவிப்புணர்ந்ததகையால்
உருமொத்தவெங்கண்வினைதியவஞ்சருடலுய்த்ததில்லையுலகின்
கருமத்தினின்றகவிசேனைவெள்மலர்ள மேலவ்வள்ளல்கடைநாள்
நிருமித்தவென்னவுயிரோடெழுந்துநிலைநின்றதெய்வநெறியால்.

இ-ள். தருமத்தின்-அறத்தின்வழியே, ஒன்றும்-ஒருவிதத்திலும், ஒழுகாத – நடவாத, செய்கை – செய்யுந்தன்மையை, தழுவி – அநுசரித்து, புணர்ந்த – அச்செய்யுந்தன்மையான பாவத்தோடுகூடிய, தகையால்-பண்பிலுலே, உரும் – இடியை, ஒத்த-ஒப்பான, வெங்கண்-கொடுமையான, வினை – பாவமானது, தீய – நரிக்கும்படி, வஞ்சர் – பாதகருடைய, உடல் – தேகங்களிலே, உய்த்ததில்லை – அப்பக்கத்தொளிசென்றதில்லை, உலகின் – உயர்ந்தோர்களுடைய, கருமத்தின் – காரியத்தின் கண்ணே, நின்ற – உத்தியோகித்துநின்ற, கவிசேனை – வானரசேனையாகிய, வெள்ளம் – எழுபதுவெள்ளமும், மலர்மேல் – பூமேலிருந்து, அவ்வள்ளல் – முன்னே சிருட்டித்த அந்தப்பிரமன், கடைநாள் – அவ்வெள்ள முடிவாகிய பிற்காலத்திலும், நிருமித்ததென்ன – மீளவுஞ் சிருட்டித்தாற்போல, உயிரோடெழுந்து – உயிருடனேயெழுந்து, நிலைகின்ற – பெருமாளருகே நின்றன, தெய்வநெறியால் – ஈஸ்வராசங்கல்பத்தாலே, கடைநாணிருமித்தென்னவென்பதில் பொருளுவமை. உலகினென்பதிலாறனுருபைந்தனுருபாய்மயங்கிற்று. வெவ்வியகண்போறலிற்கொடுமையைவெங்கணென்றூர்;—எ-று. (உசுந)

இளையானெழுந்துதொழுவானையன்பினிணையாரமார்பினணையா
விளையாததுன்பம்விளவித்ததெய்வம்வெளிவந்ததென்னவியவாக்
கிளையாரினின்னதுணையோரையாவிகெழுவாவெழுந்துதழுவா
முளையாததிங்களுகிரான்முன்வந்துமுறைநின்றவீரன்மொழிவான்.

இ-ள். இளையான் – சலியாதவனுய், எழுந்து – வீரத்தோடெழுந்து, தொழுவானை – வணங்குகிற விளையபெருமானை, அன்போடு – பிரீதியோடே, இணை – தம்மோடொத்ததன்மை, ஆர – தோன்ற, மார்பின் – திருமார்பிலே, அணையா – அணைத்து, விளையாத – வரத்தகாத, துன்பம் – துக்கத்தை, விளவித்த – வரப்பண்ணின, தெய்வம் – காட்சியாகாத தெய்வந்தானே, வெளிவந்தது – காணவந்தது, என்ன – என்கிறதாக, விய

வா – அதிசயித்து, கிளையாரின் – மீண்டு மூய்யாதவர்போல, இன்ன – இத்தன்மையான, துணையோரை – அளவாயிலேரை, ஆவி – தமதுபிரா ணன், கெழுவா – அப்போதுபொருந்தியதாக, எழுந்து – அத்துணையோ ரின் முன்னேயெழுந்து, தழுவா – தழுவிக்கொண்டு, மூளாயாத – ஆகா யத்தின்மூளத்து மறையாத, திங்கள் – பாதிச்சந்திரனைப்போலும், உதி ரான் முன் – நகத்தையுடைய பெரியதிருவடிக்குமுன்னே, முறைநின்று- தெய்வசந்நிதானத்தின்முறையே நின்று, அவ்வீரன் – அவ்விராகு வீரனு யபெருமாள், மொழிவான் – சொல்லத்தொடங்கினன். (உசுசு)

வேறு.

கருடனை இராமன் நீயாவனென வினவுதல்.

அய்யநீயாரையெங்களருந்தவப்பயத்திணன்வந்
தெய்தினையுயிரும்வாழ்வுமீந்தனையெம்மேரால்
கய்யுறைகோடற்கொத்தகாட்சியையல்லமீட்சி
செய்திறமிலையாலென்றுன்றேறவர்க்குந்தெரிக்கிலாதான். (உசுள)

பொருளினியுணரவேறுபுறத்துமொன்றுண்டோபுந்தித்
தெருளினையுடையராகிற்செயலருங்கருணைச்செல்வம்
மருளினையிரவின்வந்தவாழ்க்கையீதாகின்வாயால்
அருளினையென்னினெய்தவரியனவுளவோவையய. (உசுஅ

இராமன் கருடனைப்புகழ்தல்.

கண்டிலமுன்புசொல்லக்கேட்டிலகடலென்றெம்பால்
கொண்டிலகொடுப்பதல்லாற்குறையிலையிதுநின்கொள்கை
உண்டிலையென்னநின்றவுயிர்த்தந்தவுதவியோனே
பண்டிலநண்புநாங்கள்செய்வதன்பகர்தியென்றுன். (உசுக)

கருடன் போதல்.

பறவையின்குலங்கள்காக்கும்பாவகன்பழையநின்னே
றவுளதன்மையெல்லாமுணர்த்துவெனரக்கனேடம்
மறவினைமுடித்தபின்னர்வருவெனின்னுழையன்மாயப்
பிறவியின்பகைகுநல்குவிடையெனப்பெயர்ந்துபோனன். (உஎ0)

ஆரியனவனைநோக்கியாருயிருதவியாதும்
காரியமில்லான்போனன்கருணையோர்கடன்மையீதால்
பேரியலாளர்செய்கையுதியம்பிடித்துமென்னர்
மாரியைநோக்கிக்கைம்மாறியற்றுமோவையமென்றுன். (உஎக)

இறந்தனனிளவலென்னவிறைவியுமிடுக்கணெய்தும்
மறந்தனருறங்குகின்றவஞ்சருமறுகிமீளப்
பிறந்தனரென்றுகொண்டோர்பெரும்பயப்பிடிப்பரன்றே
அறந்தருசிந்தையன்பவார்த்துமென்றநுமன்சான்றுன். (உஎஉ)

வானராரவாரித்தல்.

அழகிதென் றண்ணல்கூறவார்த்தனர்கடல்களுஞ்சிக்
குழைவுறவந்தணுச்சிக்குன்றின்றண்டகோளம்
எழமிசையுலகமேன்மேலங்கிடவிரிந்துசிந்தி
மழைவிழுமலைகள்கீறமாதிரம்பிளக்கமாதோ. (உஎந)

ஆரவாரமிராவணன் கேட்டல்.

பழிப்பருஞ்சிந்தையாள்பாற்சிந்தனைபடரக்கண்கள்
விழிப்பிலன்மேனிசாலவெதும்பினனீசன்வேலும்
குழிப்பரிதாயமார்பைமன்மதன்கொற்றவாளி
கிழிப்புறவுயிர்ப்புநீங்கிக்கிடந்தவாளரக்கன்கேட்டான். (உஎசு)

தாதைசொற்றலைமேற்கொண்டதாபதன்றருமமூர்த்தி
*ஈதைகடீர்க்குநாமத்திராமனெயண்ணியெங்கும்
சீதையுமவனையுன்னிச்சிந்தனைதீர்ந்துந்தீராப்
பேதையுமன்றியவ்வூர்யாருளர்துயில்பெறுதார். (உஎடு)

இராவணன் நகைத்தல்.

சிங்கவேறசனியேறுகேட்டலுஞ்சீற்றச்சேனை
பொங்கியதென்னமன்னன்பொருக்கெனவெழுந்துபோரில்
மங்கினர்பகைஞரென்றவார்த்தையேவலியதென்ன
அங்கையோடங்கைகொட்டியலங்கற்றோள்குலுங்கநக்கான். (உஎசு)

இடிக்கின்றதசனியென்னவிரைக்கின்றதிராமன்போர்வில்
வெடிக்கின்றதண்டமென்னப்படுவதுதம்பிவின்னாண்
அடிக்கின்றதென்னவந்துசெவிதாறுமநுமஞ்சுப்புப்
பிடிக்கின்றதுலகமெங்கும்பரிதிசேயார்ப்பின்பெற்றி. (உஎள)

அங்கதனவனேவார்த்தானந்தரமார்க்கின்றானும்
வெங்கதநீலன்மற்றைறவீரரும்வேறுவேறு
பொங்கினரார்த்தவோசையண்டத்தும்புறத்தும்போன
சங்கையொன்றின்றித்தீர்ந்தார்பாசத்தைத்தருமநல்க. (உஎஅ)

இராவணனிந்திரசித்தின் மாளிகையடைதல்.

என்பதுசொல்லிப்பன்னிச்சேக்கைநின்றிழிந்துவேந்தன்
ஒன்பதுகோடிவாட்கையரக்கர்வந்துழையர்சுற்றப்
பொன்பொதிவிளக்கங்கோடிபூங்குழைமகளிரேந்தத்
தன்பெருங்கோயினின்றுமகன்றனிக்கோயில்சார்ந்தான். (உஎக)

தாங்கியதுகிலார்மெள்ளச்சரிந்துவீழ்குழலார்தாங்கி
வீங்கியவுயிர்ப்பார்விண்ணெவிழுங்கியழுலையார்மெல்லத்

---

* ஈதை – துன்பம்.

தூங்கியவிழியார்தள்ளித்துளங்கியநடையார்வல்லி
வாங்கியமருங்குன்மாதரனந்தான்மயங்கிவந்தார். (உஅ0)

பானமுந்துயிலுங்கண்டகனவும்பண்கனிந்தபண்ணைக்
கானமுந்தள்ளத்தள்ளிக்களியொடுங்கள்ளுங்கற்ற
மீனினும்பெரியவாட்கண்விழிப்பதுமுகிழ்ப்பதாக
வானவர்மகளிர்போனர்மழலையஞ்சதங்கைமாழ்க. (உஅக)

மழையினைநீலமூட்டிவாசமும்புகையுமாட்டி
உழையுழைசுருட்டிமென்பூகுவித்திடைக்கிடையூறென்னப்
பிழையுடைவிதியார்செய்தபெருங்குழற்கருங்கட்செவ்வாய்
இழையணிமகளிர்சூழ்ந்தானந்தாலிடங்கடோறும். (உஅஉ)

தேனிடைக்கரும்பிற்பாலிலமுதினிற்கிளவிதேடி
மானிடைக்கயலில்வாளின்மலரிடைநயனம்வாங்கி
மேனடையினையமற்றுநல்வழிநல்கவேண்டி
வானுடையண்ணல்செய்தமங்கையர்மருங்குசென்றார். (உஅங)

தொடங்கியவார்ப்பிரேணைசெவிப்புலந்தொடர்தலோடும்
இடங்கரின்வயப்போத்தன்னவெறுழ்வலியரக்கர்யாரும்
மடங்கலின்முழக்கங்கேட்டவான்கரியொத்தார்மாதர்
அடங்கலுமசனிகேட்ட * வளையுறையரவமொத்தார். (உஅச)

அரக்கனுமைந்தன்வைகுமாடகத்தமைந்தமாடம்
பொருக்கெனச்சென்றுபுக்கான்புண்ணினிற்குமிழிபொங்கத்
தரிக்கிலன்மடங்கலேற்றுற்றெறுலப்புண்டுசாய்ந்துபோன
கருக்கிளர்மேகமன்னகளிறனையானைக்கண்டான். (உஅஞ)

இந்திரசித்தனிராவணனை வந்ததென்னென விறுதல்.

எழுந்தடிவணங்கலாற்றுனிருகையுமரிதினேற்றித்
தொழுந்தொழிலானைநோக்கித்துணுக்குற்றமனத்தன்றேன்றல்
அழுங்கினைவந்ததென்னையத்தமதென்றடித்துச்சொன்னன்
புழுங்கியபுண்ணிணுனுமினையனபுகறலுற்றான். (உஅசு)

உருவினவுரத்தைதழுற்றுமுலப்பிலவுதிரம்வற்றப்
பருகினவளப்பிலாதபகழிகள்கவசம்பற்றற்
றருகினபின்னைச்சாலவலசினையாகண்கள்
செருகினவன்றேறயாளுமாயையிற்றீர்ந்திலேனேல். (உஅஎ)

இந்திரன்விடையின்பாகனெறுழ்வலிக்கலுழனேறும்
சுந்தரனருக்கனென்றித்தொடக்கத்தார்தொடர்ந்தபோரில்

---

* அளை — வளை.

நொந்திலெனீனையதே தான்றுநுவன்றிலென்மனிசனேனென்மை
மந்தரமனையதே தாளாய்வரம்புடைத்தன்றுமன்னே. (உஅஅ)
இளையவன்றன்மையீ தாலிராமனதாற்றலெண்ணின்
தளையவிலழுங்கண்மார்பகம்வயிற் * றங்கிற்றன்ரூல்
விளவுகண்ணெணர்தலல்லால்வென்றிமேல்விளையுமென்ன
உளையதன்றென்னச்சொன்னனுற்றுள துணர்ந்திலாதான். (உஅக)
வென்றதுபாசத்தாலுமாயையின்விளவிளுலும்
கொன்றதுகுரக்குவீர்தம்மொடக்கொற்றத்தேனை
நின்றனனிராமனின்னுநிகழ்ந்தவாநிகழ்கமேன்மேல்
என்றனனென்னைக்கேட்டவிராவணனிதனைச்சொன்னன். (உகo)

இராவணன் இந்திரசித்திற் கிலக்குமணுதியரெழுதைமைகூறல்.

வார்கழற்காலமற்றவ்விலக்குவன்வயிரவில்லின்
பேரொலியரவம்விண்ணெனப்பிளந்திடக்குரங்குபேர்ந்த
காரொலிமடங்கவல்லைக்கம்பிக்கக்களத்திரூர்த்த
போரொலியொன்றுமையவறிந்திலேபாலுமென்றான். (உகக)
அய்யவெம்பாசந்தன்னுலார்ப்புண்டாரசனியென்னப்
பெய்யும்வெஞ்சரத்தான்மேனிபிளப்புண்டாருணர்வுபோந்தார்
உய்யுநரென்றுரைத்ததுண்மையோவொழிக்கவொன்றே
செய்யுமென்றெண்ணத்தெய்வஞ்சிறிதன்றேரெதிரினம்மா. (உகஉ)
ஈதுரைநிகழும்வேலையெய்துவதறியப்போய
தூதுவர்விரைவின்வந்தார்புகுந்தடிதொழுதலோடும்
யாதவணிகழ்ந்ததென்னவிராவணனியம்பவீறின்
றேதியகல்வியாளர்புகுந்துளதுரைக்கலுற்றார். (உகங)

தூதர் நடந்தவை கூறல்.

பாசத்தாற்பிணிப்புண்டாரைப்பகழியாற்களப்பட்டாரைத்
தேசத்தாராசன்மைந்தனிடையிருள்சேர்ந்துநின்றே
ஏசத்தானிரங்கியேங்கியுலகெலாமெரிப்பெனென்றான்
வாசத்தார்மாலைமார்பவானுறைகலுழன்வந்தான். (உகச)
அன்னவன்வரவுகாணுவயிலெயிற்றரவமெல்லாம்
சின்னபின்னங்களானபுண்ணெனுமெயர்வுதீர்ந்தார்
முன்னையின்வலியராகிமொய்க்களநெருங்கிமொய்த்தார்
இன்னதுங்கிழந்ததென்றாராக்கனீதெடுத்துச்சொன்னன். (உகரு)

இராவணன் கலுழனை இகழ்தல்.

ஏற்றருந்தடந்தேளாற்றலென்மகனெய்தபாசம்
காற்றினைடக்கழித்துத்தீர்த்தான்கலுழனுங்காண்மின்காண்மின்

---

* தங்கிற்றன்ரூல் – தங்கிற்று. ஆல் – அசை.

வார்த்தையீதாயினன்ரூலிராவணன்வாழ்ந்தவாழ்க்கை
மூத்ததுகொள்கைபோலாமென்னுடைமுயற்சியெல்லாம். (உகூச)

உண்டுலகேழுமேழுமிழ்ந்தவனென்னுழூற்றம்
கொண்டவனென்றேஞடேற்றசருவினின்மறுக்கங்கொண்டான்
மண்டிலந்திரிந்தபோதுமறிகடன்மறைந்தபோதும்
கண்டிலன்போலுஞ்சொற்றகலுழனன்றென்னைக்கண்ணுல். (உகூஎ)

கரங்களினேமிசங்கந்தாங்கியகரியோன்காக்கும்
புரங்களுமழியப்போனபோழ்திலென்சிலையிற்பொங்கி
உரங்களின்முதுகிற்ரூளினுறையுறுசிறையினுற்ற
சரங்களுநிற்கவேகொல்வந்ததவ்வருணன்றம்பி. (உகூஅ)

இந்திரசித்தனை நீயேசென்று பொருதினை இராவண னுரைத்தல்.

ஈண்டதுகிடக்கமேன்மேலியைந்தவாறிசையவெஞ்சி
மீண்டவர்தம்மைக்கொல்லும்வேட்கையையேவட்குமன்றே
ஆண்டகைநீயேயின்னுமாற்றுதியரும்போரன்ரேனென்
கான்டலுநாணுமென்ரூன்மைந்தனுங்கருத்தைச்சொன்னுன். (உகூக)

இந்திரசித்து மறுத்துடன்படல்.

இன்ரெருபொழுதுதாழ்த்தென்னிகற்பெருஞ்சிரமநீங்கிச்
சென்ரெருகணத்தினுலோநான்முகன்படைத்ததெய்வ
வென்றிவெம்படையினுலுன்மனத்துயர்மீட்பெனென்ரூன்
நன்றெனவரக்கன்போய்த்தனதிமலர்க்கோயில்புக்கான். (உடுO)

கஅ-வது, நாகபாசப்படலம் முற்றிற்று.

ஆஉ திருவிருத்தம்--உஉநுக.

ககூ-வது, படைத்தலைவர்வதைப்படலம்.

ஆர்த்தெழுமோசைகேட்டவரக்கருமுரசமார்ப்பப்
போர்த்தொழில்வேட்கைபூண்டுபொங்கினர்புகுந்துமொய்த்தார்
தார்த்தடமார்பன்றன்னைத்தாவிடையென்னச்சார்ந்தார்
பார்த்தனன்முனிந்துமன்னனினையனபகர்வதானுன். (க)

மாபெரும்பக்கமேறுவான்புகைக்கண்ணன்வந்தான்
எவுதியெம்மையென்பார்தம்முகமினிதிறைக்கிப்

போவதுபுரிதிரென்னப்புகறலும்பொரூததூதர்
தேவமற்றிவர்கள்செய்கைகேளெனத்தெரியச்சொன்னர். (உ)

தூதர் சேனைவீரர் திறங்கூறல்.

ஆனையும்பரியுந்தேருமரக்கருமமைந்தவாளித்
தானையும்வீயனின்றதலைமகன்றனிமையோரார்
மானவன்வாளிவாளியென்கின்றமழலைவாயார்
போனவர்மீளவந்துபுகுந்தனர்போலுமென்றூர். (ஊ)

வேறு.

சேனைகள்மீது இராவணன் சீற்றங்கோடல்.

அற்றவர்கூறலுமாரழலிற்றூய்
முற்றியகோபமுருங்கமுனிந்தான்
இற்றிதுவோவிவர்சேவகமென்னைப்
பற்றுமினென்றனன்வெம்மைபயின்றான். (எ)

என்றலுமெய்தினர்கிங்கரரென்பார்
பின்றலிலேனைரைவலிந்துபிடித்தார்
நின்றனராயிடைநீலநிறத்தான்
கொன்றிவீரவிர்கொண்மினிதென்றான். (ஏ)

சேனைகள் மூக்கறுப்பான் இராவணன் கட்டளையிடல்.

ஏற்றமினிச்செயல்வேறிலையீர்வீர்
நாற்றடுகர்ந்துயர்நாசியைநாமக்
கோற்றருதிண்பணைகொட்டினிர்கொண்டீர்
சாற்றுமினஞ்சினரென்றுரைதந்தே. (ஐ)

மாலி தடுத்துரைத்தல்.

அக்கணனேயயில்வாளினர்நேரா
மிக்குயர்நாசியையீரவிரைந்தார்
புக்கனரப்பொழுதிற்புகழ்தக்கோய்
தக்கிலதென்றனன்மாலிதடுத்தான். (ஒ)

அஞ்சமமஞ்சியழிந்துளராளுர்
வெஞ்சமம்வேறலும்வென்றியதன்றூய்த்
துஞ்சலுமென்றிவைதொல்லையவன்வேற
தஞ்சனவாருளராண்மைதகைந்தார். (ஓ)

அந்தரமொன்றுமறிந்திலையன்வேற
வந்தனநம்வயினைத்துணைமன்னு
யாதுமினிச்செயலில்லெனவென்றல்
நீதியுரைப்பதுநீரெனவோராக்
கோதில்குலத்தொருநீகுணமிக்காய்
மாதையொறுத்தல்வசைத்திறமன்றே. (ஈஈ)

நான்முகனுக்கொருநால்வரின்வந்தாய்
நூன்முகமுற்றுநுணங்கவுணர்ந்தாய்
பான்முகமுற்றபெரும்பழியன்றே
மான்முகமுற்றெறுமாதைவதைத்தால். (ஈச)

மண்குலகின்றதுவானகடுங்கிக்
கண்குலகின்றதுகாணுதிகண்ணல்
எண்குலகின்றதிரங்கறுறந்தாய்
பெண்கொலைசெய்கைபெரும்பழியன்றே. (ஈந)

என்வயினல்கினையேகுதியென்றல்
நின்வயமாமுலகியாவையுநீநின்
அன்வயமேதுமறிந்திலையையா
புன்மைதொடங்கல்புகழ்க்கழிவென்றான். (ஈசு)

இந்திரசித்துப் பதிலுரைத்தல்.

என்றனன்மாருதியிந்திரசித்தும்
ஒன்றுரைகேளெனதெந்தையுமூரும்
பொன்றுதறீருமிதிற்புகழுண்டே
நன்றுரையென்றுபினக்குரைசெய்தான். (ஈஎ)

இந்திரசித்து மாயாசீதையை வெட்டுதல்.

எந்தையுமிந்தவிலங்கையுளோரும்
உய்ந்திடவானவர்யாவருமோடச்
சிந்துவென்வாளினிலென்றுசெறுத்தான்
இந்திரசித்தவணின்னவிசைத்தான். (ஈஅ)

உயுத்தகாண்டம்

இந்திரசித்து அயோத்திசென்றங்குள்ளாரை யழிப்பேனெனல்.

போமினடாவினைபோயதுபோலாம்
ஆமெனினின்னுமயோத்தியையண்மிக்
காமினதின்றுகளங்காரியாக
வேமிதுசெய்தினிமீள்குவெனென்றான். (நடக)

தம்பியர்தம்மொடுதாயருமாயோர்
உம்பர்விலக்கிடினும்மினியுய்யார்
வெம்புகடுங்கனல்வீசிடுமென்கை
அம்புகளோடுமவிந்தனரம்மா. (நக0)

இப்பொழுதேதகடிதேதுவென்யானிப்
புட்பகமானமதிற்புகுன்றேறன்
தப்புவரேயவர்சங்கையிலாவென்
வெப்புறுவாளிகளின்றுவிரைந்தால். (நகக)

ஆளுடையாயருளாயருளாயென்
றேழுவழங்குறுசொல்லினிரங்கான்
வாளினெறிந்தனன்மாகடல்போலும்
நீளுறுசேனையினூடுநிமிர்ந்தான். (நகஉ)

தென்றிசைகின்றுவடாதுதிசைக்கட்
பொன்றிணிபுட்பகமேற்கொடுபோனென்
றொன்றுமுணர்ந்திலன்மாருதியுக்கான்
வென்றிநெடுங்கிரிபோலவிழுந்தான். (நகந)

போயவன்மாறிநிகும்பலைபுக்கான்
தூயவனெஞ்சுதுயர்ந்துசுருண்டான்
ஓய்வொடுநெஞ்சமொடுங்கவுலர்ந்தான்
ஏயனபன்னினனின்னனசொன்னான். (நகச)

அனுமன் புலம்புதல்.

வேறு.

அன்னமேயென்னும்பெண்ணினருங்கலக்கலமேயென்னும்
என்னமேயென்னுந்தெய்வமில்லையோயாதுமென்னும்
சின்னமேசெய்யக்கண்டுந்தீவினைநெஞ்சமாவி
பின்னமேயாயதில்லையென்னும்பராற்றல்பேர்ந்தான். (நகஞ)

எழுந்தவன்மேலேபாயவெண்ணும்பரிடைத்தள்ளி
விழுந்துவெந்துயிர்த்துவிம்மிவீங்கும்போய்மெலியும்வெந்தீக்
கொழுந்துகளுயிர்க்கும்யாக்கைகுலைவுறுந்தலைமேற்கொண்டுற்
றுழுந்தரைதன்னைப்பின்னையினையவுரைப்பதாலன். (நகட)

முடிந்ததுநந்தமெண்ணுழுமுலகிற்குங்கங்குல்
விடிந்ததென்றிருந்தேன்மீளவெந்துயரிருளின்வெள்ளம்
படிந்ததுவினையின்செய்கைபரந்ததுபாவிவாளால்
தடிந்தனன்றிருவையம்தாதவிர்ந்ததுதருமமம்மா. (சஎ)

பெருஞ்சிறைக்கற்பிழுஎப்பெண்ணினைக் * கண்ணிற்கொல்ல
இருஞ்சிறகற்றபுட்போல்யாதுமொன்றியற்றலாற்றேறன்
பருஞ்சிறையழுங்குகின்றேறனெம்பிரான்றேவிபட்ட
அருஞ்சிறைமீட்டவண்ணமழகிதுபெரிதுமம்மா. (சஅ)

பாதகவரக்கன்றெய்வப்பத்தினித்தவத்துளாஎப்
பேதையைக்குலத்தின்வந்தபிழைப்பிலாதாஎப்பெண்ணைச்
சீதையைத்திருவைத்தீண்டிச்சிறைவைத்ததீயோன்சேயை
காதவுங்கண்டினின்றகருமமேமகருணைத்தம்மா. (சக)

† கல்விக்குநிமிர்ந்தகீர்த்திக்காகுத்தன்றூதனுகிச்
சொல்விக்கவந்துபோனைஞயவித்துயர்செய்தாரை
வெல்விக்கவந்தேதனுன்னைமீட்பிக்கவன்றுவெய்தின்
கொல்விக்கவந்தேதனென்றேர்கொடும்பழிகூட்டிக்கொண்டேன். (சஅ)

வஞ்சியையெங்குங்காணுதுயிரினைமறந்தானென்னைச்
செஞ்சிலையுரவோன்றேடித்திரிகின்றுளங்தேற
அஞ்சொலாளிருந்தாள்கண்டேனென்றயானரக்கன்கொல்லத்
துஞ்சிஞனென்றுசொல்லத்தேன்றினேன்றேற்றமீதால். (சக)

அருங்கடல்கடந்திவ்வூரையள்ளெரிமடுத்துவெள்ளக்
கருங்கடல்கட்டிமேருக்கடந்தாருமருந்துகாட்டிக்
குரங்கினியுன்றேடொப்பதில்லெனக்களிப்புக்கொண்டேன்
பெருங்கடற்கோட்டங்தேய்வையாயதென்னடிமைப்பெற்றி. (சஉ)

விண்டுநின்றுக்கைசிந்தப்புல்லுயிர்விட்டிலாதேன்
கொண்டுநின்றுனைக்கொல்லக்கூசினேனெனதிரகொல்லக்
கண்டுநின்றேறனைநன்றென்றையினிற்கலத்தின்வெண்சோ
றுண்டுநின்றுய்யவல்லேலெனளியையேனுவொருவனுள்ளேன். (சங)

என்னநின்றிரங்கிக்கள்வனையோத்திமேலெழுவெனென்று
சொன்னதுமுண்டுபோனசுவடுண்டுதாடர்ந்துசெல்லின்
மன்னனிங்குற்றதன்மையுணர்கிலன்வருவதாரேன்
பின்னினிமுடிப்பதியாதென்றிரங்கினனுணர்வுபெற்றான். (சச)

உற்றதையுணர்த்திப்பின்னையுலகுடையொருவனேமும்
இற்றுறினிற்றுமாள்வனென்றெனினெண்ணமெண்ணிச்

---

* கண்ணிற்கொல்ல-கண்ணெதிரில்கொலபுரிய.

† கல்விக்கு—கல்வியில்.

சொற்றுதுசெய்வென்வேலேர்பிறிதிலென்றுணிவிற்றென்னைப்
பொற்றடந்தோளான்வீரன்பொன்னடிமருங்கிற்போனான். (நந)

இராமன்காலடியிலனுமன் விழுந்து புலம்புதல்.

சிங்கவேறனையவீரன்செறிகழற்பாதஞ்சேர்ந்தான்
அங்கமுமனமுங்கண்ணுமாவியுமலக்கணுற்றான்
பொங்கியபொருமல்வீங்கியுயிர்ப்பொடுபுரத்தைப்போர்ப்ப
வெங்கணீரருவிசோரமால்வரையென்னவீழ்ந்தான். (நசு)

வீழ்ந்தவன்றன்னைவீரன்விளந்ததுவிளம்புகென்னத்
தாழ்ந்திருதடக்கைபற்றியெடுக்கவுந்தாரிக்கிலாதான்
ஆழ்ந்தெழுதுன்பத்தாளையரக்கனின்றயில்கொள்வாளால்
போழ்ந்தனனென்னக்கூறிப்புரண்டனன்பொருமுகின்றான். (நஎ)

துடித்திலனுயிர்ப்புமில்லனிமைக்கிலன்றுள்ளிக்கண்ணீர்
பொடித்திலன்யாதுமொன்றும்புகன்றிலன்பொருமியுள்ளம்
வெடித்திலன்விம்மிப்பாரின்வீழ்ந்திலன்வியர்த்தானல்லன்
அடுத்துளதுன்பம்யாவுமறிந்திலராமரேயும். (நஅ)

இராமன்காலடியில் வானரர் விழுதல்.

சொற்பதங்கேட்டலோடுந்துணுக்குறவுணர்வுசோர
நற்பெருவாடையுற்றமரங்களினடிக்கமெய்தாக்
கற்பகமனையவள்ளல்கருங்கழற்கமலக்கான்மேல்
வெற்பினமென்னவீழ்ந்தார்வானரவீரரெல்லாம். (நக)

இராமன் மூர்ச்சையுறல்.

சித்திரத்தன்மையுற்றசேவகனுணர்வுதீர்ந்தான்
மித்திரர்வதனநோக்கானிளையவன்வினவப்பேசான்
பித்தருமிவற்பொருதபோரபிமானமென்னும்
சத்திரமார்பிற்றைக்கவுயிரிலனென்னச்சாய்ந்தான். (கூ0)

இலக்குமணன் அயர்தல்.

நாயகன்றன்மைகண்டுந்தமக்குற்றநாணம்பார்த்தும்
ஆயனகருமமீளவழிவுற்றவதனைப்பார்த்தும்
வாயொடுமனமுங்கண்ணும்யாக்கையுமயர்ந்துசாம்பித்
தாயினையிழந்தகன்றிற்றம்பியுந்தலத்தணைந்தான். (கூக)

விபீடணனையங்கொள்ளுதல்.

தொல்லையதுணர்த்தக்கவீடணன்றுளக்கமுற்றான்
எல்லையிறுன்பமூன்றவிடையொன்றுந்தரிக்கிலாதான்
வெல்லவுமரிதுராசமியடலல்விளந்ததென்னைக்
கொல்வதுமதிக்குமென்றுமனத்திசையங்கொண்டான். (கூஉ)

விபீடணன் இராமனுக்குச்சைத்தியோபசாரஞ்செய்ய
மூர்ச்சைதெளிதல்

சீதநீர்முகத்தினப்பிச்சேவகன்மேனிதீண்டிப்
போதம்வந்தெய்தற்பாலயாவையும்புரிந்துபொற்பூம்
பாதமுங்கையுமெய்யும்பற்றினன்வருடலோடும்
வேதமுங்காணுவள்ளல்விழித்தனன்விழியைமெல்ல. (சுகூ)

ஊற்றுவார்கண்ணீரோடுமுள்ளழிந்துற்றதெண்ணி
ஆற்றுவானல்லனாகியயர்கின்றானெனினுமையன்
மாற்றுவானல்லன்மானமுயிருகவருந்துமென்றுத்
தேற்றுவானினைந்துதம்பியிவையிவைசெப்பலுற்றான். (சுசூ)

இலக்குமணனதறவுரை.

முடியுநாட்டானேவந்துமுற்றிழைற்றுன்பமுந்நீர்ப்
படியுமாஞ்சிறியோர்தன்மைநினைக்கிதுபழியிற்றுமால்
குடியுமாசுண்டதென்னினறத்தொடுமூலகைக்கொன்று
கடியுமாறன்றிச்சோர்ந்துகழிதியோகருத்திலார்போல். (சுஙி)

தய்யலைத்துணையிலாளைத்தவத்தியைத்தருமக்கற்பின்
தெய்வதத்தன்னைமற்றுன்றேறவியைத்திருவைத்தீண்டி
வெய்யவன்கொன்றெனன்றல்வேதனையுழப்பதின்னும்
உய்யவோகருணையாலோதருமத்தோடுறவுமுண்டோ. (சுசுஙி)

அரக்கரென்னமரர்தாமென்னந்தணர்தாமென்னந்தக்
குருக்களென்முனிவர்தாமென்வேதத்தின்கொள்கைதானென்
செருக்கினர்வலியராகிநெறிநின்றார்சிதைவரென்னு
இருக்குமிதென்னுமிம்மூன்றுலகையுமெரிமடாதே. (சுஎ)

முழுவதேதழுலகமின்னமுறைறமுறைறசெய்கைமேன்மூண்
டெழுவதேதயமாரின்னமிருப்பதேதயறமுண்டென்று
தொழுவதேதமேகமாரிசொரிவதேசார்ந்துநாம்வீழ்ந்
தழுவதேதன்றுநந்தம்விற்றொழிலாற்றலம்மா. (சுஅ)

புக்கிவ்வூரிமைப்பின்முன்னம்பொடிபடுத்தரக்கன்போன
திக்கெலாஞ்சுட்டுவாரேருலகெலாந்தீத்துத்தீர்க்கத்
தக்கநாங்கண்ணீராற்றித்தலைசுமந்திருகைநாற்றித்
துக்கமேயுழப்பமென்றூற்சிறுமையாத்தோன்றுமன்றே. (சுகூ)

அங்குமிவ்வறமேமோக்கியரசிழந்தடவியெய்தி
மங்கையைவஞ்சன்பற்றவரம்பழியாதுவாழ்ந்தேதம்
இங்குமித்துன்பமெய்தியிருத்துமேலெளிமைநோக்கிப்
பொங்குவான்றலையிற்பூட்டியாட்செயப்புகல்வனன்றே. (எ0)

மன்றலங்கோதையாளத்தம்மெதிர்கொணர்ந்துவாளின்
கொன்றவர்தம்மைக்கொல்லுங்கோளிலாநாணங்கூரப்
பொன்றினரென்பராவிபோக்கிலர்பொதுமைபார்க்கின்
அன்றிதுகருமமென்னீயயர்கின்றதறிவிலார்போல். (எக)

சுக்கிரீவன் இராவணன்மார்பில்விழுந்து பழிவாங்குவேமெனல்.

அனையனவிளவல்கூறவருக்கன்சேயயர்கின்றூரேலர்
கனவுகண்டனனேயென்னக்கதுமெனவெழுந்துகாணும்
வினையினியுண்டேவல்லவிளக்கின்வீழ்விட்டிலன்ன
மனையிடையரக்கன்மார்பிற்குதித்துநாம்வம்மினென்றான். (எஉ)

இலங்கையையிடந்துவெங்கணிராக்கதரென்கின்றூரைப்
பொலங்குழைமகளிரோடும்பானுகர்புதல்வரோடும்
குலங்களொடடங்கக்கொன்றுகொடுந்தொழில்குறித்துநம்மேல்
விலங்குவாரென்னிற்றேறவர்விண்ணையுமண்ணில்வீழ்த்தும். (எங)

சுக்கிரீவன் இலங்கையிற்றூவுதல்.

அறங்கெடச்செய்துமென்பதமைந்தனமாகினைய
புறங்கிடந்துழைப்பதென்னைபொருதினிப்புவனமூன்றும்
கறங்கெனத்திரிந்துதேவர்குலங்களுங்கட்டுமென்னை
மறங்கிளர்வயிரத்தோளானிலங்கைமேல்வாவலுற்றான். (எசு)

அனுமனிந்திரசித்தயோத்திசென்றதுகூறல்.

மற்றையவீரரெல்லாமன்னனின்முன்னம்வாவி
ஏற்றுதுமரக்கர்தம்மையில்லொடுமெடுத்தின்றேகல்
உற்றனரூறுதலோடுமுணர்த்துவதுளதென்றுன்னைச்
சொற்றனனநுமன்வஞ்சனையோத்திமெற்போனசூழ்ச்சி. (எஙி)

அதுகேட்டவிராமனவலமிகுந்தாளுதல்.

தாயருந்தம்பிமாருந்தவம்புரிநகரஞ்சாரப்
போயினனென்றமாற்றஞ்செவித்தொளபுகுதலோடும்
மேயினவடியினின்றவேதனைக்கனையவெந்த
தீயிடைத்தணிந்தசீதைபாற்றுன்பந்தீர்ந்தான். (எசு)

இராமன்வருத்தி யுரைத்தல்.

அழுந்தியபாவின்வெள்ளத்தாழிநின்றனந்தர்நீங்கி
எழுந்தனனென்னத்துன்பக்கடலினின்றேறியாரூர்க்
கொழுந்துறுகோபத்தியுகடுக்கமுமனத்தைக்கூட
உழுந்துருள்பொழுதுந்தாழாவினையிலென்மறுக்கமுற்றான். (எஎ)

திருமிச்சீதையோடுமென்கிலதன்றென்றீமை
வேரொடுமுடிப்பதாகவினைந்ததுவேறுபின்னும்

யாரொடுந்தொடருமென்பதறிகிலேனிதனையைய
பேரிடவலதியுண்டோவெம்பியர்பிழைக்கின்றாரோ. (எஅ)

நினைவதன்முன்புசெல்லுமானத்தினெடிதுநின்றான்
வினையொருகணத்தின்முற்றிமீள்கின்றான்வினையேயன்வந்த
மனைபொடிபட்டதங்குமாண்டதுதாரமீண்டும்
எனையனதொடருகின்றதுணர்கிலேனிறப்புங்காணேன். (எக)

தாதைக்குஞ்சடாயுவானதந்தைக்குந்தமியளாய
சீதைக்குங்கூற்றங்காட்டித்தவிர்ந்திலதொருவென்றீமை
பேதைப்பெண்பிறந்துபெற்றதாயர்க்கும்பிழைப்பிலாத
காதற்றம்பியர்க்குமூர்க்குநாட்டிற்குங்காட்டிற்றன்றே. (அ0)

உற்றதொன்றுணராகில்லாருணர்ந்துவந்துருத்தாரேனும்
வெற்றிவெம்பாசம்வீசிவிசித்தவன்கொன்றுவீழ்த்தால்
மற்றைவெம்புள்ளின்வேந்தன்வருகிலன்மருந்துநல்கக்
கொற்றமாருதியுமாங்கில்லாருயிர்கொடுக்கற்பாலார். (அக)

மாகவாகாயஞ்செல்லவல்லையின்வயிரத்தோளாய்
ஏகுவானுபாயமுண்டேலியம்புதின்றவெல்லாம்
சாகமற்றிலங்கைப்போருந்தவிர்கவச்சுழக்கண்கண்கள்
காகமுண்டதற்பின்மீண்டுமுடிப்பெனென்கருத்தையென்றான். (அஉ)

அவ்விடத்திளவலையபாதனையமரிறுக்க
எவ்விடற்குரியான்போனவிந்திரசித்தேதயன்று
தெவ்விடத்தமைவின்மும்மையுலகமுந்தீந்தருவேவா
வெவ்விடர்க்கடலின்வைகல்கேளெனவிளம்பலுற்றான். (அங)

தீக்கொண்டவஞ்சன்வீசத்திசைமுகன்பாசந்தீண்ட
வீக்கொண்டுவீழ்கயாமேலுபாதனும்வெய்யகூற்றைக்
கூய்க்கொண்டுகுத்துண்டன்னென்குலத்தொடுநிலத்தலுதல்
போய்க்கண்டுகோடியன்றேயென்றனன்புழுங்குகின்றான். (அச)

அனுமனிராம விலக்குமணர்களைத் தன்கரபுயங்களிலேற வேண்டுதல்.

அக்கணத்தநுமனின்றானையவென்றேளிறுதல்
கைத்துணைத்தலத்தேதயாதலேறுதிர்காற்றுந்தாழ
இக்கணத்தயோத்திமூதூரெய்தினனிடமுண்டென்னின்
திக்கனைத்தினிலுஞ்செல்வென்யானேபோய்ப்பகையுந்தீர்வென். (அஞ)

அனுமனிலங்கையைப் பேர்த்துக்கொண்டு வரச்சொல்லினுஞ்
செல்வேனெனல்.

எழுபதுவெள்ளத்தோடுமிலங்கையையிடந்தென்றோண்மேல்
தழுவுறவைத்தின்றேறகென்றுரைத்தியேற்சமமென்றக்கோய்

பொழுதிறைதாழ்ப்பதென்னேபுட்பகம்போதன்முன்னம்
குழுவொடுகொண்டுபோவென்கணத்தொடுகுதிப்பென்கூற்றின். (அசு)

கொல்லவந்தானேநீதிகூறினென்விலக்கிக்கொள்வான்
சொல்லவுஞ்சொல்லிநின்றேறன்கொன்றபின்றுன்பமென்னை
வெல்லவுந்தரையின்வீழ்வுற்றுணர்ந்திலென்விரைந்துபோனான்
இல்லையென்றுளனேற்றீயோன்பிழைக்குமோவிழுக்கமுற்றான். (அஎ)

அனுமன் புட்பகத்திற்குமுன்னர் யான்செல்வேனெனல்.

மனத்தின்முன்செல்லுமானம்போனதுவழியதாக
கினைப்பின்முன்னையோத்தியெய்திவருநெறிபார்த்துநிற்பென்
இனிச்சிலதாழ்ப்பதென்னேயேறுதிரிரண்டுதோளும்
புனத்துழாய்மாலைமார்பீர்புட்பகம்போதன்முன்னம். (அஅ)

இராமவிலக்குமணர் அனுமன்றோளிலேறி அயோத்திசெல்ல
ஒருப்படலும் விபீடணன்தடுத்தலும்.

ஏறுதுமென்னுவீரெழுதலுமிறைஞ்சியீண்டுக்
கூறுவதுளதுதுன்பங்கோளுறக்குலுங்கியுள்ளம்
தேறுவதரிதுசெய்கைமயங்கினென்றிகைத்துநின்றேறன்
ஆறினனதனையையமாயமென்றயிர்க்கின்றேறலல். (அக)

இந்திரசித்துச்செய்தது மாயையாயிருக்கலாமென
விபீடணன் கூறுதல்.

பத்தினிதன்னைத்தீண்டிப்பாதகன்படுத்தபோது
முத்திறத்துலகும்வெந்துசாம்பராய்முடியுமன்றே
அத்திறமானதேனுமயோத்திமேற்போனதன்மை
சித்திரமிதனையெல்லாந்தெரிகலாஞ்சிறிதுபோழ்தின். (கo)

விபீடணன் சீதையிருப்பிடஞ்செல்லுதல்.

இமையிடையாகயான்சென்றேறந்திழையிருக்கையெய்தி
அமைவுறநோக்கியுற்றதறிந்துவந்தறைந்தபின்னர்ச்
சமைவதுசெய்வதென்றுவீடணன்விளம்பத்தக்க
தமைவதென்றிராமன்சொன்னனந்தரத்தவனுஞ்சென்றான். (கக)

விபீடணன் சீதையைவணங்குவெய்திச்சென்றுகாண்டல்.

வண்டினதுருவங்கொண்டான்மானவன்மனத்திற்போனான்
தண்டலையிருக்கைதன்னைப்பொருக்கெனச்சார்ந்துதானை
கண்டனனென்பமன்றேகண்களாற்கருத்தாலாவி
உண்டிலையென்னச்செய்தவேவியமொக்கின்றாளை. (கஉ)

தீர்ப்பது துன்பம்யானென்னுயிரொடென்றுணர்ந்துசிந்தை
போர்ப்பதுமின்சொலன்னேதிரிசடைபேசப்போந்தாள்
கார்ப்பெருமேகம்வந்துகடையுகங்கலந்தவன்ன
ஆர்ப்பொலியமிழ்தமாகவாருயிராற்றினுளே. (கூக)

வஞ்சனையென்பதுன்னிவானுயருவகைவகும்
நெஞ்சினுகியுள்ளந்தள்ளுறலொழிந்துநின்றான்
வெஞ்சிலைமைந்தன்போனுணிகும்பலேவள்வியானென்
றெஞ்சலிலரக்கன்சேனையெழுந்தெழுந்தேதகக்கண்டான். (கூச)

வேழ்விக்குவேண்டற்பாலகலப்பையும்விறகுநெய்யும்
வாழ்விக்குந்தாழ்விலென்னும்வானவர்மறக்கங்கண்டான்
சூழ்வித்தவண்ணமீதேதானன்றெனத்துணிவுகொண்டான்
தாழ்வித்தமுடியான்வீரன்றுமரைச்சரணந்தாழ்ந்தான். (கூஞ)

விபீடணன் சீதை இருக்கின்றுள் நடந்ததுமாயமெனல்.

இருந்தனடேவியானேயெதிர்ந்தனெனென்கணுர
அருந்ததிகற்பிலுளுக்கழிவுண்டோவரக்கனம்மை
வருந்திடமாயஞ்செய்துநிகும்பலைமருங்குபுக்கான்
முருங்கழல்வேள்விமுற்றிமுதலறமுடிக்கமூண்டான். (கூசு)

அனைவருமகிழ்வுறல்.

என்றலுமுலகமேழுமேழுமாத்தீவுமெல்லை
ஒன்றியகடல்களேழுமொருங்கெழுந்தார்க்குமோதை
அன்றெனவாகுமென்னவமரருமயிர்க்கவார்த்துக்
குன்றினமிடியத்துள்ளியாடினகுரக்கினீட்டம். (கூஎ)

வீரனுமையந்தீர்ந்தான்விடணன்றன்னேமெய்யோ
டார்வமுழுயிருமொன்றவழுந்துறத்தழுவியைய
தீர்வதுபொருளோதுன்பநீயுண்டுதெய்வமுண்டு
மாருதியுண்டுநாஞ்செய்ததவமுண்டுமறையுமுண்டால். (கூஅ)

இந்திரசித்தின்மீது நிகும்பலைக்கு இலக்குமணனேயேவ
விபீடணன் வேண்டுதல்.

என்றலுமிறைஞ்சியாகமுற்றுமேல்யாரும்வெல்லார்
வென்றியுமரக்கர்மாடேவிடையருளினவலோடும்
சென்றவனுவியுண்டுவேள்வியுஞ்சிதைப்பெனென்றான்
நன்றதுபுரிதிரென்றுநாயகனவில்வதானான். (கூக)

உரு - வது, மாயாசீதைப்படலம் - முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-உஅகூ().

உசு-வது, நிகும்பலேப்படலம்.

இலக்குமணற்கிராமன் நீ பிரமாத்திரம் அவன்விடாவிடில்
விடாதேதெயனல்.

தம்பியைத்தழுவியையன்றுமரைத்தவிசின்மேலான்
வெம்படைதொடுக்குமாயின்விலக்குவான்பொருட்டாலந்த
அம்புநீதுரப்பாயல்லையனையதுதுரந்தகாலை
உம்பருமுலகுமெல்லாம்வினியுமஃதொழிதியென்றான். (க)

சங்காரநாராயணத்திரங்களையு மவ்வாறெயனல்.

மூக்கணன்படையுமாழிமுதலவன்படையுமுன்னின்
றொக்கவேவிடுமேவிட்டாலவற்றையுமவற்றாலோயத்
தக்கவாறியற்றிமற்றுன்சிலைவலித்தருக்கினாலே
புக்கவனுவிகொண்டுபோதுதிபுகழின்மிக்கோய். (உ)

பலவிதப்போர்புரிந்து காலந்தாழ்த்தாமல்
இந்திரசித்தினைக் கொல்லுதியெனல்.

வல்லனமாயவிஞ்சைவகுத்தனவறிந்துமாளக்
கல்லுதிதருமமென்னுங்கண்ணகன்கருத்தைக்கண்டு
பல்பெரும்போருஞ்செய்துவருந்தலையற்றம்பார்த்துக்
கொல்லுதியமரர்தங்கள்கூற்றினைக்கூற்றமொப்பாய். (ங)

பதைத்தவன்வெம்மையாடிப்பல்பெரும்பகழிமாரி
விதைத்தவன்விதையாநின்றுவிலக்கினுமெலிவுபிக்கால்
உதைத்தவன்சிலையின்வாளிமருமத்தைக்கருதியோடி
வதைத்தொழில்புரிதிசாபநூனெறிமறப்பிலாதாய். (ச)

தொடுப்பதன்முன்னம்வாளிதொடுத்தவைதுறைகடோறும்
தடுப்பனதடுத்தியெண்ணிக்குறிப்பினுணர்ந்துதக்க
கடுப்பினுமளவிலாதகதியினுங்கணைகள்காற்றின்
விடுப்பனவவற்றைநோக்கிவிடுதியால்விரைவிலாதாய். (ஙு)

இலக்குமணற்கிராமன் வில்லொன்றளித்தல்.

என்பனமுதலயாவும்யாவையுமியம்பியேற்ற
முன்பனேநோக்கியையமூவகையுலகுந்தாஞ்சுத்
தன்பெருந்தன்மைதானுமறிகிலாவொருவன்றுங்கும்
வன்பெருஞ்சிலையீதாகும்வாங்குதிவலமுங்கொள்வாய். (சு)

கவசமுமளித்தல்.

இச்சிலையியற்கைமேனுட்டமிழ்முனியியம்பிற்றெல்லாம்
அச்சனைக்கேட்டாயன்றேறயாயிரமௌலியண்ணல்
மெய்ச்சிலைவிரிஞ்சன்மூட்டும்வேள்வியின்வேட்டுப்பெற்ற
கைச்சிலையென்றுதானேகொடுத்தனன்கவசத்தோடும். (எ)

அம்புக்கூடளித்தல்.

ஆணிபிவ்வுலகுக்கானவாழியான்புறத்திறுர்த்த
தூணியுங்கொடுத்துமற்றுழுறுதிகள்பலவுஞ்சொல்லித்
தாணுவின்ரூற்றத்தானத்தழுவினன்றழுவலோடும்
சேணுயர்விசும்பிற்றேறவர்தீர்ந்ததெஞ்சிறுமையென்ரூர். (அ)

மங்கலந்தேவர்கூறவானவர்மகளீர்வாழ்த்தப்
பங்கமிலாசிகூறப்பலாண்டிசைபரவப்பாகத்
திங்களின்மௌலியண்ணறிரிபுரந்தீக்கச்சீறிப்
பொங்கினனென்னத்தோன்றிப்பொலிந்தனன்போர்மேற்போவான். (கூ)

இராமனைவணங்கி இலக்குமணன் நிகும்பலைநோக்கிச் செல்லுதல்.

மாருதிமுதல்வராயவானரத்தலைவரோடும்
வீரஞ்சேறியென்றுவிடைகொடுத்தருளும்வேலை
ஆரியன்கமலபாதமகத்திறும்புறத்துமாகச்
சீரியசென்னிசேர்த்துச்சென்றனன்றருமச்செல்வன். (கo)

பொலங்கொண்டலனையமேனிப்புரவலன்பொருமிக்கண்ணீர்
நிலங்கொண்டுபடரின்றுநெஞ்சழிவானைத்தம்பி
வலங்கொண்டுவயிரவல்வில்லிடங்கொண்டுவஞ்சன்மேலை
சலங்கொண்டுகடிதுசென்ரூன்றலைகொண்டுவருவெனென்ரேற. (கக)

இராமன் பிரிந்துநிற்றல்.

தான்பிரிகின்றிலாததம்பிவெங்கடப்பிற்செல்லா
ஊன்பிரிகின்றிலாதவுயிரெனமறைதலோடும்
வான்பெருவேள்விகாக்கவளர்கின்றபருவநாளில்
தான்பிரிந்தேதகக்கண்டதயரதன்றன்னையொத்தான். (கஉ)

வேறு.

நிகும்பலையு மசுரசேனை யூகமும்.

சேனைபதியேமுதல்சேவகர்தாம்
ஆனைகிமிர்கொள்ளிகொளங்கையினர்
கானைர்நெறியும்மலையுங்கழியப்
போனைர்கணிகும்பலைபுக்கனரால். (கங)

உண்டாயதொராலுலகுள்ளொருவன்
கொண்டானுறைகின்றதுபோற்குலவி
விண்டானும்விழுங்கவிரிந்ததனைக்
கண்டாரவரக்கர்கருங்கடலே. (கச)

நேமிப்பெயர்யூகநிறைத்துநெடுஞ்
சேமத்ததுநின்றதுதீவினையோன்
ஓமத்தனல்வெவ்வடவைக்குடனே
பாமக்கடனின்றதொர்பான்மையதே. (கஞ)

காராயினகாய்கரிதேர்பரிமாத்
தாராயிரகோடிதழீஇயதுதான்
நீராழியொடாழிநிறீஇயதுபோல்
ஓராயிரம்யோசனையுள்ளதனை. (கசு)

பொற்றேர்பரிமாகரிமாபொருதார்
எற்றேறபடைவீரரையெண்ணிலமால்
உற்றேறவியயூகமுலோகமுடைச்
சுற்றுயிரமுடுசுலாயதனை. (கஎ)

வண்ணக்கருமேனியின்மேன்மழைவாழ்
விண்ணேத்தெதாடுசெம்மயிர்வீசுதலால்
அண்ணற்கரியானனலம்படைவெம்
பண்ணேக்கடல்போல்வதொர்பான்மையதே. (கஅ)

வழங்காசிலநாவெலிவானின்வரும்
பழங்கார்முகமொத்த * பணிக்குலமும்
தழங்காகடல்வாழ்வனபோற்றகைசால்
முழங்காமுகிலொத்தனமாமுரசே. (கக)

நிகும்பலை காப்பவர்கட்கும் வானரருக்கும் யுத்தம்.

வலியானவிராகவன்வாய்மொழியால்
சலியாதநெடுங்கடலுனெனலாய்
ஒலியாதுறுசேனையையுற்றொருநாள்
மெலியாதவரார்த்தனர்விண்கிழிய. (உ0)

ஆர்த்தாரெதிரார்த்தவரக்கர்குலம்
போர்த்தார்முரசங்கள்புடைத்தபுகத்
தூர்த்தாரிவர்கற்படைசூன்முகிலின்
நீர்த்தாரையினம்பவர்நீட்டினரால். (உக)

---

* பணிலம் – கடைக்குறை; பணையென்றும் பாடம்.

மின்னும்படைவீசலின்வெம்படைமேல்
பன்னுங்கவிமீதுபடிந்துளதால்
துன்னுந்துறைநீர்நிறைவாவிதொடர்ந்
தன்னங்கள்படிந்தனவாமெனலாய். (உஉ)

வில்லும்மழுவும்மெழுவும்மிடலோர்
பல்லுந்தலையும்முடலும்படியில்
செல்லும்படிசிந்தினசென்றனவால்
கல்லும்மரமுங்கரமுங்கதுவ. (உங)

வாலுந்தலையும்முடலும்வயிறும்
காலுங்கரமுந்தரைகண்டனவால்
கோலும்மழுவும்மெழுவுங்கொழுவும்
வேலுங்கணையும்வளையும்விசிற. (உச)

வென்றிப்படைவீரனைவீடணனீ
நின்றிக்கடைதாழுதனீதியதே
சென்றிக்கடிவேள்விசிதைத்திலையேல்
இன்றிக்கடல்வெல்கிலம்யாமெனலும். (உ.ஙி)

தேவாசுரருந்திசைநான்முகனும்
மூவாமுதலீசனுமூவுலகின்
கோவாகியகொற்றவனும்முதலோர்
மேவாதவரில்லைவிசும்புறைவோர். (உசு)

பல்லார்படைநின்றனபல்லணியால்
பல்லார்படைநின்றனபல்பிறவெண்
பல்லார்படைநின்றனபல்லியமும்
பல்லார்படைநின்றனபல்படையே. (உஎ)

இ-ள். பல்படை – பல்வகைப்பட்ட சேனைகளில், பல்லார் – பலவீரர்களேறிய, படைநின்றன – தேர்ப்படைநின்றன, பல்லணியா – பலவணியாக, பல் – கல்லணை, ஆர் – தங்கிய, படைநின்றன – குதிரைப்படைநின்றன, பல்பிறைவெண்பல்லார் – பலபிறைபோலும் வெண்மையாகிய பற்களையுடையாராகிய, படைநின்றன-காலாட்படைநின்றன, பல்லியம்-பலவாச்சியமும், உம்பல் – யானைகளும், ஆர்-நிரம்பிய, படைநின்றன – படைகள் நின்றன;—எ-று.

பல்லம் ஆகவென்பவற்றில் ஈறழிவும், உம் பல்லாரென்பதில் லகர வெழுத்துப்பேறும் செய்யுள் விகாரம். பிறைவெண் பல்லார்படையென்றமையினதற்குக்காலாட்படையெனவும் பரிகாலாள் களிகளைப்பின்னே கூறினமையின் முன்னே பொதுப்படநின்ற பல்லார்படை யென்றதற்

குத் தேர்ப்படையெனவும் பொருள்கூறினும். நால்வகைப்படையையு முறைபிறழக்கூறியது, வானரவீரர்களும்அப்படைத் தலைவர்களும் பொருதபூசலால் அவை கலங்கினின்றமை தோன்றற்கு. இச்செய்யுள் சொற் பின்வருநிலை. (உஎ)

இலக்குமணன் அசுரசேனையை அழித்தல்.

அக்காலையிலக்குவனப்படையுள்
புக்கானயிலம்புபொழிந்தனனால்
உக்காரவரக்கர்தமொழியப்
புக்கார்நமனுறைதன்புலமே. (உஅ)

தேருமதமாகரிதேர்பரிமா
நூறுயிரகோடியினூழில்படச்
சேரூர்குருதிக்கடலிற்றிடரிற்
கூறுயுகவாவிகுறைத்தனனால். (உக)

வாமக்கரிதானழிவார்குழிவன்
றீமொய்த்தவரக்கர்கள்செம்மயிரின்
தாமத்தலைபுக்கதழங்கெரியின்
ஓமத்தைதிகர்த்தவுலப்பிலவால். (உ0)

சிலையின்கணையூடுதிறந்தனதிண்
கொலைவெங்களி * மால்கரிசெம்புனல்கொண்
டுலவின்றுகிடந்தனவொத்தனவால்
மலையுஞ்சுனையும்வயிறும்முடலும். (உக)

விற்றொழுத்தியவெங்கணையெண்கின்வியன்
பற்றொழுத்தியபோற்படியப்பலவும்
முற்றச்சுடர்மின்மினிமொய்த்துளவன்
புற்றொழுத்தமுடித்தலைபூழியன. (உஉ)

படுமாரிநெடுங்கணைபாய்தலினால்
விடுமாறுதிரப்புனல்வீழ்வனவால்
தடுமாறுநெடுங்கொடிதாழ்கடல்வாய்
நெடுமாமுகில்வீழ்வனிகர்த்தனவால். (உங)

மின்னார்கணைதாளறவீசவிழுந்
தன்னாருதிரத்துளமுந்துதலால்
ஒன்னார்முழுவெண்குடையொத்தனவால்
சென்னைகம்விழுங்கியதிங்களினை. (உச)

---

* மால் – பெரிய.

கொடுநீள்கரிகையொடுதாள்குறையப்
படுநீள்குருதிப்படர்கின்றனவால்
அடுநீளுயிரின்மையினுழ்கிலவான்
நெடுநீரினிடங்கர்நிகர்த்தனவால். (கஅஙி)

கரியுண்டகளத்திடையுற்றனகார்
நரியுண்டியுகப்பனநட்டனவால்
இரியுண்டவரின்னியம்விட்டிலதால்
வரியுண்டவுடற்பொறைமானினவால். (கஅசு)

வாயிற்கனல்வெங்கடுவாளியினம்
பாயப்பருமக்குலம்வேவனவால்
வேயுற்றநெடுங்கிரிமீவெயிலாம்
தீயுற்றனபோன்றசினக்கரியே. (கஅஎ)

அலைவேலையரக்கரையெண்கிணுகிர்த்
தலைமேன்முடியைத்தரைதள்ளுதலால்
மலைமேலுயர்புற்றினைவள்ளுகிரால்
நிலைபேரமறிப்பநிகர்த்தனவால். (கஅஅ)

மாவாளிகண்மாமழைபோல்வரலால்
மாவாளிகள்போர்தெறுமாமறவோர்
மாவாளிகள்வன்றலையின்றலைவாம்
மாவாளிகளோடுமறிந்தனரால். (கஅக)

இ-ள். மா-அழகிய, வாளிகள்-அம்புகள், மாமழைபோல் – பெருமழைபோல், வரலால்-வந்துபாய்வதினால், மா–பெரிய, ஆளிகள் – யாளிகளை, போர்தெறும் – போரிற்கொல்லுகின்ற, மாமறவோர்-சிறந்தகாலாள் வீரர்களும், மாவாளிகள் – யானைவீரர்களுங் குதிரைவீரர்களும், வன்றலையின் தலை – திண்ணியதலையில், வாம் – தாவிமொய்க்கின்ற, மாவளிகளோடு-மாவாகியவண்டுகளோடு, மறிந்தனர்-இறந்துருண்டனர்கள்.

அழகென்றது போரின்முறைமையிற் பிறழாமையை. ஆளிநீட்டல். அணி – ஆகுபெயர், அது தும்பையென்பது போரினிலை கூறலாற் பெற்றும். (கஅக)

அங்கங்கிழியத்துணிபட்டதலால்
அங்கங்கிழிகுற்றவமர்த்தலைவர்
அங்கங்கிழிசெம்புனல்பம்பவமைந்
தங்கங்கணிரம்பியலம்பியதால்.

இ-ள். அங்கங்கு-அவ்வப்போர்த்துறைகளில், இழிகுற்ற – வெற்றியின்மையடைந்த, அமர்த்தலைவர் – போர்த்தலைவர்கள், அங்கம் – உறுப்புகள், கிழிய – பிளவுறும்படி, துணிபட்டதலால்–துணிபட்டமையால்,

அம்-அழகிய, கங்கு – பருந்துகள், இழி-அஞ்சாது உண்ண இழிகின்ற, செம்புனல்-உதிரமானது, பம்ப–பரவ, அலைந்து – அலைகளெறிந்து சென்று, ஆம் – அவ்விடத்துக் கிடக்கின்ற, கங்கள் – சிரங்களை, நிரம்பி–முழுமையு நிறைந்து, அலம்பியது-தகளொழியக் கழுவியது,—எ-று.

போர்த்துறைகளென்றது வில் வாள் தண்டுமுதலிய படைகளாற் செய்யும் போர்வகைகளையாகலின் அதிக்குப்பன்மைப்பொருட்டு. இராவணனது மூதற்போர் நிகழ்ந்தநாட்டொட்டு அரக்கருடைய ஆணுண்டுடல் தனைசந்தனவாகலின் அங்கங்கென்றார். ஆம் என்னும் பெயரெஞ்சுகிளவி அம்மெனத் தொகுத்தலாயிற்று.

வன்றூணையைவார்கணைமாரியிறல்
* மூன்றுதையொர்தேர்கொடுமொய்பலதேர்
பின்றுவெதிர்தானவர்போரணியைக்
கொன்றுனனவெய்துகுறைத்தனனால். (சக)

வே று.

மலைகளுமழைகளும்வானமீன்களும்
அலையவெங்கால்பொரவழிந்தவாமென
உலைகொள்வெங்கனல்பொதியோமமுற்றவால்
தலைகளுமுடல்களுஞ்சாமுந்தாவுவ. (சஉ)

வாரணமனையவன்றுணிப்பவான்படர்
தாரணிமுடிப்பெருந்தலைகடாக்கலால்
ஆரணமந்திரமனையவோதிய
பூரணமணிக்குடமுடைந்துபோயதால். (சங)

தாறுகொண்மதகரிசுமந்துதாமரை
சீறியநெடுந்தலையுருட்டிச்செந்நிறத்
தாறுகள்செறிந்தபேருதிரத்தேதங்கலை
ஆறுகளெழுங்கனலவியச்சென்றவால். (சச)

தெரிகணைவிசும்பிடைச்சுமந்துசெம்மயிர்
வரிகழலரக்கர்தந்தடக்கைவாளொடும்
உருமெனவிழுதலினனலுக்கோக்கிய
எருமைகண்மறிந்தனமறியுமீர்ந்தவால். (சஞ)

அங்கடங்கழிந்தபோருவிக்குன்றினின்
அங்கடங்கிழிந்திலராழிந்தவாடவர்
அங்கடங்கலும்படர்குருதியாழியின்
அங்கடங்கினர்தொடர்பகழியஞ்சினர். (சட)

---

* அன்றுயிரமோலியநந்தனமாப் என்றும்பாடம்.

இ-ள். அம் – (சித்திரத்தொழில்பெற்று) அழகாகிய, கடம் – கன்னத்தினின்றும், கழிந்த – நீங்கி ஒழுகுகின்ற, பேரருவி – மிக்கமதவருவியையுடைய, குன்றினின் – யானையைப்போல, ஆம் – ஆகிய, கடம் – உடல், கிழிந்திலர் – பிளந்திலராகி, அழிந்த – ஊக்கமழிந்த, ஆடவர் – இராக்கதபுருடர், தொடர்-மாலைபோல்வருகின்ற, பகழி – அம்புகளுக்கு, அஞ்சினர் – அஞ்சினவராகி, (வேறொளிப்பிடமின்மையால்) அங்கடங்கலும் – அப்போர்க்களமுழுமையும், படர் – பரவியோடுகின்ற, குருதியாழியின் – உதிரக்கடலாகிய, அங்கண் – அவ்விடத்து, தங்கினர்-மூழ்கியிருந்தனர்,—எ–று.

ஆமென்பது அம்மெனவும், அங்கட்டங்கினென்பது அங்கடங்கினெனவும் முறையே குறுக்கலும் தொகுத்தலும்பெற்றன. கற்பினின்வழாஅ நற்பலவுதவி, பாம்பினிற்கடிது தேள் என்பனபோலக் குன்றினினெனவந்த இன்னுருபு ஆமென்னும் பெயரெச்சங்கொண்டது. இங்ஙனஞ் சாரியைபெற்றுவருதலே, இன்சாரியை முழுவதுங் கெடுமிடத்துணர்த்தும் "இன்னெனவருஉம் வேற்றுமையுருபிற் கின்னென்சாரியையின்மைவேண்டும்" என்னுஞ்சூத்திரத்தை, இன்சாரியைமுதறிரியுமாறு கூறும். அவற்றுள் – இன்னினிகரமென்னுஞ் சூத்திரத்தோடு சாரவையாமையால், உரையாசிரியரும், இன்மைவேண்டு மென்னுமிடத்து உம்மை தொக்குநின்றதாக்கியதலால், நச்சினியார்க்கினியாரும் அமைத்தனர். கடங்கழிந்த பேரருவிக்குன்றினினென்னு முவமைமுகத்தானே இராமாநுசரெய்தகணையால் தைப்புண்டமத்தகத்தினின்று மிரண்டுபாரிசங்களிலும் பெருங்குருதி யொழுகலுற்ற வுடலினராயின ராடவரென்பது. இதுமெய்யுவமை. (சசு)

காறலத்தொடுதுணிந்தழியக்காய்கதிர்க்
கோறலத்தலையுறமறுக்கங்கூடினர்
வேறலத்தூன்றினர்துளங்குமெய்யினர்
நாறலக்குடரினர்பலருநண்ணினர். (சஎ)

பொங்குடறுணிந்ததம்புதல்வர்போக்கிலார்
தொங்குடற்றேரிண்மிசையிருந்துசோர்வுற
அங்குடற்றம்பியைத்தழுவியண்மினர்
தங்குடர்முதுகிடைச்சொரியத்தள்ளுவார். (சஅ)

மூடியநெய்யொடுநறவுமுற்றிய
சாடிகள்பொரியொடுதகர்ந்துதள்ளுறக்
கோடிகள்பலபலகுழாங்குழாங்களா
ஆடினவறுகுறையறுக்குமாக்கைகள். (சஃ)

காலெனக்கடுவெனக்கலிங்கக்கம்மியர்
நூலெனவுடற்பொறைதொடர்ந்தநோயெனப்

பாலுறுபிரையெனக்கலந்துபன்முறை
வேலுறுசேனையைத்துணித்துவீழ்த்திரண். (நம)

கண்டனன்றிசைதொறுநோக்கிக்கண்ணகன்
மண்டலமறிகடலன்னமாப்படை
விண்டெறிகால்பொரமறிந்துவீற்றுறும்
தண்டலையாமெனக்கிடந்ததன்மையே. (நக)

மிடலின்வெங்கடகரிப்பிணத்தின்விண்டொடும்
திடலும்வெம்புரவியுந்தேருஞ்சிந்திய
உடலும்வன்றலைகளுமுதிரத்தோங்கலைக்
கடலுமல்லாலிடையொன்றுங்கண்டிலன். (நஉ)

நூறுநூறாயிரகோடிநோன்கழல்
மாறுபோரரக்கரையொருவன்வாட்கணை
கூறுகூறாக்கியகுவையின்சோரியின்
ஆறுமேயன்றியோராக்கைகண்டிலன். (நங)

* நஞ்சிறும்வெய்யவர்நடுங்கிநாவுலர்ந்
தஞ்சினர்சிலர்சிலரடைகின்றூர்சிலர்
வெஞ்சினவீரர்கண்மீண்டிலாதவர்
துஞ்சினர்துணையிலரெனத்துளங்கினர். (நச)

ஓமவெங்கனலவிந்துழைக்கலப்பையும்
காமர்வண்டருப்பையும்பிறவுங்கட்டற
நாமமந்திரத்தொழின்மறந்துநந்துறு
தூமவெங்கனலெனப்பொலிந்துதோன்றினன். (நஙஙங

இந்திரசித்து நியமங்குலைந்து வருந்திக்கூறுதல்.

மானமும்பாழ்படவகுத்தவேள்வியின்
மோனமும்பாழ்படமுடிவிலாமுரட்
சேனையும்பாழ்படச்சிறந்தமந்திரத்
தேனையும்பாழ்படவினையசெப்பினன். (நிக)

வெள்ளமையைந்துடன்விரிந்தசேனையின்
உள்ளதக்குரோணியீரைந்தொடோயுமால்
எள்ளருவேள்விநின்றினிதியற்றுதல்
பிள்ளைமையனையதுசிதைந்துபோர்ந்ததால். (கூ0)

தொடங்கியவேள்வியின்றூமவெங்கனல்
அடங்கியதவிந்துளதமையுமாமன்றே
இடங்கொடுவெஞ்செருவென்றியின்றெனக்
கடங்கியதென்பதற்கேதுவாகுமால். (கூக)

ஆங்கதுகிடக்கநான்மனிசர்க்காற்றலென்
நீங்கிலனெனன்பதோரிழிவுநேரூற
ஈங்குநின்றியாவருமியம்பவெண்குலத்
தோங்குபேராற்றலுமொளியுமொல்குமால். (கூஉ)

மந்திரவேள்விபோய்மடிந்ததாமெனச்
சிந்தையினினைந்துநொந்திருந்துதேய்வுறல்
அந்தரத்தமரர்தாமனிசர்க்காற்றலன்
இந்திரற்கேயிவன்வலியென்றேறசேவா. (கூங)

என்றவன்பகர்கின்றவெல்லையின்னிருங்
குன்றெறுமரங்களும்பிணத்தின்கூட்டமும்
பொன்றினகரிகளுங்கவிகள்போக்கின
சென்றனபெரும்படையிரிந்துசிந்தின. (கூச)

ஒதுங்கினரொருவர்கீழொருவர்புக்குறப்
பதுங்கினர்நடுங்கினர்பகழிபாய்தலின்
பிதுங்கினர்குடருடல்பிளவுபட்டனர்
மதம்புலர்களிறெனச்சிற்றமாற்றிலர். (கூஙி)

வீரன்வெங்கணையொடுங்கவிகள்வீசிய
கார்வரையரக்கர்தங்கடலின்வீழ்ந்தன
போர்நெடுங்கால்பொரப்பொழியுமாமழைத்
தாரையுமேகமும்படிந்ததன்மைய. (கூசு)

---

* மந்திரவேள்வி – இரகசியமாக நடத்தும் யாகம்.

இந்திரசித்தனை அனுமனிகழ்தல்.

திரைக்கடற்பெரும்படையிரிந்துசிந்திட
மரத்தினிற்புடைத்தரைத்துதிர்த்தமாருதி
அரக்கனுக்கணித்தெனவணுகியன்னவன்
உரைக்கதமுறுவதோர்மாற்றமோதிலன். (சுஎ)

வேறு.

நானுனையிரந்துகூறுநயமொழியொன்றுங்கேளாய்
சானகிதன்னைவாளாற்றடிந்ததோதனதன்றந்த
மானமேற்சேனையோடும்வடதிசைநோக்கிமீது
போனதோகோடிகோடிவஞ்சமும்பொய்யும்வல்லாய். (சுஅ)

தடந்திரைப்பரவையன்னசக்கரயூகம்புக்குக்
கிடந்ததுகண்டதுண்டோநாவெலிகேட்டிலாயோ
தொடர்ந்துபோயயோத்திதன்னைக்கிளையொடுந்துணியதூறி
நடந்ததெப்பொழுதுவேள்விமுடிந்ததேதகுமகன்றே. (சுக)

எந்தகன்ஞாலமெல்லாமினிதுறைந்தியற்கைதாங்கும்
பாந்தளிற்பெரியதிண்டோட்பரதனைப்பழியிற்றீர்ந்த
வேந்தனைக்கண்டுநீயின்வில்வலங்காட்டிமீண்டு
போந்தேதாவுயிருங்கொண்டேயாயினும்புதுமையன்றே. (எ0)

* அம்பாத்தமைந்தவல்விற்சம்பாதிவிவாங்கி
உம்பருக்குதவிசெய்தவொருவனுக்குதயஞ்செய்த
நம்பியைமுதல்வரானமூவர்க்குநால்வரான
தம்பியைக்கண்டுநின்றன்றனுவலங்காட்டிற்றுண்டோ. (எக)

தீயொத்தவயிரவாளியுடலுறச்சிவந்தசோரி
காயத்தின்செவியினூடும்வாயினுங்கண்களூடும்
பாயப்போயிலங்கைபுக்குவஞ்சனைபரப்பச்செய்யும்
மாயப்போராற்றலெல்லாமின்றெடுமடியுமன்றே. (எஉ)

பாசமோமலரின்மேலான்பெரும்படைக்கலமோபண்டை
ஈசனூர்படையோமாயோனேமியோயாதாவின்னும்
வீசுநீர்விரும்புகின்றீரதற்குநாம்வெருவிச்சாலக்
கூசினேம்போதும்போதுங்கூற்றினூர்குறுகவந்தார். (எங)

வரங்கணீருடையவாறுமாயங்கள்வல்லவாறும்
பரங்கொள்வான்வரிவிற்றெய்வப்படைக்கலம்படைத்தவாறும்
உரங்களுநின்றதன்றேறும்மைநாமுயிரிதேனும்
சிரங்களுத்துணித்துமென்னைக்கண்டதுதிறம்பினமோ. (எச)

---

* அம்பாத்து - ஆகாயத்தில்.

விடந்துடிக்கின்றகண்டத்தண்ணலும்விரிஞ்சன்முனும்
படிந்துடிக்கின்றநாகப்பாற்கடற்பள்ளியானும்
சுடந்துடிக்கிலராய்வந்துதாங்கினுஞ்சாதறிண்ணம்
இடந்துடிக்கின்றதுண்டோயிருத்திரோவியம்புவீரே. (எநி)

கொல்வெனென்றுன்னைத்தானேகுறித்தொருசூளுங்கொண்ட
வில்லிவந்தருகுசார்ந்துன்சேனையுழுதும்வீட்டி
வல்லைநீபொருவாயென்றுவிளிக்கின்றுன்வரிவிஞனின்
ஒல்லைவிலையசெய்யுமோமத்துக்குறப்பொன்முமோ. (எசு)

மூவகையுலகுங்காக்குமுதலவன்றம்பிபூசல்
தேவர்சண்முனிவர்மற்றுந்திறத்திறத்துலகஞ்சேர்ந்தார்
யாவருங்காணுகின்றுரினியிறைதாழ்ப்பதென்னே
சாவதுசரதமன்றுவென்றனன்றருமங்காப்பான். (எஎ)

இந்திரசித்தின் வீரவசனம்.

அன்னவாசகங்கள்கேளாவனலுயிர்த்தலங்கற்பொற்றேர்ள்
மின்னகுபகுவாயூடுவெயிலுகநகைபோய்வீங்க
முன்னரேவந்திம்மாற்றமொழிகின்றீர்மொழிந்தமாற்றம்
என்னதோநீயிரென்னையிகழ்ந்ததென்றினையசொன்னன். (எஅ)

மூண்டபோர்தோறும்பட்டுமுடிந்தனீர்முறையிற்றீர்ந்து
மீண்டபோதனையல்லாமறத்திரோவிளிதல்வேண்டி
ஈண்டவாவென்னுகின்றீரித்தனைபெரும்பட்டு
மாண்டபோதுயிர்தந்தீயுமருந்துவைத்தனிரோமான. (எக)

இலக்குவனுகமற்றையிராமனேயாகவீண்டு
விலக்குவரெல்லாம்வந்துவிலக்குகசுரக்கின்வெள்ளம்
குலக்குலமாகமாளுங்கொற்றமுமனிசர்கொள்ளும்
அலக்கணுமுனிவர்தாமுமமரருங்காண்பரன்றே. (அ0)

யானுடைவில்லுமென்பொற்றேர்ள்களுமிருக்கவின்னும்
ஊனுடையுயிர்கள்யாவுமுய்யுமோவொளிப்பிலாமல்
கூனுடைக்குரங்கிரேடுமஞ்சிதரைக்கொன்றுசென்றவ்
வானினுந்தொடர்ந்துகொள்வென்மருந்தினுமுய்யமாட்டீர். (அக)

வேட்கின்றவேள்வியின்றுபிழைத்ததுவென்றேருமென்று
கேட்கின்றவீரமெல்லாங்கிளர்த்துவீர்கிளத்தல்வேண்டா
தாட்கின்றதில்லையும்மைத்தனித்தனிதலைகள்பாறச்
சூட்கின்றவீரமென்கைச்சரங்களாய்த்தோன்றுமன்றே. (அஉ)

மற்றெறலாநும்மைப்போலவாயிறற்சொல்லன்மாட்டேன்
வெற்றிதான்மூன்றுதந்தீர்விரைவதுவெல்லற்கொல்லாம்

உற்றுநாலுருத்தகாலத்தொருமுறையெதிரேநிற்கக்
கற்றிரோவின்னமாண்டுகிடத்திரோகடத்திரோதான். (அங)

இந்திரசித்துப் போருக்கெழுதல்.

நின்மின்கணின்மினென்னெருப்பெழவிழித்துநீண்ட
மின்மின்கொள்கவசமிட்டான்வீக்கினென்றாணிவீரப்
பொன்மின்கொள்கோதைதகையிற்பூட்டினென்பொறுத்தான்போர்வில்
என்மின்கொள்வயிரத்தின்டேரேறினனெனிந்தாணினி. (அச)

ஊதினென்சங்கம்வானத்தெதாண்டொடிமகளீரொண்கண்
மோதினர்கணத்தின்முன்னேமுழுவது * முருங்கமுற்றிக்
காதினனென்னவாரேர்கலங்கினர்கயிலையாளும்
போதினென்றுணுமின்றுபுகுந்ததுபெரும்போரென்றூர். (அஙி)

இழைத்தபேர்யாகந்தானேயாஞ்செய்ததவத்தினுலே
பிழைத்ததுபிழைத்தலாலேயிவனினிப்பிழைக்கலாற்றுன்
அழைத்தவிதியேயாகுமிலக்குவனம்பினுலே
உழைத்ததுகாண்கின்றுமென்றுணங்கினரும்பரெல்லாம். (அசு)

காண்டொழிலோசைவீசிச்செவிதொறுநடத்தலோடும்
ஆண்டொழிலுடனேகையினடக்கியமரனுங்கல்லும்
மீண்டனமறிந்துசோரவிழுந்தனவிழுந்தமெய்யே
மாண்டனமென்றேயுன்னியிரிந்ததுகுரங்கின்மாலை. (அஎ)

அனுமன் மலைகொண்டுபொருதல்.

படைப்பெருந்தலைவர்நின்றுரல்லவரிறுதிபற்றும்
அடைப்பருங்காலக்காற்றுலாற்றலதாகிக்கீறிப்
புடைத்திரிந்தோதும்வேலைப்புனலெனவியலுற்றூர்
கிடைத்தபோதுமனுண்டோர்நெடுங்கிரிகிழித்துக்கொண்டான். (அஅ)

நில்லடாநில்லுநில்லுநீயடாவாசிபேசிக்
கல்லடாநின்றதென்னைப்போர்க்களத்தமரர்காணைக்
கொல்லலாமென்றூருன்றுகுரங்கெண்ணுற்கூடுமென்றே
கல்லலோபார்வாவாவென்றுனமனுக்குநமனையிண்ணுன். (அக)

வில்லெடுத்துருத்துநின்றவீருள்வீரனேரே
கல்லெடுத்தெரியவந்தவநுமனைக்கண்ணினேனுக்கி
மல்லெடுத்துயர்ந்ததோளார்க்கெண்கொலோவலியதென்னைச்
சொல்லெடுத்தமரர்சொன்னுர்தாதையுந்துணைக்கமுற்றுன். (கo)

---

* முருங்க – அழிய.

வீசினன் வயிரக்குன் றம்வெம்பொறிக்குலங்கள்விண்ணின்
ஆசையினிமிர்ந்துசெல்லவாயிரமுருமொன்றுகப்
பூசினபிளப்பிதன்னுவருமதன்புரிவைநோக்கிக்
கூசினவுலகமெல்லாங்குலைந்ததவ்வரக்கர்கூட்டம். (கக)

குண்டலநெடுவில்வீசுமேருவிற்குவிந்ததோளான்
அண்டமுங்குலுங்கவார்த்துமாருதியசனியஞ்ச
விண்டலத்தெறிந்தகுன்றம்வெறுந்துகளாகிவீழக்
கண்டனனெய்ததன்மைகண்டிலனிமைப்பில்கண்ணர். (கஉ)

இந்திரசித்தனனுமனை அம்பினல் துன்புறுத்துதல்.

மாருருகுன்றம்வாங்கிமறுகுவான்மார்பிற்றோளில்
காறருகாலிற்கையிற்கழுத்தினிணுதலிற்கண்ணில்
ஏறினவெண்படமன்றுவெரிமுகக்கடவுள்வெம்மை
சீறினபகழிமாரிதீக்கடவிடத்திற்றூய்ந்த. (கங)

வெதிரொத்தசிகரக்குன்றின்மருங்குறவிளங்கலானும்
எதிரொத்தவிருளைக்கீறியெழுகின்றவியற்கையானும்
கதிரொத்தபகழிக் * கற்றைகதிரொளிகாட்டலானும்
உதிரத்தின்செம்மையானுமுதிக்கின்றகதிரோவெனத்தான். (கச)

ஆயவனயர்தலோடுமங்கதன்முதல்வராளேனர்
காய்சினந்திருகிவந்துகலந்தனர்கதிரோன்பெற்ற
தூயசுக்கிரீவன்வந்துதேதான்றினன்றேரூன்றக்கண்டு
தீயவனவனைநோக்கிக்கனலெனச்சினத்துச்சொன்னன். (கஞ)

வெம்பினசெருவின்வந்துமேவினும்வெகுண்டுசீயம்
தும்பியைத்தொடர்வதல்லாற்குரங்கினைத்தொடர்வதுண்டோ
அம்பினைமாட்டியென்னைசிறிதுபோராற்றவல்லான்
தம்பியைக்காட்டித்தாரீர்சாதிரோசலத்தினென்றான். (கட)

அனுமனைக்கண்டிலீரோவவனினும்வலியிரோவென்
தனுவுளதன்றேதோளினவ்வலிதவிர்ந்ததுண்டோ
இனுமுனைநீரலீரோவெவ்வலிபீட்டிவந்தீர்
மனிசனைக்காட்டிநுந்தமலைதறும்வழிக்கொளீரே. (கஎ)

என்றுரைத்திளவறன்மேலெழுகின்றவியற்கைநோக்கிக்
குன்றமுமரமும்வீசிக்குறுகினர்குழாங்கடோறும்
சென்றனபகழிமாரிமேருவையுருவித்தீர்வ
ஒன்றலகோடிகோடியுளைந்தனவலியுமோய்ந்த. (கஅ)

---

* கற்றை — கூட்டம்.

படுகின்றதன்ரூவுன்றன்பெரும்படைபகழிமாரி
விடுகின்றதன்ரூவென்றியரக்கருங்காளமேகம்
இடுகின்றவேள்விமாண்டதினியவன்பிழைப்புரூமே
மூடுகென்ரூனரக்கன்றம்பிநம்பியுஞ்சென்றுழூண்டான். (கக)

வேறு.

இலக்குமணன் அனுமன்ரூண்மீது எறிந்தது பொருதல்.

வந்தானெடுந்தகைமாருதிமயங்காமுகமலர்ந்தான்
எந்தாய்கடிதேதரூயெனதிருதோண்மிசையென்ரூன்
அந்தாகவென்றுவந்தையனுமைவாயினனிமையோர்
சிந்தாகுலங்கூர்ந்தானெனநெடுஞ்சாரிகைதிரிந்தான். (கஂ)

இலக்குமண இந்திரசித்த யுத்தம்.

காராயிரமூடலுகியதனலாகியகடியோன்
ஓராயிரம்பரிபூண்டதொருயர்தேர்மிசையுயர்ந்தான்
நேராயினிருவோர்களுநெடுமாருதிமிரும்
பேராயிரமுடையானெனத்திசையெங்கணும்பெயர்ந்தான். (கஃ)

தியொப்பனவுருமொப்பனவுயிர்வேட்டனதிரியும்
பேயொப்பனபசியொப்பனபிணியொப்பனபிழையா
மாயக்கொடுவினையொப்பனமழுவொப்பனகழுகின்
தாயொப்பனசிலவாளிகடுரந்தான்றுயிறுரந்தான். (க஄)

அவ்வம்பினையவ்வம்பினினறுத்தானிகலரக்கன்
எவ்வம்பினியுலகத்துளதென்னும்படியெய்தான்
எவ்வம்பரமெவ்வெண்டிசையெவ்வேலகள்பிறவும்
வவ்வுங்கடையுகமாமழைபொழிகின்றதுமான. (கஅ)

* ஆயோனெடுங்குருவிக்குலமெனலாஞ்சிலவம்பால்
பேயோடிடத்துரந்தானவைபொறியோவெனமறியத்
தூயோனுமத்துணைவாளிகள்தொடுத்தானவைதடுத்தான்
தீயோனுமக்கணத்தாயிரநெடுஞ்சாரிகைதிரிந்தான். (கஆ)

கல்லுந்நெடுமலையும்பலமரனுங்கடைகாணும்
புல்லுஞ்சிறுபொடியும்மிடைதரியாவகைபுரியச்
செல்லுந்நெறிதொறுஞ்சென்றனதெறுங்கால்புரைமறவோன்
மல்லின்முதிர்தேருஞ்சினவயமாருதிதானும். (கஇ)

இருவீரருமிவணின்னவனிவணின்னவனென்னச்
செருவீரருமறியாவகைதிரிந்தார்கணைசொரிந்தார்

---

* ஆயோன் – இந்திரசித்து.

ஒருவீரருமிவரொக்கிலரெனவானவருவந்தார்
பொருவீரையும்பொருவீரையும்பொருதாலெனப்பொருதார். (கoசு)

விண்செல்கிலசெல்கின்றனவிசிகம்மெனவிமையோர்
கண்செல்கிலமனஞ்செல்கிலகணிதம்முறுமெனிலேனர்
எண்செல்கிலநெடுங்காலவணிடைசெல்கிலனுடன்மேல்
புண்செல்வனவல்லாலொருபொருள்செல்வனதரியா. (கoஎ)

எரிந்தேதறினதிசையாவையுமிடியாமெனப்பொடியாய்
நெரிந்தேதறினெடுநாவெலிபடர்வானிறையுருமின்
சொரிந்தேதறினசுடுவெங்கணைதொடுந்தாரகைமுழுதும்
கரிந்தேதறினவுலகியாவையுங்கனல்வெம்புகைகதுவ. (கoஅ)

வெடிக்கின்றனதிசையாவையும்விழுகின்றனவிடிவந்
திடிக்கின்றனசிறுநாவெலியிருவாய்களுமெதிராக்
கடிக்கின்றனகனல்வெங்கணைகலிவானுறவிசைமேல்
பொடிக்கின்றனபொறிவெங்கனலிவைகண்டனர்புலவோர். (கoக)

கடல்வற்றினமலையுக்கனபருவக்கனல்பருகுற்
றுடல்வற்றினமாமுற்றினகனல்பற்றினவுதிரம்
சுடர்பற்றினசுறவுக்கனதுணிபட்டுதிர்கணையின்
திடருற்றதுபரவைக்குழிதிரிவுற்றதுபுவனம். (ககo)

எரிகின்றனவயில்வெங்கணையிருசேனையுமிரியத்
திரிகின்றனபுடைநின்றிலதிசைசென்றனசிதறிக்
கரிபொன்றினபரிமங்கினகவிசிந்தினகடல்போல்
சொரிகின்றனபொருசெம்புனறெலகின்றனர்கொலையால். (கஎக)

* புரிந்தேதாடினபுகைந்தேதாடினபொரிந்தேதாடினபுகைபோய்
எரிந்தேதாடினகரிந்தேதாடினவிடமோடினவலமே
திரிந்தேதாடினசரிந்தேதாடினசெறிந்தேதாடினதிசைமேல்
சரிந்தேதாடினகருங்கோளரிக்கிலையான்விடுசரமே. (கஎஉ)

நீரொத்தனநெருப்பொத்தனபொருப்பொத்தனநிமிரும்
காரொத்தனவுருமொத்தனகடலொத்தனகதிரோன்
தேரொத்தனவிடைமேலவன்சிரிப்பொத்தனவுலகின்
வேரொத்தனவாயொத்தனநிருதன்விடுசரமே. (கஎங)

ஏமத்தகவசத்தனவொருவோரெனவிருவோர்
வாமப்பொருந்தேதாண்மேலெனவதனத்தனவுயிர்த்த
தாமத்தணமார்பத்தனசரணத்தனதங்காக்
காமக்குலமடமங்கையர்கடைக்கண்ணெனக்கனைகள். (கஎச)

---

* புரிந்தேதாடின – சுழன்றோடின.

எந்நாளினினெத்தேவர்களெத்தானவரெவரே
அன்னார்செருவெத்தாரெனவிமையோரெடுத்தார்த்தார்
பொன்னார்சிலயிருகால்களுமெருகால்பொறையுயிரா
முன்னுளினிலிரண்டாம்பிறமுளாத்தாலெனவுளாத்தார். (ககந)

வேகின்றனவுலகங்கிளர்விடுகின்றனவிசிகம்
போகின்றனசுடர்வெக்தனவிமையோர்களும்புலர்ந்தார்
ஆகின்றதொராழிகாலமிதாமன்றெனவயிர்த்தார்
நோகின்றனதிசையாணைகள்செவிநாணெலிநுழைய. (ககசு)

* மீனுக்கதுநெடுவானகம்வெயிலுக்கதுசுடரும்
மானுக்கதுமுழுவெண்மதிமனையுக்கதுவானம்
தானுக்கதுகுலமால்வரைதலையுக்கதுதகைசால்
ஊனுக்கவெவ்வுலகத்தினுமுளவாயினவுயிரும். (ககள)

அக்காலயினயில்வெங்கணையையந்துபுக்கழுந்தத்
திக்காசறவென்றூன்மகனிளங்கோவுடல்செறித்தான்
கைக்கார்முகம்வளையச்சிலகனல்வெங்கணைகவசம்
புக்காகமுங்கழன்றோடிடவிளங்கோளரிபொழிந்தான். (ககஅ)

தெரிந்தான்சிலசுடர்வெங்கணைதேர்பூண்டனசினமா
இரிந்தோடிடத்துரந்தோடினவிமையோரையுமுன்னுள்
அரிந்தோடினவெரிந்தோடினவவைகோத்தடலரக்கன்
சொரிந்தானுயர்நெடுமோருதிதோண்மேலினிற்றூன்ற. (ககக)

குருதிப்புனல்சொரியும்முயர்குன்றென்னுமவநுமன்
பருதித்திருநிறமொத்தவையிளங்கோளரிபார்த்தான்
ஒருதிக்கினுமுயராவகையவன்றேரினையுதிர்த்தான்
பொருதிக்கணம்வென்றூனெனச்சாரமாரிகள்பொழிந்தான். (கஉ0)

அத்தேரழிந்ததுநோக்கியவிமையோரெடுத்தார்த்தார்
மூத்தேவருமுவந்தாரவனுருமெறனமுனிந்தான்
தத்தாவொருதடந்தேரினைத்தொடர்ந்தான்சரந்தலைமேல்
பத்தேதவினனைவபாய்தலினிளங்கோளரிபதைத்தான். (கஉக)

பதைத்தானுடனிலத்தான்சிலபகுவாயயிற்பகழி
விதைத்தானவன்விலக்காதமுன்விடைமேல்வருவிமலன்
மதத்தாலெதிர்வருகாலனையொருசாலுறமருமத்
துதைத்தாலெனத்தனித்தேதார்கணையவன்மார்பிடைதைத்தான். (கஉஉ)

கவசத்தையுமெடுமார்பையுங்கழன்றக்கணைகழிய
அவசத்தொழிலடைந்தானதற்கிமையோரெடுத்தார்த்தார்

---

* மீனுக்கது – நட்சத்திரம் உதிர்ந்தது.

திவசத்தெழுகதிரோனெனத்திரிகின்றதொர்கணையால்
துவசத்தையுந்துணித்தேதயவன்மணித்தோளையுந்தொளைத்தான். (கஉஈ)

உள்ளாடியவுதிரப்புனல்கொழுந்தீயெனவொழுகத்
தள்ளாடியவடமேருவிற்சலித்தாளுடறாித்தான்
தொள்ளாயிரங்கடம்போர்க்கணைதுரந்தானவைதுறைபோய்
விள்ளாநெடுங்கவசத்திடைநுழையாதுகவெகுண்டான். (கஉச)

மறித்தாயிரம்வடிவெங்கணைமருமத்தினைமதியாக்
குறித்தாயிரம்பரித்தேரவன்விடுத்தானவைகுறிபார்த்
திறுத்தானெடுஞ்சரத்தாலொருதனிநாயகற்கிளையோன்
செறித்தாளுடல்சிலபொற்கணைசிலநாணறத்தெரித்தான். (கஉந)

வில்லிங்கிதுநெடுமால்சிவனயன்மேலவர்தனுவே
கொல்லென்றுகொண்டயிர்த்தானெடுங்கவசத்தையுங்குலையாச்
செல்லுங்கொடுங்கணையாவையுந்திசையாவையுந்தெரிந்தான்
வெல்லுந்தரமில்லாமையுமறிந்தானறமெலிந்தான். (கஉசு)

அத்தன்மையையறிந்தானவன்சிறுதாதையுமணுகா
முத்தன்முகநோக்காவொருமொழிகேளெனமொழிவான்
எத்தன்மையுமிமையோர்க்களவெவென்றுனிகல்கண்டால்
*பித்தன்மனந்தளர்ந்தாளினிப்பிழையாவெனப்பகர்ந்தான். (கஉஎ)

கூற்றின்படிகொடுத்தானறக்கொலவாளெயிற்றரக்கன்
ஏற்றுஞ்சிலைநெடுநாணெரியுலகேழினுமெய்தச்
சீற்றந்தலைத்தலைசென்றுறவிதுதீரெனத்தெரியாக்
காற்றின்படைதொடுத்தானவனதுவேகொடுகாத்தான். (கஉஅ)

அனலின்படைதொடுத்தானவனதுவேகொடுகாத்தான்
புனலின்படைதொடுத்தானவனதுவேகொடுபொறுத்தான்
கனவெங்கதிரவன்வெம்படைதுரந்தான்மனங்கரியான்
சினவெந்திறலிளங்கோளரியதுவேகொடுதீர்த்தான். (கஉக)

இதுகாத்திகொலென்னவெடுத்திசிகப்படையெய்தான்
அதுகாப்பதற்கதுவேயுளதென்னத்தொடுத்தமைத்தான்
செதுகாப்படைதொடுப்பேனெனநினைந்தான்றிசைமுகத்தான்
முதுமாப்படைதுரந்தாலினிமுடிந்தாயெனமொழிந்தான். (கஙO)

வானின்றலைநிலைநின்றவர்மழுவாளியுமலரோன்
தானும்முனிவரரும்பிறதவத்தோர்களுமறத்தோர்
கோனும்பிறபிறதேவர்கள்குழுவும்மனங்குலைந்தார்
ஊனம்மினியிலதாகுகவிளங்கோக்கெனவுரைத்தார். (கஙக)

---

* பித்தன்-பைத்தியகாரனென இந்திரசித்து.

ஊழிக்கடையிறுமத்தலையுலகியாவையுமுண்ணும்
ஆழிப்பெருங்கனறன்னெருசுடரென்னவுமாகாப்
பாழிச்சிகைவிரியத்தனிபடர்கின்றதுபார்த்தான்
ஆழித்தனிமுதலையகற்கிளையானதுமதித்தான். (கஙஉ)

பிரமாத்திர பிரயோகம்.

மாட்டானினிமலரோன்படைமுதற்போதுதன்வலத்தால்
மீட்டானலன்றடுத்தானலன்மூடிந்தானெனவிட்டான்
காட்டாதினிக்கரந்தாலதுகருமம்மலதென்றுத்
தாட்டாமரைமலரோன்படைதொடுப்பேனெனச்சமைந்தான். (கஙங)

நண்ணுகவுலகுக்கெனமுதலோன்மொழிநவின்றான்
பின்னுதவணுயிர்மேற்செலவொழிகென்பதுபிடித்தான்
ஒன்னுகவிம்முதலோன்படைதனைமாய்க்கவென்றுரைத்தான்
நின்னுனதுதுரந்தானிவன்றனிவானவர்நினைந்தார். (கஙச)

தான்விட்டனமலரோன்படையெனின்மற்றிடைதருமே
வான்விட்டதுமண்விட்டதுமறவோனுடலறுமே
தேன்விட்டுகுமலரோன்படைதீர்ப்பாயெனத்தெரிந்தான்
ஊன்விட்டவன்மறம்விட்டிலனெனவானவருவந்தார். (கஙஞ)

உருமேறுவந்ததிர்த்தாலதனைதிரேநெருப்புய்த்தால்
வருமாங்கதுதவிர்ந்தாலெனமலரோன்படைமாயத்
திருமாறனக்கிளையான்படையுலகேழுயுந்தீக்கும்
அருமாகனலெனநின்றதுவிசும்பெங்கணுமாகி. (கஙட)

படையங்கதுபடராவகைபகலோன்குலமருமான்
இடையொன்றதுதடுக்கும்படிசெந்தியுகவெய்தான்
தொடையொன்றினைக்கணைமீமிசைத்துறுவாயினியென்றான்
விடையொன்றெருவிடமுற்றெனவிடுவித்ததுவேகம். (கஙண)

விண்ணரதுகண்டார்வயவீரர்க்கினிமேன்மேல்
* ஒண்ணுதனவுளவோவெனமனந்தேறினருவந்தார்
கண்ணுறுதற்பெருமானவர்க்காரிதாவெனக்கடைபார்த்
தெண்ணுதிவைபகர்ந்தீர்பொருள்கேணீரெனவிசைத்தான். (கஙஅ)

நாராயணநரென்றிவருளராய்நமர்க்கெல்லாம்
வேராய்முழுமுதற்காரணப்பொருளாய்வினைகடந்தோர்
ஆராயினுந்தெரியாததொர்நெடுமாயையினகத்தார்
பாராயணமறைநான்கையுங்கடந்தார்சிலபழையோர். (கஙக)

---

* ஒண்ணுதன-செய்துமுடிக்கக் கூடாதன.

அறத்தாறழிவுளதாமெனவறிவுந்தொடர்ந்தணுகாப்
புறத்தார்புகுந்தறத்தாரெனப்புகுந்தன்னதுபுரப்பார்
மறத்தார்மூதற்குலம்வேரறமாய்ப்பானிவன்வந்தார்
திறத்தாலதுதெரிந்தியாவருந்தெரியாவகைதிரிவார். (கசo)

உயிர்தோறுமுற்றுளன்மூத்திரத்தொருவன்னெனவுரைக்கும்
அயிராநிலையுடையானிவனவனிவ்வுலகனைத்தும்
தயிர்தோய்பிறையெனலாம்வகைகலந்தேதறியதலிவன்
பயிராததொர்பொருளின்னதென்றுணரீரிதுபரமால். (கசக)

நெம்பாற்கடற்கிடந்தானும்பண்டிவர்நாங்குறைநேர
விம்பாக்கியமுடையார்களைக்குலத்தோடறவீட்டி
இம்பாக்கியத்தறங்காப்பதிற்கிசைந்தாரெனவிதெலாம்
அம்பாக்கியத்துடைச்சென்சடைமுதலோன்பணித்தமைந்தான். (கசஉ)

அறிந்தேயிருந்தறியேமவனெமாயையினயிர்ப்பேம்
பிறிந்தேதமினிமுழுதையமும்பெருமானுரைபிடித்தேம்
வறிந்தேதம்பகைமூழுதும்மினித்தீர்ந்தேதமிடர்கடந்தேதம்
செறிந்தோர்வினைப்பகைவாவெனத்தொழுதார்நெடுந்தேவர். (கசங)

சக்கரப் பிரயோகம்.

மாயோனெம்படைவாங்கியவளவாளெயிற்றரக்கன்
நீயோயிதுதடுப்பாயெனினினக்காரெதிர்நிற்பார்
போயோவிசும்படைவாயிதுபிழையாதெனப்புகலாத்
தூயோன்மிசையுலகியாவையுந்தடுமாறிடத்துரந்தான். (கசச)

இலக்குமணன் தன்னை நாராயணனெனினைக்க வாழிவணங்கி விலகுதல்.

சேமித்தனரிமையோர்தமைச்சிரத்தேந்தியகரத்தார்
ஆமித்தொழில்பிறர்யாவருமடைந்தார்பழுதடையாக்
காமிப்பதுமுடிவிப்பதுபடிகின்றதுகண்டான்
நேமித்தனியரிதாவெனனினைந்தா * னெதிர்நடந்தான். (கசஞ)

தீக்கின்றதிவ்வுலகேழையுமெனச்செல்வதுந்தெரிந்தான்
நீக்குந்தரமல்லாமுழுமுதலோவெனனினைந்தான்
வீக்கின்றிலதயல்சென்றதுவிலங்காவலங்கொடுமேல்
போய்த்தங்கதுகனன்மாண்டதுபுகைவீந்ததுபொதுவே. (கசசு)

எத்தாடினரிமையோர்களுங்கவியின்குலமெல்லாம்
கூத்தாடினரமங்கையர்குனித்தாடினர்தவத்தோர்
காத்தாயுலகனைத்தும்மெனக்களித்தாடினர்கமலம்
பூத்தானுமம்மழுவாளியுமுழுவாய்கொடுபுகழ்ந்தார். (கசஎ)

---

* எதிர்நடந்தான்-நேமியினெதிரேசென்றான்.

பாசுபதாத்திரப் பிரயோகம்.

அவனன்ன துகண்டானிவனரோவெனவயிர்த்தான்
இவனன்ன துமுதலேயுடையிறையோவெனவியவா
எவனென்னி னுநன்ரு குகவினியெண்ணலெனென்னைச்
* சிவனன்படைதொடுத்தாருயிர்முடிப்பேனெனத்தெரிந்தான். (கசுஅ)

பார்ப்பான்றருமுலகியாவையுமொருநாளொருபகலே
தீர்ப்பான்படைதொடுப்பேனெனத்தெரிந்தானதுதெரியா
மீப்பாவியவிமையோர்குலம்வெருவுற்றதிப்பொழுதே
மாய்ப்பானெனவுலகியாவையுமறுகுற்றனமயங்கா. (கசுக)

நானேசிவன்றரப்பெற்றதுதவநாள்பலவுழந்தே
தானேபிறரறியாததுதந்தேதனைச்சமைந்தான்
ஆனலிவனுயிர்கோடலுக்கையம்மிலையென்னு
மேனருமிதனேயெவிடினெதிர்நிற்பவரில்லை. (கஙo)

மனத்தான்மலர்புனல்சாந்தமொடவிதூபமும்வகுத்தான்
நினைத்தானிவனுயிர்கொண்டிவணிமிர்வாயெனநிமிர்த்தான்
சினத்தானெடுஞ்சிலைநாண்டடந்தோண்மேலுறச்செலுத்தா
எனைத்தாயதொர்பொருளாவிடைதடையில்லதைவிட்டான். (கஙக)

சூலங்களுமழுவுஞ்சுடுகணையுங்கறைசுடரும்
ஆலங்களுமரவங்களுமசனிக்குலமெவையும்
காலன்றனதுருவங்களுங்கரும்பூதமும்பெரும்பேய்ச்
சாலங்களுநிமிர்கின்றனவுலகெங்கணுந்தாணுய். (கஙஉ)

ஊழிக்கனலொருபாலதனுடனேதொடர்ந்துடற்றும்
சூழிக்கொடுங்கடுங்காற்றதனுடனேவரத்தூர்க்கும்
எழிற்குமப்புறத்தாயுளபெரும்போர்க்கடலிழிந்தாங்
காழித்தலகிடந்தாலெனநெடுந்தூங்கிருளடைய. (கஙங)

இரிந்தார்குலநெடுந்தேவர்களிருடிக்குலத்தெவரும்
பரிந்தாரிதுபழுதாகிலதிறுவானெனுமபயத்தால்
நெரிந்தாங்கழிகுரங்குற்றதுபகருந்துணைநெடிதே
திரிந்தாரிருசுடரோடிலகொருழுன்றுடன்றிரிய. (கஙச)

இலக்குமணனல்லாதார் பாசுபதாத்திரங்கண்டு நடுங்குதல்.

பார்த்தானெடுந்தகைவீடணனுயிர்காலுறப்பயத்தால்
வேர்த்தானிதுவிலக்குந்துணையுளதோதாமுதல்வீரர்
தீர்த்தாவெனவழைத்தானதற்கிளங்கோளரிசிரித்தான்
போர்த்தாரடர்கவிவீரருமவன்ரூணிழல்புகுந்தார். (கஙஙி)

---

* சிவனன்படை-பாசுபதாத்திரம்.

* அவையம்முனக்கவயம்மெனுமனோவாயையுமஞ்சேல்
அவையம்முமக்களித்தோமெனத்தன்கைத்தலத்தமைத்தான்
உவையம்முறுமுலகின்பயமுணர்ந்தேதனினியொழியேன்
சிவையன்மனமுடையான்படைதாடுப்பேனெனத்தெளிந்தான். (கநசு)

அப்பொற்படைமனத்தானினைந்தர்ச்சித்ததையழிப்பாய்
இப்பொற்படைதனைமற்றொருதாழில்செய்கிலையென்ஞத்
துப்பொப்பதார்கணைகூட்டினன்றூரந்தானைவைதாடரா
எப்பொற்படையெவையும்புகவிழுங்குற்றதாரிமைப்பின். (கநள)

வீண்ணுர்த்ததுமண்ணுர்த்ததுமேலார்மணிமூரசின்
கண்ணுர்த்ததுகடலார்த்ததுமழையார்த்ததுகலியோ
டெண்ணுர்த்ததுகவியார்த்ததுவிசயம்மெனவிசயப்
பெண்ணுர்த்தனளறமார்த்ததுபிறரார்த்ததுபெரிதால். (கநஅ)

இறுகாலையிலுலகியாவையுமவிப்பானிகற்படையை
மறுகாவகைவலித்தானதுவாங்கும்படிவல்லான்
தெறுகாலனிற்கொடியோனுமற்றதுகண்டகந்திகைத்தான்
அறுகால்வயக்கவிவீரருமரியென்பதையறிந்தார். (கநக)

தெய்வப்படைபழுதுற்றதுவெனக்கூசுதல்சிதையா
வெய்வித்தகமுளதென்னிதுபிழையாதெனவிசையாக்
கய்வித்தகமதனுற்சிலகணைவித்தினனவையும்
மொய்வித்தகன்றடந்தேளினுநுதற்சூட்டினுழுழ்க. (கநஙு)

வெய்யோன்மகன்முதலாகியவிறலோர்மிகுதிறலோர்
கய்யோய்விலர்மலமாரியினிருதக்கடல்கடப்பார்
உய்யாரெனவடிவாளிகள்சதகோடிகளுய்த்தான்
வெய்யோனயறனிற்றன்சிறுதாதையைவெறுத்தான் (கநக)

வேறு.

விபீடணனை இந்திரசித்திகழ்தல்.

முரட்டடந்தண்டுமேந்திமனிசரைமுறையைக்குன்றிப்
பிரட்டரிற்புகழ்ந்துபேதையடியரினிரந்துபின்சென்
றிரட்டுறுமுரசமென்னவிசைத்தேதியிசைக்கின்றுயைப்
புரட்டுவன்றலையையின்றுபழியெனவொழிவென்போலாம். (கநஉ)

விழிபடமுதல்வரெல்லாம்வெதும்பினரொதுங்கவீழ்ந்து
வழிபடவுலகமூன்றுமடிபடவந்தேதனும்
அழிபடைதாங்கலாற்றுமாடவர்யாண்டும்வெஃகாப்
பழிபடவந்தவாழ்வையாவரோபகரற்பாலார். (கநஙு)

* அவையம் – அபையம் அது பயமின்மையைச் செய்யெனல்.

நீருள தனையுமுள்ளமீனெனநிருதரெல்லாம்
வேருள தனையும்வீவாரிராவணவேணுமீளார்
ஊருள தொருவனின்றுய்நீயுளையுறையகின்றேனை
டாருளரரக்கர்நிற்பாரரசுவீற்றிருக்கவையா. (கசுச)

மூன்றுநாலுலகந்தந்தமூத்தவாறேர்கட்கெல்லாம்
* தந்தையார்தந்தையாரைச்செருவிடைச்சாயத்தள்ளிக்
கந்தரைத்தந்தையாரைக்கயிலையோடொருகைக்கொண்ட
எந்தையாரரசுசெய்வதிப்பெரும்பலங்கொண்டேயோ. (கசுஞ)

பனிமலர்த்தவிசின்மேலோன்பார்ப்பனகுலத்துக்கெல்லாம்
தனிமுதற்றலைவனைவுன்னைவந்தமரர்தாழ்வார்
மனிசருக்கடிமையாய்நீயிராவணன்செல்வமாள்வாய்
இனியுனக்கென்றேமானமெங்களோடடங்கிற்றன்றே. (கசுசு)

சொல்வித்தும்பழித்துநுங்கைமூக்கினைத்துணிவித்தேதாரார்
எல்வித்தும்படைக்கையுங்கடமையனையெங்களோடும்
கொல்வித்துந்தேற்றுன்றகூற்றிரர்குலத்தையெல்லாம்
வெல்வித்தும்வாழும்வாழ்வின்பெருமையேயிழுமிதன்றே. (கசுஎ)

னழுதியேரணிந்ததிண்டோளிராவணனிராமனம்பால்
புழுதியேபாயலாகப்புரண்டநாள்புரண்டுமேல்வீழ்ந்
தழுதியோநீயுங்கூடவார்த்தியோவிவனைவாழ்த்தித்
தொழுதியோயாதேசெய்யத்துணிந்தனைவிசயத்தேதாளாய். (கசுஅ)

ஊனுடையுடம்பினீங்கிமருந்திலுயிர்வந்தெய்து
மானுடரிலங்கைவேந்தைக்கொல்வரோநீயுமன்றன்
தானுடைச்செல்வந்துய்க்கத்தகுதியேசரத்திலேகும்
வானிடைப்புகுதியன்றேறயான்பழிமறுக்கினென்றான். (கசுக)

இந்திரசித்திற்கு விபீடணன் பதிலுரைத்தல்.

அவ்வுரையமையக்கேட்டவீடணனலங்கன்மோலி
செவ்விதிற்றுளக்கித்தன்பான்முறுவலுந்தெரிவதாக்கி
வெவ்விதுபாவஞ்சாலத்தருமமேவிழுமிதைய
இவ்வுரைகேட்டியென்னுவினையனவிளம்பலுற்றான். (கஎo)

அறந்துணையாவதல்லாலருநரகமையநல்க
மறந்துணையாகமாயாப்பழியொடும்வாழுமாட்டேன்
துறந்திலேன்மெய்ம்மையெய்தும்பொய்ம்மையேதுறப்பதல்லால்
பிறந்திலேனிலங்கைவேந்தன்பின்னவன்பிழைத்தபோதே. (கஎக

---

* தந்தையார் தந்தையார்-திருமால்.

உண்டிலெனறவம்பொய்ம்மையுரைத்திலென்வலியாலொன்றும்
கொண்டிலென்மாயவஞ்சங்குறித்திலென்யாருங்குற்றம்
கண்டிலரென்பாலுண்டேநீயிருங்காண்டிரன்றே
பெண்டிநிற்றிறம்பிணைத்துறந்ததுபிழையிற்றுமோ. (கஎஉ)

மூவகையுலகமேத்துமுதலவனெவர்க்குமூத்த
தேவர்தந்தேவன்றேவிகற்பினிற்சிறந்துளாளை
நோவனசெய்தறீதென்றுரைப்பநுன்றூதைசீறிப்
போவெனப்போந்தேனின்றுநரகதிற்பொருந்துவேனே. (கஎங)

வெம்மையிற்றருமநோக்காவேட்டதேவேட்டவீயும்
உம்மையேபுகழும்பூண்கதுறக்கமுமுமக்கேயாக
செம்மையிற்பொருந்திமேலோரொழுக்கிலோடறத்தைத்தேறும்
எம்மையேபழியும்பூண்கநரகமுமெமக்கேயாக. (கஎச)

அறத்தினைப்பாவம்வெல்லாதென்னுமதறிந்துஞானத்
திறத்தினதுறுமென்றெண்ணித்தேவர்க்குந்தேவைச்சேர்ந்தேன்
புறத்தினிற்புகழேயாகபழியொடும்புணர்கபோதச்
சிறப்பினிப்பெறுகதீர்கவென்றனன்சீற்றந்தீர்ந்தான். (கஎஙு)

இந்திரசித்து விபீடணன்மீது அம்பேவுதல்.

பெறுஞ்சிறப்பெல்லாமென்கைப்பிறைமுகப்பகழிபெற்றூல்
இறுஞ்சிறப்பில்லையையவெங்கினிப்போவையென்னத்
தெறுஞ்சிறைக்கலுழனன்னவொருகணைதொடுத்துச்செம்பொன்
உறுஞ்சுடர்க்கழுத்தைநோக்கிநூக்கிணைருமின்வெய்யோன். (கஎசு)

விபீடணன்மீது வந்தவம்பினை இலக்குமணன் தடுத்தல்.

அக்கணையசனியென்னவண்டிறனவாலமுண்ட
முக்கணஞ்சூலமென்னமுடுகியமுடிவைநோக்கி
இக்கணத்திற்றூனிற்றூனென்கின்றவிமையோர்காணக்
கைக்கணையொன்றூல்வள்ளலக்கணைகண்டங்கண்டான். (கஎஎ)

இந்திரசித்து வேலேவுதலு மிலக்குமணன் தடுத்தலும்.

கோலொன்றுதுணிதலோடுங்கூற்றுக்குங்கூற்றமன்னான்
வேலொன்றுவாங்கிவிட்டான்வெயிலொன்றுவிழுவதென்ன
நாலொன்றுழுன்றுமானபுவனங்கணடுங்கலோடும்
நூலொன்றுவரிவிலானுமதனையுநுறுக்கிவீழ்த்தான். (கஎஅ)

விபீடணன் இந்திரசித்தின் தேர்ப்புரவியாதியவழித்தல்.

வேல்கொடுகொல்லலுற்றூனென்றூருவெகுளிபொங்கக்
கால்கொடுகாலிற்கூடிக்கைதொடர்கனகத்தண்டால்
கோல்கொளுமொருவனேறுங்கொடித்தடந்தேரிற்பூண்ட
பால்கொளும்புரவியெல்லாம்படுத்திரன்றுடிப்புமாற. (கஎக)

அழிந்ததேர்மீதுநின்ரூனையிரகோடியம்பால்
பொழிந்தவன்ரூளின்மேலுமிலக்குவன்புயத்தின்மேலும்
ஒழிந்தபேருரத்தின்மேலுமுதிரநீர்வாரியோதம்
அழிந்திழிந்தோடநோக்கியண்டமுமிரியவார்த்தான். (கஅ0)

இந்திரசித்து மறைந்திராவணனிடம் புகுதல்.

ஆர்த்தவனனையபோழ்தினழிவிலாத்தேர்கொண்டன்றிப்
போர்த்தொழில்புரியலாகாதென்பதோர்பொருளாயுன்னிக்
காத்தவரிமையாமுன்னம்விசும்பிடைக்கரந்தானென்னும்
வார்த்தையைநிறுத்திப்போனனிராவணன்மருங்குசென்ரூன். (கஅக)

உசு – வது, நிகும்பலைப்படலம் – மூற்றிற்று.

ஆஉ திருவிருத்தம்-நுoஎக.

உஎ-வது, இந்திரசித்துவதைப்படலம்.

இராவண னிந்திரசித்தை விளுவுதல்.

விண்ணிடைக்கரந்தானென்பார்வஞ்சனவிளக்குமென்பார்
கண்ணிடைக்கலக்கமேனக்கியையுறவுழக்குங்காலை
புண்ணிடையாக்கைச்செந்நீரிழிதரப்புக்குநின்ற
எண்ணுடைமகனைநோக்கியிராவணனினையசொன்னான். (க)

தொடங்கியவேள்விமுற்றும்பெற்றிலாத்தொழினின்ரூண்மேல்
அடங்கியவம்பேயென்னையறிவித்ததழிவில்யாக்கை
நடுங்கினபோலச்சாலத்தளர்ந்தனகலுழனண்ணைப்
படுங்குறையரவமொத்தாயுற்றதுபகர்தியென்ரூன். (உ)

இந்திரசித்துப் பதிலுரைத்தல்.

சூழ்வினைமாயையெல்லாமும்பியேதுடைக்கச்சுற்றி
வேள்வியைச்சிதையநூறிவெகுளியாலெழுந்துவீங்கி
ஆள்வினையாற்றலாற்ரூனமர்த்தொழிற்புக்குநின்ரூன்
தாழ்விலாப்படைகண்மூன்றுந்தொடுத்தனென்றடுத்துவிட்டான். (ங)

இந்திரசித் திலக்குமணன் பெருமைகூறுதல்.

நிலஞ்செய்துவிசும்புஞ்செய்துநெடியவன்படைநின்ரூனை
வலஞ்செய்துபோவதாணன்மற்றினிவலியதுண்டே

குலஞ்செய்தபாவத்தாலேகொடும்பழிதேடிக்கொண்டேடம்
சலஞ்செயினுலகமூன்றுமிலக்குவன்முடிப்பன்றானே. (சு)

முட்டியசெருவின்முன்னமுதலவன்படையைமுன்பா
விட்டிலருலகையஞ்சியாதலால்வென்றுமீண்டேடன்
கிட்டியபோதுங்காத்தாரின்னமுங்கிளரவல்லார்
சுட்டியவலியினுலேகோறலத்துணிந்துநின்றூர். (ஙு)

ஆதலானஞ்சினேனென்றருளலயாசைதானச்
சீதைபால்விடுதியாயினனையவர்சீற்றந்தீர்வர்
போதலும்புரிவர்செய்ததீமையும்பொறுப்பருன்மேல்
காதலாலுரைத்தேதனென்றூனுலகெலாங்கலக்கிவென்றூன். (சூ)

இராவணன் இந்திரசித்தனை வெறுத்தல்.

இயம்பலுமிலங்கைவேந்தனையிற்றினிலவுமெய்தப்
புயங்களுங்குலுங்கநக்குப்போர்க்கினியொழிதிபோலாம்
மயங்கினமணிசன்றன்னையஞ்சலவருந்தலைய
சயங்கொடுதருவெனின்றேறமனிசரைத்தனுவென்றூலே. (எ)

முன்னையோரிறந்தாரெல்லாமிப்பகைமுடிப்பரென்றும்
பின்னையோர்நின்றூரெல்லாம்வென்றனர்பெயர்வரென்றும்
உன்னைநீயவரைவென்றுதருதியென்றுணர்ந்துமன்றூல்
என்னையேநோக்கியானிந்நெடும்பகைதேடிக்கொண்டேடன். (அ)

பேதைமையுரைத்தாய்மைந்தவுலகெலாம்பெயரப்போராக்
காதையென்புகழிதேறுநிலபெறவமர்க்கணை
மீதழுமொக்குளன்னயாக்கையைவிடுவதல்லால்
சீதையைவிடுவதுண்டோவிருபதுதிண்டோளுண்டாய். (கூ)

வென்றிலையென்றபோதும்வேதமுள்ளளவும்யானும்
நின்றுளனன்றூமற்றவ்விராமன்போர்நிற்குமாயின்
பொன்றுதலொருகாலத்துந்தவிருமோபொதுமைத்தன்றூ
இன்றுளார்நாளுமான்வார்புகழுக்குபிறுதியுண்டோ. (கo)

விட்டனன்சீதைதன்னையென்னலும்விண்றேரர்ணினிக்
கட்டுவதல்லாற்பின்னையானெனக்கருதுவாரோ
பட்டனனென்றபோதுமெளிமையிற்படுகிலென்யான்
எட்டிறைஞரண்டமாயதிசைகளையெறிந்துவென்றேறன். (கக)

சொல்லியென்பலவுநீநின்னிருக்கையைத்தொடர்ந்துதோளில்
புல்லியபகழிவாங்கிப்போர்த்தொழிற்சிரமம்போக்கி
எல்லியுங்கழித்தியென்னைவெழுந்தனனெழுந்துபேழ்வாய்
வல்லியமுனிந்தாலன்னவருகதேர்தருகவென்றூன். (கஉ)

இந்திரசித் திராவணனைத்தடுத்துத் தானிராதமேறுதல்.

எழுந்தனன்றன்னைநோக்கியிணையடியிறைஞ்சியெந்தாய்
ஒழிந்தருள்சீற்றஞ்சொன்னவுறுதியைப்பொறுத்தியாமே
கழிந்தனெனென்றபின்னர்நல்லவாக்காண்டியென்ன
மொழிந்தனன்றெய்வத்தேர்மேலேறிணன்முடியலுற்றான். (கஉ)

படைக்கலவிஞ்சைமற்றும்படைத்தனபலவுந்தன்பால்
அடைக்கலமாகத்தேவரளித்தனவெல்லாம்வாங்கிக் [றன்னைக்
கொடைத்தொழில்வேட்டோர்க்கெல்லாங்கொடுத்தனன்கொடியோன்
கடைக்கணைமேலைக்கிநோக்கியிருகணீர்கலுழப்போனான். (கக)

இலங்கையினிருதரெல்லாமழிந்தனர்விரைவினெய்தி
விலங்கலந்தோளனின்னைப்பிரிகலம்விளிதுமென்ன
வலங்கொடுதொடர்ந்தார்தம்மைமன்னனக்காமின்யாதும்
கலங்கலிரினிமேற்சென்றுமனிசரைக்கடப்பலென்றான். (கஉ)

வணங்குவார்வாழ்த்துவார்தன்வடிவினைநோக்கித்தம்வாய்
உணங்குவாருயிர்ப்பாருள்ளமுருகுவார்வெருவலுற்றுக்
கணங்குழைமகளிரீண்டியிரைத்தவர்கடைக்கணென்னும்
அணங்குறைநெடுவேல்பாயுமமர்கடந்தரிதிற்போனான். (கசு)

ஏயினனின்னலுகவிலக்குவனெடுத்தவில்லான்
சேயிருவிசும்பைநோக்கிவீடணதியோனப்பால்
போயினனுதல்வேண்டும்புரிந்திலனென்றுமென்பான்
ஆயிரம்புரவிபூண்டதேரினும்போரவங்கேட்டான். (கஎ)

மே வு.

குன்றிடைநெரிதரவடவரையின்குவடுருள்குவதெனமுடுகுதாறும்
பொன்றிணிகொடியனதிடியுருமினதிர்குரன்முரல்லதுபுனமணியின்
மின்றிரள்சுடரதுகடல்பருகும்வடவனல்வெளியுறவருவதெனச்
சென்றதுதிசைதிசையுலகினியத்திரிபுவனமுமுறுதனியிரதம். (கஅ)

கடன்மறுகிடனிலகுலையநெடுங்கரியிரதவெதிர்கவிகுலமும்
குடன்மறுகிடமலகுலையநிலங்குழியொடுகிழிபடவழிபடரும்
இடமறுகியபொடிமுடுகிடலும்மிருளுளதெனவெழுமிகலரவின்
படமறுகிடவெதிர்பரவியவண்பகலிருள்வருவனபகையிரதம். (ககூ)

இந்திரசித்தின்போர்.

ஆர்த்ததுநிருதர்தமனிகமுடனமரரும்வெருவினர்கவிகுலமும், வேர்த்ததுவெருவலொடலம்வரலால்விடகணைசிதறினனுதொழிலோன், தீர்த்தனுமவனெதிர்முடுகிநெடுந்திசைசெவிடெறிதரவிசைகெழுதிண், போர்த்தொழில்புரிதலுமுலகுகடும்புகையொடுசிகையனல்பொதுளியதால்.()

வீடணனமலனே விறல்கெழுபோர்விடலையையினியிடைவிடலுளதேல்
சூடலெதுறுமலர்வாகையெனத்தொழுதனவளவிலழகனுமக்
கோடணைவரிசிலையுலகுலையக்குலவரைபிதிர்படநிலவரையின்
சேடனும்வெருவுறவுருமுறழ்திண்டிறுகணைமுறைறமுறைறசிதறினனல்.

ஆயினவளவையினனன்முகவாயடுகணையவன்விடவிவன்விடலும்
தீயினுமெரிவனவுயிர்பருகச்சிதறினகவிகளொடினநிருதர்
போயினதிசைதிசையனநிறையப்புரள்பவர்முடிவிலர்பொருதிறலோர்[ல்
ஏயினவொருவரையொருவர்குறித்தெரிகணையிருமழைபொழிவனபோ

அற்றனவனல்விழிநிருதன்வழங்கடுகணையிடையிடையடலரியின்
கொற்றவன்விடுகணைமுடிகியவனுடல்பொதிகுருதிகள்பருகினகொண்
டுற்றனவொளிகிளர்கவசநுழைந்துறுகிலதிறுகிலவநுமனுடல்
புற்றிடையரவென நுழையநெடும்பொருசரமவனையுணர்கிலனல். ()

ஆயிடையிளையவன்விடமனையானவனிடுகவசமுமழிவுபடத்
தூயினனயின்முகவிசிகநெடுந்தாளபடவிழியனல்சொரியமுனிந்
தேயினனிருதனதெரிகணைதானிடனிலபடுவனவிடையிடைவந்
தோய்வுறுவனவதுதெரிவுறலாலுரறினரிமையவருவகையிலனல். (உச)

வில்வினின்வலிதரவரிதெனலால்வெயிலினுமனலுமிழுயில்விரைவில்
செல்லெனவிடல்கொடுகடவினன்மற்றது திசைமுகன்மகனுதவியதால்
எல்லினும்வெளிபடவெதிர்வதுகண்டிளையவனெழுவகைமுனிவர்கடம்
சொல்லினும்வலியதொர்சுடுகணையானடுவிருதுணிபடவுரறினனல். ()

ஆணியினிலையெனவிசிகநுழைத்தாயிரமுடல்புகவழிமடுசெஞ்
சோணிதநிலமுறவுலறிடவுந்தொடுகணைவிடுவனமிடல்கெழுதிண்
பாணிகள்கடுகினமுடுகிடலும்பகலவன்மருமகனடுகணைவன்
றூணியையுருமுறழ்பகழிகளாற்றுணிபடமுறைறமுறைறசிதறினனல். ()

தேருளதெனினிவன்வலிதொலையானெனுமதுதெரிவுறவுணருறுவான்
போருறுபுரவிகள்படுகிலவாற்புனைபிணிதுணிகிலபொருகணையால்
சீரிதுபெரிதிதனிலமைமெனத்தெரிபவனெருசுடுதெறுகணையால்
சாரதிமலபுரைதலையைநெடுந்தரையிடையிடுதலுநிலதிரிய. (உஎ)

வேறு.

உய்வினையொருவன்றாண்டானுலத்தலிற்றவத்தைதண்ணெனி
அய்வினைநலியறைவானறிவிற்குழுவமையாகி
மெய்வினையமைந்தகாமம்விற்கின்றவிரகிற்சூலாப்
பொய்வினைமகளிர்கற்பும்போன்றதப்பொலம்பொற்றிண்டேர். (உஅ)

துள்ளுபாய்புரவித்தேருமுறைறமுறைறதானைதாண்டி
அள்ளினன்பறிக்குந்தன்போராகமேயாவுமாக

வள்ளன்மேலநுமன்றன்மேன்மற்றையோர்மற்றிண்டோண்மேல்
உள்ளுறப்பகழிதூவியார்த்தனெனவருமுட்க. (உக)

வீரரென்பார்க்கட்கெல்லாமுன்னிற்கும்வீரர்வீரன்
பேரரென்பார்களாகும்பெற்றியிற்பெற்றித்தாமே
சூரரென்றுரைக்கற்பாலார்துஞ்சும்போதுணர்விற்சோரார்
தீரரென்றமரர்செப்பிச்சிந்திரைதெய்வப்பொற்பூ. (உ0)

எய்தவன்பகழியெல்லாம்பறித்தவனென்மேலெய்யும்
கய்தடுமாறுதுள்ளுமுயிரினங்கலங்காதியாக்கை
மொய்கணைகோடிகோடிமொய்க்கவுமிளைப்பொன்றில்லான்
அய்யனுமிவனேடெஞ்சுமாண்டொழிலாற்றலென்றான். (உக)

தேரினைக்கடாவிவானிற்செல்லினுஞ்செல்லுஞ்செய்யும்
போரினைக்கடந்துமாயம்புணர்க்கினும்புணர்க்கும்போயக்
காரினைக்கடந்தும்வஞ்சங்கருதினுங்கருதுங்காண்டி
வீரமெய்ப்பதலினல்லால்விளிகிலனிருளின்வெய்யோன். (உஉ)

என்றெடுத்திலங்கைவேந்தற்கிளையவனியம்பவின்னே
பொன்றுவதல்லாலப்பாவினியொருபோக்குமுண்டோ
சென்றுழிச்செல்லுமென்றேறெதறுகணைவலியிற்றீர்ந்தால்
வென்றியிப்பொழுதேகொடுங்காணெனவிளம்புமெல்லை. (உங)

சூரியனுதித்தல்.

செம்புனற்சோரிச்செக்கர்திசையுறச்செறிகையாலும்
அம்பெனவுற்றகொற்றத்தாயிரங்கதிர்களாலும்
வெம்புபொற்றேரிற்றோன்றுஞ்சிறப்பினுமரக்கன்வெய்யோன்
உம்பரிற்சென்றுதேரேடொத்துதித்தனனுக்கனுப்பால். (உச)

விடிந்ததுபொழுதும்வெய்யோன்விளங்கினனுலகமீதா
விடுஞ்சுடர்விளக்கமென்னவரக்கரினிருளும்வீயக்
கொடுஞ்சினமாயச்செய்கைவலியொடுங்குறைந்துகுன்ற
முடிந்தனனரக்கனென்னுமுழங்கினரும்பர்முற்றும். (உஙு)

ஆழியாதசூலத்தண்ணறனருளினீங்த
தோழியாதபோதுஞ்சிலகரத்திருந்தபோதும்
போழியானிவ்வெய்யோன்புகழியாதபொற்றோள்
வீரவிதாணையென்றுன்வீடணன்விளவதோர்வான். (உசு)

பச்சைவெம்புரவிவீயாபல்லியற்சில்லிபாரின்
நிச்சயமற்றுநீங்காவென்பதுநினைந்துவில்லின்
விச்சையின்கணைவலனென்வின்மையால்வயிரமிட்ட
அச்சிறேடொழிவெவ்வேறுக்கினனணிநீக்கி. (உஎ)

மணிநெடுந்தேரின்றட்டிவிட்டதுமறிதலோடும்
அணிநெடும்புரவியெல்லாமாற்றலவாயவன்றேற
திணிநெடுமரமொன்றூழிவாண்மழுத்தாக்கச்சிந்திப்
பிணநெடுமுதலுநீங்கிப்பாங்குறுபறவைபோல. (சஎ)

இந்திரசித்துவானத்துண் மறைந்துபொருதல்.

அழிந்ததேர்த்தட்டினின்றுமங்குள்ளபடையையள்ளிப்
பொழிந்தனனிளையவள்ளல்கணைகளாற்றுணித்துப்போக்க
மொழிந்திருவகையில்விண்ணுமுட்டிநனுலகமூன்றும்
கிழிந்தனவென்னவார்த்தான்கண்டலோராசைகேட்டார். (கக)

மல்லின்மாமாரியன்னதோளினன்மழையின்வாய்ந்த
கல்லின்மாமாரிபெற்றவரத்திறற்சொரியுங்காலைச்
செல்லுவான்றிசைகளோராராற்சிரத்திறுடல்கள்சிந்தப்
புல்லினூர்நிலத்ததின்றவானரவீரர்போகார். (கo)

காண்கிலன்கல்லின்மாரியல்லதுகாளவீரன்
சேண்கலந்தொளித்துநின்றசெய்கையாற்றிசைகளெங்கும்
மாண்கலந்தளந்தமாயன்வடிவெனமுழுதும்வெளவ
ஏண்கலந்தமைந்தவாளியேயினனிடைவிடாமல். (கக)

மறைந்தனதிசைகளெங்குமாறுபோய்மலையுமாற்றல்
குறைந்தனவிருண்டமேகக்குழாத்திடைக்குருதிக்கொண்மூ
உறைந்துளதென்னநின்றூனுருவினையுலகமெல்லாம்
நிறைந்தமன்கண்டான்காணவினையதேர்ந்தினவதாணன். (கஉ)

இந்திரசித்தன் காமறுத்தல்.

சிலையறுதெனினுமற்றத்திண்ணியோன்றிரண்டதோளாம்
மலையறுதாழியாதென்னுவரிசிலையொன்றுவாங்கிக்
கலையறுத்திங்களன்னவாளியாற்கையைக்கொய்தான்
விலையறுமணிப்பூணெடும்வில்லொடுநிலத்துவீழ. (கங)

பாகவான்பிறைபோல்வெவ்வாய்ச்சுடுகணபடுதலோடும்
வேகவான்கடுங்காலெற்றமுற்றும்போய்விளிந்தநாளின்
மாகவான்றடக்கைமண்மேல்விழுந்ததுமணிப்பூண்மின்ன
மேகமாகாயத்திட்டவில்லொடும்வீழ்ந்ததென்ன. (கச)

படித்தலஞ்சுமந்தநாகம்பாகவான்பிறையைப்பற்றிக்
கடித்ததுபோலக்கோலவிரல்களாலிறுகக்கட்டிப்
பிடித்தவெஞ்சிலையிரண்டும்பெரெழில்வீரன்பொற்றோள்
துடித்ததுமாமுங்கல்லுந்துகள்படக்குரங்குந்துஞ்ச. (கரு)

அந்தரமதனினின்றவானவரருக்கன்வீழாச்
சந்திரன்வீழாமேருமால்வரைதகர்ந்துவீழா
இந்திரசித்தின்பொற்றேரளிற்றிடைவிழுந்ததென்றால்
எந்திரமனையவாழ்க்கையினிச்சிலருகந்தெனன்றார். (சசு)

மொய்யறமூர்த்தியன்னமொய்ம்பினைம்பினலப்
பொய்யறச்சிறிதென்றெண்ணும்பெருமையான்புதல்வன்பூத்த
மய்யறக்கரிதென்றெண்ணுமனத்திரன்வயிரமன்ன
கய்யறத்தலையற்றார்போற்கலங்கினர்நிருதர்கண்டார். (சஎ)

அன்னதுநிகழும்வேலையார்த்தெதழுந்தரியின்வெள்ளம்
மின்னெயிற்றரக்கர்சேனையாவருமீளாவண்ணம்
சொன்னகக்கரத்தாற்பல்லான்மரங்களான்மானக்குன்றால்
பொன்னெடுநாட்டையெல்லாம்புதுக்குடியேற்றிற்றன்றே. (சஅ)

காலங்கொண்டெழுந்தமேகக்கருமையான்செம்மைகாட்டும்
ஆலங்கொண்டிருண்டகண்டத்தமரர்கோனருளிற்பெற்ற
சூலங்கொண்டெறிவலென்றுதோன்றினுன்பகையின்றேற்ற
மூலங்கொண்டுணராநின்னைமுடித்தன்றிமுடியெனென்றான். (சக)

இந்திரசித்து மாயப்போர் புரிதல்.

காற்றெனவுருமேறென்னக்கனலெனக்கடைநாளற்ற
கூற்றெனவுருவுகொண்டுகுறுகியதென்னக்கொல்வான்
தோற்றினைதனைக்காணுவினித்தலைதுணிக்குங்காலம்
ஏற்றதென்றயோத்திவேந்தற்கிளையவனினையசெய்தான். (சo)

இராமனே பரம்பொருளாஞ லிந்திரசித்தினைக்
கொல்கவென வம்பேவுதல்.

மறைகளேதேறத்தக்கவேதியர்வணங்கற்பால
இறையவனிராமனென்னுநல்லறமூர்த்தியென்னின்
பிறையெயிற்றிவனைக்கோறியென்றெருபிறைவாய்வாளி
நிறையுறவாங்கிவிட்டானுலகெலாநிறுத்தினின்றான். (சக)

இந்திரசித்தின் தலையற்று விழுதல்.

நேமியுங்குலிசவேலுநெற்றியினெருப்புக்கண்ணன்
நாமவேலுமற்றைநான்முகன்படையுநாணத்
தீமுகங்கதுவவோடிச்சென்றவன்சிரத்தைத்தள்ளிப்
பூமழைமாரிசிந்தப்பொலிந்ததப்பகழிப்புத்தேள். (சஉ)

அற்றவன்றலைமீதேதாங்கியண்டமுற்றணுகாமுன்னம்
பற்றியசூலத்தோடுமுடனிறபகழியோடும்
எற்றியகாலக்காற்றுன்மின்னெடுமிடியினோடும்
சுற்றியபுயல்வீழ்ந்தென்னவீழ்ந்ததுசோரன்யாக்கை. (சங)

விண்டலத்திலங்குதிங்களிரண்டொடுமின்னுவீசும்
குண்டலத்துணைகளோடுங்கொந்தளக்குஞ்சிச்செங்கேழ்ச்
சண்டவெங்கதிரோன்செக்கர்த்தழலொடுமருவித் * தாம
மண்டலம்விழுந்ததென்னவிழுந்ததுதலையுமண்மேல். (நச)

உயிரிறப்புக்ககாலையுண்ணின்றவுணர்விடுதும்
செயிறறுபொறியுமந்தக்கரணமுஞ்சிந்துமாபோல்
அயிலெயிற்றரக்கருள்ளாராற்றலராகியான்ற
வெயிலுடையிலங்கைநோக்கியிரிந்தனர்படையும்விட்டார். (நந)

தேவராரவாரித்தல்.

வில்லாளராளர்க்கெல்லாமேலவன்விளிதலோடும்
செல்லாதவ்விலங்கைவேந்தற்கரசெனக்களித்ததேவர்
எல்லாருந்தூசுதீக்கியேறிடவார்த்தபோது
கொல்லாதவிரதத்தார்தங்கடவுளர்கூட்டமொத்தார். (நசு)

திருமூர்த்தியாதிதேவரை வானரர் தெரிசித்தல்.

வரந்தருமுதல்வன்மற்றைமான்மறிக்கரத்துவள்ளல்
புரந்தரன்முதல்வராயநான்மறைப்புலவர்பாரில்
நிரந்தரந்தோன்றிநின்றூரருளிணைநிறைந்தநெஞ்சர்
கரந்திலரவரையாக்கைகண்டனகுரங்குங்கண்ணல். (நஎ)

இறந்தவானர ருயிர்பெற்றெழுதல்.

அறந்தலைநின்றூர்க்கில்லையழிவெனுமறிஞர்வார்த்தை
சிறந்ததுசரங்கள்பாயச்சிந்தியசிரத்தவாகிப்
பறந்தலையதனின்மற்றைப்பாதகவரக்கன்கொல்ல
இறந்தனகவிகளெல்லாமெழுந்தனவிமையோரேத்த. (நஅ)

ஆக்கையினின்றுவீழ்ந்தவரக்கன்றன்றலையையங்கை
தூக்கினனுள்ளங்கூர்ந்தவாலிசேய் ‡ தூசுசெல்ல
மேக்குயர்ந்தமரர்வெள்ளமள்ளினர்தொடர்ந்துவீசும்
பூக்கிளர்பந்தர்நீழலநுமன்மேலிளவல்போனான். (நகூ)

இராமனிந்திரசித்தின் தலையைக்காண்டல்.

வீங்கியதோளன்றேய்ந்துமெலிகின்றபழியன்மேன்மேல்
ஓங்கியவுவகையூறுமுள்ளத்தனும்பர்க்காகத்
தேங்கியகடலுமுன்னுட்டிரித்தவன்சேய்செங்கையால்
தாங்கியகுரிசில்பற்றிக்கொணர்ந்திடுந்தலையைக்கண்டான். (சுo)

எல்லிவான்மதியினுற்றகறையெனவென்மேல்வந்து
புல்லியவவுவும்போகாதென்றகம்புலம்புகின்றேன்

---

* தாமமண்டலம் – ஒளிமண்டலம்.

‡ தூசுசெல்ல – முன்னணியிற்போக.

சொல்லியதருமநல்கத்துவக்கற்றுத்துயரந்தீர்ந்தேன்
செல்வமும்பெறுதற்குண்டேகுறையினிச்சிறுமையாதோ. (சுக)

தென்றலையாழிசூழ்ந்ததிண்மதிலிலங்கைகாக்கும்
புன்றலைக்கள்வன்பெற்றபுதல்வனையிளவல்வீழ்த்த
வன்றலையெடுத்துநீமுன்வருதலால்வானரேச
என்றலையெடுக்கலானேனினிக்குடையெடுப்பேனென்றான். (சுஉ)

வான்றலையெடுக்கவேலைமண்டலையெடுக்கவாளர்
கோன்றலையெடுக்கவேதக்குலந்தலையெடுக்கக்குன்றுத்
தேன்றலையெடுக்குந்தாராய்தேவரைவென்றுன்றீய
ஊன்றலையெடுத்தாய்நீயென்றுரைத்தனருவகைமிக்கார். (சுங)

வரதன்போய்மறுகாதின்றமனத்தினன்மாயத்தோனைச்
சரதம்போர்வென்றுமீளுந்தருமமேதாங்குகென்பான்
விரதம்பூண்டுயிரிலேனுடுத்தன்னுடைமீட்சிநோக்கும்
பரதன்போன்றிருந்தான்றம்பிவருகின்றபரிசைப்பார்த்தான். (சுச)

வன்புலங்கடந்துமீளுந்தம்பிமேல்வைத்தமாலைத்
தன்புலநயனமென்னுந்தாமரைசொரியுந்தாரை
அன்புகொலழுகணீர்கெலானந்தவாரியேகொல்
என்புகளுருகிச்சோருங்கருணைகொல்யாரேதார்வார். (சுஙி)

இராமன்காலெதிரே இந்திரசித்தின் தலையை இடுதல்.

விழுந்திழிகண்ணினீருமுவகையுங்களிப்பும்வீங்க
எழுந்ததிர்வந்தவீரனிணையடிமுன்னரிட்டான்
கொழுந்தெழுஞ்சுக்கர்க்கற்றைக்குழாங்கொளவெயிற்றினீட்டம்
அழுந்துறமடித்தபெழ்வாய்த்தலையடியிறையொன்றுக. (சுசு)

தலையினேநோக்குந்தம்பிகொற்றவைதழீஇயபெற்றோள்
மலையினேநோக்குநின்றமாருதிவலியைநோக்கும்
சிலையினேநோக்குந்தேவர்செங்கையையேநோக்குஞ்செய்த
கொலையினேநோக்குமொன்றுமுரைத்திலன்களிப்புக்கொண்டான். (சுஎ)

இராமன்விலக்குமணனைத் தழுவி மகிழ்தல்.

காளமேகத்தைச்சுக்கர்கலந்தெனக்காரியகுன்றம்
நாள்வெயிற்பாந்தளென்னநம்பிதன்றம்பிமார்பில்
தோளின்மேலுதிரச்செங்கேழ்ச்சுவடுதன்னுருவிற்றோன்றத்
தாளின்மேல்வணங்கினானைத்தழுவினன்றனித்தான்றில்லான். (சுஅ)

வேறு

இராம னிலக்குமணனைப் புகழ்தல்.

கம்பமதத்துக்களியானைக்காவற்சனகன்பெற்றெடுத்த
கொம்புமென்பாலினிவந்துகுறுகினனென்றனக்குளிர்ந்தேன்

வம்புசெறிந்தமலர்க்கோயின்மறையோன்படைத்தமானிலத்தில்
தம்பியுடையான்பகையஞ்சானென்னுமாற்றந்தனையால். (சுகூ)

வேறு.

வீக்கியதூணிவாங்கித்தோளொடுமார்பைச்சுற்றி
தூக்கியகவசபாசமொழித்ததுவிரைவினீக்கித்
தாக்கியபகழிக்கூர்வாய்தடிந்தபுண்டழும்புமின்றிப்
போக்கினன்றழுவிப்பல்காற்பொற்றடந்தோளிலைற்றி. (எ0)

இராமன் விபீடணனைப் புகழ்தல்.

ஆடவர்திலகனின்னலன்றிகலுமனென்னும்
சேடலைலன்றுவேலைர்தெய்வத்தின்சிறப்புமன்று
வீடணன்றந்தவெற்றியீதெனவிளம்பிமெய்ம்மை
ஏடவிழலங்கன்மார்பனிருந்தனனினிதினிப்பால். (எக)

உஎ-வது, இந்திரசித்துவதைப்படலம் முற்றிற்று.

ஆஉ திருவிருத்தம்-நுகசூஉ.

உஅ-வது, இராவணன் சோகப்படலம்.

ஓதரோதனவேலைகடந்தராய்ப்
பூதரோதரம்புக்கெனப்போர்த்திழி
சீதரோதக்குருதித்திரையொரீஇத்
தூதரோதவெங்காலிற்றுனைந்துளார்.

(இ-ள்.) தூதர் – தூதுவர், ஓத – இந்திரசித்துக்கொலையுண்ட செய்தியைச் சொல்லும்படி, ஓதம் – கடலோசையையொத்த, ரோதனம் – (போரிற்பட்ட தமருக்காக ஒழிந்தோர்) அழுகையினது, வேலை – கரையை, கடந்து – தாவி, உராய் – (ஒருவரையொருவர்) உராய்ந்து சென்று, போர்த்து – (அப்போர்க்களமெங்கும்) தவழ்ந்து உறுசீதம் – மிகுதியுந் தண்மையாகிய, ரோதம் – கரையையுடைய, குருதித்திரை – இரத்தக் கடலை, ஒரீஇ – கடந்து நீங்கி, பூதரோதரம் – பொன்மலையினது வயிற்றினுள், புக்கென – புகுந்தாற்போல (இலங்கையின் கோபுரவாயிலுள்,) வெங்காலின் – கடுங் காற்றைப்போல, துனைந்துளார் – விரைந்தோடினர்;—எ-று.

ஓதரோதனம் சீதரோதமென்பன வடமொழிச்சந்தி. புகுந்தாலென வென்பதனீறுதொகுத்தல். இலங்கையின் கோபுரவாயிலென்பது பூதரோதரம் புக்கென என்பதற்கியையவந்த இசையெச்சம். புகழ்பொருள்

உயுத்தகாண்டடம்

இதுவேயென்பது "மேருவைநிறுத்தி வெளிசெய்தது கொல்" என்பதனுற்பெற்றும். உரோதனத்திற்கு ஓதத்தையுவமித்தமையான் அதுநிகழுமிடத்தினெல்லையை வேலையென்றார். பூதரம் காணவிடுகுறியாயினும், ஈண்டு இடுகுறிமாத்திரையாய் மேருவுக்காயிற்று. பூதரோதரம் புக்கெனப்போர்த்தென்பதற்கு – பூவாகிய தரையினதுதரத்திலும் புகுந்ததென்னும்படி போர்க்களமுழுமையும் பரவியெனக் குருதித்திரையின் மேலேற்றிக் கூறலுமொன்று. புக்கதென்பதனீறும் உம்மையுந் தொகுத்தல்.

(க)

அன்றிலங்கரும்பேடைகளாமென
முன்றிலெங்குமரக்கரைமொய்த்தழ
இன்றிலங்கையழிந்ததென்றேறங்குவார்
சென்றிலங்கையிற்சூதையைச்சேர்ந்துளார்.

(உ)

பல்லும்வாயுமனமுந்தம்பாதமும்
நல்லுயிர்ப்பொறையோடநடுங்குவார்
இல்லையாயினனுன்மகனின்றெனச்
சொல்லினர்பயஞ்சுற்றத்துளங்குவார்.

(ங)

மாடிருந்தவர்மாதவர்வானவர்
ஆடனுண்ணிடையார்மற்றும்யாவரும்
வீடுமின்றிவ்வுலகெனவிம்முவார்
ஓடியெங்கணுஞ்சிந்தியொளித்தனர்.

(ச)

சுடர்க்கொழும்புகைதீவிழிதூண்டிடத்
தடக்கைவாளருவித்தருந்தாதரை
மிடற்றுவீசலுருவிழுந்தானரோ
கடற்பெருந்திரைபோற்கரஞ்சோரவே.

(ஞ)

வாய்ப்பிறந்தமுயிர்ப்பின்வளர்ந்தும்வன்
காய்ப்புறுந்தொறுங்கண்ணிடைக்காந்தியும்
போய்ப்பிறந்திவ்வுலகைப்பொதியும்வெந்
தீய்ப்பிறந்துளதின்றெனச்செய்ததால்.

(ஃ)

படம்பிறங்கியபாந்தளும்பாரும்பேர்ந்
திடம்பிறங்கிவலம்பெயர்ந்தீடுற
உடம்பிறங்கிக்கிடந்துழைத்தேதங்குதீ
விடம்பிறந்தகடலெனவெம்பினன்.

(எ)

இராவணனது புத்திரசோகம்.

திருகுவெஞ்சினத்தீநிகர்சீற்றமும்
பெருகுகாதலுந்துன்பும்பிறழ்ந்திட
இருபதென்னுமொளிபுரைகண்களும்
உருகுசெம்பெனவோடியதூற்றுநீர்.

(அ)

கடித்தபற்குலங்கற்குலங்கண்ணற
இடித்தகாலத்துருமெனவெங்கணும்
அடித்தகைத்தலமம்மலையாழிநீர்
பொடித்தவாய்தொறும்பொங்கினமீச்செல. (கூ)

மைந்தவோவெனுமாமகனேயெனும்
எந்தையோவெனுமென்னுயிரேயெனும்
மூந்திநேனுனைநாளுளேரெவெனும்
வெந்தபுண்ணிடைவேல்பட்டவெம்மையான். (கo)

புரந்தரன்பகைபோயிற்றன்றேரெவெனும்
அரந்தைதவானவராத்தனரோவெனும்
கரந்தைசூடியும்பாற்கடற்கள்வனும்
நிரந்தரம்பகைநீங்கினரோவெனும். (கக)

நீறுபூசியுநேமியுநீங்கிலர்
மாறுகுன்றெறுதேவலமறந்துளார்
ஊறுநீங்கினராயுவணத்திரே
டேறுமேறியுலாவுவரென்னுமால். (கஉ)

வானமானமும்வானவரீட்டமும்
போனபோனதிசையிடைப்புக்கனர்
தானமானவைசார்கிலர்சார்குவ
தூனமானுடர்வென்றிகொண்டோவெனும். (கங)

கெட்டதூதர்கிளத்தினவாறுரு
கட்டமானுடன்கொல்லவென்காதலன்
பட்டொழிந்தனனேயெனும்பன்முறை
விட்டணைக்குமுணைக்கும்வெதும்புமால். (கச)

எழுமிருக்குமிரைக்குமிரக்குமுற்
றழுமரற்றுமையர்க்கும்வியர்க்கும்போய்
விழும்விழிக்குமுகிழ்க்குந்தன்மேனியால்
உழுநிலத்தையுருளும்புரளுமால். (கஙி)

இராவணன் தலையலத்துந் தனித்தனிபுலம்புதல்.

அய்யனேயெனுமோர்சிரம்யானினம்
செய்வெனேயரசென்னுமங்கோர்சிரம்
கய்யனேயுனைக்காட்டிக்கொடுத்தநான்
உய்வெனேயென்றுரைக்குமங்கோர்சிரம். (கசு)

எழுவிற்கோலமெழுதியதோள்களால்
தழுவிக்கொள்கலையென்னுமங்கோர்தலை

உழுவைப்போத்தையுழையிருண்பதே
செழுவிற்சேவகனேயெனுமோர்சிரம். (கஎ)

நீலங்காட்டியகண்டனுநேமியும்
மேலுங்காட்டினெறிந்தபடையெலாம்
தோலுங்காட்டித்துரந்தனைமீண்டின்
ஓலங்காட்டிலையோவெனுமோர்தலை. (கஅ)

துஞ்சினையெகாறுணைபிரிந்தேதனைனும்
வஞ்சமோவெனும்வாரலையோவெனும்
நெஞ்சுநோவநெடுந்தனியேகிடந்
தஞ்சினென்றரற்றுமங்கோர்தலை. (கக)

காகமாடகளத்திடைக்காண்பெலை
பாகசாதன்மௌலியொடும்பொறித்
தோகைமாதவருச்சியின்வைத்தனின்
வாகைநாண்மலரென்னுமற்றோர்தலை. (உ0)

சேலியற்கணியக்கர்தந்தேவிமார்
மேலினித்தவிர்கிற்பர்கொல்வீரனின்
கோலவிற்குரல்கேட்டுக்குலுங்கித்தந்
தாலியைத்தொடலென்னுமற்றோர்தலை. (உக)

கூற்றமுன்னெதிர்வந்துயிர்கொள்வதோ
ரூற்றந்தானுடைத்தன்றனையும்மொளித்
தேற்றவெவ்வுலகுற்றனையெல்லையில்
ஆற்றலாயென்றழைக்குமங்கோர்தலை. (உஉ)

இராவணன் மகனைத்தேதடிப் போர்க்களமடைதல்.

இன்னவாறழைத்தேதங்குகின்ரூனெழுந்
துன்னுமாத்திரத்தேதாடினனூழிநாள்
பொன்னின்வானன்னபோர்க்களம்புக்கனன்
நன்மகன்றனதாக்கையைநாடிவான். (உங)

தேவரேமுதலாகியசேவகர்
யாவரும்முடனேதொடர்ந்தேதகிணர்
மூவகைப்பெருலகுமுறைமையும்
ஏவதாகுமென்றெண்ணியிரங்குவார். (உச)

அழுதவாற்சிலவன்பினர்போன்றடி
தொழுதவாற்சிலதூங்கினவாற்சில
உழுதவானைப்பிணம்புக்கொளித்தவால்
கழுதும்புள்ளுமரக்கனைக்காண்டலும். (உஞ)

கோடிகோடிகு திரையின்கூட்டமும்
ஓடல்வென்றியரக்கர்தமாக்கையும்
ஓடையாஅனையுந்தேருமுருட்டினன்
நாடிஞன்றன்மகனுடலைளலாம். (உசு)

வெட்டுண்ட கரத்தினை இராவணன் காண்டல்.

மெய்கிடந்தவிழிவழிநீர்விழ
நெய்கிடந்தகனல்புரைநெஞ்சினன்
மொய்கிடந்தசிலையொடுழாரிமாக்
கய்கிடந்ததுகண்டனன்கண்களால். (உஎ)

இந்திரசித்தின்கரத்தினை இராவணன் தலைமீது
எடுத்து வைத்து வருந்துதல்.

பொங்குதோள்வலையும்பொழிபுட்டிலோ
டங்கதங்களுமம்புமலங்கிட
வெங்கணைகமனப்பொலிமெய்யதைச்
செங்கையாலெடுத்தான்சிரஞ்சேர்த்தினன். (உஅ)

கற்றிண்மார்பிற்றழுவுங்கழுத்தினில்
சுற்றுஞ்சென்னியிற்சூட்டுஞ்சுழல்கணை
டொற்றுமோர்ந்திட்டிருகுழலாக்குமால்
முற்றுநாளின்விடுநெடுமூச்சினன். (உக)

இந்திரசித்தினுடன்மீதி ராவணன் விழுந்து புலம்புதல்.

கய்கண்டான்பின்கருங்கடல்கண்டன
மெய்கண்டானதன்மேல்விழுந்தானரோ
பெய்கண்டாரையருவிப்பெருந்திரை
மொய்கண்டார்திரைவேலையழுடவே. (கூ0)

அப்புமாரியழுந்தியமார்பைத்தன்
அப்புமாரியழுதிழியாக்கையின்
அப்புமாரினணைக்குமாற்றுமால்
அப்புமானுற்றதியாவருற்றாரோ. (கூக)

இ-ள். அப்புமாரி-அம்பினதுகொலை, அழுந்திய-நிலைத்த, மார்பை-இந்திரசித்துவினுடைய மார்பை, அழுது-அழுதலினால், அப்புமாரி-கண்ணீர்மழை, இழி-ஒழுகுகின்ற, தன்யாக்கையின்-தனதுடலில், அப்பும்-(சிறிதுபொழுது) ஒற்றுவான், மாரின்-மார்பில், அணைக்கும்-(சிறிதுபொழுது) அணைப்பான், அரற்றும்-ஒழியாது கதறுவான், (அப்போது) அப்புமான்-அந்தவாண்மையிற்சிறந்த இராவணன், உற்றது-உற்றதுன்பத்தை, யாவருற்றார்-யாவரடைந்தனர் ஒருவருமிலர்;—எ-று.

அப்பு–வலித்தல். அழுதென்பது செயவெனெச்சத்திரிபு. மாரென்பது கடைக்குறை. யாக்கை ஆகுபெயர். ஆல்அசைசை. அப்பும் அணைக்குமென வினைமுற்றடுக்கி வந்தமையிற் சிறிதுபொழுதென்பது ஆங்காங்குத் தந்துரைக்கப்பட்டது. அரற்றல் அவ்விருதொழிலும் நிகழ்வழியும் நிகழ்ந்ததென்பது தோன்ற அரற்றுமென இறுதியிற்கூறினர். (நக)

பறிக்குமார்பிற்பகழியைப்பன்முறை
முறிக்குமூர்ச்சிக்குமோக்குமுயங்குமால்
எறிக்கும்வெங்கதிரோடுலகேழையும்
கறிக்கும்வாயினிட்டின்றெனக்காந்துவான். (நஉ)

தேவரோடுமுனிவருஞ்சீரியோர்
ஏவரோடுமிடமின்றிநின்றவன்
மூவரோடுமுலகொருமூன்றுடன்
போவதேகொன்முனிவெனும்பொம்மலான். (நஙு)

இந்திரசித்தின்றலை காணுறு திராவணன் வருந்துதல்.

கண்டிலன்றலைகாந்தியமானுடன்
கொண்டிறந்தனனென்பதுங்கொண்டவன்
புண்டிறந்தனநெஞ்சன்பொருமலன்
விண்டிறந்திடவிம்மியரற்றினன். (நச)

வேறு.

நிலையுமாதிரத்துநின்றயானையுநெற்றிக்கண்ணன்
மலையுமேயெளியவேகான்மறிதற்குமறிந்தமைந்தன்
தலையுமாருயிருங்கொண்டாரவருடலோடுந்தங்கப்
புலையனேனின்னுமாவிசுமக்கின்றேறன்போலும்போலும். (நஞ)

எரியுணவுளகழுதூரிந்திரணிருக்கையெல்லாம்
பொரியுணவுலகமூன்றும்பொதுவறப்புரந்தேதன்போலாம்
அரியுணுமலங்கன்மௌலியிழந்தவென்மதலையாக்கை
நரியுணக்கண்டேனுணிலையுணுமுணவுநன்றால். (நசு)

பூண்டொருபகைமேற்புக்கென்புத்திரனேகும்போனீர்
மீண்டிலர்வினிந்துவீழ்ந்தார்விரதியரிருவரோடும்
ஆண்டளகுரங்குமொன்றுமமர்க்களத்தாருமின்னும்
மாண்டிலரினிமற்றுண்டோவிராவணன்வீரவாழ்க்கை. (நஎ)

கந்தர்ப்பரியக்கர்சித்தரரக்கர்தங்கன்னிமார்கள்
சிந்தாக்குலுசொல்லிலுருன்றேவியர்திருவினல்லார்
வந்துற்றெறங்கணைவன்றன்னைக்காட்டென்றுமருங்குவீழ்ந்தால்
அந்தாக்கவரற்றவோகான்கூற்றையுமாடல்கொண்டேன். (நஅ)

சினத்தொடுங்கொற்றமுற்றியிந்திரன்செல்வமேவி
னினைத்ததுமுடித்துனின்றேறனேரிழையொருத்திநீரால்
னெனக்குநீசெய்யத்தக்ககடனெலாமேங்கியேங்கி
உனக்குநான்செய்வதாதேனென்னின்யாருலகத்துள்ளார். (சுக)

இந்திரசித்தினுடலுடன் இராவணனிலங்கைக்கேகுதல்.

என்பனபலவும்பன்னியெடுத்தழைத்திரங்கியேங்கி
அன்பினுன்மகனைத்தாங்கியரக்கியராற்றிவீழப்
பொன்புனைநகரம்புக்கான்கண்டவர்புலம்புஞ்சூசல்
ஒன்பதுதிக்குமற்றையொருதிக்குமுற்றதன்றே. (சுo)

அசுரர் புலம்புதல்.

கண்களிச்சூல்கின்றுருங்கழுத்தினைத்தடிக்கின்றுரும்
புண்கொளத்திறந்துமார்பினீருளைப்போக்குவாருரும்
பண்கள்புக்கலம்புநாவையுயிரொடுபெறிக்கின்றுரும்
எண்களிற்பெரியவாற்றூரிருந்துயர்பொறுக்கலாற்றூர். (சுக)

மாதிரங்கடந்ததிண்டோண்மைந்தன்றன்மகுடச்சென்னி
போதலைப்புரிந்தயாக்கைபொறுத்தனன்புகுதக்கண்டார்
ஓதநீர்வேலையன்னகண்களாலுகுத்தவெள்ளக்
காதனீரோடியாடற்கருங்கடன்மடுத்ததன்றே. (சுஉ)

ஆவியினினியகாதலரக்கியர்முதல்வராய
தேவியர்குழாங்கள்சுற்றிச்சிரத்தின்மேற்றளிர்க்கைசேர்த்தி
ஓவியம்வீழ்ந்துவீழ்ந்துபுரள்வனவொப்பவொல்லை
கோவியல்கோயிற்புக்கான்குருதிநீர்க்குமிழிக்கண்ணன். (சுங)

மண்டோதரி புலம்புதல்.

கருங்குழற்கற்றைப்பாரங்காலெறடக்கமலப்பூவால்
குரும்பையைப்புடைக்கின்றுள்போற்கைகளான்முலைமேற்கொட்டி
அருங்கலச்சும்மைதாங்கவகலல்குலன்றிச்சற்றே
மருங்குலுமுண்டெண்டென்னமயன்மகண்மறுகிவந்தாள். (சுச)

தூயின்மேற்சுமந்தகையடழலின்மேன்மிதிக்கின்றுள்போல்
நிலையின்மேன்மிதிக்குந்தாளணைசத்தானிறைந்தநெஞ்சள்
கொலையின்மேற்குறித்தவேடன்கூர்ங்கணையுயிரைக்கொள்ள
மலையின்மேன்மயில்வீழ்ந்தென்னமைந்தன்மேன்மறுகிவீழ்ந்தாள். (சுடு)

உயிர்த்திலளுணர்வுமில்லளுயிரிலள்கொல்லோவென்னப்
பெயர்த்திலள்யாக்கையொன்றும்பேசலள்விம்மியாதும்
வியர்த்திலணெடிதுதோதுவிம்மலண்மெல்லமெல்ல
அயர்த்திலளரிதிற்றேறிவாய்திறந்தரற்றலுற்றுள். (சுசு)

கலையிறற்றிங்களென்னவளர்கின்றகாலத்தேதயுன்
சிலையிறலரிணையெவெல்லக்சூண்பதேதார்தவமுஞ்செய்தேதன்
தலையிலாவாக்கைகாணவெத்தவஞ்செய்தேனந்தோ
நிலையிலாவாழ்வையின்னுநினைவெனேநினைவிலாதேன். (சஎ)

அய்யனேயழகனேயென்னரும்பெறலமிழ்தேயாழிக்
கய்யனேமழுவனேயென்றவர்வலிகடந்தகால
மொய்யனேமுளரியன்னநின்முகங்கண்டிலாதேன்
உய்வெனேயுலகமூன்றுக்கொருவனேசெருவலோனே. (சஅ)

தாளரிச்சதங்கையார்ப்பத்தவழ்கின்றபருவந்தன்னில்
கோளரியிரண்டுபற்றிக்கொணர்ந்தனெகொணர்ந்துகோபம்
மூளுறப்பொருத்திமாடமுன்றிலின்முறையிடுடி
மீளருவினையாட்டின்னுங்காண்பெனேவிதியிலாதேன். (சக)

அம்புலியம்மவாவென்றழைத்தலுமவிர்வெண்டிங்கள்
இம்பர்வந்தானையஞ்சலெனவிருகரத்தினேந்தி
வம்புறுமறுவைப்பற்றிமுயலெனவாங்கும்வண்ணம்
எம்பெருங்களிறேகாணவேசற்றேறனெழுந்திராயே. (நo)

இயக்கியரரக்கிமார்கள்விஞ்சையரேழைமாதர்
முயற்கறைபயிலாத்திங்கண்முகத்தியர்முருகநின்னை
மயக்கியமுயக்கந்தன்னென்மலரணையமளிமீதே
அயர்த்தனையுறங்குவாயோவமர்பொருதலசிலையோ. (நக)

முக்கணன்முதலிரேழையுலகொருமூன்றிரேழும்
புக்கபோரெல்லாம்வென்றுநின்றவென்புதல்வன்போலாம்
மக்களிலொருவன்கொல்லமாள்பவன்வானமேரு
உக்கிடவணுவென்றோடியுதைத்ததுபோலுமம்மா. (நஉ)

பஞ்சரியுற்றதென்னவரக்கர்தம்பரைவையெல்லாம்
வெஞ்சினமனிசர்கொல்லவிளிந்ததேதமீண்டதில்லை
அஞ்சினனஞ்சினனிச்சீதையென்றமிழ்தாற்செய்த
நஞ்சுநுலிலங்கைவேந்தனுளையித்தகையனன்றே. (நக)

இராவணன் சீதையை வாளாலெறிய ஓதுதல்.

என்றழைத்திரங்கியேங்கவித்துபர்நமர்கட்கெல்லாம்
பொன்றழைத்தனையவல்குற்சீதையாற்புகுந்ததென்ன
வன்றழைக்கல்லினஞ்சின்வஞ்சகத்தாளவாளால்
கொன்றிழைத்திவெனன்னதேவாடுனரக்கர்கோமான். (நச)

இராவணனை மகோதரன் தடுத்தல்.

ஓடுகின்றானேநோக்கியுயர்பெரும்பழியினுச்சி
சூடுகின்றானென்றஞ்சிமகோதரன்றுணிந்தவஞ்சன்

மாடுசென்றடியின்வீழ்ந்துவணங்கிநின்புகழ்க்குமன்னு
கேடுவந்துதித்ததென்னுவினையனகிளத்தலுற்றான். (நஙு)

நீருளதனையுஞ்சூழ்ந்தநெருப்புளதனையுநீண்ட
பாருளதனையும்வானப்பரப்புளதனையுங்காலின்
பேருளதனையும்பேராப்பெரும்பழிபிடித்திபோலாம்
போருளதனையும்வென்றுபுகழுளதனையுமுள்ளாய். (நசு)

தெள்ளருங்காலகேயர்சிரத்தொடுந்திசைக்கையானை
வெள்ளியமருப்புச்சிந்தவீசியவிசயத்தொள்வாள்
வள்ளியமருங்குற்செவ்வாய்மாதர்மேல்வைத்தபோது
கொள்ளுமேயாவிதானேநாணத்தாற்குறைவதல்லால். (நஎ)

மங்கையர்குலத்துளாளைத்தவத்திணையுமுனிந்துவாளால்
சங்கையொன்றின்றிக்கொன்றான்குலத்துக்கேதக்காவென்று
கங்கையஞ்சென்னியானுங்கண்ணனுங்கமலத்தோனும்
செங்கையுங்கொட்டியுன்னைச்சிரிப்பராற்சிறியனென்னை. (நஅ)

நிலத்தியல்பன்றுவானினெறியன்றுநீதியன்று
தலத்தியல்பன்றுமேலோர்தருமமேலதுவுமன்று
புலத்தியன்மரபின்வந்துபுண்ணியமரபுபூண்டாய்
வலத்தியல்பன்றுமாயாப்பழிகொளமறுகுவாயோ. (நக)

இன்றுநீயிவனைவாளாலெறிந்துபோயிராமன்றன்னை
வென்றுமீண்டிலங்கைமூதூரெய்தினெவெதும்புவாயோ
பொன்றினள்சீதையென்றேபோவர்களவர்தாமல்லால்
வென்றிடமுடியாதென்னும்வீரமோவிளம்பவென்றான். (சூ0)

இந்திரசித்தினுடலினை எண்ணெணெய்த்தோணியி லிடுதல்.

என்னலுமெடுத்தகூர்வாளிருநிலத்திட்டுமீண்டு
மன்னவன்மைந்தன்றன்னைமாற்றலார்வலியாற்கொண்ட
சின்னமுமவர்கடங்கள்சிரமுங்கொண்டன்றிச்சேர்கென்
றுன்னருந்தயிலத்தோணிவளர்த்துமினென்னச்சொன்னான். (சுக)

அத்தொழிலவருஞ்செய்தாராயிடையனைத்துத்திக்கும்
பொத்தியவிருதர்தானைகொணரியபோயதூதர்
ஒத்தனராணுகிவந்துவணங்கினரிலங்கையுன்னார்
பத்தியினமைந்ததானைக்கிடமிலபணியிதென்றார். (சுஉ)

உஅ - வது, இராவணன்சோகப்படலம் - முற்றிற்று.

ஆஉ திருவிருத்தம்-ஙஉ0சு.

எம்பலுற்றெழுந்தமன்னனெவ்வுழியெய்திற்றென்றூன்
கூம்பலுற்றுயர்ந்தகையொருவழிகூறலாமோ
வாம்புனற்பரவையேழுமிறுதியின்வளர்ந்ததென்ன
தாம்பொடித்தெழுந்ததானைக்குலகிடந்தாணில்லென்றூர். (க)

மண்ணுறநடந்ததானைவளர்ந்தமாத்தூளிமண்ட
விண்ணுறநடக்கின்றூருமிதித்தனரேகமேன்மேல்
கண்ணுறவுருமைகாணுக்கற்பத்தின்முடிவிற்கார்போல்
எண்ணுறவரியசேனையெய்தியதிலங்கைநோக்கி. (உ)

* வாட்டனின்வயங்கமின்னுமழையதினிருளமாட்டா
வீட்டியமுரசினார்ப்பையிடிப்பொடுமுழக்கமாட்டா
மீட்டினியுவமையில்லவேலைமீச்சென்றவென்னின்
தீட்டியபடையுமாவும்யானையுந்தேருஞ்செல்லா. (ங)

உலகினுக்குலகுபோய்ப்போயொன்றிலென்றுதுங்கலுற்ற
தொலைவருந்தானைமேன்மேலெழுந்ததுதொடர்ந்துசுற்ற
நிலவினுக்கிறையுமீனுநீங்கினநிமிரின்றூன்
அலரியுமுந்துசெல்லுமாறுநீத்தஞ்சியப்பால். (ச)

மேற்படவிசும்பைமுட்டிமேருவின்விளங்கிவிண்ட
நாற்பெருவாயிலூடுமிலங்கையூர்நடக்குந்தானை
கார்க்கருங்கடலேமற்றூரிடைக்கிடைகாலன்றூனே
சேர்ப்பதுபோன்றதியாண்டுஞ்சுமைபொறுதுலகமென்ன. (ஞ)

நெருக்குடைவாயிலூடுபுகுமெனினெடிதுகாலம்
இருக்குமித்தன்மையென்னுமதிலினுக்கும்பரெய்தி
அரக்கனதிலங்கையுற்றவண்டங்களனைத்தினுள்ள
கருக்குலமேகமெல்லாமொருங்குடன்கலந்ததென்ன. (ட)

அதுபொழுதரக்கர்கோனுமணிகொள்கோபுரத்தினெய்திப்
பொதுவுறநோக்கலுற்றூனெருநெறிபோகப்போக
விதிமுறைகாண்பெனென்னும்வேட்கையான்வேலையழும்
கதுமெனவொருங்குநோக்கும்பதையிற்காதல்கொண்டான். (ஏ)

மாதிரமொன்றினின்றுமாறுதிசைமேன்மண்டி
ஓதநீர்செல்வதென்னதானையுய்ணர்வுகூட்டி

---

* வாட்டனின்வயங்கமின்னுமழை – வாளாயுதங்களேயொப்பவிளக்கமாவொளிரமின்னுமேகங்கள்.

வேதவேதாந்தங்கூறும்பொருளினைவிரிக்கின்றார்போல்
தூதுவரணிகடோறும்வரன்முறைகாட்டிச்சென்றார். (அ)

வேறு.

சாகத்தீவினிலுறைபவர்தானவர்சமைத்த
யாகத்திற்பிறந்தியைந்தவர்தேவரையெல்லாம்
மோகத்திற்படமுடித்தவர்மாயையின்முதல்வர்
மேகத்தைத்தொடுமெய்யினரிவரெனவிரித்தார். (கூ)

குசையின்றீவினிலுறைபவர்கூற்றுக்கும்விதிக்கும்
வசையும்வன்மையும்வளர்த்தவர்வானநாட்டுறைவார்
இசையுஞ்செல்வமுமிருக்கையுமிழந்தநிங்கிவரால்
விசையந்தேரெனநிற்பவரிவர்நெடுவிறலோய். (கo)

இலவத்தீவினிலுறைபவரிவர்கள்பண்டமையாப்
புலவர்க்கிந்திரன்பொன்னகரழிதரப்பொருதார்
நிலவைச்சஞ்சடைவைத்தவன்வரந்தாநிமிர்ந்தார்
உலவைக்காட்டுறுதீயெனவெகுளிபெற்றுடையார். (கக)

அன்றிற்றீவினிலுறைபவரிவர்பண்டையமரர்க்
கென்றைக்கும்மிருந்துறைவிடமென்றிடமேருக்
குன்றைக்கொண்டுபோய்க்குரைகடலிடவறக்குலைந்தோர்
சென்றித்தன்மையைத்தவிருமென்றிரந்திடத்தீர்ந்தோர். (கஉ)

பவளத்தீவினிலுறைபவர்வெள்ளிபண்பழிந்தோர்
குவளைக்கண்ணியங்கிராக்கதக்கன்னியைக்கூட
அவளிற்றேரூன்றினரையிருகோடியர்கொய்தின்
திவளப்பாற்கடல்வறள்படத்தேக்கினர்சிலநாள். (கங)

கந்தமாதனமென்பதிக்கருங்கடற்கப்பால்
மந்தமாருதமூர்வதோர்கிரியினில்வாழ்வோர்
அந்தகாலத்தவ்வாலகாலத்துடன்பிறந்தோர்
இந்தவாளெயிற்றரக்கரெண்ணிறந்தவரிறைவ. (கச)

மலையமென்பதுபொதியமாமலையதின்மறவோர்
நிலையமன்னதுசாகரத்தீவிடைநிற்கும்
குலையுமெவ்வுலகெனக்கொண்டுநான்முகன்கூறி
உலவிலோரிதிலுறையுமென்றிரந்திடவுறைந்தார். (கஙி)

மூக்கரக்கையர்மூவிலைவேலினர்மூசுண்டி
சக்கரத்தினர்சாபத்தரிந்திரன்றலைவர்
நக்கரக்கடலுலொருமூன்றுக்குநாதர்
புக்கரப்பெருந்தீவிடையுறைபவர்புகழோய். (கசு)

மறவினையப்பண்டதம்பெருந்தாய்சொலவவியால்
புறநிலைப்பெருஞ்சக்கரமால்வரைப்பொருப்பின்
விறல்கெடச்சிறையிட்டயனிரந்திடவிட்டோர்
இறலியப்பெருந்தீவிடையுறைபவரிவர்கள். (கஎ)

வேதாளக்கரத்திவர்பண்டுபுவியிடம்விரிவு
போதாதுந்தமக்கெழுவகையாய்நின்றபுவன
பாதாளத்துறைவீரெனநான்முகன்பணிப்ப
நாதாபுக்கிருந்துனக்கன்பிலைலிவணடந்தார். (கஅ)

நிருதிதன்குலப்புதல்வர்நின்குலத்துக்குநேரே
பருதிதேவர்களெனத்தக்கபண்பினர்பானக்
குருதிபெற்றிலரேற்கடலேழையுங்குடிப்பார்
இருணிறத்தவரொருத்தரேழ்மலையையுமெடுப்பார். (கக)

பாரணைத்தவெம்பன்றியையன்பிறற்பார்த்த
காரணத்தினரதியிற்பயந்தபைங்கழலோர்
பூரணத்தடந்திசைதொறுமிந்திரன்புலரா
வாரணத்தினநிறுத்தியேசூடினர்வாகை. (உ0)

மறக்கண்வெஞ்சினமலையெனவிந்நின்றவையவர்
இறக்கங்கீழிலாப்பாதலத்துறைகின்றவிகலோர்
அறக்கண்டுஞ்சிலரையிரம்பணந்தலையநந்தன்
உறக்கந்தீர்ந்தனரூறைகின்றதிவர்தொடர்ந்தொறுக்க. (உக)

காளியைப்பண்டுகண்ணுதல்காட்டியகாலை
மூளமுற்றியசினக்கடுந்தியிடைமுளைத்தோர்
கூளிகட்குநல்லுடன்பிறந்தார்பெருங்குழுவாய்
வாளிமைக்கவும்வாளெயிறிமைக்கவும்வருவார். (உஉ)

பாவந்தான்றியகாலமேதான்றியபழையோர்
தீவந்தான்றியமுழைத்துணையெனத்தறுகண்ணர்
கோவந்தான்றிடிற்ரூயையுமுயிருணுங்கொடியோர்
சாவந்தான்றிடவடதிசைமேல்வந்துசார்வார். (உங)

சீற்றமாகியவைம்முகனுலகெலாந்தீப்பான்
ஏற்றமாருதல்விழியிடைத்தோன்றினரிவரால்
கூற்றமாகியகொம்பினம்பாலுடைக்கொடுமை
ஊற்றமாகிப்பண்டுதித்தனரென்பவருவரால். (உச)

காலன்மார்புழைச்சிவன்கழல்படவன்றுகான்ற
வேலையேழன்னகுருதியிற்ரோன்றியவீரர்
சூலமேந்திமுன்னின்றவரிந்நின்றதாகையார்
ஆலகாலத்தினமிழ்தின்முன்பிறந்தபோலரக்கர். (உரு)

வடவைத்தீயினைவாசுகிகான்றமாகடுவை
இடவத்தீயிடையெழுந்தவரிவரினமழையைத்
தடவித்தீநிடிர்குஞ்சியரிவருவர்தனித்தேர்
கடவத்தீந்தவெம்புரத்திடைத்தேன்றியகழலோர். (உசு)

எனையரின்னவரென்பதோரளவிலரைய
நினையவுங்குறித்துரைக்கவுமரிதிவர்நினைந்த
வினையமும்பெருவரங்களுந்தவங்களும்விளம்பின்
அனையபேருகமாயிரத்தளவினுமடங்கா. (உஎ)

ஒருவரேசென்றவ்வுறுதிறற்குரங்கையுமுரவோர்
இருவரென்றவர்தம்மையுமொருகைகொண்டெடற்றி
வருவர்மாறினிப்பகர்வதென்வானவர்க்கரிய
திருவவென்றனர்தூதுவரிராவணன்செப்பும். (உ.அ)

இராவணன் தன் சேனையை ஆயிரவெள்ளமென்றூர்பித்த லெனல்.

எத்திறத்திதற்கெண்ணினத்தகைவகுத்தியன்ற
இத்திறத்தினையறைதிரென்றுரைசெயவவர்கள்
ஒத்தவெள்ளமோராயிரமுளதெனவுரைத்தார்
பித்தரிப்படைக்கெண்சிறிதென்றனர்பெயர்ந்தார். (உக)

இராவணன் சேனைபதிகளை அழைப்பித்தல்.

படைப்பெருங்குலத்தலைவரைக்கொணருதிரென்பால்
கிடைத்துநானவர்க்குற்றுளபொருளெலாங்கிளத்தி
அடைத்தநல்லுரைவிளம்பினளவளாயமைவுற்
றுடைத்தடூசனைவரன்முறையியற்றவென்றுரைத்தான். (ஙo)

இராவணன் கால்களில் சேனைபதிகள் விழுந்து வணங்குதல்.

தூதர்கூறிடத்திசைதொறுந்திசைதொறுந்தொடர்ந்த
ஓதவேலையிலையகரவரும்வந்துற்றூர்
போதுதூவினர்வணங்கினரிராவணன்பொலன்றூள்
மோதுமோலியின்மேவரோலிவானினமுட்ட. (ஙக)

இராவணன் சேனைபதிகளை சேமம் விசாரித்தல்.

அனையர்யாவருமருகுசென்றடிமுறைவணங்கி
வினையமேவினரினிதினங்கிருந்தசேனைவேலை
நினையுநல்வரவாகநும்வரவெனநிரம்பி
மனையுமக்களுமம்வலியரேயென்றனன்மறவோன். (ஙஉ)

சேனைபதிகள் பதிலுரைத்தல்.

பெரியதிண்புயனீயுளதவவரம்பெரிதால்
உரியவேண்டியபொருளெலாமுடிப்பதற்கொன்றே

இரியதேவரைக்கண்டனம்பகைபிறிதில்லை
அரியதென்னெமக்கென்றனரவன்கருத்தறிவார். (கூகூ)

இராவணன் நடந்தவைகளை யுரைத்தல்.

மாதராற்களுமைந்தருநின்மருங்கிருந்தார்
பேதுறுதவரில்லைநீவருந்தினைபெரிதும்
யாதுகாரணமருளெனவினையவரிசைத்தார்
சீதைகாதலிற்பிறந்துளபரிசெலாந்தெரித்தான். (கூச)

சேனைதிபதிகள்நகுதல்.

கும்பகன்னனெடிந்திரசித்தையுங்குலத்தின்
வெம்புவெஞ்சினத்தரக்கர்தங்குழுவையும்வென்றூர்
அம்பிறற்சிறுமனிசரோநன்றுநம்மாற்றல்
நம்பசினையும்வானரமேயெனநக்கார். (கூஞ)

உலகச்சேடன்றனுச்சிநின்றெடுக்கவன்றேரேழ்
மலையைவேரொடும்வாங்கவன்றங்கையால்வாங்கி
அலைகொள்வேலையைக்குடிக்கவன்றழைத்ததுமலரோ
டிலைகள்கோதுமக்குரங்கின்மேலவக்கொலெம்மை. (கூசு)

சேனைபதிகட்கு மாலியவான் இராமாதியர் திறமுரைத்தல்.

என்னக்கையெறிந்திடியுருமேறெனநக்க
மின்னும்வெள்ளெயிற்றரக்கரையங்கையால்விலக்கி
வன்னியென்பவன்புட்கரத்தீவுக்குமன்னன்
அன்னமானுடரார்வலியாவதென்றறைந்தான். (கூஎ)

மற்றவாசகங்கேட்டலுமாலியவான்வந்
துற்றதன்மையுமனிதரதூற்றமுமுடலும்
கொற்றவானரத்தலைவர்தந்தகைமையுங்கூறிக்
கிற்றுங்கேட்டிராலென்றவன்கிளத்துவான்கிளர்ந்தான். (கூஅ)

ஆழியன்னநீரறிதிரன்றேறகடலனைத்தும்
ஊழிக்காலெனக்கடப்பவன்வாலியென்போனை
எழுகுன்றமுமெடுக்குறுமிடுக்கனையிந்நாள்
பாழிமார்பகம்பிளந்துயிர்குடித்ததோர்பகழி. (கூக)

பரியதோளுடைவிராதன்மாரீசனும்பட்டார்
கரியமால்வரைகிகர்கரதூடணர்கதிர்வேற்
றிரிசிராவவர்திரைக்கடலனபெருஞ்சேனை
ஒருவிலாலொருநாழிகைப்பொழுதினிலுலந்தார். (கூ0)

இங்குவந்துநீர்விளையதென்னெறிதிரைப்பரவை
அங்குவெந்திலதோசிறிதறிந்ததுமிலிரோ

கங்கைசூடினன்கடுஞ்சிலையொடித்தவக்காலம்
உங்கள்வான்செவிபுகுந்திலதோமுழங்கோகாதை. (சக)

ஆயிரம்பெருவெள்ளமுண்டிலங்கையினளவில்
தீயின்வெய்யபோரரக்கர்தஞ்சேனையச்சேனை
போயதந்தகன்புரம்புகநிறைந்ததுபோலாம்
ஏயுமும்மைநூன்மார்பினெய்தவிலிரண்டால். (சஉ)

கொற்றவெஞ்சிலக்கும்பகன்னனுநுங்கள்கோமான்
பெற்றமக்களும்பிரகத்தன்முதலினர்பிறரும்
மற்றைவீரருமிந்திரசித்தொடுமடிந்தார்
இற்றைநாள்வரையானுமற்றிவனுமேயிருந்தேம். (சங)

மூலத்தானையென்றுண்டதுமும்மைநூறமைந்த
கூலச்சேனையிவ்வெள்ளமற்றதற்கின்றுகுறித்த
காலச்செய்கையானீர்வந்திராயினக்கழலோர்
சீலச்செய்கையுங்கவிப்பெருசேனையுந்தரிக்கின். (சச)

ஒருகுரங்குவந்திலங்கையையமலங்கெரியூட்டித்
திருகுவெஞ்சினத்தக்கனைநிலத்தொடுந்தேய்த்துப்
பொருதுதூதுரைத்தேதகியதரக்கியர்புலம்பக்
கருதுசேனையாங்கடலையுங்கடலையுங்கடந்து. (சஙி)

கண்டிலீர்கொலாங்கடலினைமலைகொண்டுகட்டி
மண்டுபோர்செயவானரியற்றியமார்க்கம்
உண்டுவெள்ளமோரெழுபதுமருந்தொருகொடியின்
கொண்டுவந்ததுமேருவிற்கப்புறங்குதித்து. (சஞ)

இதுவியற்கையோர்சீதையென்றிருந்தவத்தினையந்தாள்
பொதுவியற்கைதீர்கற்புடைப்பத்தினிபொருட்டால்
விதிவிளைத்தவாவில்லியர்வெல்கதீர்வெல்க
முதுமொழிப்பதஞ்சொல்லினெனென்றுரைமுடித்தான். (சட)

வன்னிமன்னனேநோக்கிநீயிவரெல்லாமடிய
என்னகாரணமிகல்செயாதிருந்தவதென்றிசைத்தான்
புன்மைநோக்கிலைஞணிறற்பொருந்திலனென்றான்
அன்னதேதலினியமையுமெங்கடனஃதென்றான். (சஅ)

மூதுணர்ந்தவிம்முதுமகன்கூறியமுயற்சி
சீதையென்பவடனைவிட்டம்மனிதரைத்திருத்தல்
ஆதியின்றலைசெயத்தக்கதினிச்செயலழிவால்
காதலிந்திரசித்தையாம்யாண்டினிக்காண்டும். (சகூ)

விட்டமாயினுமாதினைவெஞ்சமம்விரும்பிப்
பட்டவீரரைப்பெறுகிலம்பெறுவதுபழிப்பால்
முட்டிமற்றவர்குலத்தொடுமுடிக்குவதல்லால்
கட்டமத்தொழிற்செருத்தொழிலினிச்செயுங்கடமை. (நo)

என்றெழுந்தனனிராக்கதரிருத்திநீயாமே
சென்றுமற்றவர்சில்லுடற்குருதிநீர்தேக்கி
வென்றுமீளுதும்வெள்குதுமேன்மிடலில்லாப்
புன்றொழிற்குலமாதுமென்றுரைத்தனர்போனார். (நக)

உக-வது, படைக்காட்சிப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-நஉநிச.

நo-வது, மூலபலவதைப்படலம்.

இராவணன் மூலபலத்தை இராமாதியர்மீதேவுதல்.

வானரப்பெருஞ்சேனையையாளெருவழிசென்
றூனறக்குறைத்துயிருண்பனீயிர்போயொருங்கே
ஆனமற்றவரிருவரைக்கோறிரென்றமைந்தான்
தானவப்பெருங்கிரிகளாவாள்கொண்டுதடிந்தான். (க)

எனவுரைத்தலுமெழுந்துதம்மூர்திமேலறிக்
கனைகடற்பெருஞ்சேனையைக்கலந்ததுகாணூ
வினையமற்றிலைமூலமாத்தானையைவிரவேவா
டினையமுற்செலவேவுகென்றிராவணனிசைத்தான். (உ)

எவியப்பெருந்தானையத்தானும்விட்டெழுந்தான்
தேவர்மெய்ப்புகழ்தேய்த்தவன்சில்லியந்தேர்மேல்
காவன்மூவகையுலகமுமுனிவருங்கலங்கப்
பூவைவண்ணத்தன்சேனைமேலொருபுறம்போனான். (ங)

மூலபலத்தன்மை.

எழுகசேனையென்றியானைமேலணிமூரசெற்றி
வழுவில்வள்ளுவர்துறைதொறும்விளித்தலும்வல்லைக்
குழுவியீண்டியதென்பராற்குவலயமுழுதும்
தழுவிவிண்ணையுந்திசையையுந்தடவுமாத்தானை. (ச)

அடங்கும்வேலைகளண்டத்தினகத்தகன்மலையும்
அடங்குமன்னுயிரனைத்துமவ்வரைப்பிடையவைபோல்
அடங்குமேமற்றப்பெரும்படையிரும்படையாக்கை
அடங்குமாயவன்குறளுருத்தன்மையினவரால். (நி)

அறத்தைத்தின்றருங்கருணையைப்பருகிவேறமைந்த
மறத்தைப்பூண்டுவெம்பாவத்தைமணம்புணர்மனைளர்
நிறத்துக்காரன்னநெஞ்சினர்நெருப்புக்குநெருப்பாப்
புறத்துப்பொங்கியபங்கியர்காலனும்புகழ்வார். (சு)

நீண்டதோள்களால்வேலையைப்புறஞ்சலநீக்கி
வேண்டுமீரெடுமகரங்கள்வாயிட்டுவிழுங்கித்
தூண்டுவாளுருமேற்றினைச்செவிதாறுந்தூக்கி
மூண்டவான்மழையுரித்துடுத்துலாவருமூர்க்கர். (எ)

மால்வரைக்குலம்பரலெனமழைக்குலஞ்சிலம்பக்
கால்வரைக்குலஞ்சிலம்புகொண்டசைத்தபைங்கழலார்
மேல்வரைப்படர்கலுழன்வன்காற்றெனும்விசையோர்
நால்வரைக்கொணர்ந்துடன்பிணித்தாலன்னநடையார். (அ)

உண்ணுந்தன்மையினாண்முறைதப்பினவ்வுடனே
பண்ணினின்றமால்யானையைவாயிடும்பசியார்
தண்ணினீர்முறைதப்பிடிற்றடக்கையாற்றடவி
விண்ணின்மேகத்தைவாரிவாய்ப்பிழிந்திடும்விடாயார். (கூ)

உறைந்தமந்தரமுதலியகிரிகளையுருவ
வெறிந்துவேனிலகாண்பவரிந்துவால்யாக்கை
சொறிந்துதீர்வுறுதினவினர்மலகளச்சுற்றி
அறைந்துகற்றமாத்தண்டினராசனியிரைப்பார். (கo)

சூலம்வாங்கிடிற்சுடர்மழுவெறிந்திடிற்சுடர்வாள்
கோலவெஞ்சிலைபிடித்தலிற்கொற்றவேல்கொள்ளின்
சாலவன்றண்டுதரித்திடிற்சக்கரந்தாங்கின்
காலன்மால்சிவன்சுமரனென்றிவரையுங்கடப்பார். (கக)

ஒருவரேவல்லரோருலகத்தினெவ்வல
இருவர்வேண்டுவரேழுலகத்தையுமிறுக்கத்
திரிவரேலுடறிரிதருநெடுநிலஞ்செவ்வே
வருவரேலுடன்கடல்கலந்தெதாடர்ந்துபின்வருமால். (கஉ)

மேகமெத்தனையத்தனைமால்கரிவிரிந்த
நாகமெத்தனையத்தனைதேர்நனிநாளாப்

போகமுற்றினவெத்தனையத்தனைபுரவி
ஆகமேலனவெத்தனையத்தனையனிகம். (கஉ)

இன்னதன்மையயானேதரிவுளியென்றிவற்றின்
பன்னுபல்லணமருமமற்றுறுப்பொடுபலவும்
பொன்னுநன்னெனமணியுங்கொண்டல்லதுபுனைந்த
சின்னமுள்ளனவில்லனமெய்ம்மூற்றுந்தெரிந்தால். (கக)

இப்பெரும்படையெழுந்திரைத்தேதகமேலெழுந்த
துப்புதிர்ந்தனதூளியின்படலமீத்தூர்ப்பத்
தப்பில்கார்நிறந்தவிர்ந்ததுகரிமதந்தழுவ
உப்புநீங்கியதேதங்குநீர்வீங்கலையுவரி. (கஙி)

மலையும்வேலையுமற்றுளபொருள்களும்வாழ்ஞர்
நிலையுமப்புறத்துலகங்கள்யாவையுநிரம்ப
உலவுறுவகையுண்டுபண்டுமிழ்ந்தபேரொருமைத்
தலைவன்வாயொத்ததிலங்கையின்வாயில்கடருவ. (கசு)

கடம்பொருமதக்களிறுதேர்பரிமிடைகடல்கள்
படம்பொருமையினனந்தலையனந்தனும்பதைத்தான்
விடம்பொருதிரியமரர்போற்குரக்கினமிதிக்கும்
இடம்பொருமையினிரிந்துபோய்வடதிசையிறுத்த. (கஎ)

ஆழிமால்வரைவேலிசுற்றிடைவகுத்தமைத்த
எழுவேலையுமிடுவலையரக்கரேயினமா
வாழிகாலனும்விதியும்வெவ்வினையுமேமமள்ளர்
தாழமாமதிலிலங்கைமால்வேட்டமேற்றொடர்ந்தான். (கஅ)

ஆர்த்தவோசையோவலங்குதேராழியினதிர்ப்போ
கார்த்திண்மால்கரிமுழக்கமோவாசியின்கலிப்போ
போர்த்தபல்லியத்தாவமோவெருக்கிணற்புழுங்கி
வேர்த்தவண்டத்தைவெடித்திடப்பொடித்ததுமென்மேல். (கஙி)

வழங்குபல்படைமீனதுமதகரிமகரம்
முழங்குகின்றதுமுரிதிரைப்பரியதுமுரசம்
தழங்குபேரொலிகளிப்புறுத்தறுகண்மாநிருதப்
புழுங்குவெஞ்சினச்சுறவதுநிறைபடைப்புணரி. (உ0)

தசும்பிற்பொங்கியதிரள்புயத்தரக்கர்தந்தானை
பசும்பொற்றிண்டலமிதித்தலிற்கரிபடுமதத்தின்
அசும்பிற்சேறுபட்டளறுபட்டமிழுமாலடங்க
விசும்பிற்சேறலிற்கிடந்ததவ்விலங்கன்மேலிலங்கை. (உக)

படியைப்பார்த்தனர்பரவையைப்பார்த்தனர்படர்வான்
முடியைப்பார்த்தனர்பார்த்தனர்நெடுந்திசைமுழுதும்
விடியப்பார்ப்பதோர்வெள்ளிடைகண்டிலர்மிடைந்த
கொடியைப்பார்த்தனர்வேர்த்தனர்வானவர்குலந்தார். (உஉ)

உலகினுமலாவுருவெலாமிராக்கதவுருவா
அலகில்பல்படைபிடித்தமர்க்கெழுந்தவோவன்றேறல்
விலகினீர்த்திரைவேலையோரேழும்போய்விதியால்
புலகள்வல்லுருப்பொடித்தனவோவென்றுபுகன்றார். (உங)

தேவர் சிவனை அசுரசேனையின் வரலாறு விளைவுதல்.

நடுங்கிநஞ்சைடைகண்டனைவானவர்நம்ப
ஒடுங்கியாங்கரந்துறைவிடமறிகிலமுயிரைப்
பிடுங்கியுண்குவர்யாரிவர்பெருமைபண்டறிவார்
முடிந்ததிதம்வலியென்றவரோடுவான்முயன்றார். (உச)

ஒருவரைக்கொல்லவாயிரமிராமர்வந்தொருங்கே
இருபதிற்றிரண்டாண்டுநின்றமர்செய்தாலென்னும்
நிருதரைக்கொல்வதிடம்பெற்றாரிடையினின்றன்றே
பொருவதிப்படைகண்டுதன்னுயிர்பொறுத்தன்றே. (உந)

சிவன் தேவர்க்கு இம்மூலபலத்தை இராமன் கொல்வானெனல்.

என்றிறைஞ்சலுமிருண்மிடற்றிறைவனுமினிநீர்
ஒன்றுமஞ்சலீர்வஞ்சனையரக்கரையொருங்கே
கொன்றுநீக்குமக்கொற்றவனிக்குலமெல்லாம்
பொன்றுவிப்பதோர்விதிதந்ததாமெனப்புகன்றான். (உசு)

வானரங்கள் அஞ்சியோடுதல்.

புற்றினின்றுவல்லரவினம்புறப்படப்பொருமி
இற்றதிதம்வலியெனவிரைந்திரிதருமெலிபோல்
மற்றவானரப்பெருங்கடல்பயங்கொண்டுமறுகிக்
கொற்றவீரரைப்பார்த்திலதிரிந்ததுகுலவால். (உஎ)

அணையின்மேற்சென்றசிலசிலவாழியைநீந்தப்
புணைகடேடினசிலசிலநீந்தினபோன
துணைகளோடும்புக்கழுந்தினசிலசிலதான்றுப்
பணைகளேறினமலைமுழைபுக்கனபலவால். (உஅ)

அடைத்தபோரணையளித்ததுநமக்குயிரழிவான்
உடைத்துப்போதுமாலவர்தொடராமலென்றுரைத்த
புடைத்துச்செல்குவர்விசும்பினுமென்றனபோதான்
படைத்ததிக்கெலாம்பாய்ந்தனரென்றனபயத்தால். (உக)

அரியின்வேந்தனுமநுமனுமங்கதனவனும்
பிரியகிற்றிலரிறைவனைநின்றனர்பின்ரூர்
இரியலுற்றனர்மற்றையோர்யாவருமெறிநீர்
விரியும்வேலையைக்கடந்தனர்நோக்கினன்வீரன். (கூ0)

விபீடணன் மூலபலத்தின் வரலாறு கூறுதல்.

இக்கொடும்படையெங்குளதியம்புதியென்ரூன்
மெய்க்கடந்திறல்வீடணன்விளம்புவான்வீர
திக்கனைத்திலுமேழுமாத்திவிலுந்தியோர்
புக்கழைத்திடப்புகுந்துளதிராக்கதப்புணரி. (கூக)
எழெனப்படுங்கீழுளதலத்தினின்றேறி
ஊழிமுற்றியகடலெனப்புகுந்ததுமுளதால்
வாழிமற்றிவண்மூலமாத்தானைமுன்வருவ
ஆழிவேறினியப்புறத்தில்லவாளரக்கர். (கூஉ)
ஈண்டிவ்வண்டத்துளிராக்கதரெனும்பெயரெல்லாம்
மூண்டுவந்ததுதீவினைமுன்னின்றுமூடுக
மாண்டுவீழுமின்றென்கின்றதென்மதிவலியூழ்
தூண்டுகின்றதென்றடிமலர்தொழுதவன்சொன்னன். (கூங)

வானரசேனையை அழைத்துவர விராமன் கட்டளையிடுதல்.

கேட்டவண்ணலுமுறுவலுஞ்சிற்றமுங்கிளரக்
காட்டுகின்றனன்காணுதியொருகணத்தென்னை
ஓட்டின்மேற்கொண்டதானையைப்பயந்துடைத்துரவோய்
மீட்டிகொல்லெனவங்கதனேழினன்விரைந்தான். (கூச)

வானரசேனைபதிகள் திரும்பிவருதல்.

சென்றுதானையையுற்றனன்சிறிதிறைகெடுவீர்
நின்றுகேட்டபினீங்குமினெனச்சொல்லிநேர்வான்
ஒன்றுங்கேட்கிலமென்றனர்குரக்கினமுரையால்
வென்றிவெந்திறற்படைப்பெருந்தலைவர்கண்மீண்டார். (கூஞ)

சேனைதிபர் ஓடிய காரணமுரைத்தல்.

மீண்டுவேலையின்வடகரையாண்டொருவெற்பின்
ஈண்டினர்களையென்குறித்திரிவுற்றதென்றூன்
ஆண்டநாயககண்டிலமேலுநீயவரை
மாண்டுசெய்வதெனன்றுரைகூறினர்மறுப்பார். (கூசு)

ஒருவனிந்திரசித்தெனவுள்ளவனுளநாள்
செருவினுற்றவைகொற்றவமறத்தியோதெரியின்
பொருவின்மற்றவரிற்றிலர்யாரொடும்பொருவார்
இருவர்விற்பிடித்தியாவரைத்தடுத்துநின்றெய்வார். (கூஎ)

புரங்கடந்தவப்புனிதனேமுதலியபுலவோர்
வரங்கடந்துலகளிப்பவர்யாவருமாட்டார்
கரந்தடங்கினரினிமற்றவ்வரக்கரைக்கடப்பார்
சூரங்குகொண்டுவந்தமர்செயுமாலுடர்கொல்லாம். (கூஅ)

ஊழியாயிரகோடிநின்றுருத்திரனேதும்
ஆழியானுமற்றயனுடுபுரந்தரனவனும்
சூழுமோடினொருவரைக்கொன்றுதந்தோளால்
வீழுமாசெய்யவல்லரேல்வென்றியினன்றே. (கூக)

என்னப்பாமற்றிவ்வெழுபதுவெள்ளமுமொருவன்
தின்னப்போதுமோதவரின்வலியமோசிறியேம்
முன்னிப்பாரெலாம்படைத்தவனுளெலாமுறைநின்
றுன்னிப்பார்த்துநின்றுறையிடக்குறையுமிவ்யூகம். (கூ0)

நாயகன்றலபத்துளகையுநாலைந்தென்
றேயுமுள்ளதியொருவன்மற்றவன்வந்திங்குற்றூர்
ஆயிரந்தலையதற்கிரட்டிக்கையரையா
பாயும்வேலயிற்கூலத்துமணலினும்பலரால். (கூக)

கும்பகன்னனென்றுளன்மற்றிங்கொருவன்கைக்கொண்ட
அம்புதாங்கவுமிடக்கிலனவன்செய்ததறிதி
உம்பரன்றியேயுணர்வுடையார்பிறருளரோ
நம்பிநீயுமுன்றனிமையையறிந்திலநடந்தாய். (கூஉ)

அணுமணற்றலுமாசனதாற்றலுமிருவர்
தணுவிறற்றலுந்தம்முயிர்தாங்கவுஞ்சாலா
கனியுங்காய்களுமுணவுளமுழுயுளகரக்க
மனிசராளினென்னிராக்கதராளினென்வையம். (கூங)

தாமுளாரன்றேறுகழினத்திருவொடுந்தரிப்பார்
யாமுளேமெனினெங்கிளையுள்ளதம்பெருமை
போமினீரென்றுவிடைதரத்தக்கனபுரம்போய்ச்
சாமினீரென்றறருமமன்றென்றனர்தளர்ந்தார். (கூச)

வேறு.

அங்கதன் சாம்பனுக்குச் சமாதானமுரைத்தல்.

சாம்பனேவதனநோக்கிவாலிசேயறிவுசான்றோய்
பாம்பணையமலன்மற்றிவ்விராமனென்றெமக்குப்பண்டே
ஏம்பல்வந்துற்றகாலத்தியம்பினையல்லையோநீ
ஆம்பலம்பகைஞன்றன்றேடையிந்திரமைமந்தானன்றோய். (கூஙு)

தேற்றுவாய்தெரிந்தசொல்லாற்றெருட்டுவாய்தளிவிலோரை
ஆற்றுவாயல்லநீயுமஞ்சினைபோலுமாவி
போற்றுவாயென்றபோதுபுகழொன்றும்புலமையென்றும்
கூற்றின்வாயுற்றுல்வீரங்குறைவதேயிறைமைகொண்டார். (சசு)

அஞ்சிறைம்பழியும்பூண்டாமம்புவியாண்டுமாவி
துஞ்சுமாறன்றிவாழுவெவாண்ணுமோநாண்மேற்சூன்றின்
நஞ்சினையிட்டாலன்னவமிழ்திண்டேறநம்மையம்மா
தஞ்சமென்றுணர்ந்தவீர்தனிமையிற்சாதனன்றே. (சஎ)

தானவரோடுமேற்றைறச்சக்கரத்தலவரோடும்
வானவர்கடையமாட்டாமறிகடல்கடைந்தவாலி
ஆனவனம்பொன்சூலையயர்ந்தமையயர்த்ததென்னீ
மீனலர்வேலபட்டதுணர்ந்திலபோலுமேலாய். (சஅ)

எத்தனையரக்கரேனுந்தருமமாண்டில்லையன்றே
அத்தனையறத்தைவெல்லும்பாவமென்றறிந்ததுண்டோ
பித்தரைப்போலநீயுமிவரொடும்பெயர்ந்ததன்மை
ஒத்திலதென்னச்சொன்னனவனிவையுரைப்பானனான். (சகூ)

சாம்பன்பதிலுரைத்தல்.

நாணத்தாற்சிறிதுபோழ்துநல்கினனிருந்துபின்னும்
தூணெத்தவிரடோள்வீரதேன்றியவரக்கர்வீரம்
காணத்தானிற்கத்தானக்கறைமிடற்றவற்குமாமே
கோணற்பூவுண்ணுவாழ்க்கைக்குரங்கின்மேற்குற்றமுண்டோ. (ருo)

தேவருமவுணர்தாமுஞ்செருப்பண்டுசெய்தகாலை
ஏவரேயென்னற்காணப்பட்டிலரிருக்கையான்ற
மூவகையுலகினுள்ளாரிவர்துணையாற்றன்மூற்றும்
பாவகருளரேகூற்றுமிவருடன்பகைக்கவற்றே. (ருக)

மாலியைக்கண்டேன்பண்டைமாலியவானைக்கண்டேன்
காலநேமியையுங்கண்டேனிரணியன்றனையுங்கண்டேன்
ஆலமாவிடமுங்கண்டேன்மதுவினையநுசேறு
வேலையைக்கலக்கக்கண்டேனுவர்க்குளமிடக்குமுண்டோ. (ருஉ)

வலியிதன்மேலெபெற்றவரத்தினர்மாயம்வல்லர்
ஒலிகடன்மணலின்மிக்ககணக்கினரூள்ளநோக்கின்
கலியினுங்கொடியர்கற்றபடைக்கலக்கரத்தரென்றூல்
மெலிகுவதன்றியுண்டோவிண்ணுறவெருவல்கண்டால். (ருங)

ஆகினுமையவுண்டாலார்க்கேனுமமரினஞ்சிச்
சாகினும்பெயர்ந்ததன்மைபழிதருகாகிற்றள்ளும்

எகுதுமீளவின்னுமியம்புவதுளதாலெய்தி
மேகமேயனையான்கண்முனெங்ஙனம்விழித்துநிற்றும். (நச)

அங்கதன் சமாதானங் கூறுதல்.

என்றெடுத்தெண்கின்றனைக்கிறையவணியம்பலோடும்
வன்றிறற்குலிசமோச்சிவரைசிறகரிந்துவெள்ளிக்
குன்றிடைநீலக்கொண்மூவமர்ந்தெனமதத்தின்குன்றம்
நின்றவனருளுணர்ந்தன்மகனிவைநிகழ்த்தலுற்றான். (நந)

எடுத்தலுஞ்சாய்த்தருளுமெதிர்த்தலுமெதிர்ந்தோர்தம்மைப்
படுத்தலும்வீரவாழ்க்கைபற்றினர்க்குற்றமேனள்
அடுத்தமேதயஃதுநிற்பவன்றியுமொன்றுகூறக்
கடுத்ததுகேட்டிலர்நீருங்கருத்துளீர்கருதிநோக்கின். (நசு)

ஒன்றுநீயஞ்சலையயாமெலாமொருங்குசென்று
நின்றுமொன்றியற்றலாற்றுநேமியான்றனைநேர்ந்து
கொன்றுபோர்கடக்குமாயிற்கொள்ளுதும்வென்றியன்றேறல்
பொன்றுதுமவனேடென்றான்போதலோபுகழன்றென்றான். (நஎ)

இராம னிலக்குமணற் குரைத்தல்.

ஈண்டியதானைநீங்கநிற்பதென்யாமேசென்று
பூண்டவெம்பழியிதேடுமம்போந்தநாம்போவதென்னை
மீண்டனர்தலவரெல்லாமங்கதனேடும்வீரன்
மூண்டவெம்படையைநோக்கித்தம்பிக்குமொழிவதானான். (நஅ)

அத்தகீயுணர்தியன்றேறயரக்கர்தானவுணரேதான்
எத்தனையுளரென்றாலும்யான்சிலையெடுத்தபோது
தொத்துறுகனலின்வீழ்ந்தபஞ்சனத்தொலையுந்தன்மை
ஒத்தனோரிடையூறுண்டென்றுணர்விடையுரைப்பதன்றால். (நகூ)

இலக்குமணனை நீ வானரசேனையைக்காத்து நிற்றியென
விராமன் கூறுதல்.

காக்குநரின்மைகண்டகலக்கத்தாற்கவியின்சேனை
போக்கறப்போகித்தத்தமுறைவிடம்புகுந்ததுண்டேல்
தாக்கியபடையைமுற்றுந்தலைதுமிப்பளவுந்தாங்கி
நீக்குதிநிருதராங்குநெருக்குவார்நெருக்காவண்ணம். (கூ0)

இப்புறத்தினையசேனையெவியாண்டிருந்ததீயான்
அப்புறத்தமைந்தசூழ்ச்சியறிந்தவனயலேவந்தால்
தப்புறக்கொன்றுநீக்குமவனையார்தடுக்கத்தக்கார்
வெப்புறுகின்றதுள்ளம்வீரநீயலதுவில்லோர். (கூக)

மாருதியோடுநீயும்வானரக்கோனும்வல்லே
பேருதிர்சேனைகாக்கவென்னுடைத்தனிமைபேணிச்
சோருதிரென்னின்வெம்போர்தோற்றுநாமென்னச்சொன்னான்
வீரன்மற்றிதனைக்கேட்டவிளையவன்விளம்பலுற்றான். (சுஉ)

இலக்குமணனைவ்வாறே செய்துமெனல்.

அன்னதகருமமையவன்றியுமனைவேகின்றால்
என்னுனக்குதவிசெய்வதிதுபடையென்றபோது
சென்னியிற்சுமந்தகையர்தேவரேபோலயாமும்
பொன்னுடைவரிவிலாற்றல்புறனின்றுகாண்டுமென்றான். (சுஙூ)

அனுமன்றன்தோள்மீதேற இராமனை வேண்டுதல்.

என்றவனைகலுற்றகாலையினநுமனெந்தாய்
புன்றொழிற்குரங்கெனதென்றோளின்மேலேறிப்புக்கால்
நன்றெனக்கருதாதின்றேறனல்லதுநாயினேனுன்
பின்றனிநிற்றுமாயினடிமையிற்பிழைப்பிலென்றான். (சுசு)

நீ இலக்குமணற்குத் துணையாதியெனவனுமனுக் கிராமனுரைத்தல்.

அய்யனிற்கியலாதுண்டேயிராவணனையலைவந்துற்
றெய்யும்விற்கரத்துவீரனிலக்குவன்றன்றேடற்றால்
மொய்யமர்க்களத்தினுன்னைத்துணைபெறுதாழியின்மூன்பு
செய்யுமாவெற்றியுண்டோசேனையுஞ்சிதையுமன்றே. (சுஙி)

வரைக்கொண்டமைந்தகுஞ்சியிந்திரசித்தென்பான்றன்
போரைக்கொண்டிருந்துமேலுளியாயவன்றன்னைப்போக்கின்
ஆரைக்கொண்டுன்னுலன்றேறவென்றதங்கவனையின்னும்
வீரர்க்கும்வீரனின்னைப்பிரிகிலன்வெல்லுமென்பேன். (சுசூ)

சேனையைக்காத்தென்பின்னைதிருநகர்தீர்ந்துபோந்த
* யானையைக்காத்துமற்றை † யிறைவனைக்காத்தெண்டூர்ந்த
வானையித்தலத்திலுமெமறையொடும்வளர்த்தியென்றான்
ஏனைமற்றுரைக்கிலாதானிளவல்பினெழுந்துசென்றான். (சுஎ)

விபீடணனையும் இலக்குமணற்குத் துணைபோகச் செய்தல்.

வீடணநீயுமற் ‡ றுன்றம்பியோடேகிவெம்மை
கூடினர்செய்யுமாயந்தெரிந்தனகுறிக்கொண்டேகி
நீடுறுதாளைதன்னைத்தாங்கினைநில்லாயென்னின்
கேடிலைதாகுமென்றானவனதுகேட்பதானான். (சுஅ)

---

* யானையை – இலக்குமணனை.
† இறைவன் – சுக்கிரீவன்.
‡ உன்றம்பியென்றது – இலக்குமணனை.

சூரியன்சேயுஞ்செல்வன்சொற்றதேதையெண்ணுஞ்சொல்லன்
ஆரியன்பின்புபோனவனைவருமதுவேகல்ல
காரியமென்னக்கொண்டார்கடற்படைகாத்துநின்றூர்
வீரியன்பின்னர்செய்தசெயலெலாம்விரிக்கலுற்றும். (சுக)

இராமனது போர்க்கோலம்.

வில்லினைத்தொழுதுவாங்கியேற்றிலுன்மெய்ந்நாண்மேருக்
கல்லெனச்சிறந்ததேதலுங்கருணையங்கடலேயன்ன
எல்லொளிமார்பிற்றீராக்கவசமிட்டிழையாவேதச்
* சொல்லெனத்துளையவாளித்தூணியும்புறத்துத்தூக்கி. (எ0)

மூலபலம் பொருதல்.

யோசனைநூற்றின்வட்டமிடைவிடாதுறைந்தசேனைத்
தூசிவந்தண்ணறன்னைப்போக்கறவளைந்துசுற்றி
வீசினபடையுமம்புமிடைதலின்விண்ணேர்யாக்கை
கூசினபொடியாலெங்குங்குமிழ்ந்தனவியோமகூடம். (எக)

இராமனைத் தேவர்பரவுதல்.

கண்ணனேயெளியேயமிட்டகவசமேகடலேயன்ன
வண்ணனேயறத்தின்வாழ்வேமறையவர்வலியேயமாரு
தொண்ணுமேநீயலாதேதாரொருவர்க்கிப்படைமேலுன்ற
எண்ணமேமுடித்தியென்னுவேத்திரிமையோரெல்லாம். (எங)

இராமனே வெல்வானெகவென முனிவர் ஆசிகூறுதல்.

முனிவரேமுதல்வராயவறத்துறைமுற்றினோர்கள்
தனிமையுமரக்கர்தானைப்பெருமையுந்தரிக்கலாதார்
பனிவருகண்ணர்விம்மிப்பதைக்கின்றநெஞ்சர்பாவத்
தனைவருந்தோற்கவண்ணல்வெல்கவென்றுசிசொன்னர். (எஉ)

வேறு.

தேவராதியரும் இராமனைவாழ்த்துதல்.

மற்றும்வேறறத்துணின்றவானநாடனைத்துளோர்
கொற்றவில்லிவெல்கவஞ்சமாயர்வீகருவலயத்
துற்றதீமைதீர்கவின்றுடன்றுகூறிநிர்நிலம்
துற்றவெம்படைக்கைநீசரின்னவின்னசொல்லினர். (எச)

அசுரர் இராமனைக்கண்டு பலவாறுகூறுதல்.

இரிந்தசேனைசிந்தியாருமின்றியேயுநின்றுநம்
விரிந்தசேனைகண்டியாதுமஞ்சலின்றிவெஞ்சரம்
தொரிந்துசேவகன்றிறம்பலின்றியெய்துசெய்கையான்
புரிந்ததன்மைவென்றிமேலுநன்றுபாவிபொய்க்குமோ. (எடி)

---

* சொல்லெனத்தொலைவிலாததூணியும் என்றும்பாடம்.

புரங்களெய்ததுங்கவற்குமுண்டுதேர்பொருந்திஞர்
பரந்ததேவர்மாயனம்மைவேரறுத்தபண்டைநாள்
விரைந்துபுள்ளின்மீதுவிண்ணுளோர்களோடுமேவினன்
கரந்திலன்றனித்தொருத்தனேரும்வந்துகாவினன். (எசு)

தேருமாவும்யானையோடெம்சீயம்யாளியாதியா
மேருமாலுமெய்யநின்றவேலையேழின்மேலவா
வாரும்வாருமென்றழைக்குமாலுடற்கிம்மண்ணிடைப்
பேருமாறுநம்மூழைப்பிழைக்குமாறுமெங்ஙனே. (எஎ)

இராமனது வின்னுமிணைசுத்திறம்.

என்றுசென்றடர்த்திரைத்தொர்சீயவேறடர்ந்ததைக்
குன்றுசூழ்வனந்தபோற்றொடர்ந்தசேனகூடலும்
நன்றிதென்றுநூலமேமுழுநாகமேழுமாலுதன்
வென்றிவில்லேவுதநாதனெணிறந்தவேலவாய். (அ0)

கதம்புலர்ந்தசிந்தைவந்தகாவல்யானைமாலொடு
மதம்புலர்ந்தநின்றவீர்வாய்புலர்ந்தமாவெலாம்
பதம்புலர்ந்தவேகமாகவாளரக்கர்பண்புசால்
விதம்புலர்ந்ததென்னின்வென்றவென்றிசொல்லவேண்டுமோ. (எகூ)

வெறிந்திரிந்துவாசியோடுசீயமாவுமீளியும்
செறிந்தமைந்தமுந்துசில்லிபுல்லுமாழிகூடுதேர்
மூறிந்தெழுந்தமுற்கையானவீசுமூசுபாகரைப்
பிறிந்திரிந்துசிந்தவந்தொராகுலம்பிறந்ததால். (அ0)

இராமன் மூலபலத்தினைப் பொருதழித்தல்.

இந்நிமித்தமிப்படைக்கிடந்துடித்ததித்தமேதார்
துந்நிமித்தமென்றுகொண்டுவானுளோர்களுள்ளினர்
அந்நிமித்தமுற்றபோதரக்கர்கண்ணரங்கமேல்
மின்னிமிர்த்ததன்னவாளிவேதநாதன்வீசினன். (அக)

யாளிமேலுமாளின்மேலுமானைமேலுமாடன்மா
மீளிமேலும்வீரர்மேலும்வீரர்தேரின்மேலும்வெவ்
வாளிமேலும்வில்லின்மேலுமண்ணின்மேல்வளர்ந்தமாத்
தூளிமேலுமேறவேறவீரன்வாளிதூவினன். (அஉ)

மலைவிழுந்தவாவிழுந்தமானயானைமள்ளர்செந்
தலைவிழுந்தவாவிழுந்ததாயவாசிதாளிறும்
சிலைவிழுந்தவாவிழுந்ததிண்படாகைதிங்களின்
கலைவிழுந்தவாவிழுந்தவெள்ளையிற்றகாடலாம். (அங)

வாடைநாலுபாலும்வீசமாகமேகமாலைவெங்
கோடைமாரிபோலவாளிகூடவோடையாணையும்
ஆடன்மாவும்வீரர்தேருமாளுமாள்வதாயவால்
பாடுபேருமாறுகண்டுகண்செல்பண்புமில்லையால். (அக)

விழித்தகண்கள்கைகள்விற்கள்வேல்கள்வாள்கள்விண்ணினுள்
தெழித்தவாய்கள்செல்லலுற்றதாள்களோடாள்கள்செல்லினைப்
பழித்தவாளிசிந்தினின்றுபட்டதன்றிவிட்டகோல்
கழித்தவாயுதங்களொன்றுசெய்ததில்லைகண்டதே. (அங)

தொடுத்தவாளியோடுவிற்றுணிந்துவீழுமுன்றுணிந்
தெடுத்தவாள்களோடுதோள்களிற்றுவீழுமற்றுடன்
கடுத்ததாள்கள்கண்டமாகுமெங்ஙனேகலந்துநேர்
தடுத்தவீரர்தாமுமொன்றுசெய்யுமாசலத்திலால். (அசு)

சுரந்துணிந்தகண்சிதைந்தபல்லணங்குலந்தபே
ருரந்துணிந்தவீழ்வதன்றியாவியோடவொண்ணுமே
சரந்துணிந்தவொன்றைறநூறுசென்றுசென்றுதள்ளலால்
வரந்துணிந்தவீரர்போரின்முந்தவுந்துவாசியே. (அஎ)

ஊரவுன்னின்முன்புபட்டுயர்ந்தவெம்பிணங்களால்
போரவொல்வதன்றுபோரினுயிரம்பெருஞ்சரம்
தூரவொன்றுநூறுகூறுபட்டுகுந்துயக்கலால்
தேர்களென்றுவந்தபாவியென்னசெய்கைசெய்யுமே. (அஅ)

எட்டுவன்றிசைக்கணின்றயாவும்வல்லயாவரும்
கிட்டினுய்ந்துபோகிலார்களென்னநின்றகேள்வியால்
மூட்டும்வெங்கண்மானயானையம்புராயமுன்னமே
பட்டுவந்தபோல்விழுந்ததென்னதன்மைபண்ணுமே. (அக)

வாவிகொண்டபுண்டரீகமன்னகண்ணவாளியான்
றேவினுண்டைநூறுகோடிகொல்லுமென்னவெண்ணுவான்
பூவினண்டர்கோனுமெண்மையங்குமன்னபோரின்வந்
தாவிகொண்டகாலனுக்கடுப்புமன்னதாகுமே. (கo)

கொடிக்குலங்கடேரின்மேலயானமேலகோடைநாள்
இடிக்குலங்கள்வீழுவெந்தகாடுபோலெரிந்தவால்
முடிக்குலங்கள்கோடிகோடிசிந்தவேகமுற்றுரு
வடிக்குலங்கள்வாளியோடவாயினூடுதீயிலால். (கக)

அற்றவேலும்வாளுமாகியாயுதங்கண்மீதெழுந்
தற்றவேகமுந்தவோடியோதவேலையூதிறத்

யானைக், கோடுழுத நெடுந்தழும்பின் குவைதழுவியெழுமேகக் குழுவின் கோலைவைக், காடுழுத கொழும்பிறையிற் கறைகழன்று கிடந்தனபோற் கிடக்கக்கண்டான். (உ1நி)

வேறு.

இராமன் முறுவலித்துரைத்தல்.

தளிரியல்பொருட்டின்வந்தசீற்றமுந்தருக்கிலேனென்றன்
கிளரியலுருவிலேதுங்குழிப்புறக்கிளர்ந்துதோன்றும்
வளரியல்வடிவிற்செம்மைத்தன்மையுமருவநின்ற
முளரியங்கண்ணன்மூரன்முறுவலன்மொழிவதானான். (உ0சு)

வென்றியாலுலகமூன்றுமெய்ம்மையான்மேவினலும்
பொன்றியார்கின்றதோஎப்பொதுவறநோக்கும்பொற்பும்
குன்றியாசுற்றதன்தோறயிவனெதிர்குறித்தபோரில்
பின்றியான்முதுகிற்பட்டபிழம்புளதழும்பினம்மா. (உ0எ)

கார்த்தவீரியனென்பானுற்கட்டுண்டானென்னக்கற்கும்
வார்த்தையுண்டதனைக்கேட்டுநாணுறுமனத்தினேற்குப்
போர்த்தலைப்பிறகிட்டேற்றபுண்ணுடைத்தழும்புபோலாம்
கோர்த்ததுங்காணலுற்றவீசனிருக்கைகிற்க. (உ0அ)

மாண்டொழிந்துலகினிற்கும்வயங்கிசைமுயங்கமாட்டா
தூண்டொழிலுகந்துதெவ்வர்முறுவலென்புகைழயுண்ணை
பூண்டொழிலுடையமார்பாபோர்புறங்கொடுத்தோர்போன்ற
ஆண்டொழிலோரிற்பெற்றவெற்றியுமவத்தமென்றான். (உ0க)

இராமற்கு விபீடணன் சமாதானமுரைத்தல்.

அவ்வுரைக்கிறுதிநோக்கிவீடணனருவிக்கண்ணன்
வெவ்வுயிர்ப்போடுநீண்டவிம்மலன்வெதும்புநெஞ்சன்
செவ்வியிற்றொடர்ந்தவல்லசெப்பலுசெல்வவென்ன
எவ்வுயிர்ப்பொறையுநல்கியிரங்கிநின்றினையசொன்னான். (உ0ஆ)

ஆயிரந்தோளினானும்வாலியுமரிதினைய
மேயினவென்றிவிண்ணோர்சாபத்தின்வினைந்தமெய்ம்மை
தாயினுந்தொழத்தக்காண்மேற்றங்கியகாதற்றன்மை
நோயுநின்முனிவுமல்லால்வெல்வதோருவலற்பாலார். (உ0உ)

நாளைதினையுமோடிநண்ணலார்காணகிலாமல்
பீளைகுன்றம்போலும்பெருந்திசையெல்லையானைக்
கோளைதனையும்புக்குக்கொடும்புறத்தழுந்துபுண்ணின்
பாளைதன்றித்தெவ்வர்படைக்கலம்பட்டென்செய்யும். (உ0ஊ)

அப்பனையனைத்துமார்புக்கணியெனக்கிடந்தவீரக்
கைப்பனைமுழங்கமேனைளமரிடைக்கிடைத்தகாலன்

துப்பணை வயிரவாளிவிசையினுங்காலின்மேன்றல்
வெப்பணை குத்திலுலும்வெரிநிடைட்போயவன்மே ற. (உகஉ)

அவ்வடுவன்றியிந்தவண்டத்தும்புறத்துமான்ற
தெவ்வடுபடைகளஞ்சாதிவன்வயிற்செல்லிற்மேறவ
வெவ்விடமீசன்றன்னேவிழுங்கினும்பறவைவேந்தை
அவ்விடநாகமெல்லாமணுகினுமணுகலாற்ரு. (உகச)

வென்றியாய்பிறிதுமுண்டேவேலசூழ்ஞாலமாண்டோர்
பன்றியாயெயிற்றுக்கொண்டபராபரன்முதலபல்லோர்
என்றியாமிடுக்கண்டீர்வதென்கின்ரூரிவனினுன்ரல்
பொன்றியானென்றபோதும்புலப்படார்பொய்கொலென்பார். (உகஞ)

அன்னதாவென்ரவீசனேயமுநாணுநீங்கித்
தன்னதாளிணையைநோக்கிவீடணைதக்கதன்ரல்
என்னதாவிறந்துளார்மேல்வயிர்த்தனீயிவனுக்கீண்டு
சொன்னதார்வி தியிருலேகடன்செயத்துணி தியென்ரூன். (உகக)

அவ்வகையருளிவள்ளலினைத்துலகங்களோடும்
எவ்வகையுள்ளதேவர்யாவருமிரைத்துப்பொங்கிக்
கவ்வையிற்றீர்ந்தார்வந்துவீழ்கின்ரூர்தம்மைக்காணச்
செவ்வையினவர்முன்சென்ரூன்வீடணனிதினைச்செய்தான். (உகள)

இராமன் கட்டளையால் விபீடணன் இராவணன் மெய்யில்
விழுந்து புலம்பல்.

போழ்ந்தெழுவரக்கன்செய்தபுன்ரொழில்பொறையிற்ரூமால்
வாழ்ந்தநீயிவனுக்கேற்றவரன்முறைவகுத்தியென்னத்
தாழ்ந்ததோதார்கருணைதன்ரற்றலுமகனருளத்தள்ளி
வீழ்ந்தனனவன்மேல்வீழ்ந்தமலையின்மேன்மலைவீழ்ந்தென்ன. (உகஅ)

ஓவருமுலகத்தெல்லாவுயிர்களுமொரியினஞ்சின்
தேவருமுனிவர்தாமுஞ்சிந்தையினிரக்கஞ்சேரத்
தாவரும்பொறையினென்றனறிவினுற்றகைக்கநின்ற
யாவருந்துயரந்தீரவரற்றினண்பகுவாயார. (உகக)

வேறு.

உண்ணுதேதயுயிருண்ணுதாருநஞ்சுசனகியெனும்பெருநஞ்சுன்னைக்
கண்ணுலேநோக்கவேபோக்கியதேதயுயிர்நீயுங்களப்பட்டாயே [லாற்றல்
எண்ணுதே னெண்ணியசொ வின்றினித்தா னெண்ணுதியோவெண்ணி
அண்ணுவோவண்ணுவோவசுரர்கடம்பிரளயமேயமரர்கூற்ரே. (உஉ0)

ஓராசையொருவன்மலுயிராசைக்குலமகண்மலுடையகாதல்
தீராசைபழியென்ரேறனைனமுனிந்தமுனிவாறித்தேறினையோ

போராசைப்பட்டெழுந்தகுலமூற்றும்பொன்றவுந்தான்பொங்கினின்ற
பேராசைபேர்ந்தபேதாபேர்ந்தாசைக்கரியினியப்புருவம்பேர்ந்தேதாய் ()
அன்றெறியின்விழுவேதவதியிவள்காணுலகுக்கோரான்னெயென்று
குன்றனையவெருந்தேளாய்கூறினனதுமனத்துட்கொள்ளாதேயே
உன்றனதுகுலமடங்கவுருத்தமரிற்படக்கண்டுமுறவாகாதே
பொன்றினையேயிராகவன்றன்புயவலியின்றறிந்துதான்போகின்றுயே.()

மன்றன்மாமலராணும்வடிமழுவாட்படையாணும்வரங்களீந்த
ஒன்றலாதனவுடையமுடியோடும்பொடியாகியுதிர்ந்துபோன
அன்றுதாணுணர்ந்திலையாலுமவனுட்டையணுகின்ற
இன்றுதான்றெரிந்தேதையிராமனர்யாவருக்குமிறைவராதல். (உஉந)

வீரநாடற்றுயோவிரிஞ்சனும்யாவருக்குமேலாமுன்பன்
பேரநாடற்றுயோபிறைசூடிருஞகன்றன்புரம்பெற்றுயோ
ஆரணவுன்னுயிரையஞ்சாதேகொண்டகன்றுரதலாநிற்க
மாரனர்வலியாட்டந்தவிர்ந்தாரேகுளிர்ந்தானேமதியமென்பான்.(உஉச)

கொல்லாதமைத்துனனைக் கொன்றுயென்றதுகுறித்துக்கொடுமைசூழ்ந்
பல்லாலேயிதழதுக்குங்கொடும்பாவிநெடும்பாரப்பழிதீர்ந்தாளே [து
நல்லாருந்தியாருநரகத்தார்துறக்கத்தார்நம்பிநம்மோ
டெல்லாரும்பகைகூரேயார்முகத்தேதவிழிக்கின்றுயெளியையாணை. ()

போர்மகளைக்கலமகளைப்புகழ்மகளைத்தழுவியகைபொறுமைகூரச்
சீர்மகளைத்திருமகளைத்தேதவர்க்குந் * தெரிவரியதெய்வக்கற்பின்
பேர்மகளைத்தழுவுவாணுயிர்கொடுத்துப்பழிகொண்டபித்தாபின்னைப்
பார்மகளைத்தழுவினையேதிசையானைப்பணையிறுத்தபணைத்தமார்பால்.()

என்றேறங்கியரற்றுவான்றனையெடுத்துச்சாம்பவனுமெண்கின்வேந்தன்
குன்றேறுங்குருநெடுந்தேளாய்விதிநிலையைமதியாதகொள்கைத்தாகிச்
சென்றேறுங்குழுணர்வினையோதேறுதேயழுந்துதியோவென்னத்தேறி
நின்றுனைப்புறத்தரக்கனிலங்கேட்டாண்மையன்பயந்தநெடுங்கட்பாவை. ()

வேறு.

இராவணன்மனைவியான மண்டோதரியும் பிறமாதரும் புலம்புதல்.

அனந்தநூறுயிரமரக்கர்மங்கைமார்
புனைந்தபூங்குழல்விரித்தாற்றும்பூசலார்
இனந்தொடர்ந்துடன்வரவெய்திணவென்ப
நினைந்ததுமறந்ததுமிலாதநெஞ்சினுள். (உஉஅ)

இரக்கமுந்தருமமுந்துணைக்கொண்டின்னுயிர்
புரக்குநன்குலத்துவந்தொருவன்பூண்டதேர்

---

* தம்மோயைத்தெய்வக்கற்பின் எனவும்பாடம்.

பரக்கழியாமெனப்பரந்துநீண்டதால்
அரக்கியர்வாய்திறந்தரற்றுமோதையே. (உ.உக)

நூபுரம்புலம்பிடச்சிலம்புநொந்தழக்
கோபுரந்தொறும்புறங்குறுகிஞர்சிலர்
ஆபுரந்தரன்பகையற்றதாமெனு
மாபுரந்தவிரவின்வழிச்சென்ருர்சிலர். (உகூ0)

அழைப்பொலிமுழக்கெனவலங்கமின்னிடை
குழைப்பொலிநல்லணிக்குலங்கள்வில்லிட
உழைப்பொலியுண்கணீர்த்தாரைமீதுக
மழைப்பெருங்குலமெனவீழ்ந்துமாழ்கினர். (உகக)

தலைமிசைத்தாங்கியகரத்தர்தாரைநீர்
மூலைமிசைத்தூங்கியமுகத்தர்மொய்த்துவந்
தலைமிசைக்கடலின்வீழன்னம்போலவன்
மலைமிசைத்தேர்கண்மேல்வீழ்ந்துமாழ்கினர். (உகஉ)

தழுவினர்தழுவினர்தலையுந்தாள்களும்
எழுவியபுயங்களுமார்புமெங்கணும்
குழுவினர்முறைமுறைக்கூறுகூறுகொண்
டழுதனரயர்த்தனராக்கிமார்களே. (உகங)

வருத்தமேதனினதுபுலவிவைவலும்
பொருத்தமேவாழ்வெனப்பொழுதுபோக்குவார்
ஒருத்தர்மேலொருத்தர்வீழ்ந்துயிரிற்புல்லினர்
திருத்தமேயெனவவன்சிகரத்தேர்கண்மேல். (உகச)

இயக்கியராக்கியருரகரேழையர்
மயக்கலில்சித்தியர்விஞ்சைமங்கையர்
முயக்கினர்முறைகெடமுயங்கினர்கடந்
துயக்கிலாவன்புழுண்டெவருஞ்சோரவே. (உகஞ)

அறந்தொலவுறமனத்தடைத்தசீதையை
மறந்திலையோவினுமெமக்குன்வாய்மலர்
திறந்திலவிழித்திலையருளுஞ்செய்கிலை
இறந்தனையோவெனவிரங்கியேங்கினர். (உகசு)

தரங்கநீர்வேலையிற்றடித்துவீழ்ந்தென
உரங்கிளர்மதுகையானுருவினுற்றனள்
மரங்களுமலைகளுமுருகவாய்திறந்
திரங்கினண்மயன்மகளினையபன்னினாள். (உகஎ)

வேறு.

அன்னேயோவன்னேயோவாகொடியேற்கடுத்தநாளரக்கர்வேந்தன்
பின்னேயோவிறப்பதுமுன்பிடித்திருந்தகருத்தத்துவும்பிடித்திலேனே
முன்னேயோவிழுந்ததுவுமுடித்தலேயோபடித்தலையமுகங்காட்டாயோ
என்னேயோவென்னேயோவிராவணஞர்முடிந்தபரிசிதுவோபாவம். ()

வெள்ளெருக்கஞ்சடைமுடியான்வெற்பெடுத்ததிருமேனிமேலுங்கீழும்
எள்ளிருக்குமிடனின்றியுயிரிருக்குமிடமுடியினழுத்தவாறே
கள்ளிருக்குமலர்க்கூந்தற்சானகியைமனச்சிறையிற்கரந்தகாதல்
உள்ளிருக்குமெனக்கருதியுடல்புகுந்ததடவியதோவொருவன்வாளி. ()

ஆரம்போர்திருமார்பையகன்முழைகளெனத்திறந்திவ்வுலகுக்கப்பால்
தூரம்போயினவொருவன்சிலதுரந்தசரங்களேபோற்றோற்றும்
வீரம்போயுரங்குறைந்துவரங்குறைந்துவீழ்ந்தானேவேறெகட்டேன்
ஓரம்போவுயிர்பருகிற்றிராவணனேமாலுடலுரூற்றமீதோ. (உசo)

காந்தையருக்கணியனையசானகியார்பேரழகுமவர்தங்கற்பும்
ஏந்துபுயத்திராவணஞர்காதலுமச்சூர்ப்பநகையிழந்தழுக்கும்
வேந்தர்பிரான்றயரதஞர்பணியிலல்வெங்கானில்விரதம்பூண்டு
போந்ததுவுங்கடைமுறையேபுரந்தரஞர்பெருந்தவமாய்ப்போயிற்றம்மா

தேவர்க்குந்திசைக்கரிக்குஞ்சிவஞர்க்குமயஞர்க்குஞ்செங்கண்மாற்கும்
ஏவர்க்கும்வலியானுக்கென்றுண்டாமிறுதியெனவேமாப்புற்றேறன்
ஆவற்கணீயுழன்றவருந்தவத்தின்பெருங்கடற்கும்வரமென்றூன்ற
காவற்கும்வலியாரேர்மாலுடலருளவென்னைக்கருதினேனே. (உசஉ)

அரைகடையிட்டமைவுற்றமுக்கோடியாயுவுமுன்னறிஞர்க்கேயும்
உரைகடையிட்டளப்பரியபோராற்றற்றேளாற்றற்குலப்போவில்லைத்
திரைகடையிட்டளப்பரியவரமென்னும்பாற்கடலுச்சீதையென்னும்[ன்.
பிரைகடையிட்டழிப்பதனையறிந்தேனேதவப்பயனின்பெருமைபார்ப்பே

ஆரஞருலகியற்கையறிதற்காரணவையேழுமேழுமஞ்சும்
வீரஞருடறுறந்துவிண்புக்கார்கண்புக்கவேழவில்லால்
நாரநாண்மலர்க்கணையாஞளெல்லாந்தோளெல்லாநையவெய்யும்
நாரஞர்தனியிலக்கைமனித்தஞராழித்தனரேவரத்தினாலே. (உசக)

வேறு.

ஆராவமுதாயவுலகடலிற்கண்வளருமம்
நாராயணனென்றிருப்பேனிராமனைநான்
ஓராதேதகொண்டகன்றாயுத்தமனர்தேவிதனைப்
பாராயோநின்னுடையமார்பகலம்பட்டவெலாம். (உசஞ)

வேறு.

மண்டோதரிஇராவணனைத்தழுவியுயிர்விடுதல்.

வன்றழைத்தனளேங்கியெழுந்தவன்
பொன்றழைத்தபொருவருமார்பினைத்
தன்றழைக்கைகளாற்றழுவித்தனி
னின்றழைத்துயிர்த்தாளுயிர்நீங்கினள். (உசகூ)

மண்டோதரியை அனைவரும் புகழ்தல்.

வானமங்கையரும்மற்றுமற்றுமெத்
தானமங்கையருந்தவப்பாலவர்
ஆனமங்கையரும்மருங்கற்புடை
மானமங்கையர்தாமும்வழுத்தினர். (உசஎ)

இராவணனுக்கு விபீடணன் ஈமக்கடன்முடித்தல்.

பின்னவீடணன்பெரெழிற்றம்முனை
வன்னிகூவிவரன்முறையான்மறை
சொன்னவீமம்வித்திமுறையாற்றொகுத்
தின்னனெஞ்சிலெடுஞ்சலித்தேற்றினன். (உசஅ)

இந்தனத்தகில்சந்தனமிட்டுமேல்
அந்தமானத்தழகுறத்தானமைத்
தெந்தவோசையுங்கீழுறவார்த்திடை
முந்துசங்கொலியெங்குமுழங்குற. (உசக)

கொற்றவெண்குடையோடுகொடிமிடைந்
துற்றவீமவிதியினுடம்படீஇச்
சுற்றுமாதர்தொடர்ந்துடன்சூழ்வர
மற்றவீரன்விதியின்வழங்கினன். (உசo)

கடன்கள்செய்துமுடித்துக்கணவனே
டிடைந்துபோனமயன்மகளோடுடன்
அடங்கவெங்கனலுக்கவியாக்கினன்
குடங்கொணீரினுங்கண்சோர்குமிழியான். (உசஉ)

விபீடணனிறந்த வசுராவனவர்க்கும் பிதிர்க்கடனியற்றல்.

மற்றையோர்க்கும்வரன்முறையால்வகுத்
துற்றதீக்கொடுத்துண்குறுநீருகுத்
தெற்றையோர்க்குமிவனலதில்லெனை
வெற்றிவீரன்குரைகழன்மேவினன். (உருஉ)

விபீடணனுக் கிராமமறுதல் கூறுதல்.

வந்துதாழ்ந்தசுணவனைவள்ளலும்
சிந்தைவெந்துயர்தீருதிதெள்ளியோய்
மூந்தையெய்துமுறைமையிதாமெனை
அந்தமில்லிடர்ப்பாசமகற்றினன். (உநிக)

நகி-வது, இராவணன்வதைப்படலம் – முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-நகஙன.

நசு-வது, மீட்சிப்படலம்.

வருந்தனீதிமனுநெறியாவையும்
பொருந்துகேள்விப்புலமையினேனெனை
அருந்தவப்பயனலடைந்தாற்கறைந்
திருந்தவத்திளையோற்கிதியம்பினன். (க)

இராமனிலக்குமணனை நீ விபீடணற்கு முடிசூட்டி வருதியெனல்.

சோதியான்மகன்வாயுவின்றோன்றன்மற்
றேதில்வானரவீரரொடேகிநீ
ஆதிநாயகனைக்கியநான்முறை
நீதியானெடுமுடிசூட்டுவாய். (உ)

என்றுகூறியிளவலொடாரையும்
வென்றிவீரன்விடையருள்வேலையின்
நின்றதேவர்நெடுந்திசையோரொடும்
சென்றுதத்தமசெய்கைபுரிந்தனர். (ங)

விபீடணற்கு மகுடாபிஷேகம் புரிதல்.

சூழ்கடற்புனலும்பலதீயமும்
நீழ்முடித்தொகையும்பிறகீர்மையும்
பாழிதற்றரிபற்றியபீடமும்
தாழ்வில்கொற்றத்தமரர்கடந்தனர். (சு)

வாசநாண்மலரோன்சொலமான்முகன்
காசுமாநிதியுங்கொடுகங்கைசூ
டீசனேமுதலோர்வியந்தேத்திடத்
தேசுலாமணிமண்டபஞ்செய்தனன். (ஙு)

விபீடணற் கிலக்குமணன் முடிதரித்தல்.

மெய்கொள்வே தவிதிமுறைவிண் ணுளோர்
தெய்வநீள்புனலாடநிருத்திட
அய்யனுணையிலுலிளங்கோளரி
கய்யினன்மகுடங்கவித்தானரோ. (சு)

விபீடணன் சிங்காதனத்துப் பொலிதல்.

கரியகுன்றுகதிரினைச்சூடியோ
ரொளிமணித்தவிசிற்பொலிந்தென்னவே
விரியும்வெற்றியிலங்கையர்வேந்தனீ
டரியணைப்பொலிந்தான்றமரார்த்தெழ. (எ)

திருமூர்த்தியாதியர் விபீடணனை வாழ்த்துதல்.

தேவர்பூமழைசித்தர்முதலினோர்
மேவுகாதல்விரைமலர்வேறிலர்
மூவரோடுமுனிவர்மற்றியாவரும்
நாவிலாசிறைமலர்தூவினர். (அ)

மூடிபுனைந்தநிருதர்முதலவன்
அடிவணங்கியிளவலையாண்டையந்
நெடியகாதலினேற்குயார்நீர்மைசெய்
திடிகொள்சொல்லனவற்கிதியம்பினன். (கூ)

விலங்கணைபிடைதருதோளினுய்
இலங்கைமாநகர்யான்வருமெல்லைநீ
கலங்கலாநெடுங்காவலியற்றென
அலங்கல்வீரனடியினையெய்தினன். (கo)

சுரக்குவீரனரசிளங்கோளரி
அரக்கர்கோமகனேடிதாழ்தலும்
பொருக்கெனப்புகல்புக்கவற்புல்லியத்
திருக்கொண்மார்பனினையனசெப்பினன். (கக)

இராமன் விபீடணற்குரைத்தல்.

உருமைமூவுலகுந்தொழும்பர்தம்
பெருமைநீதியறன்வழிபோற்கிலா
திருமையேயரசாளுதியீதிலாத்
தருமசீலவென்றுன்மறைதந்துளான். (கஉ)

பன்னுநீதிகள்பற்பலகூறிமற்
றுன்னுடைத்தவரோடுயர்கீர்த்தியோய்

மன்னிவாழ்கென்றுரைத்தடன்மாருதி
தன்னைநோக்கினன்ரூயர்சொலேகுக்கிலன். (கஉ)

இராமனுமனைச் சீதைபாலனுப்புதல்.

இப்புறத்தினவெய்துறுகாலையில்
அப்புறத்தையுன்னியநுமனைத்
துப்புறச்செய்யவாய்மணித்தோகைபால்
செப்புறிப்படிபோயெனச்செப்பினன். (கக)

அனுமன்சீதைபாலெய்திச் சோபனமுரைத்தல்.

வணங்கியந்தமின்மாருதிவாரணம்
அணங்குதன்கடிகாவுசென்றண்மினன்
உணங்குகொம்புக்குயிர்வருநீரெனச்
சுணங்குதோய்முலையாட்கிவைசொல்லினன். (கங)

பாடினன்றிருநாமங்கள்பன்முறை
கூடுசாரியிற்குப்புற்றுக்கூத்துநின்
ரூடியங்கையிரண்டுமலங்குறச்
சூடினின்றனன்குன்றன்னதோளினன். (ககூ)

ஏழைசோபனமேந்திழைசோபனம்
வாழிசோபனமங்கலசோபனம்
ஆழியானவரக்கனையாரியச்
சூழியானைதுகைத்ததுசோபனம். (கஎ)

தலைகிடந்தனதாரணிதாங்கிய
மலைகிடந்தனபோன்மணித்தோளெனும்
அலைகிடந்தனவாழிகிடந்தன
நிலைகிடந்தவுடனிலத்தேதையென்றான். (கஅ)

அண்ணலாணையின்வீடணனுமறக்
கண்ணிலாதவன்காதலிரூடர்தலால்
பெண்ணிலாதுபிழைத்துளதாகுமென்
றெண்ணிலாவவிதார்பேரிலதாலென்றான். (கஙூ)

ஒருகலத்தனிவெண்மதிநாளொடும்
வருகலக்குவருமறுமானுறப்
பொருகலக்குலம்பூத்தனபோன்றன
பருகலுற்றவழுதுபயந்தநாள். (உ0)

இராவணனிறந்தானெனக்கேட்ட சனகிமகிழ்ச்சியுறல்.

ஆம்பல்வாயுமுகமுமலர்ந்திடத்
தேம்புநுண்ணிடைநோவத்திரண்முலை

ஏம்பலாசைக்கிரட்டிவந்தெய்திஞள்
பாம்புகானற்பனிமதிப்பான்மையாள். (உக)

புந்தியோபேருவகைப்பொருமலோ
உந்தியோங்குமொளிவஞத்தோள்களோ
சிந்தியோடுகலையுடைத்தேர்கொலோ
மூந்தியோங்கினயாவைமுலைகொலோ. (உஉ)

குனித்தகோலப்புருவங்கள்சொம்மைவேர்
பனித்தகொங்கைமழலைப்பனிமொழி
நுனிப்பதென்றுநுவல்வதென்ருயிஞள்
கனித்தவின்களிகள்ளினிற்காட்டுமோ. (உங)

சனகி சந்தோடமிகுதியா லொன்றுந்தான்ருதிருத்தல்.

அனையளாகியநுமனோக்கிஞள்
இனையதின்னதியம்புவதென்பதோர்
நினைவிலாதுநெடிதிருந்தாணைமே
மனையின்மாசுதுடைத்தமனத்திஞள். (உச)

அனுமன் சனகியை மௌனத்தின் காரணம்வினுதல்.

யாதிதற்கொன்றியம்புவலென்பது
மீதுயர்ந்தவுவகையின்விம்மலோ
தாதுபொய்க்குமென்ருவெனச்சொல்லினன்
நீதிவித்தகனங்கைநிகழ்த்திஞள். (உரு)

சனகி பதில் கூறுதல்.

மேக்குநீங்கியவெள்ளவுவகையால்
எக்கமுற்ரென்றியம்புவதியாதென
நோக்கிநோக்கியரிதெனநொந்துளன்
பாக்கியம்பெரும்பித்தும்பயக்குமோ. (உசு)

சனகி அனுமனைப்புகழ்தல்.

முன்னைநீக்குவென்மொய்சிறையென்றநீ
பின்னைநீக்கியுவகையும்பேசினை
என்னபேற்றினையீகுவதென்பதை
உன்னிநோக்கியுரைமறந்தேவினேன். (உஎ)

உலகமூன்றுமுதவற்கொருதனி
வீலயிலாமையுமுன்னினென்மேலனை
நிலையிலாமைநினைந்தனைனின்னையென்
தலையிறற்ரெழுவுந்தகுந்தன்மையோய். (உஅ)

இனிச்செய்வதியாதெனச் சனகி அனுமனை வினுதல்.

ஆதலாலெனன்றுதவுதலாற்றலேன்
யாதுசெய்வதென்றெண்ணியிருந்தனென்
வேதநன்மணிவேகடஞ்செய்தன்ன
தூதவென்னினிச்செய்திறஞ்சொல்லென்றூள். (உக)

எனக்களிக்கும்வரமெம்பிராட்டினின்
மனக்களிக்குமற்றுன்னேயம்மானவன்
றனக்களிக்கும்பணியினுந்தக்கதா
புனக்களிக்குலமாமயில்போன்றுளாய். (ஊ0)

அனுமன் திரிசடையல்லாவரக்கியரைச்சுட விரும்புகிறெனனல்.

எனவுரைத்துத்திரிசடையாளெம்மோய்
மனையினிற்சுடர்மாமுகமாட்சியா
டனையொழித்திவ்வரக்கியர்தங்களை
வினையினிற்சுடவேண்டுவென்யானென்றூன். (ஊக)

உரையிலாவுரையுன்னையுரைத்துராய்
விரையவேவாடிவிழுங்குவமென்றுளார்
வரைசெய்மேனியையவள்ளுகிராற்பிளந்
திரைசெய்வேன்மறலிக்கினியென்னுமால். (ஊஉ)

அரக்கியர் சனகியைச்சரணடைதல்.

குடல்குறைத்துக்குருதிகுடித்தவர்
உடன்முருக்கியிட்டுண்குவெனென்றலும்
அடலரக்கியரன்னைநின்பாதமே
விடலமெய்ச்சரணென்றுவிளம்பலும். (ஊஊ)

சனகி அரக்கியர்பொருட்டுச் சமாதான முரைத்தல்.

அன்னையஞ்சன்மினஞ்சன்மினீரெனு
மன்னனுமாருதிமாமுகநோக்கியே
றென்னதீமையிவரிழைத்தாரவன்
சொன்னசொல்லினதல்லதுதூய்மையோய். (ஊசு)

யானிழைத்தவினையினினிவ்விடர்
தானடித்ததுதாயினுமன்பிலை
கூனியிற்கொடியாரலரேயிவர்
போனவப்பொருள்போற்றலைபுந்தியோய் (ஊஎ)

எனக்குநீயருளிவ்வரந்தீவினை
தனக்குவாழ்விடமாயசழக்கியர்

மனக்குநோய்செயலென்றனண்மாமதி
தனக்குமாமறுத்தந்தமுகத்திருள். (நுசு)

இராமன் விபீடணனைச் சீதையை அழைத்துவாவெனல்.

என்றபோதினிறைஞ்சினனெம்பிரான்
றன்றுணைப்பெருந்தேவிதயாவென
நின்றகாலநெடியவன்வீடண
சென்றுதாநமதேவியைச்சீரொடும். (நுஎ)

என்னுங்காலயிருளும்வெயிலுங்கார்
மின்னுங்காலயியற்கையவீடணன்
உன்னுங்காலக்கொணர்தியன்றேறுதவப்
பொன்னின்காற்றளிர்சூடினன்போந்துளான். (நுஅ)

வேறு.

கோலங்கொண்டு வருதியென விபீடணன் சீதைக்குரைத்தல்.

வேண்டிற்றுமுடிந்ததன்றேறவேதியர்வேதனின்னைக்
காண்டற்குவிரும்புகின்றனும்பருங்காணவந்தார்
பூண்டகக்கோலம்வல்லபுனைந்தனவருத்தம்போக்கி
ஈண்டுக்கொண்டணைதியென்றனெழுந்தருளிறைவியென்றான். (நுகூ)

சீதை கோலங்கோடல் தகுதியன்றென மறுத்தல்.

யானிவணிருந்ததன்மையிமையவர்குழுவுமெங்கள்
கோனுமம்முனிவர்தங்கள்கூட்டமுங்குலத்துக்கேற்ற
வானுயர்கற்பின்மாதரீட்டமுங்காண்டன்மாட்சி
மேனினைகோலங்கோடல்விழுமியதன்றுவீர. (நுo)

விபீடணன் கோலங்கொள்ள விராமன் கட்டளையிட்டானெனலும்
சனகி உடன்படலும்.

என்றனளிறைவிகேட்டவிராக்கதர்க்கிறைவனீலக்
குன்றனதோளிலுன்றன்பணியினிற்குறிப்பிதென்றான்
நன்றெனநங்கைகோர்ந்தாயகக்கோலங்கொள்ளச்
சென்றனர்வானநாட்டுத்திலோத்தமைமுதலோர்சேர. (நுக)

மேனகையாம்பைமற்றையுருப்பசிவேறுமுள்ள
வானகநாட்டுமாதர்யாருமஞ்சனத்துக்கேற்ற
நானெநெய்யூட்டப்பட்டநவையிலகலவைதாங்கிப்
போனகந்துறந்ததையன்மருங்குறநெருங்கிப்புக்கார். (நுஉ)

காணியைப்பெண்மைக்கெல்லாங்கற்பினுக்கணியைப்பொற்பின்
ஆணியையமிழ்தின்வந்தவமிழ்தினையறத்தின்றுணையைச்

சேணுயர்மறையெலாமுறைசெய்தசெல்வனென்ன
வேணியையரம்பைமெல்ல * வரன்முறைசுருக்கவிட்டாள். (சங)

பாகடர்ந்தமுதுபில்கும்பவளவாய்த்தாளப்பத்தி
சேகறவிளக்கிநானந்தீட்டிமண்சேர்ந்தகாசை
வேகடஞ்செய்யுமாபோன்மஞ்சனவிதியின் † வேதத்
தோகைமங்கலங்கள்பாடவாட்டினரும்பர்மாதர். (சச)

உருவிளபவளவல்லிபாலுரையுண்டதென்ன
மருவிளகலனவையூட்டிக்குங்குமமுலையின்மாட்டிக்
கருவிளமலரின்காட்சிக்காசறுதூசுகாமன்
திருவிளையல்குற்கேற்பமேகலைதழுவச்சேர்த்தார். (சஞ)

சந்திரன்றவிமாரிற்றகையுறுதாளப்பைம்பூண்
இந்திரன்றவிக்கேற்பவியைவனபூட்டியாணர்
சிந்தூரப்பவளச்செவ்வாய்த்தேம்பசும்பாகுந்தீற்றி
மந்திரத்தயினிநீரால்வலஞ்செய்துகாப்புமிட்டார். (சசு)

மண்டிலமதியிலுப்பண்மானிருந்தென்னமானம்
கொண்டனரேற்றிவானமடந்தையர்தொடர்ந்துகூட
மண்டிவானரசுமோடவரக்கரும்புறஞ்சூழ்ந்தோட
அண்டர்நாயகன்பாலண்ணல்வீடணனருளிற்சென்றான். (சஎ)

வேறு.

இப்புறத்திமையவர்முனிவரேழையர்
துப்புறச்சிவந்தவாய்விஞ்சைத்தோகையர்
முப்புறத்துலகினுமெண்ணின்முற்றினோர்
ஒப்புறக்குவிந்தனரோகைகூறுவார். (சஅ)

நெருக்கமிகுதியையகற்ற அரக்கர் பிரம்பாலோச்சுதலும்
ஆரவார முண்டாதலும்.

அருங்குலக்கற்பினுக்கணியையண்மினர்
மருங்குபின்முன்செலவழியின்றென்னலாய்
நெருங்கினர்நெருங்குழிநிருதரோச்சலால்
கருங்கடன்முழக்கெனப்பிறந்தகம்பலை. (சக)

முனிவர் ஆரவாரகாரணங்கூறுதல்.

அவ்வழியிராமனுமலர்ந்தாமரைச்
செவ்விவாண்முகங்கொடுசெயிர்த்துநோக்குறூ
இவ்வொலியாவதென்றியம்பவிற்றொழுதெ
கவ்வையின்முனிவரர்கழறினரோ. (கo)

---

* விரன்முறை சுகிர்த்துவிட்டாள் என்றும் பாடம்.

† வேதத்தோகை-வேதமாதர்.

உயுத்தகாண்டம்

இராமன் விபீடணனை நீ தகாதுசெய்தியோவெனல்.

மூனிவரார்வாசகங்கேட்புரூதமுன்
ஙனியிதழ்துடித்திடஙகைத்துவீடணன்
றனையெழுநோக்கிநீதகாதசெய்தியோ
புனிதநூல்கற்றுணர்புந்தியோயென்ரூன். (நக)

கடுந்திறலமர்க்களங்காணுமாசையால்
நெடுந்திசைத்தேதவருநின்றயாவரும்
அடைந்தனருவகையினடைகின்ரூர்களாக்
கடிந்திடயார்சொலூர்கருதுநூல்வலாய். (நஉ)

வேறு.

பரசுடைக்கடவுணைமிப்பண்ணவன்பதுமத்தண்ணல்
அரசுடைத்தெரிவைமாரையின்றியேயமைவதுண்டோ
கரைசெயற்கரியதேவரேனையோர்கரந்துகாண்பான்
விரசுறின்விலக்குவாரோவேறுளார்க்கென்கொல்வீர. (நஙு)

ஆதலானரக்கர்கோவேயடுப்பதன்றுனக்குமின்னே
சாதுகைமாந்தர்தம்மைத்தடுப்பதென்றருளிச்செங்கண்
வேதநாயகன்ரூனிற்பவெய்துயிர்த்தலக்கணைய்திக்
கோதிலாமனனுமெய்யுங்குலந்தனன்குணக்கடேயான். (நசு)

அருந்ததியனையநங்கையமர்க்களமணுகியாடற்
பருந்தொடுகழுகும்பேயும்பசிப்பிணிதீருமாறு
விருந்திடுவில்லின்செல்வன்விழாவணிவிரும்பிநோக்கிக்
கருந்தடங்கண்ணுநெஞ்சுங்களித்திடவினையசொன்ரூள். (நஞ)

வேறு.

சனகி களங்கண்டு கூறியது.

சிலமுங்காட்டியென்கணவன்சேவகக்
கோலமுங்காட்டியென்குலமுங்காட்டியிந்
ரூலமுங்காட்டியகவிக்குநாளரூக்
காலமுங்காட்டுமேகொல்லென்கற்பென்ரூள். (நசு)

சனகி இராமனைக்காணுதல்.

எச்சிலென்னுடலுயிரேகிற்றேறயினி
நச்சிலையென்பதேதார்நவையிலாவெதிர்
பச்சிலைவண்ணமும்பவளவாயுமாய்க்
கைச்சிலையேயந்திநின்றதனைக்கண்ணுற்ரூள். (நஎ)

மானமீதாம்பையர்சூழவந்துளாள்
போனபோருயிரினைக்கண்டபொய்யுடை

ரூனதுகவர்வுறுந்தன்மைத்தாமென
ஆனனங்காட்டிறவவணியெய்திஞள். (நிஅ)

பிறப்பினுந்துணைவனைப்பிறவிப்பேரிடர்
துறப்பினுந்துணைவனைத்தெதாழுதுநானினி
மறப்பினுநன்றிதுமாறுவேறுவீழ்ந்
திறப்பினுநன்றெனவேவக்கநீங்கிஞள். (நிகூ)

இராமன் சீதையைக்காணுதல்.

கற்பினுக்கரசினைப்பெண்மைக்காப்பினைப்
பொற்பினுக்கழகினைப்புகழின்வாழ்க்கையைத்
தற்பிரிந்தருள்புரிதருமம்போலியை
அற்பினத்தலைவனுமமையநோக்கிஞன். (கூ0)

இராமன் சீதையைக் கடிந்துரைத்தல்.

சுணங்குறுதுணமுலைமுன்பிற்றாங்கிய
அணங்குறுநெடுங்கணீராறுவார்வுற
வணங்கியமயிலினைக்கற்பின்வாழ்வினைப்
பணங்கிளரரவெனவெழுந்துபார்ப்புழ. (கூக)

ஊண்டிறமுவந்தனையொழுக்கம்பாழ்பட
மாண்டிலமுறைறதிறம்பரக்கன்மாநகர்
ஆண்டுறைறந்தடங்கினையச்சந்தீர்ந்திவண்
மீண்டதென்னினைவெனைவிரும்புமென்பதோ. (கூஉ)

உன்னைமீட்பான்பொருட்டுவரிதூர்த்தெதாளிர்
பின்னைமீட்டுறபடையரக்கர்வேரறப்
பின்னைமீட்டுறபகைகடந்திலேன்பிழை
என்னைமீட்பான்பொருட்டிலங்கையெய்தினேன். (கூகூ)

மருந்திணுழுரியமன்னுயிரின்வான்றனை
அருந்தினையேயநறவமையவுண்டியே
இருந்தனையேயினியெமக்குமேற்பன
விருந்துளவோவுரைவெம்மைநீங்கிஞய். (கூசு)

கலத்தினிற்பிறந்தமாமணியிற்காந்துறு
நலத்தினிற்பிறந்ததுநடந்தநன்மைசால்
குலத்தினிற்பிறந்திலேகாளில்கீடம்போல்
நிலத்தினிற்பிறந்தமைநிரப்பிஞயரோ. (கூநி)

பெண்மையும்பெருமையும்பிறப்புங்கற்பெனும்
திண்மையுமொழுக்கமுந்தெளிவுஞ்சீர்மையும்

உண்மையுநீயெனுமொருத்திதோன்றலால்
வண்மையின்மன்னவன்புகழின்மாய்ந்ததால். (சுசு)

அடைப்பரம்புலன்களையொழுக்கமாணியாய்ச்
சடைப்பரந்தகைந்தேதார்தகைவின்மாதவம்
படைப்பர்வந்திடையொருபழிவந்தாலது
துடைப்பர்தம்முயிரொடுங்குலத்திற்றூகைமார். (சுஎ)

யாதியானியம்புவதுணர்வையீடறச்
சேதியாநின்றதுன்னெழுக்கஞ்செய்வது
சாதியாலன்றெனிற்றக்கதோர்நெறி
போதியாலென்றனன்புலவர்புந்தியான். (சுஅ)

இராமன்மொழிகேட்டனைவருமறற்றுதல்.

முனைவருமமரருமற்றுமுற்றிய
நினைவருமகளிருநிருதரென்றுளார்
எனைவரும்வானரத்தெதவரும்வேறுளார்
அனைவரும்வாய்திறந்தரற்றிரைரோ. (சுக)

சீதை வருந்திக் கூறுதல்.

கண்ணினையுதிரமும்புனலுங்கான்றுக
மண்ணினைநோக்கியமலரின்வைகுவாள்
புண்ணினைக்கோலுறுத்தனையபொம்மலால்
உண்ணினைப்போவினின்றுயிர்ப்புவீங்கினள். (எ0)

பருந்தடர்சுரத்திடைப்பருகுநீர்நசை
வருந்தருந்துயரினுன்மாளலுற்றமான்
இருந்தடங்கண்டதினெய்துருவகைப்
பெருந்தடையுற்றெனப்பேதுற்றுளரோ. (எக)

உற்றுனின்றுலகினைநோக்கியோரடி
முற்றுறுநெடுங்கணீராலிமொய்த்துக
இற்றதுபோலுமியானிருந்துபெற்றபே
றுற்றதாலென்றவடின்றென்றேறுவாள். (எஉ)

மாருதிவந்தனைக்கண்டுவள்ளனீ
சாருதியீண்டெனச்சமையச்சொல்லினுன்
யாரினுமேன்மையானிசைத்ததில்லையோ
சோருமென்னிலையவன்றூதுமல்லனே. (எங)

எத்தவமென்னலமென்றன்கற்புதான்
இத்தனைகாலமுழுழந்தவிவ்வெலாம்

பித்தெனலாயவம்பிழைத்ததாலன்றே
உத்தமநீமனத்துணர்ந்திலாமையால். (எச)

பார்க்கெலாம்பத்தினிபதுமத்தாணுக்கும்
பேர்க்கலாஞ்சிந்தையளல்லள்பேதையேன்
ஆர்க்கெலாங்கண்ணவனன்றிறன்றூலது
தீர்க்கலாந்தகையதுதெய்வந்தேறுமோ. (எரு)

பங்கயத்தொருவனும்விடையின்பாகனும்
சங்குகைத்தாங்கியதருமமூர்த்தியும்
அங்கையினெல்லிபோலனைத்துநோக்கினும்
மங்கையர்மனநிலையுணரவல்லரோ. (எசு)

ஆதலிற்புறத்தினியாருக்காகவென்
கோதறுதவத்தினைக்கூறிக்காட்டுகேன்
சாதலிற்சிறந்ததொன்றில்லைத்தக்கதே
வேதனின்பணியதுவிதியுமென்றனள். (எள)

இலக்குமணனைச்சனகி தீத்தருதியெனல்.

இளையவன்றனையழைத்திடுதியீயென
வளையொலிமுன்கையாள்வாயிற்கூறினள்
உளைவுறுமனத்தவனுலகம்யாவுக்கும்
களைகணைத்தொழுவவன்கண்ணிற்கூறினன். (எஅ)

சனகி தியினருகிற்சேறல்.

எங்கியபொருமலினிழிகணீரினன்
வாங்கியவுயிரினனனையமைந்தனும்
ஆங்கெரிவிதிமுறையமைவித்தானதன்
பாங்குறநடந்தனள்பதுமப்போதினள். (எக)

தீக்குழியினருகிற் சேறல்கண்ட வேதமுதலிய வருந்துதல்.

தீயிடையருகுறச்சென்றுதேதவர்க்கும்
தாய்தனிகுறுகலுந்தரிக்கிலாமையால்
வாய்திறந்தரற்றினமறைகணான்கொடும்
ஓய்வினல்லறமுமற்றுயிர்கள்யாவையும். (அ0)

அக்கினி வருந்துதல்.

வலம்வருமளவையின்மறுகிவான்முதல்
உலகமுமுயிர்களுமேமாலமிட்டன
அலம்வரலுற்றனவலறியையவிச்
சலமிதுதக்கிலதென்னச்சாற்றின. (அக)

இந்திராணிமுதலியோர் வருந்துதல்.

இந்திரன்றேவியர்முதலவேழையர்
அந்தரவானினின்றரற்றுகின்றவர்
சுந்தளிர்க்கைகளாற்சேயரிப்பெருஞ்
சுந்தரக்கண்களையெற்றித்துள்ளிலர். (அஉ)

பிரமாதியர் நடுங்குதல்.

நடுங்கினர்நான்முகன்முதலநாயகர்
படங்குறைந்ததுபடிசுமந்தபாம்புவாய்
விடம்பிறந்துளதெனவெதும்பிற்றுலல
கிடந்திரிந்தனசுடர்கடல்களேங்கின. (அஊ)

யான்கற்பிழந்தேதனெனி னென்னைச் சுடுதியென

அக்கினிக்குச் சனகிகூறுதல்.

கனத்திறற்கடந்தபூண்முலையகைவளை
மனத்திறல்வாக்கிறன்மறுவுற்றேறனெனின்
சினத்திறற்சுடுதியாற்றீச்செல்வாவென்றுள்
வனத்துழாய்க்கணைவற்கும்வணக்கம்போக்கிலள். (அசு)

சீதை தீயிற்பாய்தல்.

நீந்தரும்புனலிடைநிவந்ததாமரை
ஏய்ந்ததன்கோயிலேயெய்துவாளெனப்
பாய்ந்தனள்பாய்தலும்பாலின்பஞ்சென
தீய்ந்ததவ்வெரியவள்கற்பின்றீயிலுல். (அஎ)

அக்கினி சனகியையேந்தி வருந்திகூறுதல்.

அழுந்தினணங்கைமற்றங்கையாற்சுமந்
தெழுந்தனனங்கிவெந்தெரியுமேனியான்
தொழுங்கரத்துணையினன்சுருதிஞானத்தின்
கொழுந்தினைப்பூசலிட்டரற்றுங்கொள்கையான். (அஅ)

ஊடினசீற்றத்தாலுதித்ததேதவர்களும்
வாடினவில்லையாலுணர்த்துமாறுண்டோ
பாடியவண்டொடும்பனித்தேதெறும்
சூடினமலர்கணீர்தோய்ந்தபோன்றவால். (அஏ)

திரிந்தனவுலகமுஞ்செவ்வைவின்றன
பரிந்தவருயிரெலாம்பயந்தவிர்ந்தன
அருந்ததிமுதலியமகளிராடுதல்
புரிந்தனர்நாணமும்பொறையுநீங்கினர். (அஐ)

கனிந்துயர்கற்பெனுங்கடவுட்டூயிலல்
நினைந்திலையென்வலிநீக்கிலையென
அனிந்தனையங்கிநீயயர்கிலென்னையும்
முனிந்தனையாமெனமுறையிட்டானரோ. (அக)

இராமனக்கினிதவனைநீயாவனென விளைதல்.

இன்னதோர்காலையினிராமன்யாரைநீ
என்னைநீயியம்பியதெரியுட்டோன்றியிப்
புன்மைசாலொருத்தியைச்சுடாதுபோற்றினாய்
அன்னதார்சொல்லவீதறைதியாலென்றான். (கo)

அக்கினி தன்னை யுணர்த்துதல்.

அங்கியாவனெண்ணையிவ்வன்னைகற்பெனும்
பொங்குவெந்தீச்சுடப்பொறுக்கிலாமையால்
இங்கணைந்தேதனுறுமியற்கைநோக்கியும்
சங்கியாநிற்றியோவெவர்க்குஞ்சான்றுளாய்.

வேட்பதுமங்கையர்விலங்கினெனின்
கேட்பதும்பல்பொருட்கையங்கேடற
மீட்பதுமென்வயினென்னுமெய்ப்பொருள்
வாட்பெருந்தோளினாய்மறைகள்சொல்லுமால். (கஉ)

ஐயுறுபொருள்களையரசின்மாசொரீஇக்
கையுறுநெல்லியின்கனியிற்காட்டுமென்
மெய்யுறுகட்டுரைகேட்டுமீட்டியோ
பொய்யறுமாருதியுரையும்போற்றலாய். (கங)

தேவருமுனிவருந்திரிவநிற்பவும்
மூவகையுலகமுங்கண்கண்மோதினின்
றுவெனல்கேட்கிலையறத்தைதீக்கிவே
றேறவமென்றுருபொருள்யாண்டுக்கொண்டியோ. (கச)

பெய்யுமேமமழைபுவிபிளப்பதன்றியே
செய்யுமேபொறையறநெறியிற்செல்லுமே
உய்யுமேயுலகிவளுணர்வுசீறினால்
வய்யுமேன்மலர்மிசையயனுமாயுமே. (கஞ)

பாடுறுபன்மொழியினையபன்னிநின்
றூடுறுதேவரோடுலகமார்த்தெழச்
சூடுறுமேனியவவரிதாகையை
மாடுறக்கொணர்ந்தனன்வள்ளல்கூறுவான். (கசு)

இராமன் அங்கீயையுணர்ந்து சனகியை அங்கீகரித்தல்.

அழிப்பிலசான்றுநீயுலகுக்காதலான்
இழிப்பிலசொல்லிநீயிவளாயாதுமோர்
பழிப்பிலளென்றனைபழியுமின்றினிக்
கழிப்பிலளென்றனன்கருணையுள்ளத்தான். (கூஎ)

வேறு.

பிரமன் இராமற்கவனை யுணர்த்துதல்.

உணர்த்துவாயுண்மையொழிவின்றுகாலம்வந்துளதால்
புணர்த்துமாயையிற்பொதுவுறநின்றவைபுணரா
இணர்த்துழாய்த்தொங்கலிராமற்கென்றிமையவரிசைப்பத்
தணப்பிறுமரைச்சதுமுகனுரைசெயச்சமைந்தான். (கூஅ)

மன்னர்தொல்குலத்தவரினத்துணையொருமனித்தன்
என்னவுன்னலையுன்னைநீயிராமகேளிதனைச்
சொன்னநான்மறைத்துணிவினிற்றுணிந்தமெய்த்துணிவு
நின்னலாதில்லைநின்னில்வேறுளதிலைநெடியோய். (கூகூ)

பகுதியென்றுளதியாதினும்பழையதுபயந்த
விகுதியால்வந்தவினவுமற்றதற்குமேனின்ற
புகுதியாவர்க்குமரியவப்புருடனுநீயிம்
மிகுதியுன்பெருமாயையினல்வந்தவீக்கம். (க00)

முன்புபின்பிருபுடையெனுங்குணிப்பருமுறைமைத்
தன்பெருந்தன்மைதான்றெரிமறைகளின்றலைகள்
மன்பெரும்பரமார்த்தமென்றுரைக்கின்றமாற்றம்
அன்பனின்னையல்லான்மற்றிங்கியாரையுமறையா. (க0க)

எனக்குமெண்வகையொருவற்குமிமையவர்க்கிறைவன்
றனக்கும்பல்பெருமுனிவர்க்குமுயிருடன்றழீஇய
அனைத்தினுக்குநீயேபரமென்பதையறிந்தார்
வினைத்துவக்குடைவீட்டருந்தலைநின்றுமீள்வார். (க0உ)

என்னைத்தான்முதலாகியவுருவங்களெலையும்
முன்னைத்தாய்தந்தையெனும்பெருமாயையின்மூழ்கித்
தன்னைத்தானறியாமையிற்சலிப்பவச்சலந்தீர்ந்
துன்னைத்தாதையென்றுணர்குவமுத்திவித்தெழிந்த. (க0ஊ)

ஐயஞ்சாகியதத்துவந்தெரிந்தறிந்தவற்றின்
மெய்யெஞ்சாவகைமேனின்றநினக்குமேல்யாதும்
பொய்யெஞ்சாவிலதென்னுமீதருமறைபுகலும்
வய்யஞ்சான்றினிச்சான்றுக்குஞ்சான்றிலவழக்கால். (க0சு)

அளவையாலளந்தாமன்றென்றறிவுறுமமைதி
உளவையாவையுமுனக்கில்லையுபநிடத்தினது
களவையாய்ந்துறத்தெளிந்திலதாயினுங்கண்ணுல்
துளவையாய்முடியாயுளனீயெனத்துணியும். (கoநு)

காணமொன்றுளதுன்னேவந்தறிவுகாணுமே
ஆரணமல்லவர்க்கிவைகடந்தறிவரிதாக
மரணந்தோற்றமென்றிவற்றிடைமயங்குபவவற்றுன்
சரணமல்லதோர்சரணில்லையன்னைவதவிர்ப்பான். (கoசு)

தோற்றமென்பதான்றுனக்கில்லநின்கணேதோற்றும்
ஆற்றல்சான்முதற்பகுதிமற்றதனுளாம்பண்பால்
காற்றைறமுன்னுடைப்பூதங்களைவசென்றுகடைக்கால்
வீற்றுவீற்றுற்றுவீவுறுநீயென்றும் * விளியாய். (கoஎ)

மின்னேக்காட்டுதல்போல்வந்துவிளியுமெய்யுலகம்
தன்னேக்காட்டவுந்தருமத்தைநாட்டவுந்தனியே
என்னேக்காட்டுதியிறுதியுங்காட்டுதியெனக்கு
முன்னேக்காட்டிலையொளிக்கினுமிலமறையுரையால். (கoஅ)

என்னுருக்கொடிவ்வுலகினையீனுதியிடையே
உன்னுருக்கொடுபுகுந்துநின்றோம்புதியுமையோன்
றன்னுருக்கொடுதுடைத்திமற்றிதுதனியருக்கன்
முன்னுருக்கொடுபகற்செய்யுந்தரத்ததுமுதலோய். (கoக)

திருக்குவான்மலிசெல்வத்துச்செருக்குவேந்திறத்துத்
தருக்குமாய்வுறத்தானவராரக்கர்வெஞ்சமரில்
இரிக்கமாழ்கிநொந்துனைப்புகல்யாம்புகவியையாக்
கருக்குளாய்வந்துதோற்றுதியீங்கிதுகடனே. (ககo)

ஓங்காரப்பொருடேருவோர்தாமுன்னையுணர்வோர்
ஓங்காரப்பொருளென்றுணர்ந்திருவினையுகுப்போர்
ஓங்காரப்பொருளாமன்றென்றூழிசென்றூலும்
ஓங்காரப்பொருளேபொருளென்கிலாவுரவோர். (கஎக)

இனையதாகலினெம்மைமூன்றுலகையுமீன்றிம்
மனையின்மாட்சியைவளர்த்தவெம்மோயினைவாளா
முனையலென்றதுமுடித்தனன்முந்துநீர்முளைத்த
சினையின்பந்தமும்பகுதிகளனைத்தையுஞ்செய்தோன். (கஎஉ)

சிவனுமிராமற்கவணையுணர்த்துதல்.

என்னுமாத்திரத் † தேதறமர்கடவுளுமிசைத்தான்
உன்னைநீயொன்றுமுணர்ந்திலேபோலுமாலுரவோய்

---

* விளியாய் – அழியாய். † ஏறமர்கடவுள் – சிவன்.

முன்னையா தியாமூர்த் திநீமூவகையுலகின்
அன்னைசீதையாமா துனின்மார்பின் வந்தமைந்தாள். (ககஙூ)

துறக்குந்தன்மையளல்லளாற்றெல்லையெவ்வுலகும்
பிறக்கும்பொன்வயிற்றன்னையிப்பெய்வளைபிழைக்கின்
இறக்கும்பல்லுயிரிராமனீயிவடிறத்திகழ்ச்சி
மறக்குந்தன்மையதென்றனன்வரதர்க்கும்வரதன். (ககசூ)

பின்னுநோக்கிணன்பெருந்தகைமுன்புதற்பிரிந்த
இன்னலாலுயிர்துறந்திருந்துறக்கத்துளிருந்த
மன்னனூங்குவற்சென்றுநீகண்டனைவணங்க
முன்னைவான்றுயர்நீக்குதிமொய்ம்பிதேயென்றான். (ககஞூ)

தயரதன் இராமனெதிரே வருதலும் இராமனவனடி பணிதலும்.

ஆதியான்பணியருள்பெற்றவரசருக்கரசன்
காதல்மைந்தனைக்காணியவுவந்தேதார்கருத்தால்
பூதலத்திடைப்புக்கனன்புகுதலும்பொருவில்
*வேதவேத்தனுமவன்மலர்த்தாண்மிசைவீழ்ந்தான். (ககசூ)

தயரதனிராமனைத் தழுவிமகிழ்தல்.

வீழ்ந்தமைந்தனையெடுத்துத்தன்விலங்கலாகத்தின்
ஆழ்ந்தழுந்திடத்தழுவித்தன்கண்ணினீராட்டி
வாழ்ந்தசிந்தையின்மனங்களுங்களிப்புறமன்னன்
போழ்ந்ததுன்பங்கள்புறப்படநின்றிவைபுகன்றான். (ககஎ)

அன்றுகேகயன்மகள்கொண்டவரமென்னுமயில்வேல்
இன்றுகாறுமென்னிதயத்தினிடைநின்றதென்னைக்
கொன்றுநீங்கலதிப்பொழுதகன்றதுன்குலப்பூண்
மன்றலாகமமாங்காந்தமாமணியின்றுவாங்க. (ககஅ)

மைந்தரைப்பெற்றுவானுயர்தோற்றத்துமலர்ந்தார்
சுந்தரப்பெருந்தோளினென்றுணைத்தாளின்
பைந்துகட்களுமொக்கிலராமெனப்படைத்தாய்
உய்ந்தவர்க்கருந்துறக்கமும்புகழும்பெற்றுயர்ந்தேதன். (ககக)

பண்டுநான்றொழுந்தேவருமுனிவரும்பாராய்
கண்டுகண்டெனைக்கைத்தலங்குவிக்கின்றகாட்சி
புண்டரீகத்துப்புராதனன்றன்னெடும்பொருந்தி
அண்டமூலத்தொராசனத்திருத்தினையழக. (கஉ0)

---

* வேத்தன்—என்பது தற்பவம். வேத்தியன் — என்பது வடமொழி.

தயரதனைச் சனகி வணங்குதல்.

என்றுமைந்தனையெடுத்தெடுத்திறுகுறத்தழுவிக்
குன்றுபோன்றுளதோளினுன்சீதையைக்குறுகத்
தன்றுணைக்கழல்வணங்கலுங்கருணையாற்றழுவி
நின்றுமற்றிவைநிகழ்த்தினுனிகழ்த்தரும்புகழோன். (கஉக)

தயரதனறவுரை.

நங்கைமற்றுநின்கற்பினையுலகுக்குநாட்ட
அங்கிபுக்கிடென்றுணர்த்தியவதுமனத்தடையேல்
சங்கையுற்றவர்பெறுவதுமுண்டதுசாதம்
கங்கைநாடுடைக்கணவனைமுனிவுறக்கருதேல். (கஉஉ)

பொன்னைத்தீயிடைப்பெய்தலப்பொன்னுடைத்தூய்மை
தன்னைக்காட்டுதற்கென்பதுமனக்கொளறகுதி
உன்னைக்காட்டினன்கற்பினுக்கரசியென்றுலகில்
பின்னைக்காட்டுதற்கரியதென்றெண்ணியிப்பெரியோன். (கஉங)

பெண்பிறந்தவரருந்ததியேமுதற்பெருமைப்
பண்பிறந்தவர்க்கருங்கலமாகியபாவாய்
மண்பிறந்தகமுனக்குநீவானின்றும்வந்தாய்
எண்பிறந்தநின்குணங்களுக்கினியிழுக்கிலையால். (கஉச)

என்னச்சொல்லியவ்வேந்திழைதிருமனத்தியாதும்
உன்னச்செய்யலோர்முனிவின்மைமனக்கொளாவுவந்தான்
பின்னைச்செம்மலவ்விளவலையுள்ளன்புபிணிப்பத்
தன்னைத்தானெனத்தழுவினன்கண்கணீர்ததும்ப. (கஉஞ)

கண்ணினீர்ப்பெருந்தாரைமற்றவன்சடைக்கற்றை
மண்ணினீத்தமொத்திழிதரத்தழீஇன்றுமைந்த
எண்ணினீக்கரும்பிறவியுமென்னெஞ்சினிறந்த
புண்ணுநீக்கினையுமையனைத்தொடர்ந்துடன்போந்தாய். (கஉசு)

புரந்தரன்பெரும்பகைஞனைப்பொராவென்றவுன்றன்
பரம்புயர்ந்ததோளாற்றலேதவரும்பலரும்
நிரந்தரம்புகல்கின்றதுநீயிந்தவுலகின்
அரந்தையாம்பகைதுடைத்தறநிறுத்தினையைய. (கஉஎ)

தயரதன் வரங்கேளெனல்.

என்றுபின்னருமிராமனையானுனைக்கீவ
தொன்றுகூறுதியுயர்குணத்தோயெனவுனையான்
சென்றுவானிடைக்கண்டிடர்தீர்வெனென்றிருந்தேன்
இன்றுகாணப்பெற்றேனினிப்பெறுவதென்னென்றான். (கஉஅ)

ஆயினுமுனக்கமைந்ததொன்றுரையெனவழகன்
தீயவென்றுநீதுறந்தவென்றெய்வமுமகனும்
தாயுந்தம்பியுமாம்வரந்தருகெனத்தாழ்ந்தான்
வாய்திறந்தெழுந்தார்த்தனவுயிரெலாம்வழுத்தி. (கஉக)

இராமனுக்குத் தயரதன் வரமளித்தல்.

வரதகேளெனத்தயரதனுரைசெய்வான்மறுவில்
பரதனன்னதுபெறுகதான்முடியினைப்பறித்திவ்
விரதவேடமற்றுதவியபாவிமேல்விளிவு
சரதநீங்கலதாமென்றுன்றழீஇயகைதளர. (கஉ0)

தயரதன் கைகேசியைஇகழ்தலும் இராமன் சமாதானங் கூறுதலும்.

ஊன்பிழைக்கிலாவுயிர்நெடிதளிக்குநீளரசை
வான்பிழைக்கிதுமுதலெனுதாள்வுறமதித்து
யான்பிழைத்ததல்லாலெனின்னையீன்றவெம்பிராட்டி
தான்பிழைத்ததுண்டோவென்றுனவன்சலந்தவிர்ந்தான். (கஉக)

இராமனுக் கிருவரமளித்த தயரதன் சுவர்க்கம் புகுதல்.

எவ்வரங்களுங்கடந்தவனப்பொருளிசைப்பத்
தெவ்வரம்பறுகானிடைச்செலுத்திளட்கீந்த
அவ்வரங்களுமிரண்டலையாற்றிணற்கீந்த
இவ்வரங்களுமிரண்டென்றுர்தேதவருமிரங்கி. (கஉ2)

வரமிரண்டளித்தழகனையிளவலுமலர்மேல்
விரவுபொன்னினமண்ணிடைநிறுத்திவிண்ணிடையே
உரவுமானமிதேதகினனும்பருமுலகும்
பரவுமெய்யினுக்குயிரளித்துறுபுகழ்படைத்தான். (கஉஉ)

இராமனை யமரர்வரங்கேளென வேண்டுதலு மவன்
இறந்தவானரங்களை யெழுப்பக் கூறுதலும்.

கோட்டுவார்சிலைக்குரிசிலையமரர்தங்குழாங்கள்
மீட்டுநோக்குறுவீரநீவேண்டுவவரங்கள்
கேட்டியாலெனவரக்கர்கள்கிளப்பருஞ்செருவில்
வீட்டமாண்டுளகுரங்கெலாமெழுகெனவிளம்பி. (கஉச)

பின்னுமோர்வரம்வானரப்பெருங்கடல்பெயர்ந்து
மன்னுபல்வனமால்வரைக்குலங்கள்மற்றின்ன
துன்னிடங்கள்காய்கனிகிழங்கோடுதன்றுற்ற
இன்னுணீருளவாகெனவிளம்பிடுகென்றான். (கஉடு)

வானரங்கள் புகுமிடங்கள் வளமுடையதாக வெனவமரர் வரமளித்தல்.

வரந்தருமுதன்மழுவலான்முனிவரர்வாழ்
புரந்தராதிமற்றேனையோர்தனித்தனிப்புகழ்ந்தாங்

கரந்தைவெம்பிறப்பறுக்குநாயகனினதருளால்
குரங்கினம்பெறுகென்றனருள்ளமுங்குளிர்ப்பார். (கூ)

இறந்த வானரமுயிர் பெறுதல்.

முந்தைநாண்முதற்கடைமுறையளவையுமுடிந்த
அந்தவானரமடங்கலுமெழுந்துடனுர்த்துச்
சிந்தையோடுகண்களிப்புறச்செருவெலாநினையா
வந்துதாமரைக்கண்ணனேவணங்கினமகிழ்ந்து. (கூ)

கும்பகன்னனேடிந்திரசித்துவெங்குலப்போர்
வெம்புவெஞ்சினத்திராவணன்முதலியவீரர்
அம்பின்மாண்டுளவானரமங்குவந்தார்ப்ப
உம்பர்யாவருமிராமனைப்பார்த்திவையுரைத்தார். (கூ)

தேவர் இராமனுக்கு இராவணவதம் ஒருபக்கத்திலாயதெனல்.

* இடையுவாவினிற்சுவேலம்வந்திறுத்தெயிலிலங்கைப்
புடையவாவுறச்சேனையெவ்வளப்புறப்போக்கிப்
படையவாவுறுமரக்கர்தங்குலமுற்றும்படுத்துக்
கடையுவாவினிலிராவணன்றன்னையுங்கட்டு. (கூ)

தேவர் வனவாசகால முடிந்ததெனல்.

வஞ்சனில்லையிவ்வண்டகத்தினனும்படிமடித்த
கஞ்சநாண்மலர்க்கையினையன்னைசொற்காறும்
அஞ்சொடைஞ்சுநான்கென்றனுமாண்டுபோய்முடிந்த
பஞ்சமிப்பெயர்படைத்துளதிதியின்றுபயந்த. (கூ)

தேவர் நீ இன்றே பரதனைக்காணுவிடனவன்
தீப்புகுவானெனைக் கூறியகறல்.

இன்றுசென்றுநீபரதனையெய்தலையென்னின்
பொன்றுமாலவனெரியிடையன்னதுபோக்க
வென்றிவீரநீபோதியாலென்பதுவிளம்பா
நின்றதேவர்கணீங்கினரிராகவனினைந்தான். (கூ)

விபீடணன் புட்பகமுளதெனப் புகறல்.

ஆண்டுபத்தொருநாலுமின்றோடறுமாயின்
மாண்டதாமினியென்குலம்பரதனேமாயின்
ஈண்டுபோகவேவாரூர்தியுண்டோவெனவின்றே
தூண்டுமானமுண்டென்றடல்வீடணன்மொழிதான். (கூ)

வாங்கினனிருநிதியொடுதனதனில்வள்ளால்
ஓங்குமால்வெள்ளமெழுபஃதேதறினுமொல்கா

---

* இடையுவா – பூரணை.

தீங்குளாரெலாமிவருவதிவரினீயினிது
பூங்குலாநகர்புகுதியிஞ்ஞான்றெனப்புகலா. (கசாநட)

இராமன் புட்பகங் கொடுவரக் கூறல்.

இயக்கர்வேந்தனுக்கருமறைக்கிழவனன்றீந்த
துயக்கிலாதவர்மனமெனத்தூயதுசுரர்கள்
வியக்கவான்செலும்புட்பகவிமானமுண்டென்றே
மயக்கிலான்சொலக்கொணருதிவல்லையினென்றான். (கசாச)

புட்பகம் கொண்டு வருதல்.

அண்டகோடிகளனந்தமொத்தாயிரமருக்கர்
விண்டதாமெனவிசும்பிடைத்திசையெலாம்விளங்கக்
கண்டையாயிரகோடிகளொலிப்புறக்கனலக்
கொண்டணைந்தனரெடியினரக்கர்தங்கோமான். (கசாஞ)

தேவர் மலர்மாரி பொழிதல்.

அனையபுட்பகவிமானம்வந்தவனியையணுக
இனியசிந்தனையிராகவனுவகையோடினிதம்
வினையமுற்றியதென்றுகொண்டெழுந்தனன்விண்ணோர்
புனைமலர்ச்சொரிந்தார்த்தனராசிகள்புகன்றே. (கசாசு)

சனகி திரிசடையைவாழ்த்தி இராமனருகிலிருத்தல்.

வணங்குறுண்ணிடைத்திரிசடைவணங்கவான்கற்பிற்
கிணங்கரின்மையாலேக்கியோரிடரின்றியிலங்கைக்
கணங்குதானெனவிருத்தியென்றையன்மாடணைந்தாள்
மணங்கொள்வேலினங்கோளரிமானமீப்படர்ந்தான். (கசாஎ)

இராமன் விபீடணுதியர்க் குரைத்தல்.

அண்டமுண்டவன்மணியணியுதரமொத்தநிலன்
சண்டவேகமுங்குறைதரநினைவெனுந்தாத்தாய்
விண்டலந்திகழ்விமானப்புட்பகமெனுமதின்மேற்
கொண்டகொண்டறன்றுணைவரைப்பார்த்திவைகுணித்தான். (கசாஅ)

வீடணன்றனையன்புறநோக்குரூவிமலன்
தோடணைந்ததார்மவுலியாய்சொல்வதான்றளதுன்
மாடணைந்தவர்க்கின்பமேவழங்கிநீளாசி
ஞடணைந்தவர்புகழ்ந்திடவீற்றிருநலத்தால். (கசாக)

நீதியாறனத்தெரிவுறுநிலைமைபெற்றுடையாய்
ஆதிநான்மறைக்கிழவனின்குலமெனவமைந்தாய்
எதிலார்தொழுமிலங்கைமாநகரினுளினிநீ
போதியாலெனப்புகன்றனனன்மறைபுகன்றான். (கஅ0)

சுக்கிரீவனின்மேலுறுதைடவன்மையாற்றசந்தொ
ருக்கிரீவனைத்தடிந்துவெம்படையிலைசந்த
மிக்கவானரச்சேனையினிலப்பறமீண்டேர்ப்
புக்குவாழ்கெனப்புகன்றனனீறிலாப்புகழோன். (கருக)

வாலிசேயினைச்சாம்பனைப்பனசனைவயப்போர்
நீலனுதியகெடும்படைத்தலைவரைநெடிய
காலின்வேலையைத்தாவிமீண்டருளியகருணை
போலும்வீரனைநோக்கிமற்றிம்மொழிபுகன்றான். (கருஉ)

விபீடணுதியர் உடன் செலவிணைதல்.

அய்யனிம்மொழிபுகன்றிடத்துணுக்கமோடவர்கள்
மெய்யுமாவியுங்குலதரவிழிகணீர்ததும்பச்
செய்யதாமரைத்தாளிணைமுடியுறச்சேர்த்தி
உய்கிலேனின்னைநீங்கினென்றினையனவுரைத்தார். (கருங)

பாரமாமதிலேயாத்தியினெய்திநின்பைம்பொன்
ஆரமாமுடிக்கோலமுஞ்செவ்வியுமழகும்
சோர்விலாதியாங்காண்குறுமளவையுந்தொடர்ந்து
பேரவேயருளென்றனருள்ளன்புபிணிப்பார். (கருச)

இராமனுமவ்வாறே யெனல்.

அன்பிலைலவர்மொழிந்தவாசகங்களுமவர்கள்
தன்பமெய்தியதடுக்கமுநோக்கிநீர்துளங்கல்
முன்புநானினைந்திருந்ததப்பரிசுநும்முயற்சி
பின்புகாணுமாறுரைத்ததென்றுரைத்தனன்பெரியோன். (கருஞ)

சுக்கிரீவாதியர் மகிழ்வுறல்.

அய்யன்வாசகங்கேட்டலுமரிகுலத்தரசும்
மொய்கொள்சேனையுமிலங்கையர்வேந்தனுமுதலோர்
வய்யமாளுடைநாயகன்மலர்ச்சரண்வணங்கி
மெய்யிலேடருந்துறக்கமுற்றுரெனவியந்தார். (கருசு)

இராமனனைவரையும் புட்பகத்திலேறக் கட்டளையிடுதல்.

அனையதாகியசேனையோடரசனையநிலன்
தனையலுதியாம்படைடப்பெருந்தலைவர்கடம்மை
வனையும்வார்கழலிலங்கையர்மன்னனைவந்திங்
கினிதினேறுமின்விமானமென்றிராகவனிசைத்தான். (கருஎ)

அனைவரும் புட்பகமேறியிருத்தல்.

சொன்னவாசகம்பிற்படச்சூரியன்மகனும்
மன்னுவீருமெழுபதுவெள்ளவானரும்

கன்னிமாமதிலிலங்கைமன்னெடுகடற்படையும்
துன்னிஞர்நெடும்புட்பகமிசையொருகுழல். (கருஅ)

புட்பகத்திறம்.

பத்துநாலெனவடுக்கியவுலகங்கள்பலவின்
மெத்தியோனிகளேறினும்வெளியிடமிகுமால்
மூத்தானனவரிதனிலமொழிகுவதல்லால்
இத்தாதலத்தியம்புதற்குரியவர்யாரே. (கருக)

வேறு.

இராமன் புட்பகத்தி லிவ்வாறிருந்தானெனல்.

எழுபதுவெள்ளத்தேருமிரவிகான்முளையுமெண்ணின்
வழுவிலாவிலங்கைவேந்தும்வான்பெரும்படையுஞ்சூழத்
தழுவுசீரிளையகோவுஞ்சனகன்மாமயிலும்போற்ற
விழுமியகுணத்துவீரன்விளங்கினன்விமானத்தும்பர். (கசு0)

அண்டமேமேன்றதையன்புட்பகமண்டத்தும்பர்
எண்டருங்குணங்களின்றிமுதலிடையீறின்றுகிப்
பண்டைநான்மறைக்குமெட்டாப்பரஞ்சுடர்பொலிவதேபோல்
புண்டரீகக்கண்வென்றிப்புராவலன்பொலிந்தான்மன்னே. (கசுக)

இராமனேவலையால் சுக்கிரீவாதியர் மானுடவடிவங்கொண்டுறுதல்.

தேனுடையலங்கன்மோலிச்செங்கதிர்ச்செல்வன்சேயும்
மீனுடையகழிவேலையிலங்கையர்வேந்தும்வெற்றித்
தானையும்பிறருமற்றைறப்படைப்பெருந்தலைவர்தாமும்
மானுடவடிவங்கொண்டார்வள்ளறன்வாய்மைதன்னால். (கசுஉ)

இராமன் சனகிக்கு இலங்கையாதிய காட்டிக்கூறுதல்.

குடதிசைமறைந்தபின்னர்க்குணதிசையுதயஞ்செய்வான்
வடதிசையயனமுன்னிவருவதேதகடுப்பமானம்
தடையொருசிறிதின்றுகித்தாவிவான்படருமேவல
படையமைவிழியாட்கையனீனையனபகரலுற்றான். (கசுங)

இலங்கையையவலஞ்செய்தேதகவெனநினைந்திடுமுன்மானம்
வலங்கிளர்கீழைவாயில்வரப்பிரகத்தனீலன்
நலங்கிளர்கையின்மாண்டதிவணெனநமன்றன்வாயில்
கலந்திடவீங்குக்கண்டாய்சுபாரிசற்கட்டதென்றான். (கசுச)

குடதிசைவாயில்வேகக்குன்றரிந்தவனெவன்ற
விடநிகர்மேகநாதனிளவலால்வீழ்ந்ததென்முன்
வடதிசைவாயின்மேலவ்விராவணன்மவுலிபத்தும்
உடலமுமிழந்ததிங்கென்றுணர்த்திவேறுரைக்கலுற்றான். (கசுடு)

நன்னுதனின்னைநீங்கிநாள்பலகழிந்தபின்றை
மன்னவனிரவிமைந்தன்வான்றுணையாகநட்ட
பின்னைமாருதிவந்துன்னைப்பேதறுத்தனதுபெற்றி
சொன்னபின்வானரேசர்தொகுத்ததிச்சேதுகண்டாய். (கசுசு)

இராமன் சேதுமான்மியங்கூறுதல்.

மற்றிதன்றாய்மையெண்ணின்மலரயன்றனக்குமெட்டா
பொற்றொடித்தெரிவையானென்புகலுகேன்கேட்டியன்பால்
பெற்றதாய்தந்தையோடுதேசிகர்பிழைத்துச்சூழ்ந்த
சுற்றமுங்கெடுத்துளோருமெதிர்தரிற்சுரர்களாவார். (கசுள)

இந்திரற்கஞ்சிமேலைநெடுங்கடல்புக்குநீங்காக்
கந்தரசயிலந்தன்னுட்கண்டவர்வினைகடூர்க்கும்
கந்தமாதனமென்றோதுங்கிரியிவண்கிடப்பகண்டாய்
பைந்தொடியடைத்தசேதுப்பாவனமாவதென்றான். (கசுஅ)

கங்கையோடியமுனைகோதாவிரியொடுகளிந்தைசூழ்ந்த
பொங்குநீர்த்திகள்யாவும்படிந்தலாற்புன்மைபோகா
சங்கெறிதரங்கவேலைதட்டவிச்சேதுவென்னும்
இங்கிதினெதிர்ந்தோர்புன்மையாவையுநீக்குமன்றே. (கசுக)

ஆவினைக்குரவரோடுமருமறைமுனிவர்தம்மைப்
பாவையர்குழுவையின்சொற்பாலரைப்பயந்துதம்மின்
மேவினவவரைச்செற்றோர்விரிகடற்சேதுவந்து
தோய்வரேலவர்கள்கண்டாய்சுரர்தொழுஞ்சுரர்களாவார். (கஎ0)

மரக்கலமியங்கவேண்டிவரிசிலைக்குலதையாற்கீறித்
தருக்கியவிடத்துப்பஞ்சபாதகரேனுஞ்சாரின்
பெருக்கியவேவழுமுன்றுபிறவியும்பிணிகணீங்கி
நெருக்கியவமரர்க்கெல்லாநீணிதியாவரன்றே. (கஎக)

நெற்றியினழலுஞ்சங்கணீறணிகடவுணீடு
கற்றையின்சடையின்மேவுங்கங்கையுஞ்சேதுவாகப்
பெற்றிலமென்றுகொண்டுபெருந்தவம்புரிகின்றூளால்
மற்றிதன்றாய்மையெவ்வாறுரைப்பதுமலர்க்கண்வந்தாய். (கஎஉ)

சனகக்கிராமன் புல்லணைமுதலிய காட்டியுரைத்தல்.

தெவ்வடுஞ்சிலைக்கைவீரன்சேதுவின்பெருமையாவும்
வெவ்விடம்பொருதுமீண்டுதிளிர்தருங்கருங்கட்செவ்வாய்
நொவ்விடைக்குயிலனைட்குநுவன்றுழிவருணனேவ
திவ்விடைவந்துகண்டாய்சரவணவியம்பிற்றென்றான். (கஎங)

இதுதமிழ்முனிவன்வைகுமியறருகுன்றுமுன்ன
னதுவளர்மணிமேலோங்கலப்புறத்துயர்ந்துதோன்றும்
அதுதிக * ழநந்தவெற்பென்றருடாவநுமன்ரோன்றிற்
றெதுவெனவணங்கைகோக்கியிற்றெனவிராமன்சொன்னன். (கஎச)

வாவியென்றளவிலாற்றல்வண்மையான்மகரநீர்சூழ்
வேலையைக்கடத்தலாயும்விறலுடையவனைவீட்டி
நூலியற்றருமநீதிநுனித்தறங்குணித்தமேலோர்
போலியற்றபனன்மைந்தனுறைதரும்பொறையீதென்றான். (கஎடு)

சனகி வானரமாதரையும் விமானத்திலேற்றவேண்டுதல்.

கிட்கிந்தையிதுவேலையகேட்டியாலெனதுபெண்மை
மட்குந்தாளையவெள்ளமகளிரின்ரூகிவாரேனர்
உட்கும்போர்ச்சேனசூழவொருத்தியேயயோத்தியெய்தின்
கட்கொந்தார்குழலினரையேற்றுதல்கடன்மைத்தென்றாள். (கஎசு)

அனுமன் வானரமாதரை யழைத்துவருதல்.

அம்மொழியிரவிமைந்தற்கண்ணரூனுரைப்பவன்னன்
மெய்ம்மைசேரநுமன்றன்னைநோக்கிநீவிரைவின்வீர
மைம்மலிகுழலினரைமரபினற்கொணர்தியென்னைச்
செம்மைசேருள்ளத்தண்ணல்கொணர்ந்தனன்சென்றுமன்னே. (கஎஎ)

வானரமாதர் சீதையையுமிராமனையும் வணங்குதல்.

வரிசையின்வழாமைநோக்கிமாருதிமாதர்வெள்ளம்
கரைசெயலரியவண்ணங்கொணர்ந்தனன்கணத்தின்முன்னம்
விரைசெறிகுழலினர்தம்வேந்தனைவணங்கிப்பெண்மைக்
கரசியையையமேலுமடியினைதொழுதுநின்றார். (கஎஅ)

வானரமாதரைப் புட்பகத்தேற்றிக்கொள்ளுதல்.

மங்கலமுதலவாயமரபினிற்கலப்பையாவும்
அங்கவர்கொணர்ந்துபெண்மைக்கரசியைத்தொழுதுசூழ
நங்கையுமுவந்துமேவுரூர்நவையிலையினிடற்றென்றாள்
பொங்கியவிமானந்தானுமனமெனவெழுந்துபோன. (கஎக)

போதாவிசும்பிற்றிகழ்புட்பகம்போதலோடும்
சூதார்முலைத்தோகையைநோக்கிமுன்ரோன்றுசூழல்
கோதாவிரிமற்றதன்மாடுயர்குன்றுகின்னைப்
பேதாய்பிரிவித்துயர்பீழைபினித்ததென்றான். (கஅ0)

---

* மதங்கவெற்பு.

வேறு.

சிரத்துவாசவண்டலம்பிடுதெரிவைகேளிதுநீ
டரத்துவாசவர்வேள்வியர்தண்டகமதுதான்
வரத்துவாசவன்வணங்குறுசித்திரகூடம்
பரத்துவாசவனுறைவிடமிதுவெனப்பகர்ந்தான்.

இ-ள். சிரத்து - தலையின்கண், வாசவண்டு - மணமமைந்தவண்டுகள், அலம்பிடு - தேனுண்டொலிக்கின்ற, தெரிவைகேள்-நல்லறிவையுடையாளேகேள், இது - இந்தஇடம், நீள் - மிகுந்த, தரத்து - சலியாதநிற்றலாகிய வலியமைந்த, உவாசவர் - உபாசனைசெய்பவர்களும், வேள்வியர் - யாகங்களைச்செய்பவர்களும் வசிக்கின்ற, தண்டகம் - தண்டகாரணியமாகும், அது - அந்தஇடம், வரத்து - சிறப்பையுடைய, வாசவன்-இந்திரன், வணங்குறு - வணங்குகின்ற, சித்திரகூடம் - சித்திரகூடமலையாகும், இது - இவ்விடம், பரத்துவாசவன்-பரத்துவாசமுனிவன், உறைவிடமென - வசிக்குமிடமென்று, பகர்ந்தான் - சொல்லியருளினன்,—என-று.

தெரிவையென்னுங் காரணப்பெயர் ஈண்டு யாவுமறியவல்ல இறைவிக்காயிற்று. (கஅக)

பரத்துவாசன் இராமனையெதிர்கோடல்.

மின்னைநோக்கியவீரனிதியம்பிடும்வேலை
தன்னைநேரிலாமுனிவரனுணர்ந்துதன்னகத்தின்
என்னையாளுடைநாயகனெய்தினனென்னத்
துன்னுமாதவர்சூழ்தரவெதிர்கொள்வான்றொடர்ந்தான். (கஅஉ)

பரத்துவாசன் வருகையை இராமன்காண்டல்.

ஆதபத்திரங்குண்டிகையொருகையினேத்துப்
போதமுற்றியதண்டொருகையினிற்பொலிய
மாதவப்பயனுருவுகொண்டெதிர்வருமாபோல்
நீதிவித்தகனடந்தமைநோக்கினனெடியோன். (கஅங)

புட்பகத்தினைக் கீழிறங்குமாறு இராமன்நினைத்தல்.

எட்பகத்தினையளவையுங்கருணையோடிசைந்த
நட்பகத்திலாவரக்கரைநருக்கிமாமேரு
விட்பகத்துறைகோளரியெனப்பொலிவீரன்
புட்பகத்தினைவதிகெனநினைந்தனன்புவியில்.

இ-ள். எண் - மற்றையோருடைய எண்ணங்கள், பக - குலைய, தினையளவையும் - தினையளவும், கருணையோடு - கருணையுடனே, இசைந்த - பிறவுயிர்களிடத்துப்பொருந்திய, நட்பு - அன்பு, அகத்திலா - உள்ளத்திலில்லாத, அரக்கரை - இராவணன்முதலிய அரக்கர்களை, நருக்கி-சின்னபின்னஞ்செய்து, மாமேரு - பெரியமேருமலையினது, விட்பகத்

து – குகையினிடத்தில், உறை – வசிக்கின்ற, கோளரியென – வலியமை ந்த சிங்கம்போல, பொலிவீரன் – பொலிகின்றசீராகவபிரான், புட்பகத் தினை – புட்பகவிமானத்தை, புவியில் – அப்பூமியின்கண், வதிகெனநினை ந்தனன் – தங்குகவென்று திருவுளங்கொண்டனன்,—எ-று.

விட்பு-விள்ளெனும்பகுதியும் புவ்விகுதியும்பெற்று விட்பென்றாகி விண்ட இடத்தை யுணர்த்தினமையின் ஆகுபெயர். (கஅச)

இராமன் பரத்துவாச னடிபணிதல்.

உன்னுமாத்திரத்துலகினையெடுத்தும்பரோங்கும்
பொன்னிலைவெந்திழிந்தெனப்புட்பகந்தாழ
என்னையாளுடைநாயகன்வல்லையினெதிர்போய்ப்
பன்னுமாமறைத்தபோதனன்றண்மிசைப்பணிந்தான். (கஅந)

பரத்துவாசனிராமனை ஆசீர்வதித்தல்.

அடியின்வீழ்தலுமெடுத்துநல்லாசியோடணைத்து
முடியையேமோயினனின்றுழிமுளரியங்கண்ணன்
சடிலநீங்கவெளாழிதரத்தனதுகண்ணருவி
நெடியகாதலங்கலசமதாட்டினனெடியோன். (கஅசு)

கருகும்வார்குழற்சனகியோடிளவல்கைதொழுதே
அருகுசார்தரவருந்தவஞசிகள்வழங்கி
உருகுகாதலிலைழுகுகண்ணீரினனுவகை
பருகுமாரமிழ்தொத்துளங்களித்தனன்பரிவால். (கஅள)

இராமன் ஆசீர்மத்துக் கழைத்துவருதல்.

வானவேசனும்வீடணக்குரிசிலுமற்றை
ஏனவீரருந்தொழுதாறுமாசிகளியம்பி
ஞானநாதனைத்திருவெழாடுநன்மனெகாணர்ந்தான்
ஆனமாதவர்குழாத்தொடுமருமறைபுகன்றே. (கஅஅ)

பரத்துவாசன் இராமனுக்கு அதிதிபூசை நடத்திக்கூறுதல்.

பன்னசாலையுட்புகுந்துநீடருச்சனைபலவும்
சொன்னநீதியிற்பிரிந்துபின்சூரியன்மருமான்
றன்னைநோக்கினன்பன்முறைகண்கணீர்ததும்பப்
பின்னெர்வாசகமுரைத்தனன்றபோதரிற்பெரியோன். (கஅக)

முனிவர்வானுளோர்மூவுலகத்துளோர்யாரும்
துனியுழந்திடத்துயர்தருகொமெனத்தொழிலோர்
நனிமடிந்திடவலகைகணுடகநடிப்பக்
குனியும்வார்சிலக்குரிசிலேலயென்னினிக்குணிப்பாம். (கஉ0)

வேறு.

விராதனுங்கரனுமானும்விறல்கெழுகவந்தன்றனும்
மராமரமேழும்வாலிமார்பமுமகராீரும்
நிராவணனுரமுங்கும்பகருணனேதற்றந்தானும்
அராவரும்பகழியொன்றாலழித்துலகளித்தாயைய. (கசுக)

சித்திரகூடந்தீர்ந்துதென்றிசைத்தீமைதீர்த்திட்
டித்திசையடைந்தெம்மில்லினிறுத்தமையிறுதியாக
வித்தகமறந்திலேன்யான்விருந்தினையாகியெம்மோ
டித்தினமிருத்தியென்றான்மறைகளினிறுதிகண்டான். (கசுஉ)

பரத்துவாசன் பரதனியல் கூறுதல்.

காதலமதனினீடுகார்முகம்வளையவாங்கிச்
சரதம்வானவர்கடன்பந்தணித்துலகங்கடாங்கும்
மரகதமேனிச்செங்கண்வள்ளலேவழுவாந்திப்
பரதனதியல்புயின்றேபணிக்குவென்கேண்மினென்றான். (கசுஎ)

வேறு.

வெயர்த்தமேனியன்விழிபொழிமழையன்மூவினையைச்
செயிர்த்தசிந்தையன்றருமமாலுழந்துழந்திழிவான்
அயர்த்துநோக்கினுந்தென்றிசையன்றிவேறறியான்
பயத்ததுன்பமேவுருவுகொண்டுன்னலாம்பழியான். (கசுசு)

இந்தியங்களைந்திருங்கனிகாய்நுகர்ந்திவுளிப்
பந்திவந்தபுற்பாயலான்பழம்பதிபுகாது
நந்தியம்பதியிருந்தனன்பரதனின்னமம்
அந்தியும்பகலதனினுமறப்பிலனெகி. (கசுஞ)

வேறு.

என்றுரைத்தரக்கர்வேந்தனிருபதென்றுரைக்குநீலக்
குன்றுரைத்தனையதோளருங்குலவரைக்குவடுமேய்க்கும்
என்றுரைத்தனையமெளலித்தலபத்துமிறுத்தவீர
நின்றனைப்பிரிந்ததுண்டோயாவெனைநிகழ்த்திறைவல்.

பரத்துவாசற் கிராமன் பதிலுரைத்தல்.

மின்னையேருழையினுமும்விரைமலர்த்தவிசினுமும்
பின்னையேபுகழ்தற்கொத்தநீதிமாதவத்தின்மிக்கோய்
உன்னையேவணங்கியுன்றனருள்சுமந்துயர்ந்தேதன்மற்றிங்
கென்னையேயபொருவுமைமந்தர்யானலாதில்லையென்றான். (கசுஎ)

பரத்துவாசன் வரந்தருவேனென இராமன் வானரம்
வாழ வரங்கேட்டல்.

அவ்வுரைபுகலக்கேட்டவறிவனுமருளிமேனக்கி
வெவ்வரம்பொருதவேலோய்விளம்புகேன்கேட்டிவேண்டிற்
றெவ்வரமெனினுந்தந்தேனியம்புதியெனலுமையன்
கவ்வையின்றுகிவென்றிக்கவிக்குலம்பெற்றுவாழ்க. (கஉஅ)

பரத்துவாசன் வானரம்வாழிடம் வளமுடைத்தாகென வரமருளுதல்.

அரியினஞ்சென்றசென்றவடவிகளனைத்தும்வானம்
சொரிதருபருவம்போன்றுகிழங்கொடுகனிகாய்துன்றி
விரிபுனல்செழுந்தேன்மிக்குவிளங்கெனவிளம்புகென்றான்
புரியமாதவனுமஃதேயாகெனப்புகன்றிட்டாரால். (கஉக)

பரத்துவாசன் ஓமத்தீயில் சுவர்க்கத்தினை யழைப்பித்தல்.

அருந்தவனையினின்றேடனிகவெஞ்சேனைக்கெல்லாம்
விருந்தினிதமைப்பெனென்றவிளங்குமுத்தீயிடைப்பண்
புரிந்தொராருதியையீந்துபுறப்படுமளவிற்போகம்
திருந்தியவானநாடுசேரவந்திறுத்ததன்றே. (உ00)

அரைசரேயாதியாகவடியவரந்தமாகக்
கரைசெயலரியபோகந்துய்க்குமாகண்டிராமற்
கரைசியல்வழாமைநோக்கியறுசுவையமைக்கும்வேலை
விரைசெறிகமலக்கண்ணனநுமனைவிளித்துச்சொன்றான். (உ0க)

வேறு.

அனுமனையோத்திக் கனுப்புதல்.

இன்றுநம்பதிவருதுமுன்மாருதியீண்டச்
சென்றுதிதின்மைசெப்பியத்தியவித்திலையோன்
றின்றநீர்மையுநினைவுநீதேர்ந்தெதம்மினேர்தல்
நன்றெனவவன்மோதிரங்கைக்கொடுநடந்தான். (உ0உ)

அனுமன் குகனுக்குமிராமன் வரவுணர்த்திச் செல்லுதல்.

தந்தைதேவகமுந்தனதுநாயகன்றனிச்சிலையின்
மூந்துசாயகக்கடுமையும்பிற்படமுடுகிச்
சிந்தைபின்வரச்செல்பவன்குகற்குமச்சேயோன்
வந்தவாசகங்கூறிமேல்வான்வழிபோனான். (உ0ங)

வேறு.

இன்றிசைக்கிடமாயவிராகவன்
தென்றிசைக்கருமச்செயல்செப்பிலும்
அன்றிசைக்குமரியவயோத்தியின்
நின்றிசைத்துளதன்மைநிகழ்த்துவாம். (உ0சு)

நந்திக்கிராமத்துற்ற பரதன் திறம்.

நந்தியின்பதியின்றலைநாடொறும்
சந்தியின்றிநிரந்தரந்தம்முளூர்
பந்தியங்கழற்பாதமருச்சியா
இந்தியங்களைவென்றிருந்தானரோ. (உ0நு)

துன்புறுக்கவுஞ்சுற்றியுருக்கொணை
என்புருக்குந்தகைமையதிட்டதாய்
முன்புருக்கொண்டொருவழிமுற்றுரு
அன்புருக்கொண்டதாமெனலாகுவான். (உ0சு)

நினைக்கவுந்தடங்கண்ணினீர்வர
இனத்ததண்டலைநாட்டிருந்தேயுமக்
கனத்தகந்தழுங்காயுங்கணிகளும்
வனத்தவல்லவருந்தலில்வாழ்க்கையான். (உ0எ)

நோக்கிற்றென்றிசையல்லதுநோக்குறான்
ஏக்குற்றேறக்குற்றிரவிகுலத்துளான்
வாக்கிற்பொய்யான்வருவருமென்றுயிர்
போக்கிப்போக்கியுழக்கும்பொருமலான். (உ0அ)

உண்ணுநீர்க்குழுயிர்க்குழுயிரவன்
எண்ணுங்கீர்த்தியிராமன்றிருமுடி
மண்ணுநீர்க்குவரம்புகண்டாலன்றிக்
கண்ணினீர்க்கொர்கரையெங்குங்காண்கிலான். (உ0கூ)

அனையனையபரதனலங்கலிற்
புனையுந்தம்முளூர்பாதுகைப்பூசனை
நினையுங்காலநினைத்தனுமோரா
மனையின்வந்தவனெய்தமதித்தநாள். (உகo)

சோதிடர் இன்றிராமன் வரவேண்டுநாளெனல்.

யாண்டுவந்திங்கிறக்குமென்றெண்ணினான்
மாண்டசோதிடவாய்மைப்புலவரை
ஈண்டுகூய்த்தருகென்னவந்தெய்தினர்
ஆண்டகைக்கின்றறுதியென்றூரரோ. (உகக)

என்றபோதத்திராமன்வனத்திடைச்
சென்றபோதத்ததவ்வுரைசெல்வத்தை
வென்றபோதத்தவீரனும்வீழ்ந்தனன்
கொன்றபோதத்துயிர்ப்புக்குறைந்துளான். (உகஉ)

பரதன் மயங்கித் தெளிதல்.

மீட்டெழுந்துவிரிந்தசெந்தாமரைக்
காட்டைவென்றெழுகண்கலுழிப்புனல்
ஓட்டவுள்ளவுயிரினையூசனின்
றூட்டவும்மவலத்தழிந்தானரோ. (உகங)

இராமன் வராமையைக்குறித்துப் பரதன் பலவாறு கருதுதல்.

எனக்கியம்பியநாளுமெனின்னலும்
தனைப்பயந்தவணையமுந்தாங்கியவ்
வனத்துவைகல்செய்யான்வந்துடித்ததோர்
வினைக்கொடும்பகையுண்டெனவிம்மிலன். (உகச)

மூவகைத்திருமூர்த்தியாராயினும்
பூவகத்தில்விசும்பிற்புறத்தினில்
ஏவர்நிற்பரெதிர்நிற்கவென்னுடைச்
சேவகற்கெனவையமுந்தேறிலன். (உகரு)

என்னையின்னுமரசியலிச்சையான்
அன்னதெனவனதுகொள்கவென்
றுன்னிலென்கொலுறுவதுநோக்கிலன்
இன்னதேதலவனென்றிருந்தானரோ. (உகசு)

அனைத்திலங்கொன்றுமாயினுமாகுக
வனத்திருக்கவிவ்வையம்புகுதுக
நினைத்துருந்துதுயரமுழக்கிலேன்
மனத்துமாசென்னுயிரொடும்வாங்குவேன். (உகள)

பரதன் சத்துருக்கனை அழைப்பித்தல்.

என்னப்பன்னியிளவலையென்னுழைத்
தன்னச்சொல்லுதிரென்றலுந்தாதர்போய்
உன்னைக்கூயினலும்முனைமுனம்
முன்னர்ச்சென்றனன்மூவர்க்கும்பின்னுளான். (உகஅ)

தொழுதுநின்றதன்றம்பியைத்தேய்கணீர்
எழுதுமார்பத்திறுகத்தழுவிலன்
அழுதுவேண்டுவதுண்டையவவ்வரம்
பழுதிலாமையிலற்றரற்பாற்றென்றலன். (உகக)

சத்துருக்கனை நீயரசளெதியெனப் பரதன்கூறுதல்.

என்னதாகுங்கொலவ்வரமென்றியேல்
சொன்னநாளிலிராகவன்சேர்ந்திலன்

மின்னுதியிடையானினிவீடுவென்
மன்னனுதியென்சொல்லுமறுதென்றான். (உஉ0)

அதுகேட்ட சத்துருக்கன் நடுங்குதல்.

கேட்டதான்றல்கிளர்தடக்கைகளால்
தோட்டதன்செவிபொத்தித்துணுக்குறூ
ஊட்டுநஞ்சமுண்டாலெனத்துயங்கினான்
நாட்டமும்மனமுந்நடுங்காநின்றான். (உஉக)

விழுந்துமேக்குயர்விம்மலன்வெய்துயிர்த்
தெழுந்துநானுனக்கென்னபிழைத்துள
தழுந்துதுன்பத்திலையெனச்சாற்றினான்
கொழுந்துவிட்டுநிமிர்கின்றகோபத்தான். (உஉஉ)

வேறு.

சத்துருக்கன் பதிலுரைத்தல்.

காளைநிலமகளைக்கைவிட்டுப்போவானைக்காத்துப்பின்பு
போனானுமொருதம்பிபோனவர்கள்வருமவதிபோயிற்றென்னை
ஆனதவுயிர்விடவென்றமைவானுமொருதம்பியயலேநாணை
தீயாளுமிவ்வாசாள்வெனனென்னேயிவ்வாசாட்சியினிதேயம்மா. (உஉங)

மன்னிற்பின்வளநகரம்புக்கிருந்துவாழ்ந்தானேபரதனென்னும்
சொன்னிற்குமென்றஞ்சிப்புறத்திருந்துமருந்தவமேதாடங்கினையே
என்னிற்பின்னிவனுளனுமென்றேறபின்னடமையுனக்கிருந்தேதனும் [ன்.
உன்னிற்பின்னிருந்ததுவு மொருகுடைக்கீழிருப்பதுவு மொக்குமென்று

முத்துருக்கொண்டமைத்தனைய முழுவெள்ளிக்கொழுநிறத்து முளரிச்செங்கட், சத்துருக்கனஃதுரைப்பவவனிங்குத்தாழ்க்கின்றதன்மையானிங், கொத்திருக்கலாலன்றேறியுலந்தாற்பினிவ்வுலகையுலயவொட்டான் அத்திருக்குங்கெடுமுடனே புகுந்தாளுமரசெரிபோ யமைக்கவென்றான்.

கோசலையெய்திப் பரதனைத்தடுத்தல்.

அப்பொழுதினிவ்வுரைசென்றயோத்தியினினைசத்தலுமேயரியை யின்ற, ஒப்பெழுதவொண்ணுத கற்புடையாள்வயிறுபுடைத் தலமந்தேங் கி, இப்பொழுதேதயுலகிறக்கும் யாக்கையினைமுடித்தொழிந்தான் மகனே யென்ன, வெப்பெழுதிலையென்னமெலிவுடையாள்கடிதோடி விலக்கவந் தாள். (உஉசு)

மந்திரியர்தந்திரியர்வளநகரத்தவர்மறையோர்மற்றுஞ்சுற்றச்
சுந்தரியரெனைப்பலருங்கைதலையிற்பெய்திரங்கித்தொடர்ந்துசெல்ல
இந்திரனேமுதலாயவிமையவருமுனிவரருமிறஞ்சியேத்த
அந்தரமங்கையர்வணங்கவழுதாற்றிப்பரதனைவந்தடைந்தாளன்றே. ()

எரியமைக்குமயானத்தை யெய்துகின்றகாதலனை யிடையேயவந்து,
விரியமைத்தநெடுவேணிபுறத்தசைந்துவீழ்ந்தொசியமேனிதள்ளச், சொ
ரியமைப்பதரிதாய மழைக்கண்ணுடொடருதலுந்துணுக்கமெய்தாப், பரி
வமைந்ததிருமனத்தானடிதொழுதானவள்புகுந்துபற்றிக்கொண்டாள்.()

வேறு.

மன்னிழைத்ததுமைந்தனிழைத்ததும்
முன்னிழைத்தவிதியின்முயற்சியால்
பின்னிழைத்ததுமெண்ணிலப்பெற்றியால்
என்னிழைத்தனையென்மகனேயென்றுள். (உஉக)

நீயிதண்ணினேயெனெடுநாவெடாரி
பாயுமன்னருஞ்சேனையும்பாயுமால்
தாயரெம்மளவன்றுதனியறம்
தியின்வீழுமுலகுந்திரியுமால். (உஉ0)

தருமநீதியின்றற்பயனுவதுன்
கருமமேமயன்றிக்கண்டிலங்கண்களால்
அருமையொன்றுமுணர்ந்திலையையனின்
பெருமையூழிதிரியினும்பேருமோ. (உஉக)

எண்ணில்கோடியிராமர்களென்னினும்
அண்ணனின்னருளுக்கருகாவரோ
புண்ணியம்மெனுனின்னுயிர்போயினுல்
மண்ணும்வானுமுயிர்களும்வாழுமோ. (உஉஉ)

இன்றுவந்திலனேயெனினுளேயே
ஒன்றும்வந்துனையுன்னியுரைத்தசால்
பின்றுமென்றுணரேற்பிழைத்தானெனின்
பொன்றுந்தன்மைபுகுந்ததுபோயென்றுள். (உஉ.ங)

ஒருவன்மாண்டனனென்றுகொண்டீழிவாழ்
பெருநிலத்துப்பெறலருமின்னுயிர்க்
கருவுமாண்டறக்காணுதியோகலத்
தருமநீயலதில்லெனுந்தன்மையாய். (உஉச)

இறக்கையுஞ்சிலரேகலுமோகத்தால்
பிறக்கையுங்கடனென்றுபின்பாசத்தை
மறக்கைகாண்மகனேவலியாவது
துறக்கைதானுமென்றுண்மனந்தாய்மையாள். (உஉஞ)

மைந்தனென்னைமறுத்துரைத்தானெனல்
எந்தைமெய்ம்மையுமிக்குலச்செய்கையும்

நைந்துபோகவுயிர்நிலைநச்சிலே லன்
முந்துசெய்தசபதமுடிப்பலை. (உகூ)

பரதன் கோசலாதேவிக்குப் பதிலுரைத்தல்.

யானுமெய்யினுக்கின்னுயிரீந்துபோய்
வானுளெய்தியமன்னவன்மைந்தனுல்
கானுளெய்தியகாகுத்தற்கேகடன்
ஏனையோர்க்கிதிழுக்கில்வழக்கன்ரூ. (உகூ)

தாய்சொற்கேட்டலுந்தந்தைசொற்கேட்டலும்
பாசத்தன்பினைப்பற்றறநீக்கலும்
ஈசற்கேகடன்யானஃதிழைக்கிலென்
மாசற்றேறனிதுகாட்டுவென்மாண்டென்ரூன். (உகஅ)

பரதன் தீயில்விழ முந்துதலும் அனுமானெய்தித்தடுத்தலும்.

என்றுதீயினையெய்தியிரைத்தெழுந்
தொன்றுபூசலிடுமுலகோருடன்
நின்றுபூசனைசெய்கின்றதேசற்குக்
குன்றுபோனெடுமாருதிகூடினன். (உகக)

அனுமன் கையாலெரியை யவித்தல்.

அய்யன்வந்தனனரியன்வந்தனன்
மெய்யின்மெய்யனெனின்னுயிர்வீடினல்
உய்யுமேயவனென்றுரைத்துட்புகாக்
கய்யினுலெரியைக்கரியாக்கினன். (உ0)

ஆக்கிமற்றவனுய்மலர்த்தாள்களோத்
தாக்கத்தன்றலைதாழ்த்துவணங்கிக்கை
வாக்கிற்கூடப்புனைதத்தெதாருமாற்றஞ்
சூக்கிக்கொள்ளத்தகுமெனச்சொல்வினன். (உக)

இராமன் வருதற்கின்னம் நாழிகைநாற்பதுளதெனல்.

இன்னநாழிகையெண்ணைந்துளதைய
உன்னைமுன்னும்வந்தெய்தவுரைத்தநாள்
அன்னதில்லையெனினடிநாயினேன்
முன்னம்வீழ்ந்திவ்வெரியின்முடிவெனல். (உஅ)

ஒன்றுதானுளதுன்னடியேன்சொலால்
நின்றுதாழ்ந்துளநேமிச்சுடர்குணக்
குன்றுதோன்றளவும்மிதுகுன்றுமேல்
பொன்றுநீயுமுலகமும்பொய்யிலாய். (உக)

நநo உயுத்தகாண்டடம்

இராமன் பரத்துவாசாச்சிரமத்தி லிருக்கின்றனென வனுமனுரைத்தல்.

எங்கணையகற்கின்னமுதீகுவான்
பங்கயத்துப்பரத்துவன்வேண்டலால்
அங்குவைகினனல்லதுதாழ்க்குமோ
இங்கணல்லதென்றின்னமுங்கேட்டியால். (உசச)

அண்டர்நாதனருளியளித்துள
துண்டொர்பேரடையாளமுனக்கது
கொண்டுவந்தனன்கோதற்றசிந்தையாய்
கண்டுகொண்டருள்வாயெனக்காட்டினன். (உசந)

வேறு.

அனுமனிராமன் கணையாழியையளித்தல்.

காட்டியமோதிரங்கண்ணிற்கண்டலும்
ஊட்டியவுவல்விடமுற்றுமுற்றுவார்க்
கூட்டியகன்மருந்தொத்ததாமரோ
ஈட்டியவுலகுக்குமிளையவேந்தற்கும். (உசக)

அழுகின்றவாயெலாமார்த்தெழுந்தன
விழுகின்றகண்ணெனலாம்வெள்ளமாறிமுன்
உழுகின்றதலையெலாமுயர்ந்தெழுந்தன
தொழுகின்றகையவாய்க்காலின்றன்றலை. (உசள)

ஆழிகண்டவனைவரு மகிழ்வுறல்.

மோதிரம்வாங்கித்தன்முகத்தின்மலரணைத்
தாதரம்பெறுவதற்காக்கையோவென
ஓதினர்நாணுறவோங்கினன்றெழும்
தாதனைமுறைமுறைதொழுதுள்ளுவான். (உசஅ)

ஆதிவெந்துயரலாலருந்தலின்மையால்
ஊதுறப்பறப்பதாயுலர்ந்தயாக்கைபோய்
எதிலெனுருவன்கொலென்னலாயது
மாதிரம்வளர்ந்தனவயிரத்தோள்களே. (உசக)

அழுநகுமநுமனையாழிக்கைகளால்
தொழுமெழுந்துள்ளுவெங்களிதுளக்கலால்
விழுமழிந்தேதங்கும்போய்வீங்கும்வேர்க்குமக்
குழுவொடுங்குனிக்குந்தன்றடக்கைகொட்டுமால். (உஙo)

ஆடுமினாடுமினென்னுமையன்பால்
ஓடுமினோடுமினென்னுமோங்கிசை

பாடுமின்பாடுமினென்னும்பாவிகாள்
சூடுமின்சூடுமின்றாதன்சேவ்வளனும். (உருக)

வஞ்சனையியற்றியமாயக்கைகையார்
துஞ்சுவரினீயெனத்தோளைக்கொட்டுமால்
குஞ்சிதவடிகண்மண்டிலத்திற்கூட்டுற
அஞ்சனக்குன்றுநின்சூடும்பாடுமால். (உருஉ)

வேதியர்தமைத்தொழும்வேந்தரைத்தொழும்
தாதியர்தமைத்தொழுந்தன்னைத்தான்வ்வழும்
எதுமொன்றுணர்குரூதிருக்குநிற்குமால்
காதலென்றதுவுமோர்கள்ளிற்சேற்றிற்சேரு. (உருஊ)

அனுமனைப்பரதன் நின் வரலாறறிய விரும்புகின்றனைனல்.

அத்திறத்தாண்டகையநுமன்றன்னைநீ
எத்திறத்தாயெமக்கியம்பியீதியால்
முத்திறத்தவருளையொருவன்மூர்த்திவே
றெத்திருந்தாயெனவுணர்கின்றனென்சுரன். (உருசு)

மறையவர்வடிவுகொண்டணுகவந்தனை
இறைவரிவ்வருவனென்றுணர்ந்துகின்றனென்
துறையெனக்கியாதெனச்சொல்லுசொல்லென்சுரன்
அறைகழலநுமனுமறியக்கூறுவான். (உருஎ)

அனுமன் தன்வரலாறு கூறுதல்.

காற்றினுக்கயல்வந்தகவிக்குலத்துளான்
நோற்றனள்வயிற்றின்வந்துதித்துநும்முறற்
கேற்றிலாவடித்தொழிலேவலாளனென்
மாற்றினனுருவெவாருகுரங்குமன்னயான். (உருகூ)

அனுமன் சுயவுருவம் கோடல்.

அடித்தொழினையினனற்பயாக்கையைக்
கடித்தடந்தாமரைக்கண்ணிணைக்கெனப்
பிடித்தபொய்யுருவினைப்பெயர்த்துநீக்கினன்
முடித்தலம்வானவர்நோக்கின்முன்னுவான். (உருஎ)

வெஞ்சிலையிருவரும்விரிஞ்சன்மைந்தனும்
எஞ்சலிலதிசயமிதுவென்றெண்ணினர்
துஞ்சிலதாயினுஞ்சேனைதுண்ணெனை
அஞ்சினதஞ்சனைசிறுவனைக்கையால். (உருஅ)

பரதன் அனுமனை உருவஞ்சுருக்க வேண்டுதல்.

ஈங்குநின் றியாமுனைக்கிசைத்தமாற் றமத்
தூங்கிருங்குண்டலச்செவியின்சூழ்வர
ஓங்கலவாதலினுலப்பில்யாக்கையை
வாங்குதிவிரைந்தெனமன்னன்வேண்டினன். (உருக)

அனுமனுக்குப் பரதன் சன்மானமளித்தல்.

சுருக்கியவுருவனைத்தொழுதுமுன்னின்ற
அருக்கன்மாணவகனுக்கையனன்பிலல்
பொருக்கெனநிதியமும்புனைபொற்பூண்களின்
வருக்கமும்வரம்பிலநனிவழங்கினன். (உசுO)

கோவொடுதூசுநற்குலமணிக்குலம்
மாவொடுபரிக்குலம்வாவுதேரினம்
தாவுநீருடுத்தநற்றரணிதன்னுடன்
ஏவருஞ்சிலைவலான்யாவுநல்கினன். (உசுக)

பரதன் சத்துருக்கனை நகரலங்காரச் செய்யத்திட்டஞ் செய்தல்.

இளவலையண்ணலுக்கெதிர்கொளென்றுநம்
வளமதிலயோத்தியில்வாழுமாக்களைக்
கிளையொடுமேகெனக்கிளத்தியெங்களும்
அளையொலிமுரசினமறைவிப்பாயென்றனன். (உசுஉ)

தோரணநட்டுமேற்றுகில்பொதிந்துநற்
பூரணப்பொற்குடம்பொலியவைத்துநீள்
வாரணமிவுளிதேர்வரிசைதான்வழாச்
சீரணியணிகெனச்செப்புவாயென்றனன். (உசுங)

பரத்துவனுறைவிடத்தளவும்பைம்பொனீள்
சிரத்தொகைமதிற்புறத்திறுதிசேர்தர
வரத்தகுதரளமென்பந்தர்வைத்துவான்
புரத்தையும்புதுக்குவபுகறிபோயென்றனன். (உசுச)

என்றலுமவனடியிறைஞ்சியெய்தியக்
குன்றுறழ்வரிசிலைக்குவவுத்தோளினன்
நன்றுணர்கேள்வியனவையில்செய்கையன்
தன்றுணைச்சுமந்திரற்கறியச்சாற்றினன். (உசுஞ)

அவ்வுரைகேட்டலுமறிவின்வேலையான்
கவ்வையிலன்பினிற்களிக்குஞ்சிந்தையான்
வெவ்வெயிலெறிமணிவீதியெங்களும்
எவ்வமின்றறைபறையெற்றுகென்றிட. (உசுசு)

இராமனை எதிரேற்க வனைவரும்வருதிரென முரசறைதல்.

வானையுந்திசையையுங்கடந்தவான்புகழ்க்
கோனையின்றெதிர்கொள்வான்கோலமாநகர்த்
தானையுமரசருமெழுகதானென
யானையின்வள்ளுவன்முரசமெற்றினான். (உசுள)

மூரைசொலிகேட்டலுமுழங்குமாநகர்
அரைசருமாந்தருமந்தணாளரும்
கரைசெயலரியதோருவகைகைதரத்
திரைசெறிகடலெனவெழுந்துசென்றதால். (உசுஅ)

அனகனையெதிர்கொளன்றறைந்தபோரிநற்
கனகநல்கூர்ந்தவன்கைப்பட்டென்னவும்
சனகனதூர்க்கென முன்னஞ்சாற்றிய
வனைகடிப்பேரியுமொத்தவாமரோ. (உசுக)

அறுபதினாயிரமக்குரோணியென்
றிறுதிசெய்சேனையுமேனைவேந்தரும்
செறிநகர்மாந்தருந்தெரிவைமார்களும்
உறுபொருளெதிர்ந்தெனவுவந்துபோயினர். (உஎ0)

அன்னையர்மூவருமமரர்போற்றிடப்
பொன்னினற்சிவிகையினெழுந்துபோயபின்
தந்நிகர்முனிவருந்தமருஞ்சூழ்தர
மன்னவன்மாருதிமலர்க்கைபற்றுரு. (உஎக)

திருவடியிரண்டுமேசெம்பொன்மௌலியா
இருபுறஞ்சாமரையிரட்டவேழ்கடல்
வெருவருமுழக்கெனவேழமார்த்தெழப்
பொருவருவெண்குடைநிழற்றப்போயினான். (உஎஉ)

சூரியாத்தமனம்.

எல்லவன்மறைந்தனனென்னையாருடை
வில்லியையெதிர்கொளப்பரதன்மீச்செல்வான்
அல்லியங்கமலமேமயனையதாள்களில்
கல்லதர்சுடுந்தனகதிரினென்னவே. (உஎங)

பரதன் அனுமனை இராமனிருப்பிட மாதியகேட்டல்.

அவ்வழிமாருதியங்கைபற்றிய
செவ்வழியுள்ளத்தான்றிருவிளையகன்
எவ்வழியுறைந்ததச்செயலெலாம்விரித்
திவ்வழியெமக்குரீயியம்புவாயென்றான். (உஎச)

அனுமன் இராமன்றிறமுரைத்தல்.

என்றலுமாருதிதொழுதிங்கெம்பிரான்
மன்றலர்தொடையினையயோத்திமாநகர்
நின்றதுமணைவினைநிரப்பிமீண்டுதான்
சென்றதுநாயினேன்செப்பல்வேண்டுமோ. (உஎந)

சித்திரகூடத்தைதத்தீர்ந்தபின்சிரம்
பத்துடையவனுடன்விளைந்தபண்புந்தான்
இத்தலையடைந்ததுமிறுதியாமென
வித்தகத்தாதனும்விரிக்குஞ்சிந்தையான். (உஎசு)

குன்றுறழ்வரிசிலைக்குரிசிலெம்பிரான்
தென்றிசைச்சித்திரகூடந்தீர்ந்தபின்
வன்றிறல்விராதனைமடித்துமாதவர்
துன்றியதண்டகவனத்துட்நின்னிலன். (உஎள)

ஆங்குறைதபோதனரரக்கர்க்காற்றலே
நீங்கினந்தவத்துறைறீதியோயெனத்
தீங்குசெய்தவர்களைச்செகுத்தறிண்ணைநீர்
வாங்குமின்மனத்துயர்வாய்மையாலென்றனன். (உஎஅ)

ஆறுநாலாண்டவண்வைகியப்புறத்
தீறிலாமுனிவரரேயவாணையால்
மாறிலாத்தமிழ்முனிவனத்தைதண்ணினிலன்
ஊறிலாமுனிவரனுவந்துமுன்வர. (உஎக)

குடங்கையில்வாரிதியனைத்துங்கொண்டவன்
தடங்கணென்றனையெதிர்தழுவிச்சாபமும்
கடுங்கணைப்புட்டிலுங்கவசந்தானுமற்
றிடம்படுசுரிகையுஞ்சேரவீந்தனன். (உஅ)

அப்புறத்தெருவையினரசைக்கண்ணுறுத்
துப்புறச்சிவந்தவாய்த்தோகைதன்னுடன்
மெய்ப்புகழ்த்தம்பியும்வீரன்றனும்போய்
மைப்பொழிறுறுபஞ்சவடியின்வைகினன். (உஅக)

வேறு.

பல்பகலிறந்தபின்றைறப்பாதகவரக்கிதான்றி
மெல்லியவிடையிளைவெகுண்டுழியிளையவீரன்
அல்கியதிருவைத்தேற்றியவளுடைச்செவியுமூக்கும்
மல்கியமுலையுங்கொய்தான்மறித்திவள்கரற்குச்சொன்னள். (உஅஉ)

கரவெறுதிரிசிராவுங்கரியதூடணனுங்காந்தி
எரியுமூன்றணலேலியொப்பாரெழுந்துவெஞ்சேனையோடும்
விரவினரையன்செங்கைவில்லினேநாக்குமுன்போர்
எரிதழற்பஞ்சியொத்தாராக்கியுமிலங்கைபுக்காள். (உஅஉ)

இருபதுதடக்கையான்மாட்டிசைத்தலுமெழுந்துபொங்கி
ஒருபதுதிசையுமுட்கவஞ்சகவுழையொன்றேறவித்
தருபதஞ்சமைந்தமுக்கோற்றூபதர்வடிவங்கொள்ளாத்
திருவினைநிலத்தேதாடேந்தித்தென்றிசையிலங்கைபுக்கான். (உஅசு)

போகின்றகாலையேற்றசடாயுவைப்பொருதுவீட்டி
வேகின்றவுள்ளத்தாளைவெஞ்சிறையதனின்வைத்தான்
ஏகின்றவஞ்சமான்மாரீசற்கொன்றிளவலோடு
பாகின்றகீர்த்தியண்ணறந்தையைப்பரிவிற்கண்டான். (உஅஞ)

அன்னவன்றனக்குவேண்டுமருங்கடன்முறையினூற்றி
நன்னுதறன்னைத்தேடித்தென்றிசைநடக்குமையன்
மன்னியகவந்தன்றன்னையுயிரொடுசாபமாற்றித்
தன்னையேமறப்பிலாதசவரிபூசனையுங்கொண்டான். (உஅசு)

ஆங்கவடனதுசொல்லாலருக்கன்மாமகனையெய்திப்
பாங்குறநட்டுவாலிபருவரல்கெடுப்பேனென்னு
ஓங்கியமராமும்வாலியுராமுமூடுருவவெய்திட்
டாங்கவன்றனக்குச்செல்வமரசொடுமருளினீந்தான். (உஅஎ)

காலமாமாரிநீங்கக்கயவேழுடிடவன்காந்து
நீலன்மாமயிந்தன்சாம்பன்சதவலிபசனீடும்
வாலிமாமைந்தனென்றிவ்வானரத்தலைவராய
சூலவான்சேனைசூழவடைந்தனனங்கள்கோமான். (உஅஅ)

எழுபதுவெள்ளத்துற்றகுரங்கினமெழுந்துபொங்கி
அழுவநீர்வேலையென்னவடைந்துழியருக்கன்மைந்தன்
தழுவியதிசைகடோறந்தனித்தனியிரண்டுவெள்ளம்
பொழுதிறைதடாதுமீளப்போக்கினன்றிருவைநாடி. (உஅக)

தென்றிசையிரண்டுவெள்ளஞ்சேனையும்வாலிசேயும்
வன்றிறற்சாம்பனேழுவாவினரேவநாயேன்
குன்றிடையிலங்கைபுக்குத்திருவினைக்குறித்துமீண்ட
பின்றைவந்தளக்கர்வேலைபெரும்படையிறுத்ததன்றே. (உகo)

அறிவினுக்கறிவுபோல்வான்வீடணனலங்கற்சூளான்
செறிபுயத்தரக்கன்றம்பிதிருவினைவிடுதியன்றேல்

இறுதியுற்றனைன்வாழ்நாளெனவவனுரைப்பச்சீறிக்
கறுவுறப்பெயர்ந்துபோந்துகருணையான்சரணம்பூண்டான். (உகக)

ஆங்கவற்கவயநல்கியாசொடுமுடியுமீந்து
பாங்கினல்வருணன்றன்னையழைத்திடப்பரிவிலாமை
தாங்கினன்சிறிதுபோதுதாமரைநயனஞ்சேப்ப
ஓங்கிநீரேழுமன்னனுடலமும்வெந்தவன்றே. (உகஉ)

மற்றவனவயமென்னமலர்ச்சரணடைந்தவேலை
வெற்றிவானரர்கள்பொங்கிவெற்பினல்வேலதட்டல்
முற்றுறநன்கியற்றிமொய்யொளியிலங்கைபுக்குப்
பற்றினர்சுற்றியார்த்தார்வானவர்பயங்கடீர்ந்தார். (உகஙட)

மலையினையெடுத்ததோளுமதமலதிளத்தமார்பும்
தலையொருபத்துஞ்சிந்தித்தம்பிதன்றூளுந்தாளும்
கொலைதொழிலரக்கராயோர்குலத்தொடுந்தலத்துவீழச்
சிலையினவளைவித்தையதேதவர்களிடுக்கண்டீர்த்தான். (உகச)

இலக்குவன்பகழியொன்றூலிந்திரசித்தென்றூதும்
விலக்கருவலத்தினுயிரைநருங்கியுயும்வீழ்ந்தார்
அலக்கணுண்டுழலுந்தேவரலர்மழைதூவியார்த்தன்
றுலக்குநர்குழுக்கடோறுமுடற்குறையாடல்கண்டார். (உகஞ)

தேவருமுனிவர்தாமுஞ்சித்தருந்தெரிவைமாரும்
மூவகையுலகுளோருந்தனித்தனிப்புகழ்ந்துமொய்ப்பப்
பூவைபோனிறத்தினுனும்வீடணப்புலவர்கோமாற்
கியாவையுமியம்பிமாண்டோர்க்கியற்றுதிகடன்களென்றான். (உகசு)

நான்முகன்விடையையூருநாரியோர்பாகத்தண்ணல்
மான்முகன்முதலாயுள்ளவானவர்தொழுதுபோற்ற
ஊன்முகங்கெழுவுவேலாயும்பர்நாயகியைச்சீறித்
தேன்முகமலருந்தாரானரிசொலச்சீற்றந்தீர்ந்தான். (உகஎ)

மெய்யினுக்குயிரையீந்தவேந்தர்கோன்விமானத்தெய்த
அய்யனுமிளையகோவுமன்னமுமடியில்வீழக்
கய்யினற்பொருந்தப்புல்விக்கண்ணினீர்க்கலசமாட்டிச்
செய்வரமருளுகென்றூன்றிருவிளையகனுங்கொண்டான். (உகஅ)

என்னைநன்கருணைதன்னலீன்றெடுத்தினிதுபேணும்
அன்னையுமகனுமுன்போலாகெனவருளினீந்து
மன்னவன்போயபின்னைறவானரம்வாழ்வுகூரப்
பொன்னெடுநாட்டிலுள்ளார்வரம்பலவழங்கிப்போனார். (உகக)

வெள்ளமோரேழுபத்துவிலங்கரும்வீராகி
உள்ளவரறுபத்தேழுகோடியுமொற்றையாழி
வள்ளறன்மகனுமுள்ளமகிழ்வுறவிமானமீந்தான்
எள்ளலிலாதகீர்த்திவீடணனிலங்கைவேந்தன். (கூ00)

ஆரியன்பின்னைநின்னையன்பிலனினைந்துகாதற்
சூரியன்மகனுந்தொல்லூத்துணைவருமிலங்கைவேந்தும்
பேரியற்படையுஞ்சூழப்பெண்ணினுக்கரசியோடும்
சீரியவிமானத்தேதறிப்பரத்துவணிருக்கைசேர்ந்தான். (கூ0க)

அன்பிலனென்னைநின்பாலாழியுங்காட்டியான்ற
துன்பெலாந்துடைத்தியென்றேறதுரந்தனன்றேரூன்றலென்று
முன்பிலுலியன்றவெல்லாமொழிந்தனன்முதுநீர்தாவி
அன்பிலுலிலங்கைமுற்றுமொரிக்குணவாகவைத்தேதான். (கூ0உ)

அனுமனுலிராமசரிதமுணர்ந்த பரதன்வருந்தி நிற்றல்.

காலின்மாமதலைசொல்லப்பரதனுங்கண்ணீர்சோர
வேலிமாமதில்கள்சூழுமிலங்கையில்வேட்டங்கொண்ட
நீலமாமுகில்பின்போனெருவனினின்றுநைகேவன்
போலுமாலினைவகள்கேட்டேன்புகழுடைத்திடமைமன்னே. (கூ0ங)

பரதன் கங்கைக்கரை யடைதல்.

என்றவனிரங்கியேங்கியிருகணுமருவிசோர
வன்றிறலநுமன்செங்கைவலக்கையாற்பற்றிக்காலின்
சென்றனனிருளினூடுசெறிபுனற்கங்கைசேர்ந்தான்
குன்றினைவலஞ்செய்தேதேரான்குணகடற்றேரூன்றுமுன்னர். (கூ0ச)

சூரியனுதித்தல்.

இராவணன்வேட்டம்போய்மீண்டெம்பிரானையோத்தியெய்தித்
தராதலமகளும்பூவிற்றையலுமகிழச்சூடும்
அராவுபொன்மௌலிக்கேய்ந்தசிகாமணிகுணபாலண்ணல்
விராவுறவெதித்தாலென்னவெய்யவனுதயஞ்செய்தான். (கூ0ஞ)

காலைவந்திறுத்தபின்னர்க்கடன்முறைகமலக்கண்ணன்
கூலநீள்கழல்களேத்திக்குரக்கினத்தரசைநோக்கிச்
சாலவுங்கலைகள்வல்லோய்தவறுண்டுபோலும்வாய்மை
மூலமேயுணரினுன்றன்மொழிக்கெதிர்மொழியுமுண்டோ. (கூ0சு)

பரதன் சந்தேகத்தாலனுமனை வினுதல்.

எழுபதுவெள்ளஞ்சேனைவானரிலங்கைவேந்தன்
முழுமுதற்சேனைவெள்ளங்கணக்கிலமொய்த்தவென்றூல்
அழுவநீர்வேலைசுற்றுமரவமின்றுகவற்றேறு
விழுமிதம்பிரான்வந்தாவென்றுரைத்ததுவீரவென்றூன். (கூ0எ)

பரதன் இராமனிருப்பிடம் யாண்டெனல்.

ஓசனையிரண்டெண்டன்றேபரத்துவனுறையுஞ்சோலை
வீசுதெண்டிரையிற்ரூயவெள்ளமோரேழுபத்தும்
ழூசியபழுவமிங்ஙன்கிடப்பதாமூரற்றலின்றிப்
பேசியதமையுநங்கோனெங்குளன்பெருமவென்ரூன் (நடுஅ)

அனுமன் சமாதானங்கூறுதல்.

பரதனஃதுரைத்தலோடும்பணிந்துமாருதியுஞ்சீர்சால்
விரதமாதவன்மற்ரூரைவிண்ணவர்தமையும்வேண்டி
வரதணெண்டனிப்பவந்தவரத்திணென்மலருந்தேனும்
சுரதமேமமாந்திமாந்தித்துயின்றதுபோலுந்தானே. (நடுக)

வானவர்கொடுக்கவந்தவரத்திணென்மதுபழூசும்
தேனெகிழுங்குங்காயுங்கனிகளும்பிறவுஞ்சீர்த்துக்
கானகம்பொலிதலாலேகவிக்குலமவற்றைமாந்தி
ஆனனமலர்ந்ததில்லையாகுநீதுயரலெந்தாய். (நடுக0)

இனியொருகணத்தினங்கோனெழுந்தருடன்மையீண்டுப்
பனிவருங்கண்ணினீயேபார்த்தியென்றுரைத்தானிப்பால்
முனிதனதிடத்துவந்தமுளரியங்கண்ணன்வண்ணைக்
குனிசிலக்குரிசில்செய்ததிற்ரெனக்குணிக்கலுற்ரும். (நடுகக)

இராமனிடம் குகன் வருதல்.

அருந்தவன்சுவைகளாரூடமுதினிதளிப்பவையன்
கருந்தடங்கண்ணியோடுங்களைகணைந்துணைவரோடும்
விருந்தினிதருந்திநின்றவேலையின்வேலைபோலும்
பெருந்தடந்தானையோடுங்கிராதர்கோன்பெயர்ந்துவந்தான். (நடுகஉ)

குகன்வணங்கலும் இராமன் தழுவிமகிழுதலும்.

தொழுதனன்மனமுங்கண்ணுந்துளங்கினன்சூழ்வாடி
அழுதனன்கமலமன்னவடித்தலமதனின்வீழ்ந்தான்
தழுவினனெடுத்துமார்பிற்றம்பியைத்தழுவுமாபோல்
வழுவிலாவலியரன்ரூமக்களுமனையுமென்ரூன். (நடுகங)

இராமனுக்குக் குகன்மறுமொழி கூறல்.

அருளுனதுளதுநாயேற்கவரெலாமரியவாய
பொருளலர்ந்தினனீங்காப்புணர்ப்பிறற்ரூடர்ந்துபோந்து
தெருடருமிளையவீரன்செய்வனசெய்கலாதேன்
மருடருமனத்தினேனுக்கினிதன்ரூவாழ்வுமன்ரூ. (நடுகச)

குகனிலக்குமணனையும் சனகியையும் வணங்குதல்.

ஆயனபிறவும்பன்னியழுங்குவான்றன்னையைய
நீயிவையுரைப்பதென்ரூபரதனினீவேறுண்டோ

போயினி திருத்தியென்னப்புளிஞர்கோனிளவல்பொற்றூள்
மேயினன்வணங்கியன்னவிரைமலர்த்தாளின்வீழ்ந்தான். (நகந)

இராமன் சுக்கிரீவாதியர்க்குக் குகனையறிவித்தல்.

தொழுதுநின்றவனேநோக்கித்துணைவர்கடமையுநோக்கி
முழுதுணர்கேள்வியேலோன்மொழிகுவான்முழுநீர்க்கங்கை
தழுவிருகரைக்குநாதன்றூயினுழுயிர்க்குநல்லன்
வழுவிலாவெயினர்வேந்தன்குகனெனும்வள்ளலென்பான். (நகக)

சுக்கிரீவாதியர் குகனைத்தழுவி நண்புகோடல்.

அண்ணலம்துரைத்தலோடுமரிகுலத்தரசனுந்தி
நண்ணியதுணைவர்யாருமினிதுறத்தழுவிநட்டார்
கண்ணகன்ஞாலமெல்லாங்கங்குலாற்பொதிவான்போல
வண்ணமால்வரைக்குமப்பான்மறைந்தனனிரவியென்பான். (நகள)

அலங்கலந்தொடையினுமந்தியின்கடன்களாற்றிப்
பொலங்குழைமயிலிலேதுதுயிலுறப்புணரிபோலும்
இலங்கியசேனைசூழவிளவலுமெயினர்கோனும்
கலங்கலர்காத்துநின்றூர்கதிரவனுதயஞ்செய்தான். (நகஅ)

புட்பகமேறியிராமன் பரத்துவாசாச்சிரமங் கடந்துசெல்லுதல்.

கதிரவனுதயகாலைக்கடன்கழித்திளவலோடும்
அதிர்பொலன்கழலினைவ்வருந்தவன்றன்னையேத்தி
விதிதருவிமானமேவிவிளங்கிழையோடுங்கொற்றம்
முதிர்தருகருணையோடுமுனிமனந்தொடரப்போனான். (நகக)

தாவிவான்படர்ந்தமானந்தடையிலதேதும்வேலைத்
தீவியகன்னியாகிச்செருக்கியகாமச்செவ்வி
ஓவியமுயிர்பெற்றென்னவும்பர்கோனகருமொவ்வா
மாவியலயோத்திசூழுமதிற்புறந்தோன்றிற்றன்றே. (நஉ0)

இராமன் இஃதயோத்தியென வானராதியரெழுந்துவணங்குதல்.

பொன்மதிற்கிடக்கைசூழப்பொலிவுடைநகரந்தோன்ற
நன்மதிக்கிழவர்தம்மைநோக்கியஞானமூர்த்தி
சொன்மதித்தொருவராலுஞ்சொலப்பட்டாவயோத்திதோன்றிற்
றென்னலுங்கரங்கள்கூப்பியெழுந்தனரிறைஞ்சினின்றூர். (நஉக)

வேறு.

அன்னதோரளவையின்விசும்பதாயினும்
துன்னிருங்கதிரவர்தோன்றிஞலெனப்
பொன்னணிபுட்பகப்பொருவின்மானமும்
மன்னவர்க்கரசனுந்தானுந்தோன்றிற்றால். (நஉஉ)

அனுமன் இராமன் வருகையைப் பரதனுக்குக் காண்பித்தல்.

அண்ணலேகாண்டியாலலர்ந்ததாமரைக்
கண்ணனும்வானரக்கடலுங்கற்புடைப்
பெண்ணருங்கலமுநின்பின்புதோன்றிய
வண்ணவீற்குமரனும்வருகின்றார்களால். (நடஉந)

ஏழிரண்டாகியவுலகமேறினும்
பாழ்புறங்கிடக்குறுபடியதாயதோர்
சூழொளிமானத்துத்தோன்றுகின்றனன்
ஊழியோவெனன்றுகொண்டுணர்த்துங்காலையே. (நடஉச)

இராமனைக்கண்ட நகரமாந்தராரவாரித்தல்.

பொன்னெனிமேருவின்பொதும்பிற்புக்கதோர்
மின்னெனிமேகம்போல்வீரன்றோன்றலும்
மன்னெதிர்வருநகர்களார்ப்பிராவணன்
தென்னைகர்க்கப்புறத்தளவுஞ்சென்றதால். (நடஉஙி)

இராமனை பரதன் தரிசித்தல்.

ஊடனுடையாக்கைவிட்டுண்மைமேவண்டிய
வானுடைத்தந்தையார்வரவுகண்டெனைக்
கானிடைப்போகியகமலக்கண்ணனைத்
தானுடையுயிரினைத்தம்பிநோக்கினன். (நடஉசு)

கெட்டவான்பொருள்வந்துகிடைப்பமுன்புதாம்
பட்டவான்படரொழிந்தவரிற்பையுணெய்
சுட்டவான்மானவற்றெறழுதலுன்னியே
விட்டனன்மாருதிகரத்தைதேன்மையான். (நடஉஎ)

அனுமனுகாயத்தி லிராமனை யடைந்து பரதன்றிறமாதியகூறுதல்.

அக்கணத்தநுமனுமவணின்றேறியத்
திக்குறுமானத்தைச்செவ்வனெய்தியச்
சக்கரத்தண்ணலத்தாழ்ந்துமுன்னின்றான்
உக்குறுகண்ணீரொழுகுமார்பினன். (நடஉஅ)

உருப்பவிர்கனலிடையொளிக்கலுற்றவப்
பொருப்பவிர்தோளனைப்பொருந்திநாயினேன்
திருப்பொலிமார்பின்வரவுசெப்பினேன்
இருப்பனவாயனவுலகம்யாவையும். (நடஉக)

இராமனுமனைப்புகழ்ந்து தழுவுதல்.

தீவினையாம்பலசெய்யத்தீர்விலா
வீவிலமுறைறமுறைறவினைவமெய்ம்மையால்

நீயிவை துடைத்துநின் றளிக்க நேர்ந்ததால்
ஆயினுமன் பிலையான் செய்மா தவம். (நுநுO)

என் றுரைத்த நுமனே யிறுகப்புல்லினன்
ஒன் றுரைத்திறுப்பதென் னுனக்குமெந்தைக்கும்
இன் றுணைத்தம்பிக்கும்யார்க்குமென் றனன்
குன்றினைத்தனவுயர்குவவுத்தோளினன். (நுநுக)

ஈடிறுவான் றுணையிராமன் சேவடி
சூடியசென்னியன்றொழுதகையினன்
ஓடியிருண்டெனவுலந்தயாக்கையன்
பாடிறுபெரும்புகழ்ப்பரதன் றோன்றினன். (நுநுஉ)

தோன்றியபரதனைத்தொழுதுதொல்லறச்
சான்றெறனிந்றவனினையதம்பியை
வான்றொடர்பேரரசாண்டமன்னனை
ஈன்றவள்பகைஞனைக்காண்டியீண்டென்றான். (நுநுந)

காட்டினன்மாருதிகண்ணிற்கண்டவத்
தோட்டலர்தெரியலானிலைமைசொல்லுங்கால்
ஓட்டியமானத்துளுயிரிற்றந்தையர்
கூட்டிருக்கண்டன்னதன்மைகூடினன். (நுநுச)

வேறு.

இராமனினவிற் கேற்ப விமானங்கீழிறங்குதல்.

அவ்வையினேயோத்திவைகுஞ்சனமொடுமக்குரோணி
தவ்வலிலாறுபத்தாயிரமொடுந்தாயரோடும்
இவ்வையினடைந்துளோரைக்காண்பெனென்றிராமனுன்னச்
செவ்வையினிலத்தைதவந்துசேர்ந்ததுவிமானந்தானும். (நுநுங)

வேறு.

எவ்வயினுயிர்கட்குமிராமனேறிய
செவ்வியபுட்பகநிலத்தைச்சேர்தலும்
அவ்வவர்க்கணுகியவமார்நாடுய்க்கும்
எவ்வமின்மானமென்றிசைக்கலாயதால். (நுநுசு)

வேறு.

இராமனவரவர் தன்மைக்கேற்ப விளங்கினனெனல்.

தாயருக்கன்றுசார்ந்தகன்றெறனுந்தகையனனுன்
மாயையிற்பிரிந்தோர்க்கெல்லாமலையம்வந்தெதாத்தான்
ஆயிளையர்க்குக்கண்ணுளாடிரும்பாவையாளுன்
நோய்வுறுத்துலந்தயாக்கைக்குயிர்புகுந்தாலுமொத்தான். (நுநுள)

எளிவருமுயிர்கட்கெல்லாமீன்றதாயெதிர்ந்ததொத்தான்
அளிவருமனத்தோர்க்கெல்லாமரும்பதவமுதமாணன்
ஒளிவறப்பிறந்ததொத்தாணுலகினுக்கொண்கணர்க்குத்
தெளிவருகளிப்புச்செய்யுந்தம்பிழித்தேதறலொத்தான். (நிகூஅ)

ஆவியங்கவனலாண்மற்றின்மையாலனையனீங்கக்
காவியங்கழனிநாடுநகரமுங்கவன்றுவாழும்
மாவியலொண்கணருமைந்தரும்வள்ளலெய்த
ஓவியமுயிர்பெற்றுலேயொத்தனருணர்வுபெற்றார். (நிகூக)

சுண்ணமுஞ்சாந்துநெய்யுஞ்சுரிவளமுத்தும்பூவும்
எண்ணெயுங்கலினமாவிலாழியுமெண்ணில்யானை
வண்ணவார்மதமுஞ்நீருமான்மதந்தழுவுமாதர்
கண்ணவாம்புனலுமோடிக்கடலையுங்கடந்தவன்றேற. (நிகூ0)

அண்ணையர் தம்பியருடன் வந்த வசிட்டனை இராமனடிபணிதல்.

அனைவருமனையராகியடைந்துழியருளின்மேவலை
தனையினிதளித்ததாயர்மூவருந்தம்பிமாரும்
புனையுநூன்முனிவன்றனும்பொன்னணிவிமானத்தேதற
வனைகழற்குரிசின்முந்திமாதவன்றாளில்வீழ்ந்தான். (நிகூக)

வசிட்டன் ஆசிகூறுதல்.

எடுத்தனன்முனிவன்மற்றவ்விராமனையாசிகூறி
அடுத்தனதுன்பநீங்கவனைத்தினைத்தன்புகூர்ந்து
விடுத்துழியினையவீரன்வேதியன்றாளில்வீழ
வடுத்தநூன்முனியுமுன்போல்வாழ்த்திணைசிகூறி. (நிகூஉ)

இராமனன்னையடிபணிதலு மன்னைராசி கூறுதலும்.

கய்கயன்றகையைமுந்தக்காலுறப்பணிந்துமற்றை
மொய்குழலிருவர்தாளுமுறைமையின்வணங்குஞ்செங்கண்
அய்யனையவர்கடாழுமன்புறத்தழுவித்தத்தம்
செய்யதாமரைக்கணீரான்மஞ்சனத்தொழிலுஞ்செய்தார். (நிகூகூ)

அன்னமுமுன்னர்ச்சொன்னமுறைமையினடியில்வீழ்ந்தாள்
தன்னிகரிலாதவென்றித்தம்பியுந்தாயர்தங்கள்
பொன்னடித்தலத்தில்வீழத்தாயரும்பொருந்தப்புல்வி
மன்னவற்கிளவனீயேவாழியென்றுசிசொன்னார். (நிகூசு)

அடிபணிந்தபரதனைத் தழுவியிராமன் அவசமுறல்.

சேவடியிரண்டுமன்பினடியுறையாகச்சேர்த்திப்
பூவடிபணிந்துவீழ்ந்தபரதனைப்பொருமிவிம்மி
நாவிடைபெயர்ப்பதொன்றுமுணர்ந்திலனின்றநம்பி
ஆவியுமுடலுமொன்றத்தழுவினனழுதுசோர்வான். (நிகூஞ)

தழுவினனின் றகாலத்தத்திவீழருவிகாலும்
விழுமலர்க்கண்ணீர்மூரிவெள்ளத்தான்முருகிற்செவ்வி
வழுவுறப்பின்னிமூசுமாசுண்டசடையின்மாலை
கழுவினனுச்சிமோந்துகன்றுகாண்கறவையன்னான். (நடசசு)

இலக்குமணன் பரதனை வணங்குதல்.

அனையதொர்காலத்தம்பொற்சடைமுடியடியதாகக்
கனைகழலமர்கோமாற்கட்டவற்படுத்தகாலை
துனைபரிகரிதேரூர்தியென்றிவைபிறவுந்தோலின்
வினையுறுசெருப்புக்கீந்தான்விரைமலர்த்தாளின்வீழ்ந்தான். (நடசள)

ஊடுறுகமலக்கண்ணீர்திசைதொறுஞ்சிவிறியோடத்
தாடொடுதடக்கையாடத்தழுவினன்றனிமைநீங்கிக்
காடுறைந்துலந்தமெய்யோகையறுகவலையூர
நாடுறைந்துலந்தமெய்யோநைந்ததென்றுலகநைவ. (நடசஅ)

சத்துருக்கன் இராமவிலக்குமணர்களை வணங்குதல்.

மூவர்க்குமிளையவள்ளன்முடிமிசைமுகிழ்த்தகையன்
தேவர்க்குந்தேவன்ரூளுஞ்சிறிகழலிளவரூளும்
பூவர்க்கம்பொழிந்துவீழ்ந்தாவெனடித்தனர்பொருந்தப்புல்லி
வாவிக்குளன்னமன்ரூண்மலரடித்தலத்துவீழ்ந்தான். (நடசக)

சுக்கிரீவன்முதலியோர் பரதசத்துருக்கினர்களை வணங்குதல்.

பின்னினைக்குரிசிறன்னைப்பெருங்கையால்வாங்கிவீங்கும்
தன்னிணைத்தோள்களாரத்தழுவியத்தம்பிமாருக்
கின்னுயிர்துணைவர்தம்மைக்காட்டினை * னிருவர்தாளும்
மன்னுயிர்க்குவமைகூரவந்தவர்வணக்கஞ்செய்தார். (நடஅ0)

பரதன் சுக்கிரீவாதியர்க்கு முகமன்கூறுதல்.

குரக்கினத்தரசைச்சேயைக்குழுதனைச்சாம்பன்றன்னைச்
செருக்கிளர்நீலன்றன்னைமற்றுமத்திறத்திலோரை
அரக்கருக்கரசைவெவ்வேறடைவினின்முதன்மைகூறி
மருக்கமழ்தொடையன்மாலைமார்பினன்பரதனின்றான். (நடஅக)

முதலமைச்சனை சுமந்திரன்வருதல்.

மந்திரச்சுற்றத்துள்ளார்தம்மொடும்வயங்குதானைத்
தந்திரத்தலைவரோடுந்தமரொடுந்தாணியாளும்
சிந்துரக்களிறுபோல்வாரெவரொடுஞ்சேனையோடும்
சுந்தரத்தடந்தோள்வெற்றிச்சுமந்திரன்றூன்றினானால். (நடஅஉ)

---

* இருவர் – பரதசத்துருக்கினர்.

உயுத்தகாண்டடம்

இராமனைச் சுமந்திரன் றொழுதலும் அவன் புகழ்தலும்.

அழுகையுழுவகைதானுந்தனித்தனியமர்செய்தேதறத்
தொழுதனனெழுந்துவிம்மிச்சுமந்திரனிற்றலோடும்
தழுவினனிராமன்மற்றைத்தம்பியுமனையநீரான்
வழுவினியுளதின்றிந்தமாநிலக்கிழத்திக்கென்றான். (நுநுநு)

இராமன் கட்டளையால் அனைவரும் புட்பகத்திலேறுதல்.

ஏறுகசனையெல்லாம்விமானமீதென்றுதன்போல்
மாறிலாவீரன்கூறவந்துளவணிகவெள்ளம்
ஊறிரும்பாவைவானத்தெழிலியுளொடுங்குமாபோல்
ஏறிமற்றினையவீரனினணையடிதொழுததன்றே. (நுநுசு)

புட்பத்தின்திறம்.

உரைசெயினுலகமுண்டோன்மணியணியுதரமொவ்வா
கரைசெயலரியவேதக்குறுமுனிகையுமொவ்வா
விரைசெறியலங்கன்மாலைப்புட்பகவிமானமென்றன்
றுரைசெய்துவானுளோர்களொண்மலர்தூவியார்த்தார். (நுநுஞ)

அசனியின்குழுவுமாழியேழுமொத்தார்த்ததென்ன
விசையுறுமுராசும்வேதத்தோதையும்விளிகொள்சங்கும்
இசையுறுகுரலுமேற்றினரவமுமெழுந்துபொங்கித்
திசையுறச்சென்றுவானேரந்தரத்தொலியிற்றீர்ந்த. (நுநுசு)

அவ்வையின்விமானந்தாவியந்தரத்தயோத்திநோக்கிச்
செவ்வையிற்படரலுற்றசெகதலமடந்தையோடும்
இவ்வுலகத்துளோர்களிந்திரற்குவகைகூரக்
கவ்வையினெகுமென்றநீர்மையைக்கதிக்குமன்றே. (நுநுஎ)

வேறு.

புட்பகவிமானம் அயோத்தியெய்தி நிலத்திறங்கி நிற்றல்.

ஆனதோரளவையினமரர்கோவெனும்
வானவர்திருநகர்வருவதாமென
மேனிறைவானவர்வீசும்பூவொடும்
தானுயர்புட்பகநிலத்தைச்சார்ந்ததால். (நுநுஅ)

நுசு-வது, மீட்சிப்படலம் – முற்றிற்று.

ஆஉ திருவிருத்தம் - சுஉஎநு.

கூ எ-வது, திருமுடிசூட்டுப்படலம்.

இராமன் சடையகற்றி நந்திக்கிராமத்தில் நீராடி கோலங்கோடல்.

நம்பியப்பரதனேந்தியம்பதியைநண்ணி
வம்பலர்சடையுமாற்றிமயிர்வினைமுற்றிமற்றத்
தம்பியரோடுந்தாணுந்தண்புனல்படிந்தபின்னர்
உம்பருமுவகைகூரவொப்பனையொப்பச்செய்தார். (க)

இராமன் தேரேறி யூர்புகுதல்.

நிருதியின்றிசையிற்றோன்றுநந்தியம்பதியைநீங்கிக்
குருதிகொப்புளிக்கும்வேலோன்கொடிமதிலயோத்திமேவச்
சுருதியொத்தனையவெள்ளத்துரகதக்குலங்கள்பூண்டு
பருதியொத்திலங்கும்பைம்பூட்பருமணித்தேரனுனன். (உ)

பிறர் செல்கைத்திறம்.

ஊழியினிறுதிகாணும்வலியினதுயர்பொற்றேரின்
ஏழுயர்மதமாவன்னவிலக்குவன்கவிகையேந்தப்
பாழியமற்றைத்தம்பிபானிறக்கவரிபற்றப்
பூழியையடக்குங்கண்ணீர்ப்பரதன்கோல்கொள்ளப்போனன். (ங)

வீடணக்குரிசின்மற்றைவெங்கதிர்ச்செல்வன்வெற்றிக்
கோடணைகுன்றமேறிக்கொண்டமேற்மருங்குபோதத்
தோடணைமவுலிச்செங்கண்வாலிசெய்தூசுசெல்லச்
சேடனைப்பொருவும்வீரமாருதிபின்புசென்றான். (சு)

அறுபத்தேழமைந்தகோடியானைமேல்வரிசைக்கான்ற
திறமூற்றசிறப்பராகிமானுடச்செவ்விவீரம்
பெறுகுற்றவனப்பருச்சிபிறங்குவெண்குடையர்செச்சை
மறுவற்றவலங்கன்மார்பர்வானரத்தலைவர்போனர். (ஞ)

எட்டமையிறுத்தபத்தினேழ்பெருவளாகவேந்தர்
பட்டம்வைத்தமைந்தநெற்றிப்பகட்டினர்பைம்பொற்றேரர்
வட்டவெண்குடையர்வீசுசாமரைமருங்கர்வானைத்
தொட்டவெஞ்சோதிமோலிச்சென்னியர்தொழுதுசூழ்ந்தார். (சு)

வானரமகளிரெல்லாம்வானவர்மகளிராய்வந்
தானமில்பிடியுமொண்டார்ப்புரவியும்பிறவுமூர்ந்து
மீனினமதியைச்சூழ்ந்ததன்மையின்விரிந்துசுற்றப்
பூநிறவிமானந்தன்மேன்மிதிலைநாட்டன்னம்போனுள். (எ)

தேவருமுனிவர்தாமுந்திசைதொறுமுறையிற்சிந்த
ஓவலின்மாரியேய்ப்பவெங்கணுமுதிர்ந்துவீங்கிக்
கேவலமலரால்வேரூரிடமின்றிக்கிடந்தவாற்றூல்
பூவெனுநாமமன்றிவ்வுலகிற்கும்பொருந்திற்றன்றே. (அ

கோடையில்வறந்தமேகக்குலமெனப்பதிலுலாண்டு
பாடுறுமதஞ்செலாதபணைமுகப்பருமயானை
காடுறைந்தண்ணலெய்தக்கடாந்திறந்துகுத்துவாரி
ஓடினவோடிற்றுள்ளங்களிதிறந்துடைந்ததேபோல். (க

துரகத்தார்ப்புரவியெல்லாமுங்கையர்சொற்பெற்றென்ன
அரவப்போர்மேகமென்னவாலித்தமரங்களான்று
பருவத்தாற்பூத்தவென்னப்பூத்தனபகையிற்சீறும்
புருவத்தார்மேனியெல்லாம்பொன்னிறப்பசலைபூத்த. (க0

இராமன் அரசமாளிகையடைதல்.

ஆயிதாரளவில்செல்வத்தண்ணலுமயோத்திநண்ணித்
தாயரைவணங்கித்தங்களிறையொடுமுனியைத்தாழ்ந்து
நாயகக்கோயிலெய்திநானிலக்கிழத்தியோடும்
சேயொளிக்கமலத்தாளுந்திருநடஞ்செய்யக்கண்டான். (கக

இராமனைக்கண்ட நகரமாக்கள் மகிழ்ச்சித்திறம்.

வாங்குதுந்துயில்களென்றுமனமிலரெனினும்பல்கால்
தாங்கினரென்றபோதுமைந்தருந்தையலாரும்
வீங்கியவுவகைமேனிசிறக்கவுமேன்மேற்றுள்ளி
ஓங்கவுங்களியாற்சோர்ந்தவுடையிலாதாரையொத்தார். (கஉ)

வேசியருடுத்தகூறைவேதியர்சுற்றவெற்பில்
பாசிழைமகளிராடையந்தணர்பரிந்துசுற்ற
வாசமென்கலவைசாந்தென்றினையனமயக்கத்தன்னர்
பூசினர்க்கிரட்டியானர்பூசலார்புகுந்துளோரும். (கங)

இறைப்பெருஞ்செல்வநீத்தவேழிரண்டாண்டும்யாரும்
உறைப்பிலராதலானேவேறிருந்தொழிந்தமின்னர்
பிறைக்கொழுந்தனையநெற்றிப்பெய்வளைமகளிர்மெய்யை
மறைத்தனர்பூணின்மைந்தருயிர்களுமறுக்கந்தான்ற. (கச)

விண்ணுறைறவோர்தந்தெய்வவெறியொடுவேறுளோர்தந்
தண்ணறுநாற்றந்தம்மிற்றலைதடுமாறுநீரால்
மண்ணுறைமாதராற்க்கும்வானுறைமடந்தைமார்க்கும்
உண்ணிலைறந்துயிர்ப்புவீங்கியூடலுண்டாயிற்றன்றே. (கஞ)

இராமனுணையாற்பரதன்விடைதியர்க்கு இராசமாளிகை
வளங்காட்டுதல்.

ஆயதாரளவிலையன்பரதனையருளிணைக்கித்
தூயவீடணற்குமற்றைச்சுரியன்மகற்குந்தொல்லை
மேயவானரங்களாயவீரர்க்கும்பிறர்க்குநந்தம்
நாயகக்கோயிலுள்ளலமெலர்ந்தெரித்தியென்றான். (கசு)

என்றலுமிறைஞ்சிமற்றைத்துணைவர்கள்யாவரோடும்
சென்றனனெழுந்துமாடம்பலவொரீஇயுலகிற்றெய்வப்
பொன்றிணிந்தமரரோடும்பூமகளுறைந்துவாழும்
குன்றெனவிளங்கித்தோன்றுநாயகக்கோயில்புக்கான். (கஎ)

அரதனமாளிகைகண்ட விடைதியர் ஆச்சரியங்கோடல்.

வயிரமாணிக்கநீலமரகதமுதலாயுள்ள
செயிரறுமணிகளீன்றசெழுஞ்சுடர்க்கற்றைசுற்ற
உயிர்த்துணுக்குற்றுநெஞ்சுமுள்ளமுலுசலாட
மயர்வறுமனத்தின்வீரிமைப்பிலர்மயங்கினின்றார். (கஅ)

பரதனரதனமாளிகை வரலாறுரைத்தல்.

விண்டுவின்மார்பிற்காந்துமணியெனவிளங்குமாடம்
கண்டனர்பரதன்றண்ணெனவினவினரவர்க்குக்காதற்
புண்டரீகத்துவைகும்புராதனனகன்னற்றோளான்
கொண்டதற்றவந்தன்னுலேயுவந்துமுன்கொடுத்ததென்றான். (கக)

பங்கயத்தொருவனிக்குவாகுவிற்களித்தபான்மைத்
திங்கிதுமலராள்வைகுமாடமென்றிசைத்தபோதின்
எங்களாற்றுதிக்கலாகுமியல்பதோவென்றுகூறிச்
செங்கைகள்கூப்பிவேறோர்மண்டபமதனிற்சேர்ந்தார். (உ0)

சுக்ரீவன் இராமபட்டாபிடேகத்திற் கெச்சரித்தல்.

இருந்தனரினையமாடத்தியல்பெலாமெண்ணியெண்ணிப்
பரிந்தனரவிமைந்தன்பரதனவணங்கித்தூயோய்
கருந்தடமுகிலிறைற்குக்காப்புநாணெனியுநன்னுள்
தெரிந்திடாதிருத்தலென்றேவெவென்றலுமண்ணல்செப்பும். (உக)

அனுமன்புண்ணியதீர்த்தங்கொண்டுவருதற்கேகுதல்.

எழ்கடலதனிற்றோயமிருநதிபிறவிற்றோயம்
தாழ்விலாதிவண்வந்தெய்தற்கருமைத்தோர்தன்மைத்தென்ன
ஆழியொன்றுடையோன்மைந்தனுமனைக்கடிதிறைக்கச்
சூழ்புவியதனையெல்லாங்கடந்தனன்காலின்றோன்றல். (உஉ)

வசிட்டன் வருதல்.

கோமுனியோடுமற்றைக்கணிதரைக்கொணர்கவென்ரு
ஏவினன்றேர்வலான்சென்றிசைத்தலுமுலகமீன்ற
பூமகன்றந்தவந்தப்புனிதமாதவன்வந்தெய்த
யாவருமெழுந்துபோற்றியினையடிதொழுதுநின்ரூர். (உக)

வசிட்டன் நாளைப்பட்டாபிடேக நாளெனல்.

அரியணைபரதனீயவதன்கணண்டிருந்தவந்தப்
பெரியவனவனைநோக்கிப்பெருநிலக்கிழத்தியோடும்
உரியமாமகளிரோடுமுகந்தனரொருவில்செல்வம்
கரியவன்றுய்த்தற்கேய்ந்தகாப்புநாணுளையென்ரூன். (உச)

அனைவருக்கு மோலைபோக்கல்.

இந்திரன்குருவுமன்றற்கேனையரெனவுநின்ற
மந்திரவிதியிரண்டுமயர்வறவரைந்துவிட்டார்
சந்திரகவிகையோங்குந்தயரதராமன்ரூமச்
சுந்தரமவுலிசூடும்வாரமுநாளுந்தூற்றி. (உந)

அடுக்கியவுலகமூன்றுமாதரத்தாதர்கூவ
இடுக்கொருபேருமின்றியோத்திவந்திறுத்ததென்ரூல்
தொடுக்குறுகவியான்மற்றைத்துழனியையிறுதிதோன்ற
ஒடுக்குறுத்துரைக்குந்தன்மைநான்முகத்தொருவற்குண்டோ. (உசு)

அவ்வயின்முனிவரேறுபரதனுமரியின்சேயும்
செவ்வியினிருதர்கோனுஞ்சாம்பனும்வாலிசேயும்
எவ்வமிலாற்றல்வீரர்யாவருமெழுந்துசென்ரூங்
கவ்வியமவித்தசிந்தையண்ணலத்தொழுதுசொன்னர். (உஎ)

நாளைநீமவுலிசூடுதலந்திகழ்பெரியநன்னாள்
காளைநீகிரிச்சமெல்லாங்கழித்தியென்றுரைத்துக்கன்னல்
வேளையேபொடியதாகவிழிக்குநீணுதலின்வெண்பூம்
பூளையேசூடுவானைப்பொருவுமாமுனியும்போனான். (உஅ)

பிரமன்கட்டளையால் மயன்மகுடாபிடேக மண்டபமமைத்தல்.

நான்முகத்தொருவனேவநயனறிமயனென்ரூதும்
நூன்முகத்தோங்குகேள்வினுணங்கியான்வணங்குநெஞ்சன்
கோன்முகத்துகந்துகுற்றஞ்செற்றுலகெல்லாங்கொள்ளு
வான்முகத்தொருவனன்னமண்டபம்வயங்கக்கண்டான். (உக)

அனுமன் அனைத்துத்தீர்த்தமும் கொண்டுவருதல்.

சூழ்கடனின்கிற்ரூயமெழுவகைத்தாகச்சொன்ன
ஆழ்திரையாற்றினீரோடமைந்தனவென்னவாமென்

ஞாழியினிறுதிசெல்லுந்தாதையினுலாவியொன்ரு
ஏழ்கடனீருந்தந்தானிருந்துய்யமருந்துதந்தான். (நூ-ம)

எரிமணிக்குடங்கள்பன்னூற்றியானைமேல்வரிசைக்கான்ற
விரிமதிக்குடையினீழல்வேந்தர்கள்பலருமேந்திப்
புரைமணிக்காளமார்ப்பப்பல்லியந்துவைப்பப்பொங்கும்
சரயுவிற்புனலுந்தந்தார்சங்கினமார்ப்பமன்னே. (நூ-ச)

இராமபட்டாபிடேகம்.

மாணிக்கப்பலகைதைத்தவயிரத்தின்கால்கள்சேர்த்தி
ஆணிப்பொன்சுற்றுமுச்சியழகுறச்சமைத்தபீடம்
ஏணுற்றபளிக்குமாடத்திட்டனரதனின்மீது
சேணுற்றதிரடோள்வீரன்றிருவொடும்பொலிந்தான்மன்னே. (நூ-ஏ)

மங்கலகீதம்பாடமறையொலிமுழங்கவல்வாய்ச்
சங்கினங்குமுறப்பாண்டிறண்ணுமையொலிப்பத்தாவில்
பொங்குபல்லியங்களார்ப்பப்பூமழைபொழியவிண்ணோர்
எங்கணையகனவெவ்வேறதிரபிடேகஞ்செய்தார். (நூ-க)

மாதவர்மறைவலாளர்மந்திரக்கிழவர்மற்றும்
மூதறிவாளருள்ளஞ்சான்றவர்மூதனீராட்டச்
சோதியான்மகனுமற்றைத்துணைவருமனுமன்ருனும்
தீதிலாவிலங்கைவேந்தும்பின்னபிடேகஞ்செய்தார். (நூ-சு)

அங்கண்வானுலகந்தாயவடிமலர்த்தவிசோடும்
கங்கைவார்சடையினேற்ருன்கண்ணுதலொருவனிந்நாள்
சிங்கவேறனையான்செய்யதிருமுடியாட்டுநன்னீர்
எங்கணேற்றண்ணேனென்வாழுமென்றனர்புலவரெல்லாம். (நூ-ஞ)

மரகதசயிலஞ்சென்தாமரைமலர்க்காடுபூத்துத்
திரைகெழுகங்கைவீசுந்திவலையானனைந்துசெய்ய
இருகுழைதொடருந்வேற்கண்மயிலொடுமிருந்தேய்ப்பப்
பெருகியசெவ்விகண்டார்பிறப்பெனும்பிணிகடீர்ந்தார். (நூ-சு)

தெய்வநீராடற்கொத்தசெய்வினைவசிட்டன்செய்ய
அய்யமில்சிந்தையானைச்சுமந்திரவமைச்சேறு
நொய்தினினியற்றிநோன்பின்மாதவனுனித்துக்காட்ட
வெய்தினினியன்றபல்வேறிந்திரற்கேயவென்ன. (நூ-எ)

755/2

இராமனுக்கு வசிட்டன் மகுடந்தரித்தல்.

அரியணையநுமன்ருங்கவங்கதனுடைவாளேந்தப்
பரதன்வெண்குடைகவிக்கவிருவருங்கவரிவீச

விரைசெறிகுழலியோங்கவெண்ணெயூர்ச்சடையன்றங்கண்
மரபுளோர்கொடுக்கவாங்கிவசிட்டனேபுனைந்தான்மௌலி. (நடஅ

வெள்ளியும்பொன்னுமென்போர்விதிமுறைமெய்யிற்கொண்ட
ஒள்ளியநாளினல்லவோரையினுலகமூன்றும்
துள்ளினகுனிப்பமௌலிசூடினன்கடலின்வந்த
தெள்ளியதிருவுந்தெய்வப்பூமியுஞ்சேருந்தோளான். (நடக

சித்தமொத்தனனென்றேதுந்திருநகர்ச்செல்வமென்ன
உத்தமத்தொருவன்சென்னிவிளங்கியவுயர்பொன்மௌலி
ஒத்துமெய்க்குவமைகூரவோங்குமூவுலகத்தோர்க்கும்
தத்தமுச்சியின்மேல்வைத்ததொத்தனத்தளர்வுதீர்ந்தார். (நக0)

பன்னெடுங்காலநோற்றுத்தன்னுடைப்பண்பிற்கேற்ற
பின்னெடுங்கணவன்றன்னைப்பெற்றிடைபிரிந்துமூற்றும்
தன்னெடும்பீழைநீங்கத்தழுவிஉடனிர்க்கைநீட்டி
நன்னெடும்பூமியென்னுநங்கைதன்கொங்கையார. (நகக)

* வீரதநூன்முனிவன்சொன்னவிதிநெறிவழாமைநோக்கி
வரதனுமிளைஞர்க்காங்கண்மாமணிமகுடஞ்சூடிப்
பரதனைத்தனதுசெங்கோனடாவுறப்பணித்துநாளும்
கரைதெரிவிலாதபோகக்களிப்பினுளிருந்தகாலை. (நகஉ)

நடஎ-வது, திருமுடிசூட்டுப்படலம் — முற்றிற்று.

ஆட திருவிருத்தம்-நடகஎ.

நடஅ-வது, விடைகொடுத்தபடலம்.

இராமனரசிருக்கை மண்டபமுறுதல்.

பூமகட்கணியதென்னப்பொலிபசும்பூரிசேர்த்தி
மாமணித்தூணிற்செய்தமண்டபமதனிலுப்பண்
கோமணிச்சிவிகைமீதேதகொண்டலுமின்னும்போலத்
தாமரைக்கிழத்தியோடுந்தயரதராமன்சார்ந்தான். (க)

இராமனரியணையிலமர்தல்.

விரிகடனெடுவுட்பூத்தமின்னெனவாரம்வீங்க
எரிகதிர்க்கடவுடன்னையினமணிமகுடமேய்ப்பக்

---

* இப்பாடல் சிலபிரதிகளிற் காணப்படவில்லை.

கருமுகிற்கரசுசெந்தாமரைமலர்க்காடுபூத்தோ
ரரியணைப்பொலிந்ததென்னவிருந்தனனயோத்திவேந்தன். (உ)

மரகதசயிலமீதுவானிலாப்பாய்வதென்ன
இருகுழையிடறும்வேற்கணிளமுலையிளநலார்தம்
கரகமலங்கள்பூத்தகற்றையங்கவரிதற்ற
உரகருநரரும்வானத்தும்பரும்பரவியேத்த. (ஙு)

உலகமீரேழுந்தன்னவொளிநிழல்பரப்பவானில்
திலகவாணுதல்வெண்டிங்கள்சிந்தைநொந்தெளிதிற்றேறயக்
கலகவாணிருதர்கோனைக்கட்டழித்திட்டகீர்த்தி
இலகிமேனிவர்ந்ததென்னவெழுதனிக்குடைநின்றேறய. (சு)

மங்கலகீதம்பாடமறையவராசிகூறச்
சங்கினங்குமுறப்பாண்டிறண்ணுமைதுவைப்பத்தாவில்
பொங்குபல்லியங்களார்ப்பப்பொருங்கயற்கருங்கட்செவ்வாய்ப்
பங்கயமுகத்திரர்கண்மயினடம்பயிலமாதோ. (ஞ)

திரைகடற்கதிருநாணச்செழுமணிமகுடகோடி
கரைதெரிவிலாதசாதிக்கதிரொளிபரப்பநாளும்
வரைபொருமாடவாயினெருக்குறவந்துமன்னர்
பரசியேவணங்குந்தாறும்பதியுகஞ்சேப்பமன்றே. (ரு)

மந்திரக்கிழவர்சுற்றமறையவர்வழுத்தியேத்தத்
தந்திரத்தலைவர்போற்றத்தம்பியர்மருங்குசூழச்
சிந்துரப்பவளச்செவ்வாய்த்தெரிவையர்பலாண்டுகூற
இந்திரற்குவமையேயப்பவெம்பிரானிருந்தகாலை. (எ)

மயிந்தன்மாதுமிந்தன்கும்பன்கம்பன்மற்றுமன்மாறில்
சயந்தருகுழுதக்கண்ணன்சதவலிகுழுதன்றண்டார்
நயந்தெரிதிருமுகன்கோதசமுகன்முதலநண்ணுர்
வியந்தெழுமறுபத்தேழுகோடியாம்வீரரோடும். (அ)

ஏனையர்பிறருஞ்சுற்றவெழுபதுவெள்ளத்திற்ற
வானரரோடும்வெய்யோன்மகன்வந்துவணங்கிச்சூழத்
தேனிலாலங்கற்பைந்தார்வீடணக்குரிசில்செய்ய
மானவாளரக்கரோடுவந்துவணங்கிச்சூழ்ந்தான். (கூ)

வெற்றிவெஞ்சேனையோடும்வெறிப்பொறிப்புலியின்வெவ்வால்
சுற்றுறத்தொடுத்துவீக்குமரையினன்சுழல்செங்கண்ணன்
கற்றிரள்வயிரத்திண்டோட்கடுந்திறன்மடங்கலன்னான்
எற்றுநீர்க்கங்கைநாவாய்க்கிறைகுகன்றொழுதுசூழ்ந்தான். (கo)

வள்ளலுமவர்கடம்மேல்வரம்பின்றிவளர்ந்தகாதல்
உள்ளுறப்பிணித்தசெய்கையொளிமுகக்கமலங்காட்டி
அள்ளுறத்தழுவினன்போலகமகிழ்ந்தினிதிருக்கி
எள்ளலிலாதமொய்ம்பரீண்டினிதிருத்திரென்றான். (கக)

நன்னெறியறிவுசான்றோர்நான்மறைக்கிழவர்மற்றைச்
சொன்னெறியறிவுநீரார்தாமறுபுலமைச்செல்வர்
பன்னெறித்தொன்றுதோன்றும்பருமணிப்பண்பிற்கேளார்
மன்னவர்க்கரசன்பாங்கர்மரபிலுற்சுற்றமன்றே. (கஉ)

தேம்புனற்படப்பைபூத்திருநகரியோத்திசேர்ந்த
பாம்பணையமலன்றன்னைப்பழிச்சொடும்வணக்கம்பேணி
வாம்புனற்பரவைவுலகத்தரசுமற்றுளோரும்
ஏம்பலுற்றிருந்தார்நொய்தி * னிருமதியிறந்ததன்றே. (கங)

நெருக்கியவமரரெல்லாநெடுங்கடற்கிறைநின்றேறத்தப்
பொருக்கெனவயோத்தியெய்திமற்றவர்பொருமறீர
வுருக்கமோடரக்கர்யாருமடிதரவரிவிற்கொண்ட
திருக்கிளர்மார்பிலுன்பிற்செய்ததுசெப்பலுற்றும். (கச)

இராமன் விருந்தினருக்கு வெகுமதியளித்தல்.

மறையவர்தங்கட்கெல்லாமணியொடுமுத்தும்பொன்னும்
நிறைவளம்பெருகுபூவுஞ்சுரபியுநிரைத்துமேன்மேல்
குறையிதென்றிரந்தோர்க்கெல்லாங்குறைவறக்கொடுத்துப்பின்னர்
அறைகழலரசர்தம்மைவருகெனவருளவந்தார். (கஞ)

அய்யலுமவர்கடம்மையகமகிழ்ந்தருளிலேக்கி
வய்யகஞ்சிவிகைதாங்கன்மாமணிமகுடம்பொற்பூண்
கொய்யுளைப்புரவிதிண்டேர்குஞ்சரமாடையின்சொல்
மெய்யுறக்கொடுத்தபின்னர்க்கொடுத்தனன்விடையுமன்றே. (கசு)

சம்பரன்றன்னைவென்றுதயரதனின்றகாலத்
தும்பர்தம்பெருமானீந்தவொளிமணிக்கடகத்தோடும்
கொம்புடைமலையுந்தேருங்குரகதக்குழுவுந்தூசும்
அம்பரத்தனந்தர்நீத்தானலரிகாதலனுக்கீந்தான். (கஎ)

அங்கதமிலாதகொற்றத்தண்ணலுமகிலமெல்லாம்
அங்கதனென்னுநாமமழகுறத்திருத்துமாபோல்
அங்கதங்கன்னற்றோளாற்கயன்கொடுத்ததனையீந்தான்
அங்கதன்பெருமைமண்மேலாரறிந்தறையகிற்பார். (கஅ)

---

* இருமதி – இரண்டுமாதம்.

இ-ள். அங்கதமிலாத – வசையில்லாத, கொற்றத்தண்ணலும்-வெற்றியையுடைய சீராமபிரானும், அகிலமெல்லாம் – பூமியிலெங்கும், அங்கதனென்னுநாமம் – அங்கதனென்னும்பெயர், அழகுற – (காரணக்குறியென) அழகைப்பெற, திருத்துமாபோல் – அப்பெயரைத்திருந்தச்செய்வதுபோல, கன்னற்றேரூளாற்கு – இட்சுவாகுமகாராசனுக்கு,அயன்-பிரமன், அங்கதங்கொடுத்ததனை-கொடுத்ததாகிய தோளணியை, அங்கு – அத்திருவோலக்கத்தில், ஈந்தான்-அங்கதப்பெருமானுக்கு ஈந்தான், அதன்பெருமை – அதனதுபெருமையை, மண்மேல் – பூமியில், ஆறறிந்து-எவர்கள் அறிந்து, அறையகிற்பார்-சொல்லமாட்டுவார்-எ-று.

ஆறென்னு மிடைச்சொல்லி னீறுதொகுத்தல். (கஅ)

பின்னருமவனுக்கையன்பெருவிலையாரத்தோடும்
அன்னநுண்டேசுமாவுமதமலக்கரசுமீயா
உன்னைநீயன்றியிந்தவுலகினிலொப்பிலாதாய்
மன்னுகதிரோன்மைந்தன்றன்னெடுமருவியென்றான். (கக)

மாருதவிமலசேயைமகிழ்ந்தினிதருளிநோக்கி
ஆருதவிடுதற்கொத்தார்நீயலாலன்றுசெய்த
பேருதவிக்கியான்செய்செயல்பிறிதில்லைமெய்ப்பூண்
போருதவியதிண்டோளாய்பொருந்துறப்புல்லுகென்றான். (உ0)

என்றலும்வணங்கிநாணிவாய்புதைத்திலங்குதாளை
மூன்றலையொதுக்கிநின்றமொய்ம்பனைமுழுதுநோக்கிப்
பொன்றிணிவயிரப்பைம்பூணுரமும்புனைமென்றோசும்
வன்றிறற்கயமுமாவும்வழங்கினன்வழங்குசீரான். (உக)

பூமலர்த்தவிசைநீத்துப்பொன்மதிண்மிதிலைபூத்த
தேமொழித்திருவையையன்றிருவருண்முகந்துநோக்கப்
பாமறைக்கிழத்தியீந்தபருமுத்தமாலைகைக்கொண்
டேமுறக்கொடுத்தாளன்னளிடரறிந்துதவிற்றே. (உஉ)

சந்திரற்குவமைசான்றதாரகைக்குழுவைவென்ற
இந்திரற்கேய்ந்ததாகுமென்னுமுத்தாரத்தோடு
கந்தகளிறுவாசிதூசணிகலன்கண்மற்றும்
உந்தினனெண்கின்வேந்தற்குலகமுந்துதவினானே. (உங)

நவமணிக்கரசுமுத்துமாலையுநலங்கொடுசும்
உவமைமற்றிலாதபொற்பூணுலப்பிலபிறவுமொண்டார்க்
கவனவெம்பரியும்வேகக்கதமலக்கரசுங்காதற்
பவனனுக்கினியநண்பன்பயந்தெடுத்தவனுக்கீந்தான். (உச)

பதவலிச்சதங்கைப்பைந்தார்ப்பாய்பரிபணைத்திண்கோட்டு
மதவலிச்சைலம்பொற்பூண்மாமணிக்கோவைமற்றும்
உதவலிற்றகைவவன்றியில்லனவுள்ளவெல்லாம்
சதவலிதனக்குத்தந்தான்சதுமுகத்தவனைத்தந்தான். (உரு)

இ-ள். சதுமுகத்தவனைத்தந்தான்-பிரமனைத்தந்த இறைவனுகிய சீராமபிரான், பதம்-சாலில், வலி-பூங்கொடியையொத்த, சதங்கைப்பைந்தார் - பசும்பொற்சதங்கைமாலையணிந்த, பாய்பரி-பாய்ந்தோடுங் குதிரைகளையும், பணை - பெருமையாகிய, திண்கோட்டு-திண்ணிய தந்தங்களையும், மதம்-மதவளத்தையுமுடைய, வலிச்சைலம் - வலியயானைகளையும், பொற்பூண்-பொன்னாற்செய்த பூண்களையும், மாமணிக்கோவை-மாணிக்கமணிமாலைகளையும், மற்றும்-பிறவற்றையும், உதவலில்லாகையில், தகைவவன்றி-தடைசெய்வன அல்லாமல், இல்லன-தனதில்லினிடத்தனவாகி, உள்ளவெல்லாம்-உள்ளபொருள்களெல்லாவற்றையும், சதவலிதனக்கு தந்தான்-சதவலிக்குக் கொடுத்தான்—எ-று.

உதவலிற்றகைவன, தொன்றுதொட்டு வருமரசுக்குரிய முடிகொடி முதலியன. (உரு)

பேசரிதாருவர்க்கேயும்பெருவிலையிதனுக்கீதுக்
கோசரியிலதென்றெண்ணுமொளிமணிப்பூணுந்தூசும்
மூசரிக்குவமைமும்மைமும்மதக்களிறுமாவும்
கேசரிதனக்குமீந்தான்கிளர்மணிமுழுவுத்தோளான்.

இ-ள். கிளர் – விளங்குகின்ற, மணி – மணிகளழுத்திய, முழுவுத் தோளான் – முழவுபோன்ற சுந்தரத்தோளையுடைய சீராமபிரான், இதனுக்கு – இதற்கு, பெருவிலை – மிக்கவிலையை, ஒருவர்க்கேயும் – ஒருவராலும், பேசரிது – சொல்லுதலரிது, ஈதுக்கோ – இதனுக்கோ, சரியிலதென்று – ஒப்பில்லதென்று, எண்ணும் – மதிக்கின்ற, ஒளிமணிப்பூணும்-ஒளியமைந்த மணிப்பூணும், தூசும் – பொற்றுகிலும், மூசு – உலகெங்கும் மொய்த்துக்கொள்ளும், அரிக்கு – வடவைத்தீயினும், உவமை மும்மை (சினத்திறல்) ஒப்புமும்மடங்கமைந்த, மும்மதக்களிறும் – மும்மதங்களையுடைய யானைகளையும், மாவும் – குதிரைகளையும், கேசரிதனக்கு மீந்தான் – கேசரியென்னும் படைத்தலைவனுக்குங் கொடுத்தான் – எ-று.

ஆடவர் பெண்மையையவாவுந் தோளையுடையாரைகலின், இறைவனை முழவுத்தோளானென்றார். ஒருவர்க்கு – மூசரிக்கு – வேற்றுமை மயக்கம். ஓ-சிறப்பு. அரியென்னும் பலபொருளொருசொல் ஈண்டுத்தீயின் மேனின்றது. உம்மை இறந்தது தழீஇயது. (உசு)

வளனணிகலனுந்தூசுமாமதக்களிறுமாவும்
நளவெனுகுழுதன்றூனவையறுபசன்மற்றோர்

உளமகிழ்வெய்தும்வண்ணமுலப்பிலபிறவுமீந்தான்
களனமர்கமலவேலிக்கோசலக்காவலோனே. (உஎ)

அவ்வகையறுபத்தேழுகோடியாமரியின்வேந்தர்க்
கெவ்வகைத்திறனுநல்கியினியனபிறவுங்கூறிப்
பவ்வமொத்துலகிற்பல்குமெழுபதுவெள்ளம்பார்மேல்
கவ்வையற்றினிதுவாழக்கொடுத்தனன்கடைக்கணேக்கம். (உஅ)

மின்னேயர்மௌலிச்செங்கண்வீடணப்புலவர்கோமான்
றன்னேயேயினிதுநோக்கிச்சராசரஞ்சுமந்தசால்பின்
நின்னேயேயொப்பார்நின்னையலதிலருளரேலைய
பொன்னேயேயிரும்புநேருமாயினும்பொருவன்றென்றான். (உக)

என்னுரைத்தமரரீந்தவெரிமணிக்கடத்தேரு
வன்றிறற்களிறுந்தேருமவாசியுமணிப்பொற்பூணும்
பொன்றிணிதூசுமவாசக்கலவையும்புதுமென்சாந்தும்
நன்றுறவவனுக்கீந்தாளகணைத்துயிலத்தீர்ந்தான். (உ0)

சிருங்கபேரியமென்றோளுஞ்செழுநகர்க்கிறையைநோக்கி
மருங்கினியுரைப்பதென்மேலுமறுவறிதுணவற்கென்னைக்
கருங்கைம்மாக்களிறுமாவுங்கனகமுந்தூசும்பூணும்
ஒருங்கறவுதவிப்பின்னருதவினன்விடையுமன்றே. (உக)

அணுமனவாலிசேயைச்சாம்பனையருக்கன்றந்த
கனைகழற்காலிளனைக்கருணையங்கடவுமேனைக்கி
னினவதற்காரிதுநும்மைப்பிரிவென்றனீர்விரைப்பும்
எனதுதுகாவற்கின்றென்னேவலினேகுமென்றான். (உஉ)

இலங்கைவேந்தனுக்குமிவ்வாறினியனயாவுங்கூறி
அலங்கல்வேண்மதுகையண்ணல்விடைகொடுத்தருளலோடும்
நலங்கொள்பேருணர்வின்மிக்கோர்நலனுறுநெஞ்சர்பின்னர்
கலங்கலரேயசெய்தல்கடனெனக்கருதிச்சூழ்ந்தார். (உங)

பரதனையினையகோவைவச்சத்துருக்கனனைப்பண்டை
விரதமாதவனைத்தாயார்மூவரைமிதுலப்பொன்னை
வரதனைவலங்கொண்டேடத்திவணங்கினர்விடையுங்கொண்டே
சரதமாநெறியும்வல்லோர்தத்தமபதியைச்சார்ந்தார். (உச)

குகனைத்தன்பதியினுய்த்துக்குன்றினைவலஞ்செய்தேறோன்
மகனைத்தன்புரத்தில்விட்டுவாளெயிற்றரக்கர்சூழக்
ககனத்தின்மிசையேயெய்திக்கனைகடலிலங்கைபுக்கான்
அகனுற்றகாதலண்ணலலங்கல்வீடணன்சென்றன்றே. (உஞ)

அய்யனுமவரைநீக்கியடிசெறிதுணைவரோடும்
வய்யகமுழுதுஞ்செங்கோன்மனுநெறிமுறையிற்செல்லச்
செய்யமாமகளுமற்றைச்சகதலமகளுமற்றும்
நய்யுமாறின்றிக்காத்தாளனிலம்பொறைகடீர்த்தே. (நடசு)

உம்பரோடிம்பர்காறுமுலகமோரேழுமேழும்
எம்பெருமானென்றேறத்தியிறைஞ்சிநின்றேறவல்செய்யத்
தம்பியரோடுந்தானுந்தருமமுந்தாணிகாத்தான்
அம்பரத்தனந்தர்நீங்கியயோத்திவந்திறுத்தகாலை. (நடஎ)

வே று.

இராவணன்றன்னைவீட்டியிராமனெய்வந்துதோன்றித்
தாதலமுழுதுங்காத்துத்தம்பியுந்தானுமாகப்
பராபரமாகிநின்றபண்பினைப்பகருவார்கள்
நராபதியாகிப்பின்னுநமனையும்வெல்லுவாரே. (நடஅ)

நடஅ-வது, விடைகொடுத்தபடலம்-முற்றிற்று.

ஆடீ திருவிருத்தம்-சாநடுஙுடு.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

உயுத்தகாண்டம் முற்றிற்று.